காகிதச் சுவடி ஆய்வுகள்

பதிப்பாசிரியர்
முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி
முனைவர் சி. இலட்சுமணன்

அரிய கையெழுத்துச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

காகிதச்சுவடி ஆய்வுகள்

பதிப்பாசிரியர்
முதுமுனைவர் ம. சா. அறிவுடைநம்பி
முனைவர் சி. இலட்சுமணன்

அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
முல்லை வளாகம், வாகையூர்
தஞ்சாவூர் 613 005

காகிதச்சுவடி ஆய்வுகள்

திருவள்ளுவராண்டு 2031, பங்குனி 7, 8
(20, 21-03-2000)

முதற்பதிப்பு : மார்ச்சு 2000

பதிப்பாசிரியர் முதுமுனைவர் **ம. சா. அறிவுடைநம்பி**
தலைவர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 005

முனைவர் **சீ. இலட்சுமணன்**
தொழில் நுட்பாளர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 005

பக்கங்கள் : (x + 446) 456

விலை : உருபாய் 250-00

நூல் கிடைக்குமிடம் அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 005

கணினி அச்சு : கிரிஜா ஒளியச்சு மையம்
33 உமா நகர், கூட்டுறவுக் குடியிருப்பு
தஞ்சாவூர் 613 007 (தொலைபேசி 04362 - 32841)

மெல்லச்சு : அமுதச்சகம்
'மனோன்மணி இல்லம்', 4 பெருமாள் அவென்யூ,
டி. எஸ். பி. நகர் விரிவு, புறவழிச்சாலை,
மதுரை 625 021 (தொலைபேசி 0452 - 782029)

பதிப்புரை

மொழி வளர்ச்சிக்கென உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுள் முதல் பல்கலைக்கழகம் என்னும் தனிச் சிறப்புக்குரியது தமிழ்ப் பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகத்தில் ஐம்பெரும் புலங்களுள் சுவடிப்புலமும் ஒன்றாகும். சுவடிப்புலத்தின் முப்பெருந் துறைகளுள் ஒன்று அரிய கையெழுத்துச் சுவடித்துறையாகும். இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு, சுவடி போன்ற முதன்மைத் தரவுகள் இன்னும் நன்கு ஆராய்ந்து வெளியிடப்பட வேண்டியவைகளாகும். காகிதச் சுவடிகள் அண்மை நூற்றாண்டுகளின் ஆவணங்களாகத் திகழகின்றன. இதைக் கருத்தில் கொண்டு காகிதச் சுவடிகளைத் தொகுத்து, பாதுகாத்து பதிப்பிக்கவும் தமிழர்களின் சமுதாயப் பொருளாதார அரசியல் பண்பாட்டு வரலாற்றினை அக் காகிதச் சுவடிகளின் அடிப்படையில் ஆராய்ந்து வெளியிடவும் அமைக்கப்பட்ட துறையே அரிய கையெழுத்துச் சுவடித்துறையாகும். இத்துறையின் சீரிய செயல்பாட்டின் காரணமாகத் தற்பொழுது மாநில அளவில் நடத்தப்பெற்ற காகிதச் சுவடியியல் கருத்தரங்கின் கட்டுரை மலர்களே இன்று உங்கள் கைகளில் மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது.

துறை தொடங்கிய நாள் தொட்டு இதுவரை ஏழு கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. ஆனால் அக்கருத்தரங்குகளில் படிக்கப்பெற்ற கட்டுரைகள் அனைத்தும் இதுவரை நூல் வடிவில் வெளிவரவில்லை. அனைத்தும் உருளச்சுகளாகவே வெளியிடப்பட்டன. 1999ஆம் ஆண்டு சூலைத் திங்களில் துறைத்தலைவர் பொறுப்பேற்றபின் முதல் முறையாக இச்சுவடியியல் கருத்தரங்கம் நடத்தத் திட்டமிடப்பட்டது. மாண்பமை துணைவேந்தர் அவர்களிடம் இது தொடர்பான கருத்துரு ஒன்றை அனுப்பியபோது பல்கலைக்கழகத்திற்கு எந்தவித நிதிச்செலவுமின்றி இக் கருத்தரங்கத்தை நடத்த வேண்டும்; அனைத்துக் கட்டுரைகளையும் கருத்தரங்கம் தொடங்குகின்ற நாளில் நூல் வடிவில் வெளியிடுதல் வேண்டும் என்று அறிவுறுத்தி இசைவளித்தார். எனவே பேராளர்களிடமிருந்தும் வெளியிலிருந்தும் நிதியுதவி பெற்று இக்கருத்தரங்கத்தை நடத்த முடிவெடுக்கப்பட்டது. அதன் பின்னர்க் காகிதச் சுவடியோடு தொடர்புடைய அறிஞர் பெருமக்களிடம் இருபதுக்கும் மேற்பட்ட அமர்வுத் தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்குமாறு வேண்டுகோள் விடப்பட்டது. அவ்வேண்டுகோளை ஏற்று ஐம்பதுக்கும் மேற்பட்டோர் காகிதச் சுவடிகளை ஆய்வு செய்து பல அரிய செய்திகளை உள்ளடக்கி ஆய்வுக் கட்டுரைகளாகத் தந்துள்ளனர். வரலாற்றில் மேலும் தெளிவு பெறத்தக்க வகையில் பல்வேறு கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. பல புதிய செய்திகள் ஆராய்ச்சி அறிஞர்களால் தரப்பட்டுள்ளன. இதனால் இந்நூலில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்டுரைகளையும் சுருக்கித் தராமல் முழுவடிவிலேயே அச்சேற்றம் செய்யப்பட்டுள்ளன.

இக்கருத்தரங்கம் சிறப்புற நடைபெற வாழ்த்துரை வழங்கிய **திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் சீர்வளர்சீர் குரு மகாசந்நிதானம்** அவர்களின் பொன்னார் திருவடி மலர்களை வணங்கி மகிழ்கிறோம்.

இக்கருத்தரங்கைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து நெறிகாட்டி அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த மாண்பமை துணைவேந்தர் முனைவர் **கதிர் மகாதேவன்** அவர்களுக்கு முதற்கண் நன்றி பாராட்டுகின்றோம்.

இக்கருத்தரங்கத்திற்கு முனைவர் **இ. சுந்தரமூர்த்தி** அவர்கள் மையக் கருத்துரை வழங்குவதற்கு இசைவு தெரிவித்துள்ளார். சுவடித்துறையில் பட்டறிவும் ஆர்வமும் மிக்க பேராசிரியர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

காகிதச் சுவடி ஆய்வு மலரை வெளியிட்டுக் கருத்தரங்கத்தைத் தொடங்கி வைப்பதற்கு இசைவு தந்தவர் எங்கள் துறையில் பணியாற்றியவரும், மெக்கன்சி சுவடியில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவருமாகிய தமிழ் வளர்ச்சித்துறையின் இயக்குநர் முனைவர் **ம. இராசேந்திரன்** அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இலக்கிய இலக்கண வரலாற்று ஆய்வுகளுக்கு மூலமுதற் காரணமாய் விளங்கும் காகிதச் சுவடிகளையும் ஆய்வு செய்து கன்னித்தமிழ் நலம் காக்க உறுதுணையாவோம் என்னும் கொள்கை முழக்கத்தோடு ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிய அனைத்துப் பேராளர்களுக்கும் நன்றி பாராட்டுகின்றோம்.

ஆய்வுக் கட்டுரைகள் கணினியில் அச்சுப்பதிவம் எடுக்கும் காலத்தில் அவ்வற்றை மெய்ப்புத் திருத்தம் செய்வதற்கு உதவி புரிந்த எங்கள் துறையைச் சார்ந்த ஆய்வாளர்கள் செல்வி **பா. உஷாராணி**, செல்வி **த. அமுதா**, செல்வி **க. தனலெட்சுமி** ஆகியோர்க்கு நன்றி பாராட்டும் கடப்பாடுடையோம்.

உரிய காலத்தில் கணினி மூலம் அச்சுப்பதிவம் எடுத்துக் கொடுத்த திரு **அ. சிவமூர்த்தி** (கிரிஜா ஒளியச்சு மையம், தஞ்சாவூர்) அவர்களுக்கும், அச்சேற்றம் செய்து கொடுத்த திரு **சா. திருமாவளவன்** (அமுதச்சகம், மதுரை) அவர்களுக்கும் எமது நன்றியை உரித்தாக்குகின்றோம்.

காகிதச் சுவடி சேர்ப்போம். கன்னித் தமிழ் நலம் காப்போம். வரலாற்றுலகிற்கு வளம் சேர்ப்போம் தமிழ் மக்களின் பண்பாட்டினைப் பாரெல்லாம் பறை சாற்றச் சூளுரைப்போம். அனைத்திற்கும் மேலாகக் காகிதச் சுவடியியல் கருத்தரங்கம் மாநில அளவில் சீரோடும் சிறப்போடும் நடைபெறுவதற்குத் தோன்றாத் துணையாக இருந்துவரும் திருவருளை நினைந்து வாழ்த்தி வணங்குகின்றோம்

தஞ்சாவூர் 613 005
தி.ஆ. 2031 பங்குனி 27
10–03–2000

முதுமுனைவர் **ம. சா. அறிவுடைநம்பி**
முனைவர் **சி. இலட்சுமணன்**
(பதிப்பாசிரியர்)

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை
சீர் வளர்சீர்
சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள்
குருமகாசந்நிதானம்
திருவாவடுதுறை ஆதீனம்.

திருவாவடுதுறை - 609 803.
(நாகை மாவட்டம்)

நாள் 22 – 1 – 2000

" நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க "

வாழ்த்துரை

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் பழமையையும் புதுமையையும் சிறப்பாகப் போற்றிச் செயலாற்றி வருகிறது. மொழிக்கென உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகம் என்ற பெருமையை உடையது. மற்றைப் பல்கலைக்கழகங்கள் கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி என மூன்றைக் கொண்டு விளங்குவன. ஆனால் இப்பல்கலைக்கழகம் ஆராய்ச்சிக்கென்றே நிறுவப்பட்ட தனிச்சிறப்புடையது.

சிறப்பாக இந்தியாவிலேயே இந்தப் பல்கலைக்கழகத்தில்தான் அரிய கையெழுத்துச் சுவடித்துறை என்ற தனியொரு துறையமைந்து செயற்படுவது சிறப்பினைத் தருவதாகும். இத்துறையின் சார்பில் வரும் மார்ச்சுத் திங்கள் 20, 21 ஆகிய இரு நாட்கள் நடைபெறும் கருத்தரங்கில் பேராளர்களின் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தல் மகிழ்வினைத் தருகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடக்க காலம் முதல் இன்றுவரை நமது ஆதீனத்தில் விளங்கும் சரசுவதி மகால் நூல் நிலைய ஆய்வு மையத்தில் உள்ள அரிய காகிதக் கையெழுத்துச் சுவடிகள், அச்சுப் புத்தகங்கள், ஓலைச்சுவடிகள், செப்பேடுகள் ஆகியவற்றைப் படியெடுக்க அவ்வப்போது உதவி வருகின்றது. இவைகள் யாவும் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகளில் பல நிலைகளாக வெளிவந்துள்ளதை மக்கள் அறிவர்.

சிறப்பிற் சிறப்பாக, அரிய கையெழுத்துச் சுவடித்துறைத் தலைவர் முதுமுனைவர் ம. சா. அறிவுடைநம்பி அவர்கள் நமது ஆதீன நூல் நிலையத்தில் உள்ள அரிய காகிதச் சுவடிகளை ஆய்வு செய்து தனிப்புத்தகமாக எழுதித் திருமடத்தில் சமர்ப்பித்தமையைப் பாராட்டுகின்றோம்.

பல்துறைச் சிறப்புக்களைப் பெற்று விளங்கும் இப்பல்கலைக்கழகம் நடத்தும் அரிய கையெழுத்துச் சுவடிக் கருத்தரங்கம் சிறப்புற நடைபெறவும், பேராளர்களின் கட்டுரைகள் வருங்காலச் சந்ததியினர்க்குச் சிறந்த பயனை விளைவிக்கவும், இப்பல்கலைக்கழகத்தின் பெருமை உலக அளவில் சிறப்புற்று விளங்கவும் நமது ஆன்மார்த்த மூர்த்தி அருள்தரு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

முனைவர் **கதிர். மகாதேவன்**
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005

அணிந்துரை

தமிழ்ப் பல்கலைக்கழகம் அரிய கையெழுத்துச் சுவடித் துறையைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது

எந்தவொரு நிகழ்ச்சியையும் மெய்ப்பிப்பதற்கு ஆட்சி, ஆவணம், காட்சி என்ற மூன்றும் தேவைப்படுகிறது; இம்மூன்றில் நடுவண் உளதாகிய ஆவணமின்றி வரலாறு அமையாது. தமிழ்ப் பல்கலைக்கழக அரிய கையெழுத்துத் துறையில் அமைந்துள்ள ஆவணங்களுக்குக் கொடுமுடியாகத் திகழ்வது மோடி ஆவணங்களாகும். 17, 18ஆம் நூற்றாண்டுகளில் தஞ்சாவூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த மராத்திய மன்னர்கள் மோடி ஆவணங்களைப் பயன்படுத்தினர் தஞ்சை மராத்திய மன்னர்களின் வரலாறு, கலைகள், இலக்கியப் பணிகள், அக்கால அரசியல் சமுதாயம் போன்ற பலவற்றை அறிவதற்கு மோடி ஆவணங்கள் பயன்படுகின்றன. மராத்திய மொழியின் சுருக்கு எழுத்தாவது மோடி எனும் எழுத்தாகும். சுருங்கக்கூறின், தென்னிந்திய வரலாற்றை அறிவதற்கு மோடி ஆவணங்கள் பெரிதும் பயன்படுகின்றன

இத்தகைய சீரிய ஆவணங்களை அரசின் உதவியுடன் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொகுத்து வைத்துளளனர் இவ் ஆவணங்கள் காட்சிக்கு அரியவை, ஆராய்ச்சிக்கு உரியவை. இவ் ஆவணங்களைத் துணிக்கட்டுகளாகச் சுருட்டிப் பாதுகாப்பாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வைத்துள்ளனர் ஏறத்தாழ 730 துணி மூட்டைகளில் இந்த ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கட்டிலும் குறைந்தது 100 ஆவணங்கள் வரை உள்ளன. இவ் ஆவணங்கள் வரலாற்றின் பெட்டகம் ஆகும். இவை வரலாற்று மூலங்கள் எனலாம். இவற்றில் சமுதாய, சமய, பொருளாதார, அரசியல் நிகழ்வுகள் பதியப்பட்டுள்ளன. அன்றியும் அயல்நாட்டுத் தொடர்பு, நீதி மன்றங்கள், கோயிற் பணிகள், கல்விப் பணிகள் முதலியவைகளும் காணப்படுகின்றன இவ் ஆவணங்கள் ஆராயப்பட்டுப் பயனுடையவைகளை அச்சேற்ற வேண்டும்.

மேற்கண்ட சிறப்புகளைப் பெற்ற அரிய கையெழுத்துச் சுவடித் துறையில் கருத்தரங்கு நடத்துவது வரலாற்றுச் சிறப்பினை நல்குவதாகும்

பழமையைப் போற்றுவது, புதுமைக்கு வழி வகுக்கும்; பழமையை மறந்த எந்த நாடும் முன்னேறியது இல்லை. கருத்தரங்குகளில் பங்கு பெறும் பேராளர்கள் இவ்வாய்வினை மேற்கொள்ள வழி வகை செய்யின் இப்பல்கலைக்கழகம் சீர் பெற ஏதுவாகும். இத்தகைய ஆய்வுகளுக்கு இக்கருத்தரங்கைப் பயன்படுத்திக் கொள்வார்களாக!

14-03-2000

கதிர். மகாதேவன்

பொருளடக்கம்

		பக்கம்
1	சுவடிகளும் ஆவணங்களும்	
	ம. சா. அறிவுடைநம்பி	1
2	சுவடி நூலகங்கள்	
	எஸ். பி. சண்முகம்	15
3	காகிதச்சுவடியில் பயணக் குறிப்புகள்	
	ந. வேலுசாமி	19
4	மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகளில குறுமபர்கள்	
	கா. சத்தியபாமா	24
5	ஆவணக் காப்பகங்கள்	
	ச. சம்பத்குமார்	37
6	ஸ்ரீ காசிமடம் – வரவு செலவு ஆவணங்கள்	
	வே. சீதாலெட்சுமி	41
7	திருவேங்கடம்பிள்ளை தமிழ் நாட்குறிப்பு	
	ம. செந்தூர் பாண்டியன்	49
8	திருக்குறள உரைப்பதிப்பு	
	துரை. லோகநாதன்	56
9	பேராயர் லெயோனார்டு அவர்களின் நாட்குறிப்பு	
	வி. மி. ஞானப்பிரகாசம்	63
10	விருதை தந்த தமிழ் நூல்கள்	
	பொ. நா. கமலா	71
11	அக்கா சுவாமிகள்– இசை நூல் – ஓர் அறிமுகம்	
	இரா. வசந்தமாலை	76
12	நில அளவையியல ஆவணங்கள்	
	சி. பங்கயச்செல்வி	83
13	பெரிய ஆனந்தக் களிப்பு	
	ச. கண்மணி	89
14	மெக்கன்சி சுவடியில் மீனியல் செய்திகள்	
	ச. பரிமளா & கா. சத்தியபாமா	96
15	காகித மருத்துவச் சுவடிகள் – ஒரு பார்வை	
	மருத்துவர் சே. பிரேமா & மருத்துவர் ச. ரங்கராசன்	105

16 இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் சங்ககால வேள்
ப. புஸ்பரட்ணம் 109

17 **Recently discovered Tamil Palmleaf Manuscripts in Halle/Saale, Germany**
Daniel Jeyaraj 117

18 ஸ்ரீ காசிமடம் – தரும சாசன ஆவணங்கள்
என். மாதவி 128

19 இரண்டாம் வீரா நாயக்கர் நாட்குறிப்பு
அரங்க. மு. முருகையன் 135

20 ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பில் வாழ்வியல்
சோ. இரவி 141

21 கடாரம் – ஒரு மறு ஆய்வு
இராசு. பவுன்துரை 147

22 யாகோபு வைத்திய சிந்தாமணி 700
க. இளமதி சானகிராமன் 151

23 சர்மாவின் பயண அனுபவங்கள்
வே. கலைச்செல்வி 155

24 அறிஞர் அண்ணாவின் கடிதங்கள்
த. அனுராதா 162

25 டி. கே. சி. யின் கடிதங்கள்
த. ரோஜாபாய் 168

26 கந்தவருக்கச் சந்தவெண்பா – ஓர் அறிமுகம்
அ. அறிவுநம்பி 177

27 தமிழில் காகிதக் கையெழுத்து இதழ்கள்–ஒரு கண்ணோட்டம்
எஸ். கதிர்வேலு 183

28 காகிதச் சுவடிகளின் தோற்றமும் வளர்ச்சியும்
சு. சண்முகசுந்தரம் 197

29 வரலாற்றுப் பார்வையில் தலித் கலைகள்
ஜே. துரைராஜ் 202

30 நாஞ்சில் குறவன் வரலாறு
தே. கோபாலன் 210

31 மராத்தியர் கால வழக்குகளும் தண்டனைகளும்
க. தனலெட்சுமி 220

32 இலண்டனிலுள்ள இந்திய அலுவல் ஆவணங்கள்
சி. இலட்சுமணன் 227

33 திருக்குறள் அரிய கையெழுத்துப் பிரதி

சே. இராசு 237

34 மிஷனரி அறிக்கைகள் – ஓர் ஆய்வு

ஆ. ஜான்துரை 243

35 மராத்தியர் காலக கப்பல் கட்டும் தொழில்

ப. உஷாராணி 247

36 நேருவின் கடிதங்கள்

த. அமுதா 253

37 உலகத் தமிழாராயச்சி நிறுவனக் காகிதச் சுவடிகள்

தி. மகாலட்சுமி 261

38 Vankam

S. Johnson Samuel 276

39 தாள் சுவடிகளில மருத்துவம்

த. பூமிநாகநாதன் 279

40 செங்கற்பட்டு ஆவணங்கள் – நில அளவு

த. கலா 290

41 தமிழ் நாடகவியல் தாள் சுவடிகள்

ஆ. தசரதன் 300

42 சுவர் விளம்பரங்களும் பெண்ணுரிமைச் சிந்தனையும்

மு. அருணகிரி & க. ஆறுமுகப்பெருமாள் 309

43 தஞ்சைத திருப்பணி அறிக்கை – ஓர் ஆய்வு

எ. ஜான்சன் ரெத்தினசாமி 320

44 அச்சு நூலகளுக்குப் பினபும ஓலைச் சுவடிகள்

த. கோ. பரமசிவம் 327

45 அமுதததில காகிதச் சுவடிப் பதிப்புகள்

மோ. கோ. கோவைமணி 336

46 கம்பனின் கவித்திறன

சோ. மணிவண்ணன் 345

47 தணிகைவேள் பாரதியாரின் தாள் சுவடிகள

வே. இரா. மாதவன் 351

48 ஆவணங்கள் மூலமும் படியும்

தி. புஷ்கலா 362

49 தாள் சுவடிகளில தனிப்பாடல்கள்

மோ. மருதமுத்து 371

50 கிறித்தவத் திருமறை – அகழ்வாராய்ச்சி, கையெழுத்துப்பிரதி

து. வின்சென்ட் 379

51 ஆவணங்களில் தஞ்சை மராத்திய அரசியர்

வீ. மலர்விழி 385

52 காஸ்யப சில்ப சாத்திரம்

ஆ. வேலுசாமி சுதந்திரன் & த. தனவதி 392

53 சுவடிப் பாதுகாப்பில் வளர்ந்துவரும் தொழில்நுட்ப முறைகள்

ப. பெருமாள் 395

54 மோடி ஆவணங்கள் சுட்டும் மராத்திய மன்னர்களின் சமயப்பணிகள்

மு. ரே. கலைச்செல்வி 401

55 ஈழத்துச் சிவயோக சுவாமிகளின் திருமுகங்கள்

மா. வேதநாதன் 409

56 பிறமொழி ஆவணங்களில் மோடி

இராக. விவேகானந்த கோபால் 417

57 தத்துவ போதகர் இராபர்ட் தே நொபிலி அடிகளாரின் திருமுகங்கள்

செ. சேம் கிறிஸ்டோபர் 423

58 **A Dragoman's Diary becomes History**

R. Subbarayalu 429

59 **The Kashmir Problem as revealed from Sardar Patel's Letters**

R. Murali 432

60 பாஸ்கர சேதுபதி ஆவணங்கள்

கு. வெ. பாலசுப்பிரமணியன் 435

61 நூலகப் பகுப்பும் ஆவணப் பகுப்பும்

க. சிவகாமி 438

ம. சா. அறிவுடைநம்பி
தலைவர்
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

சுவடிகளும் ஆவணங்களும்

சாய்லன் (T'Sai Lun) என்ற சீன அறிஞர் கி. பி. 105இல் பல்வேறு பொருள்களைப் பயன்படுத்திக் காகிதம் செய்யும் முறையைக் கண்டுபிடித்தார். அதன் பின்னர்தான் காகிதம் மக்களின் பயன்பாட்டிற்கு வந்தது. இக் காகிதம் இந்தியாவிற்கு முதன்முதலில் முகமதியார்களால் கி. பி. 11ஆம் நூற்றாண்டில் அறிமுகம் செய்யப்பட்டது.. தற்பொழுது காகிதங்களின் புழக்கமே உலகெங்கிலும் இருந்து வருகின்றது. சுவடி என்று சொன்னவுடனேயே அது ஓலைச்சுவடியைக் குறிப்பதாகவே பலரும் கூறுவதுண்டு. மனிதன் தோன்றிய ஆதி காலத்தில் அவன் மலை, காடு, குகை போன்ற இடங்களில் வாழ்ந்து வந்தான். அப்பொழுது அவன் தன் எண்ணங்களைச் சித்திர வடிவில் மலைகளின் மீதும், குகைகளிலும் செதுக்கினான். அதன் பின்னர் ஒருவகையான புல் (Papyrus), ஓடு, களிமண் பலகை, மூங்கிற்பத்தை, பனைஓலை, தோல், பூர்ச்சபத்திரம், துணி, எலும்பு, மரப்பட்டை போன்ற பல பொருள்களில் எழுதினான். இந்தியாவைப் பொறுத்த அளவில் காகிதம் பழக்கத்திற்கு வராத காலத்திற்கு முன்பு மக்கள் ஓலை நறுக்குகளில் எழுத்தாணி கொண்டு எழுதினர். கரும்பலகை வழக்கத்திற்கு வராத அக்காலத்தில் மாணவர்கள் புதுமணலில் வரிவடிவ எழுத்துக்களைக் கைவிரலால் எழுதிப் பழகினர். காகிதம் பழக்கத்திற்கு வந்த பிறகும்கூடச் சிலவிடங்களில் ஓலைகளிலும் எழுதி வருகின்றனர். சுவடிகள், ஆவணங்கள் என்றால் என்ன? அவற்றின் விளக்கம், ஆய்விற்கு இவை பயன்படும் விதம் போன்றவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது.

சுவடி விளக்கம்

கல்வியறிவு பெறுவதற்கு அடிப்படையாக இருப்பவை சுவடிகளாகும். தமிழில் 'சுவடி' என அழைக்கப்பெறும் சொல் ஆங்கிலத்தில் 'Manuscripts' எனக் கூறப்பெறுகிறது. இச்சொல் இலத்தீன் மொழிச் சொல்லான 'Manuscriptus' என்பதிலிருந்து ஆங்கிலத்தில் 'Manuscripts' என மாறி வந்துள்ளது. 'சுவடி' என்ற சொல்லிற்கு,

> "அச்சு நூலுக்கு வேறுபட்ட, கையினால் அல்லது வேறு முறையினால் எழுதப்பட்ட ஓர் ஆவணம் அல்லது நூல்"[1]

1. **Oxford Advanced Learner's Dictionary**, Oxford University Press, p 526.

என்ற பொருளை ஆங்கில அகராதி கூறுகிறது. பொதுவாகச் 'சுவடி' என்பது ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்பெற்ற நூல்களையே குறித்து வந்துள்ளன. நாளடைவில் அச்சுப் புத்தகம் முதலியவற்றையும் 'சுவடி' எனக் குறிப்பிடுவது வழக்கமாயிற்று. இதழ்கள் பல சேர்ந்தவற்றைச் 'சுவடிப் புத்தகம்' என்றும் 'சுவடிப் பொத்தகம்' என்றும் அழைத்தனர். அதன் பின்னர்ச் சுவடிப் புத்தகங்களை 'நூல்' என்று குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டது.

சுவடு + இ = சுவடி. சுவடு உடையது சுவடி எனக் காரணப்பெயர் பெறுகிறது. தமிழில் வழக்கத்தில் இணையான தடத்தைச் 'சுவடு' எனக் கூறுவர். 'சுவடி' என்பது இணையான ஓலையாகும்.

> "பட்டுச் சுவேதமொடு பாட்டுப்புற மெழுதிய
> கட்டமை **சுவடி** பற்றிய கையினர்"[2]

என்று கொங்கு வேளிர் கூறுகின்றார். நூல்நிலையத்தைப் பாரதிதாசன் '**சுவடிச்சாலை**' என்கின்றார்.

> "மிகப் பழங்காலத்தில் அல்லது இடைக்காலத்தில் எழுதப்பெற்ற எழுத்துப் படிவங்களைக் குறிப்பதற்குச் சுவடி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது"[3]

என்று பிரித்தானியக் கலைக்களஞ்சியம் கூறுகிறது.

இவ்வாறு அகராதி, கலைக்களஞ்சியம் மற்றும் வழக்குகளில் வழங்கப்பெறும் பல்வேறு விளக்கங்களிலிருந்து கையெழுத்துப்படி, கையால் எழுதிய பிரதி, எழுதிய புத்தகம், ஏட்டுப் புத்தகம், புத்தகம், அச்சடிப்பதற்குக் கொடுக்கப்படும் மூலவரைப்படி, ஓலைப்புத்தகம் ஆகியவற்றைச் சுவடியாகக் கொள்ளலாம்.

கையெழுத்துச் சுவடி

பாரசீகத்திலிருந்து மராத்தி மொழி வழியாகக் 'காகிதம்' என்ற சொல் வந்தது. எழுதுவதற்குப் பயன்படக்கூடிய மெல்லிய பொருளைக் காகிதம் என்று அகராதிகள் கூறுகின்றன. பெரும்பாலும் தொடக்க காலத்தில் ஓலைச்சுவடிகளிலிருந்து காகிதத்தில் படி எடுக்கப்பட்டதைக் காணமுடிகின்றன. நூலைப் பதிப்பிக்கின்ற பொழுதும், நூலின் பிரதி கிடைக்காமல் இருந்த நிலையிலும் அந்நூலைப் பார்த்துப் பிரதி செய்யும் வழக்கம் எழுந்தது. ஓலையிலிருந்து மற்றொரு ஓலையிலும் அல்லது தாளிலும் பிரதி செய்தனர். பாடம் சொல்வதற்காகவும், சொற்பொழிவு செய்வதற்காகவும் தாள்களில் தம் கைப்பட எழுதி வைத்தும் பிரதி செய்து வைத்தும் இருந்தமையைக் காணமுடிகின்றது. தாள் கண்டுபிடிக்கப்பட்டுப் பரவலாக அனைவராலும் அத்தாள் பயன்படுத்தத் தொடங்கிய பின்னர்த் தாளிலேயே எழுதத் தொடங்கினர். இதனால் மூலச்சுவடிகளும், பிரதி எடுக்கப்பட்ட சுவடிகளும் தாள்களிலேயே அமைந்தன. தாளில் எழுதப்பட்ட சுவடியாக இருந்தாலும் பிறவற்றிலிருந்து படி எடுக்கப்பட்ட சுவடியாக இருந்தாலும்

---

2. கொங்குவேளிர், **பெருங்கதை**, 3 . 1 119-120.
3. **Encyclopaedia Britannica**, Volume XVIII, p. 618.

அவற்றைக் கையெழுத்துச் சுவடிகள் என்று கூறுவது பொருந்தும். பின்னாளில் இத்தகைய சுவடிகள் ஏராளமாகப் பல்கிப் பெருகின.

சுவடி வகைகள்

களிமண் ஓடுகளில் எழுதப்பெற்ற **ஓட்டுச்சுவடி**. எலும்பில் எழுதப்பெற்ற **எலும்புச்சுவடி**. மூங்கில் பத்தைகளில் எழுதப்பட்ட **மூங்கிற்சுவடி**. சில மரங்களின் உள்பட்டைகளில் எழுதப்பட்ட **லிபர் சுவடி**. பேபரைசு என்ற ஒருவகைக் கோரைப்புல்லில் எழுதப்பட்ட **மரப்பட்டைச் சுவடி** (Papyrus Manuscript). பூர்ச்சமரப்பட்டைகளில் எழுதப்பட்ட **பூர்ச்சமரப் பட்டைச் சுவடி** (Birch Bark Manuscript). வெள்ளாடு. செம்மறியாடு. கன்றுக்குட்டி ஆகியவற்றின் தோலில் எழுதப்பட்ட **தோல் சுவடி** (Parchment Manuscript). பனையோலைகளில் எழுதப்பட்ட **ஓலைச்சுவடி** (Palmleaf Manuscript). பலகையில் எழுதப்பட்ட **பலகைச் சுவடி**. தங்கத்தகட்டில் கரோஸ்தி எழுத்துக்களில் எழுதப்பட்ட **உலோகச் சுவடி** பருத்தி மற்றும் பட்டுத்துணிகளில் எழுதப்பட்ட **துணிச் சுவடி** போன்ற சுவடிகள் உலகின் பல்வேறிடங்களில் மக்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. இச்சுவடிகள் அருங்காட்சியகங்களிலும். சுவடி நூலகங்களிலும். பொது நூலகங்களிலும் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட சுவடிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. காப்பகங்களின் பெயர்களில் அமைபவை
2. சேகரித்தோர் பெயர்களில் அமைபவை
3. பொருளடிப்படையில் அமைபவை

இவற்றுள் சேகரித்தோர் பெயர்களில் உள்ள சுவடிகளும் பொருளடிப்படையில் அமைகின்ற சுவடிகளும் பெரும்பாலும் காப்பகங்களிலேயே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 200க்கும் மேற்பட்ட பொருள்களில் இத்தகைய சுவடிகள் இருக்கின்றன. காப்பகங்களில் சேகரிக்கப்பட்ட சுவடிகளை இப்பகுதி ஆராய்கிறது.

காப்பகங்கள்

கல்வி கற்றதன் அடிப்படையிலேயே சுவடிகள் உருவாகின. முற்காலத்தில் ஓலைகள் கிடைப்பது எளிதாகவும் அதிகச் செலவின்றியும் இருந்தன. அதனால் ஓலைகளின் பயன்பாடு மிகுதியாக இருந்தது. மேலும் அவற்றை எடுத்துச் செல்வதற்கு வசதியாகவும் இருந்தது. எவ்விதச் சிரமமுமின்றி அவற்றில் எழுதவும். திருத்தம் செய்யவும். வேறு படிகள் எடுக்கவும் எளிமையாக முடிந்தது. இதனால் பல நூல்கள் ஓலைச்சுவடிகளிலேயே எழுதப்பட்டன. கற்கும் நிலையிலும். பிறர் படிப்பதற்காகவும். அச்சிடுவதற்காகவும். திருத்தப் பதிப்பிற்காகவும் ஏராளமான அளவில் சுவடிகள் பெருகின.

இச்சுவடிகளையெல்லாம் தொகுத்தல் வேண்டும் என்ற உணர்வு தமிழர்களுக்கு ஏற்பட்டது. சங்க இலக்கியத் தொகுப்புத் தொடர்பாக உ. வே.

சாமிநாதையர் கூறுவதை இவண் சுட்டுவது பொருந்தும்.

> "பலவகை நூல்களும் செய்யுட்களும் கால நிலையினால் தமிழ் நாட்டவரால் புறக்கணிக்கப்பட்டோ வேறு வகையில் மறைந்தோ அருகினபோலும். பிறகு கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந்த புலவர்களும் அரசர்களும் தமிழாராய்ச்சியில் ஊக்கங்கொண்டு பழந்தமிழ்ச் செய்யுட்களைத் தொகுக்கத் தொடங்கினர். அங்ஙனம் தொகுத்தனவே பாட்டு. தொகை. கீழ்க்கணக்கு என்ற மூன்று வகை நூற்றொகுதிகளாதல் வேண்டும்"[4]

முதலாம் இராசராச சோழன் தேவாரத் திருமுறைகளை நம்பியாண்டார் நம்பி மூலம் தொகுத்தமையை இடைக்கால வரலாறு காட்டுகிறது.

பிற்காலத்தில் காலின் மெக்கன்சி. லெய்டன். அ. முத்துசாமிப்பிள்ளை. பிரௌன். எல்லிஸ். எடோர்ட் ஏரியல். இரண்டாம் சரபோசி. பாண்டித்துரைத் தேவர். வி. கனகசபைப்பிள்ளை. உ. வே. சாமிநாதையர் முதலானோர் சுவடிகளைத் தேடித் தொகுத்துப் பாதுகாத்தனர்.

பின்னர்க் காலப்போக்கில் சுவடிகளைப் பாதுகாத்து வைப்பதற்கென்று காப்பகங்கள் உருவாயின. தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் அரசு நிறுவனங்கள். கல்வி நிறுவனங்கள். சமய நிறுவனங்கள். பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் சுவடிகள் சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தவிரச் சிலர் தாங்களே ஆர்வம் காரணமாகத் தனியாகச் சேகரித்து அவற்றைத் தங்கள் இல்லங்களில் பாதுகாத்து வருகின்றனர்.

சென்னையில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலையம். உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம். தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையம். திருவாவடுதுறை ஆதீனம். தருமபுர ஆதீனம். காசித் திருமடம். ஏசு சங்க ஆவணக் காப்பகம். மதுரைத் தமிழ்ச் சங்கம். கரந்தைத் தமிழ்ச் சங்கம். தமிழ்ப் பல்கலைக்கழகம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். ஆசியவியல் நிறுவனம் போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இக்காப்பகங்களில் உள்ள சுவடிகளைத் தனித்தனியாக ஆய்வு செய்தல் வேண்டும். இக்கட்டுரையில் ஒருசில சுவடிகள் மட்டுமே ஆய்வு செய்யப்படுகின்றன.

மெக்கன்சிச் சுவடிகள்

ஸ்காத்லாந்து நாட்டில் லூவித் தீவில் 1754இல் பிறந்த காலின் மெக்கன்சி தம் 30ஆம் வயதில் இந்தியாவுக்கு வந்தார். தம் வாழ்நாள் முழுமையும் (கி. பி. 1821 வரை) இந்தியா. இலங்கை. ஜாவா ஆகிய நாடுகளில் கம்பெனிப் பணிகளுக்காகச் சென்று வந்தார். 1810இல் சென்னையில் தலைமை நில அளவையாளராக (Surveyar General) நியமிக்கப் பெற்றார்.

இவர் தமது அலுவலகப் பணிகளுடன் சுவடிகளையும். தொல்பொருள் கலைச் செல்வங்களையும் தேடித் தொகுத்தார் இப்பணிக்காகத் தமது ஊதியம்

4. உ. வே. சாமிநாதையர் (ப. ஆ.). **குறுந்தொகை.** முன்னுரை.

முழுவதையும் செலவழித்தார். அத்துடன் தமது சொந்தப் பணத்தையே இதற்காகச் செலவிட்டார். இப்பணியில் இவருக்குப் பலர் உதவியாகவும் இருந்தனர். இவர் தொகுத்த சுவடிகள் அனைத்தும் தற்பொழுது சென்னையிலுள்ள அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலையத்தில் உள்ளன. இத்தொகுப்பில் வரலாறு, சரித்திரம், வமிசாவளி, தலபுராணம், கைபீயத்து, கல்வெட்டு, இலக்கியம் போன்ற தலைப்புகளில் ஏறத்தாழ 1379 தமிழ்ச் சுவடிகள் இருக்கின்றன.

'மெக்கன்சிச் சுவடிகள்' எனுந்தலைப்பில் உள்ள இச்சுவடிகள் குறித்துப் பல்வேறு அறிஞர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறியுள்ளனர். வி. ஆர். ஆர். தீட்சிதர்,

> அவர் (மெக்கன்சி) தம் உழைப்பின் பயனாகக் கிடைத்தவைதாம் இப்போதுள்ள வரலாற்றுக் கையெழுத்துப் பிரதிகளும், பிறவுமாய் இருக்கின்றன. இந்தத் தொகுப்பைப் போல ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் இதுவரைக்கும் யாரும் செய்ததில்லை. எப்படி யார் சொன்னாலும் மெக்கன்சி செய்த வேலையை மாத்திரம் உயர்வு நவிற்சிக்குள் அகப்படுத்த முடியாது. உண்மையான வேலையென்றும் ஓயா உழைப்பென்றும் எவரும் கூறுவர்"

என்கின்றார்.

மெக்கன்சிச் சுவடிகளைத் தரவுகளாகக் கொண்டு ம. இராசேந்திரன் மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகள் - ஓர் ஆய்வு' எனுந்தலைப்பிலும், கா. சத்தியபாமா 'மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகள் சுட்டும் மக்கள் வாழ்வியல்' எனுந்தலைப்பிலும் முனைவர் பட்டம் பெறுவதற்காக ஆய்வு செய்துள்ளனர். ம. இராசேந்திரன் தம் ஆய்வேட்டில்,

> 'இந்திய வரலாற்றிலேயே கல்வெட்டுகளைப் படியெடுத்த முதல் வரலாற்றறிஞர் மெக்கன்சியாகத் திகழ்கிறார். இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் படியெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளைவிட 160 கல்வெட்டுகள் மெக்கன்சித் தொகுப்பில் அதிகமாக இடம்பெறுகின்றன. அவை தற்பொழுது படியெடுக்க முடியாத நிலையில் சிதைந்து அழிந்து போயிருக்கின்றன. இனி அவற்றிற்கு மெக்கன்சியின் தொகுப்பே மூலமாகும்"[5]

என்கின்றார். மேலும் கா. சத்தியபாமா தம் ஆய்வேட்டில்,

> "திருமலைநாயக்கர் மரணம் இயற்கையா? செயற்கையா? என்பதுபற்றி இறுதி முடிவிற்கு மெக்கன்சி சுவடியே சான்றளிக்கிறது. மேலும் திருமலை நாயக்கர் காலத்தில் தொழிலாளர்கள் நடத்திய போராட்டமும் தெரிய வருகிறது"[6]

---

5. ம. இராசேந்திரன், **மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகள் ஓர் ஆய்வு**, வெளியிடப்படாத முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1984, பக். 66-67.
6. மேற்கோள் : கா. சத்தியபாமா, **மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகள் சுட்டும் மக்கள் வாழ்வியல்**, வெளியிட்ப்படாத முனைவர் பட்ட ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1998, ப. 15.

என்கின்றார்.

இவர்களின் கூற்றுகளிலிருந்து மெக்கன்சிச் சுவடிகள் வரலாற்றாய்விற்கு எந்த அளவிற்குச் சிறப்புத் தரும் என்பதை அறியமுடிகிறது.

ஏறத்தாழ இருநூறு, முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழகத்தின் அரசியல்நிலை, குறுநில மன்னர்கள் மற்றும் பாளையக்காரர்களின் வாழ்க்கைப் போராட்டங்கள், சமூகநீதி, சமுதாயப் பழக்க வழக்கங்கள், மலைவாழ் மக்களின் வாழ்க்கை முறைகள், பண்பாடு, அக்கால மொழி அமைப்பு, மொழி நடை, நாகரிகம், ஆடை அணிகலன்கள் முதலானவற்றை அறிந்து கொள்வதற்கு மெக்கன்சிச் சுவடிகள் தகுந்த சான்றுகளாகத் திகழ்கின்றன. இச்சுவடிகளை விட்டு விட்டு அக்காலச் சமுதாயத்தையோ, தமிழக வரலாற்றையோ எழுதினால் அவை முழுமையற்றுப் போய்விடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஆதீனச் சுவடிகள்

சமயத்தோடு தொடர்புடைய திருமடங்கள் கல்வி நிலையங்களாக விளங்கின அதனால் பல்வேறிடங்களிலிருந்து மாணவர் பலர் இங்கு வந்து, தங்கியிருந்து கல்வி பயின்றனர். இவர்கள் தங்குவதற்கு இடமும் உணவும் அளித்துக் கல்வியைக் கற்றுத் தருவதில் ஆதீனங்கள் பேரார்வம் காட்டின. இத்தகு ஆதீனங்களில் சுவடிகள் இதனால் பல்கிப் பெருகின. அவற்றைப் பாதுகாப்பதற்கென்றே 'சரசுவதி பண்டாரம்' என்ற பெயரில் நூல் நிலையங்கள் தொடங்கப்பட்டன.

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், சித்தாமூர், மதுரை, துறையூர், விருத்தாசலம், செப்பறை, வானமாமலை, காஞ்சிபுரம் முதலான ஊர்களில் உள்ள சமயத் திருமடங்களில் சுவடிகள் பல காணப்படுகின்றன. வேதம், ஆகமம், புராணம், சோதிடம், தத்துவம், இலக்கணம், இலக்கியம் முதலான பலவகை நூல்கள் தமிழ், வடமொழி, தெலுங்கு, மலையாளம் முதலான மொழிகளில் உள்ளன. இவ்வாறு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சுவடிகள் தமிழ், கிரந்தம், வடமொழி, தெலுங்கு ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. ஓலைகளிலும், தாள்களிலும் அமைந்துள்ள இச்சுவடிகள் திருமுறை, சைவ சித்தாந்தம், தத்துவம், புராணம், தலபுராணம், தோத்திரம், திவ்வியப் பிரபந்தம், இலக்கணம், காப்பியம், கலைகள், சிற்றிலக்கியங்கள், ஆகமம், மருத்துவம், சோதிடம், மந்திரம் முதலான பொருள்களில் அமைகின்றன.

> "திருமுறைகளில் இவருடைய (17ஆவது குரு மகாசந்நிதானம் சீர்வளர் சீர் அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்) நுண்ணறிவு நன்றாகச் சென்று திளைத்துத் தேக்கிட்டமையின் பலவகையான குறிப்புகள் எழுதிச் சேகரித்தார். ஆதீனத்துப் புத்தகசாலையில் உள்ள ஏட்டுச்சுவடிகளில் பலவற்றைத் தமது திருக்கரத்தால் **காகிதங்களில் பிரதி செய்து** உயர்ந்த பட்டுக் கட்டிடங்களால் அழகுபடுத்திப் பொன் முலாம் பூசிப் பாதுகாத்துள்ளார்கள். இசைப்பயிற்சியிலும் இணையற்றவர்கள்.

சங்கீத சம்பந்தமான சில குறிப்புக்களும் எழுதி வைத்திருக்கிறார்கள். இயல், இசை, நாடகம் ஆகிய முத்திறத்திலும் மூதறிவுடையவர்கள் என்பது மிகையன்று. ஆதீன குலதெய்வமாக விளங்கும் ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் தமது திருக்கரமலரால் எழுதியுள்ள சிவஞான போத திராவிட மாபாடியத்தை மூன்று முறை பெயர்த்துக் காகிதப் பிரதி பண்ணியுள்ளார்கள்"[7]

என்ற குறிப்பின் மூலம் காகிதத்தில் பிரதி செய்து பாதுகாத்தமையை அறியமுடிகிறது.

ஏசு சங்கச் சுவடிகள்

கொடைக்கானலிலுள்ள செண்பகனூரில் 'ஏசு சங்க ஆவணக் காப்பகம்' (Jesuit Archives) உள்ளது. இக்காப்பகத்தில் கி. பி. 16 இலிருந்து 20ஆம் நூற்றாண்டு வரை மதுரை மாநிலத்தில் உழைத்த திருச்சபைத் தொண்டர்களின் கடிதங்கள், நாட்குறிப்புகள், சுவடிகள், நூல்கள் போன்றவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஓலை மற்றும் தாள் சுவடிகள், ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் இக்காப்பகத்தில் உள்ளன. இவை தமிழ், ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ்சு, போர்த்துக்கீசியம் போன்ற மொழிகளில் எழுதப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் வரலாறு, இலங்கை, பாண்டிச்சேரி, கோவா ஆகியவற்றைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள், தமிழ் இலக்கியத்திற்குக் கிறித்தவத் தொண்டர்கள் ஆற்றிய பணிகள் போன்ற பலவற்றைப் பற்றிய செய்திகள் இச்சுவடிகளில் பரந்துபட்டுக் காணப்படுகின்றன.

சுவடிகளைப் பொறுத்த அளவில் கத்தோலிக்கக் கிறித்தவர்களின் வாழ்வுக்குப் பயன்படும் சுவடிகளே பெரும்பாலும் உள்ளன. இச்சுவடிகளை எழுதினோர் பெயர், காலம் போன்றவற்றை அறிய இயலவில்லை. பல சுவடிகள் ஒரே கையெழுத்தில் உள்ளன. மூலச்சுவடிகள், படியெடுத்த சுவடிகள் ஆகிய இரண்டுக்குமுரிய வேறுபாடுகள் தெரியவில்லை.

பரிமேலழகர் உரையுடன் கூடிய திருக்குறள், மழவை மகாலிங்க ஐயரவர்களின் இலக்கணச் சுருக்கம், வீரமாமுனிவரின் தமிழ் இலத்தீன் அகராதி, போர்த்துக்கீசிய இலத்தீன் தமிழ் அகராதி, ராஜரிஷி வீரமாமுனிவர் எழுதிய வைத்திய வகார விமரிசை வெண்பா போன்ற சுவடிகள் அவற்றுள் ஒருசிலவாம்.

இறைவன், இயேசுபிரான், விவிலியம், கிறித்தவ இறையியல், மறைக்கல்வி, துறவற சபை ஒழுங்குகள், திருச்சபை வரலாறு, பிற சமயத் தொடர்பு, இலக்கியம், இலக்கணம், மருத்துவம், அகராதி போன்ற தலைப்புகளில் இச்சுவடிகள் அமைந்துள்ளன.

இந்த ஆவணக் காப்பகத்தில் உள்ள சுவடிகளைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொள்வது இக்கால இளைஞர்தம் கடமையாகும்.

---

7. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, **திருவாவடுதுறை ஆதீன வரலாறு**, திருவாவடுதுறை, 1950, பக். 95-96.

ஆவணங்கள்

அரசு அலுவலகங்களில் 'கோப்புகள்' என்று சொல்லப்படுபவையும் அரசு நடவடிக்கைகள், தீர்மானங்கள் முதலானவையும் 'ஆவணங்கள்' என்று சொல்லப்படுகின்றன. எழுத்துருவப் பதிவுகள் ஆவணம் ஆகும். தாள், புத்தகம், ஓலை, கல் செப்புத்தகடு, நிழற்படம், நகரும் படச்சுருள், நுண்படச்சுருள், வரைபடம், தேசப்படம் போன்றவற்றில் பதிவு செய்வனவாக இருப்பன ஆவணம் ஆகும். நிலத்தைக் கிரையம் செய்தல், நிலத்தை அடைமானம் வைத்தல், நிலத்தை ஒப்பந்தம் செய்தல், சொத்து விவரம், உயில்கள் போன்ற பொது மக்களால் பயன்படுத்தப்பெற்ற பத்திரங்கள் ஆய்வுக்குப் பயன்படுத்தப்படும் பொழுது அவற்றை ஆவணம் என்று கூறுவதில் தடையேதுமில்லை. இத்தகைய ஆவணங்கள் பெரும்பாலும் அரசு முத்திரைத் தாள்களில் கையால் எழுதப்பட்டனவாக இருக்கும். இவற்றில் இன்னாரால் இன்ன நாளில் எழுதப்பட்டது: இன்னார் சாட்சியாக இருந்தனர்: இன்னார் முன்னிலையில் இன்னார் கையொப்பம் அல்லது இன்னாரது இடதுகைப் பெருவிரல் இரேகை, இன்ன நாளில் இந்த அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது முதலான குறிப்புகள் காணப்படும். இவ்வாறு பத்திரங்களைப் பதிவு செய்யும் அலுவலகம் 'ஆவணக்களம்' என்றழைக்கப்பெறுகிறது.

ஆவணம் என்பதற்கு அடையாளம், கடைத்தெரு, முறிச்சீட்டு, அடிமைத்தனம், உரிமை என்ற பொருள்களை அகராதி குறிப்பிடுகிறது.[8] 'Document' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு ஆவணம், பத்திரம், ஆதாரமூலம், ஆதாரச் சான்று என்ற பொருளகளை ஆங்கிலம் - தமிழ் அகராதி கூறுகிறது.[9]

> 'எழுத்துகள் எண்கள் குறிகள் ஆகியவற்றைக் காகிதம், ஓலை, செப்புத்தகடு, கல் போன்றவற்றில் செய்தியாகப் பொறித்து வைக்கப் பெறுவது, உரிமைப் பத்திரம் என்றும் கிரையப் பத்திரம் என்றும்"[10]

பெருஞ்சொல்லகராதி விளக்குகிறது.

வரலாற்றுச் சிறப்புக் கொண்ட இத்தகைய ஆவணங்கள் அரசு நிறுவனங்கள், ஆவணக் காப்பகங்கள், சுவடி நூல் நிலையங்கள், அருங்காட்சியகங்கள், பல்கலைக்கழகங்கள் முதலானவற்றில் சேகரித்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் ஒருசில ஆவணங்கள் ஆராயப்படுகின்றன

மோடி ஆவணங்கள்

பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தஞ்சாவூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த மராத்திய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் 'மோடி' என்னும்

---

8 **கழகத் தமிழ் அகராதி**, கழக வெளியீடு, சென்னை, 1980, ப 86.

9 A.C.Chettiar (Chief Editor), **English-Tamil Dictionary**, University of Madras, 1965, p 314

10 முத்து சண்முகம்பிள்ளை (முதன்மைப் பதிப்பாசிரியர்) **பெருஞ்சொல்லகராதி தொகுதி 2**, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் 1989, பக் 221-222.

எழுத்து பயன்பாட்டில் இருந்தது. மராத்தி மொழியின் சுருக்கெழுத்தே மோடி எழுத்தாகும். தாளில் உள்ள இம் மோடி ஆவணங்கள் தஞ்சை மராத்திய மன்னர்களின் வரலாறு. கலைகள். இலக்கியப் பணிகள். மருத்துவப் பணிகள். அக்கால அரசியல் சமுதாயம் போன்ற பலவற்றை அறிவுதற்கு மூலச்சான்றுகளாகத் திகழ்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் அக்காலத் தென்னிந்திய வரலாற்றை அறிவதற்குரிய புதிய செய்திகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றன என்றால் அது மிகையில்லை.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க மோடி ஆவணங்கள் துணியினால் சுற்றப்பெற்ற கட்டுக்களாகவும் (Bundles). தொகுதிகளாகவும் (Volumes) தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையம். தமிழ்ப் பல்கலைக்கழகம். திருமலை'திருப்பதி தேவஸ்தான அலுவலகம் போன்றவற்றில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. சென்னை. திருச்சிராப்பள்ளி. கோயம்புத்தூர். கடலூர். மதுரை. இராமநாதபுரம் ஆகிய ஆவணக் காப்பகங்களில் உள்ள மோடி ஆவணங்களைத் தற்பொழுது பெருமுயற்சி செய்து அவற்றை ஒரே இடத்தில் பாதுகாத்து வைக்க வேண்டுமென்ற நோக்கத்தில் அரசின் உதவியுடன் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 730 துணி மூட்டைகளில் உள்ள இந்த ஆவணக் கட்டுகளில் ஒவ்வொன்றிலும் குறைந்தது 100 ஆவணங்கள் வரை உள்ளன. இவற்றில் அக்காலச் சமுதாயம். பொருளாதாரம். பண்பாடு. அரசியல் வரலாறு. அயல்நாட்டுத் தொடர்பு. நீதிமன்றங்கள். கோயிற்பணிகள். கல்விப்பணிகள் முதலான பலவற்றைக் காணமுடிகின்றன. இன்னும் வெளிவராமல் உள்ள வரலாற்றாய்வுக்குப் பயன் நல்கும் விதத்தில் இந்த ஆவணங்கள் திகழ்கின்றன.

இந்திய அலுவலக ஆவணங்கள்

இலண்டனிலுள்ள இந்திய அலுவலக நூல்நிலையத்தில் (India Office Library, London) பல்வேறு ஆவணங்கள் சேகரிக்கப்பெற்றுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் இந்திய நாட்டைச் சேர்ந்த ஆவணங்களும் அடங்கும்.

ஆர்ம் (Orme) என்பாரின் சுவடிகள். வெல்லெஸ்லி தாள் சுவடிகள் (Wellesley Papers). பிரெஞ்சு இந்திய ஆவணங்கள் (French Indies Records). தொழிற்சாலை ஆவணங்கள் (Factory Records). கடல்துறை ஆவணங்கள் (Marine Records). கிழக்கிந்தியத் தொகுப்புகள் (East Indies Series) முதலான பல்வேறு வகைப்பட்ட ஆவணங்கள் 'உள்துறைத் தொகுப்புகள்' (Home Miscellaneous Series) எனுந் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுக்குரிய விளக்க அட்டவணையும் வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கிந்தியக் கம்பெனியின் அலுவலர் பெஞ்சமின் டாரின் (Benjamin Torin) என்பவர் (1779-1803) தஞ்சாவூர் மராத்திய அரசரிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்ற ஓவியங்கள் மற்றும் இவரால் சேகரிக்கப்பெற்ற இருநூறுக்கும் மேற்பட்ட தஞ்சாவூர் மராத்தியபாணி ஓவியங்கள் இந்திய அலுவலக நூல்நிலையத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த ஓவியங்களுக்கும் விரிவான வகையில் விளக்க அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஆவணங்களில் இந்திய நாட்டில் 17, 18 ஆகிய நூற்றாண்டுகளில் நிகழ்ந்த பல்வேறு வகையான அரசியல் வரலாறு, சமுதாயநிலை, கல்விநிலை, மகளிர் நிலை, சதி தொடர்பான செய்திகள், நீதி நிர்வாகம், மக்கள் செய்த புரட்சி மற்றும் கலகங்கள், போர்கள் முதலானவற்றைக் காணமுடிகின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் தஞ்சாவூர் மராத்தியர்கள் தொடர்பான பல்வேறு வரலாற்று நிகழ்வுகளை வெளிப்படுத்தும் வகையில் ஆவணங்கள் மிகுதியாக இருப்பதைக் காணமுடிகின்றன.

இலண்டனிலுள்ள இந்நூல்நிலையத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஆவணங்களைத் தரவுகளாகக் கொண்டு ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் அறிஞர்கள் உள்ளனர். தற்பொழுது இந்த ஆவணங்களின் நுண்படச்சுருள் (Microfilm) தமிழ்ப் பல்கலைக்கழக நூல்நிலையத்தில் உள்ளன. அனைத்து ஆவணங்களையும் உரிய முறையில் பதிப்பித்து வெளியிடுவது அறிஞர்களின் கடமையாகும். இவற்றை வெளியிடுவதனால் தமிழக வரலாற்றில் ஏன் இந்திய வரலாற்றில் கேள்விக் குறியாகவும் மறைந்தும் காணப்படுகின்ற இடைவெளிகளை நிரப்புவதற்கு இந்த ஆவணங்கள் பேருதவியாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

முத்திரை ஆவணங்கள்

நிலம், வீடு போன்றவற்றைப் பதிவு செய்வதற்குப் பதிவு அலுவலகத்தில் அதற்குரிய முத்திரைத் தாள்களில் பதிவு செய்தால்தான் அது நிலையானதாகவும் உறுதியானதாகவும் திகழும். இவ்வாறு பதிவு செய்வதற்கென்று சில நடைமுறைகள், விதிகள் உண்டு. அரசு முத்திரைத் தாளில் பொருள் (நிலம், வீடு போன்றவை) வைத்திருப்பவர் பெயர், முகவரி மற்றும் யார் பெயரில் பதிவு செய்யப்படுகின்றதோ அன்னாரின் பெயர், முகவரி போன்றவற்றை எழுதுதல் வேண்டும்; நிலம் அல்லது வீடு தொடர்பான முழு விவரத்தையும் அதில் எழுதுதல் வேண்டும். நிலம் அல்லது வீட்டின் மதிப்பு, இதை ஏற்றுக்கொண்ட தகவல் போன்றவற்றையும் எழுதுதல் வேண்டும் இறுதியில் நிலத்தை அல்லது வீட்டைக் கொடுத்தவர் ஒப்பம், பெற்றுக் கொண்டவர் ஒப்பம், சாட்சிக்காரர்களின் ஒப்பம், பதிவு செய்த அலுவலரின் ஒப்பம், பதிவு செய்த அலுவலக முத்திரை, நாள் போன்றவற்றைப் பதிவு செய்தல் வேண்டும். இது ஆவணம், பத்திரம், தஸ்தாவேஜ் என்றழைக்கப்படுகிறது.

இத்தகைய முத்திரை ஆவணங்கள் நில அளவுக்கேற்றபடி மதிப்புள்ள தாள்களில் எழுதப்படுகின்றன. கி. பி. 1860 வரையில் ஓலைகளில் எழுதப்பெற்ற ஆவணங்கள் தற்பொழுது கிடைக்கின்றன. இந்த ஓலைகளில் அரசு முத்திரைகள் இருப்பதையும் காணமுடிகின்றன. மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள ஆவணக்களரியில் இந்த ஓலை ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வந்ததை அறியமுடிகிறது. தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையில் செங்கற்பட்டு, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட ஓலை ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருவதுடன் அந்த ஆவணங்களைத் தரவுகளாகக் கொண்டு ஆய்வுப்பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதேபோன்று அரிய கையெழுத்துச் சுவடித்துறையில் தாள்களில் எழுதப்பட்ட முத்திரை ஆவணங்கள் ஏறத்தாழ இருநூறுக்கும் மேற்பட்ட அளவில்

சேகரிக்கப்பட்டுள்ளன. கி. பி. 1800 இலிருந்து எழுதப்பெற்ற ஆவணங்கள் இவற்றுள் அடங்கும்.

இத்தகைய முத்திரை ஆவணங்களில் அக்காலத்திய மக்களின் வாழ்க்கைநிலை, மொழி நடை, நிலத்தின் / சொத்தின் மதிப்பு, அளவைகள், குறியீடுகள், அக்காலத்தில் பதிவு செய்த முறை, எல்லைகள் முதலான பலவற்றைக் காணமுடிகின்றன.

முடிவுகள்

இலக்கியம், வரலாறு போன்ற ஆய்வுக்குப் பயன்படும் வகையில் சுவடிகளும், ஆவணங்களும் விளங்குகின்றன. ஒரு நாட்டைப்பற்றியும் அந்நாட்டு மக்களைப் பற்றியும் அறிவதற்கு இத்தகைய சுவடிகள் பெரிதும் பயன்படும். இலக்கிய நூல்கள், தொல்லியல் மற்றும் அகழ்வாராய்ச்சிகள், கல்வெட்டுகள், செப்பேடுகள் போன்றவை எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாகத் திகழ்கின்றனவோ அந்த அளவிற்குச் சுவடிகளும் ஆவணங்களும் ஆய்வுக்குத் தேவைப்படுகின்றன. தாள்களிலேயே நாட்குறிப்புகள், பயண நூல்கள், கடிதங்கள் போன்றவை எழுதப் பட்டிருப்பதையும் காணமுடிகின்றன. சுவடி நூல் நிலையங்களிலும், ஆவணக் காப்பகங்களிலும் இவை பாதுகாக்கப்பட்டு ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே சுவடிகளும் ஆவணங்களும் ஆய்வுக்கு மிகவும் தேவை என்பதை இதுவரை ஆய்வு செய்ததன் மூலம் தெளிவுபடுத்தப்பட்டன.

ஒருசில ஆவணங்களின் பிரதிகள் சான்றுக்கு இவண் தரப்படுகின்றன.




A True Copy

Joint Magistrate







எஸ். பி. சண்முகம்
டி. பி. எம். எஸ். கல்லூரி
பொறையாறு

சுவடி நூலகங்கள்

நம் பண்பாட்டைக் காக்கும் பெட்டகங்களாகக் கோயில்கள் விளங்குகின்றன. நாட்டு நடவடிக்கைகள் கோயில்களில் கல்வெட்டுகளாக எழுதி வைக்கப்பட்டுள்ளன. பிற்காலத்திற்கு உதவும் வகையில் சுவடிகளும் பல்வேறு கோயில்களில் வைக்கப்பட்டுள்ளன. முடியரசர்களும் தனிப்பட்ட பிரபுக்களும் தங்கள் முயற்சியால் சுவடிகளைச் சேர்த்து வைத்தனர்.

சமயப் பூசல்களாலும் வெளிநாட்டவர் படையெடுப்பாலும் சுவடி நூல்கள் பல பாதிக்கப்பட்டன. எதிரிகள் படையெடுப்பைக் கேட்டதும் கோயில் குருக்களும் பிறரும் ஏடுகளை எல்லாம் பாதுகாப்பாக எடுத்துச் சென்றனர். காலப்போக்கில் போற்றுவார் இல்லாமையால் இயற்கைச் சீற்றத்திற்கும் கரையான்களுக்கும் இரையாயின. மேலும் பயணிகள் என்ற பெயரில் சுற்றுலா வந்த பல வெளிநாட்டினர் நமது ஆயிரக்கணக்கான சுவடிகளை எடுத்துச் சென்று விட்டனர்.

இவற்றையும் மீறித் தனிப்பட்டோர் அரிய முயற்சியால் பழஞ்சுவடிகள் பல உலகெங்கிலும் அரிய நூலகங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அவை இலக்கியம், மருத்துவம், சோதிடம், அரசியல், தத்துவம், வரலாறு போன்ற பல துறைகளில் அமைந்துள்ளன. அவற்றைத் தொகுத்தும் பகுத்தும் இக்கால அறிவியல் முறைகளோடு ஆராய்ந்தால் பல அரிய கருத்துக்கள் கிடைக்கும்.

பிரிட்டிஷ் அருங்காட்சியக நூலகம்

இந் நூலகத்தில் மிகப்பெரும் எண்ணிக்கையில் நூல்களும் கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. இங்கிலாந்து பற்றிய பழமையான வரலாற்றுச் சுவடிகள், ஆங்கில அரசர்களின் கையெழுத்துக்கள், வெளிவராத ஆங்கிலேய எழுத்தாளர்களின் நூல்கள் ஆகியன அங்கு உள்ளன.

பாட்லியன் நூலகம்

இது இங்கிலாந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் உள்ளது. இங்குக் கீழ்த்திசைக் கையெழுத்துப் பிரதிகள் அதிகமாக உள்ளன. இங்கிலாந்து இலக்கிய வரலாறு தொடர்பான கையெழுத்துப் பிரதிகளும் தொடக்க கால இலக்கியப் பிரதிகளும் அதிக அளவில் உள்ளன.

மாஸ்கோ லெனின் நூலகம்

மார்க்ஸ், லெனின் ஆகியோரது வாழ்க்கையோடு தொடர்பான ஆவணங்கள் இங்குச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. லெனினது கையெழுத்துச் சுவடிகள் பல்வேறு வழிகளில் பல நிலைகளில் இங்கு வந்து சேருகின்றன. அவற்றை மிகுந்த கவனத்துடன் பழைய நிலைக்கு மீட்டுப் பெட்டகங்களில் பாதுகாத்து வைக்கின்றனர் ஆய்வாளர்களுக்கு அதன் நகலை வழங்கி வருகின்றனர்.

இந்திய தேசிய நூலகம்

இந்தியாவில் சுமார் ஐம்பதுக்கும் அதிகமான சுவடி நூலகங்கள் உள்ளன. கல்கத்தாவிலுள்ள இந்திய தேசிய நூலகத்தில் அராபி, உருது, வங்கம், வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளில் அரிய கையெழுத்துச் சுவடிகள் உள்ளன. தமிழறிஞர் வையாபுரிப்பிள்ளை தமது வாழ்நாளில் பெரிதும் முயன்று சேர்த்து வைத்த அரிய சுவடிகள் இங்குப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் மட்டும் 15 சுவடி நூலகங்கள் உள்ளன.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகம், சென்னை

டாக்டர் உ. வே. சாமிநாதையர் மேலைநாட்டு முறைப்படி, மேலைநாட்டு அறிஞர்களும் போற்றும்வண்ணம், பழந்தமிழ் இலக்கியங்களை ஏட்டிலிருந்து மீட்டு அச்சேற்றித் தமிழ் உலகிற்குத் தந்தவர். திருவான்மியூரில் உள்ள இந்நூலகம் 'கலாசேத்திரா' என்றழைக்கப்படுகிறது இந்நூலகத்தில் சுமார் 1600 ஓலைச்சுவடிகளும் 600 கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன இந் நூலகம் இவற்றைப் பாதுகாத்து வருவதுடன் நூலாகவும் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது.

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

கி. பி 1798-1833இல் தஞ்சாவூரை ஆண்ட இரண்டாம் சரபோஜி மன்னர் ஒரு பேரறிஞர். அறிவு வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவர். தமக்கு முன் ஆண்ட சோழ மன்னர்கள், நாயக்க மன்னர்கள், மராத்திய மன்னர்கள் ஆகியோர் சேர்த்து வைத்த நூல்களைத் தொகுத்தார். வெளிநாட்டிலிருந்தும் பல பழஞ்சுவடிகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் சேர்த்தார். இது 1820இல் சரசுவதி மகால் நூலகமாக உருப்பெற்றது இன்று இந்நூலகத்தில் முப்பதாயிரம் கையெழுத்துப் பிரதிகளும், ஓலைச்சுவடிகளும் உள்ளன இவை தமிழ், வடமொழி, மலையாளம், மராத்தி ஆகிய மொழிகளில் உள்ளன இவைகளைப் பற்றிய பட்டியல்களும் உள்ளன. அச்சுவடிகளில் மருத்துவம், சோதிடம், இலக்கியம், இசை தொடர்பான சுவடிகள் உள்ளன. சுவடியுடன் மட்டுமல்லாது அக்கால ஓவியங்களும் இடம்பெற்றுள்ளன. தஞ்சாவூர் மராத்திய மன்னர்களின் ஆட்சிமுறை, வரலாறு போன்றவற்றை விளக்கும் ஏடுகள் துணி மூட்டைகளாகக் கட்டி வைக்கப்பட்டுள்ளன. இவை 'மோடி ஆவணங்கள்' என்றழைக்கப்படுகின்றன. இந்நூலகம், அரிய சுவடிகளிலிருந்து, மருத்துவம், இசை, இலக்கியம் தொடர்பான பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது.

அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை

சென்னை அரசினர் சுவடி நூலகத்தில் பலவகையான சுவடிகள் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. அவை தமிழ், வடமொழி, தெலுங்கு ஆகிய் மொழிகளில் அமைந்துள்ளன.

மறைமலையடிகள் நூலகம், சென்னை

இது தென்னகத்தில் தமிழ் மொழியில் வெளிவந்துள்ள சிறந்த நூல்கள் அனைத்தையும் கொண்டது. இந்நூலகம் முந்நூறுக்கும் மேற்பட்ட தமிழ்ப் புலவர்களின் படங்கள், கடிதங்கள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றைப் பாதுகாத்து வருகிறது. தமிழில் ஆய்வு செய்கின்றவர்களுக்கு இச்சுவடிகள் பெரிதும் பயன்பட்டு வருகின்றன.

காகிதச் சுவடிகளில் காணலாகும் அரிய கருத்துக்கள்

காகிதச் சுவடிகள் பலவற்றை ஆராய்ந்தால் அவற்றுள் இலக்கிய வரலாற்று உண்மைகள் இருப்பது தெரியவரும். நூலாசிரியரது முழுமையான வரலாறும், அவரது பண்பு நலன்களும், படைப்புகளும் நன்கு புலப்படும் ஒரு நாட்டின் சுவடிகளை ஆய்வு செய்யும்போது அந்நாட்டு மக்களின் கலைப்பண்பாட்டுச் செய்திகள் கிடைக்கும். பிற நாட்டினர் ஆட்சியின்போது அந்நாட்டின் சமூகப் பண்பாட்டு மாற்றங்கள் தெரியும்.

மருத்துவம், உயிரியல், வானவியல், மொழியியல் போன்ற துறைகளில் அடைந்துள்ள வளர்ச்சியைக் காணலாம். அவற்றை இக்கால மருத்துவ முறைகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்தால் பல அரிய செய்திகள் கிடைக்கும். மேலும் மக்களின் பொருளாதார வளர்ச்சி, வரி வருவாய் முறைகள், தரை, கப்பல் போக்குவரத்துப் போன்றவற்றை அறியலாம் அக்காலத் திருமடங்கள், ஆதீனங்கள் போன்ற அறநிலையங்களின் கொடைகளையும் அவற்றின் பயன்களையும் ஆராயலாம்.

இச்சுவடிகளை ஆராயும்போது நிர்வாக முறை, நீதி, சட்டங்கள் போன்றவற்றை உணரலாம். இவை அக்கால நிர்வாக முறை, நீதி, சட்டங்கள் ஆகியவற்றில் காணப்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண உதவும்.

சுவடிகளை ஆராயும்போது மொழியின் வளத்தை நன்கு அறியலாம். பிற நாட்டினர் ஆதிக்கத்தால் மொழியில் ஏற்படும் மாற்றங்களை அறியலாம். மேலும் ஆன்மீக நெறிகள் தத்துவக் கோட்பாடுகள் ஆகியவற்றில் புதிய செய்திகளைக் காணலாம்.

அரசும் அரசு சார்ந்த நிறுவனங்களும் ஆற்ற வேண்டியவை

தனியார் வசம் இருக்கும் பல கையெழுத்துச் சுவடிகளைப் பெற்றுக் கணிப்பொறி மூலம் பதிவு செய்தல் வேண்டும். மேலும் அவற்றைத் தொகுத்தும் பகுத்தும் பட்டியல் இட்டு வைத்தால் ஆய்வாளருக்கு எளிதாக இருக்கும்.

அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இவ்வரிய சுவடிகளைத் தற்கால அறிவியல் முறைப்படிப் பாதுகாத்து வைக்க வேண்டும். அவ்வாறு பாதுகாத்து

வருபவற்றை உலகெங்கிலிருந்தும் ஆய்வு செய்ய வருகின்றவர்களுக்குத் தாராளமாக வழங்க முன்வரவேண்டும்.

தனியாரிடம் இருக்கும் சுவடிகளை அவர்களிடமே வைத்துப் பாதுகாக்க உரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

பல மொழிகளில் இருக்கும் அச்சுவடிகளை அந்தந்த மொழி வல்லுநர்களைக் கொண்டு மொழியாக்கம் செய்தல் வேண்டும்.

சுவடியின் முழுமையான விவரங்கள் கிடைத்ததும் அவற்றை நூலாக்கம் செய்து தமிழ் உலகிற்கு வழங்க வேண்டும்.

அரிய கையெழுத்துப் பிரதிகளைக் கொண்டிருக்கும் இந்நூலகங்கள் தமிழ் ஆர்வலர்கட்கும் ஆய்வாளர்களுக்கும் பெரும் கருவூலமாகும். காலப் பழமையால் நலிவுறும் இப்பிரதிகளை மீட்டுத் தமிழுலகிற்கு அளிக்கும் அரிய பணியை உடனே தொடங்குதல் நலம் பயக்கும்.

□

ந. வேலுசாமி
பதிவாளர்
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்

காகிதச் சுவடியில் பயணக் குறிப்புகள்

ஓலைச்சுவடிகளைப் பதிப்பிக்கும் பணிகளில் உள்ள தொல்லைகளுக்கும் உழைப்பிற்கும் சற்றும் குறைவில்லாதது, காகிதச்சுவடிகளைப் பதிப்பிப்பதிலும் உண்டு என்பது வெள்ளிடைமலை.

ஓலைச்சுவடி, காகிதச்சுவடி இவற்றில் வேறுபாடு ஓலை, காகிதம் என்பவைதாம்.

மொத்தத்தில் "ஓலைச்சுவடியும் ஆவணம்தான் (Document) காகிதச்சுவடியும் ஆவணம்தான். இந்த இரு ஆவணங்களிலிருந்தும் தோன்றியவைதாம் இலட்சக்கணக்கான அளவில் பெருகி நாம் அனைவரும் பயின்றுவரும் நூல்கள்.

சுவடி இயல்

சுவடி என்னும் சொல் கையால் எழுதிய நூலைக் குறிப்பது என்பர் ஆய்வாளர்.[1] அது ஓலையிலும் இருக்கலாம் காகிதத்திலும் இருக்கலாம். சுவடி என்பதற்குத் தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்னும் பெயர்களை எழுதப்பெற்ற ஏட்டிற்கும் நூலிற்கும் ஆகுபெயர்களாய் வழங்கி வருவது போலச் சுவடி என்னும் பெயரும் காரணப்பெயராய் அமைந்தது எனலாம்.[2]

சுவடு + இ = சுவடி. சுவடு (அதாவது அடையாளம்) உடையது சுவடி. எழுத்துச்சுவடு உடையது ஆதலின் சுவடி எனப்பெறுகிறது.

"பஞ்சியங்கமலம் பூத்த பசுஞ்சுவடு உடைத்து மன்னோ" இந்த அடியில் அமைந்துள்ள சுவடு என்னும் சொல் பதிதலால் உண்டாகும் குறையினைச் சுட்டுகிறது.

சுவடி என்பது இணை, கற்றைக்கட்டு, பொத்தகம் என்னும் பெயர்களையும் பெறுகிறது. கையால் எழுதப்பெற்ற படிவம் சுவடு எனப்படும்[3] என்பதையும் இங்கே

1 பூ. சுப்பிரமணியம், **சுவடி இயல்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991, ப. 7
2. **மேலது**, ப. 7.
3. **மேலது**, ப. 8.

எண்ணிப் பார்க்கலாம்.

பயணக் குறிப்புகளைத் தாங்கியுள்ள காகிதச்சுவடிகள்

பயணம் என்பது ஒருவரோ, பலரோ ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லுதல் ஆகும். பயணிகள் பல்வேறு காரணங்கள் பற்றிப் பயணம் மேற்கொள்வர். அவ்வாறு பயணம் மேற்கொண்டவர்கள் அப்பயணம் பற்றி எழுதும் நூல்கள் பயணநூல்கள

இவ்வாறு பயணநூல்கள் எழுதத் துணையாக இருந்தவை ஓலைச்சுவடிகளும் காகிதச்சுவடிகளுமேயாம். அவற்றில் மிகுந்த அளவில் பயணநூற்கள் எழுதுவதற்குப் பெரும் காரணங்கள் காகிதச்சுவடிகள் என்பது பயணநூல் ஆய்வால் தெளிவாகிறது.

நாட்குறிப்பு முறையில் கே. பி. எஸ். மேன்ன் 'மாஸ்கோ டைரி' என்ற நூலை எழுதியுள்ளார். இவரது பயணக்குறிப்புகளும், 'நடைப்பயணம்' என்னும் பெயரில் இருக்கும் 'கால்நடையில் 28,000 மைல்கள்', 'எனது பர்மா வழிநடைப்பயணம்' ஆகிய இரு நூற்களும் மணியனால், கதை வடிவில் அல்லது கதை என்ற பெயரில் எழுதப்பெற்ற பயண நூல்களும்,[4] பயணக்குறிப்புகள் அடங்கிய காகிதச்சுவடிகள் எனில் மிகையல்ல.

மக்கள் சீனத்தில் உள்ள தொழில்நிலைகளைப்பற்றிப் போகர் (சித்தர்) தம் பயணக்குறிப்புகளாகச் சிலவற்றைக் குறிப்பிடுகிறார். அஃதாவது, சீன நாட்டினர் சோப்பு, கண்ணாடி ஆகியவற்றைத் தயாரித்து இருக்கிறார்கள். இரும்பு, உப்பு, செம்மரத்தூள், செம்பு ஆகியவற்றைச் சேர்த்துப் புடவைக்குரிய வண்ணத்தைத் தயார் செய்திருக்கிறார்கள் என அறிய முடிகிறது. காகிதமும் தயாரித்துள்ளார்கள்[5] என்பதைப் போகரின் பயணக்குறிப்புகள் காட்டுகின்றன.

பதிப்பிக்கப்பெற்ற பயண நூல்களில் பெரும்பான்மை சென்னையில் பதிப்பிக்கப்பெற்றவையாகவே இருக்கின்றன. கும்பகோணம், தருமபுரம், சேலம், சிவகங்கை, சிதம்பரம், கோயமுத்தூர், புதுக்கோட்டை, மதுரை, வேதாரண்யம், திருச்சி, இளையான்குடி, திருநெல்வேலி, காரைக்குடி, கண்டனூர், செந்தாரைப்பட்டி ஆகிய இடங்களிலும் நூல்கள் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

வேறு மாநிலங்கள் என்ற வகையில் ஆந்திராவில் உள்ள விஜயவாடாவிலும், மகாராட்டிரத்தில் உள்ள மும்பையிலும் இரண்டு நூல்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

வெளிநாடுகள் என்ற வகையில் அமெரிக்காவிலும், சிங்கப்பூரிலும், இலங்கையிலும் மூன்று நூல்கள் பதிப்புப் பெற்றுள்ளன.

வேறு சில நாடுகளிலும் தமிழ்ப் பயண நூல்கள் பதிப்பிக்கப் பெற்றிருக்கும் எனவும் நம்பலாம்.

---

4 ந வேலுசாமி, **பயண நூல்கள்வழிப் பண்பாடு**, தமிழ் நகர், ஈரோடு, ப. 5.

5 போக சித்தர், **போகரின் பயணக் குறிப்புகள்** (கி. பி 1550-1625), தமிழாய்வுக் கழகம், செந்தாரைப்பட்டி, 1980, பக் 42-43

பயணநூல் என்ற இலக்கிய வகைப்பாடு தோன்றிய விதம்

சங்க இலக்கியமாம் பத்துப்பாட்டில் உள்ள ஐந்து நூல்களில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை இவைகள் வழிகளைப்பற்றிக் கூறியுள்ள பயண நூல்களாகும்.

சிலம்பில் - கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் செய்யும் பயணத்தை இளங்கோவடிகள் குறிப்பிடத் தவறவில்லை.

பின்னாளில் எழுந்த கௌதம புத்தர் அடிச்சுவட்டில், மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் என்ற நூல்கள் பயணக்குறிப்புகளைத் தாங்கியவைகளாகும்.

இவ்வாறு, பல்வேறு காலங்களில் எழுதப்பெற்ற நூல்களைப் பயண நூல்கள் என்றும், பிறவகை நூல்கள் என்றும் பட்டியல் படுத்தும் முறை, ஐரோப்பியர் தமிழகத்திற்கு வந்த பின்னர்தான் நடைமுறைக்கு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பியர்களிலும் ஜான் மர்டாக் (John Murdouch) என்பவர்தான் அச்சான தமிழ் நூல்களையெல்லாம் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து வகைப்படுத்தி அண்மைக்காலம் வரையிலும் ஒவ்வொரு வகை நூல்களையும் தனித்தனியாகப் பட்டியல் தயாரித்து வைத்தார் என்பதை மறந்துவிடக் கூடாது.[6]

இந்த ஆய்வாளர் அறிந்தவரை பயண நூல் வரலாறு சுமார் நூறாண்டுகளை உடையதாக உள்ளது. 1889ஆம் ஆண்டு வெளிவந்த "ஆரிய திவ்விய தேச யாத்திரைச் சரித்திரம்" என்ற நூல் தொடங்கி இன்றுவரை பயணநூற்கள் தோன்றியவண்ணம் உள்ளன[7] அது இயல்பே.

1803 முதல் 1811 வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து வந்த டாக்டர் லெய்டன் என்பவர் ஓலைச்சுவடிகளைத் திரட்டியுள்ளார். அவை தமிழ் உட்படப் பல மொழிகளில் ஆனவை. அச்சுவடிகளையும் கிழக்கிந்தியக் கம்பெனியர் விலைக்கு வாங்கி இலண்டனில் உள்ள இந்திய அலுவலக நூலகத்தில் வைத்துள்ளனர்[8] என்ற குறிப்பு மிகுந்த சிந்தனைக்குரியதாக லெய்டன், சுவடிகளைத் தேடியே இந்தியாவில் பயணம் மேற்கொண்டிருந்திருக்கிறார் என்ற உண்மை புலனாகிறது.

அகராதி, இரசவாதம், இலக்கணம், இலக்கியம், கணிதம், சமயம், ஜாலம், சோதிடம், தோத்திரம், நாடகம், மருத்துவம், மாந்திரீகம், வரலாறு, அரிச்சுவடி ஆகியவற்றிற்கெல்லாம் சுவடிகள் இருக்கும்போது, பயணத்திற்குச் சுவடிகள் குறிப்பாகக் காகிதச்சுவடிகள் இருந்ததில் வியப்பேதுமில்லை எனலாம்.

பழைய ஏட்டுச்சுவடிகளில் செய்யுள்களையும், உரைநடைபோலத் தொடர்ச்சியாகவே எழுதியுள்ளனர். ஓலைச்சுவடிகளைத் தயாரிப்பதில் ஏற்படும் உழைப்பு, காலம் போன்றவற்றின் மிகுதியாலும், ஏடுகளின் அளவு குறைவாலும்

---

6. ந. வேலுசாமி, **மு. கா. நூல்**, ப. 2.
7. **மேலது**, ப. 3.
8. பூ. சுப்பிரமணியம், **மு. கா. நூல்**, ப. 67.

சிக்கனம் தேவைப்பட்டது. ஆனால் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் அச்சிடப்பெற்றுள்ள நூல்களும், தாள்களில் எழுதப்பெற்றுள்ள சுவடிகளும் இவ்வாறே காணப்படுகின்றன[9] என்ற குறிப்பு காகிதச்சுவடி பெற்றிருந்த இன்றியமையாத இடத்தைச் சுட்டும்.

சில பயணக்குறிப்புகள்

உள்நாட்டுக்குள்ளேயோ, வெளிநாடுகளுக்கிடையேயோ பயணம் மேற்கொண்ட தலைவர்களும், அறிஞர்களும், எழுத்தாளர்களும் விரிவாக எழுதுவதற்குக் காலமின்மையால் குறிப்புகளாகவே வைக்கப்பட்டுப் பிறகு அவை அப்படியே 'பயணக்குறிப்புகள்' என்ற பெயரோடு வெளிவந்ததுண்டு.

குறிப்பாகவும், சிறப்பாகவும் அவ்வாறு குறிப்பிடத்தகுந்த நூல் "பெரியாரின் அயல்நாட்டுப் பயணக்குறிப்புகள்" ஆகும். பெரியார் ஈ. வே. ரா அவர்களின் சோவியத் ரஷ்யா, செர்மனி, இங்கிலாந்துப் பயணக்குறிப்புகளே அவைகள்.

பெரியார் இப்பயணக்குறிப்புகளைச் சோவியத் ரஷ்யாவில் அவர் தங்கிய 66ஆவது நாள் தொடங்கி எழுதியுள்ளார்.

> "பிரயாணக் குறிப்பு
> 19-04-32 USSR-ல் 66-வது நாள்
> சோசசிட்டலிருந்து நேற்று மாலை மாஸ்கோவுக்குப் புறப்பட்டோம்..."[10]

என்றவாறு பயணக்குறிப்புகளை எழுதத் தொடங்கியிருந்தார் பெரியார்.

பயணநூல்கள் அல்லது பயணக்குறிப்புகள் உரைநடையில் மட்டுமின்றிச் செய்யுளிலும் எழுதப்பட்டுள்ளது என்பதற்கும் சான்றுகள் உள்ளன.

பாரதிதாசன் 'மாவலிபுரச்செலவு' என்றும், அவருக்குப் பிறகு வா. மு. சேதுராமன் 'மலைநாட்டின் மீதினிலே' என்றும், 'அமெரிக்காவில் பெருங்கவிக்கோ' என்றும் வெளிவந்துள்ளனவற்றை ஈண்டு நோக்க வேண்டும்.

அமெரிக்கா சென்ற பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் சிகாகோ நகரையும் காணச் சென்றார். அதற்குக் காரணம் இரண்டு. ஒன்று, இந்தியப் பண்பாட்டு - ஆன்மீகப் பெருமைகளைச் சிகாகோவில்தான் வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் பிற நாட்டினருக்குச் சகோதர வாஞ்சையோடு வெளிப்படுத்தினார். இரண்டு, சிகாகோ நகரில்தான் மிகப்பெரிய நூலகம் உள்ளது. இந்த இரண்டையும் பெருங்கவிக்கோ,

> "வாரிசூழ நறசிகாகோ வானகத் திருநகரில்
> நேரிலே கண்டு தெளி நெஞ்சளர்ந்தேன் - பாரினிலே
> விந்தை நகாகளிலே வேந்துநகர் ஈதேகான்
> தநத தவ சந்திப்புத்தான்"

என்றும்,

---

9 பூ சுபபிரமணியம, 'சுவடியும் பதிபபும்', **பதினான்காவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை**, தொகுதி 2, ப 162.

10 வே ஆனைமுதது (ப ஆ), **பெரியாரின் அயல்நாட்டுப் பயணக்குறிப்புகள்**, பெரியார் நூல் வெளியீட்டகம், சென்னை, 1997, ப 2

"அமைதி தவழும் அந்தமில் நூலகத்தில்
இமை மூடாதே கண்டேன் ஏக்கம் - நமது நாட்டில்
கன்னிமேரா, கல்கத்தா காண்கவின் நூலகங்கள்
இன்றும் வளர வேண்டுமே"[11]

என்றும் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.

எனவே, இதுகாறும் கண்டவற்றில் ஓலைச்சுவடிகள் ஆற்றிய பணிகளைக் காகிதச்சுவடிகளும் ஆற்றியிருக்கின்றன என்றும், ஓலைச்சுவடிகளைப் போலவே, காகிதச்சுவடிகளும் சிறந்த ஆவணங்களாகப் பணியாற்றியிருக்கின்றன என்றும், பயணக்குறிப்புகளுக்கு ஓலைச்சுவடிகளைப் போலவே காகிதச்சுவடிகளும் கணிசமாகப் பணியாற்றியிருக்கின்றன என்பதும் போதரும்.

□

11. வா மு. சேதுராமன், **அமெரிக்காவில் பெருங்கவிக்கோ**, தமிழ்மணி புத்தகப்பண்ணை, சென்னை, 1998, பக். 99-101.

கா. சத்தியபாமா
விரிவுரையாளர்
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி
தஞ்சாவூர்

மெக்கன்சியின் தமிழ்ச்சுவடிகளில் குறும்பர்கள்

ஒரு நாட்டின் அல்லது மக்களின் வரலாற்றை விளக்கப் பல சான்றுகள் பயன்படுகின்றன. சிறப்பாகத் தமிழ் நாட்டு வரலாற்றிற்கு இலக்கியங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், புதைபொருள்கள், கட்டடங்கள், கலைகள், வெளிநாட்டார் எழுதி வைத்த குறிப்புகள், செவிவழிச் செய்திகள் முன்னோர் காகிதங்களிலும், ஓலைச்சுவடிகளிலும் எழுதிச் சேகரித்து வைத்த குறிப்புகள் முதலானவை வரலாற்று மூலங்களாக உள்ளன. ஐரோப்பியரான காலின் மெக்கன்சி (கி. பி. 1796 - 1821) என்பார் சேகரித்து வைத்த காகிதச் சுவடிகளில் 'குறும்பர்' என்ற இனத்தாரின் வரலாறு குறித்த செய்திகள் காணப்படுகிகின்றன இவை இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர்ச் சேகரிக்கப்பட்ட 'கைபீது' எனப்படும் செவிவழிச் செய்திகளாக அமைந்துள்ளன. மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகளில் காணலாகும் இச்செவிவழிச் செய்திகளை இலக்கியச சான்றுகளோடும் வரலாற்று நூல்களில் கூறியுள்ள கருத்துக்களோடும் அரசு ஆவணங்களில் கூறியுள்ள செய்திகளோடும் இணைத்து ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குறும்பர்கள்

தமிழக வரலாற்றின் இருண்ட காலத்தில் இன்னார், எங்கிருந்து வந்தவர் என்று அறிந்து கொள்ள இயலாத வகையில் குடியேறிய பல்வேறு இனத்தவர்களில் குறும்பர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். குறும்பர்களைப் பற்றிய செய்திகள் வரலாற்று ஆராய்சசியாளர்களுக்கு அரிதாகவே கிடைத்துள்ளன.

அபிதான சிந்தாமணியில் காணப்படும் குறும்பர் பற்றிய செய்திகள் வருமாறு. அபிதான சிந்தாமணி முற்காலத்தில் தொண்டை நாடு குறும்பர் வசப்பட்டிருந்தது இக்குறும்பர்களுக்கு 64 கோட்டைகள் இருந்தன. அவற்றிற்கு இராசதானி புழல் கோட்டை என்பதையும். இவர்கள் பல்லவ அரசர்களின் சந்ததியார் கோங்கர், சோழர், சாளுக்கியரால் தங்களிடங்களில் இருந்து துரத்தப்பட்டு மலை, காடு முதலிய இடங்களில் ஒளிந்து பலவித தொழில் செய்து பிழைக்கின்றனர். சிலர் வர்த்தகம் செய்கின்றனர். குறும்ப நாடு மலை நாட்டில் ஒரு பிரிவு இவர்களில் சிலர் கன்னடம் பேசுவர் என்ற தர்ஸ்டன் என்பாருடைய கருத்தையும் கூறுகின்றது.

அரசு ஆவணங்களில் குறும்பர்கள்

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் எடுக்கப்பட்ட பிரிட்டிஷாரின் ஆவணங்களில் குறும்பர் இனத்தவர் குறித்த செய்திகள் காணப்படுகின்றன. 1881 முதல் 1895 வரையிலான குறிப்பு நூல்களின்படிக் காணப்படும் செய்திகள் வருமாறு :

கி. பி. எட்டாம் நூற்றாண்டு வாக்கில் இந்த இன மக்களுக்கு ஏற்பட்ட ஒரு நெருக்கடி காரணமாக இவர்கள் தமிழகத்தின் தென் பகுதியில் பல்வேறு இடங்களுக்குப் பிரிந்து சென்றார்கள். இவர்களின் மூதாதையர் இன்றும் நீலகிரி போன்ற மலைப் பகுதிகளில் நாகரீகம் அற்ற முறையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் 'கூரி' என்று சொல்லக்கூடிய குறும்பை ஆட்டினை வளர்த்து வரக் கூடியவர்கள். இன்றும் இத்தகைய இனத்தவர் ஆடு வளர்த்து வருகின்றனர். இந்த இனத்தைச் சேர்ந்த கோயில் பூசாரிகளின் தலையில் தேங்காய் உடைக்கும் பழக்கம் இன்றும்கூடத் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து வருகிறது.

வரலாற்று நூல்களில் குறும்பர்கள்

தமிழக வரலாற்றை விரிவாகக் கூறும் வரலாற்று நூல்களில் குறும்பர்கள் பற்றிய செய்திகள் மிகவும் குறைவாகவே கிடைக்கின்றன.

> "மோரிய மன்னன் அசோகனின் குடிமக்களுள் புலிந்தர் என்றோர் இனத்தவரும் இருந்தனரென அப்பேரரசனின் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. அக்காலத்தில் தொண்டை மண்டலத்தில் 'குறும்பர்' என்ற ஓர் இனத்தினர் வாழ்ந்து வந்தனர் இவர்களே புலிந்தர்கள் போலும்"

என்கிறார் கே. கே. பிள்ளை. மேலும்

> "ஆராய்ச்சியாளராகிய எலியட், செவேல் முதலியோர் தொண்டை மண்டலத்துப் பழங்குடியினரான குறும்பர் மரபினரே பிற்காலப் பல்லவர் என்று முடிவு செய்தனர். குறும்பர் ஆடு, மாடுகளை மேய்ப்பவர். இதனைக் கருத்தில் கொண்டு பால். அவர் (பால் கறப்பவர் - குறும்பர்) என்பதே பல்லவர் எனத் திரிந்திருக்கலாம் என முடிவு செய்தவரும் சிலராவர்"

என்கிறார். இவற்றைத் தவிரத் 'தென்னிந்திய வரலாறு' நூல் குறும்பர்களைப் பற்றிக் கூறுகிறது.

> "கிருஷ்ணதேவராயரின் (கி. பி. 1509 - 1530) மருமகனும் விஜயநகர அரசுப் பிரதிநிதியுமான இராமராயர் என்பார் விஜயபுரி சுல்தானுடன் நடந்த தலைக்கோட்டைப் போரில் (கி. பி. 1565) மாண்டார். மன்னரான திருமலைராயர் போர் நடத்த இயலாததால் அரண்மனையில் இருந்த செல்வங்களைச் சேகரித்துக் கொண்டு திருப்பதியை நோக்கிப் பயணமானார். விஜய நகரத்துப் படைகள் தோல்வியுற்றதைக் கேள்வியுற்ற

பிரிஞ்சாரிகள், இயம்பாடிகள், குறும்பர் முதலிய கொள்ளைக் கூட்டத்தினர் நகரில் புகுந்து கொள்ளையடிக்கத் துணிந்தனர்''

செப்பேட்டில் குறும்பர்கள்

வேள்விக்குடிச் செப்பேட்டில் குறும்பர்கள் குறித்த செய்திகள் உள்ளன இலண்டன் பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையில் உள்ள வேள்விக்குடிச் செப்பேடு பாண்டியனான நெடுஞ்சடையன் பராந்தகனின் பழமை வாய்ந்த செப்பேடாகும்.

> "ஆய்வேளையும் குறும்பரையும் நெடுஞ்சடையன் பராந்தகன் போரில் வென்றான் என்பதையும், ("ஆய்வேளையும் குறும்பரையு மடலமரு எழித்தோட்டிக் காட்டுக் குறும்பு சென்றடைய நாட்டுக் குறும்பிற் செருவென்றும்" செப்பேட்டு வரிகள் 94 - 95) குறும்பு நாட்டுக் குறும்பர்களை வலிமை குன்றச் செய்தான் என்பதையும் வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. இப்போர் இவனது மூன்றாம் ஆட்சி ஆண்டிற்கு முன்னர் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பது அச்செப்பேடுகளில் அறியக் கிடக்கின்றன. ஆகவே கி பி. 767ஆம் ஆண்டிலாவது அதற்கு முன்னராவது நிகழ்ந்திருத்தல் வேண்டும்"

என்கிறார் சதாசிவ பண்டாரத்தார்.

இச்செய்திகளால் பேரரசர்களை எதிர்க்கும் வலிமை உடையவர்களாகக் குறும்பர்கள் விளங்கியுள்ளனர் என்றும் சிற்றரசர்களாக இருந்துள்ளனர் என்பதையும் காட்டுக் குறும்பர், நாட்டுக் குறும்பர் என்ற இரு இனத்தவர் இருந்துள்ளனர் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

இலக்கியங்களில் குறும்பர்கள்

சங்க இலக்கியங்களில் குறும்பர்கள் குறித்த செய்திகள் காணப்படுகின்றன. அகநானூற்றில்,

> "மறங்கெழு தானைக் கொறறக குறும்பியன்
> செருமயல் நல்மான் தீதியறகு உரைத்து"

என்று, அன்னி மிஞிலி என்பவன், வீரம் பொருந்திய படையை, உடையவனான வெற்றியுடைய குறும்பனான போர்த்திறம் மிக்க குதிரையை உடைய திதியன் என்பவனுக்குச் சொல்லி சினம் ஒழிந்தான் என்பதைப் பாடியுள்ளார் பரணர்.

பிற இலக்கியங்களில் அரிதாகக் குறும்பரைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன அவை சேக்கிழார் பெருமானின் பெரியபுராணம், திருத்தக்கதேவரின் சீவக சிந்தாமணி, கொங்குவேளிரின் பெருங்கதை ஆகியவையாகும். இம்மூன்று இலக்கியங்களில் சேக்கிழாரின் பெரியபுராணத்தில் சற்று விரிவான நிலையில் செய்திகள் கிடைக்கின்றன.

சிவனடியார்களான 63 நாயன்மார்களில் பெருமிழலைக் குறும்ப நாயனாரும் ஒருவர். குறும்பர் மரபில் தோன்றியவர். இயற்பெயர் தெரியவில்லை. மிழலை என்ற நாட்டில் 'பெருமிழலை' என்ற ஊரில் தோன்றியவர். எனவே பெருமிழலைக் குறும்ப நாயனார் என்று அழைக்கப்பட்டார். பெருமிழலை நகரில் குறுநில மன்னராக விளங்கிய இவர், சுந்தரரின் பண்புகளை அறிந்து அவரை உடலாலும் உள்ளத்தாலும் வழிபட்டார். "அவர் கயிலாயம் செல்வதற்கு முன்னம் நான் இறப்பேன்" என்று தம் யோகவன்மையால் சுந்தரர் கயிலாயம் அடைவதற்கு முன்னால் கயிலாயம் அடைந்தார்.

"வேத நீதி மிழலைக் குறும்பர்" (பாடல் எண்: 1705)

"நீறு மிழலைக் குறும்பனார்" (பாடல் எண்: 1713)

எனவும் போற்றப்படும் இக்குறும்பர் சிற்றரசனாக விளங்கியமையை, பெரியபுராணத்தின்,

" . . . விளங்கும் தொன்மையது மிழலை நாட்டுப் பெருமிழலை" (1706)

" . . . .அன்ன தொண்மைத் திருப்பதிக்கண் அதிபர் மிழலைக்
குறும்பனார் (1707)

என்னும் பாடலடிகளால் உணரலாம்.

பெருமிழலைக் குறும்ப நாயனார் சுந்தரரின் சமகாலத்தவர் என்பதை அவருடைய வரலாற்றின் மூலமாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. சுந்தரர் கி. பி. 7ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். ஆதலால் பெருமிழலைக் குறும்ப நாயனாரின் காலமும் அதுவேயாகும் எனக் கருதலாம். இதனால் 7ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 8ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் குறும்பர்கள் சிற்றரசர்களாக வாழ்ந்து இருப்பதை அறிகின்றோம். சீவக சிந்தாமணியில்,

"ஈண்டமிழ் குட்டம்போல் வெரியெழத் திருகுநோக்கிக்
கோண்டரு குறும்பர் வெம்போர் கோக்குழாம் வென்ற துள்ளி" .
- பாடல் எண் : 1079

என்று குறும்பர்களோடு கட்டியங்காரன் போர் புரிந்த செய்தி கூறப்பட்டுள்ளது.

"குறுநில மன்னர் குறும்பருங் குழீஇய" என்றும் "குன்றச் சாரற் குறும்பர்" என்றும் பெருங்கதை குறும்பர்களைக் கூறுகின்றது. இவையன்றி, சிலப்பதிகாரத்தின் உரையாசிரியர்களுள் ஒருவரான நச்சினார்க்கினியர், சிலப்பதிகார வேனில் காதையில்,

"நெடியோன் குன்றமுந் தொடியோன் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு"

என்பதற்கு,

"..... ஏழ்தெங்க நாடும் ஏழ்மதுரை நாடும் ஏழ் முன்பாலை நாடும்
ஏழ்பின்பாலை நாடும் ஏழ்குன்ற நாடும் ஏழ்குண காரை நாடும்

ஏழ்குறும்பனை நாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும்''

என்று உரையில் கூறுகின்றார். 'ஏழ்குறும்பனை நாடு' குறும்பர்கள் வாழ்ந்த ஏழு நாடுகளாக இருக்கக்கூடும் என்றும் கருதலாம்.

இவற்றால் 7, 8 நூற்றாண்டுகளில் குறும்பர்கள் சிற்றரசர்களாக விளங்கியுள்ள நிலை புலனாகிறது. இன்று தமிழகத்தில் வாழும் பழங்குடியினரில் ஒரு இனத்தவராக விளங்குகின்றனர். வட ஆற்காடு, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சி மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர் இக்குறும்ப இனத்தவருள் இன்று பெட்ட குறும்பர், முள்ளு குறும்பர், சேனு குறும்பர் அல்லது தேனு குறும்பர், ஊராளிக் குறும்பர், ஆலு குறும்பர் அல்லது பால் குறும்பர் பிரிவினர் உள்ளனர். இவர்கள் அனைவரும் திராவிட மொழியைத் தங்கள் தாய் மொழியாகப் பேசி வருகின்றனர்.

மெக்கன்சியின் காகிதச் சுவடிகளில் குறும்பர்கள்

மெக்கன்சியின் நாற்பதுக்கும் மேற்பட்ட சுவடிகளில் குறும்பரைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. இவற்றில் குறும்பரின் தோற்றம், பெயர்க்காரணம், ஆட்சிமுறை, கோட்டைகள், பழக்க வழக்கங்கள், சமயம், தொழில்கள், பழக்கவழக்கங்கள் அழிவு முதலான பல செய்திகள் கூறப்பட்டுள்ளன.

குறும்பர்கள் என்பது குறித்து மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

> "குறும்பர்கள் என்ற இனத்தவர் கர்னாடக தேசத்தை ஒத்த நாடுகளில் பெருகி, கர்னாடக தேசத்தை அடுத்துள்ள பகுதிகளுக்கும் பரவினார்கள். இவர்கள் 'கடோரம்' அல்லது 'குறும்பு' அமைத்து வாழ்ந்ததால் குறும்பர் என்ற பெயர் ஏற்பட்டது என்றும், சில சுவடிகளில் ''முன்னொரு காலத்தில் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த குறும்பாடுகளை மேய்ப்பதை முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்ததால் குறும்பர் எனப்பட்டார்கள்"

என்றும்,

> "இக்குறும்பர்கள் யாதவ வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் குறும்பிடையார்"

என்றும் சொல்லப்படுகிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

குறும்பரின் தமிழக வருகை

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்க் கர்நாடக தேசத்தில் இருந்து காட்டு இனத்தவர் தமிழகத்திற்கு வந்து தொண்டை மண்டலத்தில் பரவினார்கள். முதன் முதலில் இவர்கள் உத்திரமேரூருக்கடுத்த காலப்பாக்கத்தில் வந்து குடியேறினார்கள். தொடக்கத்தில் இவர்களுக்குத் தலைவன் என்று யாருமின்றி, தன்னிச்சையாய் வாழ்ந்தார்கள் பின்னர்க் 'கமண்டபிரபு' என்பவன் முதல் மன்னனானான். இவன்தன் ஆட்சிக்கு உட்பட்ட இடத்திற்குக் 'குறும்பபூமி' என்று பெயரிட்டான். இப்பெயரே

ஆதொண்டைச் சக்கரவர்த்தி தொண்டை மண்டலத்தைப் போரிட்டுக் கைப்பற்றும் வரை நிலைத்து விளங்கியது. இவன் 'புழலூர்' என்ற இடத்தில் பெரிய கோட்டை ஒன்றைக் கட்டினான்.

குறும்பர்கள் ஆட்சி செய்த பகுதிகள்

குறும்பர்கள் தமிழகத்தின் வட மாவட்டங்களில் ஆட்சி செய்துள்ளனர் என்பது சுவடிகளின் மூலமாகத் தெரிகிறது.

1. ஆதொண்டைச் சக்கரவர்த்தி காலத்தில் குறும்பர்களின் ஆளுகைக்குள்ளாக காஞ்சிபுரம், சென்னப்பட்டினம், மகாபலிபுரம் முதலான ஊர்கள் இருந்தன
2. காவேரிப்பாக்கம் தாலுக்கா குடியமல்லூர் ஊரை முன்னர் குறும்பர் ஆட்சி செய்தனர். அவ்வூருக்கு 'குறும்பசேரி' 'பாடலீவனம்' என்ற பெயர்கள் வழங்கப்பட்டிருந்தன.
3. ஆதியில் ஆற்காடு தாலுக்காவில் தாமரைப் பாக்கம், சித்தேரி, பொன்பத்திக் கிராமம் ஆகிய இடங்களில் குறும்பர்கள் கோட்டைகளைக் கட்டி ஆண்டு வந்தனர்.
4. திருவிடைச் சுரத்தில் குறும்பப் பிரபுக்கள் ஆட்சி செய்து வந்தார்கள் இராயர் அப்பாச்சியரது நாளையில் நெருவப்பாளையத்தை குறும்பர் ஆட்சி செய்தனர்.
5. இராயர் சமஸ்தானத்தில் குறும்பர் நெடுமரம், அணைக்கட்டு, காலப்பாக்கம், நெறும்பூர் என்ற இடங்களிலும் இன்றும் பல இடங்களிலும் கோட்டைகள் கட்டிப் புகழோடு விளங்கினார்கள்.
6. குறும்பநாடு விக்கிரம சோழ மண்டலம் என்ற பெயருடன் விளங்கியது.

மருதங்குறும்பர் கோட்டை குறும்பரால் நீண்ட காலம் ஆளப்பட்டு வந்தது.

குறும்பரின் கோட்டைகள்

குறும்பர்கள் வரலாற்றில் 2 வகையான கோட்டைகள் குறிப்பிடப்படுகின்றன.

1. ஆட்சி செய்ய அமைத்த கோட்டைகள்
2. வியாபாரக் கோட்டைகள்

1. ஆட்சி செய்ய அமைத்த கோட்டைகள்

குறும்பர்களின் முதல் மன்னனான கமண்ட பிரபு குறும்பர்களின் எண்ணிக்கை அதிகமானதாலும், பிற சாதியர் கலகம் செய்யத் தொடங்கியதாலும் குறும்ப பூமியை 24 பகுதிகளாகப் பிரித்து 24 கோட்டைகளைக் கட்டினான். இந்தக் கோட்டைகளின் கதவுகள் வெண்கலத்தாலும் தூண்கள் எருக்க மரத்தினாலும் ஆனவை. முதன் முதலில் குறும்ப மன்னன் புழல் கோட்டையைக் கட்டியதால் இதுவே பழமையான குறும்பர் கோட்டையாகும்.

1. இந்தக் குறும்பர்களின் கோட்டைகள் 64. இவற்றில் புகழ்பெற்றவை 24. புழல்

சாலப்பாக்கம். நெறும்பூர். அணைக்கட்டு. பட்டிப்புலம். ஆமூர். புலியூர். களத்தூர். செம்பூர். தமனூர். ஈக்காடு முதலான இடங்களில் கோட்டைகளைக் கட்டினார்கள். இக்கோட்டைகளுக்கெல்லாம் புழல் கோட்டை இராசதானி

2. சத்தவேடு. ஊற்றக்கோட்டை. நாகலாபுரம். நிண்ணையூர். நாரணவனம். செப்பேடு. காளஹஸ்திக்கு அருகில் தொண்டை நாட்டுப் பகுதி. வேளூர் ஆகிய இடங்களில் குறும்பர் கோட்டைகள் இருந்தன.

3. குறும்பர். நெடுமரம். அணைக்கட்டு. .காலப்பாக்கம். நெறும்பூர் ஆகிய இடங்களிலும் இன்னும் பல இடங்களிலும் கோட்டைகள் கட்டிக்கொண்டு பிரபலமாய் விளங்கினார்கள்.

4. கும்மிடிப் பூண்டியில் ஒரு குறும்பர் கோட்டை இருக்கிறது.

5. மருதங்குறும்பர் கோட்டை மண்ணால் ஆனது. இந்தக் கோட்டை குறும்பரால் நீண்ட நாட்கள் ஆளப்பட்டு வந்தது. கிருஷ்ணராயர் நாளில் செங்கல்பட்டு ராசாவான திம்மராசா திருப்புலிவனத்தில் எதிர் கோட்டை ஒன்றைக் கட்டிக் குறும்பருடன் போர் செய்தார். இறுதியில் குறும்பரை வென்று கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டார். அந்த மருதங்கோட்டையைத் தன் நெருங்கிய உறவினராகிய கோவிந்தராஜா என்பவருக்குக் கொடுத்தார். இவருக்குப் பின் இந்தக் கோட்டை பிராமணர்களுக்கு உதவியாக அக்கிரகாரமாக்கப்பட்டு வெங்களம்மாவின் பெயரால் வெங்களம்மாபுரம் என்று அழைக்கப்படுகிறது.

6. தாமரைப்பாக்கம். சித்தேரி. பொன்பத்தி கிராமங்களில் குறும்பர்கள் கட்டிவைத்திருந்த மண்கோட்டைகளை குலோத்துங்கச் சோழன் செப்பம் செய்து ஆட்சி செய்தான். அதன் பிறகு வீர சம்புவராயர் நாளையில் இந்தக் கோட்டையில் சில காலம் ஆட்சி செய்தார்.

7. பொன்னேரி குறும்பர் கோட்டை ஐந்து அல்லது ஆறுகாணி பரப்பளவு கொண்டது. அதில் முக்கால் பகுதியை அகத்தீசுவரன் கோயில் தர்ம விசாரணை செய்கின்ற ஆறுமுக முதலி என்பவர் தன் தோட்டமாக்கிக் கொண்டார் அந்தக் குறும்பர் கோட்டையில் இரண்டு வருடங்களுக்கு முன்னால் தோட்டம் போடுவதற்காகக் கொத்திச் சமனரக்குகின்ற போது அந்தக் கோட்டைக்குள்ளே பத்துப் பன்னிரண்டு தொட்டிகள் கிடைத்தன. ஆனால் அவற்றில் குறிப்பிடும்படியாக எதுவும் இல்லை. மேலும் இக்கோட்டையில் வெள்ளைக் கருங்கல்லினாலான முன்னூறு முன்னூற்றைம்பது குண்டுகள் கிடைத்தன. அந்த ஊர்மக்கள் சிலர் அவற்றைக் காத்து வருகிறார்கள். மழை பெய்து ஆற்றில் வெள்ளம் வரும்போது கோட்டையில் பகுதிகள் அரிக்கப்படும் போது செம்புகாசும். பொன் பணமும் அவ்வப்பொழுது கிடைக்கின்றது.

8. கும்மிடிப்பூண்டி. அதைச் சுற்றி இருந்த ஊர்களில் இருந்த குறும்பர் கோட்டைகளில் சில தொண்டைமானால் அழிக்கப்பட்டன. சில இசுலாமியரால் அழிக்கப்பட்டன. சில ஆனைகொந்தி ராயர்களால் அழிக்கப்பட்டன. திருமுல்லை வாயிலில் குறும்பர் கோட்டையை நிரவி சிவன் கோயில் கட்டப்பட்டது. மேலும் கும்மிடிப் பூண்டிக்கு அருகில் உள்ள கோட்டையின் சுவர் பெரிய கற்களால் கட்டப்பட்டிருந்தது. சாதியடி ஐந்து

அல்லது ஆறடி அகலமும் பத்துப் பன்னிரண்டு அடி உயரமும் உள்ளவை அந்தக்கற்கள். அது போன்ற செங்கற்களை அங்கே இருப்பவர்கள் கொண்டு சென்று விட்டார்கள். மேலும் சித்தூர் கலெக்டர் துரை அந்தக் கோட்டைக்கு மேற்குப் பகுதியில் சாவடி ஒன்றைக் கட்டுவதற்காக. அந்தக் கோட்டையில் இருந்து செங்கற்களை எடுத்து வந்தார் என்பர்.

இவையன்றி 24 கோட்டங்களைக் குறித்த செய்தி ஒரு சாவடியில் காணப்படுகின்றது. அவற்றுள் சில கோட்டங்களில் பெயர்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன. அவை புழலூர். களத்தூர். செம்பூர். புலியூர். ஆமூர். வெண்குன்றம் மற்றும் காட்டுக்கோட்டமாகும். அக்கோட்டங்களில் கோட்டைகள் கட்டினார்கள் குறும்பர்கள் என்பது இங்கு எண்ணத்தக்கது.

2. வியாபாரக் கோட்டைகள்

குறும்பர்கள் காவேரிப்பட்டினத்துச் செட்டிகள் மூலமாகக் கப்பல் வாயிலாகப் பிற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டார்கள். ஆகையால் பட்டிப்புலம். சாலக்குப்பம். சாலப்பாக்கம். மெய்யூர். ஆலம்பரை. மரக்காணம் முதலிய நகரங்களில் வியாபாரக் கோட்டைகள் கட்டினார்கள்.

இவற்றால் புழல். சத்தவேடு. ஊற்றுக்கோட்டை. நாகலாபுரம். நின்னையூர். செம்பேடு. காளஹஸ்திக்கு அருகில். வேளூர். நெடுமரம். அணைக்கட்டு. சாலப்பாக்கம். நெரும்பூர். கும்மிடிப்பூண்டி. தாமரைப்பாக்கம். சித்தேசி. பொன்பத்திக்கிராமம். பொன்னேரி. களத்தூர். செம்பூர். புலியூர். ஆமூர். வெண்குன்றம். காட்டுக் கோட்டம் ஆகிய இடங்களில் கோட்டைகள் இருந்ததையும் பட்டிப்புலம். சாலக்குப்பம். மெய்யூர். ஆலம்பரை. மரக்காணம் ஆகிய இடங்களில் வியாபாரக் கோட்டைகள் அமைத்து வாழ்ந்துள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது.

குறும்பர் - சமயம்

தொடக்க காலத்தில் இவர்கள் எந்தச் சமயத்தையும் சாராமல் இருந்தார்கள். ஒரு சன்யாசி இவர்களைச் சமண சமயத்தவர்களாக்கினார். அந்தச் சன்யாசியின் பெயரால் புழல் குறும்ப ராசாவுக்காகக் கட்டப்பட்ட சைனபஸ்தி இன்றும் இருக்கிறது என்பதை ஒரு சுவடியால் உணர்ந்து கொள்ள முடிகிறது. (தொண்டை மண்டல வரலாறு சு. எண் டி. 3102)

1. நெறும்பூரில் ஏழு குறும்பத்தலைவர்கள் இருந்தார்கள். அவ்வேழு குறும்பத்தலைவரும் அருகக் கடவுளை வழிபடுவர். அச்சைன கடவுளின் சிலை வடக்குக் கோட்டைக்கு அருகில் உள்ளது.

2. ஆதொண்டைச் சக்கரவர்த்தி நாளில் குறும்பர்கள் சைன சமயத்திற்கு உட்பட்டிருந்தார்கள். இச்செய்தி பல சுவடிகளில் கூறப்பட்டுள்ளது.

3. பொன்னேரி குறும்பர் கோட்டையில் வீரபத்திர சுவாமி கோவில் ஒன்று. துர்க்கை கோயில் ஒன்று என இரண்டு கோவில்கள் இருந்தன. அந்தத் துர்க்கைக் கோயில் தோட்டத்திற்குள் அமைந்ததால் அதைப் பிரித்துப் போட்டார்கள். வீரபத்திரசுவாமி கோயில் தோட்டத்திற்கு வெளியில்

இருந்ததால் அதை அப்படியே விட்டு விட்டார்கள்.

4 குறும்பர்கள் 'வீரா' என்னும் தெய்வத்தையே வணங்குகின்றனர். இத்தெய்வம் 'வீராலு' என்றும் 'வீரபத்திரன்' என்றும் அழைக்கப்படுகிறது.

இச்சுவடி திருவண்ணாமலை துக்குடியைச் சேர்ந்த சோவாசிப்பாடியில் சின்ன முக்குறும்பக் கவுண்டன் சொன்னபடி திம்மண்ணைக் குறும்பக் கவுண்டன் எழுத மெக்கன்சி சேகரித்ததாகும். ஆகவே இது இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் குறும்பர்களின் தொழில், பழக்க வழங்கங்களைப் பற்றிக் கூறும் ஆதாரப்பூர்வமான ஆவணமாகும்.

இவற்றால் சமயம் என்று இல்லாமல் தொடக்க காலத்தில் வாழ்ந்த குறும்பர்கள் சமண சமயத்தினரால் வாழ்ந்து, காலப்போக்கில் சைவ சமயத்தினராக மாறியுள்ளார்கள் என்பதை அறியலாம்.

குறும்பர் - தொழில்

குறும்பர்களின் தொழில் குறும்பாடு மேய்ப்பதாகும். அந்தக் குறும்பாட்டு மயிரைக் கொண்டு கம்பளி நெய்து விற்பர். இவர்கள் 'சாதிக் குறும்பர்கள்' எனப்படுவார்கள். 'அண்டைக் குறும்பர்' என்றும் 'சுண்ணாம்பு குறும்பர்' என்றும் 'வேடக் குறும்பர்' என்றும் பலவிதக் குறும்ப சாதியினர் உள்ளனர் 'அண்டைக் குறும்பர்' என்று சொல்லப்படுபவர்கள் நாட்டை ஆள்வது அல்லது பணிசெய்பவர்கள். 'சுண்ணாம்புக் குறும்பர்' என்பவர்கள் சுண்ணாம்பு சுட்டு விற்று வாழ்பவர்கள். 'வேடக் குறும்பர்கள்' வேட்டையாடி வாழ்பவர்கள்

குறும்ப ஆண்கள் குடும்பத்தைக் கவனித்தல், பெண்கள் குறும்பாட்டில் மயிர் அறுத்துக் கம்பளம் நெய்தல் ஆகிய செயல்களை மேற்கொண்டனர்.

இறப்புச் சடங்கு

முற்காலத்தில் வாழ்ந்த தளர்ந்து வருகின்ற மனிதர்களை அவர்களை இறக்கும் வரையில் வைத்திருக்காமல் இறக்கும் தறுவாயில் இருக்கும்போது, பெரிய பானைகளில் அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வைத்துப் புதைப்பார்கள். அவர்கள் அதிலே இருந்து அவதிப்பட்டு இறுதியில் மரணம் அடைவார்கள். இப்பானைகளை முதுமக்கள் தாழி என்பர். இவற்றை முதுமக்கள் சாடி என்றும் வழங்குவர். இத்தாழிகள் மண்ணால் செய்யப்பட்டுத் தீயில் சுடப்பட்டு இருக்கும். இதன் அடிப்பாகம் குறுகலாகவும் வாய்ப்பகுதி அகன்றும் இருக்கும். தமிழகத்தின் பல பகுதிகளில் அகழ்வாராய்ச்சிகள் மூலமாக இத்தகைய முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறும்பச் சிற்றரசர்கள் தாழிகளில் அடக்கம் செய்யப்பட்டனர்.

"இங்கு சிறிது காலத்திற்கு முன்பு பெரிய பானைகள் இருந்தன. அவை 'மதமதக்கா கால்கள்' என்று அழைக்கப்பட்டன. அவை குறும்பர் கோட்டைக்கு அருகில் இருந்தன. அவை குறும்ப பிரபுக்களுடைய சமாதிகளாகும். அவை சிறிது காலத்திற்கு

முன்பு கடலில் தள்ளப்பட்டன"

என்று கூறப்பட்டுள்ள (பட்டிப் புலக் கிராம கைபீது) செய்தியால் அறிந்து கொள்ளலாம்.

முன்னாளில் குறும்பர் இறந்து போனால் தொட்டிகளில் போட்டுப் புதைப்பது வழக்கம் என்பதும், இறப்பு நடந்த அன்று நெருங்கிய உறவினர்கள் ஏக சவரம் செய்து கொண்டு சவத்துடன் வருவார்கள். ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துத் துக்கம் விசாரிப்பர் என்ற செய்திகள் அறியக் கிடைக்கின்றன.

குறும்பர்களின் அழிவு

தொடக்க காலத்தில் தாமரைப்பாக்கம், சித்தேரி, பொன்பத்தி கிராமம் ஆகிய இடங்களில் குறும்பர்கள் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு ஆட்சி செய்து வந்தார்கள். அவர்கள் மனம் போன போக்கில் கொடுமைகள் செய்ததால் சோழன் குலோத்துங்கன் குறும்பர்மீது போர் தொடுத்தான். போரில் வெற்றி பெற்று அந்த இடத்திற்குச் 'செயங்கொண்ட சோழமண்டலம்' என்று பெயரிட்டான் காவேரிப்பாக்கம் தாலுகா குடியமல்லூர் ஊரை குறும்பருக்குப்பின் குலோத்துங்கன் ஆட்சி செய்தான்.

1. திருவிடைச்சுரத்தில் ஆட்சி செய்த குறும்பர்களைத் தஞ்சை நகரிலிருந்து வந்த ஆதொண்டைச் சோழன் வெற்றி கொண்டான். குறும்பர்களுக்குப் பதிலாகக் கொண்டை கட்டி வேளாளர்கள் அழைத்து வரப்பட்டார்கள். அதன்பிறகு வன்னியர்கள் மன்னரின் கட்டளைப்படி ஆட்சி செய்தார்கள். இதே செய்தி நெறும்பூர் குறும்பர் கோட்டை வரலாறு (டி. எண் 3297) சுவடியிலும் காணப்படுகிறது.

2. தொண்டைமான் விசுவாசு மன்னனிடம் தோல்வியடைந்தான். பின்பு காட்டில் சுற்றி வருகையில் வேதபுர ஈஸ்வரன் இளமுலை அம்மன் உள்ள பொன்மயமான கோபுரம் தென்பட வேதத்தை ஓதினான். அதன்பிறகு விசுவாசு மீது போர் தொடுத்து அழித்தான்.

   இவற்றால் குலோத்துங்க சோழனாலும் ஆதொண்டைச் சோழனாலும் ஒடுக்கப்பட்டார்கள் என்பதை அறிய முடிகிறது. ஆதொண்டைச் சோழன் விசுவாசு மன்னனிடம் தோல்வியடைந்து பின்னர் வெற்றி பெற்றான் என்பதால் விசுவாசு என்பவன் குறும்படிச் சிற்றரசனாக இருக்கக்கூடும் என்று கருதலாம்.

3. இராயர்கள் காலத்தில் பல இடங்களிலும் ஆட்சி செய்த குறும்பர்கள், முதலியார்களையும் வேளாளர்களையும் தங்களை வணங்கும்படி வற்புறுத்தினார்கள். ஆனால் முதலியார்களும் வேளாளர்களும் இதற்குச் சம்மதிக்கவில்லை. குறும்பர்கள் பல தொல்லைகளைக் கொடுத்த போதிலும் இவர்கள் உடன்படாததால், குறும்பர்கள் தெருக்களிலும் முச்சந்திகளிலும் வெற்றிலைத் தோட்டங்களிலும் இன்னும் பல இடங்களிலும் திட்டி வாசல்களைக் கட்டி அதற்கெதிராகத் தாங்கள் அமர்ந்து கொண்டு மற்றவர்கள் தலை குனிந்து செல்ல ஏற்பாடு செய்தார்கள். முதலியார்களும், வேளாளர்களும் தலை குனிந்து நுழைவதற்குப் பதிலாக, முதலில் காலைவிட்டு நுழைந்து குறும்பர்களை அவமானப்படுத்தினார்கள்.

ஆகையால் குறும்பர்கள் வேளாளரையும், முதலியார்களையும் வெட்டிக் கொன்றார்கள். மேலும் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளின் தலைகளையும் வெட்டிக் கொன்றார்கள். இதனால் கோபமுற்ற அவர்கள் தக்க சமயம் பார்த்துச் சவரம் செய்வோர் தலைவனை உதவி செய்யும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள்.

குறும்ப இனத்தவரில் ஒருவர் இறந்து போனால் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ளும் அனைவரும் ஏக சவரம் செய்து கொள்ளுதல் வழக்கம். அவ்வாறு ஒருவன் இறந்து போனபோது நடந்த இறுதிச் சடங்கின்போது, சவரம் செய்வோர் அனைவரும் ஒற்றுமையாக இருந்து சவரம் செய்வது போலக் குறும்ப பிரபுக்கள் எழுவரோடு இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர் அனைவரையும் கொன்றார்கள். எஞ்சியிருந்த குறும்பரில் ஒருபகுதியினர் ஓடிப்போனார்கள். மேலும் ஒருபகுதியினர் அக்கினி வளர்த்து அதில் குதித்தார்கள். மற்றும் ஒரு பகுதியினர் அந்தக் கோட்டையில் இருக்கும் பெரிய அகழியில் குதித்து இறந்தார்கள். அப்பொழுது பெண்கள் நெறும்பூரில் முப்போகம் விளைந்தாலும் உப்புக்கு நெல் கிடைக்காமல் போக வேண்டுமென்று சாபமிட்டார்களாம். இச்செய்தி 'குறும்பர் கைபீது' (டி எண். 2867) என்ற சுவடியிலும் காணப்படுகிறது.

இதனால் நெறும்பூரில் அதிக எண்ணிக்கையில் குறும்பர்கள் அழிந்துபோனார்கள் என்பதை அறிய முடிகிறது.

ஆய்வு முடிவுகள்

1. 'குறும்பர்கள்' இந்தியாவில் தென் மாநிலங்களில் வாழும் இனத்தவர்.
2. முன்னாளில் தமிழகத்தின் பிற பகுதிகளில் இருந்து குடியேறியவர்கள். இவர்கள் கன்னடம் பேசுவர் என்ற தர்ஸ்டன் என்பாரின் கருத்தும், இவர்கள் கன்னடம், மலையாளம் போன்றவற்றின் கிளை மொழியையே பேசுகின்றனர் என்ற வாழ்வியல் களஞ்சியம் கூறும் கருத்தும் இதனை உறுதிப் படுத்துகின்றன.
3. சங்ககாலம் முதற்கொண்டு சிற்றரசர்களாக விளங்கி, தமிழகத்தின் வட மாவட்டங்கள் பலவற்றிலும் கோட்டைகள் கட்டி ஆட்சி செய்துள்ளனர் பேரரசர்களோடு போர் செய்யும் வலிமை வாய்ந்தவர்களாக விளங்கினர்.
4. இக்குறும்ப இனத்தவர் காடுகளில் வேட்டுவத் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்துள்ளனர். குறும்பர்கள் வலிமை இழந்த காலத்தில் சிற்றரசர்களாக விளங்கியவர்கள் காடுகளுக்குத் துரத்தியடிக்கப்பட்டார்கள். அவர்களே இன்று பழங்குடிகளாக வாழும் குறும்பர் இனத்தவர் என்று அறிந்து கொள்ள முடிகிறது.
5. குறும்பர்கள் 8ஆம் நூற்றாண்டு வரையில் சிற்றரசர்களாக இருந்துள்ளனர் என்பதைச் சான்றுகள் மூலமாக உணர முடிகிறது.
6. சிற்றரசர்களாக விளங்கி, நாகரிக வளர்ச்சியடைந்திருந்த குறும்பர்களின் சந்ததியினர் பலர் தமிழகத்தின் பல பகுதிகளிலும் பரவி இன்றும் வாழ்ந்து

வருகின்றனர்.

7. தங்களுக்கென்று தனித்த சமயம் இன்றி வாழ்ந்த குறும்பர்கள், சமண சமயத்தைச் சார்ந்தனர். அரசு மாற்றங்களாலும் கால மாற்றத்தினாலும், சூழ்நிலை நெருக்கடியினாலும் பின்னாளில் இவர்கள் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களானார்கள்.

8. 'குறும்பர்கள்' குறித்து விரிவான ஆய்வுகள் செய்யப்பட வேண்டும். குறும்பர்கள் களப்பிரர்களா? பல்லவர்களா? புலிந்தர்களா? என்ற வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் வினாக்களுக்கு இத்தகைய ஆய்வு விடை அளிப்பதாக அமையும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

பயன்பட்டவை

1. நூல்கள்

1. **அகநானூறு**. அ. மாணிக்கனார் (உரை) வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1999.
2. **இலக்கிய வரலாறு**, பூவண்ணன், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பதினோராம் பதிப்பு, ஆகஸ்டு 1992.
3. **சிலப்பதிகாரம்**, உ. வே. சாமிநாதையர் (பதிப்.) தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, பத்தாம் பதிப்பு, நவம்பர் 1985.
4. **சீவகசிந்தாமணி**, உ. வே. சாமிநாதையர் (பதிப்.) ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை 1969.
5. **தமிழக வரலாறும் பண்பாடும்**, கே. கே. பிள்ளை, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை 1980.
6. **தென்னிந்திய வரலாறு**, அ. கிருஷ்ணசாமி, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை 1977.
7. **பன்னிரு திருமுறைகள்**, அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம்., சென்னை, மூன்றாம் பதிப்பு, 1998.
8. **பாண்டியர் வரலாறு**, டி வி. சதாசிவ பண்டாரத்தார், கழக வெளியீடு, 8ஆம் பதிப்பு 1972.
9. **பெருங்கதை**, பொ. வே. சோமசுந்தரனார் உரை, கழக வெளியீடு, முதல் பதிப்பு, 1970.

2. அகராதிகள்

1. **அபிதான சிந்தாமணி**, அ. சிங்காரவேலு முதலியார் (தொகுப்.), சி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை, 2ஆம் பதிப்பு, 1934.
2. **தமிழ் லெக்சிகன்**, சென்னைப் பல்கலைக்கழகம், 1982.

காகிதச் சுவடிகள்

1. உய்யாழ்வான் என்னும் பாளையக்காரன் வரலாறு. டி. எண் 3116.
2. கவளப்பார் நாயர் வம்சாவளி. டி. எண் 2859.
3. குடியமல்லூர் தேவஸ்தான பூர்வீக வரலாறும், பூர்வீக ராசாக்கள் வரலாறும் - டி. எண் 3000.
4. கும்மிடிப் பூண்டி சிலாசாசனமும் வரலாறும் டி எண் 3085.
5. கும்மிடிப் பூண்டி பாலீசுவரன் கோயில் கைபீது டி. எண் 3087.
6. குறும்பர் என்ற இடைச்சாதியார் வரலாறு டி எண் 3114.
7. குறும்பர் கைபீது டி. எண் 2862.
8. குறும்பர் சரித்திரம் டி எண் 2862.
9. குறும்பர் வரலாறு டி எண் 3035.
10. கோட்டை வயனம் டி. எண் 3791.
11. தாமரைப்பாக்கம் வரலாறு டி. 3147.
12. தாமரைப்பாக்கம் சித்தேரி. பொன்பத்தி கிராமக் கைபீது டி எண் 3164.
13. திருவிடைச்சுரம் கோட்டை வரலாறு டி எண் 3094.
14. தொண்டை மண்டல வரலாறு டி எண் 3102.
15. நெறும்பூர் குறும்பர் கோட்டை வரலாறு டி. எண் 3197.
16. பட்டிப்புல கிராமக் கைபீது டி. எண் 2864.
17. படுவூர் பாண்டுக்குழி வரலாறு டி. எண் 2866.
18. பொன் விளைந்த களத்தூர் வரலாறு டி எண் 3100.
19. பொன்னேரி குறும்பர் கோட்டை வரலாறு டி. எண் 3086.
20. மருதங் குறும்பர் கோட்டை வரலாறு டி. எண் 3103.
21. வேடச்சந்தையூர் நாகணம்பட்டி நாட்டாண்மை சடைச்சகவுண்டன் வரலாறு டி எண் 3016.

□

ச. சம்பத்குமார்
கல்லூரி நூலகம்
திருப்பனந்தாள்

ஆவணக் காப்பகங்கள்

ஆவணக் காப்பகம்

அரசு மற்றும் தனியார் நிர்வாகத்தில் செய்கின்ற பணியினை உள்ளடக்கிய கோப்புகளைத் தங்களுடைய எதிர்காலப் பணியினைச் செய்யப் பயன்படக்கூடியதும் கடந்த கால முன்னுதாரணங்களை எதிர்காலச் சந்ததியினர் சான்றாக எடுத்துக் கொள்ளக் கூடியதும். அவற்றைப் போற்றிப் பாதுகாக்கின்ற இடமுமே ஆவணக் காப்பகம் ஆகும்.

மௌரியர்கள் ஆட்சியின்போதும் விசயநகரப் பேரரசர்கள் ஆட்சியின்போதும் ஆவணங்களைப் பாதுகாத்து வந்துள்ளதை வரலாற்று அறிஞர்கள் தெரிவிக்கிறார்கள். ஆவணங்களைப் பாதுகாத்து வைக்கும் இடத்தை 'ஆவணக்களரி' என்று சோழர் காலக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த டி ஆர். ஹெல்லன் பர்க் என்ற வல்லுநர்,

> "கடந்த காலத்தில் உருவாக்கப்பட்டதும் ஒரு நிறுவனத்தின் நடைமுறையை, பத்திரங்கள் மற்றும் நடவடிக்கைகளை எதிர்காலச் சந்ததியினருக்காக ஒரு குறிப்பிட்ட இடத்தில் பராமரிப்புச் செய்வதே ஆவணக்காப்பகம்"

என்று வரையரை செய்கிறார். மேலும் பொது ஆவணங்களையும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களையும் பாதுகாக்கின்ற இடம் எனவும் விளக்குகிறார்.

ஆவணங்களின் அளவிற்கதிகமான எண்ணிக்கைக் குவிப்பு மற்றும் அதன் வேகமான வளர்ச்சி உலகெங்கும் ஒரு பெரிய சிக்கலை ஏற்படுத்தி உள்ளது. ஆவணங்களைக் கட்டுப்படுத்தவும் மற்றும் சிறந்த முறையில் பாதுகாக்கவும் அவற்றை வருங்காலச் சந்ததியினர் நன்கு பயன்படுத்தவும் ஆவணக் காப்பகங்கள் இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றன.

சென்னை : தற்போது சென்னை எழும்பூரில் ஆவணக் காப்பகம் செயல்பட்டு வருகிறது. இத்தகைய அரிய ஆவணக் காப்பகத்தின் தேவையை இந்தியாவில் சென்னையில்தான் முதன் முதலில் உணர்ந்து ஆவணங்களைப்

பராமரிக்க ஒரு காப்பகம் தொடங்கப்பட்டது. இக்காப்பகம் 1909இல் அமைக்கப் பட்டாலும் 1805இல் சென்னை ஆளுநர் லார்ட் வில்லியம் பெண்டிங் என்பார் புனித ஜார்ஜ்கோட்டையில் காப்பகம் அமைக்க வித்திட்டார். இது 1968இல், 'சென்னை மாநில ஆவணக் காப்பகம்' என்றும், 1969இல் 'தமிழ்நாடு ஆவணக் காப்பகம்' என்றும், 1973இல் 'தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் ஆராய்ச்சி' என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இக்காப்பகம் தென் கிழக்கு ஆசியாவின் மிகப் பெரியதும், பழமையானதும் ஆகும். இங்கு இலட்சக்கணக்கான கோப்புகளும், நூல்களும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் இது ஆவணக் காப்பக நூலகமாகவும் அமைந்துள்ளது.

இந்த ஆவணக் காப்பகத்தில் 300 ஆண்டுகளுக்கு உட்பட்ட ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு உரியவை தவிர அதற்கு முன்பு உள்ள தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத் துறைகளின் ஆவணங்களும் கடந்த 10 ஆண்டுகளுக்கு உரியவை தவிர அதற்கு முன் உள்ள இதரத் துறைகளின் ஆவணங்களும் இக்காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவை தவிர டச்சு, டேனிஷ், மராத்தி, மோடி போன்ற பிற மொழி ஆவணங்களும் இக்காப்பகத்தில் பேணிக் காக்கப்படுகின்றன. பத்திரங்கள் அடமானப் பத்திரங்கள் போன்ற பெரும் மதிப்பு வாய்ந்த ஆவணங்கள் பாதுகாப்புப் பெட்டகங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

இவ் ஆவணக் காப்பகத்தில் கீழ்க்கண்ட அரிய தொகுப்புகளும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

1 அரசுத் துறை அறிக்கைகள்

2. மக்கட் தொகைக் கணக்கெடுப்பு

3 சட்டமன்ற நடவடிக்கைகள்

4. மாவட்ட விவரச் சுவடிகள்

5 ஆங்கிலப் பேரரசின் கடிதப் போக்குவரத்தின் பிரதிகள்

6. குறிப்பேடுகள் முதலியன.

பாதுகாப்பு

இவ் ஆவணக் காப்பகத்தின் மிக முக்கிய நோக்கம் ஆவணங்களைப் பாதகாப்பதே ஆகும். இங்கு ஆவணங்கள் வரிசைப்படுத்தப்பட்டு அதற்கென அமைக்கப்பட்ட 'அட்டங்களில்' பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. ஆவணங்களில் படியும் தூசிகளை 'வாக்குவம் கிளீனர்' கொண்டு அகற்றப்படுகின்றன. கரையான், காளான் பூச்சிகள் வேதிமப் புகையூட்டி மூலம் புகையூட்டி அழிக்கப்படுகின்றன.

அஸிடேட்டாயில் மற்றும் டிஷ்யூ பேப்பர் என்ற இருவகைத் தாள்களைப் பயன்படுத்தி மேலொட்டல் இயந்திரத்தின் மூலமும் ஆவணங்கள் செப்பனிடப்படுகின்றன.

மூல ஆவணங்கள் நாளடைவில் அழியக் கூடுமானால் இரண்டாவது மூல ஆவணங்களாகப் பயன்படுத்த நுண் நிழற்பட நகல்கள் எடுத்துப் பாதுகாத்து

வருகின்றனர். ஆய்வாளர்கள் அடிக்கடி ஆவணங்களைக் கையாள்வதால் ஏற்படும் அழிவினைத் தவிர்க்க அவர்களுக்கு மைக்ரோ பிலிம் நகல்கள் வழங்கப்படுகின்றன.

ஆய்வாளர்களின் ஆய்வுக்குத் தேவைப்படும் ஆவணங்களின் நகல்கள் உரிய கட்டணத்தின் பேரில் இக்காப்பகத்திலுள்ள நகலெடுக்கும் நவீன இயந்திரத்தினைப் பயன்படுத்தி நகல் எடுத்து வழங்கப்படுகின்றன.

வரலாற்று ஆய்வு

வரலாறு மற்றும் சமூக அறிவியல் ஆய்விற்கு ஆவணக் காப்பகத்தில் உள்ள ஆவணங்கள் அடிப்படைச் சான்றாக விளங்குகின்றன. உலகம் முழுவதிலும் இருந்து ஆண்டு தோறும் சுமார் 300 ஆய்வாளர்கள் இங்கு வருகை தருகிறார்கள். இவர்களில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், மாணவர்களும், வெளிநாட்டவரும் எழுத்தாளர்களும் அடங்குவர். இவர்களுக்கு ஆய்வு விதிகளுக்குட்பட்டு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்கள் ஆய்வுக்கு வழங்கப்படுகின்றன.

விவரச் சுவடிகள்

இங்குள்ள மாவட்ட விவரச் சுவடிகள் அனைவருக்கும் மிகச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறது. இச்சுவடிகள் அந்தந்த மாவட்டத்தின் முழு வாழ்க்கையையும் பிரதிபலிக்கின்றன. தமிழகத்தில் உள்ள சில மாவட்டங்களுக்கான விவரச் சுவடிகள் வெளியிடப்பட்டுள்ளன.

மாவட்ட ஆவணக் காப்பகங்கள்

மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களிலும் உள்ள 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்களை ஒன்று திரட்டி, மதுரை, கோவை, கடலூர், திருச்சி, சேலம் ஆகிய 5 மாவட்டங்களிலும் மாவட்ட ஆவணக் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன.

நமது நாட்டில் புது தில்லியில் 'இந்திய தேசிய ஆவணக் காப்பகம்' உள்ளது. மேலும் ஒவ்வொரு மாநிலத்திலும் மாநிலக் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. சில மாவட்டங்களில் மாவட்டக் காப்பகங்களும் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

தஞ்சை மராத்திய மன்னர் கால ஆவணங்கள்

கி. பி. 1676 முதல் 1855 வரை தஞ்சாவூரை மராத்திய மன்னர்கள் ஆட்சி புரிந்து வந்தனர். அம்மன்னர்களின் அன்றாடச் செய்திகள், மக்களின் வாழ்க்கைச் செய்திகள், அவர்களுடைய சமுதாயச் செய்திகள் ஆகிய விவரங்களை அன்றாட நிகழ்ச்சிகளாக எழுதப்பெற்றுள்ள ஆவணங்கள் பல தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இவை மராத்திய மொழியில் மோடி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இவ்வரசர்களின் ஆட்சிக் காலத்தில் எல்லாக் கணக்குகளும், பிறவும் மராத்திய மொழியிலேயே மோடி எழுத்தில் எழுதப்பெற்றன: இவை மோடி ஆவணங்கள் என்று அழைக்கப் படுகின்றன. மிகக் குறைந்த அளவில்

தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பெற்ற ஆவணங்கள் உள்ளன.

ஆய்வாளர்கள் சிலர் இம்மோடி ஆவணங்களை மொழி பெயர்த்து ஆய்வு செய்துள்ளனர். மேலும் சில தமிழ் ஆவணங்களையும் ஆய்வு செய்துள்ளனர். இவ் ஆய்வின் மூலம் மராத்திய அரசு முறை, அரசர் பற்றிய செய்திகள், அவ்வரசர்களின் அயல் நாட்டுத் தொடர்பு, வரவு செலவுகள், நீதி மன்றங்கள், கோயிற் பணிகள், கல்விப் பணிகள் ஆகியவற்றை அறிய முடிகிறது. மருத்துவம் இசை, நாடகம், நாட்டியம், சிற்பம், ஓவியம் போன்ற துறைகளில் அக்காலத் தஞ்சை மக்களின் மிகச் சிறப்பான வளர்ச்சியையும் அறிய முடிகிறது.

மத்திய மாநில அரசுகள் ஆற்ற வேண்டியவை

தனியார் நிறுவனங்கள், கோயில்கள், ஆதீனங்கள் மற்றும் திருச்சபைகளில் உள்ள தனியார் ஆவணங்கள் பற்றிய விவரங்களைச் சேகரிக்க வேண்டும். அவற்றைத் தொகுத்துக் கணிப்பொறி மூலமும் மின்னணுச் சாதனம் மூலமும் பாதுகாத்து வைக்க வேண்டும். அவற்றை ஆய்வாளர்களுக்குத் தடையின்றி வழங்க வேண்டும்.

பிறமொழி ஆவணங்களைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்து ஆய்வாளர்களுக்கு வழங்க வேண்டும்

நவீன ஆவணக்காப்பக வளர்ச்சிகளை அறிந்து அதற்கேற்ப ஆவணக் காப்பகப் பணிகளை மேம்படுத்த வேண்டியது அவசியமாகிறது. தேசிய, மாநிலக் காப்பகங்கள் கணிப்பொறி மூலம் இணைத்து ஆவணங்கள் தொடர்பான விவரங்களைத் தகவல் பரிமாற்றம் செய்ய வேண்டியதும் அவசியமாகிறது.

ஆவணக் காப்பகங்களில் காணலாகும் அரிய விவரங்கள் இணையத்தில் இணைவதன் மூலம் உலகெங்கிலும் இருக்கும் ஆய்வாளர்கள் எவ்விதத் தடையுமின்றி உடனுக்குடன் எளிதில் பெற்றுப் பயன்பெற முடியும். அதே போன்று நாமும் பிறநாட்டுக் காப்பகக் களஞ்சியத்தைப் பெற்றுப் பயன்பெறலாம்.

ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள்

1. பெருமாள், பா, **உலக நூலகங்கள்**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 1988
2. முத்துசாமி, எம் (ப. ஆ), **நூலகம் நூல் வல்லோர்**, சென்னைப் பல்கலைக்கழக நூலக அலுவலர்கள் சங்கம், சென்னை. 1993.
3. . . . . தமிழ் நாடு ஆவணக் காப்பக வெளியீடு, சென்னை. 1992.
4. வேங்கடராமையா.கே. எம், **தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.

□

வே. சீதாலெட்சுமி
தேர்வுநிலை விரிவுரையாளர்
ஸ்ரீ கா. சு. சு. கலைக்கல்லூரி
திருப்பனந்தாள்

ஸ்ரீ காசி மடம் வரவு செலவு ஆவணங்கள்

நிகழ்காலச் செய்திகளையும், கடந்தகாலச் செய்திகளையும் எதிர்காலச் சந்ததியினருக்குப் பாதுகாத்துக் கொடுப்பது ஒரு நாட்டின், அரசின் தலையாய கடமையாகும். அதனாற்றான் பாரதி கூட, "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவியும், சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் வளர்த்ததும் இந்நாடு" எனப் போற்றுகிறார் போலும்! இதனை முந்தைய காலத்தில் பாறைகளில், கோயில் சுவர்களில் கற்களில் பொறித்து வைத்தனர். பின்னரே ஓலைச்சுவடிகள் பயன்படுத்தப்பட்டு அவைகள் பாதுகாக்கப்பட்டன. ஜெர்மன் நாட்டைச் சார்ந்த ஹெல்லன்பர்க் என்பார்,

> "கடந்த காலத்தில் உருவாக்கப்பட்டதும், ஒரு நிறுவனத்தின் நடைமுறைப் பத்திரங்கள் மற்றும் நடவடிக்கைகளை எதிர்காலச் சந்ததியினருக்காக ஒரு குறிப்பிட்ட இடத்தில் பராமரிப்புச் செய்வதே ஆவணக்காப்பகமாகும்"

என வரைமுறை செய்கிறார். முதலில் 1790ஆம் ஆண்டு பாரிசில் முதல் ஆவணக் காப்பகம் தொடங்கப்பட்டது. சென்னையிலுள்ள தமிழ்நாடு ஆவணக் காப்பகம் தென்கிழக்கு ஆசியாவின் மிகப் பெரியதும், பழமையானதும் ஆகும்.

காப்பகங்களில் அரசுத்துறை அறிக்கைகள், மக்கட்தொகைக் கணக்கெடுப்பு, சட்டமன்ற நடவடிக்கைகள், மாவட்ட விவரச் சுவடிகள், ஆங்கிலப் பேரரசின் கடிதப் போக்குவரத்தின் பிரதிகள், குறிப்பேடுகளாகிய அல்மெருக்ஸ், டைரக்டர்ஸ் அனைத்துப் பாடங்களும் அடங்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடந்த நூற்றாண்டில் வெளியாகிய நூல்கள் யாவும் பாதுகாத்து வைக்கப்பட்டன.

சுவடி

சுவடி என்ற சொல்லுக்கு ஓலை, ஏடு, இதழ், தோடு, மடல், தந்திரம், தூக்கு, பனுவல், புத்தகம் எனப் பல்வேறு சொற்களை நூலுக்குப் பழந்தமிழர் வழங்கினர். சுவடிகளை நூலகம் போலச் சேர்த்து வைத்திருந்த இடம் 'சரசுவதி பண்டாரம்' எனப்பட்டது. 'சரசுவதி' நூலையும், 'பண்டாரம்' இடத்தையும் குறித்தன. பல்வேறு மொழிச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டன. இராசராசசோழனைப் 'பண்டாரந்

திறந்துவிட்டான், பரிவு கூர்ந்தான்' எனக் குறிப்பர்.

காகிதச் சுவடி

முதன்முதலாகச் சீனாவில் கி. பி. 105இல் காகிதம் செய்யப்பட்டது. பின்னர் அராபியர் வழி ஐரோப்பாவில் பரவியது. இந்தியாவில் காகித ஆலை 1870இல் தொடங்கப்பட்டது. முதல் ஆலை வங்காளத்தில் அமைக்கப்பட்டது. 1920 முதல் இருபது ஆண்டுகட்கு இத்தொழில் சிறப்புற்றது. காகிதங்கள் வரவிற்குப் பிறகுஆவணங்கள் காகிதத்தில் எழுதி வைத்துப் பாதுகாக்கப்பட்டன. ஆவணங்கள் வழக்குகளில் முக்கியப்பங்கு வகித்தமையை. "ஆட்சியில், ஆவணத்தில், மற்றயலார்தம் காட்சியில்" என்ற பெரியபுராண வரியானது சாட்சியாக ஆவணம் இருந்தமையைக் காட்டுகிறது. அச்சுக்கலை கண்டுபிடிக்கப்படாத காலத்துக் காகிதங்களில் கையெழுத்தில் எழுதி ஆவணங்கள் பராமரிக்கப்பட்டன. இவை நிலம், கட்டிடம், தானதருமம், கொடுக்கல் வாங்கல், கடிதம், வரவு செலவு, நாட்குறிப்பு, அறிக்கைகள் எனப் பல்வேறுபட்டனவாக அமைந்தன.

அறிக்கைகள்

ஒரு அரசின், ஒரு நிறுவனத்தின், ஒரு கம்பெனியின் நிகழ்ச்சிகள், செயல்பாடுகள், வரவு செலவுகள் ஆகியவைகள் இதனுள் அடங்குவன. ஆண்டுதோறும் இவை தயாரிக்கப்படுவதன் நோக்கம் இலாப நட்டக்கணக்கை அறியவும், அதன் வழித் திட்டங்கள் போடுவதும், அதனை அமுலாக்கி நன்கு வளர்ச்சி பெறவுமேயாகும்.

மூலதனம்

ஒரு நிறுவனம் இயங்குவதற்கு, சிறப்பாக இயங்குவதற்குப் பொருள் தேவையாகிறது. மூலதனம் எதுவுமின்றி ஒரு நிறுவனத்தை நடத்துவது இயலாது. மூலதனத்தைக் கொண்டு பொருள்கள் உற்பத்தி செய்து, தேவைக்கேற்ப விலை நிர்ணயம் செய்து விற்கும் பொழுது கிடைக்கும் இலாபம் அந்நிறுவனத்தை வளர்ச்சிப் பாதையில் செலுத்துகிறது. இவையாவும் திட்டமிடுவதாலேயே கிடைக்கப் பெறுகின்றன.

> "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்"

என்ற குறளுக்கேற்பத் திட்டமிடுதலே வெற்றியின் செம்மைக்கு வித்தாகும்.

மூலதனம் இருவகைப்படுகிறது. ஒன்று பொது மூலதனம், மற்றொன்று தனி மூலதனம். முன்னது ஒரு நிறுவனத்தின் எல்லாச் செலவுகட்கும் இதிலிருந்து பயன்படுத்துவது பின்னையது குறிப்பிட்ட ஒன்றிற்காக முதலீடு செய்து, அதற்கு மட்டுமே அதனைப் பயன்படுத்துவது ஆகும்.

அறக்கட்டளைகள்

மிகுதியும் தருமத்தை மனித சமுதாயத்தின் வளர்ச்சியை, உதவும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்படுவது. கோயில்கள்

தர்ம்ஸ்தாபனங்கள், திருமடங்கள் இத்தகைய அறக்கட்டளைகளை ஏற்படுத்தி, மனித மேம்பாட்டுக்கு உறுதுணை புரிந்தனர். கல்வி, நூல் வெளியீடு, அன்னதானம், மருத்துவம், பொதுநலப்பணிகள், சொற்பொழிவுகள், விழாக்கள், கோயில் பராமரிப்பு எனப் பல்வேறு நிலைகளில் இவ்வறக்கட்டளைகள் நிறுவப்பட்டன.

ஸ்ரீகாசிமடம்

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் மொகலாய மன்னனிடம் நிலம் பெற்று ஸ்ரீகாசியில் 'குமாரசாமி மடம்' என்ற பெயரில் மடமொன்று நிறுவினார்கள். அதன் வழி மனித சமுதாயத்திற்கு அருட்கொடையும், அறக்கொடையும் நல்குகிறார்கள். கல்வி, சொற்பொழிவு, மருத்துவம், அன்னம் பாலிப்பு, கோயிற் பராமரிப்பு எனப் பல்வேறு நிலைகளில் பணிகள் தொடர்ந்தன.

ஸ்ரீகாசிவாசி தில்லைநாயக சுவாமிகள்

இவர்கள் கி. பி. 1756 வரையில் பட்டத்திலிருந்தனர். ஸ்ரீகாசி மடத்தின் ஆறாவது பட்டத்து சுவாமிகளாவர். கி. பி. 1720இல் திருப்பனந்தாளில் ஒரு மடத்தை நிறுவினார்கள். திருப்பனந்தாள் காசியிலுள்ள மடத்தின் கிளைமடமாதலின் இதற்கு ஸ்ரீகாசி மடம் எனப் பெயர் வழங்கப்பெற்றது. இவர்களும் இவர்கட்குப் பின் அருளாட்சி செலுத்துபவர்களும், காசி, திருப்பனந்தாள் என்று இரு இடங்களிலும் மாறி, மாறி அருட் செங்கோலோச்சுகின்றனர். அவ்வகையில் 19ஆவது பட்டம் ஸ்ரீகாசி மடத்தின் தலைவராக எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளும் தமிழ்மொழி, தமிழிசை, சைவ சித்தாந்தம், திருமுறைகள் இவற்றின் ஆக்கங் கருதியும் பொது மக்கள் நன்மைகளை உத்தேசித்தும் அவ்வப்போது பல அறச் செயல்களில் மனமுவந்து பல அறக்கட்டளைகளை நிறுவினார்கள். அறுநூறுக்கும் மேற்பட்ட அறக்கட்டளைகளை நிறுவி ஸ்ரீகாசி மடத்தின் பெயரையும் புகழையும் நிலை நாட்டியுள்ளார்கள். சுவாமிகள் தம் குறிக்கோளுக்கு ஏற்ப, இவ்வறங்களை நன்கு பரிபாலித்து வரும் வகையில் நற்பெயரைச் சிறு மேலெழுத்தாக நிலைநாட்டத்தக்க முனி புங்கவரைத் தமக்குப்பின் தோன்றலாக நம் எஜமான் சுவாமிகள் எழுந்தருளினார்கள். சுவாமிகள் தம் முன்னோர் வழி நின்று அறக்கட்டளைகளைப் பாதுகாத்தும், காலச் சூழலுக்கேற்பப் புதுக்கியும், புதிய அறக்கட்டளைகளை நிறுவியும் அருட் செங்கோலோச்சி வருகிறார்கள்.

ஸ்ரீகாசி மடத்தின் வரவு - செலவு அறிக்கை

> "ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
> போகா றகலாக் கடை"

என்ற குறள் நெறிக்கேற்ப ஸ்ரீகாசிமடம் தனது வருவாய்க்கேற்பச் செலவுகளைத் திட்டமிட்டு, மனித சமுதாய மேம்பாட்டிற்குப் பல்வேறு நிலைகளில் உதவி வருகின்றது. இக்கட்டுரை ஸ்ரீகாசிமடத்தின் 19ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் அருளாட்சியும், 20ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அருளாட்சியும் நடத்தப்பெற்ற வரவு செலவுக் கணக்குகளின் ஒரு சிறு பகுதியை எடுத்து விளக்குகின்றது.

1916, 1920, 1959, 1960, 1965 ஆகிய ஆண்டுகளுக்குக் கையால் எழுதி வைக்கப்பட்ட காகிதச் சுவடிகள் இக்கட்டுரையில் குறிக்கப்படுகின்றன.

"திருப்பனந்தாள் ஆதீனம் வகையறா ஸ்தலம் ரொக்க சிட்டா
ஆதாயம் - வரவு - செலவு"

என்று காகிதச் சுவடியின் மேற்பகுதி குறிக்கப்பட்டுள்ளது. ஒரு பக்கத்தில் வரவும், அதன் எதிர்ப்பக்கத்தில் செலவும் குறிக்கப்பட்டுள்ளது.

வரவு

மடத்திற்கு வருமானமானது நஞ்சை, புஞ்சை நில வருமானங்கள், தென்னை மரக்குத்தகை வருமானம், புளி இலுப்பை விற்று வருமானம், கட்டிடங்கள் வழி வருமானம், வங்கிகளில் போடப்பட்ட டிபாசிட்டுகளின் வட்டி வருமானம், மடத்திற்கு வருவோர் தாமாக மனமுவந்து தரும் ரொக்கம், கட்டிடம், நிறுவும் அறக்கட்டளைகள் எனப்படும்.

சான்று	**நெல்வரவு**	
1. 1959 ஜூலை 9	ஆடுதுறை நெல் வியாபாரம் சம்பா வரவு	646. 40
	போர் நெல்	76. 08
	குறுவை நெல்	474. 83
2 <u>நெல் குத்தகை பாக்கி வரவு</u>		
1959 ஜூலை 19	சென்ற பசலி பாக்கி (விசுவநாதபுரம் நெற் களஞ்சியம்)	66. 66
	சென்ற பசலி குறுவை நெல் பாக்கி (மதகடி கிராமம்)	40 80
3 <u>வைக்கோல் விற்று வரவு</u>		
1959	நெடுந்திடல் வடபிரிவு கடாவளி கிராமம்	103. 81
	திருலோக்கி குறுவை வைக்கோல் போர்	5. 00
4 <u>புளி, இலுப்பை விற்று வரவு</u>		
சிவபுராணி, திருலோக்கி, பாலூர், திருப்பனந்தாள்		37. 00
		16. 00
		12. 50
		23. 62
5 <u>வங்கி வட்டி வரவு</u>		
1959 ஜூலை 16	கும்பகோணம் சென்டிரல் பாங்கு	29. 74
	கும்பகோணம் யுனைடெட் கமர்சியல் பாங்கு பிக்சட் டிபாசிட்	450. 00
	கும்பகோணம் எலக்டிரிக் கார்ப்பரேசன்	28. 05

6. <u>சில்லரை ஆதாயம்</u>

1959 ஜூலை	மாங்குடி கிராமம் சீட்டுப் பதிவு பாக்கி	132. 25
	தேங்காய் உருப்படி	2. 50
	சிவபுராணி கிராமம்	2. 50
	கீழே விழுந்த தென்னை மரம் விற்று வரவு	2. 00
	மரப்படியான மாட்டை விற்று வரவு	60. 00
	மரங்களை விற்று வரவு	12. 50

		ரூ.	அ.	பை
1937 ஜூலை	வாடகை வரவு			
	திருப்பனந்தாள் வீட்டு வாடகை	1.	0.	0
	திருப்பனந்தாள் லிஜியஸ் கடை	10.	10.	0
	சாரீட்டீஸ் ஆபிஸ் வாடகை	60.	0.	0
30. 07. 1935	இராமேஸ்வரம் கண்ணம்மாள் துவாதசி			
	கட்டளை மூலதனத் தொகை	1810.	1.	5
	தென்னைமரக் குத்தகை	7.	6.	0
	கருவக்காய் குத்தகை	21.	5.	6

செலவுகள்

1 <u>கிராம அபிவிருத்திச் செலவு</u>

மடம் வருவாயை மட்டும் பெற்றுக் கொள்ளாது அக்கிராமங்களின் வளர்ச்சி. பாதுகாப்புக்குச் செலவும் செய்துள்ளது.

1. திருலோக்கி கிராமம் ராமனோடை பாலம் கட்ட - 750. 00
   நெடுந்திட கிராமம் மதகு ரிப்பேர் செய்தது - 10. 03

2. <u>கட்டிட மராமத்துச் செலவு</u>

கவின் கலையூர் ஒன்றான கட்டிடத்தைத் தம் முன்னோர் வழி நின்று மடம் பாதுகாத்தமை சிறப்பானது.

திருப்பனந்தாள் சந்நிதி காசி மந்திரம் கட்டிடச் செலவு - 293. 31
திருலோக்கி தேர்வீதி வீடு வேலைக்கு செலவு - 100. 80

3. <u>தபால் செலவு</u>

கடிதம் அனுப்புவது முக்கிய நிகழ்வுகட்குத் தந்தி கொடுப்பது (திருமணம் பதவியேற்பு, சஷ்டியப்த பூர்த்தி)

திருவாரூர் அரங்கநாத முதலியார் சஷ்டியப்த பூர்த்தி - 1 : 68

4. <u>பிரயாணச் செலவு</u>

மடத்தின் பணியாளர்கள் பல காரணமாக வெளியில் சென்று வந்ததற்கான செலவு

கும்பகோணத்திலிருந்து இரும்பு கேட் ஏற்றி வந்த கண்ணனுக்கு

படிச் செலவு - 0. 50

கும்பகோணம் சென்டிரல் பேங்குக்குப் போய்வரச் செலவு - 1. 70

5. <u>சர்க்கார் கிஸ்தி</u>

மடத்திற்குச் சொந்தமான நிலத்திற்குக் கிஸ்தியும், வீடு, கடைகளுக்குப் பஞ்சாயத்துத் தீர்வையும் கட்டப்பட்டுள்ளது.

திருலோக்கி வீடுகட்கு 1959 ஏப்ரல் முதல் அரையாண்டுத் தீர்வை - 24. 10

திருலோக்கி வீடுகட்கு நிலத் தீர்வை - 31. 10

6. <u>மடம் நித்தியப் படிச்செலவு</u>

பால், வெண்ணெய், ஊருகாய், பழங்கள், எண்ணெய், மருந்து, கறிகாய் வாங்கிய வகையில் செலவுகள் குறிக்கப்பட்டுள்ளன.

ஊருகாய் 1/2 பவுண்டு, 3. 00, ஊதுபத்தி ஸ்டாண்டு 1. 54, கறிகாய் - 1. 33

அப்பளம் 200க்கு 2. 25 வெண்ணெய் சேர் - 0. 5. 0

7. <u>மடம் ஏறுபடிச் செலவு</u>

மடத்தின் அதிபர்களின் ஜென்ம நட்சத்திரப் பெரு விழாவுக்குரிய செலவுகள்

1. அந்தணர், ஏழைகட்குத் தானம் - 200. 00

விழாவுக்கு வாங்கிய பால் 40சேருக்கு - 5. 00

பழம் 20க்கு 6. 7. 0 பன்னீர், சுவர்ணபுஷ்பம் - 0. 8. 8

8 <u>பேப்பர் சந்தா</u>

மடத்தில் சுதேசமித்திரன், தினமணி வாங்கிய வகையில்

7. 6. 59 முதல் 28. 6. 59 முடிய - 1. 70

வானொலி புத்தகம் - 1. 05

9. <u>சாதல்வார் செலவு</u>

மடத்தில் எழுதுவதற்குத் தேவையான பேனா, பென்சில், பேப்பர், மை போன்ற பொருட்கள் வாங்கச் சிலவு.

10. <u>சவாரி செலவு</u>

மடத்தின் அதிபராக விளங்குபவர்கள் கோவில் வழிபாட்டுக்குச் செல்வதற்கும், மற்ற மடங்கட்குச் சென்று மடாதிபதிகளைத் தரிசித்து வருவதற்கும் ஆகும் செலவுகள்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் திருவாவடுதுறை சென்றுவர

170. 25

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் தை அமாவாசை முன்னிட்டுப் பூம்புகார், பல்லவனீச்சரம், சாயாவனம், வள்ளலார் கோவில் சென்றது 121. 00

<u>இனாம் செலவு</u>

மடத்திற்கு வருவோர்க்கு இனாம், பணி புரிபவர்கள் பிள்ளைகள் கல்விச் செலவு, திருமணச் செலவு, இறப்புச் செலவு என வாரி வழங்குதல்

திருவாவடுதுறை சீனிவாச ஐயர் இனாம்	:	5. 00
திருச்சி செட்டியார் இனாம்	:	100. 00
துரைசாமி பெண் கலியாணத்துக்கு இனாம்	:	335. 8. 0

<u>வெள்ள நிவாரணத்திற்குச் செலவு</u>

சீர்காழி தாலுக்கா வெள்ள நிவாரண நிதிக்காக எம். எல். ஏ. முத்தையா பிள்ளையிடம் : 300. 00

<u>கோயிற் செலவு</u>

கும்பாபிஷேகத்திற்கு மருந்து கொடுத்தது சாயாவனம் கோவில் செந்திலாண்டவர்க்குப் பித்தளை மயில் : 100. 00

<u>கல்விக்காக நிதியுதவி</u>

1964ல் காலேஜ் மாணவன் கோவிந்தராசனுக்கு 3வது டெர்ம் பீஸ்	:	38. 00
எஸ். எஸ். எல். சி. படிக்கும் சந்திரசேகரனுக்குச் சன்மானம்	:	21. 40

<u>விழாக்காலச் செலவு</u>

1927இல் தீபாவளிக்காகக் கிரகஸ்தர்கள், காரியஸ்தர்கள், பணிவிடைக்காரர்கள், சேஷகன், கைப்பிடி ஆள், மடங்கட்டி ஆகியோர்க்கு இனாம் : 937 - 8 - 0

<u>மடத்திற்கு நிலம், பொருள் வாங்கிய வகையில் செலவு</u>

1936இல் கும்பகோணம் ஹாஜியார் & சன்ஸ்ஸில் வாங்கிய

வெள்ளி அடுக்கு (2) 437 கிராம்	:	10. 92
வெள்ளி டம்ளர் (4) 507 கிராம்	:	12. 67
வெள்ளி ரவுண்ட் பிளேட் (4) 1017 கிராம்	:	25. 42
வெள்ளி டம்ளர் (12) 1409 கிராம்	:	35. 22
வெள்ளி அடுக்கு டிபன் கேரியர் (2) 1838 கிராம்	:	55. 14
திருவிடைமருதூர் பெரிய மேளம் வீடு சாமிக்கு எழுதியது	:	20. 00

<u>கல்வி சம்பந்தம்</u>

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி நூல் நிலையக் கட்டிடத்திற்கு		4697. 12
கந்தர் கலி வெண்பா அச்சிட	:	593. 13
திருவாசகம் அச்சிட	:	27. 77

<u>யாத்திரைச் செலவு</u>

யாத்திரை போவோருக்கு வாங்கிக் கொடுத்த வேஷ்டி	:	10. 0. 0
ஸ்ரீனிவாசய்யர் திருப்பதி யாத்திரை போக	:	25. 0. 0

இவ்வாறு அக்காலத்தில் வரவையும் செலவையும் சீர் தூக்கிப் பார்த்து, மனித சமுதாயத்தை மேம்படுத்தும் வகையில் மடத்தில் நிர்வாகம் அமைந்திருப்பது போற்றத்தக்கது. அக்காலச் சமுதாயத்தின் நேர்மை, உண்மை, மடத்தாரிடத்து மக்கள் கொண்ட பாசம், பணத்தின் மதிப்பு இன்னபிறவான செயல்பாடுகளால் நிர்வாகம் சிறப்பாக நடந்தேறியுள்ளது. மடத்திற்குச் சொந்தமான கிராமங்களின் கீழுள்ள நிலங்கள், கட்டிடங்களின் வருமானம் குறைவின்றி மடத்திற்குக் கிடைத்து வந்தன. ஸ்ரீ காசிமடத்தின் கீழ் ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக் கல்லூரியும், ஸ்ரீ குமரகுருபரர் கலைக் கல்லூரியும் (ஸ்ரீவைகுண்டம்), ஆடுதுறையில் மேல்நிலைப் பள்ளியும், திருப்பனந்தாளில் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளும், திருலோக்கியில் உயர்நிலைப்பள்ளியும், ஸ்ரீகுமரகுருபரர் ஆங்கில போதனா மேல் நிலைப்பள்ளியும் இயங்கி வருகின்றன என்பது பெருஞ்சிறப்பாகும்.

□

ம. செந்தூர் பாண்டியன்
ஆராய்ச்சி அலுவலர்
மாவட்ட ஆவணக் காப்பகம்
மதுரை

திருவேங்கடம் பிள்ளை தமிழ் நாட்குறிப்பு

1. 0. முன்னுரை

1. 1. 'நாட்குறிப்புகள்' என்று நாம் குறிப்பிடுவது ஒருவகையில் இலக்கியக் கூறு படைத்ததாக உள்ளது. காகிதங்களில் எழுதப்பட்ட நாட்குறிப்புகள் சிலவற்றையே நாம் கண்டிருக்கிறோம். அவை 16ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் நமக்கு அறிமுகமாகியுள்ளன. அறிஞர் ஆனந்தரங்கபிள்ளை நாட்குறிப்புகள் எழுதி வந்தவர்களில் ஒரு முன்னோடியாகக் கருதப்படுகிறார். இதுபற்றி வாசுகி என்பவர்,

> "ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு இந்தியாவில் முதல்முதல் எழுதப்பெற்ற சிறப்பினை உடையது"

என்று தம் நூலில் குறித்துள்ளார்.[1] அவர் எழுதிய நாட்குறிப்புகள் இன்றளவும் சிறந்த ஆராய்ச்சிக் குரியவனாக உள்ளன.

1. 2. இவரது நாட்குறிப்பினைத் திறனாய்வு செய்து,

> "அதனைத் தமிழ் உரைநடை வளர்ச்சியின் மற்றொரு 'மைல் கல்'"

என்று அதே ஆசிரியர் தமது கட்டுரை[2] ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இந்த நாட்குறிப்புகளை ஆராய்ந்தோர் ஒரு சிறந்த தமிழ் உடைநடையை ரங்கபிள்ளை எழுதியுள்ளார் என்பதைக் குறிப்பிட மறந்துவிட்டனர். ஆனால் இவரது காலத்தில் வாழ்ந்த வீரமாமுனிவரின் (1680 - 1747) நூற்கள் சிலவற்றை 'உரைநடை' நூல்களாக எழுதினார் என்று பாராட்டி மகிழ்கின்றோம். பெஸ்கியையும், நொபிலியையும் (1577 - 1656) தமிழ் உரைநடையின் தந்தையர் என்றும், அவர்களைத் தொண்டுள்ளம் கொண்டவர்கள், ஆரம்ப கர்த்தர்கள் என்றும் பாராட்டுகிறோம்.[3] ஆனந்தரங்கர் நாட்குறிப்பேடுகளில் தமிழ் மொழியியல் ஆய்வுகள் இதுவரை நடத்தப்படவில்லை.

---

1. இரா. வாசுகி, **ஆனந்தரங்கம்பிள்ளை அரசியல் சிந்தனைகள்**. புதுவைப் பல்கலைக்கழகம்.
2. **ஆவண அமுதம்**, சூலை - செப்டம்பர் 1990, தமிழ்நாடு ஆவணக்காப்பக வெளியீடு, ப. 53.
3. மு. வரதராசன், **தமிழ் இலக்கிய வரலாறு**. பக். 240 - 241

2. 0. முதல் நாட்குறிப்பேட்டாளர்

2. 1. ஆனந்தரங்கர் சுமார் 25 ஆண்டுகள் எழுதி வந்த நாட்குறிப்புகள் 17 தொகுதிகளாகப் பிரஞ்சு தேசத்தில் பாரீஸ் தேசீய நூலகத்தில் தமிழ்ப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளன. இதைச் செய்தவர் எம். எம். இ. ஆரியல் என்பவர் (He was the conservator of the Archives of French India) இந்த நாட்குறிப்பு பற்றிக் குறிப்பிடும்போது.

> "'Rangapillai's Diary' a Unique work, the translation and publication of which was Sanctioned by Government as a Service and an encouragement to Literory and historical Research"

என்கின்றார்.[4] இந்த நாட்குறிப்புகள் யாவும் அறிஞர் ஆனந்தரங்கர் மறைந்து பல ஆண்டுகள் கழிந்தபிறகு, 1846இல் எம். காலியஸ் (M. Gallois Montburn) என்ற தமிழ்ப் பேராசிரியரால் வெளிக் கொணரப்பட்டது. தற்போது இவை 37 தொகுதிகளாகத் தமிழ் நாடு ஆவணக் காப்பகப் பொதுத்துறை (பல்வகை) ஆவணங்களில் உள்ளன.[5]

3. 0. திருவேங்கடம்பிள்ளை நாட்குறிப்பு

3. 1 ஆனந்தரங்கம் பிள்ளையைத் தொடர்ந்து, அவரைப் போன்றே நாட்குறிப்புகள் எழுதியவர், திருவேங்கடம்பிள்ளை என்பவர். இவர் ரங்கபிள்ளையின் இளைய சகோதரரின் மைந்தரேயாவார். இவர் எழுதிய நாட்குறிப்புகள் யாவும் காகிதத்திலேதான் உள்ளன. அவை, 11 ஏப்ரல் 1762 முதல் 21 டிசம்பர் 1763 முடிய முதல் தொகுதியிலும், 28 அக்டோபர் 1762 முதல் 26 செப்டம்பர் 1764 முடிய இரண்டாவது தொகுதியிலும், 16 செப்டம்பர் 1964 முதல் 25 சூன் 1768 முடிய மூன்றாவது தொகுதியுமாகச் சுமார் 473 பக்கங்களில் உள்ளன. இவை பொதுத் துறையில் பல்வகை ஆவணத் தொகுதிகளில் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் இருக்கின்றன.[6]

4. 0. பிற நாட்குறிப்பேட்டாளர்கள்

4 1. தவிர, நெல்லை சவரிராயபிள்ளை, அவரது 35ஆவது வயது முதல் எழுதி வைத்த நாட்குறிப்புகளும் கடிதங்களும் இதில் சேரும் (1836 முதல் 1874 முடிய) அவைகள் அச்சில் வெளிவந்துள்ளன.[7] இதில் சவரிராய பிள்ளையின் வரலாறும் அக்காலத்திய சமூக வாழ்க்கை பற்றிய சில குறிப்புகளும் எழுதப்பட்டுள்ளன.

4. 2. அடுத்து ஆற்காடு நவாப் முகமதலி எழுதியுள்ள "நவாப் வாலாஜா நாட்குறிப்புகள்" இவை பெர்ஸியன் மொழியில் உள்ளன. இவரது ஆட்சிக் காலம்

4 G. O. Ms. No. 1552 Public Dept. it 25. 11. 1897. of Govt. of Madras.

5. Supplemental Catalogue of the Fort St. George Records, Tamil Nadu Archives, Chennai - 8. By B. S. Baliga (1936).

6. Supplemental Catalogue of Fort St. George Records, Tamil Nadu Archives, Egmore, Chennai - 8. By B. S. Baliga.

7 **சவரிராயபிள்ளை சரித்திரம்,** *இரண்டாம் பாகம் (1900).*

1749 முதல் 1795 முடியக் காண்கிறோம். ரங்கபிள்ளையின் காலத்தில் ஆற்காடு நவாபாக இருந்தவர் மேற்குறிப்பிட்டவரே.[8] எனவே இந்த நாட்குறிப்புகள் வெளியிடப்பட்டால் ரங்கபிள்ளையின் நாட்குறிப்புகளுடன் செய்திகள் யாவும் சரியாக உள்ளனவா என்பதை ஒப்புநோக்கி அவற்றைத் தெளிவாக உணரமுடியும். அண்மையில் சில ஆண்டுகளுக்கு முன் பாஸ்கர சேதுபதியின் நாட்குறிப்பு (1868 - 1903) ஒன்று தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் பாதுகாப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. இது தமிழும் ஆங்கிலமும் கலந்து எழுதப்பட்டுள்ளது.

4.3. 31. 08. 1989 நாளைய தினமணியில் வெளிவந்துள்ள செய்தியின் அடிப்படையில் தமிழில் மற்றொரு நாட்குறிப்பேட்டினை வீரா நாயக்கர் எழுதியுள்ளதாகத் தெரிய வருகிறது. நாட்குறிப்புகள் 1778 - 1792 ஆண்டுக்குரியது. இதனைப் புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தார் வைத்துள்ளதாகத் தெரிகிறது.

5. 0. திருவேங்கடம்பிள்ளை நாட்குறிப்பு - சில செய்திகள்

5. 1. *திருவேங்கடம்பிள்ளை நாட்குறிப்புகளில் கண்டுள்ள செய்திகளில்* சிலவற்றை எடுத்துரைத்தல் அவசியமே! ஆனந்தரங்கரின் நாட்குறிப்புகளில் தற்கால வரலாற்றாளர்கள் சிலர் ஆய்வு நடத்தியுள்ளனர். ஆனால் திருவேங்கடம்பிள்ளையின் நாட்குறிப்புகள் இதுவரை தமிழிலோ ஆங்கிலத்திலோ அச்சாகவில்லை. அவை இன்றும் ஆவணமாகவே உள்ளது. ரங்கபிள்ளையை அடியொற்றியே இந்த நாட்குறிப்புகள் வரையப்பட்டுள்ளன. செய்திகளை அவரைப் போன்றே குறிப்பிட்டுள்ளார். ரங்கபிள்ளை துபாஷாக இருந்தார்; திருவேங்கடம் பிள்ளை அத்தகைய பதவியில் இல்லை.

5. 2. 1764 அக்டோபர் மாதம் 16ஆம் நாள் நடந்ததாக நாட்குறிப்பேட்டாளர் கேள்விப்பட்ட தகவலின்படி இங்கிலீசுக்காரர்களும் நவாபு முகமது அலிகானும் சேர்ந்து முகமது யூசுப்கானைத் தூக்கில் போட்டதாகத் தெரிவித்துள்ளார் வேறு ஆவணங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தேதியும் நிகழ்ச்சியும் சரியாகவே உள்ளன.

5. 3. ரங்கபிள்ளை தம் நாட்குறிப்புகளில் புதுச்சேரிக்கு வந்துபோகும் கப்பல்கள் குறித்து ஏராளமான தகவல்களைத் தந்துள்ளார். திருவேங்கடம் பிள்ளையும். ஒரு செய்தியில் புதுச்சேரிக்கு ஆங்கிலேயக் கப்பலில் வந்தவர்கள் அளித்த தகவல்களின்படி. ஆறு பிரஞ்சு தேசத்துக் கப்பல்கள் மொரிசியஸ் தீவு சேர்ந்துள்ளதாகவும். 1765 சனவரியில் அவைகள் பாண்டிச்சேரி வந்தடையுமென்றும் தெரிவித்துள்ளார். மேலும் ஒரு செய்தியில் அக்டோபர்த் திங்களிலே (புரட்டாசி) சென்னையிலே யேழு இடி வீழ்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அவைகள் லிங்குசெட்டி வீட்டிலும் கிருஷ்ணப்ப நாயக்கன் தோட்டத்திலும் சமுத்திரத்திலும். கோட்டையிலும். பெத்தநாயக்கன் பேட்டையிலும். முத்தியால் பேட்டையிலும் வீழ்ந்ததாகக் கூறியுள்ளார்.

5. 4. மற்றொரு செய்தியில். தை மாத ‘சனிவாரத்திலே அந்த விடுதியில்

8. B. S. Baliga, **Studies in Madras Administration** Vol. I. 1960, p. 328.

வாசல்படியில் தமிழர் - உத்தியோகஸ்தர்கள் யேக கும்பலாக நின்றவண்ணம் நாட்குறிப்பேட்டாளரான திருவேங்கடம்பிள்ளை முன்னே சென்று உபசாரம் சொல்லி ரெண்டு எலுமிச்சம் பழம் குடுத்து உபசாரம் எழுதி வச்சிருந்த காகிதமும் கொடுத்தனர். கந்தப்ப முதலி பதிலுக்கு சலாம் பண்ணி எலுமிச்சை கொடுத்தார் என நாட்குறிப்பேட்டாளர் எழுதியுள்ளார். ரங்கபிள்ளைக்குப்பிறகு பாண்டிச்சேரி கவர்னருக்குத் துபாஷாக இருந்தவன் கந்தப்ப முதலி என்று தெரிகிறது. அவர் மூலமாக நாட்குறிப்பேட்டாளர்களும் ஏனைய முக்கிய சில நபர்களும் சென்று எலுமிச்சம் பழம் கொடுத்து மகஸரும் கொடுத்துள்ளனர். பதிலுக்குக் கந்தப்ப முதலி எலுமிச்சம்பழம் கொடுத்துள்ளது தெரிய வருகிறது.

5 5. அந்நாட்களில் கூலித் திட்டங்கள் குறித்துத் தமுக்கு அடித்து விளம்பரம் செய்துள்ளதாகத் திருவேங்கடம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். அந்நாட்களில் அரசு ஊதியம். பிற தொழில்கள் செய்வோருக்கு எவ்வளவு சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது என்பதில் துபாசிகளுக்கு - 24 பணம். அம்பட்டனுக்கு - 4 பணம். வண்ணானுக்கு - 24 பணம். போலீசுக்கு - 24 பணம். சேவுகனுக்கு - 20 பணம். வெல்லத்துக் காரனுக்கு - 1¼ பணம். அதுக்கு குறைஞ்ச - 1 பணம். அதுக்கு குறைஞ்ச -3/4 பணம். முடாளுக்கு (முழு ஆளுக்கு) - ½ பணம். சித்தாளுக்கு -½ பணம் என்று நாட்குறிப்பேட்டாளர் குறிப்பிட்டுள்ளார்.

5. 6. நம்மூர்க் கோயில்களில் பூசைகள் தொடங்குவதைக் கொடி ஏற்றித் தெரிவிக்கின்ற வழக்கத்தை. வெள்ளையர்களும் புரிந்து கொண்டு. பூசையில் கலந்துகொள்ளும் போது வரிசை வைத்து. மூன்று முறை துப்பாக்கியால் சுட்டு. இருபத்தொரு முறை பீரங்கி முழக்கம் செய்துள்ளார்கள். இச்செய்தியையும் நாட்குறிப்பேட்டாளர் குறிப்பிட்டுள்ளார்.

5 7. ஒரு தினம். ஆற்காடு நவாப் அவ்விடம் வந்தபோது. ஆனந்தரங்கரின் மரணத்துக்குப் பிறகு துபாஷாக நியமிக்கப்பட்டவனைப் பற்றிய விவாதம் நடந்துள்ளது. ஆனந்தரங்கனின் வாரிசுக்கு ஏன் இந்தப் பதவி அளிக்கப்படவில்லை என்பதையும் கேட்டு அதற்காகத் தாம் வருந்துவது போன்ற பாவனையில் தமது துபாஷிடம் கேட்டதற்கு. அங்கே பிரசன்னமாயிருந்த பிரஞ்சு அதிகாரியானவன். அதோ அங்கே கையில் தடியுடன் நிற்கும் கந்தப்ப முதலியே இப்போது துபாஷ் என்பதையும் ஆனந்தரங்கரின் பிள்ளை குறைந்த பருவத்தினராக இருப்பதால் அவனுக்கு இப்பதவி அளிக்கப்படவில்லை என்றும். இன்னும் சிறிது நாட்களில் அந்தப் பதவி அவர்களுக்கே சேருமென்று சொன்னபோது. நவாபு பர்ஷியன் மொழியில் தாம் அறிந்த வரையில் அவனுக்கு முப்பது வயதாகிறது. இன்னும் இப்பணிக்கு வழங்கப்படவில்லை என்றது சரியல்ல "எங்களுக்குள்ளே பெரிய உத்தர்வி'லே இருந்தால் (பெரிய பதவியானால்) அவர்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்து அவர்கள் பந்துக்குள்ளே பெரியவனாக இருக்கப்பட்டவனை விசாரிச்சுக் கொள்ளச் சொல்லி நடத்துகிறது (அதாவது மைனராக இருந்தால் கார்டியன் ஒருவனை நியமித்து அதன் பேரில் பதவியை நடத்திச் செல்வது) வெள்ளைக்காரர் கட்டாக நடப்பதா? அவர்களுக்குப் பந்துக்களை என்று கந்தப்ப முதலியைக் கேட்க. அவன் இல்லை என்று சொல்ல. இப்படிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு நவாபு தம் கைவிரலில் அணிந்திருந்த மோதிரம் ஒன்றினைப் பிரஞ்சு அதிகாரிக்கு மாட்டிவிட்டு. நம்மைப்

பார்ப்பது போல அந்த மோதிரத்தைப் பார்த்துக் கொண்டிருக்குமாறு கூறி. இரண்டு குதிரைகள் கொண்டு வந்ததில் ஒரு குதிரையை அவருக்குச் சம்மதியானதை யெடுத்துக் கொள்ளச் சொன்னார். இங்கே நடந்த விவாதத்தில். குறிப்பால் உணர்த்துகின்ற செய்திகள் பல. பாண்டிச்சேரி, அன்றைய நாட்களில் பிரிட்டீஸ் கைக்குள் இருந்தது. அப்போது ஆனந்தரங்கன், டியுப்ளே இவர்களது ஆட்சி அங்கே இல்லை. அங்குள்ள நிர்வாகம் மோசமாக இருந்தது. ஆங்கிலேய ஆட்சியையும் பிரஞ்சி ஆட்சியையும் ஒப்பிட்டுச் சில கேள்விகள் கேட்டு அதற்குப் பதிலும் தமது இருமொழியாளர் வெங்கடாசல அய்யனிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட நவாபு கந்தப்ப முதலியை யெச்சி பீங்கான் துபாஷி என்றும் வசை மொழிந்தான் என்று நாட்குறிப்பேட்டாளரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.8. 17. 04. 1762 முதல் 21. 12. 1763 காலத்தில் எழுதப்பட்ட நாட்குறிப்பில். கர்னாடக நவாப் முகமதலி பற்றிய செய்திகளில். ஆரணிக் கோட்டையை முகமதலி கைப்பற்றியதாகவும். அங்கிருந்து பெண்கள் அப்புறப்படுத்தப்பட்டதாகவும் நவாப் ஆட்சியிலே பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதும் தெளிவாகிறது. இதே காலகட்டத்தில் மராட்டியத் தளபதி முராரிராவ் 3000 குதிரை பட்டாள வீரர்களுடன் தென்னகம் வந்ததாகவும் தெரிவித்துள்ளார். கி. பி. 1761 சனவரியில் பாண்டிச்சேரியை ஆங்கிலேயர் கைப்பற்றியதற்காக நவாப் முகமதலிக்கும். ஆங்கிலேய கவர்னர் பிகாட்டுக்கும் இலண்டனிலிருந்து பரிசுப் பொருட்கள் வந்ததையும் நாட்குறிப்பேட்டாளர் தெரிவித்துள்ளார்கள்.

5. 9. பாண்டிச்சேரி ஆங்கிலேயர்கள் கையில் வந்தபிறகு அங்கு குத்தகைகாரர்களை நடத்திய அன்னிதங்களை எழுத வேண்டுமானால் பாரதக் கதையை வியாசர் எழுதியது போல எழுதினாலும் அடங்காது. நூறு ஆண்டுகள் ஆகலாம். குடிமக்கள் படுகின்ற தொல்லைகள் அளவில்லை என்றும் குடிமக்கள் மாடு கன்றுகளை விற்றும் கொடுத்தும் கூட அவர்களால் வரிகட்ட வழியின்றி அடியும் உதையும் பொறுக்காமல். ஓடிப் போகின்றபோது. அவர்களது பெண்டிர்களைப் பிடித்து வைத்து மூலையிலே கிட்டிப் போட்டும். மரத்திலே கட்டி வைத்தும். புடவைகளை அவிழ்த்தும் மானபங்கப் படுத்தியும் அவமானம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் நாட்குறிப்பேட்டாளர் குறிப்பிடுகிறார்.

5. 10. செஞ்சிக்கருகிலே ஒரு கிராமத்தில் நடந்ததாகக் கூறும் செய்தி மிகவும் வருத்தமானது. நமது தமிழ் மக்களின் சமூக வாழ்க்கை அன்று எவ்வளவு மோசமாக. அடிமைத்தனமாக அன்னியர்களின் பிடியில் இருந்தது என்பதும் தெரிய வருகின்றது. அவ்விடம் அமுல்தாரராக இருந்து ஒரு துலுக்கர். ஒரு பிராமணர் செலுத்தவேண்டிய வரிக்குத் தம் உடமைகளை விற்றுக் கொடுத்தும் அது காணாது போகவே. மேலும் 109 வராகன் கேட்டு அமுல்தார் ஆட்கள் அப்பிராமணனை அடித்ததாகவும். எங்கேயிருந்து தருவது என்று திருப்பிக் கேட்டபோது 'உன் பெண்டாட்டியை வித்துக்கொடு' என்று அந்த அமுல்தாரர் கூற. அந்தப் பிராமணன் தன் மனைவியிடம் வந்து சொன்னதும். அத்தொகைக்குத் தன்னையே எடுத்துக்கொள்ளச் சொல்லி அவள் சொன்னதாகவும் அதை அப்படியே அந்த அமுல்தாரரிடம் ஒப்படைத்துச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார் நாட்குறிப்பேட்டாளர். இத்தகைய செய்திகள் நாட்குறிப்பில் இருந்தும் கூட. தினமணி (31. 08. 89) வெளியிட்டுள்ள செய்தியில்

திருவேங்கடம் பிள்ளையின் நாட்குறிப்பு அத்துணைச் சிறப்புப் பெறவில்லை என்று எழுதியுள்ளது. ஏன் இந்தச் செய்திகள் அன்னாளைய இந்தியச் சமுதாயத்தில் நடத்தப்பட்ட வெங்கொடுமைகளை எடுத்துக் காட்டவில்லையா? அரசும் அரசியலும் குடிமக்கள் வாழ்க்கையும் அந்தக் காலத்தில் எப்படி நடந்துள்ளன என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியாகத் திருவேங்கடம் பிள்ளை குறிப்பிடவில்லையா?

5. 11. நாட்குறிப்பேட்டாளர் தரும் வேறு சில தகவல்களின்படிக் கொழும்பிலே கண்டி ராசாவுக்கும் ஹாலந்துக்காரர்களுக்கும் நடந்த சண்டையில் கண்டிராசாவுக்கு ஆதரவாகவும், ஹாலந்துக்கு எதிராகவும் அந்நாளைய காலனி அரசு செயல்பட்டு, சிந்தாதிரிப் பேட்டையில் உள்ள 300 கைதிகளை அந்த யுத்தத்துக்குத் தயார் செய்து அனுப்பியுள்ளது. கண்டிராசாதாம் இந்தப் போரிலே வெற்றிபெறத் தஞ்சாவூர் ராஜாவுக்குத் தன் மாமனைத் தூது அனுப்பி, காயல், தூத்துக்குடி, மன்னார், நாகை இவ்விடங்களிலே டச்சுக்காரர்களுக்கு எதிராகக் கலகம் விளைவிக்க வேண்டிக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

5. 12. தஞ்சை மன்னருக்கும் நவாப் முகமதலிக்கும் சமாதானப் பேச்சு நடைபெற்றதாகவும் அப்போது தஞ்சை மன்னர் அவரிடம் சமாதானமாகப் போக ரூபாய் பத்து இலட்சம் கொடுப்பதாக ஒப்புதல் தெரிவித்தார் என்றாலும் தாம் சண்டைக்குத் தயாராக இருப்பதாகவும், தஞ்சைப் பகுதியில் கொள்ளை அடித்தால் ஆற்காடு சுபா மற்றும் மைசூர்ச் சீமை வரை தாங்களும் கொள்ளையிடுவோம் என்று தஞ்சை ராஜா எச்சரித்ததாகவும் நாட்குறிப்பேட்டாளர் குறிப்பிட்டுள்ளார். தஞ்சை மன்னர் பிரதாப் சிங்கிற்கு, சென்னை கவர்னர் பிக்காட்டு வெகு தினசுகளாகக் கெடியாரம் முதலிய விலை உயர்ந்த பரிசுகள் ஒரு பல்லாக்கிலும் இருபது பேர் அப்பல்லக்குடன் சென்றதாகவும் கவர்னர் பிகாட்டும் உடன் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஒரு பீரங்கியைத் தஞ்சையிலிருந்து 24 ஏர் மாடுகளுடன் கட்டி இழுத்துக் கொண்டு சென்னை சென்றதாக நாட்குறிப்பேட்டாளர் குறிப்பிட்டுள்ளார்.

5. 13. முகமது யூசுப்கான் ஆங்கிலேயர்களையும், நவாப் முகமதலியையும் எதிர்த்துக் கொண்டு மதுரையில் பிரஞ்சுக் கொடியை ஏற்றி, இவர்களுக்கு எதிராகப் போர் தொடுத்த நாட்களிலே, நாகப்பட்டினம் முதலிய இடங்களில் துப்பாக்கி, பீரங்கிக் குண்டு, ஈயம், கெந்தகம் இவைகளை வாங்கி நாகூரில் சேர்த்து, அங்கிருந்து அதிராம்பட்டினத்துக்குப் படகில் எடுத்துச் சென்று தரை வழியாக மதுரையில் சேர்க்க முயற்சித்தது பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டு, இந்த ஏற்பாடுகளை அவ்விடமிருந்த அமுல்தாரர் கனகசபை முதலியார் கண்டு, யூசப்கான் இங்கிலீசுக்கார மனுஷனாச்சே இவன் சத்துருக்களைச் சேர்ந்தவனாச்சுதே, என்று அவைகளை ஏற்ற விடாமல், தஞ்சை மன்னருக்கு எழுதியனுப்பியதாக நாட்குறிப்பேட்டாளர் குறிப்பிட்டுள்ளார். யூசப்கான், ஆங்கிலேயர் மற்றும் நவாப் முகமதலிக்குத் தெரியாமலே அவர்களைச் சார்ந்தவனாக் நடித்துக் கொண்டே போருக்கான ஏற்பாடுகளைச் செய்தான். கிழக்கிந்தியக் கம்பெனி ஆவணங்களின்படி இது சரியான தகவலாகவேயுள்ளது. இருப்பினும் மதுரையில் இவன் வெள்ளையரை எதிர்த்து முழுப்போர் தொடங்குவதற்கு முன்பாக, இவனது ரகசியம் வெளிப்பட்டு விடுகிறது. இதனால் தஞ்சை மன்னர் இவனுக்கு முன்பு செய்த உதவிகளை நிறுத்திக் கொண்டார் என்பது வரலாறு.

5. 14. மேலும் ஒரு தகவலின்படித் தஞ்சை மன்னர் முன்வாக்களித்தபடி

ஆங்கிலேயர்களுக்கும் நவாபுக்கும் ரூ. இருபது இலட்சம் கொடுத்துச் சமாதானத்தைப் பெற்றுக் கொண்டதாகவும் நாகப்பட்டினத்திலிருந்து பவழத் தீவுகள் என்றழைக்கப்பட்ட மும்பைத் துறைமுகத்துக்குக் கப்பல்களில் நமது நாட்டுச் சரக்குகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் இப்படிப் பலப்பலச் செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார் நாட்குறிப்பேட்டாளர்.

6. 0. முடிவுரை

6. 1. பண்டைய ஆவணங்கள் நமது பண்பாட்டுக் கருவிகளாகும். அவைகளை மதிக்கவும், பாதுகாக்கவும், பின் பயன்படுத்தவும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்புகளை யார் ஆய்வு செய்தார்களோ தெரியாது. ஆனால் அவற்றில் ஒன்றுமில்லை என்று ஒரு பத்திரிகைச் செய்தியுள்ளது. இதன் விளைவு என்ன வென்றால், இந்த ஏடுகளை யாரும் தீண்டப்போவதில்லை என்பதே; இதன் முடிவு இந்த ஆவணம் வறிதே கிடந்து ஒரு நாள் அழிந்து போகும். ஆனந்தரங்கர் நாட்குறிப்புகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடப் பட்டதால் அவைகள் இக்கதியை அடையவில்லை. அவைகளும் தமிழிலே மட்டும் இருந்திருந்தால், யாரும் அவற்றைப் படித்து விமர்சிக்க மாட்டார்கள். நல்ல வேளையாக ஆங்கிலேயர்கள் செய்த முயற்சியின் பயனாக ஆனந்தரங்கரின் நாட்குறிப்புகள் நற்கதி பெற்று விட்டன. இதைப் போன்றே திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்புகளும் நற்கதி அடைய வேண்டும்.

□

துரை. லோகநாதன்
தமிழ்த்துறை
ஸ்ரீ கா. சு. சு. கலைக்கல்லூரி
திருப்பனந்தாள்

திருக்குறள் உரைப்பதிப்பு

'ஓலைச்சுவடிகளும் கையெழுத்துப் பிரதிகளும்' ஆய்வுப் பேழைகளில் போற்றி நாளும் பாதுகாக்கப் பெறவேண்டியவை. 'சபை நடுவே நீட்டோலை வாசியா நின்றானை......' என்னும் தொடர்க் கருத்துக்கள் எண்ணத்தக்கவை.

அச்சுக்கோப்பு வாராத வேளையில் அறிஞர் பெருமக்கள், புலவர்கள் ஓயாது கற்றனர்; சிந்தித்தவற்றை ஓலைச்சுவடிகளிலும் கையெழுத்துப் பிரதிகளிலும் எழுதி வைத்தனர். இத்தகையோர் கூரிய அறிவு, நிரம்பிய கல்வி கேள்வி, அரிய ஆராய்ச்சித்திறன், இனிய மக்கட்பண்பு உடையோர்களாய் இலங்கினர் என்பதும் வெள்ளிடை. ஓலைச்சுவடியும் பிரதிகளும் தரும் கருத்துக்கள் நேரில் 'வல்லார் வாய்க் கேட்டுணர்தலையொக்கும்'.

அகத்தியர், கபிலர், பரணர், நக்கீரர், ஔவையார், திருவள்ளுவர் போன்ற ஓலைச்சுவடி தொடர்புடையாரை என்றென்றும் தமிழ் நெஞ்சங்கள் மறவா. 'சீத்தலைச் சாத்தனார்' போன்றவர்களையும் மறக்கவியலாது.

செய்யுட்களும், உரைக் கருத்துக்களும் பண்டு ஓலைச்சுவடியிலேயே அமைந்துள்ளன செங்கோலோச்சிய மன்னர்களும் புலவர்களை மதித்துப் போற்றியுள்ளனர். சிதைவுற்ற நற்கருத்துக்களை மறுபதிப்பு நாம் செய்வது போலத் தக்கவர்களைக் கொண்டு மறு ஓலைச்சுவடியில் எழுதச் செய்தனர். இடைக்காலத்திலும் இம்முறை பின்பற்றப் பெற்றமையை 'நன்றாகத் தம்பிரான் தோழன் எழுதி முகிந்தேன்' என்னும் திருக்குறள் ஓலைச்சுவடிக் கருத்துக்கள் மெய்ப்பிக்கும்.

"திருக்குறள் உரைப்பதிப்பில் ஓலைச்சுவடியும் கையெழுத்துப் பிரதியும்" இடம்பெற்றுள்ள பாங்கை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பழமையைப் போற்றும் சான்றோர்கள்

ஓலைச்சுவடி மற்றும் கையெழுத்துப் பிரதியின் மகிமையைத் தமிழ் நெஞ்சங்கள் மறவாது நாளும் உள்ள வேண்டும் எனும் பேரவாவுடன், தேடித் தொகுத்து உயிர் ஊட்டியவர்கள் ஏராளம். 'செந்தமிழ்ப் பத்திரிகை'யின் முதன்மை ஆசிரியர் 'இராகவ ஐயங்கார்' ஆவார், இம்மாதப் பத்திரிகையின் உதவி ஆசிரியர் 'மு. இராகவ ஐயங்கார்' ஆவார்.

சுமார் 40 ஆண்டுகளின் முயற்சியில் உருவானது 'செந்தமிழ்ப் பத்திரிகை' தமிழ்க் கல்வியிலும் தமிழாராய்ச்சியிலும் பேரவாக் கொண்ட தமிழ் மக்கட்கு உறுதுணையாய் நின்றது இப்பத்திரிகையே!

தமிழ்ப்பணி யாற்றும் பெரும் முயற்சியின் பயனாகத் தமிழ்க் கல்வி புத்துயிர் பெறத் தொடங்கியது. பழமையைத் தேடும் முயற்சி கையாளப் பெற்றது மதுரையம் பெரும்பதியிலே ஸ்ரீ பாண்டித்துரைத் தேவரவர்கள் 'தமிழ்ச் சங்கம்' நிறுவினார். தமிழ் நாட்டின் அரிய நூல்களைத் தொகுக்கப் 'பாண்டியன் புத்தகாலயம்' ஒன்றும் நிலைபெற்றது.

அச்சில் வாராத தமிழ் நூல்கள் நூற்றுக்கணக்காக இப்புத்தகாலயத்தில் தொகுக்கப் பெற்றன. இந்நிலையில்தான் சங்கச் செய்திகள் மற்றும் தமிழ்க் கல்வியைப் பரப்பச் 'செந்தமிழ்' மாதப் பத்திரிகையொன்றும் பிரசுரிக்கப் பெற்றது.

சதாவதானம் முத்துஸ்வாமி ஐயங்காரின் சகோதரியார் திருப்பெயர் 'பத்மாஸனி' அம்மாள். இவ்வம்மையின் திருக்குமாரரே மகாவித்துவான் ரா. இராகவ ஐயங்கார். இவ்வம்மையார் பாண்டித்துரைத் தேவர்க்கும் தமிழாசிரியரே.

தமிழ் நாட்டின் பற்பலவிடங்கட்கும் சென்று அவர்களுடைய முன்னோர்கள் ஈட்டி வைத்த அரும்பெறற் றமிழ்ச் செல்வங்களைப் பெற்றுப் பாண்டியன் புத்தகச் சாலையில் சேமித்து வைத்தற்கு அறிஞர்கள் முயன்று வந்தனர்: ஆய்விற்குரிய நற்செய்திகளை இவர்கள் தாமே தேடிக் கொண்டனர். இவ்வாறு. இத்தகு சான்றோர்கள் இலக்கண இலக்கிய ஆராய்ச்சிக்குத் துணை நின்றமையை நாம் மறக்கவியலாது.

பாதுகாப்புப் பெட்டகம்

மகாவித்துவான் பாஷா கவிசேகரர் ஸ்ரீ ரா. இராகவ ஐயங்கார் 5-3-1906, 17-9-1937இல் எழுதிய கடிதங்களும் மற்றும் ரா. ராகவ ஐயங்கார் நல்கிய பரிப்பெருமாள் உரை கையெழுத்துப் பிரதிகளும் காலிங்கர் உரை அடங்கிய ஓலை மற்றும் ஏட்டுச் சுவடிகளும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இன்றளவும் உள்ளன. அதனை நான் அங்குப் பயிலும் காலத்தில் 1978-79இல் நேரில் கண்ணுற்றுள்ளேன்.

பாதுகாப்பதில் வல்லமை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் நூலகமும் எனலாம் திருக்குறள் உரையாசிரியர் காலிங்கர் உரை அடங்கிய ஓலைச்சுவடியும், பரிப்பெருமாள் உரையெழுதப்பெற்ற, காகிதக் கையெழுத்துப் பிரதிகளும் பாதுகாப்பாய் இன்றும் உள்ளமை செட்டிநாட்டரசரின் பெருமைக்கு மேலும் அரண் சேர்ப்பனவாகும்.

ஆய்வுப்பணிகள்

காலஞ்சென்ற கல்வெட்டாராய்ச்சிப் புலவர் கே. எம். வேங்கடராமையா அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1978-79இல் திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவில் பரிப்பெருமாள் உரையடங்கிய கையெழுத்துப் பிரதியை ஆய்வு செய்து நூல் படைத்துள்ளார் என்பதை ஆய்வர் உணர்வர்.

1978-79இல் அடியேனும் எம். ஃபில். (தமிழ்) ஆய்விற்கென்று 'காலிங்கர் உரையடங்கிய ஓலைச்சுவடியை' நிழற்படம் எடுத்து ஆய்வேடும் சமர்ப்பித்துள்ளேன். அது 1981இல் 'திருக்குறள் காலிங்கர் உரை' முதற்பதிப்பு நூலாய் வந்துள்ளது.

20ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்கு முன்பு, பலநூறு ஆண்டுகள் ஓலைச்சுவடியிலேயே காலிங்கர் உரை இருந்து வந்துள்ளது

ஓலைச்சுவடியின் துணைகொண்டு 'பாடபேதங்களையும்', 'உரைக் கருத்துக்களையும்' கண்ணுறுகையில் பதின்மர் உரைகளில் காலிங்கர் உரை பரிமேலழகர்க்கும் பரிப்பெருமாள் உரைக்கும் முந்தையதாகவும் மணக்குடவர் உரைக்குப் பிந்தைய உரையாகவும் உள்ளது உணரவியலுகின்றது.

ஓலைச்சுவடி மிகவும் சிதைந்த நிலையில் உள்ளதால் இனிமேல் இதனைப் பார்க்கவியலாமல் போய்விடுமோ என்றெண்ணி எனது ஆய்வின்போது நிழற்படமெடுக்க வேண்டிய சூழ்நிலை (ஆர். டி. வேலு ஸ்டுடியோ, சிதம்பரம்) ஏற்பட்டது. சிதைவுறா ஓலைச்சுவடியொன்று கிடைக்குமேயானால் மணக்குடவர், பரிப்பெருமாள், பரிமேலழகர் உரைகள் போல 'அறம்-பொருள்-இன்பம்' என்ற இயல் முறை வைப்பில் காலிங்கர் உரையும் முழுமையாக வெளிவரப் பேருதவியாய் அமையும்

உரைவளம் - உரைக்கொத்துக்களில் காணப்பெறும் 'காலிங்கர் உரை' இதுதான் என்பது உறுதியாய் ஏற்கவியலாத நிலையும் ஏற்படுகின்றது; ஏனெனில், காலிங்கர் நடை, புலமை, பிண்டப்பொழிப்பு, அதிகார வைப்பு முறை - இவைகளில் தனித்தனி வேறுபாடுகள் ஏனைய ஒன்பது மணக்குடவர், தருமர், தாமத்தர், நிச்சர், பருதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள் உரைகளிலும் வேறுபட்டுள்ளன. காலிங்கரின் உரைநயம் தனித்தன்மை வாய்ந்தமையை ஓலைச்சுவடியையும் எனது நூலையும் ஒப்பிட்டால் அறியலாம்.

வேறுபாடு

ஓலைச்சுவடியில் 'காலிங்கர்' என்றும், இதனை அடிப்படையாகக் கொண்டு தி. பொ. பழனியப்பபிள்ளை பதிப்பித்த 'காமத்துப்பால், பொருட்பால்' ஆகிய பதிப்பிலும், திருப்பனந்தாள் காசித் திருமடத்தின் அதிபர் அருளாணையின்வண்ணம் வெளிவந்துற்ற 'உரைக்கொத்தி'லும் 'காலிங்கர்' என்றே பாடம் அமைந்துள்ளது. ஓலைச்சுவடியின் பாடமே சரியானதாக அமையலாம் என்பதையும் இக்கட்டுரையில் விளக்கியுள்ளேன்.

ஆயின் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகரால் பதிப்பிக்கப்பெற்ற 'திருக்குறள் உரைவளத்'திலும் சென்னைப் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதியினரால் வெளிவந்த 'திருக்குறள் யாப்பமைதியும் பாடவேறுபாடும்' (1971) என்ற நூலிலும் 'காலிங்கர்' என்றே பாடம் காணலாம்; இப்பாடவேறுபாடு குறித்து ஆய்வு செய்ய நேரிடுகின்றது.

வரலாறு

மு. இராகவ ஐயங்காரின் 'சாஸனத் தமிழ்க்கவி சரிதம்' (சென்னை 1937) - 'காலிங்கராயன்' என்ற பெயர்கள் அக்காலத்தில் பெரிதும் புலவர்களுக்கு வழங்கப்பட்டமையை வரலாறு காட்டும் என்கிறது.

ஓலைச்சுவடி உணர்த்தும் 'காலிங்கன்' பெயர்க்காரணம் வைத்து வரலாற்றினை நாம் ஓரளவு சிந்திக்கலாம் :-

தமிழகத்திற்கும் கலிங்கத்திற்கும் சங்க காலத்திலிருந்தே (கி. மு. 3க்கும் கி. பி. 2க்கும் இடைப்பட்ட) கடல்வழி வாணிப உறவு இருந்து வந்துள்ளது.

தமிழக 'வாணிகச் சாத்து' கி. மு. 3 முதல் கி. மு. 150 வரையில் கலிங்கத்திலேயே தங்கி வாணிபம் செய்துள்ளமையை 'ஹத்திகும்பர்' கல்வெட்டுச் சான்று பகரும்.

'கலிங்கம் என்னும் பருத்தி ஆடை' தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பெற்றது. இச்சொல் தமிழில் பொதுவாகத் துணியைக் குறிக்கப் பயன்பட்டது. "இக்கலிங்கம் போனால் என்ன. சொக்கலிங்கம் உண்டே துணை" என்ற தனிப்பாடல் அடியும் கலிங்கத்தின் செல்வாக்கை வலியுறுத்தும். 'கலிங்கப்போர் கி. பி. 1093-94இல் நடைபெற்றது மறிவோம்.

சிலம்பின் 23ஆவது காதை (கட்டுரை காதை) கோவலன் முற்பிறப்பில் 'கலிங்கநாட்டுச் சிங்கபுரத்தில் பரதன் என்னும் பெயருடையவனாய் இருந்தான்' என்கின்றது. இவ்வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த மொழியில் இலக்கியங்களும் படைக்கப் பெற்றுள்ளமை எண்ணலாம்.

எனவே ஓலைச்சுவடியில். 'காலிங்கன்' என்பதே சரியான பாடமாக ஏற்க வாய்ப்புள்ளது.

காலம்

'ஓலைச்சுவடி' மற்றும் 'கையெழுத்துப் பிரதி'களில் உரைகாரர்களின் வரலாறு தெரியவில்லை. கீழ்வரும் பகுதியால் ஓலைச்சுவடி எழுதப்பெற்ற காலத்தை ஒருவாறு ஊகித்து உணரலாம் :-

> "நன்றாக. வடிவே துணை. வேணுவனேசன் துணை. குருபாதம். திருவள்ளுவர் முப்பாலும் எழுதிமுகிந்தது; பிள்ளை பட்டமுடையா பிள்ளையவர்களுக்குத் தீர்க்காயித்து உண்டாக வேணுமென்று எழுதி முகிந்தது. காலிங்கருடைய உரை எழுதினது 867 புரசொற்பதி வருடம் பங்குனி மாதம் 5உ எழுதிமுகிந்தது. நன்றாக. தம்பிரான் தோழன் எழுதிமுகிந்தேன். நன்றாக"

என்றுள்ளது. இதனால் ஓலைச்சுவடி எழுதப்பெற்ற காலம் 867 புறசொற்பதி வருடம் பங்குனி மாதம் ஐந்தாம் தேதி என அறியலாம்.

மேலும் சுவடியில் 'வடிவே துணை', 'வேணுவனேசன் துணை' என்றிருப்பதால் இவ்வேடு, திருநெல்வேலிப் பக்கத்தது ஆகலாம். அப்பகுதியிலிருந்து கிடைக்கும் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும் குறிப்பிடும் காலம் 'கொல்லம்' ஆண்டாதல் பெரும்பான்மை.

'கொல்லம்' ஆண்டுடன் 625 சேர்ப்பின் (867 + 625) ஆங்கில ஆண்டு வருமாகையால் இவ்வேடு கி. பி 1492இல் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதமுடிகிறது.

மேலும் வரலாற்றடிப்படையில் நோக்கினால் மைசூர்ப் பகுதியிலிருந்து சமணர்கள் தமிழ் நாட்டில் சமுத்திரகுப்தன் காலத்திலிருந்து குடியேறியுள்ளனர். அவ்வகையில் கலிங்க நாட்டிலிருந்து 'காலிங்கர்' குடியேறிய பரம்பரையினரோ எனவும் சிந்திக்க வாய்ப்பேற்படுகின்றது.

பல்கலைக்கழகங்களின் பங்கு

(அ) **சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்**தில்தான் ரா. இராகவ ஐயங்காரால் அளிக்கப்பெற்ற காலிங்கர் ஓலைச்சுவடியும், பரிப்பெருமாள் உரையடங்கிய கையெழுத்துப் பிரதிகளும் (எண் 4455 - ஓலைச்சுவடி; 012 கையெழுத்து) இன்றளவும் நூலகத்தில் உள்ளன

காமத்துப்பால் உரைக்கருத்துக்கள் மட்டுமே முழுமையாய் உள்ளன. 'அறத்துப்பால்' குறைபாடுடையதாய் உள்ளது; பொருட்பால் ஓரளவு நிறைவாய் உள்ளது

எனவேதான் ஏனைய பதிப்புகள் போலக் காலிங்கர் உரை மட்டும் 'அறத்துப்பால் - பொருட்பால் - காமத்துப்பால்' என்ற முறையில் பதிப்பிக்க இடர்ப்பாடு அளிக்கின்றது.

'காமத்துப்பால்' முதற்கண் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அடுத்து, 'பொருட்பால் அறத்துப்பால் குறைப் பதிப்புடன்' வெளிவந்துள்ளது. காலிங்கர் உரையடங்கிய ஓலைச்சுவடியோ - கையெழுத்துப் பிரதியோ முழுமையாகக் கிடைத்தால்தான், காலிங்கர் மணியுரையை முழுமையாய் நாம் தமிழன்னையின் திருவடிகட்குக் காணிக்கையாக்கலாம்.

(ஆ) **திருப்பதி திருவேங்கடேசுவரன் கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகத்**தில் பொ. பழனியப்பபிள்ளை பணியாற்றியபோது அவரது முயற்சியால் திருக்குறள் - காமத்துப்பால் காலிங்கர் உரையும் - பரிப்பெருமாள் உரையும் ஒருங்கியைந்து 1945இல் வெளிவரலாயிற்று. 1948இல் 'பொருட்பால், அறத்துப்பால்' குறைப் பதிப்புடன் அவரால் வந்துற்றது.

இவற்றுள் காலிங்கர் உரைப் பிரதியில் அறத்துப்பால் முதல் தொடங்கி 31ஆம் அதிகாரம் ஆகிய வெகுளாமையில் - நகையுமுவகையுங் கொல்லுஞ் சினத்தின் என்ற குறள் வரையுள்ள 304 பாக்களுக்குரிய உரையுள்ள ஏடுகள் சுவடியில் காணப்படவில்லை. எஞ்சிய அறத்துப்பாற் பொருட்பாற் பகுதிகளிலும் உள்ள உரைதானும் செல்லரிப்புண்டமையால் பலவிடத்தும் உரைப்பொருள்

உணரவியலாதவாறு சிதைந்தும் குறைந்தும் உள்ளது

(இ) அடுத்துத் **தருமபுர ஆதீனம் கீழ்த்திசைப் பல்கலைக்கல்லூரி** - தருமபுரம் தமிழ்த்துறைத் தலைவர் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் 'திருக்குறள் உரைவளம் காமத்துப்பாலை' 25ஆவது மகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆணையின்வண்ணம் ஜன்ம நட்சத்திர அணிமலராக 28-10-1952இல் வெளியிட்டுள்ளனர். இவ்வுரைப் பதிப்பில் மணக்குடவர், பரிமேலழகர், பருதி, காலிங்கர், பரிப்பெருமாள் முதலான ஐவரின் உரையைமட்டும் ஆய்ந்துள்ளமையும் தெரிய வருகின்றது.

இப்பதிப்பு வெளிவர ஒப்புநோக்கக் கிடைத்த ஏடுகள் பலவாகும் :-

1. பொ. பழனியப்பபிள்ளை பதிப்பித்த பரிப்பெருமாள் - காலிங்கர் உரைப் பிரதிகள்
2. வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் பரிதியார் உரை 1
3. வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டரின் காலிங்கர் உரை 1
4. இலக்கண விளக்கம் சோமசுந்தர தேசிகர் வீட்டுக் கையெழுத்துப் பிரதி 1. - இதனைத் தேசிகர்க்கு ஈரோட்டு அறிஞர் ஏ. கல்யாணசுந்தர தேசிகர் அவர்கள் அளித்துள்ளார்
5. சைவ எல்லப்ப நாவலர் மாளிகைப் பிரதி - பரிமேலழகர் உரை 1
6. தருமபுர ஆதீனத்துப் புத்தகசாலைப் பிரதி பரிமேலழகர் உரை 1

முதலானவற்றைச் சுட்டலாம்.

மேலும் விடுபட்டதும் சிதைந்ததுமான அறத்துப்பால் பகுதி முழுமையும் ஆதீன வெளியீட்டில் வந்துள்ளன. 9-9-1951இல் திருக்குறள் உரைவளம் - பொருட்பால் - தெய்வசிகாமணிக் கவுண்டர் அளித்த ஏட்டின் உதவியால் வந்துற்றது.

(ஈ) **திருப்பனந்தாள் திருமடம்** : தருமபுரம் ஆதீனத்தின் உரை விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு திருமடத்தின் அதிபரின் அருளாணையின்வண்ணம் 1959இல் சில திருத்தங்களுடன் (கே. எம். வேங்கடராமையா - பட்டுசாமி ஓதுவார் ஆங்கில உரைக் குறிப்புகளுடன்) 'திருக்குறள் உரைக்கொத்து - பொருட்பால்' வெளிவந்துற்றது.

அடுத்து, 1969இல் திருப்பனந்தாள் திருமடத்ததிபரின் அருளாணைவண்ணம் 'திருக்குறள் உரைக்கொத்து - அறத்துப்பால்' வெளிவந்துற்றது.

இவ்வாறு திருக்குறள் உரைப்பதிப்பிற்கு ஓலைச்சுவடி - மற்றும் கையெழுத்துப் பிரதிகளாம் ஏடுகளையும் தமிழாக்கத்திற்கு அளித்துதவிய தமிழ் நெஞ்சங்களை மறக்கவியலாது. காலிங்கர் உரையடங்கிய ஓலைச்சுவடியை (மீண்டும்) நிழற்படம் எடுத்து, இக்கட்டுரைப் பார்வையாளர்கள் கண்டு மகிழ்வுறும்வண்ணம் இணைத்துள்ளேன். தொன்மையான இலக்கிய இலக்கணக் குறிப்புகள் அடங்கிய ஏட்டுச் சுவடிகளையும் - கையெழுத்துப் பிரதிகளையும் நம்மவர்கள் மறவாது போற்றிப் பாதுகாப்பார்களாக! இச்சிந்தனைக் களங்களை ஏற்படுத்திச் சிந்திக்கச் செய்த தமிழ்ப் பல்கலைக்கழகத்தினை வணங்கி மகிழ்வோம்!

□



வி. மி. ஞானப்பிரகாசம். சே. ச.
மதுரை

பேராயர் லெயோனார்டு அவர்களின் நாட்குறிப்பு

முன்னுரை

ஒவ்வொரு நாளும் எழுதப்படும் நாட்குறிப்பு, எழுதுகிறவரின் செயல்களை, சிந்தனைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இது பிறருக்காக எழுதப்படாமல், எழுதுபவருக்காகவே எழுதப்பட்டது. எனவே இது ஒளிவு மறைவு இல்லாமல் வெளிப்படையாகச் சொல்லும் பண்பு கொண்டது.

வெளிநாட்டில், மறுமலர்ச்சிக் காலத்தில் (Renaissance) தனி மனித மாண்பு வலியுறுத்தப்பட்ட போது, தனி ஒருவரின் எண்ணங்களை, உணர்ச்சிகளை எடுத்துரைக்கும் நாட்குறிப்பு மலரத் தொடங்கியது. தனி ஒருவரின் எண்ணங்களை இது கொண்டிருந்தாலும், இது சமூக வரலாறு, அரசியல் வரலாறு எழுதவும் உதவி செய்துள்ளது.

நாட்குறிப்பின் வரலாறு

1409இல் தொடங்கி 1431 வரை நடந்த நிகழ்ச்சிகளைக் கொண்ட 'JOURNAL d'un BOURGEOIS DE PARIS' என்ற நாட்குறிப்பும், பிறகு வேறொருவரால் தொடரப்பட்டு, 1490 வரை எழுதப்பட்ட நாட்குறிப்பும், 6ஆம், 7ஆம் சார்லசின் ஆட்சி வரலாறு எழுத உதவின.

Memorials of the English Affairs என்ற நாட்குறிப்பு, வழக்கறிஞரும் பாராளுமன்றத்தினருமான புல்ஸ்ட்ரோடு வைப்லாக் (1605 - 75) என்பவரால் எழுதப்பட்டது. பிரஞ்சுக்காரரான மார்குவிஸ் தெ டாங்கோ (1618 - 1720) எழுதின நாட்குறிப்பு வரலாற்று அறிவுக்குத் துணை புரிந்துள்ளது.

ஜான் எவலின் சாமுவேல் எழுதிய நாட்குறிப்பு 1699ஆம் ஆண்டு சனவரி முதல் தேதி தொடங்கி மே 31 வரை நடந்த நிகழ்வுகளை உள்ளடக்கியது. அவருடைய குறைகளையும் பலவீனங்களையும் சுட்டுவதோடு அன்றைய இலண்டன் வாழ்வு நீதி மன்றத்தில் திரைப்படத்தில், அவர் வீட்டில், அவரது கப்பல் துறை அலுவலகத்தில் வெளிப்பட்ட விதத்தைக் காட்டுகிறது

18ஆம் நூற்றாண்டில் ஜோனத்தன் ஸ்வீட் என்பவர் எழுதிய நாட்குறிப்பு, 1710 தொடங்கி 1713 வரை நடந்த நிகழ்வுகளைக் கொண்டது: த ஜர்னல் ட்டு ஸ்டெல்லா

என்ற தலைப்பில் அச்சிடப்பட்டது. இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில், தொடர்கதை எழுத்தாளர் வானி பர்னி எழுதிய நாட்குறிப்பு 1842 - 46இல் வெளியிடப்பட்டது. ஜேம்ஸ் பாஸ்வல்டு எழுதின 'ஜர்னல் ஆவ் எ ட்டுர் ட்டு த ஹெபட்ரிடீஸ்' (1785) மிகவும் விரிவானது; ஆசிரியர் காலத்திலேயே அச்சிடப்பட்டது.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்குறிப்பின்மீது ஆர்வம் வளர்ந்தது. இக்காலத்தில் பெப்பி என்பவர் நாட்குறிப்புப் போன்றவை வெளியிடப்பட்டன. 1890இல் சர் வால்ட்டர் ஸ்காட்டின் நாட்குறிப்பு அச்சேறியது. இது இலக்கிய நயம் மிகுந்தது டாரதி வர்ட்ஸ்வர்த் எழுதிய நாட்குறிப்பு அவர் இறந்த பின் (1855) அச்சிடப்பட்டது. ஹென்றிரி கிராப் ராபின்சன் எழுதிய நாட்குறிப்பு (1775 - 1867) 1869இல் அச்சேறியது. இது பல இலக்கிய மேதைகளுடைய தொடர்பைக் காட்டுகின்றது.

ரஷ்யக் கலைஞர் மரி பாஸ்கிரிட் செவ் (1860 - 84) எழுதிய நாட்குறிப்பு அவர் இறந்த பின் அச்சிடப்பட்டது; 1877இல் அது புதுக் கிளர்ச்சியை உண்டு பண்ணியது அது போலவே 1888இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட கொன்கூர்ட் சகோதரர்களின் நாட்குறிப்பு பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியது.

20ஆம் நூற்றாண்டில் 1927இல் அச்சிடப்பட்ட ஜர்னல் ஆப் காத்தரின் மான்ஸ்வீல்டு, இரண்டு பகுதி கொண்ட ஜர்னல் ஆப் ஆந்திரே கைட் (1939, 1954) ஐந்து பகுதிகள் கொண்ட டயரி ஆப் விர்ஜினியா வுல்ப் (1977 - 84) போன்றவை குறிப்பிடத்தக்கவை.

தமிழ் நாட்டில் ஆனந்தரங்கம் பிள்ளை எழுதிய நாட்குறிப்பு வரலாற்றுச் சிறப்புடையது தமிழில் 7 தொகுதிகளாக இருந்த இந்த நாட்குறிப்பு, அண்மையில் ஆங்கிலத்தில் 12 தொகுதிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

கிறித்தவ மறைத்தொண்டர்களில் பிரஞ்சு நாட்டிலிருந்து வந்தவர்களில் பெரும்பாலோர் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் உடையவர்கள். அவர்களில் ஒருவர் மேதகு பேராயர் பீட்டர் லெயோனார்டு என்பவர்.

வாழ்க்கைக் குறிப்பு

லெயோனார்டு 1887இல் லக்சம்பர்க் நாட்டில் பிறந்தார். தந்தை பிரஞ்சுக்காரர், தாய் பெல்ஜியம் நாட்டார். இயேசு சபையின் பயிற்சி எல்லாம் பெற்றுக் குருவான பின், செண்பகனூரில் 4 ஆண்டுகள் இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியராகவும், 4 ஆண்டுகள் மெய்யியல் கற்பிக்கும் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். அதன்பின் திருச்சி, ஆயர் கோவிலில் பங்குத் தந்தையாக ஈராண்டும், திருச்சி தூய பவுல் இறையியல் கல்லூரியில் ஈராண்டு தலைவராகவும் உழைத்த பின், 1936இல் திருச்சி மறை மாவட்டத்தின் ஆயரானார். 1938இல் திருச்சியிலிருந்து மதுரை தனி மறை மாவட்டமாகப் பிரிக்கப்பட்ட போது, இவர் மதுரையின் பேராயரானார். அதிலிருந்து 1936 வரை அவரது ஆயர் பணி நீடித்தது

நாட்குறிப்புகள்

செண்பகனூரில் உள்ள இயேசு சபையாரின் அருஞ்சுவடிக் காப்பகத்தில்

இருக்கும் இவரது நாட்குறிப்புகள் ஐரோப்பியப் பயணத்தின் போது எழுதப் பட்டவை. அவை பின்வருமாறு :

1) 1938 செப்டம்பர் தொடங்கி 1939 சூலை வரை

2) 1950

3) 1962 (இரண்டாம் வத்திக்கான் சங்கம்)

4) 1963 (இரண்டாம் வத்திக்கான் சங்கம்)

5) 1964 (இரண்டாம் வத்திக்கான் சங்கம்)

6) 1965 (இரண்டாம் வத்திக்கான் சங்கம்)

ஏன் எழுதப்பட்டது

பிரஞ்சு நாட்டு மறைத்தொண்டர்களின் இயல்பான வழக்கம், ஒவ்வொரு நாளும் அன்று நடந்த நிகழ்ச்சிகளை அப்படியே எழுதி வைப்பதாகும். இவ்வழக்கம் பிரஞ்சு ஆட்சியில் பணிபுரிந்த ஆனந்த ரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகளுக்கும் காரணமாய் இருந்திருக்கலாம்.

இயேசு சபையில் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் இடையே ஒற்றுமை உண்டாக்க, கடிதப் போக்குவரத்து ஒரு சிறந்த வழியாகக் கருதப்பட்டது. சபைத் தலைவருக்கு ஆண்டுக்கொருமுறை எல்லா மாநிலத் தலைவர்களும் நிகழ்ச்சிகளின் அறிக்கை அனுப்ப வேண்டும். சில சமயங்களில் நான்கு மாதத்துக்கு ஒருமுறைகூடக் கடிதம் எழுத வேண்டியிருந்தது. மாநிலத் தலைவரின் பொதுவான கடிதத்துக்கு உதவியாக, ஒவ்வொரு இல்லத்திலும், நிறுவனத்திலும் நடந்த நிகழ்ச்சிகளை அந்தந்த இல்லத்தின், நிறுவனத்தின் தலைவர்கள் தெரிவிக்க வேண்டும். இந்த அறிக்கைக்கு அவர்கள் எழுதும் நாட்குறிப்புப் பெரும் உதவி. (The Constitution of the Society of Jesus, Translated by George E. Jauss S. J., The Institute of Jesuit Sources, St. Louis, U. S. A 1970, No. 629, 673 - 676).

கட்டுரையின் பொருள்

பேராயர் லெயோனார்டு பலமுறை ஐரோப்பாவிற்குப் பயணம் மேற்கொண்டார். அப்பயணங்களில் குறிப்பிடத்தக்கவை, 1962 தொடங்கி 1965 வரை உரோம் நகரில் நடந்த கத்தோலிக்க ஆயர்களின் கூட்டமாகும். இது 2ஆம் வத்திக்கான் சங்கம் என்று அழைக்கப்பட்டது.

இச்சங்கம் நடந்த நான்கு ஆண்டுகளின் போது பேராயர் லெயோனார்டு ஒவ்வொரு நாளும் நாட்குறிப்பு எழுதியுள்ளார். அவற்றில் 1963ஆம் ஆண்டு ஆகஸ்டு 12 தொடங்கி டிசம்பர் வரை நடந்த சங்க அமர்வுகளின்போது இவர் எழுதிய நாட்குறிப்புகள் இக்கட்டுரையின் பொருள் ஆகின்றன. இவை அழகான ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன.

இந்த நாட்குறிப்புகளிலிருந்து மூன்று வகைச் செய்திகளைக் கோடிட்டுக் காட்டலாம். ஒன்று வத்திக்கான் சங்கத்தில் எல்லா ஆயர்களும் சிந்தித்த முறை, முடிவுக்கு வந்த முறை, அடுத்து இந்திய ஆயர்கள், தமிழக ஆயர்கள் தமக்குள்

சந்தித்து, தம் நாட்டுப் பிரச்சினைகள்பற்றிச் சிந்தித்த முறை. மூன்றாவது, பேராயர் தம்மைப்பற்றி எழுதிய சில குறிப்புகள்.

1) வத்திக்கான் சங்கத்தின் முறை

கத்தோலிக்கத் திருச்சபை பாப்பரசர் என்ற ஒரு தலைவரைக் கொண்டு இயங்குகிறது. எந்த முக்கியமான முடிவுக்கும் இவரது இசைவு தேவை. எனவே 'கத்தோலிக்கத் திருச்சபை மக்களுக்கு அல்ல அதிகாரிகளுக்கே முதல் இடம் கொடுக்கிறது. இங்கு நடப்பது முடியாட்சி, குடியாட்சி அல்ல' என்ற குற்றச்சாட்டுக் கூறப்படுகிறது.

ஆயின், 2ஆம் வத்திக்கான் சங்கம் நடந்த முறை இக்குற்றச்சாட்டு உண்மைக்கு மாறானது என்பதைக் காட்டுகிறது. எடுத்துக்காட்டாக ஒக்டோபர் 1 ; 'திருச்சபை பற்றிய ஏட்டின் உள்ளடக்கம், அமைப்புப் பற்றிப் பேசினர். இதை வைத்துக் கொள்ளலாமா என்பது பற்றி வாக்கெடுப்பு நடந்தது. பெரும்பான்மையினர் 'ஆம்' என்றனர். சிலர் இதன் முதல் அதிகாரத்தில் சில சேர்க்கவும் சில நீக்கவும் வேண்டும் என்றனர்'.

ஒக்டோபர் 2 ; 'திருச்சபை பற்றிய ஏட்டின் ஒவ்வொரு வாக்கியமும் படித்துத் திருத்தப்பட்டது'.

ஒக்டோபர் 3 ; 'அதே தலைப்புப் பற்றிய விவாதம் நடந்தது. பிற்பகலில் இதே பொருள் பற்றி ஓர் இறையியல் வல்லுநருடைய உரை நிகழ்ந்தது'.

ஒக்டோபர் 4 ; 'திருச்சபை ஏட்டின் முதல் அதிகாரம் விவாதித்து முடிந்தது'.

டிசம்பர் 3 ; 'சங்கத்தில் பார்வையாளராக இருந்த ஒருவர் பேசினர்; சங்க அமர்வுகளில் பொது நிலையினர் பங்கு பெற அனுமதித்தற்குப் பாப்பரசருக்கு நன்றி கூறினர்'.

திசம்பர் 4 ; 'பூசைக்குப் பின் சங்கத்தின் பொதுச் செயலர் வழிபாடு பற்றிய ஏட்டின் சில பகுதிகளைப் படித்தார். வாக்கெடுப்பு நடந்தது. நான்கு பேரைத் தவிர மற்றவர்கள் ஏற்றுக் கொண்டனர். மக்கட் தொடர்பு சாதனம் பற்றிய ஏட்டின் சில பகுதிகள் படிக்கப்பட்டன. ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் ஏற்றுக் கொண்டனர்'.

'பிறகு இரண்டு ஏடுகளையும் பாப்பரசர் அங்கிகரித்தார்'.

இவற்றிலிருந்து வெளியாவது என்ன? கத்தோலிக்கத் திருச்சபை அதிகாரத்திற்கு முதலிடம் கொடுக்கிறது. ஆனால் இந்த அதிகாரம் பிறரைக் கலந்து கொள்ளும் அதிகாரம், மக்களுக்குப் பணிபுரியும் அதிகாரம் (not authority or freedom, but authority in the service of freedom. (Richard P. Mc Brien, Catholicism 3rd edition, U. S. A. P. 1190)

கிறித்தவ ஒற்றுமை

இச்சங்கத்தில் வெளியான மற்றொரு பண்பு கிறித்தவ ஒற்றுமையாகும்.

இதில் சீர்திருத்தச் சபையினர் பார்வையாளராக இருக்க அழைக்கப்பட்டனர்.

ஒக்டோபர் 17 : 'ஆபட் பட்லர் என்ற இங்கிலாந்து நாட்டு ஆயர் மரியா பற்றித் தயாரித்த ஏட்டைப் படித்தார். அது சீர்திருத்தச் சபையினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் அமைந்திருந்தது. இலத்தீன் அமெரிக்க ஆயர்கள் இதே பொருள் பற்றி வேறோர் ஏடு கொண்டு வந்திருந்தனர். இவர்கள் இங்கிலாந்து ஏட்டை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று எண்ணப்பட்டதால் சங்க அதிகாரிகள் அந்த இரண்டு ஏடுகளையும் இணைக்கும்படி ஆபட் பட்லரைக் கேட்டுக் கொண்டனர்'.

நவம்பர் 16 : 'கிறித்தவ ஒற்றுமை பற்றி விவாதம் நடந்தது. பொதுவாக எல்லாரும் இசைந்தனர். சிலர் ஐயம் தெரிவித்தனர்'.

டிசம்பர் 2 : கிறித்தவ ஒற்றுமை பற்றிய விவாதம் முடிந்தது. கர்தினால் பெயர். ஆயர்கள் இணில் ஒத்துழைப்பு நல்கியதற்கு நன்றி கூறினார்.

இவ்வாறு எல்லாரும் ஒன்றாயிருப்பார்களாக ! (யோவான் 17 21) என்ற இயேசுவின் வேண்டுதலுக்கிணங்க, 2ஆம் வத்திக்கான் சங்கம் கிறித்தவ ஒற்றுமைக்கு வழிவகுத்தது.

2) இந்திய, தமிழ் நாட்டுப் பிரச்சினை

எல்லாருக்கும் பொதுவான உணவு சமைக்கப்பட்டாலும் அது அவரவர் வயதுக்கும் உடல் நிலைக்கும் தகுந்தவாறுதான் ஏற்றுக் கொள்ளப்படும். 2ஆம் வத்திக்கான் சங்கக் கருத்துகள் ஒவ்வொரு நாட்டிற்கும் ஏற்றவாறு தழுவி அமைக்கப்பட வேண்டும்.

ஒக்டோபர் 4 : 'பிற்பகல். இந்திய ஆயர்கள் கூடினர். சங்க ஏடுகளின் கருத்தை இந்தியக் கண் கொண்டு பார்க்க வேண்டும். இதற்கு ஒவ்வொரு வியாழனும் மாலை 5 மணிக்கு நாம் கூட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதில் முடிந்தவரை ஒருமனத் தீர்மானம் வேண்டும். நம்மில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, நம் கருத்தைச் சங்கத்திற்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்'.

மேலும் இந்தியாவில் உள்ள எல்லாப் பகுதிகளும் ஒரேவிதப் பிரச்சினையைச் சந்திப்பதில்லை. எனவே பகுதி வாரியாகப் பிரதி நிதித்துவம் வேண்டும். எ. கா. (1) நிரந்தரத் திருத்தொண்டர் ஏற்படுத்துதல். இந்தியாவின் சில பகுதிகளுக்கு வேண்டியதாக இருக்கலாம். பிற பகுதிகளுக்கு வேண்டப்படாததாக இருக்கலாம். இதை அந்தந்தப் பகுதியின் பிரதிநிதி தெரிவிக்க வேண்டும்.

(2) 'மற்றொரு பொருள். இயேசுவின் தாய் மரியா பற்றிய சிந்தனை அல்லது கோட்பாடு. இது இந்தியாவின் எல்லாப் பகுதிகளுக்கும் ஏற்றதாகவே இருக்கும்'.

ஒக்டோபர் 6 : 'தந்தை அமலோற்பவதாஸ் புதிய திட்டம் ஒன்று கொண்டு வந்தார். மறைப்பணி நிலையம் ஒன்று தொடங்கி அதில் குருக்களும் ஆயர்களும் பயிற்சி பெற உதவலாம். இது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. திண்டிவனம் இதற்கு ஏற்ற இடம். அங்கு வேதியர்களின் பயிற்சிக்குத் தேவையான நூலகம். பிற

சாதனங்கள் உண்டு. இருவர் நிரந்தர ஆசிரியர்களாக நியமிக்கப்படலாம். மற்றவர்கள் பிற நிறுவனங்களிலிருந்து அழைக்கப்படலாம் என முடிவு செய்யப்பட்டது.

ஒக்டோபர் 10 : 'மாலை இந்திய ஆயர்கள் கூட்டம். அனைத்துலக நற்கருணை மாநாடு, 1964 திசம்பரில் இந்தியாவில் நடக்கும். இதற்கு வேண்டிய நிதி 40 அல்லது 50 லட்சம். கர்தினால் (சிரேசியஸ்) வெளி நாட்டு ஆயர்கள் பலரைச் சந்தித்து, உதவி கேட்கிறார். நாம் இந்தியாவில் நிதி திரட்ட முயலவேண்டும்'.

ஒக்டோபர் 11 : 'நான் தந்தை யா அ. லூர்து என்பவரைச் சந்தித்தேன். இந்தியத் திருச்சபையின் சிறப்புத் தேவைக்கு ஏற்ப நம் வழிபாட்டு முறையைத் தழுவி அமைத்தல் பற்றி ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்திருந்தார்'.

மதத்தின் கடமை கொள்கை போதித்து, எண்ணிக்கை பெருக்குவது மட்டுமல்ல, மக்கள் இம்மையில் நல்வாழ்வு வாழ உதவி செய்வதுமாகும். இந்திய ஆயர்கள் பங்களூரில் மருத்துவக் கல்லூரி தொடங்குவது பற்றி, ஒக்டோபர் 10இல் பேசினார். ஒக்டோபர் 17இல் கூடிய கூட்டத்தில் வட இந்தியாவில் சில இடங்களில் ஏற்பட்ட விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எல்லா ஆயர்களும் உதவி செய்ய இசைந்தனர். எல்லா ஆயர்கள் பெயரிலும் கர்தினால் சிராசியஸ் ரூ. 12, 000 கொடுத்து விட்டார். அதை மற்ற ஆயர்கள் பிறகு பகிர்ந்து கொள்வார்கள்.

'ஒக்டோபர் 30இல் இந்திய ஆயர்கள் ஒன்றாக இணைந்து பாப்பரசரைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றனர். இரவு 7 மணிக்கு நடந்த இந்த நிகழ்ச்சியில் பாப்பரசர் தம் உரையை ஆங்கிலத்தில் படித்தார். அடிக்கடி இத்தாலிய மொழியில் இடையிடையே பேசினார். அதைக் கர்தினால் சிராசியஸ் மொழி பெயர்த்தார். இந்தியா மாபெரும் நாடு, பல குலங்கள் இனங்கள் மதங்கள் கொண்ட நாடு. குறிப்பிடத்தக்க மறைப்பணி அங்குச் செய்யப்பட்டுள்ளது. அது இன்னும் வளர முயற்சி வேண்டும். மறைப் பணியாளர்களின் எண்ணிக்கை வளர்ந்து வருவது பாராட்டுக்குரிய எனப் பாப்பரசர் தம் உரையில் விவரித்துரைத்தார்'.

பிற கிறித்தவர்களோடு ஒன்றுபட்டு வாழ வேண்டிய கடமை இன்னும் அச்சமயத்தில் தெளிவாகவில்லை. அதற்கு ஓர் உதவி கிடைத்தது. நவம்பர் 21 'பிற்பகல் இந்திய ஆயர்கள் இயேசு சபையினரின் தலைமையகத்தில் கூடினர். கிறித்தவ ஒற்றுமை ஆணைக்குழுவின் தலைவர் கர்தினால் பெயா முதலில் பேசினார். பிறகு இறையியல் வல்லுநர் தந்தை பூம் கிறித்தவ ஒற்றுமையை விளக்கி, ஐயங்களைத் தீர்த்தார்'.

உரோமில் பேசி ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துகளை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

நவம்பர் 26 ; 'பிற்பகல் இந்திய ஆயர்கள் கூடி, வத்திக்கான் சங்க நடவடிக்கைகள், கருத்துகள் பற்றி மக்களுக்குத் தெரிவிக்க, ஒரு பொதுச் சுற்றறிக்கை இறையியல் வல்லுநர்கள் எழுத வேண்டும். ஆயர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்க பிறகு, (பழுத்த இறையியல் வல்லுநரான) தந்தை நாய்னர் அதைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று முடிவு செய்தனர்'.

இந்திய ஆயர்கள் கூடினது போல் தமிழக ஆயர்களும் கூடினர். ஒக்டோபர் 5இல் இவர்கள் பேசியது ; 'புதிய ஏற்பாட்டின் புதிய தமிழ் மொழி பெயர்ப்பு நடந்து கொண்டிருக்கிறது. இதைச் செய்யும் குழு மிகப் பெரியதாகத் தோன்றுகிறது. சிலர் போதும். மேதகு தாமஸ் வெர்னாண்டோ இதன் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் ; (விவிலிய வல்லுநர்) தந்தை லெக்ரானோடு ஒரு சில மொழி வல்லுநர்களையும், சில பொது நிலையினரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இதைச் சீர்திருத்தச் சபையினரோடு சேர்ந்து செய்யலாமா என்ற கேள்விக்கு, இப்போது வேண்டாம் என்ற பதில் வந்தது. விவிலியத்தைப் பொறுத்தவரை நாம் சீர்திருத்தச் சபையினரோடு ஒத்துழைக்கத் தயாராக இல்லை.

இவ்வாறு இந்திய ஆயர்கள் பலமுறை கூடித் தங்கள் பிரச்சனைகளை மனந்திறந்து பேசி முடிவெடுக்க வாய்ப்புப் பெற்றனர்.

3) தம்மைப்பற்றிய குறிப்புகள்

நாட்குறிப்புகள், எழுதினவரின் தன் வரலாறு கூறும் கருவி, அவருடைய பண்புகளைக் காட்டும் கண்ணாடி எனலாம்.

பிறருக்குப் பணி செய்தல் பேராயரின் பண்பு. 1763 திசம்பர் 4இல் வத்திக்கான் சங்க அமர்வுகள் முடிந்த பின், இந்தியா திரும்பப் பேராயர் தயார்ப் பண்ணும் போது, இந்தியா எடுத்துச் செல்ல சிறு கட்டுகள் அவரிடம் கொடுக்கப்பட்டன. எ. கா. திசம்பர் 4இல், திருச்சி பவுல் இறையியல் கல்லூரியில் அடுத்த மார்ச் மாதம் குருவாகத் திருநிலைப்படுத்தப் படவுள்ள சகோ. கருணாகரன் கோரசுக்கு, ஹாலந்தில் உள்ள ஒரு குடும்பம் கொடுத்தனுப்பும் பூசை உடுப்புகள் கொடுக்கப்படுகின்றன. மற்றவர்கள் பாடுபட்ட சுருபம், சிறிய சுருபம், படங்கள் அடங்கிய கட்டுகள் கொடுக்கின்றார்கள்.

டிசம்பர் 24 ; 'இன்னொரு ஊரில் இரண்டு நாள் தங்கியிருந்தேன். மதுரைக்குக் கொண்டு போக இன்னொரு பெட்டி கொடுத்தார்கள். சரி என்று ஏற்றுக் கொண்டேன்'.

வயதானவர்களின் பலவீனம் மறதியாகும்.

ஒக்டோபர் 20 ; மிஷன் ஞாயிறு அன்று, போர்காத்தா லொரன்ட்டினா என்ற புதிய பங்குக்குப் பூசைக்குச் சென்றேன். மறுபடியும் மறதி, என் தொப்பியை, கோவிலுக்குப் பின்புறம் உள்ள, உடை அணியும் அறையில் வைத்து விட்டு வந்து விட்டேன். உறுதியாக நான் மூப்படைந்து வருகிறேன். மறதி வளர்கிறது . . . . என் தொப்பி திரும்பி வந்து விட்டது.

திசம்பர் 4இல் தம் அறைத் திறவு கோலை எங்கேயோ வைத்து விட்டதாக எழுதுகிறார்.

திசம்பர் 26 ; 'மார்செய் என்ற நகருக்குச் செல்ல இரயில் நிலையத்தில் இருந்த போது, என் கட்டளைச் செபப் புத்தகத்தை வைத்து விட்டு வந்துள்ளேன் என்பது நினைவுக்கு வந்தது. தந்தை ரோக்கரி அதைப் பிறகு அனுப்பி வைப்பதாகச் சொன்னார்'.

பேராயரது ஆன்ம நிலை வெளிப்படுகிறது. 1964 சனவரி முதல் நாள் கப்பல் பயணத்தில் விடிந்தது. அதுபற்றி எழுதுகிறார்; கூச்சல் நிறைந்த ஒலி எழுப்பி மக்கள் புதிய ஆண்டை வரவேற்கின்றனர். இது தவறானதல்ல. எனினும் அறிவையும் உள்ளத்தையும் உயர எழுப்ப, கடவுளைப் புகழ, தாழ்மையோடு பாதுகாப்புக்கு வேண்ட இது உதவி செய்யவில்லை. இந்த மக்களுக்கு (இவர்களில் மிகப் பலர் கிறித்தவர் அல்லாதவர்கள்) இறைவன் மிகுந்த இரக்கம் காட்டுவராக.

முடிவுரை

பேராயர் லெயோனார்டு எழுதிய நாட்குறிப்புகள் பலவற்றில் உள்ள இச்சிறு பகுதி கத்தோலிக்கத் திருச்சபை முடிவெடுக்கும் முறையைக் காட்டுகிறது. இந்தியத் திருச்சபை ஆயர்களும், தமிழக ஆயர்களும் அன்று சந்தித்த பிரச்சனைகளைத் தெளிவாக்குகிறது. பேராயரின் சில பண்புகளின் கண்ணாடியாகின்றது. இது பெரிய செய்திகளும் சிறிய செய்திகளும் கொண்ட ஒரு களஞ்சியம் எனலாம்.

□

பொ. நா. கமலா
சிவகாசி

விருதை தந்த தமிழ் நூல்கள்

தோற்றுவாய்

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் விருதுப்பட்டி என்றழைக்கப்பெற்ற விருதுநகரில் அச்சிடப்பெற்று வெளிவந்த தமிழ் நூல்களைப்பற்றிய ஆய்வு இவண் மேற்கொள்ளப்பெறுகிறது. கி. பி. 1921 முதல் கி. பி. 1935 முடிய வெளியான நூல்கள் பற்றிய செய்திகள் மட்டுமே தொகுக்கப் பெற்றுள்ளன. அவை பின்வரும் கருதுகோள்களின் அடிப்படையில் வகைப்படுத்தப் பெறுகின்றன.

1. விருதுப்பட்டியில் இக்காலகட்டத்தில் இரு அச்சகங்கள் மட்டுமே இயங்கி வந்துள்ளன. அவை தமிழ்த் தொண்டும் சமூகத் தொண்டும் ஆற்றியுள்ளன.
2. பெரும்பாலும் பக்திப் பாடல்கள் அடங்கிய நூல்கள் இவ் அச்சகங்கள் மூலம் வெளியாகியுள்ளன.
3. பல்வேறு வகையான பா வகைகளில் கவிதை நூல்கள் அச்சிடப் பெற்றுள்ளன.
4. அங்கதச்சுவை மலிந்த நூல்களும் தோன்றியுள்ளன.
5. தாம் ஈடுபாடு கொண்ட பெரியோர்கள் இறந்த ஞான்று அன்னாரது அடியார்கள் இரங்கற்பாக்கள் இயற்றியுள்ளனர்.
6. ஆங்கிலேயர் ஆட்சியைப் போற்றும் வகையில் அமைந்த பாடல்களும் பாடப்பெற்றுள்ளன.
7. தமிழ்க் கவிஞர் பலர் விருதையிலும், அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலும் வாழ்ந்துள்ளனர்.

தமிழ் வளர்ச்சி இயக்கக வெளியீடுகளான தமிழ் நூல் விவர அட்டவணை நூல்கள்[1] தரும் விவரங்களை மூலமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

I. அச்சகங்களின் தமிழ்த் தொண்டும் சமூகத் தொண்டும்

விருதுப்பட்டியில் கி. பி. 1921இல் விளங்கிய முதல் அச்சகம் 'சச்சிதானந்தம் பிரஸ்' என்ற அச்சகமாகும். 1927இல் 'உண்மை விளக்கம் பிரஸ்'[2] என்ற மற்றொரு

1. **தமிழ்நூல் விவர அட்டவணை** 1921 - 1925; 1925 - 1930; 1931 - 1935
2. சச்சிதானந்தம் அச்சகம் ச. அ. என்றும், உண்மை விளக்கம் அச்சகம் உ. வி. அ. என்றும் இனிவரும் பகுதிகளில் கையாளப்பெறும்.

அச்சகமும் தோன்றியுள்ளது. பதினைந்து ஆண்டுக் காலகட்டத்தில் இவற்றில் முப்பத்தொன்பது நூல்கள் அச்சேறியதாகத் தெரியவருகிறது.

இவற்றுள் தமிழ் இலக்கியம் வளம் பெற உதவியவை பல. சிந்து, கீதம், கீர்த்தனை, பாட்டு, சந்தப்பா, பாசுரம், கலிவெண்பா, இரட்டைமணிமாலை எனப் பல்வேறு இலக்கிய வகைகளைச் (genres) சேர்ந்த நூல்களை இவ் அச்சகங்கள் வெளியிட்டுள்ளன.

இயற்கை விபத்துக்களையும், சமூகப் பிரச்சினைகளையும் சித்திரிக்கும் சில நூல்களும் வெளிவந்துள்ளன. மதுரையில் நிகழ்ந்த வெள்ளப்பெருக்கு (பி. கே. என். பொன்னுச்சாமி பிள்ளை, கண்ணையா வாத்தியார், மதுரை, 'விபரீதச்சிந்து', 1922, ச. அ), ஓர் உயிர்க்கொலைபற்றிய நிகழ்ச்சி (எம். புகழ்கருப்ப நாடார், விருதுநகர், படுகொலைச் சிந்து, 1930, ச. அ), உயிர்க்கொலை கூடாது என்பதை வற்புறுத்துதல் (எஸ். முருகப்ப செட்டி, காரைக்குடி, மனிதர் வயப்படும் அகில உலக உயிர்ப் பிராணிகள் மகாநாடு, 1922, ச. அ), புகைவண்டியின் வருகை (எஸ். அப்பாதுரை நாடார், விருதுநகர், சிங்காரப் புகைரதக் கும்மி, 1926, ச. அ) போன்ற சமூகம் தொடர்பான செய்திகளும் சில நூல்களில் பதிவாகியுள்ளன.

2. பக்தி நூல்கள்

இவ்விரு அச்சுக்கூடங்களில் பக்தி நூல்களே பெரும்பாலும் (50%) வெளியிடப்பெற்றுள்ளன.

திருக்கோயில்களுக்குப் பாத யாத்திரையாகச் செல்வோர் பாடக்கூடிய வழிநடைச் சிந்து நூல்கள் இயற்றப் பெற்றுள்ளன. கழுகுமலை சுப்பிரமணியக் கடவுள் (கருப்பண நாடார், வழிநடைச் சிந்து, 1922, ச. அ), சிவகாசி சுப்பிரமணியக் கடவுள் (ஏ. எம் வி பழனிச்சாமிக் கவிராயர், விருதுநகர், வழிநடைச் சிந்து, 1927, உ. வி. அ), விருதுநகர் மாரியம்மன் (ஏ. எம். வி. பழனிச்சாமிக் கவிராயர், விருதுநகர், வழிநடைச் சிந்து, 1928, ச. அ), இருக்கங்குடி மாரியம்மன் (சிவானந்தம் பிள்ளை, இருக்கங்குடி, வழிநடைச் சிந்து, 1930, உ. வி. அ), திருவில்லிபுத்தூர் ஆண்டாள் (வி. எஸ். சாமிதாஸ், தூத்துக்குடி, வழிநடைச் சிந்து, 1921, ச. அ) என இத்தெய்வங்களின்மீது பக்திப் பாடல்களைக் கொண்ட வழிநடைச் சிந்து நூல்கள் காணப்பெறுகின்றன. திருப்பரங்குன்றத்து முருகனுக்குக் காவடி எடுத்துச் செல்லுகையில் பாடப்பெறும் காவடிச் சிந்து (கே. ஒய். முத்துச்செல்லமாச்சாரி, காவடிச் சிந்து, 1930, ச. அ) நூலொன்றுபற்றித் தெரிய வருகிறது. இருக்கங்குடி மாரியம்மன் திருவிழாவின்போது முளைப்பாலிகை வளர்த்து மகளிர் ஒருங்குகூடிக் கும்மியடிக்கும் விதத்தில் பாடல்கள் இயற்றப் பெற்றுள்ளன (எம். புகழ்கருப்ப நாடார், விருதுநகர், மாரியம்மன் முளைப்பாரிக் கும்மி, 1929, ச. அ). சோலைச்சாமி என்ற சாமி பெயரில் கும்மியும், தெம்மாங்குச் சிந்துப் பாடல்களும் பாடப்பெற்றுள்ளன (மந்திரமூர்த்திக் கவிராயர், சோலைச்சாமி பேரில் கும்மி தெம்மாங்குச் சிந்து, 1930, ச. அ). வத்திராயிருப்புக்கு அருகிலுள்ள சதுரகிரி என்ற மகாலிங்கமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைக் குறித்து வழிநடைச் சிந்தும் முளைப்பாரிக் கும்மிப் பாடல்களும் எழுதப்பெற்றுள்ளன (எம். புகழ்கருப்ப நாடார், விருதுநகர், வழிநடைச் சிந்தும் முளைப்பாரிக் கும்மியும், 1929, ச அ).

பல்வேறு தெய்வங்களை விருதுநகர் மாரியம்மன் (பி. எஸ். வி. சங்கரலிங்கதாஸ், விருதுநகர், பக்திரசக் கீர்த்தனை, 1924, ச. அ.), விளாம்பட்டி பத்ரகாளியம்மன் (எம். சங்கரலிங்கதாஸ், விளாம்பட்டி, பக்திரசக் கீர்த்தனை, 1921, ச. அ.), ஏசு கிருஸ்து (அருளானந்த கருப்பையா கவி, பாளையம்பட்டி, பக்திரசக் கீர்த்தனைகள், 1921, ச. க.), மற்றும் பிற தெய்வங்கள் (க. அ. புன்னைமுத்து நாடார், கல்லூரணி, பக்தியின்பப் பஜனாமிர்தம், 1921, ச. அ.) ஆகியோரைப் போற்றும்வண்ணம் கீர்த்தனை நூல்கள் இயற்றப்பெற்றுள்ளன.

ஏரல் மாநகரைச் சார்ந்த அருணாசல சுவாமிகள் புகழ் பாடும் நூல் (குருசாமி நாடார், சிவகாசி, நோட்டுச் சந்தப்பா, 1921, ச. அ.), சின்னமூப்பன்பட்டியில் கோயில் கொண்டுள்ள மாலையம்மன் என்ற நாச்சியாரம்மனைப் போற்றும் பாடல் நூல் (பூ. மு. நா. இரத்தினசாமி நாடார், தோத்திரப் பாக்கள், 1933, உ. வி. அ.), நிறைகுளவல்லியம்மன் என்ற கிராம தேவதையைப் பரவும் நூல் (வி. ஏ. குமரய்ய நாடார், பெருநாழி, நிறைகுளவல்லியம்மன் கலிவெண்பா, 1926, ச. க.), விருதுநகர் முருகனை வழிபடவென அமைந்த நூல் (பி. எம். நாச்சியப்ப நாடார், திருவிரட்டை மணிமாலை, 1928, உ. வி. அ.) ஆகியனபற்றித் தெரியவருகிறது.

விருதுநகர் மாரியம்மன் திருவிழா அலங்காரச் சிறப்பைப் போற்றும் வகையிலும் (எம். புகழ்கருப்ப நாடார், விருதுநகர், மாரியம்மன் திருவிழா அலங்காரச் சிறப்பு, 1930, உ. வி. அ.), குரங்கணியிலுள்ள முத்துமாலையம்மன் திருவிழா அலங்காரச் சிறப்பை விவரிக்கும் வகையிலும் (மு. புகழ்கருப்ப நாடார், விருதுநகர், திருநெல்வேலி ஜில்லா குரங்கணி ஸ்ரீ முத்துமாலையம்மன் திருவிழா அலங்காரச் சிறப்பு, 1933, உ. வி. அ.) நூல்கள் எழுந்துள்ளன. ஔவை பாடிய சிவதோத்திர ஆத்திச்சூடி என்ற நூல் விருதையில் உண்மை விளக்கம் அச்சகத்தில் (திருவாலவாயன் - ப. ஆ., 1927) அச்சிடப் பெற்றுள்ளது. அந்நியராட்சியின்போது அரசியலை விட்டு ஒதுங்கி வாழ்ந்த ஆன்மீகவாதிகள் தெய்வத்தின்பால் ஈடுபாடு கொண்டு பக்தி நூல்கள் பலவற்றை இயற்றியமை இதிலிருந்து தெரியவருகிறது.

3. பல்வேறு பா வகைகள்

சிந்து என்ற பாவகையில் இயற்றப்பெற்ற பதினைந்து நூல்கள் கிடைக்கின்றன. வழிநடைச் சிந்து, காவடிச் சிந்து, விபரீதச் சிந்து, நொண்டிச் சிந்து (எம். புகழ்கருப்ப நாடார், விருதுநகர், 1927, ச. அ.), படுகொலைச் சிந்து, தேகவியோக சிந்து (எஸ். ஆர். புலுக்கருப்பண்ண நாடார், 1927, உ. வி. அ.) முதலியனவும், சிந்துப்பாவின வகைகளுள் ஒன்றான கும்மிப் பாடலாக[3] முளைப்பாரிக் கும்மி என்பதுவும் தெம்மாங்குச் சிந்து என்பதுவும் இக்காலகட்டத்தில் இயற்றப் பெற்றுள்ளன. பல்லவியும் அனுபல்லவியும் இன்றி முச்சீரடியாய் அமைவது சிந்து. முதலடியில் தனிச்சொல் பெற்றும் வருதல் உண்டு.[4]

பல்லவி, அனுபல்லவியுடன் அமைவன கீதம், கீர்த்தனைகளாம். பரமபதபாசுர கீதம் என்ற கீதங்கள் அடங்கிய நூலும், பக்தியை உள்ளடக்கமாக்க்

3. தெலுங்குச் செட்டியார் என்ற யாகக்ஷத்திரியர் 3ஆவது மகாநாட்டு வைபவம் கும்மிப் பாடல்களாகக் கோனைய்ய செட்டி என்பவரால் இயற்றப் பெற்றுள்ளன.

4 மு. சுப்புலெட்சுமி 'இசை நாடகங்களில் சிந்துப்பாடல்', **தமிழியல் ஆய்வு**, ஞா. த. ப. ஆ. மன்றம், 1996, பக். 352-356.

கொண்ட கீர்த்தனைகளும் இயற்றப் பெற்றுள்ளன.

பல்வேறு சந்தங்களில் (Notes) அமைந்த 'நோட்டுச் சந்தப்பா'வும், கலிவெண்பாவும், இருவகைப் பாக்கள் மாறி மாறி அமையும் இரட்டைமணிமாலையும் தோன்றியுள்ளன.

வேடிக்கை நிறைந்த பாட்டு நூலும், குரங்கு சண்டையைப்பற்றிய பாட்டு நூலும், கத்தாழைப் பூச்சிபற்றிய பாட்டு நூலும்[5] (எம். புகழ்கருப்ப நாடார், 1930, உ. வி. அ.) எழுந்துள்ளன.

சமூகச் சித்திரிப்புக்கள்பற்றிய நூல்களாயினும் அவை பாக்களாகவே இயற்றப் பெற்றமைக்குப் 'பாண்டியன் வருகை' என்ற ஆங்கிலேயரைப் போற்றி அமையும் பாடல்களே சான்று. பிறர் உதவியை வேண்டி நின்றபோதும் பாடல்களாகவே பாடியுள்ளனர். அவ்வகையில் சீட்டுக்கவிகளைக் கொண்ட 'பிரபந்தம்' (பி. சிவத்த கருப்பையா நாடார், 1924, ச. அ.) என்ற பெயரில் நூலொன்றும் காணப்பெறுகிறது.

இவ்வாறாகப் பல்வேறு பா வகைகளில் நூல்கள் இயற்றப் பெற்றுள்ளன.

கோபாலகிருஷ்ண நாடார் ஜீவிய சரித்திரம் (எஸ். பி. எஸ். முத்துக்காமாட்சி நாடார், 1928, உ. வி. அ.) என்ற நூலும், தெய்வராய தேசிக சுவாமிகள் ஆதீன பரம்பரை பற்றிய நூலும் (வெ. அ. குமரய்ய நாடார், பழசை நகர், 1926, ச. அ.), மனிதர் வயப்படும் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாடு என்ற நூலும் கவிதை நூல்களா உரைநடை நூல்களா என்பது தெரியவில்லை.

4. அங்கதச் சுவை மலிந்த நூல்கள்

மூன்று வேடிக்கைகளைக் கொண்ட வேடிக்கைப் பாட்டு (அருளானந்த கருப்பையா கவி, விருதுநகர், 1924, ச. அ.), கலிகாலத்தில் நிகழும் அவலங்களைச் சுட்டும் கலிகாலப் பாட்டு (ஆர். ஷண்முகதாஸ், 1925, ச. அ.), கவிராஜ்குஞ்சரம் என்ற மருத்துவர் பெறும் மிகையான மருத்துவக் கட்டணம் பற்றிய நூல் (வி. எம். எஸ். சுந்தரம், 1929, ச. அ.), திருச்சுழியில் நிகழ்ந்த குரங்குச் சண்டையை விவரிக்கும் பாட்டு[6] (கருப்பையா கவி, திருச்சுழி, குரங்குச் சண்டையின் பாட்டு, 1922, ச. அ.) ஆகியவை அங்கதச் சுவை நிறைந்த நூல்கள் என்பது நூல்களின் தலைப்பிலிருந்து தெரிகிறது.

5. இரங்கற்பாக்கள்

தாம் ஈடுபாடு கொண்ட ஒருவரது மறைவைத் தாங்கவியலாத கையற்ற நிலையில் கையறுநிலைப் பாடல்கள் பாடுவது மரபு. 1926இல் தம் குரு மறைந்தபோது 'பரமபத பாசுரம்' பாடிய எம். சங்கரலிங்கதாசர் என்பவர், பழனி குமாரசாமி மறைந்தபோது 1929இல் 'பரமபத பாசுர கீதம்' என்ற நூலினை இயற்றியுள்ளார். அன்னார் குரு எனக் குறிப்பிடுபவரும் பழனி குமாரசாமி என்பவரும் ஒருவரா, அல்லது வெவ்வேறு பட்டவரா என்பது அறிய இயலவில்லை.

5. 'கத்தாழைப் பூச்சிப் பாட்டு' என்பது எதைப்பற்றிய நூல் என்பது தெரியவில்லை.

6. 'குரங்குச் சண்டைப் பாட்டு' என்ற நூல் குறியீட்டுப் பொருண்மை (Symbolic Meaning) உடையதாக இருக்கக்கூடும்.

புன்னை முத்துக் குருசாமி (கோட்டூர்) என்பவர் தம் பூதவுடலை விடுத்துப் புகழுடம்பு எய்தியபோது எஸ். ஆர். புலுக்கருப்பண்ண நாடார் என்பவர் 'தேகவியோக சிந்து' என அவர் புகழ் போற்றி இரங்கற்பாப் பாடியுள்ளார்.

தொல்காப்பியம் சுட்டும் கையறுநிலைப் பாடல் மரபின் தொடர்ச்சி இருபதாம் நூற்றாண்டிலும் காணப்பெறுவதற்கு இவை சான்றாவன.

6. ஆங்கில ஆட்சியைப் போற்றல்

மேலக்கோட்டையூரைச் சேர்ந்த எஸ். சங்கரலிங்கதாஸ் என்பவர் 1928இல் 'பாண்டியன் வருகை' என ஆங்கிலேயர் ஆட்சியைப் பாண்டியர் ஆட்சியோடு ஒப்பிட்டு நூல் எழுதியுள்ளார். அவரைப் பின்பற்றி விருதையைச் சேர்ந்த சங்கரலிங்கதாசன் என்பவரும் 1929இல் 'பாண்டியன் வருகை' என ஆங்கிலேயர் துதி பாடியுள்ளார்.

நீதிக்கட்சியின் கோட்டையாக விருதையும், அதன் சுற்றுப்புற ஊர்களும் விளங்கியதன் தாக்கத்தினால் வெள்ளையரின் ஆட்சிச் சிறப்பைப் போற்றிப் பாடும் நிலை இருந்திருத்தல் கூடும் என்பது தெரிகிறது.

7. கவிஞர் வளர்த்த தமிழ்

1927இல் தொடங்கி 1933 வரை ஏழாண்டுகளில் ஏழு பக்திப் பாடல் தொகுப்புக்களை எழுதி வெளியிட்டவர் விருதை. எம். புகழ்கருப்ப நாடார். இரங்கற் பாக்களும், பக்திக் கீர்த்தனைகளும், 'பாண்டியன் வருகை'யும் எழுதியவர் எம். சங்கரலிங்கதாஸ் ஆவார். அருளானந்த கருப்பையா கவி ஏசுவின் புகழ் பாடும் கீர்த்தனைகளும் அங்கதச்சுவை நிறைந்த நூல்களும் இயற்றியவர். மேலும் விருதை ஏ. எம். வி. பழனிச்சாமிக் கவிராயரும், பெருநாழி வெ. அ. குமரய்ய நாடாரும் இரண்டிரண்டு நூல்களை எழுதியுள்ளனர்.

விருதையிலும், அதனைச் சூழ்ந்துள்ள பகுதியிலும் கவிஞர்கள் பலர் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு மேற்கூறிய கவிஞர்களும் அவர்தம் நூல்களும் சான்றாகும்.

8. இறுவாய்

விருதையின்கண் முதலில் தோன்றிய அச்சகங்கள் இரண்டும் நூல்களை வெளியிடுவதன் வாயிலாகக் கல்வியறிவைப் பரப்பி, தமிழையும், பக்தியையும் வளர்த்ததோடு சமூகப் பிரச்சினைகளையும் அணுகியுள்ளன என்பது தெளிவாகிறது.

□

இரா. வசந்தமாலை
பாரதிதாசன் மகளிர் கல்லூரி
புதுச்சேரி

அக்கா சுவாமிகள் இசை நூல் ஓர் அறிமுகம்

"சீதமலர்ப் பாதமதைச் சிந்தித்தேன் அனுதினமும்
வாதனை செய்யாமலிப்போ வரமருள் அக்காசாமியே"

என்று வரகவி மாணிக்க ஆச்சாரியாரவர்களால் வணங்கப் பெற்றவர் ஸ்ரீகுரு அக்கா சுவாமிகள். 'கண்யன்' என்னும் இயற்பெயர் கொண்ட அக்கா சுவாமிகள் இலங்கையில் பிறந்து புதுச்சேரியில் அடைக்கலமானவர். சித்து வேலைகள் பல புரிந்து சிந்தனை உரையாற்றிய ஆத்ம ஞானிகளின் வரிசையில் முதலிடம் வகிப்பவர். இவர் தமது அருள் நிலையில் ஈடுபாடுற்று வரகவி மாணிக்கதாசனார் அவர்களால் பாடப் பெற்றதே 'ஸ்ரீ அக்கா சுவாமிகள் பஞ்சரத்தினமும், கீர்த்தனமும்' எனும் நூலாகும். இந்நூல் சிறந்த இசை நூலாகத் திகழ்ந்த போதும் எண்பத்தேழு ஆண்டுகளுக்குப் பிறகும் இந்நூலுக்கு மறு பதிப்பு வரவில்லை.

நூலின் முகப்பு

இறைவனை வேண்டித் தொடங்கும் மரபின்படிச் 'சிவ மயம்' தொடக்கமாய் அமைகிறது. பிறகு 'ஸ்ரீ வாரடைக்கை சுவாமிகளென்னும் அக்கா சுவாமிகள் பஞ்சரத்தினமும், கீர்த்தனமும்' என்பதாக நூலின் தலைப்பு இடம் பெறுகின்றது. நூலியற்றிய கவிஞரின் பெயர் நேரிடையாகக் குறிக்கப் பெறாமல் இன்னாரின் மகன் என்றும், சகோதரர் என்றும் கூறும் மரபினை அடியொற்றி,

மகா - ள - ள - ஸ்ரீ அப்பாசாமி ஆச்சாரியார் குமாரரும்
மகா - ள - ள - ஸ்ரீ மோகாம்புரி ஆச்சாரியார் சகோதரருமாகிய
வரகவி
மாணிக்க ஆச்சாரியாரவர்களால்

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் 1912ஆம் ஆண்டு 'புதுவை வித்தியாபி வர்த்தனி' எனும் அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணிக்கதாசனார் - குறிப்பு

அக்கா சுவாமிகளின் தொண்டர்களுள் ஒருவராக மாணிக்கதாசனார் கருதப் படுகின்றார். இவர் சுவாமிகளின் மீது கொண்ட அன்பின் காரணமாக,

"ஆதரித்தாளுகின்ற அக்கா பரிதேசி யுன்மேல்
காதல் கொண்டு பாடி வந்தேன்"

என்று துதிப் பாடலின்கண் குறிப்பிட்டுள்ளார். சுவாமிகளின் சித்து வேலைகள் பலவற்றை நேரில் கண்டதன் காரணமாகத் தமது கீர்த்தனைகளில் இத்திருவிளையாடல்கள் பலவற்றை விளக்கியுள்ளார். தியான நிலையில் இருக்கும் அக்கா சுவாமிகளை இந்நூலாசிரியர் வணங்கி நிற்பதாக ஓவியம் ஒன்று நூலின் முகப்பில் வரையப்பட்டுள்ளது. இவை தவிர நூலாசிரியர்பற்றிய குறிப்புகள் இடம் பெறவில்லை. நூலின் தலைப்பு 'அக்கா சுவாமிகள் பஞ்சரத்தினமும் கீர்த்தனமும்' என்றுள்ளதால் இந்நூல் அக்கா சுவாமிகளைப் பற்றிய கீர்த்தனைகளா? அல்லது அக்கா சுவாமிகள் இயற்றிய கீர்த்தனைகளா? எனும்படியான மயக்கத்திற்குரிய நிலையில் அமைந்துள்ளது.

பஞ்சரத்தினம்

நூலின் தொடக்க மரபின்படி 'விநாயகர் துதி' 'நேரிசை வெண்பா'வில் அமைந்துள்ளது. அதனைத் தொடர்ந்து அக்கா சுவாமிகள்மீது பாடுவதற்கு அருள் புரிய வேண்டும் என்று சுவாமிகளையே வேண்டிக் கொள்வதாக ஒரு பாடலும் அமைகின்றது. இதன் பின்னரே ஆசிரிய விருத்தத்தில் பஞ்சரத்தினப் பாடல்கள் இடம் பெறுகின்றன. இப்பாடல்களில்

1) நிதி பெருகும் புதுவையில் தான் சுவாமிகளை நாடிய திறம்.
2) சுவாமிகளை அடியார்கள் உபசரித்த பாங்கு.
3) புதுவை நாராயணசாமி மடத்தில் தங்கியமை.
4) மனத்தை ஒருநிலைப்படுத்த வேண்டும்.
5) யாழ்ப்பாணத்தில் தோன்றி வளர்ந்த நிலை

போன்ற செய்திகள் காணப்படுகின்றன.

கீர்த்தனங்கள்

பஞ்சரத்தினத்தைத் தொடர்ந்து கீர்த்தனைகள் இடம்பெறுகின்றன. இந்நூலின்கண் ஒன்பது கீர்த்தனைகள் உள்ளன. இவையன்றி, 'இலாவணி' 'ஞானக் கும்மி' 'அடைக்கலப்பா' 'தேவாரம்' அமைப்புகளில் ஒவ்வொரு பாடலும், இறுதியில் 'மங்களம்' கூறுவதாக ஒரு பாடலும் இடம் பெற்றுள்ளன. கடவுள் வாழ்த்து முதலாக, 'மங்களம்' ஈறாக 20 பாடல்கள் இந்நூலில் உள்ளன.

மாணிக்கதாசனார் கீர்த்தனை அமைப்புகளில் இராக தாளமிட்டு ஒன்பது பாடல்களைப் பாடியுள்ளார். அவை, நவரோஸ், எதுகுல காம்போதி, தோடி (2), சங்கரா பரணம், அடாணா, தன்னியாசி, காம்போதி, முகாரி என்பனவாகும். தாளத்தை நோக்கும்போது ஆதி (6 பாடல்கள்), ரூபகம் (2), ஏகம் (1) என்ற நிலையில் இக் கீர்த்தனைகள் அமைந்துள்ளன.

கீர்த்தனைகளுக்குரிய அமைப்பாகக் கருதப்பெறுவது பல்லவி, அநுபல்லவி, சரணம் என்பதாகும். 'அருள் நிலையை' என்று தொடங்கும் பாடலில்

இவ்வகை அமைப்புகள் இடம் பெறவில்லை. ஆனால் மெட்டுக்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. முகாரியில் அமையும் 'அருளாநந்தத்தை' எனத் தொடங்கும் கீர்த்தனையில் பல்லவி, அநுபல்லவி மட்டும் இடம் பெற்றுள்ளதேயன்றி 'சரணம்' எனும் அமைப்பு இடம் பெறவில்லை.

கீர்த்தனங்களின் மெட்டுக்கள்

கீர்த்தனங்கள் ஒவ்வொன்றும் இன்ன மெட்டில் பாடுதல் வேண்டும் என்பதற்காகத் தாசனார் மெட்டுக்களை அமைத்துள்ளார். பாடலைக் குறிப்பிட்ட இராகத்திற்குள் பாட இயலாதவர்கள் முன்னோர்கள் பயன்படுத்திய மெட்டுக்களைப் புதிய கீர்த்தனைகளில் பயன்படுத்திப் பாடுவது என்பது எளிது என்பதே இதற்கான காரணம். எனவே,

	மெட்டுக்கள்	கீர்த்தனைகள்
(1)	'ஞான க்ருபாகரனே'	உந்தனருள் தாருமே ....
(2)	'சிற்சபையும் பொற்சபை'	அருள் நிலையை ....
(3)	'வந்தருள் செய்'	சித்தம் வைத்தெனை ....
(4)	'கனிகள் பறிக்கிறேன்'	அருள் செய் ....
(5)	'ஐயனே வீரையனே'	சாமியே அக்கா ....
(6)	'என்ன ஆநந்தம்'	அருள் நீ ....
(7)	'அப்பா எனையிப் போது'	அக்கா சாமியே ....
(8)	'வானவர் நாதா'	அஞ்சலித்தேனே ....
(9)	'ப்ரம்மா நந்தத்தை'	அருளா நந்தத்தை ....

போன்ற மெட்டுக்களில் பாடல்களை அமைத்துள்ளார் கவிஞர்கள் முன்னோர்களின் மெட்டுக்களில் ஈர்க்கப்படுதல் இயற்கையாகும். அதனடிப்படையில் இயற்றப் படுவதே மெட்டமைப்புக் .கீர்த்தனங்கள் தாயுமானவரின் ஆனந்தக் களிப்பிலும், அண்ணாமலையாரின் காவடிச் சிந்திலும், கோபாலகிருஷ்ண பாரதியின் நந்தன் சரித்திரக் கீர்த்தனையிலும் ஈர்க்கப்பட்டவர் மகாகவி என்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

கீர்த்தனைகளில் முத்தாய்ப்பு வரிகள்

கீர்த்தனைகளின் ஈற்றடிகளில் அதனை இயற்றிய புலவர்களின் பெயர் இடம் பெறுதல் வழக்கமாகும் தாம் இயற்றிய பாடல்களில் தங்கள் பெயர்கள் இடம் பெறச் செய்து இன்னாரின் பாடல் என்பதை முத்திரையிட்டுக் காட்டுவதற்காக இம்மரபு மேற்கொள்ளப்பட்டது. 'கோபாலகிருஷ்ணன் பாடும் தில்லை' என்று முடிவுறும் போது கோபாலகிருஷ்ண பாரதியாருக்குரிய கீர்த்தனை என்றும், 'தனையறிந்தார்க் கினியன்' எனும்போது அறிந்தார்க் கினியனார் கீர்த்தனை என்றும், அறிந்து கொள்வது போல இவரும் தமது கீர்த்தனைகளின் முடிவில் 'மாணிக்கதாசன் பாடி வந்தேன்' என்றும், 'பக்தன் மாணிக்கந் தினம் பாடிப் பணிந்தேனிப்போ' என்றும் பாடி முடிக்கும் மரபினைப் பின்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தர்க்க ஞானக்கும்மி

பஞ்சரத்தினம், கீர்த்தனங்கள் என்பதைத் தொடர்ந்து அமையும் இசைப் பாடல் வகை 'ஞானக்கும்மி' ஆகும். நூலின் கண் 'அக்கா சுவாமிக்கும் – யாழ்ப்பாணம் யோக சுவாமிக்கும் நடந்த தர்க்க ஞானக் கும்மி' என்றே தலைப்பிடப்பட்டுள்ளது. இதன் கண் இடம்பெறும் செய்திகளை

1. வாழ்க்கை வரலாற்றை விளக்கும் பகுதி
2. சுவாமிகளின் திருவடியைச் சரணடைய ஆனந்தமாய்க் கும்மி கொட்டும் பகுதி

என்றவாறு பகுத்தறியலாம்.

வாழ்க்கை வரலாற்றை விளக்கும் பகுதி

மாணிக்கதாசனார் கும்மி கொட்டிப் பாடுவதற்கு முன்பு சுவாமிகளின் அற்புதச் செயல்கள் பலவற்றையும் பாடியுள்ளார். இப்பகுதியின் வாயிலாக அக்கா சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர் என்பதும், 'கண்யன்' என்னும் இயற்பெயர் கொண்டவர் என்பதும் தெரிய வருகின்றது.

'ஆதியில் யாழ்ப்பாணம் ஜனனமாய்'
'கண்யனெனும் பேர் வாய்ந்த அக்காசாமி'

என்பன இதற்குத் தக்க ஆதாரங்கள். ஒருசமயம் சுவாமிகள் யாழ்ப்பாணம் சென்ற போது,

> "ஒருவர் ஏளனமாகச் 'சுவாமிகள் அன்ன அபிஷேகம் செய்து கொள்ளுமா?' என்று கேட்க, சுவாமிகளும் தலையசைக்க பல அண்டாக்களில் சாதத்தை வடித்துச் சுடச் சுடச் சுவாமிகளின்மீது கொட்டினார்கள். பின்பு சூடு ஆறியதும் சாதத்தை நீக்கிப் பார்க்க சுவாமிகள் இறைவனுடன் தொடர்பு கொண்டிருந்தார். அபிடேகம் செய்தவனின் கண் பார்வை போய் விட்டது"

என்பது ஒரு வரலாறு. இந்நிகழ்ச்சியை,

"செய்யுமென்று உட்கார்ந்த அக்கா சுவாமி சிரசின் மீதிலே
வையம் புகழவே யன்னமதைக் கொண்டு வட்டித் தாரப்போதே"

என்று பாடியுள்ளார். கண் பார்வை இழந்த பின்பு சுவாமிகளிடம் சரணடைந்தமையை,

"சுவாமி நின் முகம் பார்க்கக் கண்ணில் லாமல் சரணமடைந்தேன்"

என்றும் குறிப்பிட்டுள்ளார். பார்வை இழந்தவனோடு புதுவைக்கு வந்து 'அக்கா சுவாமி' என்ற பெயருடன் பல அருட் செயல்களைப் புரிந்துள்ளார். மீண்டும் பார்வை பெறும்படி அற்புதம் நிகழ்த்தியுள்ளார். சுவாமிகளுக்கு உணவளிக்கப் பல நூற்றுக் கணக்கான அன்பர்கள் காத்துக் கிடக்க அவர்களிடம் உண்பதற்கு ஒரு ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் சாப்பிட்டதாகக் கூறுவர். அந்த ஒரு ரூபாயைச் 'சபாபதி' என்பவரிடம் கொடுத்துச் சேர்த்து வந்தமையை,

"அக்கா சுவாமி வெகுநாள் இவ்வூர்தனில் ஆநந்த மாநந்தமாய்
தக்கபடி யன்னம் பொசிக்கு மிடத்தில் தக்ஷணை யொருரூபாய்
தக்ஷணையொரு ரூபாவை யக்ஷணமே தானிருக்குமிடத்தில்
குக்ஷிபாதை தீர்க்கும் சபாபதியிடம் கொடுத்து வைத்தார் ரூபாயை"

என்று மாணிக்கதாசனார் பாடியுள்ளார். சுவாமிகள் யாழ்ப்பாணத்தினின்று புதுவைக்கு வருகை தருவதை அறிந்து அவர் பொருட்டுக் காத்திருந்தவர் நாராயண குரு சுவாமிகளாவார். இவர் அக்கா சுவாமியின் பெயரில் கட்டிய மடம் ஒன்றில் ஏராளமான பக்தர்களுக்கு அன்னதானமிடப்பட்ட செய்தியும் செவி வழிச் செய்தியாகும். இம்மடம் நாராயண சுவாமிகளால் கட்டப் பெற்றதால் முதலில் 'நாராயண சுவாமி மடம்' என்றே அழைக்கப் பட்டது. இச்செய்தியை,

'உமையாள் பூசை செய்யும் நாராயண சுவாமி மடமதில்'

என்பதிலிருந்து அறிந்து கொள்ளவியலும். அக்கா சுவாமிகள் புதுவைக்கு வந்த பிறகு இவருடனிருந்து தொண்டாற்றிய சீடர்களில் குறிப்பிடத்தக்கவர் நாராயண சுவாமியாவார். இவர் சுவாமிகளின் ஜீவ சமாதிக்கு வழிபாடு நிகழ்த்துவதன் பொருட்டுக் காவடி எடுத்துத் திருவாசகம் ஓதி இதனால் பெற்ற செல்வத்தின் வாயிலாக அக்கா சுவாமிகளுக்கு ஆராதனையும், அன்ன தானமும் செய்யப்பட்டமைக்கு

". . . . . . அக்கா சாமிக் காராதனைகள் செய்து"

"வட்ட மாயனைக் காவடி யெடுத்து"

எனும் வரிகள் சான்று பகர்வனவாம்.

சுவாமிகள் குறித்த செவிவழிச் செய்திகள்

'அக்கா சுவாமிகள்' பெண்களைச் சகோதரிகளாகக் கருதியமையால் அவர்களை 'அக்கா' 'அக்கா' என்றழைக்க அதுவே அவர் பெயராயிற்று என்பர். ஒரு முறை ஏற்பட்ட தர்க்க வாதத்தின் போது சுவாமிகள் தன்னுடைய கண்ணில் மிளகாயை வைத்துக் கட்டிக் கொள்ள, எதிர்வாதம் புரிந்தவருக்குக் கண்கள் எரிந்ததாகக் கூறுவர்.

உணவு உண்ணும்போது அதை வெறும் கல்லின் மீதே வைத்து உண்ணும் வழக்கம் சுவாமிகளிடம் இருந்திருக்கின்றது. இக்கல் இன்றும் புதுவை முத்தைய முதலியார் வீதியில் இருப்பதாகவும், அக்கல்லை மகப்பேற்றிற்கு முன்பாகப் பெண்கள் வணங்கி வழிபட்டுச் செல்வதாகவும், இதனால் நல்ல முறையில் மகப்பேறு நிகழ்வதாகவும் நம்பி வருகின்றனர். புதுவையில் புகழ் வாய்ந்த சாலை விநாயகரையும், முத்தியாலுப் பேட்டையில் உள்ள சுப்பிர மணிய கோயில் விநாயகரையும் அமைத்து வழிபட்டவர் என்றும் சுவாமிகளைக் குறிப்பிடுவர். இவர் ஜீவ சமாதி அடைந்த ஆண்டு 1872 என்பர்.

சுவாமிகளின் மீது பற்றுக் கொண்ட சீடரான நாராயண சுவாமிகள் தமது காலில் கல்லைக் கட்டிக் கொண்டு இழுக்க அதனால் அவருக்குக் கிடைத்த வருவாயின் மூலம் சுவாமிகளுக்காக (வழிபாட்டிற்காக) நிலங்களை வாங்கியுள்ளார். இவரைச் சுற்றிப் பல தொண்டர்கள் இருந்து பணியாற்றியுள்ளனர். இவரது மறைவு 1904 என்பர்.

அக்கா சுவாமிகள் ஜீவ சமாதி அடைந்த இடத்தில் லிங்க பிரதிஷ்டை

ஏற்படுத்தப்பட்டதனால் இன்றும் பல்வேறு பூசைகள் சிறப்பாக மேற்கொள்ளப் படுகின்றன. 1996 - ஏப்ரல் முதல் பௌர்ணமி பூசையும், 1996 - டிசம்பர் முதல் பிரதோஷ பூசையும், 1997 - ஜூன் முதல் விநாயக வழிபாடும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இக்கோயில் அமைந்துள்ள வீதி 'அக்கா சுவாமி மடத்து வீதி' என்றே அழைக்கப் படுகின்றது. சுவாமிகள் தனது ஆற்றலின் மூலம் கூடு விட்டு ஆவி பிரிந்து மீண்டும் கூட்டினுள் அடைதல், உடல் உறுப்புகளைத் தனித் தனியே பிரித்து மீண்டும் கூட்டுதல் போன்ற அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். இதற்கான ஆதாரங்கள் பாடலுள் இடம் பெறவில்லை.

தர்க்க ஞானக்கும்மியில் இரண்டாவதாக அமைவது கும்மி கொட்டும் இசைப் பாடலாகும். இது சுவாமிகளின் திருவடியைச் சரணடைய வேண்டிப் பாடப்பட்டதாகும்

அடைக்கலப்பா

அக்கா சுவாமிகளின் பெருமைகளை உரைத்து அவர் தம் திருவடிகளை அடைக்கல மடைவோம் எனும் நோக்கத்துடன் பாடப்பெற்ற ஒரு பாடலாகும். மாணிக்க தாசனார் சுவாமியை ஆதி சிவனின் கருணையால் உதித்தவன் என்கிறார்.

தேவாரம்

'வாரம்' என்பது இசை இயக்கம் நான்கினுள் ஒன்றாகும். எனவே, இவ்வகை இசை முறையில் பாட வேண்டும் என்ற விழைவின் காரணமாக இவரால் பாடப்பெற்ற பாடல் எனலாம். முடுகியல் நடையில் அமையும் பாடல் வாரப் பாடல் என்பதால் இப்பாடலை நூலின் ஈற்றுக்கு முன்பாக அமைத்துள்ளார்.

மங்களம்

"சித்தி நிலையை அறிந்துள்ளத்தில் வைத்த
சிற்பரா நந்தக் காசாமியே யான்
நத்தி வந்துன்னடி நித்தம் பணிந்து நின்
பத்தன் மாணிக்கதாசன் பாடின - மங்களம் மங்களம்"

என்பதாக நிறைவுப் பாடல் அமைகின்றது. கடவுள் வாழ்த்தில் தொடங்கி 'மங்களத்தில்' நிறைவுபடுத்துவது மரபு என்னும் முறைப்படி இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இசை வழி நோக்கும் போது அமைதியான விருத்தத்தில் தொடங்கப்பெற்று வாரம், மங்களம் என விரைவு நடைப் பாடலாக நிறைவு பெறுவது இந்நூலின் சிறப்பாகும்.

தொகுப்புரை

(1) மாணிக்கதாசனாரால் இயற்றப்பட்ட இந்நூல் அக்கா சுவாமிகளின் பெருமைகளையும் இவர்தம் அருட் செயல்களையும் விளக்குவதாக அமைகின்றது.

(2) அக்கா சுவாமிகளின் பெருமைகளைப் போற்றும் நிலையில் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளும், கீர்த்தனை என்னும் இசை வடிவத்திற்கு வழி காட்ட வேண்டும். வாழ்க்கை வரலாற்றை விளக்கும் விழைவோடு ஞானக் கும்மியும் தாசனாரால் இயற்றப்பட்டுள்ளமை சிறப்பிற்குரியது.

(3) சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றின்வழி அரிய பல செவிவழிச் செய்திகளுக்கு இந்நூல் தக்க ஆதாரமாகத் திகழ்கின்றது.

(4) இசை மரபின்படி 'விநாயகர் துதி'யில் தொடங்கி 'மங்களத்தில்' நிறைவடையச் செய்தல் என்பது ஒரு நெறி முறை என்றாலும். அத்துடன் சுவாமிகளின் வரலாற்றை விளக்க வேண்டுமென்ற நோக்கமும் இந்நூலாசிரியரின் வழி புலப்படுதலை அறியவியலும்.

குறிப்பு

[செவிவழிச் செய்திகளாகத் தொகுக்கப்பட்டவை. அக்கா சுவாமி திருக் கோயிலில் கடந்த 40 ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் K. சுப்புராம ஐயர் என்பவரிடமும் இவர்தம் மகனார் S. எல்லுசாமி ஐயர் என்பாரிடமும் பெறப் பெற்றவை]

துணை நூல்கள்

1 **ஸ்ரீ வாரடைக்கை சுவாமிகளென்னும் அக்கா சுவாமிகள் பஞ்சரத்தினமும் கீர்த்தனமும்**. 1912. மாணிக்க ஆச்சாரியார்.

2 **அருள்மிகு ஸ்ரீ அக்கா சுவாமிகளின் வரலாறு**. வெளியீடு : அருள்மிகு ஸ்ரீ அக்கா சுவாமிகள் தேவஸ்தானம், புதுவை.

□

சி. பங்கயச்செல்வி
தேர்வு நிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை
ஸ்ரீ கா. சு. சு. கலைக் கல்லூரி
திருப்பனந்தாள்

நில அளவையியல் ஆவணங்கள்

முன்னுரை

அரசர்களின் ஆட்சிக் காலத்தில் அவர்களின் உத்தரவுகளைத் தாங்கி வந்தவை சாசனங்கள் எனப்பட்டன. சாசனம் என்பது வடசொல். இஃது கட்டளை அல்லது உத்தரவு என்று பொருள்படும். அக்கால மக்கள் அளித்த தானங்களைப் பற்றித் தெரிவிப்பதும் சாசனங்களாயின. தொடக்க காலத்தில் கோயில்களுக்கும் புலவர் முதலியோருக்கும் கொடுக்கப்பட்டவை நில தானங்களைக் குறித்தன. பின்னர் எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட எல்லாத் தானங்களையும் குறிக்கவும், நிலங்களைக் கிரயம் செய்யவும் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. சாசனங்கள் தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களால் எழுதப்பட்டாலும் பெரும்பாலும் கல்லில் வெட்டப்பட்டன. அவை கல்வெட்டுக்கள், சிலாலேகை, சிலாசாசனம் என்று வழங்கப்பட்டுள்ளன. அரசன் ஆணையைத் தாங்கி வந்தவை செப்புப் பட்டயம், செப்பேடு, தாமிரப் பட்டயம், தாமிர சாசனம் என்றும் அழைக்கப்பட்டன.[1]

ஆவணங்கள்

நிலங்கள் தொடர்பானவை ஊர்ச் சபையால் நிகழ்த்தப் பெற்றன. ஊர்ச் சபை அரசனின் மேற்பார்வையின் கீழ் இயங்கியது. வரி விதிப்பு, வரி வசூல், நில விற்பனை ஆகியவை அச்சபையால் கண்காணிக்கப்பட்டது. சபை உறுப்பினர்கள் முன்னிலையில் விலை உறுதியானவுடன் ஓலையில் நிலம் பற்றிய விவரம், நில மதிப்பு, விலையை ஏற்றுக் கொண்ட தகவல் ஆகிய அனைத்தும் எழுதப்பெற்றுச் சபையோரால் கையொப்பம் இடப்பெற்றது. இஃதே ஆவணம் அல்லது பத்திரம் ஆகும். மூல ஓலைக்கு நகல் எடுக்கப்பட்டுப் படியோலை உருவானது. மூல ஓலை ஊர்ச்சபையிடமும் நகல் ஓலை நில உரிமையாளரிடமும் ஒப்படைக்கப்பட்டது. அனைத்து மூல ஓலைகளையும் ஊர்ச் சபையே சேமித்துப் பாதுகாத்ததால் ஆவணக் காப்பகமாகச் செயல்பட்டது.

---

1. வ. தங்கையா நாடார், **தென்னிந்தியத் தமிழ்ச் சாசனங்கள்**, ப. 7.

> "கடந்த காலத்தில் உருவாக்கப்பட்டதும் ஒரு நிறுவனத்தின் நடைமுறைப் பத்திரங்கள் மற்றும் நடவடிக்கைகளை எதிர்காலச் சந்ததியினருக்காக ஒரு குறிப்பிட்ட இடத்தில் பராமரிப்புச் செய்வதே ஆவணக் காப்பகம்"[2]

என்பார் கூற்று ஈண்டு நினைத்தற்குரித்து. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்களையும், ஊரின் பொதுச் சொத்தாக இருக்கும் நிலங்கள் பற்றியவைகளையும், அவ்வூர் மக்களின் தனிப்பட்ட நபர்களின் நிலங்கள்பற்றிய ஆவணங்களையும் பாதுகாக்கின்ற இடமாக ஊர்ச்சபை திகழ்ந்தது போலச் சைவத் திருமடங்களும் உள்ளன.

ஆவண வகைகள்

ஒருவருக்கு நிலத்தை உரிமையாக்கச் செய்யப்படும் பத்திரம் சுத்தக் கிரயச் சாசனம் எனப்பட்டது. சில காலம் உரிமையுடையதாய் ஒற்றிக்கு எழுதிக் கொடுக்கப்பட்டவை குத்தகைப் பத்திரங்கள். இவை அடகுமுறை ஆவணங்கள் என்றும் அழைக்கப்பட்டன.

ஒருவர் மற்றவரிடத்து நிலங்களை மாற்றிக் கொண்டதற்கு எழுதிக் கொடுக்கப்பட்டவை பரிவர்த்தனைப் பத்திரங்கள் என்று பெயர் பெறும். இவையேயன்றித் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் கிடைக்கப்பெற்ற ஆவணங்களில் முச்சிலிகா என்றும் கரார் நாமா என்றும் பெயர் பெற்றவை உள்ளன. இவை ஸ்ரீமடத்தின் அதிபரான ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுக்குக் கீழ் அவர்தம் உத்தரவுப்படி நடத்தற்கு எழுதிக் கொடுக்கப்பட்டவை.

> "அரசு மற்றும் தனியார் நிர்வாகத்தில் செய்கின்ற பணியினை உள்ளடக்கிய கோப்புக்களைத் தங்களுடைய எதிர்காலச் சந்ததியினர் சான்றாக எடுத்துக் கொள்ளக்கூடிய ஆவணங்கள் உண்டு"[3]

கரார் நமாவும் பணியாளர்கள் தம் கடமையைத் தாமே எழுதிக் கொடுப்பதாய் உள்ளது.

ஆவணங்களின் அமைப்பு முறை

ஆவணங்கள் நில அளவுக்கு ஏற்றபடி ஒரு அணா முதல் 10 ரூபாய் வரையுள்ள முத்திரையிடப்பட்ட தாளில் எழுதப்பட்டுள்ளன. திருப்பனந்தாள் மடத்தில் கிடைக்கப் பெற்றவைகளில் கி. பி. 1840க்கு முற்பட்டவை உருது, தெலுங்கு எழுத்துக்களால் ஆனவையாக உள்ளன. அவற்றுள் பனாரஸ் டிரஸ்ரி (BENARES TREASURY) என்று முத்திரை இடப்பட்டுள்ளது. ஆனால் அதே காலகட்டத்தில தஞ்சாவூர் மாவட்டத்தில் எழுதப்பெற்றவை தமிழால் ஆனவை.

சுத்தக்கிரயச் சாசனத்தின் முதற்பகுதி ஆவணங்கள் எழுதப்பெற்ற வருடம், மாதம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது. அதனை யார் யாருக்கு எழுதிக் கொடுத்தது

2 டி. ஆர் ஷெல்லன் பாக், **மாடர்ன் ஆர்க்கைவாஸ்**, ப. 11.

3. மு. இராசேந்திரன், **நூலாக நூல் வல்லோர் தமிழ்நாடு நூலக மாநாட்டு மலர்**, 1993.

என்பதை அடுத்த பகுதி குறிப்பிடும். அதனுள் வாங்குவோர், விற்போரின் ஊர், தெரு, தாலுக்கா, தந்தையின் பெயர், மதம், சாதி, தொழில் ஆகியவை தெளிவாக உள்ளன.

> "1916 ஆம் டிசம்பர் மாதம் 21 ஆம் நாள் கும்பகோணம் தாலுக்கா சத்திரங்கருப்பூர் கடைத் தெருவில் இருக்கும் சோமு பிள்ளை குமாரர் வெள்ளாழ ஜாதி சிவமதம் மிராசு கும்பலிங்கம் பிள்ளை அவர்களுக்கு ஷெ தாலூக்கா கொரனாட்டு கருப்பூர் கீழத் தெருவிலிருக்கும் கோவிந்த படையாட்சி குமாரன் படையாச்சி ஜாதி சிவமதம் மிராசு துரைசாமி படையாட்சி எழுதிக் கொடுத்த சுத்தகிரய சாசனம்"[4]

என்பது ஒரு சான்றாகும்.

இரண்டாம் பகுதி நிலத்தின் நான்கு எல்லைகளோடு அளவைகளைக் காட்டுகின்றது. பின்னர் நிலத்தின் மதிப்புத் தொகை, நிலத்தின் வருவாய், வரி கட்டுவது யார்? நில உரிமை மாற்றம், விதி முறைகளை மீறுவதால் உண்டாகும் தண்டனை போன்ற விவரங்கள் இருக்கும்.

இறுதிப் பகுதியில் மூலப் பத்திரமும் நகலும் யார் யாரிடம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் தரப்பட்டுள்ளது. முழு மனத்துடன் சுய சிந்தனையுடன் ஒப்புக் கொள்கின்றோம் என்று வாங்குபவரும் விற்பவரும் கையொப்பம் இட்டுள்ளனர்.

> "- - - - - இந்த கீறல் சாதிநாத அய்யரின் கைக்கீறல்"[5]

என்று நகக்கீரலும்

> "- - - - - இஃது அப்பாசாமியின் கைநாட்டு"[6]

என்று கைரேகைப் பதிவும் கையொப்பத்துடன் உள்ளது.

> "மேற்படி ஊர் தெருவில் இருக்கும் மகன் வெற்றிவேல் சான்று எழுதி உடன்படவும், கீரல் பூரித்ததும் அறிவேன்"[7]

என்று எழுதி சாட்சிகள் வரிசையாக மூவர் கையொப்பம் இட்டுள்ளனர். பின்னர் அவ்வாவண வரிகளில் இடம்பெற்றுள்ள பிழைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. (எ. கா) 15ஆவது வரியில் 'லி' அடித்தல்.

குத்தகைப் பத்திரமும் சுத்தக் கிரயப் பத்திரம் போன்ற அமைப்புடன் விளங்குகிறது. இடைப் பகுதியில் நிலத்தைக் குத்தகைக்கு வாங்கிக் கொள்பவன் வருடத்திற்கு 2 முறை நெல் அளப்பது பற்றியும், செலவிற்கு வாங்கிய பணத்தையும் நிலத்தையும் திரும்பக் கொடுப்பது பற்றிய செய்தியும் உள்ளது. சர்வே 720 என்று சர்வே நம்பர் சுட்டப்படும்.

---

4. திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் உள்ள ஆவணம், 1916ஆம் வருடம், 53ஆவது கட்டு.
5. திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் உள்ள ஆவணம், 1919ஆம் வருடம், 32ஆவது கட்டு.
6. மேற்கூறிய ஆவணம்.
7. திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில உள்ள ஆவணம், 1937ஆம் வருடம், 13ஆவது கட்டு.

"குறுவை நெல் புரட்டாசி மாசத்தில் 6 கலமும் சிறுமணியன் நெல் வருகிற மாசி 15க்குள் 4 கலமும் கூடுதல் நெல் 10 கலத்தையும் அந்தந்த காலக் கெடுவில் தங்களுக்குச் சர்க்கார் முத்திரை மரக்காலால் அளந்து விடுவேன்"[8]

"பணத்தை குறிப்பிட்ட தேதியில் தரவில்லை என்றால் 100க்கு 2 ரூபாய் தம்படி சேர்த்து நான்கு மாதத்தில் செலுத்தி விடுவேன்"[9]

என்று வட்டியிட்டுக் கொடுத்ததும் தெரிய வருகிறது. கரார் நாமா என்பது முத்திரைத் தாளில் எழுதப்படவில்லை. ஆவணம் எழுதும் முறை மாறாது எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. நிலம் பற்றிய தகவல் இதனுள் இல்லை. ஆனால் தாம் செய்யக் கூடிய அலுவல்கள், விதி முறைகள் அவைகளில் குறைவராமல் நடந்து கொள்ளும் உத்தரவாதம் ஆகியவை உள்ளன கி. பி. 1872இல் எழுதப்பட்டவை திருப்பனந்தாள் 4ஆவது இராமலிங்கத் தம்பிரான சன்னிதானத்துக்கு நேபாளம் இலாகா மண்டீசுவரம் மடம் கார்வார் அருணாஜலத் தம்பிரான் எழுதிக் கொடுத்ததாக உள்ளது.

உடன்படிக்கைப் பத்திரத்தைத் தஸ்தாவேஜ் என்று அழைக்கும் வழக்கம் உண்டு. கும்பகோணம் மகாதானபேட்டை ஆறுமுகம் பிள்ளை என்பவர் தனக்கு மனைவியும் சந்ததியும் இல்லாததால் சொத்து முழுவதையும் தனக்குப் பிறகு ஸ்ரீ காசிமடம் எடுத்துக் கொண்டு தர்மம் செய்ய வேண்டும் என்பதைக் காட்டுவது தஸ்தாவேஜ் என்று அழைக்கபபட்டுள்ளது.

அளவைகளும் ஆவணங்களும்

அக்காலச் சமுதாயத்தில் நிலங்கள் மக்களின் முதன்மைச் சொத்துக்களாக மதிக்கப்பட்டன. எனவே நில உரிமையாளர்கள் தங்களது நிலத்தினைத் துல்லியமாக அளந்து முறைப்படுத்திக் கொண்டனர். அரசின் வருவாய் பெரும்பான்மையும் நில வரியால் வருவதால் அரசும் அதற்குத் துணை நின்றது. நில அளவை முறைக்கு விதி வகுத்துக் கண் காணித்தது.

தொடக்க காலத்தில் மா, குழி, குறுக்கம், செய், தடி, வேலி போன்ற நில அளவுகள் குறிக்கப்பெற்றன. மேலும் நிலங்களை முந்திரி, காணி, மா, நிலம், பட்டி என்றும் பாகுபாடு செய்திருந்தனர். 6½ குழி அல்லது 1 முந்திரி என்பது ¼ காணியைக் குறித்தது. 2 முந்திரி கொண்டது ½ காணியாகும். 4 முந்திரி என்பது 1 காணி. 8 முந்திரி கொண்டது ½ மா என்று சொல்லப்பட்டது. 12 முந்திரி நிலம் என்றால் 3 காணி நிலம் என்று பொருள்படும். இஃது 1 ¾ மாணி என்றும் அழைக்கப்பட்டது. 100 குழி என்பது 1 மாகாணி எனப்பட்டது. 80 முந்திரி அல்லது 5 மா என்பது ¼ நிலம் என்று கூறப்பட்டது. ½ நிலம் என்றால் 100 குழி அல்லது 10 மா ஆகும். 1 நிலம் கொண்டவன் என்றால் 20 மா பெற்றவன் ஆவான்.

இவ்வளவைப் பெயர்களில் சிறிய அளவிற்கு ஏற்றவண்ணம் கோல் அல்லது தடி தயார் செய்து அதனால் அளந்து கணக்கிட்டனர். ஒரு குழிக்கு ஒரு கோல் அளவு எட்டுக் குழி யென்றால் எண் கோல் என்று அளந்தனர்.

---

8 மேற்கூறிய மடம், 1931ஆம் வருடம், 31ஆவது கட்டு.

9 மேற்கூறிய மடதது ஆவணம், 1913ஆம் வருடம் 5ஆவது கட்டு.

பிற்காலத்தில் ஆவணங்களில் இவ்வளவைப் பெயர்கள் வழக்கிழந்தன. கி. பி. 1860இல் கிடைத்தவை கொண்டு காணும் பொழுது அக்காலத்திலேயே செண்ட், ஏக்கர் போன்ற அளவுப் பெயர்கள் வழக்கில் உள்ளன.

> "மிராசு 65 வயதுள்ள ரெங்கசாமிக்கு செண்ட் 50 போக பாக்கி ஏக்கர் 2 இதனை சேர்த்து 50 செண்டு 2 ஏக்கர் நிலத்தினை நாளது தேதியில் தங்களிடம் கிரயம் ரூ. 600 வீதம் பெற்றுக் கொண்டு"[10]

என்ற வாசகங்கள் அதனைக் காட்டும்.

நிலங்களை அளக்கும் பொழுதே நான்கு எல்லைகளும் தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளன.

> "சத்திரங் கருப்பூர் கிராமத்தில் வெங்கோபராயர் நஞ்சைக்கு கிழக்கு இராஜ கோபால சுவாமி கோவில் நஞ்சைக்கு மேற்கு காவேரி ஐயன் கரைக்கு வடக்கு புருஷோத்தம செட்டியார் நஞ்சை புஞ்சைக்குத் தெற்கு. இந்த நான்கு எல்லைக்கு உட்பட்ட"[11]

என்றும் ஒரு செண்ட் ரூ. 32 மதிப்புள்ள நிலத்தை என்றும் கூறியுள்ளதால் அக்காலத்து நில மதிப்பும் நமக்குத் தெளிவாகும். நில அளவுக்கு ஏற்ப வரி விதிக்கப்பட்டது. அதனை நில உரிமையாளர்களே செலுத்திக் கொள்ள வேண்டியது. ஏதாவது அந்நிலத்தின்மீது கடன்கள் இருந்தால் சொத்தின் பூர்வ பாத்தியக்காரர் முன்னின்று தீர்த்துக் கொள்ள வேண்டியது என்று தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளதால் நிலத்தைப் பாகுபாடு செய்தல், வரி கட்டுதல், உரிமம் கொள்ளல் போன்றவற்றில் எந்தவொரு சிக்கலும் இல்லாமல் அக்கால மக்கள் நுணுகிக் கண்டு தெளிவு பெற்று வாழ்ந்தமை புலனாகிறது. நில அளவைப் பெயர்களேயன்றி நிலங்களில் இருந்து வருகின்ற நெல்லை அளக்கும் கருவிகள் பெயர்களும் தெரிய வருகின்றன. பொதி, கலம், மரக்கால், நாழி, குறுணி, உழக்கு போன்ற முகத்தலளவைகள் கொண்டு அளந்து வந்துள்ளனர். இவைகளுள் பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்டவை மரக்கால், நாழி, கலம் என்பவை இறைவன் அல்லது அரசன் பெயர்களை அவ்வளவைக் கருவிகளுக்கு இட்டுள்ளனர். இராஜராஜ சோழன் காலத்து மரக்கால் ஆடவல்லான் என்ற பெயரால் அழைக்கப்பெற்றமையை அறியலாம். திருமூலன் நாழி என்று இறைவன் பெயராலும் அழைத்தமை புலனாகும். அக்கருவிகள் அளவு சரி பார்க்கப்பட்டு அரசாங்க முத்திரை பதிக்கப்பட்டுள்ளது. அம்முத்திரை இடப்பட்ட மரக்கால் போன்றவைதான் அளப்பதற்கு மக்களிடையே புழக்கத்தில் விடப்பட்டுள்ளது.

முடிவுரை

நிலங்களுக்கும், மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் நிலங்கள் பாகுபாடு செய்யப்பட்டு அளந்து வரையறை கொடுத்து அக்காலத்திலிருந்து மக்கள் செம்மையாகக் கொண்டு வந்துள்ளனர். ஒரு முறையான ஒழுங்கமைந்த சமுதாயமாகத் திகழ்ந்துள்ளது.

---

10. மேற்கூறிய மடத்து ஆவணம், 1860ஆம் வருடம், கட்டு 3.
11 மேற்கூறிய, 1916ஆம் வருடம், 53ஆவது கட்டு.


STAMP OFFICE
1843

ச. கண்மணி
இணைப்பேராசிரியை
தமிழ்த்துறை
எஸ். எஃப். ஆர். மகளிர் கல்லூரி
சிவகாசி

பெரிய ஆனந்தக் களிப்பு

காமராசர் மாவட்டத்தில் சாத்தூரை அடுத்துள்ள ஏழாயிரம்பண்ணை என்ற ஊர் முருகன் கோயிலில் அடுப்பெரிக்க வைத்திருந்த குப்பைக் குவியலிலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஓலைச்சுவடிக்கட்டு ஒன்றினுள் பெரிய ஆனந்தக் களிப்பு என்ற பெயரில் 24 பாடல்கள் உள்ளன.

பழனி முருகன் பவனி வருவதாகவும் அதைக் கண்டு ஒரு பெண் தன் தோழியிடம் கூறுவதாகவும் இவை அமைகின்றன. முதல் பாடல் விநாயகப் பெருமான்மீது பாடிய வாழ்த்து ஆகும். இப்பாடலில் விநாயன் என்றே அழைக்கப்படுகிறார்.

பிரித்துப் பொருள் கொள்ள இயலாத கடினமான தொடர்கள் சிலவும் உள்ளன.

(எ-டு) கெச்சிதற டாசினியார் (பா. 2)
பாலிடான சௌடிபா (பா. 6)
சுனலி வாலுடையோன் (பா. 6)

பொருள் புரியாத சில கடின பதங்களும் உள்ளன.

(எ-டு) டால் (பா. 2)
நச்சில்லர் (பா. 4)
முருகந்திறகாயுதம் (பா. 7)
மன்னியற்கள் (பா. 20)

வடசொற்கலப்பு மிகுதியாக உள்ளது.

(எ-டு) சந்தோஷம் (பா. 10)
பிரசித்த. மயூர (பா. 11)

பேச்சுவழக்கே பல பாடல்களில் பயின்று வந்துள்ளது.

(எ-டு) போர்த்தி - போத்தி (பா. 2)

வெற்றி - வெத்தி (பா. 9)

நான்கு - நாலு (பா. 9)

உற்சாகம் - உச்சாகம் (பா. 10)

செந்நெல் - சென்னல் (பா. 18)

சல்லிசல் (பா. 15)

வருகிற - வாற

விசையகிரி வேல் சின்னோபன் என்ற புரவலன் முக்தி பெற்ற பின்னர் (பா. 4) அவனது குமாரன் விசையகிரி வேலாயுதச் சின்னோபராயன் புரவலனாகிய காலத்தில் (பா. 6) இந்நூல் இயற்றப்பட்டதெனத் தெரிகிறது.

2. 3. 4ஆம் பாடல்கள் பழனி முருகன் பவனி வந்தபொழுது காணப்பட்ட அலங்கார பரிவாரங்கள் பற்றிப் பகர்கின்றன. 5ஆம் பாடல் முருகனைப் புகழ்கிறது. 6ஆம் பாடல் முதல் 10ஆம் பாடல் வரை முருகன் பிறந்து வளர்ந்து சூரபன்மனை அழித்த புராணக் கதை விதந்தோதப்படுகிறது. தேவரைச் சிறை மீட்டமையும் தெய்வானையை மணந்தமையும் 11ஆம் பாடற் செய்திகளாம். 12ஆம் பாடல் முதல் 14ஆம் பாடல் வரை முருகனை வணங்க வந்த பல நாட்டவரின் பட்டியல் இடம்பெற்றுள்ளது. துளுவை மட்டில்லியார் முதல் மிலாடர் வரை சுமார் 45 இனத்தவரைச் சுட்டிச் செல்வது குறிப்பிடத்தகுந்தது. 15ஆம் பாடல் முதல் 18ஆம் பாடல் வரை முருகன் பெருமைகள் பேசப்படுகின்றன. 18ஆம் பாடலில் முருகன் அகத்தியருக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தது தொடர்பான புராணக் குறிப்பு இடம்பெறுகிறது. தெளிவான பொருள் விளக்கம் கிடைக்கவில்லை. 19ஆம் பாடலில் நக்கீரர் தொடர்பான புராணக் குறிப்பும், திருஞானசம்பந்தர் செய்த புனல்வாதமும், கூன்பாண்டியனின் நோய் நீக்கமும், சமணரைக் கழுவேற்றிய செய்தியும் எனப் பல குறிப்பிடத்தக்க செய்திகள் உள்ளன. 11, 20ஆம் பாடல்கள் மீண்டும் புரவலன் வேலாயுதச் சின்னோபராயனைக் குறிப்பிட்டு அவன் முருகனை வணங்குகிறான் என்று புகழ் பாடுகின்றன. 21ஆம் பாடல் முதல் 23ஆம் பாடல் வரை அமைந்தவற்றில் பழனியில் உள்ள சன்னதிகள், மடம், மூர்த்திகள், துறைகள் முதலியவற்றைப்பற்றிக் குறிப்புகள் உள்ளன. 23ஆம் பாடல் இடும்பனையும் அவன் காவடி தூக்கியமையையும் குறிப்பிடுகிறது.

பாடல்கள் அனைத்திலும் ரகர றகரப் பிழைகள் பெருவாரியாக மலிந்துள்ளன. ளகர ழகரப் பிழைகள் ஆங்காங்கு உள்ளன. பேச்சு வழக்கிலமைந்த நாட்டுப்புறப் பாடல்களை எழுதி வைக்கும் வழக்கம் பண்டுதொட்டுத் தமிழகத்தில் உள்ளது என்பதற்கு இச்சுவடி சான்றாக அமைகிறது. பாடல்கள் பின்வருமாறு :-

பெரிய ஆனந்தக் களிப்பு

1. திருவளர் முராரி முருகேசன் தர்மதேசிகசிகாமணி சபாபதி குமாரன்
குருபரமெஞ்ஞான வடிவேலன் பழனிகுமரகுருநாதன் மேல் இனிய
தமிழ்மாலை
ஒருசொல் மொழி வாய்மை தவறாமல் வானிலுதவி அருள் ஆனந்தக்
களிப்பை யான்பாட
பருவநெறி முறைமை தவறாமல் தெய்வ பக்தர் விநாயன் பொற்பாத
மறவேனோ.

2. கெச்சிதற டாகினியார்கள் சுத்தர் கேள்வர் முதலாக வெகு தெச்சணமும்
பட்சமொடு பிரதட்சணமாக வந்து உன் பாதாரவிந்த மலர் போத்தி
முன்னடக்க
எட்சண பஞ்சவர்ணடாலும் யழகுக்கினிய புகழ்வசவசங்க டாலும் இலங்க
மச்சநிகர் மகரடாலுடனே நல்லமரகத மயூர்கனவடாலும் இலங்க

3. பச்சடால் அனுமந்த டாலும் உக்கிரபராக்கிரமஞ் சேவல் பதாக டாலும்
துலங்க
கெச்சகமும் கிரிசெம்பி டாலும் சிங்கடாலும் வந்திருபுறம் நடக்க
அச்சயமாய் அன்னக்கொடி டாலும் பாலிடானசௌடி பாவாயும்
நின்றசைக்க
தச்சஉத்திருட்சக் குடைகவிழ்க்க வெண்தரளக்குடை பவளக்குடை
வயிடூரியக் குடையும்.

4. பிச்சிப்பூ தைத்த கோரதக் குடையும் எங்கும் பேரான பூச்சக்கிர வாளக்
குடையுடனே
நச்சில்லர் நவரத்தினக்குடையும் சுருட்டி நலவெள்ளைப்பக்கமும் நலமாய்ச்
சூழ்ந்திலங்க
நலமாய லட்சம் பதினாயிரங்கோடி துரகரசப்தாதியுடன் மேளம் முழங்க
யெச்சிலிட்டு முத்திபெற்ற கோமான் தமிழுக்கிசையான விசையகிரி வேல்
சின்னோபன்

5. சொல்ல முதலாகம புராண வேதச்சுருதி முதலாகிய பராபர சொரூபன்
வல்லபை மணாளன் ஒத்தைக்கொம்பன் கரடமதயானை முகவனுக்கு
இளையவேல் முருகன்
கல்லனைய புயன் இராவணனை வென்ற கரியமா சுதனைக்குட்டிக்
கடுஞ்சிறையில் வைத்தோன்
தில்லை நடமாடு நாதனுக்குக் காதில் சிவதீட்சை உபதேசம் செய்த
குருநாதன்

6. பில்லிசூனியம் அண்டர்முண்டன் பூதபிரேத ராச்சதை விருமறாச்
சதமுகாரன்
மெல்லியவேள் சகலகலை நிபுணன் குமார விசையகிரி வேலாயுதச்
சின்னோப ராயன்

அல்லும் பகல் அறுபது நாழிகையும் போற்றி அடிபணியும் குலதெய்வம்
ஆன குமரேசன்
சொல்லுலவு கேள்வரையாளன் பச்சைச் சித்தாறு கொண்ட பால்சுனலி
வாலுடையோன்

7. சத்தமகமேரு கிரிவடபால் மந்திரகூச்ச அதிகதவம் செய்யும் காசிபர்
மாய்கையும்
சித்தயனும் யாதியிலும் மிக்கக்கூடி திறமாக நால்வருட சேனை வெள்ளம்
பயின்றார்
பத்திமுத்தி வயிராக்கியத்தாலே சூர்பற்பமாவும் யீஸ்பரனால்
வெகுவரங்கள் பெற்றோன்
முத்திபெற்ற பூசாபலத்தால் வச்சிர முருகந்திற காயுதம் நூத்தெட்டு யுகம்
பெற்றோன்

8. மத்தியில் ஓராயிரத்தெட்டு அண்டம் புரக்க வகையான இந்திர விமானத்
தேர் பெற்றோன்
சுத்தழகு வெகுவிஸ்தீரணமான கோட்டை சூழ்ந்திடும் இயேந்திர நகர்
துரைராசசூரன்
வித்தையில் மகாமாய்கை உடையோன் பூதவெகுசேனை தளமுடனே
மூலபிலம் படைத்தோன்
புத்தேளிர் முதலானபேரை சிறையில் போட்டு அமரர்பதிதனையும் புரந்து
அரசுசெய்து

9. வெத்தி கொண்டு இருநாலுதிசையும் திக்குவிசையம் செய்து ஒருகுடைக்குள்
அரசுபுரிநாளில்
சத்திவடிவேல் கைப்பிரசண்டன் வெகுசகாகோடி பூதவெள்ளச்சேனை
படையுடனே
சித்திரவீர பாகுதேவர்முதலாய்த் திருச்செந்தூரில் வந்து இருந்து
உண்மைநீதியாக
புத்தியுள்ள வீரவாகுவைத் தூதாய்விடுத்துப்போய் வீரவாகு
வெகுவீரியமெல்லாம் நடத்தி

10. உத்தண்டசவுரிய கோபமதாய் சூரன் உச்சாகமாய்ச் சொன்ன உச்சிதக்
கிருவிதத்தை
சத்து மனதிலும் எண்ணாமல் மெத்தசந்தோஷமாய் வந்து கடலுடன் சொல்ல
மெத்தவெகு துடியாகச் சென்று பூதவெகுசேனை தளத்துடனே மேவி
அவுணர்களையும்
குத்தி மடங்கலும் மடியத் தாக்கிப் பொருத கொடிய சூரனை மடிய
இருபிளவு செய்து

11. நித்தப் பிரசித்த மயூரவெத்திநிரை சேவல் கொடியாக நிறுத்திய வியாழன்
எத்திசையும் புகழாக வானோர் சிறையும் இடுக்கந்து அவிழ்த்து அயிருபதம்
மீட்டும்

கத்தின அமரர்பதி அனைத்தும் மிக்ககருணை செய்து தெய்வானை
அம்மனை மணந்தோன்
வித்திய வினோத செம்பீரன் ததுங்கவிசையகிரி வேலாயுதச் சின்னோப
ராயன்

12. பத்தி செய்யும் குறிஞ்சிநகர் கோமான் செய்ய பழனிமலையாதிபதி
அயிருபதமேறி
மித்திரர் பரிபாலினங்கள் வாற பழனிவேலாயுதக் கடவுள்பவனி பார் தோழி
அச்சியெறி நாசெறிதுளுவை மட்டில்லியார் நிகும்பையார் சோனகர்
தெலுங்கர்
கொச்சிகேயாதியர் மருடர் வடகர் குடகர் கருநாடிமலையாளர் குருநாடர்

13. மச்சர் கொங்கருணவர் கடவர் மறவர் கொழும்புவர் தெலுங்கர் மலையாளர்
துளாயிறவர்
உச்சினி மாகதர் குலிங்கர் கெவுடர் உன்னிதர் மகுந்தர் வங்காளர் மதங்கர்
குச்சலர் துலுக்கர் துலுக்காணர் மகுதர்குகுதர் கோசலர் ஈழர் ஆதியர்
பப்பரரும்
இச்ச யாப்பாணம் கதிர்காமம் தொனியிலகு புடகறன் கொங்கணியர்
பைங்கோர்வை

14. நிச்சய மன்னார் கொழும்பு மாத்தூர் கப்பல்நெறி யிறிலங்கையார்
கோவையர் சிங்களவர்
உச்சிதக் கண்ணடியர் தொண்டியாரும் சீனர் ஒட்டியார் காப்புலியர் மிலாடர்
இச்சையுடன் தாசர்களும் வந்து அவர்கள் இருகையையும் சிரமேல் குவித்து
முன்னடக்க
பச்சை மயிலேறியே உலாவி வாற வேலாயுதக் கடவுள் பவனிபார் தோழி

15. நல்ல வையாபுரி நன்னாடன் தெய்வீக நலமான பழனியூர் நளினப்
பிரகாசன்
வல்லியசெங்கடப்பந் தாருடையோன் வீரியமரகத மயூரபரிப்படைத்த
கருணாளன்
அல்லடர் கடாக்கழுத்தும்பிவாகன் அழகான சேவல் பதாகைப் பிரதாபன்
சல்விசல் விருதுபெற்ற தீரன் நல்லதாடாண்மையாகிய மும்மூர்த்திறவசீரன்

16. வல்லசபாபதி ஆணை தவறான் முக்கிய மணிருத்திருட்சரற்றின் மாலிகை
ஆபரணன்
மெல்லிய பூந்தேரில் எழுந்தருளி வாற வேலாயுதக் கடவுள் பவனி பார்
தோழி
பன்னிருகை ஆறுமுகமூர்த்தி செஞ்சொல் பார்மகள் தனக்கு இனிய
வாக்குவரம் கொடுத்தோன்
பொன்னுலவு திருப்பரங்குன்றோன் நீடுபுனலெறியும் திருச்செந்தூர்ப்
புண்ணிய விசாகன்

17. கன்னிகார்வனநகர் சிறந்தசெல்வி காராவுடன் அங்கதிர் பூமி அக்கினியும்
உன்னிதமாய்ப் பூசைகள்செய்யும் நிலமை உகந்த திருஆவினங் குடியு
வளமான
நன்னதென் பழனிமலை நாதன் புதுமைநாடெனும் தருவனைய திருவேற்க
வுடையோன்
மன்னிய தலங்கள் பல அனைத்தும் நின்ற மலைதோறும் குன்று தோறாடல்
எனப் பெற்றோன்

18. சென்னல் வளமீறிய தண்டலைசூழ் கன்னல் திரையிடும் புகழ் வந்திச்
சோலைமலையான்
இன்னிலமு யெங்கும் ஒருபொருளாய் நிறைந்த யேனைபங்காள பரதேசிகா
வலவன்
தன்னிலமை யானகுருமுனிக்கி நல்தமிழ்ப்பனுவல் ஆடுறஅமுத்து ஓதிய
தப்பற ஏழ்
பன்னீற்று ஆதித்தன் மலைமகள்க்கு சவுபாக்கிய பரகெதி பவுசு பதவியும்
கொடுத்தோன்

19. தொன்முறை நற்கீரனுக்காக கிரியைத் துணித்த பூதத்தையும் துணித்த சுடர்
வேலோன்
பின்னையும் சம்மந்தராயர் பிறந்து வைகைபெருகும் திரு ஏற்கத்தியேடு
எழுதி வைத்தோன்
தென்னவன் கடன்சுரம் தவிழ்த்தோன் தெய்வசேனாபதிக் கடவுள் கங்கை
அருள் புத்திரன்
ஒண்ணலா எண்ணாயிரம் கங்கை அருள் புத்திரன் சவுணைக் கழுவில்
உபாயமுடன் ஏத்துவித்த உத்தண்ட தீரன்

20 துன்றுபுகழ்தரணி காராயன் ராசதுரை விசையகிரி வேல்ச் சின்னோவராயன்
நன்னய தமிழ்மாலைப் போற்றிமாலை சாற்று ஞானதேசிகக் கடவுள் மாற்
பணியும் கோமான்
மன்னியற்கள் சேனைபடை சூழ் உக்கிர வலிய கொம்புற்ற தகைக் கிடா
மீதில் எழுந்தருளி
மின்னியல்வேள் உன்னிதமாய் வாற பழனி வேலாயுதக்கடவுள் பவனி
பார்தோழி

21. இஷ்டமுறைக் கண்ணனுக்காக உனந்த காளஸ்திரி ஈஸ்பரனும்
ஞானப்பூங்கோதை சன்னதியும்
வட்டிலை வெண்டாமரையாள் நதியும் நித்தமயேஸ்வரர் பூசைசெய்யும்
பாலையார் மடமும்
கட்ட மகுமலையடிவாரத்தில் யிலங்குகல்மண்டபக் கனியும்
சேர்வினாயகனும்
மட்டவிழ் செங்கண் பதியும் குழந்தை குருவடியிடும் பேஸ்வரனும்
வரிசைக்கணபதியும்

22 தொட்டசிலை வினாயகனும் ஆதிதும்பிமுக அருஞ்சுப்பிரமண்ணிய பிள்ளையாரும்
யிட்டமதில் பாரவேல்பீட மயிலு யீஸ்பரிதண்டேஸ்பரனு மதுவர் பாலகரும்
வட்டளவில்லாத வானவரும் சூழ்ந்த வளமான பழனியுறை சின்னக் குமாரன்
சட்டபரி ஆறுமுகக் குமாரர் பெரிய சிவலோக நாதரும் வீரவாகு தேவர்

23. வெட்டிச்சுனைப் பஞ்சவர்ணப் படுக்கை பாதை மேச்சரிவில் ஏணிச்சுனை திருமஞ்சனத் துறையும்
வீட்டிவெகுநாதர் சுனையும் நினைவில் விசையகிரி வேலீசுபர முடையார் சன்னதியும்
சட்டிமுனிச் சொல்படி இடும்பன் சென்று காவடி எடுத்துவந்த சத்தி சிவகிரியும்
கொட்டிமிடு காராவின்படையும் தெப்பைக்குளமுடனே பூப்பாரையோடு ஆறு ஆருநூருர்

24. அட்ட மங்கலாமென மலையம் பழனி ஆறிரண்டு மங்கலா அழகு அசோதை புன்னும்
கட்டடு மட்டாயச் சேணித்திலங்கு வளமும் நிறைந்த கனகாபுசேக ரற்றின பழனி நகர்க்கதிபன்
செட்டி வய்யாபுரி நன்னாடன் வகைத்திறல் விசையகிரி வேல்ச் சின்னோவன் போற்றி
மட்டுமரகத மயில்மீதிலேறி வாற வேலாயுதக் கடவுள் பவனிபார் தோழி.

☐

ச. பரிமளா
தலைவர்
தொல்லறிவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்
&
கா. சத்தியபாமா
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி
தஞ்சாவூர்

மெக்கன்சி சுவடியில் மீனியல் செய்திகள்

முன்னுரை

தமிழகத்தில் வாழ்ந்த மிகப் பழைய குடியினர் வில்லவர். மீனவர் என்பவர்களே ... இவ்விரு கிளையினத்தவர்களும் இந்தியா முழுவதும் பரவியிருந்த தொல்குடியினர் என்பதும் (கா. அப்பாத்துரை. 1962). வலைவீசி மீன் பிடிக்கும் மீனவமக்கள் பாண்டிய மக்களோடு தொடர்புபடுத்தப்பட்டிருப்பதும், துஷ்யந்தனின் மகனான பரதனின் வம்சத்தவர்களே இவர்கள் என்பதும், . கௌரவர், பாண்டவர் தோன்றிய குடியிலே தோன்றியவர் என்பதும், மதுரைப் பாண்டியனின் வழித் தோன்றல்கள் என்பதும் (ச. முருகானந்தம், 1990) இவர்களை அரச வம்சத்தினராகக் காட்டுகின்றன. ஆனால், கால்டுவெல், நீலகண்டசாஸ்திரிகள் போன்ற வரலாற்று ஆசிரியர்களும், சீனப்பயணி பாஹியானும், ஜேம்ஸ் ஆர்னெல் போன்ற ஆங்கில அதிகாரிகளும் பரதவரை மிகத் தாழ்ந்த சாதியினராகக் குறிப்பிட்டுள்ளனர். வரலாற்று ஆய்வுக்குரிய இப்பரதவர்கள் மிகப் பழங்குடியினரான நாகர் இனத்தைச் சார்ந்த மீனவர்களான 'பரதர்', 'பரவர்', 'பரவா', 'பரதவர்', 'வலையர்' என்பாரைக் குறிக்கும் என்பதும் ஜேம்ஸ் ஆர்னலின் (1920) கூற்றாகும்.

இப்பரதவப் பெருங்குடி மக்களைக் குறித்த பழம்பெரும் செய்திகளைத் தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும், பிற்கால இலக்கியங்களும் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், அவை அம்மக்களது அக்காலச் சமூகநிலை, அவர்களது தொழில்துறை, பயன்படுத்திய மீன்பிடிப்புக் கருவிகள், வலையில் கிடைத்த மீன்களின் வகைகள் போன்றவற்றை அறிந்து கொள்வதற்குரிய அனைத்துச்

சான்றுகளையும் விரிவாகத் தருகின்றன என்று கூறுதற்கியலாது. வேறு நூல்களிலும் மீனவர்களைக் குறித்த செய்திகள் அதிகமில்லை எனலாம்.

அவ்வகையில். மெக்கன்சியின் காகிதச் சுவடியில் குறிப்பாக. பழவேற்காடு வரலாற்றைக் கூறும் சுவடியில் (சுவடி எண். 3082) 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் 15 - 16ஆம் நூற்றாண்டுகளிலும் அங்கு வாழ்ந்திருந்த மீனவர்களது சமூகநிலைபற்றியும் பல செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இக்கால மீனவர்களது வாழ்வுமுறை. மீன்பிடிப்புக் கருவிகள் இப்போது கிடைக்கின்ற மீனினங்கள் இவற்றுடன் அக்கால மீனவர்களது வாழ்வு முறை மீன்பிடிக் கலங்கள் மற்றும் கருவிகள். மீன் இனங்கள் இவற்றை ஒப்பிட்டு அறிவதற்கும் மீனியல் தொடர்பான வேறு பல செய்திகளை அறிந்து கொள்வதற்கும் இச்சுவடி துணை செய்கின்றது எனில் அது மிகையன்று.

பொதுவாக. காகிதச் சுவடிகளில் அறிவியல் தொடர்பான செய்திகள் மிக அதிகமில்லை என்னுங்காரணத்தால் இச்சுவடியில் காணப்பெறும் செய்திகள் அனைத்தும் வரிக்கு வரி மாற்றங்கள் ஏதும் செய்யப்பெறாமல் இங்கு தரப்பட்டுள்ளன. அவ்வகையில் பரதவ சமூகத்தின் சாதிப் பிரிவுகளும் தொழிலும். மீன் பிடிப்புக் கருவிகளும். கடலிலும் ஆறுகளிலும் கிடைக்கின்ற வெவ்வேறு வகையான மீன்களின் பெயர்களும். அவற்றின் வடிவங்களும். அளவுகளும் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரையின் முடிவில் இன்றைய மீனியல் செய்திகளுடன் இப்பதிவுகள் ஒப்பு நோக்கப்பட்டுக் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மீனியல் தொடர்பாக ஆய்வு செய்துவரும் ஆய்வாளர்களுக்கு இச்செய்திகள் பெரும் பயனளிப்பவையாக உள்ளன

தொழில்

கடலில். பட்டணவரும் கரையாரும் மட்டுமே மீன் பிடிப்பர். ஆற்றுச் கழியிலே பட்டணவரம் கரையாரும் மீன் பிடிப்பதுமல்லாமல் செம்படவரும் மீன் பிடிப்பர். பட்டணவரும் கரையாரும் சமுத்திரக்கரையோரத்திலாவது ஆற்றுக் கழியோரத்திலாவது குடியிருப்பதேயல்லாமல் கரையோரம் அல்லாத ஊர்களில் குடியிருப்பது இல்லை. இந்தப் பட்டணவரும் கரையாரும் வலை முடைதல். மீன் பிடித்தல். படகு விடுதல் முதலான தொழில்களைச் செய்வர். இவர்களில் பெண்கள் சில சமயங்களில் ஆண்களோடு வலை இழுப்பதோடு அல்லாமல் பச்சை மீன்களையும் கருவாடுகளையும் விற்பர். பட்டணவரும் கரையாரும் பேசுகின்ற தமிழ் மிகவும் கொச்சையாக இருக்கும்.

செம்படவர்கள் கரையோரங்களில் குடியிருப்பதைத் தவிர ஆற்றோரங்களிலும் குடியிருப்பர். இந்தச் சாதி ஆண்கள் வலைமுடைவர். மீன் பிடிப்பர். பெண்கள் மீன். கருவாடு முதலானவற்றை விற்பதோடு சிலர் துணி நெய்வர்.

கடலில் ஆமை கிடைக்கும். இது நான்கு ஆள் சுமை. 5 ஆள் சுமையாக இருக்கும். அந்தக் கரையில் நண்டுகள் அகப்படும். அவை சிறியவையாக இருக்கும். ஆற்றுக்கழியில் நண்டுகள் அகப்படும். அது குத்துக்குத்துப் பெரிதாய்ப் பெரிதாகவும் இருக்கும். இவற்றைத் தவிரத் தூண்டில் கொண்டு கடலில். ஆற்றங்கழியில் மீன் பிடிப்பதும் உண்டு.

கடல் மீன்களில் திமி என்பதும் திமிங்கிலம் என்பதும் யானையை விழுங்கும் மீன். மனிதரை விழுங்கும் பேய்ச்சுறா மற்றும் பல மீன்கள் வலைகளில் அகப்படாது.

கடலிலே மீன் பிடிக்கின்ற வலைகளின் பெயர்களும் மீன் பிடிக்கின்ற விதமும் காலமும்

காவ செட்டி, தான முதலி சொன்ன கைபீது

பெருவலை

இதன் முனையில் பை இருக்கும். பத்து ஆள். பன்னிரெண்டு ஆள் சுமை இருக்கும். அதைச் சமுத்திரத்தில் அரை நாழிகை வழி மட்டுக்கும் போட்டு இரு பக்கத்திலேயும் இருக்கிறது. போகின்றபோது ஒரு படகிலே வலையைப் போட்டுக் கொண்டு. மூன்று ஆள் அல்லது நான்கு ஆள் ஏறிக்கொண்டு அந்த வலை ஒரு குனைக்கயிற்றைப் பிடித்துக் கொண்டு. ஒருவன் கரையிலே நிற்பான். மற்ற வலையெல்லாம் சமுத்திரத்திலே அரைநாழி வழி தூரம் போய் அங்கே இருந்து 500 மார் நீளம் இருக்கும் அதுக்குள்ளே பை 10 அல்லது 12 மார் நீளம் இருக்கும். தேங்காய் நார் கயிற்றால் பின்னுவது. மேல் வலை உள் வலையைச் சணல் பிரியாலே பின்னுவது. அகலம் 2 மார் நீளம் அளவிலே விட்டுக் கொண்டு 6 மடங்காகத் திரும்பி அளவிலே விட்டு மற்றொரு குனைக் கயிற்றைக் கரையிலே கொண்டு வந்து கடலில் நிறுத்திப் போட்டு 30 பேர் 35 பேர் ஆண்களும் பெண்களும் இரண்டு பக்கங்களிலும் இழுப்பார்கள்.

மப்பும் மாரியும் (மழையும்) பனியுமாக இருந்து காற்று அதிகமில்லாமல் ஒடுக்கமாக இருந்தால். வெள்ளாரா. சுறா. திருக்கை முதலாகிய மீன்கள் அதிகமாய் அகப்படும். காற்று அதிகமானால் மீன் அதிகம் அகப்படாது.

பெருவலையில் மீன் அதிகமாக அகப்பட்டால் 10 வராகன் 12 வராகன் மீன் அகப்படும். குறைந்தது 6 வராகன். 4 வராகன். 2 வராகன். 1 வராகன் இப்படி இருந்தாலும் இருக்கும். இந்தப் பெருவலையைச் சமுத்திரத்திலே போட்டுப் பகலிலே மீன் பிடிப்பது மட்டும் அல்லாமல் சில வேளைகளில் இரவிலே பிடிப்பார்கள். இந்தப் பெருவலையில் மழைக் காலம் பனிக் காலம் ஆகிய காலங்களில் மட்டும் மீன் பிடிப்பார்கள். கோடை காலத்தில் பிடிப்பது இல்லை. பிடித்தால் மீன் கிடைப்பது இல்லை. கோடை காலத்தில் பெரு வலையைக் கரையிலே கட்டி வைப்பார்கள். மிகுதியாக மீன் அகப்பட்டால். அப்பொழுதே லாபக்காரருக்கு ஒரு வராகன் மீன் ¼ வராகனாகக் கொடுத்து விடுவார்கள்.

அவர்கள் கொண்டு போய்ச் சென்னைப் பட்டினம் முதலான இடங்களில் விற்றுக் கொள்வார்கள். மீதமாய்க் கொஞ்சம் இருந்தால் பெண்கள் எடுத்துக் கொண்டுபோய் அருகாமையில் இருக்கிற தெருக்களில் விற்றுக் கொள்வதும் உண்டு. இது தவிரப் படகில், கட்டு மரத்தில் மீன் பிடிப்பதற்குப் பெண்கள் செல்வது இல்லை.

தூரிவலை

இவ்வலைக்குள் பை இருக்கும். இது இரண்டாள் சுமை கொண்டது. 20 மார் நீளம் ஒரு மார் அகலம் இருக்கும். இதை ஒரு கட்டுமரத்திலே ஏற்றிக் கொண்டு ஒரு பெரிய பறியும் வைத்துக் கொண்டு, அதிலே இரண்டு ஆள் ஏறிக் கொண்டு 2 பக்கத்திலேயும் இரண்டு கட்டு மரங்களில் நான்கு நான்கு பேர் ஏறிக் கொண்டு ஆக 10 பேர் சமுத்திரத்தில் ஒரு நாழி வழி தூரம் 1½ நாழி வழி தூரம் போய் மீன் கூட்டங்களைக் கண்ட இடத்தில் இரண்டு பக்கத்திலேயும் இருக்கிற இரண்டு கட்டு மரக்காரரும் அந்த வலை 2 குனைக் கயிற்றையும் பிடித்துக் கொண்டு 2 பக்கத்திலேயும் இழுத்துக் கொண்டும் நெருங்கிவந்த பிற்பாடு நடுவே இருக்கிற கட்டுமரக்காரன் 2 பேரும் வலையைப் பிடித்து மீனைத் தூக்கிப் பறியிலே போட்டுக் கொள்வார்கள்.

இப்படி 10 முறை 8 முறை பிடித்துப் பறி நிரம்பினால் பின்னர்க் கரைக்கு வருவார்கள். இதில் கானாங்கழுத்தன், சுதும்பு, முள்ளுவாளை, ஓலைவாளை முதலாகிய மீன்கள் கிடைக்கும். மீன்கள் அதிகமாய்க் கிடைத்தால் இரண்டு வராகன் மீன் இருக்கும் குறைவாக இருந்தால் 1 வராகன் கிடைக்கும்.

மாவலை

இது ஐந்து அல்லது 6 மார் நீளத்தில் இருக்கும். ஒரு பை இருக்கும். அகலம் 5 அல்லது 6 மார். நான்கு கட்டு மரத்தில் 6 பேர் ஏறிக் கொண்டு, வலையும் பறியும் வைத்துக் கொண்டு போய் மூன்று அல்லது நான்கு ஆள் புருஷத்திலே வலையைக் கீழே விட்டு புருஷம் 1 ஆள் தன் இரு கைகளையும் தலைக்கு மேலே உயர்த்திச் சேர்த்துப் பிடித்த நிலையில் எவ்வளவு உயரம் இருப்பாரோ அந்த நீள அளவு நான்கு பக்கத்திலேயும் வலையைப் பிடித்துத் தூக்கினால் காசாம் பொடி முதலான மீன்களும் அகப்படும் இதில் ½ வராகன், ¼ வராகன் பணம் மட்டுமே கிடைக்கும். அதிகம் கிடைப்பது இல்லை.

கண்ணிவலை

இரண்டு ஆள் சுமை, ஒரு மார் அகலம் 50 அல்லது 60 மார் நீளம். இதை ஒரு கட்டுமரத்திலே ஏற்றிக் கொண்டு ஒரு பறியும் வைத்துக் கொண்டு இரண்டு ஆட்களும் ஏறிக் கொண்டு சமுத்திரத்திலே போய் அரை நாழி வழி தூரம் நீளம் அலையவிட்டால் சுறா மீன், உல்ல மீன் முதலாகியது அகப்படும். இப்படி 8 அல்லது 10 முறைவிட்டுப் பறி நிரம்பினால் கரையேறுகிறது.

சிறுவலை

இது ஓராள் சுமை இருக்கும். ஒரு பை போல் இருக்கும். 10 மார் நீளம், 4 மார் அகலம். அதுவும் பறியும் படகிலே ஏற்றிக் கொண்டு 10 ஆட்கள் ஏறிக் கொண்டு சமுத்திரத்திலே 4 அல்லது 5 ஆள் புருஷத்திலே அரை நாழி வழி தூரம் போட்டு ஏழு அல்லது 8 பேர் நீச்சாகக் கீழே இறங்கி, வலையை விட்டு நுணலை மீன் முதலாகிய மீனை எழுப்பி வலையிலே வந்த பிற்பாடு படகிலே போட்டுக் கொள்வார்கள். இப்படி 10 விசை 8 விசை பிடித்துக் கொண்டு கரை ஏறுவது.

இந்த வலையை ஆற்றிலே போட்டு 2 ஆட்கள் இரண்டு பக்கங்களிலேயும்

இழுத்து 2 பக்கங்களில் இரண்டு ஆட்கள் மீனை ஒட்டினால் மடலை மீன் முதலானவைகளும் அகப்படும்.

ஆற்றுக் கழியில் ஆழமாய் இருக்கின்ற இடத்தில் படகில் கட்டு மரத்தில் ஏறிக் கொண்டு போய் மீன் பிடிப்பார்கள். ஆழமில்லாத இடத்தில் ஆற்றில் இறங்கி வலை போட்டுப் பிடிப்பார்கள். ஆற்றிலே பெருவலையும் போட்டு, சில சமயங்களில் கொடுவா மீன், சுறா மீன் முதலானவற்றையும் பிடிப்பதும் உண்டு.

கொண்டைவலை

இது 200 மார் நீளம் இருக்கும். 2 மார் அகலம் இருக்கும். கொம்பு கட்டியிருக்கும். உள்ளே பை இருக்கும்.

சிறுவலை

10 மார் நீளம் 2 மார் அகலம் கொண்டது ஆற்றிலே போட்டு இரண்டு பேர் இழுத்தால் தளிர்ப்பொடி போன்றவை கிடைக்கும்.

கல் வலை

6 மார் நீளம் 4 மார் அகலம் உள்ளது. ஆற்றங்கழியில் மீன் பிடிக்கப் பயன்படும்.

பறடி வலை, சிறு வலை, ஓலை வலை போன்ற வலைகளும் போட்டு ஆற்றங்கழியில் மீன்பிடிப்பார்கள்.

வலையிலே அகப்படுகின்ற மீன்களின் பெயர்களும் அவற்றின் அளவுகளும்

கடல் மீன்கள்

1. வெள்ளறா மீன்	:	ஓராள் பருமன், இரண்டு முழ நீளம். இது முழு வளர்ச்சி பெற்றது.
2. சுறா மீன்	:	அடித்தொடைப் பருமன், ஒன்றரை முழ நீளம்
3. பால் சுறா	:	கீழ்க்கால் பருமன், ஒரு முழ நீளம்.
4. புகைச் சுறா	:	கீழ்க்கால் பருமன், ஒரு முழ நீளம்.
5. வஞ்சிரம்	:	கீழ்க்கால் பருமன், ஒரு முழ நீளம்.
6. முள வாளை	:	கை பருமன் ஒன்றரை கை அகலம் ஒரு முழ நீளம்.
7. எருமை நாக்கு	:	இரண்டு கை அகலம் ஒன்றரை சாண் நீளம்.

8. வவ்வால் (சிவப்பு நிறம்)	:	இரண்டு கை அகலம், கை பருமன், ஒன்றரை சாண்நீளம் பண்டியாய் இருக்கும்.
9. வெள்ளை வவ்வால்	:	ஒரு கை அகலம், அரைக்கைப் பருமன்.
10. சுதும்பு	:	ஒரு சாண் நீளம், அரைக்கைப் பருமன்.
11. சுதும்பனாங்காறல்	:	உள்ளங்கை அகலம், மூன்று விரல் பருமன், அரை சாண் நீளம்.
12. காரப்பொடி	:	சின்னதாயிருக்கும்.
13. ஓலை வாளை	:	2 விரல் பருமன் 1 முழம் நீளம் 4 விரல் கிடை அகலம்.
14. பெரியகோல்-வாச்சி	:	2 விரல் பருமன் 1¼ சாண் நீளம்
15. சின்னகோல் வாச்சி	:	2 விரல் பருமன் 1 சாண் நீளம்
16. நுணலை	:	மூவிரல் அகலம் 2 விரல் பருமன் ½சாண் நீளம்
17. தேங்காய்ப்பாறை	:	ரெண்டுகை அகலம். கீழ்க்கால் பருமன் 1½ சாண் நீளம்
18. தோல் பாறை	:	ஒருகை அகலம் ஒருகை பருமன். ஒரு சாண் நீளம்
19. பாறை	:	தொடைப்பருமன் ஒருகை நீளம் 3கை அகலம்
20. கானாங் கழுத்தன்	:	ஒருகை அகலம் 4 விரல் பருமன் ஒரு ஓட்டை நீளம்

(ஓட்டை கைப் பெருவிரலையும் ஆள்காட்டி விரலையும் பரப்பும் நீளம்)

21. உல்லம்	:	ஆள் பருமன், 2 முழ நீளம்
22. நெற்றிலி	:	விரல் பருமன், விரல் நீளம்
23. பால் நெற்றிலி	:	½விரல் பருமன், ¾விரல் நீளம்
24. கவலைப் பொடி	:	1½ விரல் பருமன், 1½ விரல் நீளம்
25. புண்டுவிரிஞ்சான்	:	2 விரல் பருமன், ½சாண் நீளம்
26. சென்னாக்குனி	:	மிகவும் பொடி
27. கொட்டிறா	:	நாலுவிரல் பருமன், ஒட்டை நீளம்
28. திருக்கை	:	நான்காள் சுமை, பண்டியாய் இருக்கும் வால் நீளமாய் இருக்கும்
29. உளுவை	:	கை பருமன் 1¼ சாண் நீளம்

30. கெளுத்தி	.	துடை பருமன் 1¼ முழம் நீளம்
31. காசாம்பொடி	:	சுண்டுவிரல் பருமன், விரல் நீளம்
32. சற்றழை	:	3 விரல் பருமன் ஒட்டை நீளம்
33. கருங்கற்றழை	:	4 விரல் பருமன் சாண் நீளம்
34. பன்னா	.	கைப் பருமன் 1 முழ நீளம்
35. குருவிப்பன்னா	:	மூவிரல் பருமன் 1 சாண் நீளம்
36 செம்மடக்கா	:	கையகலம் உள்ளங்கைப் பருமன்
37 கறுப்புத்திருக்கை	:	நான்கு ஆள் சுமை. வட்ட வடிவு. எட்டடி அகலம் இருக்கும்
38. கொட்டுவாள் திருக்கை	:	பத்தாள் சுமை, வட்ட வடிவு, 2 கடவாயிலேயும் 2 கொம்பு சாண் நீளம் இருக்கும். பதினாறடி அகலம். 10 வகை இருக்கும்
39. வெங்கண்	:	2 கை அகலம், கை பருமன், ½சாண் நீளம்
40. நவரை மீன்	:	கைப்பருமன் 1 சாண் நீளம்
41. தூக்கணாம்பாறை	:	வட்ட வடிவம், சாண் நீளம், கை பருமன்
42. சூறை	:	பெருந்தொடைப் பருமன் 1¼ முழம் நீளம். திரண்ட வடிவம்.
43. இரத்தப்பாறை	:	சிவலென்றிருக்கும் (சிவப்பாக இருக்கும்) பெருந்தொடைப் பருமன் 1½ முழம் நீளம்
44. கீச்சாமீன்	:	கெண்டை வடிவம் விரல் பருமன்
45. மொலுவு	:	கறுப்புநிறம் 2 முழ அகலம், மூன்று முழ நீளம், கெண்டை வடிவம், நான்காள் கனம், 2 முழப் பருமன்
46 குறுமீன்	:	கைப்பருமன், சாண் நீளம்
47. ஒட்டாம் பாறை	:	மட்டம் நாலுவிரல் பருமன், கை அகலம்
48. ஓராமீன்	:	கைப்பருமன். சாண் நீளம், கெண்டை வடிவம்
49. பனைவாயன்	:	50 முழ நீளம், 7 முழ அகலம்

11. ஆற்று மீன்கள் (கழிமுகப்பகுதி)

1 கொடுவா மீன்	:	ஆள் பருமன், மூன்று முழ நீளம், பெரு வலையில் பிடிப்பது
2. காலா மீன்	:	பெருந்தொடைப் பருமன், 1¼ முழம் நீளம்
3. மடவை மீன்	.	கீழ்க்கால் பருமன், ஒரு முழ நீளம்

4. இருங்கெளுத்தி	:	பெருந்தொடைப் பருமன், இரண்டு முழ நீளம், கறுப்பு நிறம், இரண்டு கன்னத்திலேயும் தலையிலேயும் நான்கு விரற்கிடைகனம் முள் இருக்கும். இதன் முள் தைத்தால் மனுஷர் பிழைக்கிறது வருத்தம்.
5. குளலு மீன்	:	பெருந்தொடைப் பருமன், இரண்டு முழ நீளம், முகம் கூர்மையாய் இருக்கும். மடவை மீன் உருவம்.
6. அள்ளாற்றி	:	கீழ்க்கால் பருமன், இரண்டு முழ நீளம் குளலு மீன் உருவம்
7. தெலை மீன்	:	ஓரடி அகலம், ஒன்றரை முழ நீளம், கைப் பருமன் இரண்டு கன்னத்திலேயும் தலையிலேயும் முள் இருக்கும்
8. சேசான்	:	மூவிரல் பருமன், முட்டை நிகளம்
9. குளுவை	:	தொடை பருமன், 3 முழ நீளம், விலாங்கு ரூபம், முகம் கூர்மையாய் இருக்கும்
10. செம்மடக்கா	:	உள்ளங்கைப் பருமன், உள்ளங்கை அகலம்
11. முள்ளாரு	:	உள்ளங்கைப் பருமன், சாண் நீளம்
12. ஊடான்	:	2 கை அகலம், மூவிரல் பருமன்
13. கிழங்கான்	:	நான்கு விரல் பருமன், 1 சாண் நீளம்
14. உடுப்பாற்றி	:	கைப்பருமன். 1¼ சாண் நீளம்
15. உளுவை	:	மூவிரல் பருமன், சாண் நீளம்
16. மட்டுவா	:	2 கை அகலம், 3 விரல் பருமன் 1¼ சாண் நீளம்
17. இறா	:	4 விரல் பருமன், ஒட்டை நீளம்
18. தளருப்பொடி	:	தட்டையாய் இருக்கும். சின்னது.
19. கெளுத்தி	:	கீழ்க்கால் பருமன் 1 முழ நீளம் 2 கன்னத்திலேயும் முள் இருக்கும்
20. முன் வாளை	:	1½ கை அகலம் ஒரு முழ நீளம் மூவிரல் பருமன்
21. குழி மீன்	:	கீழ்க்கால் பருமன். 3 முழ நீளம். ஆற்று விலாங்கு என்பதும் இதுவே.

22. மதுக்கெண்டை	:	கைப்பருமன். 1 சாண் நீளம். இது முள் கெண்டையாகும்.
23. கோட்டுவாள் திருக்கை	.	பெரிது தவிர மற்றத் திருக்கைகளைப் போல் இருக்கும்
24. ஊடான் பொடி	:	கடலிலேயும் ஆற்றிலும் தூண்டில் போட்டுப் பிடிப்பார்கள்

☐

மரு. சே. பிரேமா
பேராசிரியர் மற்றும் தலைவர்
சித்தமருத்துவத் துறை
தமிழ்ப் பல்லைக்கழகம்
தஞ்சாவூர்
&
மரு. ச. ரங்கராசன்
சித்த மருத்துவ அலுவலர்
அரசு மருத்துவமனை
கந்தர்வ கோட்டை

காகித மருத்துவச் சுவடிகள் ஒரு பார்வை

முன்னுரை

தமிழகத்தில் ஏறத்தாழ 25,000 மருத்துவச் சுவடிகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன. இதில் காகிதத்தில் எழுதிய மருத்துவச் சுவடிகளும் அடங்கும். அழிந்து விடாமல் காப்பதற்காக, மூல ஓலைச் சுவடியிலிருந்து நகல் படியாகக் காகிதத்தில் எடுக்கப்பட்டவை காகிதச் சுவடிகளாகும். ஓலைச் சுவடிகளில் எழுதுவது கடினமாக இருந்தமையால், மாற்றாக அறிவியல் முன்னேற்றம் காரணமாக எகிப்தில் பாபிரஸ் என்ற புல்லானது காகிதம் செய்யப் பயன்பட்டு, நூல்கள் எழுதப்பட்டன கண்டறியப்பட்டது. சீனாவில்தான் காகிதம் செய்வது கண்டு பிடிக்கப்பட்டு, மையால் எழுதுகோல் மூலம் எழுதப்பட்டது. இந்தியாவிலும் ஓலைச் சுவடிகளுக்கு மாற்றாகக் காகிதத்தில் நூல்கள் பிற்காலத்தில் எழுதப்பட்டன. கடுக்காய் போன்றவற்றை அரைத்து மை தயாரிக்கப்பட்டது. இந்த வகை ஸ்மயினால் காகிதத்தில் தூரிகை போன்ற பொருட்களால் எழுதப்பட்டது.

காகிதம் வைக்கோல்புரி, கரும்புச்சக்கை போன்றவற்றை மென் பொருளாக்கிச் சூரிய ஒளியில் காய வைத்து எடுக்கப்பட்டது. உலர்ந்த தகடு போன்ற இப்பொருளை ஓலைச் சுவடிக்கு மாற்றாகப் பயன்படுத்தி வந்தார்கள். இத்தகைய காகிதங்கள் யாவும் இன்றும் பயன்படுத்தப்படுகின்றன. அச்சு இயந்திரம் 18ஆம் நூற்றாண்டில் புழக்கத்திற்கு வரும் வரை, இந்நிலையே நீடித்தது. பின்னர் இயந்திரங்கள் மூலம் பல்வேறு வகையான காகிதங்கள் தயாரிக்கப்பட்டன. சித்த மருத்துவ நூல்கள் யாவும் பிற்காலத்தில் சுவடிகளிலிருந்து காகிதத்தில் படி எடுக்கப்பட்டன. மூலச் சுவடி ஓலையிலும், நகல்படி காகிதத்திலுமாகப் பல சித்த மருத்துவச் சுவடிகள் உள்ளன. தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் பல காகித

நாட்குறிப்புகளும் கடிதங்களும்

ஆவணக் காப்பகத்திலுள்ள கடிதங்களும் சிறந்த காகிதச் சுவடிகளாகக் கருத இயலும். சான்றாக 'ஆண்டிறிக் அடிகளாரின்' 60 கடிதங்களைக் கூறலாம். 'டாக்குமெண்டிப் இண்டிகா'[1] என இவை போற்றப் படுகின்றன. இவ்வடிகளார் கி. பி. 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவரின் கடிதங்களால் அக்காலச் சமுதாய, நாகரிகப் பழக்க வழக்கங்களையும் குறிப்பாகப் பரதவரின் சமுதாயம் பற்றியும், கிறிஸ்தவ மக்களின் நிலை பற்றியும் அறிய முடியும். "சிறு பூசல்களுக்கும், நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொள்ளும் நிலை, பரதவப் பெண்களிடையே பெருமளவு இருந்தது"[2] எனவே இக்கடிதங்களைக் காகித சுவடிகளாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

கடிதக் குறிப்பில் மருத்துவச் செய்திகள்

பாண்டிச்சேரியின் ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகள் மிகவும் புகழுடையவை. இந்த நாட்குறிப்புகள் மூலம் மருத்துவம் தொடர்புடைய பல செய்திகளை அறிய முடிகிறது. ஆண்டிறிக் அடிகளாரின் கடிதங்களிலும் மருத்துவம் பற்றிய பல்வேறு செய்திகள் கூறப்படுகின்றன. போர்ச்சுகீசியர்கள் புன்னக்காயலில் மருத்துவமனையும் கல்விக் கூடமும் நிறுவினர். இதுபோன்ற மருத்துவச் சாலைகளை நடத்துவதான பொறுப்பை, போர்த்துகீசியத் துறவிகள் ஏற்றனர். இவை எளிய மக்களுக்கும், காயமுற்ற போர் வீரர்களுக்கும் பயன்பட்டன. இம்மருத்துவ மனைகள் தக்க பொருளுதவி இன்றிச் சீர்கேடுற்றன. போர்க்காலங்களில் இம்மருத்துவ மனைகளுக்குத் தீயிடப்பட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. பொருளுதவியைப் பிற்காலத்தில் 'கொம்பேரி சபை'யானது ஏற்றது. ஞாயிறன்று காணிக்கைகளை ஏற்றல் மூலமாகவும், செல்வர்களை அணுகி அவர்களின் உதவியைப் பெற்றும் திருச்சபைகளின் மருத்துவமனைகள் இயங்கின புன்னக்காயல் மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டதால், புறச் சமயத்தவர்களும் இம்மருத்துவமனையை அணுகினார்கள். எனவே புதிய மருத்துவ மனைகள் நிறுவப்பட்டன. பணியாளர்களுக்கு உணவு, உடைகள் வாங்கப் புதிய திட்டங்கள் தோன்றின.

ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

இவருடைய நாட்குறிப்புகளைப் பல நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. அண்மைக் காலத்தில் இவரது பெயரிலமைந்த 'ஆய்வு மையம்'[3] ஒரு நூலைப்பதிப்பித்துள்ளது. ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகளில் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. ஆனால் ஏற்றுமதி செய்யப்பட்ட ஓலைச்சுவடிகள், காகிதச் சுவடிகள் பற்றிய குறிப்புகள் ஏதும் இல்லை. இவை ஆனந்தரங்கர் அறியாமலே கப்பல்களில் ஏற்றப்பட்டிருத்தல் கூடும். இவரது

1. புவனேசுவரி, **முதல் ஐரோப்பியத் தமிழறிஞர் அண்டறிக்கி அடிகளார்**, சென்னை, 1996, ப. 44.

2. **மேலது**, ப. 48.

3 ஆ. செபத்தியான், **18ஆம் நூற்றாண்டில் புதுவையின் வாழ்க்கை நிலை**, ஆனந்தரங்கம் பிள்ளை ஆய்வு மையம், சபாநாயகம் பிரிண்டர்ஸ், சிதம்பரம், 1991.

நாட்குறிப்புகள் வழியாக 16-ஆம் நூற்றாண்டில் 'பிரான்சுலா பெர்னியோ'[4] என்ற ஐரோப்பியப் பயணி முகலாய மன்னரின் மருத்துவராகப் பணியாற்றினார் எனத் தெரிய முடிகிறது. மருத்துவப் பொருள்களான ஆலத்திக் கற்பூரம் நாகம், பாதரசம், பரங்கிச்சக்கை, படிக்காரம் என்னும் சீனாக்காரம் என்பன சீனத்திலிருந்து கற்பூரக்கட்டி, சாம்பிராணி, குந்திரிகம், கந்தகம், குங்கிலியம் என்பன சுமத்திராவிலிருந்தும் இறக்குமதியாகின. புதுவை மாநில ஓமுகறையில் 1742இல் புதிய (ஆங்கில) மருத்துவமனை நிறுவப்பட்டது. மேலும் இவரது நாட்குறிப்பில் பலவிதமான நோய்கள் பற்றியும் அதற்கு மருத்துவம் செய்த மருத்துவர்கள் பற்றியும் செய்திகள் உள்ளன. 'இமாம் சாகிப்' என்பவரின் மனைவி ஆலம்புரவி. இவர்களது வீடு, சுங்குவார் கிடங்கில் உள்ளது. இவ்வீடானது 'ஊக்கா'வால் தீப்பிடித்தது. இதில் 'ஆலம்புரவி'யின் உடல் வெந்து, மரணமடைந்தான். இவளுக்குப் பெண் மருத்துவரான 'மங்களம்' என்பவர் பரிகாரம் செய்தாள். இதிலிருந்து பெண்களுக்குத் தனியாகப் பெண் மருத்துவரே மருத்துவம் செய்துள்ளது தெரிய வந்துள்ளது. காசா வெட்டி என்பவர் சிற்றரசர். இவருக்கு உடல் நலம் குன்றியதால் இவருக்கு மருத்துவம் செய்யப் புதுச்சேரிப் பட்டணத்து வைத்தியர், ஆறுமுகப் பண்டித பண்டாரம் என்பவரை ஆனந்தரங்கர் அனுப்புகின்றார். வைத்தியர் 3 மாத காலம் மருத்துவம் செய்து சிறிது நோய் தீர்ந்தவுடன் திருப்பதி, காளாத்திரி செல்லுகின்றார். ஊரிலிருக்கும் போது சோபை என்ற வீக்க நோய் கண்டது என்ற செய்தி வருகின்றது. ஆனந்தரங்கரிடம், சிற்றரசர் 1 மாதம் உயிருடன் இருந்தால் அதிகம் என்ற விவரத்தைக் கூறி, மருத்துவம் செய்யச் செல்ல மறுக்கின்றார்.

கிறித்துவ மடாலயம் - காகிதச் சுவடிகள்

செண்பகனூர் கிறித்துவத் திருச்சபை நூலகத்தில் பல்வகையான ஆவணங்கள் உள்ளன. அவற்றுள் 'மருத்துவம்பற்றிய சுவடி' என்ற தலைப்பில் உள்ளதும் அடங்கும். இது 1886இல் மலையடிப்பட்டி சவரி முத்துப்பிள்ளை அவர்களால் பஞ்சம் பட்டியிலுள்ள சின்னப்பனுக்குக் கொடுக்கப்பட்டது. இம்மருந்துகள் யாவும் பாளையங்கோட்டை உரோமம் கத்தோலிக்க உபதேசிமார் பள்ளிக்கூடத்தில் செய்யப்பட்டு, பிணியாளர்களுக்குத் தரப்பட்டன. மேலும் இவ்வாவணக் காப்பகத்தில் வ. எண். 10, அகத்தியர் ஞானம் 31 ( ) 132 - 141 ஞானசஞ்சீவி ( ) (எண். 346 பெவுச் அட்டவணை) எண். 344 'வைத்திய முறைகள்' உள்ளன.

கட்டுரையாசிரியரும் காகிதச் சுவடிகளும்

இக்கட்டுரையாளருக்குக் காகிதப்படி தொடர்பான பட்டறிவு, 1983ஆம் ஆண்டு ஏற்பட்டது. 1983இல் 'போகர் 700' என்ற நூலைத் திறனாய்வு முறையில் பல்கலைக்கழகத்திற்காகப் பதிப்பிக்கும் போது ஏற்பட்டது. 'போகர் 700' என்ற சுவடி தேவைப்பட்டது. நூலைப் பதிப்பிக்க ஏனைய சுவடி நூலகங்களில் இச்சுவடி இல்லை. கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகத்தில் ஒரு சுவடி இருப்பதாக அறிந்து நகல்படி பெறச் செல்ல நேரிட்டது. சுவடிக்குப் பதிலாக 'போகர் 700' என்ற காகித நகல்படி இருந்தது.

---

4. ஆ. செபத்தியான், மு. கா. நூல், ப. 68.

மதுரைத் தமிழ்ச் சங்கச் சுவடியைப் பார்த்துப் படி எடுக்கப்பட்டதாக, காகிதப் படியில் குறிப்பு இருந்தது. அதையே அடிப்படையாக வைத்து, ஏனைய ஏழு அச்சு நூல்களை ஒப்பிட்டு, மூலமும், உரையுமாக 'போகர் 700' வெளி வந்தது. இந்நூல் அனைவரின் வரவேற்பைப் பெற்றதால் இரண்டாம் பதிப்பைக் கண்டது. தஞ்சை சரசுவதி மகால் 'அகத்தியர் நூறு' என்ற தலைப்பில் சித்த மருத்துவ நூலை 1988இல் வெளியிட்டது. 'இரசவாதம்'பற்றிக் கூறும் இந்நூலில் முழுமையற்று 85 பாடல்களே உள்ளன. திருச்சியில் உள்ள ஒரு பழைய நூல்கள் விற்கும் கடையிலிருந்து, சில கையேட்டுப் படிகளடங்கிய கட்டை 04. 11. 87இல் வாங்கினேன். அதில் 'அகத்தியர் இரசவாதம்' என்ற தலைப்பில், சரசுவதி மகால் நூலகம் பதிப்பித்த நூலின் பாடல்கள் இடம் பெற்றிருந்தன. வேறு வேறு தலைப்புகளிருந்தாலும், இரண்டும் ஒரே பாடல்களைக் கொண்டது என்று ஆய்வில் தெரிந்தது. திருச்சி சுவடியில் 'திருத்துவேன் அறியாத செய்தியெல்லாம், செப்பினேன் இரு நூறு பாடற்குள்ளே' என்று வருவதால், இந்நூல் முற்றுப் பெற்றதாகத் தோன்றும். ஆயின், பாடல்கள் 201, 202ஐ நோக்க முற்றும் பெறாதது போல் உள்ளது. ஏடுகள் மாறியதால் ஏற்பட்டதா? அல்லது ஏடு எழுதியோரின் பிழையால் ஏற்பட்டதா? அல்லது நூலின் பாடல்கள் தொடர்பின்றிப் புகுந்துள்ளனவா? இதற்கான ஆய்வை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இது போன்றே காகிதச் சுவடிகளிலுள்ள சித்த மருத்துவ நூல்களை ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டியது ஆய்வாளர்களின் கடமையாகும். காகிதச் சுவடிகள் யாவும் சுவடிகளின்வழிப் படி எடுக்கப்பட்டனவா? காகிதத்திலேயே மூலப்படியாக எழுதப்பட்டனவா? என்பதையும் ஆய்வின் கருவாகக் கொள்ள வேண்டும்.

முடிவுரை

ஓலைச் சுவடிகளைப் போலவே கையெழுத்துச் சுவடிகளும் அரியவை எனக் கொண்டு ஓலைச் சுவடிகளுக்குண்டான மதிப்பை அவற்றுக்கும் வழங்குதல் வேண்டும். காகிதச் சுவடிகளை, ஓலைச் சுவடிகளுடன் ஒப்பிடுதல் வேண்டும். கிறித்தவ மடங்களில் உள்ள கிறித்துவ - மேனாடுகளின் தொடர்புபற்றிய கடிதங்கள் யாவும் ஆய்வு செய்யப்படுதல் வேண்டும். ஆனந்தரங்கர் நாட்குறிப்பு, ஆண்டறிக் அடிகளார் கடிதங்கள் ஆகியவற்றையும் அரிய கையெழுத்துச் சுவடிகளாகவே கருதி அவற்றை ஆய்வு செய்தல் வேண்டும்.

இவையெல்லாம் மருத்துவத் துறைக்கும் பெரும் பயன் தரும் என்பது எனது கருத்தாகும்.

☐

ப. புஸ்பரட்ணம்
ஆய்வாளர்
தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் சங்ககால வேள்

இலங்கையின் பண்பாட்டு வரலாற்றைத் தென்னிந்தியாவின் தென் பகுதியுடன் குறிப்பாகத் தமிழகத்துடன் தொடர்புபடுத்தி ஆராயும் போக்கு அண்மைக் காலங்களில் வளர்ச்சியடைந்து காணப்படுகிறது. இதற்குத் தமிழகத்தில் தோன்றி வளர்ந்த பண்பாட்டலைகள் சமகாலத்தில் இலங்கையிலும் செல்வாக்கு செலுத்தியதே காரணமாகும். இதை இலங்கையின் தொடக்ககாலப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணமுடிகிறது. இலங்கையில் இதுவரை இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை கி. மு. 3ஆம் நூற்றாண்டுக்கும் கி. பி. 3ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட கால எழுத்து, மொழி, பண்பாடு என்பனவற்றை அறியப் பெரிதும் உதவுகின்றன. வரலாற்றாசிரியர்களில் பலர் இக்கல்வெட்டுக்களில் வரும் வடபிராமி எழுத்தும், வடமொழிச் சொற்களும் சிங்கள மக்களின் மூதாதையினர் வடஇந்தியாவில் இருந்து இலங்கைக்குப் புலம் பெயர்ந்ததற்கு ஒரு சான்றாகக் காட்டியுள்ளனர். ஆனால் இவை கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் பௌத்தமதத்துடன் அறிமுகமாவதற்கு முன்னர்த் தமிழகத்தில் இருந்து பரவிய எழுத்தும், மொழியும் இலங்கையில் புழக்கத்தில் இருந்ததற்கு இக்கல்வெட்டுக்களே சான்றாகும். இதில் தமிழ்மொழிக்கேயுரிய பட்டப்பெயர்கள், வம்சப் பெயர்கள், ஆட்பெயர்கள் உள்ளன. இப்பெயர்கள் சங்க இலக்கியத்திலும், தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் வரும் பெயர்களோடு பெருமளவு ஒற்றுமை உடையன. அவற்றுள் 'வேள்' என்ற பெயர்பற்றி ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கைப் பிராமிக் கல்வெட்டு மொழிபற்றிய ஆய்வில் அறிஞர்கள் கவனத்தை ஈர்த்த ஒரு சொல்லாக வேள் காணப்படுகிறது. 1880இல் வடஇலங்கையில் பெரியபுளியங்குளக் கல்வெட்டில் இச்சொல்லை அவதானித்த எச். பாக்கர் இதை 'வேளா' என வாசித்து இரண்டாவதாக வரும் தமிழுக்குரிய 'ள'வைத் தமிழ் மக்கள் இங்கு வாழ்ந்ததற்குரிய சான்றாகக் காட்டினர் (Parkar 1909:43.6). இவரின் வாசிப்போடு உடன்படாத கோல்சிமித், முல்லர், எச். சி. பெல் போன்றோர் இவ்வெழுத்தை அசோக பிராமிக்குரிய 'லு' எனக் கூறி இச்சொல்லை 'வேலு' என வாசித்தனர். இவர்களின் வாசிப்பே பொருத்தம் எனக் கூறும் எஸ். பரணவிதானா

கல்வெட்டுக்களில் வரும் இச்சொல்லும் பாலி இலக்கியங்களில் வரும் 'வேளு' என்ற சொல்லும் ஒன்றெனக் கூறினார். ஆனால் இலங்கையில் 'ள' எழுத்துப் பயன்படுத்தும் மரபு கி. பி. 2ஆம் நூற்றாண்டின் பின் ஏற்பட்டதெனக் கருதும் இவர் பாலி இலக்கியங்களில் 'லு'விற்குப் பதிலாக 'ளு' பயன்படுத்தப்பட்டது தவறு என்றார் (Paranavitana 1970: XXV). இதற்குச் சான்றாகத் தொடக்ககாலக் கல்வெட்டுக்களில் உள்ள கட (Kada), அடி (adi) போன்ற சொற்கள் கி. பி. 2ஆம் நூற்றாண்டின் பின் அளி (ali), களி (Kali) என மாற்றமடைந்ததைச் சான்று காட்டினார். ஆனால் தொடக்ககாலக் கல்வெட்டுக்களில் 'ள'வுக்குப் பதிலாக 'ட' பயன்படுத்தும் மரபு காணப்பட்டாலும் காலத்தால் முந்திய வட இலங்கைக் கல்வெட்டுக்களில் இரு எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இதனால் பரணவிதானாவால் 'வேலு' என வாசிக்கப்பட்டதை 'வேள்' அல்லது 'வேளா' என வாசிப்பதே பொருத்தமாகும். இலங்கையில் அசோக பிராமிக்கு முன் தென் பிராமி எழுத்து புழக்கத்தில் இருந்ததாகக் கருதும் எஸ். கருணாரத்தினா கி. மு. 2ஆம் நூற்றாண்டில் 'ள' என்ற எழுத்து பயன்பாட்டில் இருந்ததைச் சுட்டிக் காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (Karunavatna 1984:32).

தமிழ் நாட்டில் 'வேள்' என்ற சொல் கி. மு. 3ஆம் நூற்றாண்டில் இருந்து மாங்குளம். மேட்டுப்பட்டி. கரூர். மறுகால்தலை ஆகிய இடங்களில் உள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டதைக் காணலாம் (Mahadevan 1966:61). இச்சொல் சங்க இலக்கியத்தில் வேள். வேளிர் எனப் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இலங்கைப் பிராமிக் கல்வெட்டில் உள்ள 'வேள்' என்ற தமிழ்ச் சொல்லின் வரலாற்று முக்கியத்துவத்தைச் சங்ககாலப் பின்னணியில் நோக்குவதும் அவசியமாகிறது.

தென்னியந்திய அரசத் தோற்றம்பற்றிய ஆய்வில் பிற குறுநில மன்னர்கள் பெறாத முக்கியத்துவத்தை வேளிர் பெறுகின்றனர். மூவேந்தர் ஆட்சிக்குட்பட்ட குறுநில மன்னர்களுள் இவர்கள் அரசியலிலும். சமூகத்திலும் மிகுந்த செல்வாக்குடன் விளங்கியதைச் சங்க இலக்கியத்தில் வரும் இளங்கோவேள். மாவேள் எவ்வி. நெடுவேள் ஆவி. வேந்தரும் வேளிரும். இருபெரும் வேந்தரோடு வேளிர் போன்ற சொற்றொடர்கள் உணர்த்துகின்றன. வேளிர் என்பது வேள் என்பதன் பன்மை. சங்க இலக்கியத்தில் நன்னன்கங்கள். கட்டி. பரணன் போன்ற வேளிர்த் தலைவர்கள் பேசப்படுகின்றனர் (அகநானூறு செய்யுள் 44. 113. 325). ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு வேள் தலைவனாக இருந்திருக்க வேண்டும். அவனின் கீழ் வாழ்ந்த குடிகள் இரத்த உறவினால் பிணைக்கப்பட்ட ஒரு குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம். தமிழ் நாட்டிலுள்ள வேளாபுரம். வேள்கலிநாடு. வேள் நாடு. வேளூர் என்பன வேள் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடாக. ஊராக இருந்திருக்க வேண்டும். வேள் நாடு என்பது வேள் ஆட்சிக்குட்பட்ட நாடு என எ. சுப்பராயலு கூறியிருப்பது இங்கு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய அம்சமாகும் (Subarayalu. Chapter 1).

சங்க இலக்கியத்தில் வரும் தொன்முதிர் வேளிர் (புறம் 201: 11. 12). தொன்று முதிர் வேளிர் (புறம் 24· 21) பற்றிய சான்றுகள் தமிழகத்தின் மிகத் தொன்மையான இனக்குழுக்களில் ஒன்றாக வேளிரைக் கருத இடமளிக்கிறது சிந்துவெளியில் இருந்து கி. மு. 800 அளவில் தென்னகம் வந்து குடியேறியவர்களே வேளிர் என்பது

என். சுப்பிரமணியத்தின் கருத்தாகும் (Subramaniam 1961 : 258). இவர்களின் வழி வந்தவர்களே பிற்கால வேளார் என எ. மு. ஆராக்கியசாமி கருதுகிறார். தக்காணத்தில் அறுநூறு ஆண்டுகள் சிறப்புற்று விளங்கிய சாளுக்கியரை வேளிர் என்று பிங்கலநிகண்டும். வேள்புல அரசர் எனத் திவாகரமும் வேள் குலச் சாளுக்கியர் எனச் சோழக் கல்வெட்டும் கூறுகின்றன. இதற்குத் தமிழ் நாட்டிற்குரிய வேளிர் தமிழகத்திற்கு வெளியேயும் பரவியதே காரணம் என கிருஷ்ணசாமி ஐயங்கார் விளக்கம் கூறுகிறார் (Aiyangar, 1941 : 11). தமிழகத்தில் இருந்தே இலங்கைக்குப் பெருங்கற்காலப் பண்பாடு பரவியதென்ற கருத்துடைய செண்பகலட்சுமி வேளிரின் தோற்றத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புபடுத்துகிறார். இப்பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் தமிழ் நாட்டிற்குரிய சிறப்பம்சம் எனக்கூறும் இவர் வேளாண்மையுடன் தொடர்புடையவர்களே இப்பண்பாட்டை உருவாக்கியவர்கள் எனக் கூறி வேளிர் வாழ்ந்த இடங்களுக்கும். இப்பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படும் இடங்களுக்கும் இடையிலான ஒற்றுமையைத் தொடர்புபடுத்தலாம் என்றார் (Champakalakshmi 1978 : 52). எஸ். செனிவரட்னா வேளிர் வாழ்ந்த இடங்களுக்கும் பெருங்கற்கால ஈழத்தாழிகள் காணப்படும் இடங்களுக்கும் இடையிலான ஒற்றுமையைச் சுட்டிக் காட்டியுள்ளார் (Senivaratne 1993 : 70). கா. இராஜன் பெருங்கற்கால நடுகற்களுக்கும் வேளிர் தோற்றத்திற்கும் தொடர்பிருக்கலாம் என்பதற்குச் செங்கம், தருமபுரி நடுகற்களைச் சான்றாதாரம் காட்டுகிறார் (Rajan, 1996 : 220).

சங்க இலக்கியத்தில் வேளிர் வேளாண்மையுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறுவதற்குச் சான்றுகள் மிகக்குறைவு. மாறாகக் கால்நடை வளர்ப்பிலும் பெருமளவு போர் நடவடிக்கையிலும் ஈடுபட்டதற்கே சான்றுகள் அதிகம். போர்க் காலங்களில் பங்கெடுத்த வேளிர்பற்றிச் சங்க இலக்கியம் கூறும்போது ஐம்பெரும் வேளிர், பதினொரு வேளிர் எனக் கூறுவதைக் காண்கிறோம் (அகநானூறு 36, 135) கரிகாற் சோழன் பதினொரு வேளிர்களுடன் போரிட்டான் என அகநானூறு கூறும். எனவே பெருங்கற்காலப் பண்பாட்டில் வேளாண்மையில் ஈடுபட்ட மக்களை வேளிருடன் தொடர்புபடுத்துவது பெருமளவு பொருத்தமாகத் தெரியவில்லை. றோமிலாதபார் வேளாண்மை மக்களும். போர் மறவரும் இருபிரிவினராக இருப்பினும் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்ந்தனர் என்றார். இதில் வேளாண்மையில் ஈடுபட்ட மக்களைப் பாதுகாக்கும் போர் மறவராக வேளிர் இருந்திருக்கலாம் (Thapar 1954 : 32).

வேள், வேளிர் என்ற சொல் குலம் குறித்து வந்த பெயர்கள் அல்ல ஒரு பட்டப் பெயர் என்ற கருத்துண்டு. சங்க இலக்கியத்தில் வேள் என்ற சொல் குறிப்பிட்ட ஒரு குலத்தைக் குறிக்காது ஆய், மலையமான், போசானியர் குலத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளமை சான்றாகக் காட்டப்படுகிறது (பூங்குன்றன் 1989 : 220). உலகில் 'ஆநிரை கவர்தல்' மக்களிடையே ஏற்பட்ட போட்டி, பூசல்களிடையே தலைமை தாங்கி நடத்திய தலைவன் காலப்போக்கில் குலத்தலைவனாக நிலை பெற்றான். இதில் தெளிந்த சிந்தனையும், வலிமையும், வீரமும் உள்ள தலைவன் பெற்ற பெயர்களில் ஒன்றே வேள் எனக் கருதப்படுகிறது. ஆநிரை கவர்தல் ஆப்பிரிக்கக் கால்நடை வளர்ப்பாளரிடையேயும், வேதகாலக் கால்நடை மேய்ப்பாளரிடையேயும்

காணப்பட்ட பொதுவான அம்சம் எனக்கூறும் றோமிலா தபார் வடமொழியில் ராஜா என்பவன் ஆகோள்பூசல் தலைவனாகக் கூறப்படுகின்றான் என்றார் (Thapar 1984 : 24). மூலத் திராவிட மொழியில் வேள்'என்பதற்கு விருப்பம், தலைமை, ஒளிவிடு என்ற பொருள் உண்டு. ஏறத்தாழ இதே கருத்தை வடமொழி ராஜாவும் கொண்டிருப்பதால் இரண்டும் தலைவன் என்ற கருத்தைக் கொண்டதாகக் கருதலாம். ஆர். எல்மன் இனக்குழு வாழ்க்கையில் இருந்து அரசு உருவாகும் போது இடைக்கட்டமாக வேள் இருந்ததென்றார் (Elman. 1975 : 37). தொடக்க காலத்தில் சமூகத்தில் தலைமை தாங்கியவனை வேள் குறித்து நின்றாலும் காலப்போக்கில் வேள் வழி வந்தவர்கள் தம்மை வேள் குலமாகக் கருதியிருக்க இடமுண்டு. இதையே சங்க இலக்கியத்தில் வரும் வேள் குலம், வேள்குடி போன்ற சொற்கள் உணர்த்துகின்றன. இது முதலியார் பட்டம் பெற்ற ஒருவரின் வழி வந்தவர்கள் பிற்காலத்தில் தம்மை முதலியார் குலம் எனக் கூறிக் கொள்வதற்கு ஒப்பானதாகும்.

இலங்கையில் வேள் என்ற சொல் 21 கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. ஆ. வேலுப்பிள்ளை மேலும் 5 கல்வெட்டுக்களில் இச்சொல் தவறாகச் சுலு (Sulu) என வாசிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டியுள்ளார் (Veluppillai 1980 : 12). இச்சொல் வடமொழி Vailva என்ற சொல்லின் அடியாகத் தோன்றியதெனக் கூறும் பரணவிதானா இது தனி நபர் (Personal name) பெயரைச் சுட்டுகின்றதென்றார். இதையொரு திராவிடச் சொல் .எனக்கூறும் செனிவரட்ன இதற்குச் சார்பாகத் தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் சங்க இலக்கியத்திலும் வரும் பெயரைச் சான்றாகக் காட்டுகிறார் (Senivaratna 1985 : 59). எச். டபிள்யு. எல்லாவலா தமிழில் வேல் என்பது முருகனோடு தொடர்புடையதால் கல்வெட்டுக்களில் வரும் 'வேலு', 'வேலுஸ' என்ற பெயர்கள் முருகனைக் குறிப்பதாகவும், இவை சிங்கள மக்கள் சைவ மதத்தைப் பின்பற்றியதற்குச் சான்று எனவும் கூறுகிறார். சங்க கால 'வேள்', 'வேளிரும்' இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் வேளும் ஒன்றெனக் கூறும் சி. க. சிற்றம்பலம் இது வேள் குலத்தைக் குறிப்பதாகவும், இதன் அடியொற்றித் தோன்றியதே பிற்கால வேளாளர் எனவும் விளக்கம் கொடுத்துள்ளார் (சிற்றம்பலம் 1993 : 546). சங்க காலத்தில் புழக்கத்தில் இருந்த 'வேள்' என்ற தமிழ்ச் சொல்லே சமகாலத்தில் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகிறது எனக் கூறலாம். ஆனால் தமிழ் நாட்டில் முதலில் தலைவனைக் குறித்த 'வேள்' என்ற சொல் வேள்குலம், வேள்குடி என அழைக்கப்பட்டதற்குச் சான்றுகள் இருப்பதுபோல இலங்கையில் இதுவரை கிடைக்கவில்லை. குலம், குடி போன்ற சொற்கள் கல்வெட்டுக்களில் காணப்பட்டாலும் அவை வேள் என்ற சொல்லுடன் இணைந்து வந்ததற்குச் சான்றில்லை. கி. மு. 1ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கல்வெட்டுக்களில் வரும் இச்சொல் பிற்பட்ட கல்வெட்டுக்களில் படிப்படையாக மறைந்து போகிறது. இதனால் 'வேள்' என்ற சொல்லுக்கும் பிற்பட்ட கால வேளாளருக்கும் இடையிலான தொடர்பை உறுதிப்படுத்த மேலும் சான்றுகள் தேவை.

சங்க இலக்கியத்தில் குறுநில மன்னர் பெயரின் பின்னொட்டுச் சொல்லாக வரும் இச்சொல் சில குறுநில மன்னர் பெயரில் முன்னொட்டுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டதற்கு வேள் எவ்வி, வேள் பேகன், வேள் ஆய், வேள் பாரி, நெடு வேள், ஆதன் போன்ற மன்னர்களின் பெயரைக் குறிப்பிடலாம் (புறம். 24 : 18.

அகம் 61 : 15. புறம் 105 : 815 : 12). இச்சொல் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் பெரும்பாலும் பின்னொட்டுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்வெட்டொன்றில் சுமண என்ற பெயரின் முன்னொட்டுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (Paranavitana, 1970 : 647). இவ்விரு சொற்களும் (வேள், சுமண) தனியாகவும் இணைந்தும் (வேள், சுமணா) கல்வெட்டுக்களில் வருவதுபோல் மகா வம்சம் மனோரதபுரானி (Manorathapurani) சபஸ்ஸவன்டு (Sabassavanhu). ராஜவாகினி (Rajavahini) முதலான பாலி நூல்களிலும் வருகின்றன (Ellwala 1969 : 61. 112, 115). மன்னர்களினதும், அரசத் தலைவர்களினதும் வரலாற்றை முதன்மைப்படுத்திக் கூறும் பாலி இலக்கியங்களில் வேளுசு மண படைத் தளபதியாக, வணிகத் தலைவனாக, அரச வருவாய் பெறும் அதிகாரியாக, மன்னனாக வரக்கூடிய தலைவனாகக் கூறப்படுகின்றனர். இதனால் சுமண என்ற பெயரில் முன்னொட்டுச் சொல்லாக வரும் வேள் என்ற சொல்லை ஒரு பட்டப் பெயராகப் பயன்படுத்தப்பட்டதெனக் கருத இடமுண்டு.

மகாவம்சம் கிரி மாவட்டத்தைச் சேர்ந்த வேளுசுமண சிறந்த குதிரை ஓட்டியெனக் கூறுகிறது. ராஜாவாகினி என்ற நூலில் வெளிநாட்டில் இருந்து குதிரைகளை இறக்குமதி செய்பவனாக வேளு சுமணவைக் குறிப்பிடுகிறது (Ellawala 1969 : 61, 115). பொருளாதார உற்பத்தியில் ஏற்பட்ட போட்டி இரு குழுக்களிடையே தலைவர்கள் தோன்றவும், அவை அரசு உருவாகவும் காரணமாக இருந்தன. இலங்கையின் தொடக்ககாலப் பொருளாதார நடவடிக்கையில் வெளிநாட்டு வர்த்தகமும் முக்கியப் பங்கு வகித்தன. இலங்கையின் தொடக்க கால நகரமயமாக்கத்திற்குத் தென்னிந்தியா ஊடான மேற்காசிய வர்த்தகமே காரணம் எனக் கூறப்படுகிறது. இவ்வர்த்தகத்தில் முத்து ஏற்றுமதிப் பொருளாகவும், குதிரை முக்கிய இறக்குமதிப் பொருளாகவும் திகழ்ந்தன. அநுராதபுரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்றில் 'பதவேள்' என்ற சொல் காணப்படுகிறது (Paranavitana 1970 : 121) இதைப் பரதவ குலத்துக்குரிய வேள் என எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பரதவ குலம் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டதற்குத் தெளிவான சான்று உண்டு. இக்கல்வெட்டு இக்குலத்துக்குரிய வர்த்தகத் தலைவன் 'வேள்' என அழைக்கப்பட்டதை உறுதிப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளலாம்.

சங்க இலக்கியத்தில் வேள், வேளிர் போர் மறவர்களாகப் பல இடங்களில் வருணிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் கேகாலை மாவட்டத்தில் உள்ள கல்வெட்டு ஒன்றில் 'கொடயவேள்' என்ற சொல் காணப்படுகிறது. கொடய என்பதைக் கோட்டை என மொழி பெயர்த்த பரணவிதானா இச்சொல்லின் மூலம் வடமொழி 'கொஸ்டிகா' எனக் கூறிக் 'கொடயவேள்' என்ற சொல்லுக்குக் கோட்டையின் படைத் தளபதி வேலு என விளக்கம் கொடுத்துள்ளார் (Paranavitana 1970 : 778). 'வேலு' என்பதைத் தமிழ்ச் சொல்லான 'வேள்' எனக் கூறும் வேலுப்பிள்ளை 'கொடய' என்ற பிராகிருதச் சொல்லைத் தமிழில் 'கோட்டை' என விளக்கம் கொடுக்கிறார் (Veluppillai 1981 : 13). எல்லாளன் துட்டகாமினி போராட்டத்தில் துட்டகாமினி படையில் இருந்த தளபதியாக 'வேளுசுமண' குறிப்பிடப்படுகிறான். இவ்வாறான தளபதிகள், தலைவர்கள் எல்லாளன் படையிலும் இருந்ததாகத் தெரிகிறது. துட்டகாமினி எல்லாளனை வெற்றி கொள்ளு முன் அவனுக்குச் சார்பான 32 தமிழ்ச் சிற்றரசுகளை (தலைவர்களை) வெற்றி

கொள்ள நேரிட்டதாக மகாவம்சம் கூறுகிறது. இச்சிற்றரசுகளில் 'வேள்' சிற்றரசும் இருந்திருக்க இடமுண்டு. ராஜவாகினி என்ற நூல் 'வேளுசுமண' என்ற ஒற்றன் காக்க வண்ணதிஸனைச் சிறைப்பிடித்து அடிமையாக்குவதாக எல்லாள மன்னனிடம் உறுதி கூறியதாகக் கூறுகிறது (Ellawala 1969 : 61). இங்கே வேள், வேளுசுமண என்ற பெயர்கள் படைத் தளபதியாகக் கூறப்படுவது சங்க இலக்கியத்தில் வேள், வேளிர் போர் மறவர்களாக வருணிக்கப்படுவதை அப்படியே நினைவுபடுத்துகின்றன.

எனவே மேற்கூறப்பட்டவற்றில் இருந்து இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் 'வேள்' என்ற சொல்லைத் தனி நபர் பெயராகவோ, இனக் குழு சார்ந்த பெயராகவோ கொள்வதிலும் பார்க்க ஒரு பட்டப் பெயராகக் கருதுவதற்கே சான்றுகள் சார்பாக உள்ளன. கல்வெட்டுக்களில் சுமண என்ற பெயரின் முன்னொட்டுச் சொல்லாகக் கமணி, பருமக, கபதி போன்ற பட்டப் பெயர் வருவது போல் வேள் என்பதையும் ஒரு பட்டப் பெயராகக் கருதலாம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்வெட்டில் பருமகவேள் சுமணனின் மகன் பருமக வேள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (Paranavitana 1970 : 647). இங்கே வேள் என்பது வம்சப் பெயராகப் பயன்படுத்தப்பட்டதெனக் கருத இடமளிக்கிறது. இதை உறுதிப்படுத்த மேலும் சான்றுகள் தேவை.

தமிழ் நாட்டில் ஆநிரை கவர்தல் அல்லது பொருளாதார உற்பத்தியில் ஏற்பட்ட போட்டி இனக் குழுக்களிடையே 'வேள்' தோன்றக் காரணமாகும். தமிழ் நாட்டில் பயன்படுத்தப்பட்ட இச்சொல் சமகாலத்தில் இலங்கையில் பயன்படுத்தப்பட்டமைக்கு முதலில் வெளிநாட்டு வர்த்தகம் காரணமாக இருக்கலாம். இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்கும் இடையிலான நெருக்கமான வர்த்தகத் தொடர்புக்கான சான்றுகள் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து தெளிவாகக் காண முடிகிறது. இவ்வர்த்தகத்தைத் தலைமையேற்று நடத்திய தலைவர்கள் தமிழ் நாட்டுத் தொடர்பால் 'வேள்' என்ற பட்டப் பெயரைப் பெற்றிருக்கலாம் தமிழ் நாட்டில் புகளூர்க் கல்வெட்டில் 'ஆதன்' என்ற வணிகன் பெயரின் முன்னொட்டுச் சொல்லாக வேள் குறிப்பிடப்பட்டுள்ளது (வேங்கடசாமி 1983 : 58 - 59). இப்பெயர்கள் குலம், கடவுளைக் குறிப்பாகக் கருதப்படுகிறது ஆனால் இதைப் பட்டமாகக் கருதவும் இடமுண்டு. காலப்போக்கில் இப்பெயர் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர்களையும், குறுநில மன்னர்களையும், படைத் தளபதிகளையும் அரசு அதிகாரிகளையும் குறித்திருக்க இடமுண்டு மகா வம்சம் தமிழ் நாட்டிலிருந்து குதிரைகளைக் கொண்டு வந்த வணிகத் தலைவனின் பிள்ளைகளான சேனன், குத்திகன் என்ற தமிழர்களே இலங்கையில் ஆட்சி புரிந்த முதல் தமிழ் மன்னர்கள் எனக் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

துணை நூற்பட்டியல்

சுப்பரராயலு, எ. 1991. 'ஆள் பெயர்கள் காட்டும் சமுதாயம்', **தமிழகக் கல்வெட்டியலும் வரலாறும்**

2. சிற்றம்பலம். சி. க., 1993. **யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு பாகம் 1, கி. பி. 500 வரை**, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

3. பூங்குன்றன். ஆர். 1989. **செங்கம் நடுகற்களில் தொறுப்பூசல், தொல்குடிகள், அரசியல்**. ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

4. வேங்கடசாமி, மயிலை. சீனி, 1983, 'அடிப்படைச் சான்றுகள் II', **தமிழ் நாட்டு வரலாறு சங்க காலம் அரசியல்**, தமிழ் நாட்டு வரலாற்றுக் குழு, தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம், சென்னை : 37 - 91.

5. Aiyanagar, S. K, 1941, **Ancient Indian And South Indian History and Culture**, Central Book Depot, Poona.

6. Champakalakshmi, R. 1975, Archaeology and Tamil Literay Tradition, in **Puratattva**, 8 : 110 - 22.

7. Champakalakshmi, R, & Gopal, S, 1996, (ed.), **Tradition Dissent & Ideology**, Essays in Honour of Romila Thapar, Oxford University Press, Delhi.

8. Ellawala, H, 1969, **Social History of Early Ceylon**, The Department of Cultural Affairs, Ceylon, Colombo.

9. Elman, R, 1975, **Origins of the State and Civilization**, W. W. Northern and Company, Newyork.

10. Gunawardana, R. A. L. H, 1977, Prelude to the State an Early Phase in the Evolution of Political Institution in Ancient Sri Lanka, in **The Sri Lanka Journal of the Humanities**, University of Peradeniya, VIII (1 & 2).

11. Mahadevan, I, 1966, **Corpus of Tamil Brahmi Inscriptions**, Reprint of Seminar on Inscriptions, Department of Archaeology, Government of Tamil Nadu, Madras.

12. Paranavitana. S, 1970, **Inscription of Ceylon : Early Brahmi Inscriptions**, The Department of Archaeology Ceylon, Colombo, I.

13. Rajan. K, 1996, **Archaeological Exploration in South Arcot Region**, Project Report submitted to Tamil University, Thanjavur, (Unpublished).

14. Seneviratne, S, 1985, the Baratas; A Case of Community Integration in Early Historic Sri Lanka, in **Festschrift 1985 James Thevathasan Ratnam,** (ed.) Amerasinghe, A. R. B., Colombo : 49 - 56.

15. Seneviratne, S, 1993 From Kudi to Nadu; A Suggested Framework for Study pre State political Formations in Early Iron Age South India, in **The Sri Lanka Journal of the Humanities** XIX (1 & 2).

16. Subbarayalu, Y, 1973, **Political Geography of the Chola Country**, State Department of Archeology, Madras.

17. Subramanian, N, 1966, **Sangam Polity**, Asian Publishing House, Bombay.

18. Thapar, Romila, 1984, **From Linage to State**, Oxford University Press, New Delhi.

19. Velluppillai, A., 1980, Tamil Influence in Ancient Sri Lanka with Special Reference to Early Brahmi Inscription, in **Journal of Tamil Studies**, 17 : 6 - 19.

☐

Daniel Jeyaraj
Dean, Lutheran Heritage Archives
Professor, Aaron Chair of the History of Christianity in India
Gurukul Lutheran Theological College & Research Institute
94, Purasawalkam High Road
Chennai - 600 010

RECENTLY DISCOVERED TAMIL PALM LEAF MANUSCRIPTS IN HALLE/SAALE, GERMANY

Introduction

The art of writing on the leaves of palm tree (lat. Corypha umbraculifera or Corypha taliera) had a long history in Tamil Nadu. As a result every palm leaf manuscript is to be understood as a historical work accomplished in a given time and circumstances. This essay deals with the Tamil palm leaf manuscripts discovered and identified by the author during his research stay in Germany. The main purpose of the research was to ascertain the cultural contact between the Germans and the Tamils of the eighteenth Century in Tranquebar and its vicinity. The Germans were missionaries, Bartholomaues Ziegenbalg (1682-1719) and Henry Pluetschau (1677-1746), who were sent by the Danish king Frederick IV (1671-1730) to the small Danish colony Tranquebar (1619-1845). Their main vocation was to spread the message of Jesus Christ in Tamil. In this process they mastered Tamil, Tamil culture and religion. When they sent report on their work in 1707 many Europeans were interested to know more about the Tamil way of life and belief. One of their desire was to see the "malabarian paper", i.e. the palm leaves, that were used by the Tamils to write down their literature. In this process from 1707-1740 several palm leave manuscripts were sent to Halle/Saale in Germany by Ziegenbalg himself and his successors Benjamin Schultze (1689-1760) and Christopher T. Walter (1699-1741). After almost 250 years they are now discovered, identified and presented to Tamil public.

I. Francke Foundations at Halle/Saale and Tamil Tradition

August Herman Francke (1663-1777), the founder, was a Hebrew philologist. When he was asked to preach a sermon on 'faith' he realised that he did not have the faith. As a result he became a Christian. This conversion experience made him to devise ways and means of demonstrating

Christian faith in action, especially by serving the poor and needy. As a result he built an orphanage, school for free education using mother tongue (not Latin). By 1701 a large complex known as "the Orphanage Institutes" emerged[1]. One year later he considered his Orphanage as a "nursery" to grow "useful trees" that could be planted "in all parts of the world" to improve the life of all classes of people. In his *Collegium orientale theologicum* (1702) he had students from Greece, Palestine, Arabia, Persia, England and Russia. This College required language teachers who would teach the pietistic ideals. The overseas students who were trained Halle by Francke functioned in their countries as his ambassadors. In this international set up there was a place for Tamil study and Tamil traditions. Since the above said missionaries were his former students they sought his spiritual and financial help for their work in Tranquebar. As the mission reports, commonly known as *Halle Reports* were published in Halle from 1710 it attracted the attention of several readers all over Europe[2]. There was a great desire to get to know the lifestyle of Tamils, their language and culture.

In 1711 Timothy Kudian, a Tamil from Tranquebar, accompanied Pluetschau on his way to Europe. After being some time in Copenhagen he reached Halle and stayed there to teach Tamil. In fact several men of fame like Professor Christian Benedict Michaelis (1680-1764) who was responsible for the editing and publishing of the *Halle Reports*, Henry J. Elers (1667-1728), the printer of the *Halle Reports* and a few others were learning Tamil

---

1 For Francke's own narration of his institutions cf. Francke, August Hermann: *Die Fußstapffen des noch lebenden und waltenden liebreichen und getreuen Gottes zur Beschämung des Unglaubens und Stärckung des Glaubens durch den Ausführlichen Bericht vom Wäysen-Hause Armen-Schulen und übriger Armen Verpflegung zu Glaucha an Halle wie selbige fortgesetzet biß Ostern anno 1701.* Halle, In Verlegung des Wäysen-Hauses zu Glaucha, 1701

2 These reports on Tamils, their culture, religion, language and history formed the first Protestant missionary magazine in German language. Still they are not analysed properly. Should some scholars would be interested to study the different facets of the reports the research result will surely help a reconstruction of Tamil history. There are nine large volumes of this report. The first volume has the following title: *Der Königl. Missionarien aus Ost-Indien eingesandter Ausführlichen Berichten - Erster Theil, von dem Wercke ihres Amtes unter den Heyden, angerichteten Schulen und Gemeinen, ereigneten Hindernissen und schweren Umständen; Beschaffenheit des Malabarischen Heydenthums, geflogenen brieflicher Correspondentz und mündlichen Unterredungen mit selbigen Heyden; des einen Missionarius-Reise nach Europa, auch glücklicher Zurückkunft in Ost-Indien; und übrigen Merckwürdigkeiten, so von ihnen, seit ihrer Abreise nach Indien bis zum August des 1716sten Jahres herausgeschrieben und hiervon von Zeit zu Zeit in verschiedenen Fortsetzungen ediret sind. Vom Ersten ausführlichen Bericht an bis zu dessen zwölfter Continuation mitgetheilet. Nebst einem vollständigen Register. Halle. In Verlegung des Waysen-Hauses. MDCCXXXV.*

under Timothy. The German interest for Tamil culture grew in such a way that Ziegenbalg was asked to prepare a Tamil grammar book using Latin grammatical structure called *Grammatica Damulica*[3] Later on this grammar became a source book for several Indologists like the poet Frederick Rueckert (1788-1866, known for his translation of Gitāgovinda). Moreover Francke was developing a "Cabinet of natural and artificial things" from many parts of the for education of his school children. As such there was a need to get as many Indian objects as he could to enrich his Cabinet. Some of the palm leaf documents were originally exhibited in this Cabinet. Likewise many interested people wanted to see the Tamil manuscripts and understand how the missionaries used the written medium to accomplish their purpose. From the very beginning the missionaries sent copies of their Tamil palm leaf manuscripts and printed materials to Halle. These valuable things of cultural importance are being preserved well in the Francke Foundation.

II. Translators and translated works

Most of the documents came from three Germans who worked as missionaries in Tranquebar and in Chennai. Ziegenbalg was one of the early Europeans to write on palm leaves. His observations how the Tamils used to write on the palm leaves were so real that his reader could make a mental picture of a Tamil sitting on the floor cross-legged, keeping the prepared palm leaf on his left hand and engraving it with an iron stylus held in his right hand. When he managed to get a printing press and paper in 1712 from the Society for Promoting Christian Knowledge in London and the fonts from Halle/Saale he did not use the palm leave manuscripts. So his manuscripts date from 1707 till 1711. In these manuscripts one could find several translated portions of the Christian New Testament (TAM 13-22, 32); his first 26 sermons held in the Jerusalem Church built in 1707 (TAM 37:1-79, 67, 86, 94), the first Church songs (TAM 37:151-169), his works on theology (TAM 36, 85) and religion and his open letters to Tamils (TAM 37:207-220). It is interesting to note that he followed the religious approach taken by the Siddhas Civavâkkiyar and Kapiler.

---

[3] Ziegenbalg, Bartholomäus: *Grammatica Damulica, quæ per varia paradigmata, relugas & necessarium vocabulorum apparatum, viam brevissimam monstrat, qua Lingua Damulica seu Malabarica, quæ inter Indos Orientales in use est, & hucusque in Europa incognita suit, facile desci posit: in Usum eorum qui hoc tempore gentes illas ab idolataria ad cultum veri Dei, falutemque æternam Evangelio Christi perducere cupiunt: In itinere Euopao, seu in nave Danica.* Halle Saxonum, Litteris & impensis Orphanottophei MD CC XVI. In 1985 this grammar book was reprinted in Halle/Saale Cf. Martin-Luther-Universität Halle-Wittenberg Wissenschaftliche Beiträge 1985/44 (I 32), Halle (Saale), 1985.

Secondly the translations of Benjamin Schultze should be mentioned. He devoted most of his time in Tranquebar and in Chennai for translation work. He attempted to translate the Old Testament (TAM 42-48, 50, 53-56). Apocryphal books (23-31, 33, 51-52). He sent the palm leaf manuscripts to Halle because he wanted to revise his Tamil translations of the Bible. Fortunately his wish remained as a dream only. Wherever his translation agrees fully with Tamil diction it was because of the help he received from his Tamil helpers such as Peter Malaiappa. Malaiappan was fluent in German and in English. He had accompanied Ziegenbalg on his voyage to Denmark, Germany and England (1714-1716). Even after his return he was helping the German missionaries in their translation works[4]. Schultze translated many German songs into Tamil (TAM 92, 101-102). He wrote polemic works against the Roman Catholics (TAM 82, 83). He also composed a conversation with a Telugu person (TAM 91). He was probably the first person to translate the Anglican Book of *Common Prayer* (TAM 69, 99) into Tamil. His contribution to Tamil language could be seen in his translations of the works of John Arndt (1555-1621) and Thomas à Kempis (1380-1471). Arndt's famous German devotional literature *True Christianity* contained four parts[5]. Schultze translated them around 1740 into Tamil (TAM 1-4, 57-60), just before he left Chennai and went to Halle/Saale. It was a monumental achievement. Moreover he printed the first two parts of this book in 1750 in Halle/Saale[6]. Schultze translated *Paradise Garden*[7], the second important work of Arndt

[4] William Germann (died 1903), the historian of the Tranquebar Mission who had direct access to analysed the scientific contributions of the Germans to Tamil studies. In one of his articles he articulted that without the help of Peter Malaiappan the Tamil translation works of the missionaries would have been poor. Cf. Germann, W.: Die wissenschaftliche Arbeit unserer alten Tamulen-Missionare mit Berücksichtigung neuerer Leistungen. In: *Missionsnachrichten der ostindischen Missionsanstalt zu Halle*. Halle. 1865, pp. 1-27, 53-81 and, 85-119, hier quoted pp. 66 and 99.

[5] It is impossible to ascertain which German text Schultze used for his translation. One of the texts could have been the following one: Arndt, Johann: *Fünff Geistreiche Bücher vom Wahren Christenthum*. Leipzig, Joh. Herbord Kloß und Joh. Heinrichens Wittb. 1696. (Main library of the Francke Foundation, Call No. 51 F 4). After Schultze had returned to Halle/Saale he may have consulted the following edition by Rambach, which was one of the authoritative texts for the Halle pietists: Rambach, Johann Jacob [Ed.] *Johann Arnds Gesammelte Kleine Schriften, welche gröstentheils bishero rar und nicht mehr zu bekommen, viele aber noch gar nicht übersetzet gewesen [...] mit einer Historischen Vorrede Herrn Johann Jacob Rambachs*. Leipzig und Görlitz., In der Marcheschen Buchhandlung, 1736 (Main library of the Francke Foundation, Call No. A 148).

[6] The main libarary (Call No. 32 M 12) and the mission library (Call No. C·70) of the Francke Foundation have copies of the printed books

[7] Arndt, Johann: *Paradies-Gärtlein, voller Christlichen Tugenden, wie solche Durch geistreiche Gebete in die Seele zu pflantzen*. Magdeburg, Druckts Christian Lebrecht Faber, 1727 (Main library of the Francke Foundation, Call No. 85 G 12).

(TAM 5.8, 40, 70). During 1749-1950 he printed in Halle/Saale[8]. In 18th Century there these two books of Arndt were used in almost all German Protestant houses. Then he proceeded to translate all the four parts of the famous *Imitation of Christ* by Thomas à Kempis[9] (TAM 6, 7, 9-12, 38, 39, 88). Thus Schultze wanted to present the Tamils with the very best of German devotional literature. His theological works include the four parts of the *Delightful Biblical Garden* by Wolfgang Seber[10] (TAM 62, 71-77). The present author of this essay is unable to ascertain who this Seber was, except that he was a pastor and was well versed in the writings of the Church Fathers. The sermons of Benjamin Schultze (TAM 61, 63-66) show his first attempts to preach in Tamil. It seems that a Tamil Christian should have written him these sermons which Schultze must have learnt by heart and repeated them in the Church.

Thirdly the two Tamil works (TAM 89 and 95) written or translated by Christopher T. Walter could be mentioned. As a man of his age and context he was unable to tolerate the Roman Catholics. So he wrote against them. He also translated the Portuguese *Passion History* written by John Earnest Gruendler (died 1720 in Tranquebar). This *Passion History* was meant for meditation during the Lenten Season.

Fourthly one could see the work of Tamils. Peter Malaiappa translated Wilken's *Communion Book* (TAM 81). Among these manuscripts there is an important Tamil work that was aimed to challenge the European Christian

---

8 In 1749 the first two parts were printed with the title *Ñāṉa Mantira Celva Pūṅkāvaṉam*. In 1750 the other two parts were also printed. The mission library (Call No. C:5 a-d) has a copy of these printed books.

9 Von Kempen, Thomae: *Der Nachfolgung Christi Vier Bücher. nunmehr nach dem Lateinischen Exemplar RR. PP. Henr. Sommalii und Heriberti Rosweidi è Soc. Jesu fleissiger dann je vor diesem sambt dem Leben deß gottseeligen Authoris, übersehen/ verbessert und vermehret/ mit angehängtem Unterricht und Register.* Cölln, Bey Frantz Metternich/ Buch-Händlern unter gölden Waagen. 1699. (Main library of the Francke Foundation, Call No. 14 K 15).

10 Seber, M. Wolfgang: *Biblisches Lust-Gärtlein/ Erzeugend die Haupt-Articul Göttlicher Lehre/ in kurzen und wenigen Aphorismis gleichsam als in gewisse Beetlein/ verfasset und sonderlich mit den fürnehmsten Grundsprüchen und Zeugnissen der H. Schrift mit schönen wohlriechenden Blumen erläutert/ und bestätiget durch M. Wolfgang Sebern/ Superintendenten und Pfarrern in Schleusingen/ hernachmals aber mit denen Sprüchen der H. Kirchen-Väter vermehret von M. Adamo Fusio, Pfarrern zu Froburg, samt einer Vorrede Herrn Johann Gerhards/ der H. Schrifft D. und Prof. der löbl. Universität Jena.* Leipzig/ In Verlegung Joh. Friedrich Gleditschens, Anno 1688. (Main Library of the Francke Foundation, Call No. 25 G 7).

theologians and invite them for a dialogue. Kanapati Vâttiyâr (the teacher 'Lord of the group / army of Šiva'), who is known in the missionary literature as Kâ.ampâüi Vâttiyâr ('teacher who sings songs'), was the son of Ziegenbalg's old Tamil language teacher. Before his conversion he composed poems on the *Small Catechism* of Martin Luther, the *Ten Commandments*, the *Story of Jesus Christ*, the *Gospel of Matthew*, on the *Church Hymn Book* in Tranquebar. He composed these songs before his conversion to Christian faith. The tradition begun by this leader reached a new height in the life and work of Vêtanâyakam Sâstiriyâr (1774-1864) who could compose several touching *Kîrtans* (i.e. lyrics) for the Tamil Church. In his palm leaf manuscript (TAM 87) written in 1709[11] Kaöapati Vâttiyâr put forth several questions on the nature and function of gods, heaven, crawling, swimming and flying creatures and five elements (water, fire, air, matter, ether). His writing reflects the prevailing world view among the Tamils. Should the European theologians answer his questions adequately he expected that many learned Tamils would embrace Christian faith[12]. Since no reply came

---

11 *Propagation of the Gospel in the East*. London, Society for Promoting Christian Knowledge, 1718, p 30 Ziegenbalg wrote on 19.10 1709: Three days ago we baptised a Tamil Poet who was with us for three years. "He has been particularly helpful to me both in purchasing abundance of Malabar Authors, whom he procured for me: and in getting a competent insight into the Poetry of this Nation, which he himself gave me. Almost a Quarter of a Year ago, he wrote a Letter, and directed it to all the Learned in Germany, together with 608 Questions, treating upon Divinity and Philosophy, wherein he wanted to have their Determination. I have indeed translated those Questions, but never could be induced to believe this young Man would ever embrace in good earnest our holy Profession; as being too much influenced by [p. 31] the Suggestion of his own corrupt Reason, which you, know, is apt to cast Mists before Peoples' Eyes, and when it gets the Sway, to adulterate the Simplicity of Christian Faith and Practice. But the Lord has given a Check to this my Unbelief. [.. Now he is baptised. He] reduc'd the Catechism and the History of Christ into Damulian Verse, which at Night, when Business was over, he would sing with the Children at the Top of the House."

12 *Archives of the Francke Foundation, Palmleaf TAM 87, Leaves 38v-39r.* "இபபடிக சொலலபபட்ட கெழவிகளெலலாம தெவரீமாரகள வாசிததுப பாதது அவதானிசசக கொணடு கெழவிககு உததாவு தெவரீமாரகளெலலாம கூடி எழுதி இவவிடததிலெ அனுபபிவிததால இநத லொகததில இருககிற பெரியொரகள விததுவானகள ராசாககள சகல மததிலெ இருககிற பொகளுந தெவரீமாரகளை மெனமெலுந தொததாவு பணணி இநத கெழவியினுடைய உததாவு சகல மததுககுஞ சரியாயிருநதால சறுவெசுரனுடைய கிருபை கொணடு இநத சததிய வெத ஞானததிலும அனெகம பொகளுடனபடுவாரகள தெவரீமாரகளனைவரும சறுவ மததுககும நயமாக எழுதி அனுபபுவிககக கடடளையிடவும இபபடிககு சறுவெசுரனுடைய கிருபாகடாக்ஷமுணடாக தாகவும வெணும" *If you, Lords [i.e. the theologians of Europe] read these questions, consider them carefully and answer them accordingly, many of our great people, scholars and kings of our country will praise you. Should your answers be acceptable to the people of all religions many will become Christians. Send me suitable [lit: pleasant] answers May the blessings of the grace of the Lord be with you.*

from Europe Ziegenbalg himself ventured in 1711 to answer these questions in his famous work entitled *Malabarisches Heidenthum*[13] (i.e. Tamil Society). Ziegenbalg had the joy of baptising Kaöapati Vâttiyâr as Christian Frederick in remembrance of the Danish king who had sent the missionaries to Tranquebar. Moreover among the palm leaf manuscripts there are some works of Tamil literature, especially that of Auvaiyâr III (TAM 89, 100). In 1735 Walter seems to have sent them to Halle. Among the manuscripts there is a Stalapurâ.a of Cidambaram (TAM 80), a story of Citraputra (TAM 78), a summary of 27 Nak7atras (TAM 79) and a vaishavite work (TAM 98).

III. Significance of these palm leaf manuscripts

This is a fairly large collection of palm leaf manuscripts that date back to the first half of the 18th Century that remained unknown to Tamil public. Almost all of these manuscripts are written in spoken Tamil that was used in and around Tranquebar. For linguistic study these documents would be of immense importance. In like manner these manuscripts could be used for cross cultural studies. German pietistic devotional texts that had their original in a particular European mind set, historical context and cultural net work were translated into Tamil and were presented to Tamils of Bhakti traditions. It would be a fascinating study to examine how the thoughts and concepts of the original German works were transferred into Tamil concepts. One could find out how much agreement is there between the two systems of concepts, and how they were translated, whether there was a loss of meaning and how these translations have enriched the Tamil cultural heritage. Furthermore these manuscripts reveal the fact that though the Protestants rejected the Roman Catholic teachings they borrowed their theological concepts enshrined in terms such as *carvêcura.* (= skt. šarva-îšvara, 'commander of all') and used them in their writings. The interplay of relationships between the Roman Catholics and Protestants which showed in outward hatred, but inward interdependence, needs to be examined. The various kinds of influence that these Tamil manuscripts had on the Germans would be an interesting study. While the Germans were primarily interested in the meaningful communication of the message of Jesus Christ it would be a rewarding enterprise to verify how their cultural and religious study affected their perception of Tamil way of life and how they had incorporated their insights into their main enterprise. On the other hand the writings by Tamils themselves would be great importance. They were the people who disclosed the Tamil world of belief and practice to them. As such their ability to learn European language and to translate literature was enormous. One example would suffice here:

13 Ziegenbalg, B.: *Ziegenbalgs Malabarisches Heidenthum*. (Ed.) William Caland. Amsterdam 1926.

"[Leat 1r.] "Auszüge aus Padtanattupullei

எடடுததிசையும பதினாறு
கோணமும ஈரேழுயகும
முடடததெழுநத முககத
தெழுசோதியை மூடடொல

Ihr Unverständigen! Wollt ihr den Herrschergott, der alle [acht Himmelsri chtungen[14]], 16 Himmel und 14 Welten durchaus erfüllet und durchdringet zusammen binden, einwickeln unter den Arm und

[Leaf 1v] லாஙகடடிச சுறுடடிக
கககததில வைபபர கருததில வையார
பட டபபகலை யிரவெனறு கூறுவர
பாதகரொ".

nicht ins Hertz nehmen, so erkläret ihr laut den hellen Tag zur Finsternis Ihr Böswichter."[15]

A Tamil by name Ñâparan translated this poem from Pattanattu-p Pullai could be summarised in Tamil as follows: "Oh, you fools! As you want to bind God to your arms and as you are unaware that he who fills all heavenly directions, 16 heavens and 14 worlds you do not want to accept him into your hearts. Thus you, evil doers, declare the bright day as the darkness." These and other examples demonstrate the genius of the Tamils three hundred years ago. They could communicate their thought patterns in a way that the Europeans would understand them. Thus their discernment drew the attention of others.

IV. Details of the Palmleaf Manuscripts in Halle/Saale, Germany

The author of is essay is grateful to the authorities of the Gurukul Lutheran Theological College & Research Institute to grant leave to go to Halle/Saale to prepare a catalogue of the Tamil palm leaf manuscripts. He is thankful to the authorities of the Francke Foundation for a scholarship in this regard. The original Tamil diction found on the Tamil palm leaf manuscripts are kept unchanged. These texts are historical and should be treated as such. Their philological importance would not allow any attempt to modernise the Tamil diction by introducing long vowels, placing dots of the consonants to point out the Tamil *mey-eßuttu*, to change the various spellings involving different Tamil 'l's, 't's, 'n's, 's', and 'k's. The only modification introduced is the word separation that would make the reading easy. The transliteration system is based on the method followed in the *Tamil Lexicon* of Madras University (first published 1924-1934, reprinted in 1982). Using the accompanying German writings such as diaries and letters of the missionaries exact date could be ascertained for most of the Tamil

14 The words "eight heavenly directions" were not translated.
15 TAM 97:1

palm leaf manuscripts. The final column shows the number of palm leaves each manuscripts. The author of this essay would be grateful for any help and suggestions rendered towards securing these manuscripts as microfilms from Halle/Saale and doing research using these palm leaf manuscripts. It is with this hope that the following details are presented to all interested persons.

TAM	Tamil Title	Transliteration	Translator	Year	Leaves
1	உணமையுளள கிறீஷதடிதயானததினுடைய மகிமையை தெளிவாகக காணபிககிற ஞானக கணணாடி அதினுடைய முதலாம பொததகததிலெ அடஙகியிருககிற - சஉ - அதிகாரஙகள	unmaiyulla kiristiyâ nattinutaiya makimaiyai telivâkak kânpikkira ñâkkannâti atinutaiya mutalâm pottakattile atankiyirukkira 42 atikârankal	B. Schultze	1736	479
2	உணமையுளள கிறீஷதடிதயானததினுடைய மகிமையை தெளிவாகக காணபிககிற ஞானக கணணாடி அதினுடைய ரெணடாம பொஸதகததிலெ அடஙகி இருககிற ருயஅ அதிகாரஙகள	unmaiyulla kiristiyâ nattinutaiya makimaiyai telivâkak kânpikkira ñâkkannâti atinutaiya rentâm postakattile atanki yirukkira 58 atikârankal	B Schultze	1737	769
3	உணமையுளள கிறீஷத தியானததினுடைல மகிமை யை தெளிவாக காணபிககிற ஞானக கணணாடி அதி னுடைய முதலாம பொஸத தகததிலெ அடஙகி இருககிற •சஉ அதிகாரஙகள	unmaiyulla kirîtti yânattin makimaiyai kânpikkira ñânak knnâti atimutaiya mutalâm posttakattile atanki yirukkira 42 atikârankal	B Schultze	1740	495
4	உணமையுளள கிறீஷத தியானததினுடைல மகிமை யை தெளிவாக காணபிககிற ஞானக கணணாடி அதி னுடைய ரெணடாம பொஸததகததிலெ அடஙகி இருககிற ருயஅ அதிகாரஙகள	unmaiyulla kirîtti yânattin makimaiyai kânpikkira ñânak knnâti atinutaiya rentâm posttakattile atanki yirukkira 58 atikârankal	B. Schultze	1737	748
5	ஞான மநதிா செலவ பூஙகா வனம அதினுடைய முதலாம வகுபபிலெ பததுக கறபினை களுடைய வரிசையின படியெ கிறீஸததவாகளுக கொதத புணணியஙகளிலெ	ñâna mantira celva pûnkâvanam atinutaiya mutalâm vakuppile pattuk karpanaikalutaiya varicaiyin patiye	B. Schultze	1740	196

	வததிககத தககதாக செயய வெணடின சயஅ சிவஙகள அடஙகியிருககுது	kirîsttavarkaluk kotta punniyankalile vattikkai takkatâka ceyya ventina 48 civankal atanki yirukkutu			
6	நமமுடைய கததராகிற யெசுக கிறிஷததுனாதனை யெபபடி பின செலல வெணு மெனகிறததின பெரிலெ தொமெஷதெ கெமபிஷ யெனகிறவா யெழுதி வைதத ஞானப பொஷததகம கிறிஷததுப பிறநது சதளளசய [1740] ஸ்ரீ அறபசி மீ - யஅ	nammutaiya kattarâkira2 yecuk kiristtunâtarai yeppati pin cella venumenkirattin perile tomes te kempis yenkiravar yeluti vaitta ñânp posttakam kiristtu pirantu 1740 varutam arpaci mâtam 18 têti	B. Schultze	1740	75
7	யெசுக கிறிஷததுனாதனை யெபபடி பின செலல வெணு மெனகிறததின பெரிலெ தொமெஷ தெ கெமபிஷ யெனகிறவா யெழுதி வைதத ஞானப பொஷததகம	yecuk kiristtunâtarai yeppati pin cella venumenkirattin perile tomes te kempis yenkiravar yeluti vaitta mutalâm ñânp posttakam	B. Schultze	1740	124
8	ஞான மநதிர செலவ பூஙகா வனம அதினுடைய ரெணடாம வகுபபிலெ திறீததுவமாகிற எக சறுவெசுர னாகிற பிதா சுதன பரிசுதத மான அருபியானவா அருளிச செயத நனமை களுககாகவும உபகாரங களுககாகவும செயய வெணடின உயக [29] தொததிரஙகள அடஙகி யிருககுது	ñâna mantira celva pûnkâvanam atinutaiya rentâm vakuppile tirîttuva mâkira yeka caru vecuran âkira pitâ cutan paricuttamâna arupiyânavar arulic ceyta nanmaikaluk kâkavum upakâran kalukkâvum ceyya ventina 29 tottirankal atanki yirukkutu	B. Schultze	1740	135
9	யெசுக கிறிஷததுனாதனா யெபபடி பின செலல வெணு மெனகிறததின பெரிலெ தொமஷ தெ கெமபிஷ யெனகிறவா யெழுதி வைதத ரெணடாம ஞானப பொஷததகம	yecuk kiristtu nâtarai yeppati pin cella venumen kirattin perile tomas te kempis yenkiravar yeluti vaitta rentâm ñânp posttakam	B Schultze	1740	62

10	யெசுக கிறிஷததுனாதனை யெபபடி பின செலல வெணு மெனகிறததின பெரிலெ தொமஷ தெ கெமபிஷ யெனகிறவா யெழுதி வைதத ரெணடாம ஞானப பொஷததகம	yecuk kiristtunâtarai yeppati pin cella venumenkirattin perile tomas te kempis yenkiravar yelutı vaitta rentâm ñânp posttakam	B. Schultze	1740	35
11	நமமுடைய கததராகிற யெசுக கிறிஷததுனாதனை யெபபடி பின செலல வெணுமெனகிற ததின பெரிலெ தொமெஷ தெ கெமபிஷ யெனகிறவா யெழுதி வைதத மூணாம ஞானப பொஷததகம	nammutaiya katta râkira yecuk kiristtu nâtarai yeppati pin cella venumen kirattin perile tomes te kempis yenkiravar yelutı vaitta mûnâm ñânp posttakam	B. Schultze	1741	224

Conclusion

The Tamil palm leaf manuscripts in Halle/Saale are an example of the negligence of Tamil heritage lying unheeded for nearly three hundred years. A joint net work is necessary to get at least microfilm copies of these important documents to us. For this very purpose the Lutheran Heritage Archives at the Gurukul Lutheran Theological College & Research Institute at Madras entered into a partnership agreement with the Francke Foundations at Halle/Saale to depute three research scholars to Halle/Saale to make a detailed catalogue of these documents. We hope that one day we could get some important documents as microfilms to Madras. This will enhance our research projects by bringing out the significance of a neglected aspect of our heritage. Besides Tamil palm leaf manuscripts there are several Telugu palm leaf manuscripts mostly by Benjamin Schultze. The author of this essay discovered them and identified temporarily. In the mission archives of the Francke Foundation there are about 1500 manuscript files and treaties pertaining to Tamil Nadu and Tamil Culture during 1706-1845. Several doctorates could be earned using these basic research materials. The Francke Foundation is only one place in Europe where there are Tamil palm leaf manuscripts. The author of this essay discovered about fifty five bundles of Tamil palm leaf manuscripts in the Royal Library at Copenhagen in Denmark. There is evidence that there are many till now unknown Tamil palm leaf manuscripts in the museums of Jerevan in Armenia. All who are proud of their cultural history will find a challenging task in bringing to light what has been hitherto neglected and forgotten.

□

என். மாதவி
தேர்வுநிலை விரிவுரையாளர்
தமிழ்த் துறை
எஸ். கே. எஸ். எஸ். கலைக்கல்லூரி
திருப்பனந்தாள்

ஸ்ரீ காசிமடம் : தரும சாசன ஆவணங்கள்

"ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும் ; சிறுவரை
சென்று நின்றோர்க்கும் தோன்றும்"

வண்ணம் பாரியின் பறம்புமலை கொடைத் தன்மையில் சிறந்து விளங்கியது போன்று தான தர்மங்களால் வடநாட்டையும், தென்னாட்டையும் தன்னகப்படுத்திப் புகழ் பெற்று விளங்குவது திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடமாகும். இம்மடத்தைப்பற்றி இற்றைக்கு இரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு காகிதங்களில் எழுதப்பட்ட தரும சாசன நகல்கள் சிலவற்றைக் கொண்டு இவண் ஆய்வு செய்யப்படுகிறது.

தரும சாசனம்

. ஏழைகட்கு அன்னதானம், வித்தியாதானம், வைத்திய உதவி அல்லது ஏதேனும் பொதுநல முன்னேற்றமான, காரியம் ஆகியவற்றிற்காகத் தரப்படுவதை அறக்கட்டளை என்பர். இதனைப் பத்திரங்களாக நிறுவிய முறை தரும சாசனம் என்று அழைக்கப்படுகிறது இதற்காகப் பொருள் கொடுத்துப் பாதுகாப்பது என்பதை இந்தியாவில் பண்டைக் காலம் முதல் சிறந்தோர் அறப்பணியாகக் கருதி வந்திருக்கிறார்கள். கொடுப்பதால் சொர்க்கமும், பாதுகாப்பதால் அமரத்துவமும் பெறலாம் என்று பாண்டிய அரசர்களுடைய கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. அந்தக் காரணத்தால் பண்டைய அரசர்கள் குடிகளின் நலங்கருதிக் கோயில்கள் மகுதிகள் போன்ற பல தரும நிலையங்களை நிறுவி, அவை என்றும் அழியாமல் நிற்பதற்காக இறையிலி நிலங்களை ஏராளமாகக் கொடுத்தார்கள். அரசர்கள் செய்தது போலவே மக்களும் ஏராளமான சொத்துக்களைச் சாசனம் செய்துள்ளனர்.

இந்துமத அறக்கட்டளைகள் கோயில்கள் என்றும் மடங்கள் என்றும் இருவகைப்படும். மடங்கள் தோன்றுவதற்கு முன் கோயில்கள் தோன்றின. வழிபாடு நடத்துவதற்காகக் கோயில்களும், ஆன்மபோதனை தருவதற்காக மடங்களும் உண்டாயின. கோயில் அறக்கட்டளைகளை இருவகைப்படுத்தலாம் ஒன்று கோயில் பூசையும் திருவிழாவும் நடைபெறுதற்காக அமைவது. மற்றொன்று ஒரு குறிப்பிட்ட பூசை, அபிஷேகம், விழாப் போன்றவற்றிற்காக அமைவதாகும்.

இந்து மதப் பிரிவுகளில் ஆசாரியர்கள் மதபோதனை செய்வதற்காகவும் மத அறிவைப் பரப்புவதற்காகவும் ஒரு நல்ல ஆசிரியப் பரம்பரையை உண்டாக்குவதற் காகவும் மடங்களை நிறுவினார்கள். திருப்பனந்தாள் மடம். தருமபுரம் மடம் முதலானவை சென்னை மாநிலத்தில் முக்கியமானவை. மடாதிபதிகள் அரசர்களுடைய அன்புக்கும் மக்களுடைய மதிப்புக்கும் பாத்திரமானவர்களாக. அறிவும். ஒழுக்கமும் உடையவர்களாக இருந்தபடியாலும் மக்களுக்குப் பலவித நன்மைகள் செய்து வந்தபடியாலும் அரசர்களும். செல்வர்களும் ஏராளமான சொத்துக்களை நிபந்தங்களாகக் கொடுத்ததோடு பல கோயில்களை நடத்தும் பொறுப்பையும் அவர்களுக்குக் கொடுத்தார்கள். இத்தகைய அறக்கட்டளைகளைத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஏராளமாகச் செய்து வந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

திருப்பனந்தாள் : ஸ்ரீ காசி மடம்

ஆதி குமர குருபர சுவாமிகளின் வழி வந்த ஸ்ரீ காசிவாசி தில்லை நாயக சுவாமிகள் காசிக் குமாரசாமி மடத்தில் கி. பி. 1756 வரையில் இருந்தார். அவர்கள் திருப்பனந்தாளில் கி. பி. 1720இல் ஒருமடத்தை நிறுவினார்கள். திருப்பனந்தாள் மடம் காசிமடத்தின் தொடர்புடையதாதலின் அதற்குக் காசிமடம் என்னும் பெயர் வழங்கலாயிற்று. ஸ்ரீ தில்லை நாயக சுவாமிகள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் ஆறாவது தலைவராவர். (முதல் ஐவரும் காசிக் குமார சுவாமி மடத்தில் தலைவராக இருந்தனர். அம்மடத்தின் தொடர்பால் தில்லை நாயக சுவாமிகள் ஆறாமவராக அழைக்கப்படுகிறார்) இவர்கள் காலத்தும். இவர்களை அடுத்து விளங்கிய சடையப்பத் தம்பிரான் காலத்தும். இவர்களை அடுத்து விளங்கிய குமார சுவாமிகள் காலத்தும். 12ஆம் அதிபராக விளங்கிய சொக்கலிங்கத் தம்பிரான் காலத்தும் பிற்காலத்தும் (1900 - 1941) விளங்கிய காகிதச் சுவடிகளில் உள்ள தர்ம சாசனங்களின் வழி ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இவர்கள் காலத்து விளங்கிய தர்ம சாசனங்கள் பலவும் பதிவு செய்யப்பட்டு விட்டதால் காகிதங்களில் உள்ளவை மட்டும் இங்குக் குறிப்பிடப்படுகிறது.

அன்னதானம்

மனிதர்களுக்கு உண்ண உணவும். உடுக்க உடையும் இருக்க இடமும் அடிப்படையும் அவசியமாகும். இவற்றுள் உணவு மிக இன்றியமையாத ஒன்றாகும்.

'உண்டி முதற்றே உணவின் பிண்டம்'

என்று புறநானூறும்

"அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் : மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்"

'மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'

எனும் தொடர்களால் மணிமேகலையும் மன்னுயிர்களுக்கு உணவு கொடுத்தலைச் சிறந்த அறமாகக் குறிப்பிடுகின்றன. உணவின் தேவையை அறிந்து ஆபுத்திரன்

அமுத சுரபியின் துணையால் உயிர்களின் பசியாற்றினான் என்றும் மணிமேகலை குறிப்பிடுகிறது.

'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று திருமூலர் கூறுகிறார். உயிர் நிலை பேற்றுக்கு உணவால் உடம்பை வளர்த்தலை அவர் உணர்த்துகிறார். இவற்றை நன்கறிந்த நம் முன்னோர்கள் பசிப்பிணி மருத்துவர்களாகத் திகழ்ந்து அன்னதானமாம் நல்லறத்தைத் தொடர்ந்து செய்து வந்திருக்கிறார்கள்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இராஜாக்களும், ஜமீன்தார்களும், மக்களும் அன்னதானம் நடத்துவதற்கும், கோயில் வழிபாட்டிற்கும், சத்திரம் அமைப்பதற்கும் கிராமங்களைத் தானமாகக் கொடுத்துள்ளனர். அவைபற்றிய குறிப்புக்களை அவர்களே எழுதிச் சுவாமிகளிடம் ஒப்படைத்துப் பரிபாலிக்கும்படிச் செய்துள்ளனர். அக்குறிப்புக்களின் நகல் பின்வருமாறு அமைந்துள்ளது.

தில்லை நாயக சுவாமிகள் (1720 - 1756)

ஆந்திர மாநிலம் பல்லி போராம் எனுமிடத்தில் வசித்த ராஜஸ்ரீ வெங்கடாசலரெட்டி என்பார் தமக்குச் சொந்தமான திருச்சிராப்பள்ளி துறையூர் சீமையில் அபினிமங்கலம் என்ற கிராமத்தைக் காசியில் நடக்கும் அன்னதானத்திற்கும், இராமேஸ்வரத்தில் நடக்கும் அன்னதானத்திற்கும் கொடுத்துள்ளார். அக்கிராமத்தில் உண்டான நஞ்சை, புஞ்சை, மாவடை, மரவடை, நிதி, நிஷேப, ஜலதருபாஷாண, அக்ஷன, ஆகாமி சிதி சாதியங்கள் என்கிற அஷ்டயோக தேஜஸ்வாம்மியங்கள் முதலான, அனைத்தும் கொண்டு தர்ம பரிபாலனம் செய்ய வேண்டும் என்று தில்லை நாயக சுவாமிகளுக்கு எழுதிக் கொடுத்துள்ளார். இஃது 1744ஆம் ஆண்டு எழுதப்பட்ட சாசனமாகும்.

திருலோக்கியில் (திருப்பனந்தாளுக்கு அருகில் உள்ள கிராமம்) வாழ்ந்த சாந்தப்பிள்ளை, கலித்தியாப் பிள்ளை, சிதம்பரம் பிள்ளை, சிவ தாரண்யம் பிள்ளை, வீரப்ப முதலியார் முதலானவர்கள் தங்களுக்குச் சொந்தமான விளக்கண்ணச் சேரி எனுமிடத்தில், 350 குழி நஞ்சை நிலத்தைக் காசி மடத்து மகேசுவர பூசைக்குத் தருமசாசனம் செய்து கொடுத்துள்ளார்கள். இதனைச் சந்திராதி வரைக்கும் பயிர் செய்து சர்வமானியமாக அனுபவித்துக் கொள்ளவும், இதற்குரிய இறைவரியைத் தாங்களே கட்டிக் கொள்வதாகவும் சம்மதித்துத் தில்லை நாயக சுவாமிகளுக்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள்.

சைவ அடியார்களுக்கும், சைவ மரபினர்களுக்கும் உணவளிப்பது மகேசுவர பூசையாகும். இத்தகைய பூசை வடநாட்டிலும், தென்னாட்டின் பல பகுதிகளிலும் இன்றும் சிறப்புற நடந்து வருகின்றது.

குமர குருபர சுவாமிகள் (1756 - 1790)

இவர்கள் காலத்தில் ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த குமார வெங்கடப்பானு பட்டணக்காரு என்பார் சுவாமிகளிடத்து நிபந்தனைக் காகிதம் ஒன்றை எழுதிக் கொடுத்துள்ளார். அதில் காசியில் தங்களுடைய இனத்தாருக்குரிய அன்னதான சத்திரத்திற்குக் காளஹஸ்திச் சீமையில் ஸ்ரீமகான் காளி தேவி புத்தூரில் உள்ள

வ்சுவநாதபுரம் கிராமத்தை நிவுந்தமாகக் கொடுத்துள்ளார்கள். ஆகையால் இந்த வருடம் முதல் வருடம் ஒன்றுக்கு சிங்கம் (அளவுப் பெயர்) 12 புட்டி. (நெல்வகை) நெல்லுக்கு உத்தரவு கொடுப்பித்து அவ்விதமாய்ச் சத்திரத்தில் உள்ள கோயிலுக்குத் தானியம் கொடுத்து வரவேண்டியது என்று சுவடி குறிப்பிடுகிறது.

சடையப்பத் தம்பிரான் (1798 - 1836)

இவர்கள் காலத்தில் சென்னைப் பட்டணத்தில் இருக்கும் வைசிய குலத்தைச் சார்ந்த குமரப்ப செட்டியாருடைய குமாரராகிய கரிய கிருஷ்ணம்ம செட்டியார் தருமசாசனம் செய்து கொடுத்துள்ளார்கள். அதன்படி தர்மராஜஸ்ரீ சடையப்பத் தம்பிரான் அவர்கள் அன்னதான தர்மசாசனம் எழுதிக் கொடுத்துள்ளார்கள். அஃதாவது பரத கண்டத்தில் காசித் தலத்தில் கங்கா தீரத்தில் தம்முடைய தருமமாக நித்தியம் பிரதி தினமும் பன்னிரண்டு பிராமணர்களுக்கு அன்னதானமும். தனுஷ்கோடி சகிதமான இராமேசுவரத் தலத்தில் தங்களுடைய தருமமாக நித்தியம் பிரதி தினமும் பன்னிரண்டு பிராமணர்களுக்கு அன்னதானமும் இந்த இரண்டு இடத்துத் தருமங்கள் நடப்பிக்கிறதற்காகவும். ஸ்ரீகாசியில் தம்முடைய பேருக்குச் சத்திரம் கட்டவும் தாங்கள் நம்மிடத்தில் ரொக்கம் கொடுத்த பூவிராகன் (எந்நாட்டிற்கு உரியதோ அந்நாட்டுப் பொன்னைக் குறிக்கும்) 3450இல் ஸ்ரீகாசி க்ஷேத்திரத்தில் சத்திரம் கட்டச் செலவு பூவிராகன் 400 போக நீக்கி பூவிராகன் 3050உம் நம்முடைய ஆதினத்தில் சேர்த்துக் கொண்டதினாலே இந்தப் பூவிராகன் 3050க்கும் வரப்பட்ட ஆதாய திரவியத்தில் ஒரு வேளை க்ஷாம காலங்களாயிருந்தாலும் மேலே எழுதியிருக்கிறபடிக்கு. இரண்டு இடத்திலும் நித்தியம் பிரதி தினமும் 24. பிராமணாளுக்கும் திருப்தியாய் அன்னதானம் நடப்பிவித்து. தம்முடைய ஜன்ம நட்சத்திரமாகிய பூர்வ பல்குனி நஷத்திர ஸிம்ம ராசியில் ஜெனனமான தம்முடைய நாமதேயத்திற்கு ஆசிர்வாதமுமடைந்து வரும்படியாகவும். நடப்பித்துக் கொண்டு வருவோமாகவும் தங்களுக்குப் பிற்காலம் தங்கள் வம்சத்தார்கள் மற்ற யாதொருவருக்கும் இந்த முதல் பூவராகன் 3050க்கும் இந்த தருமத்திற்கும் பாத்தியமில்லாமல் நாமே நடப்பித்துக் கொண்டு நம்மிடத்தில் தாங்கள் வைத்திருக்கும் முதலிலேயாவது. அதில் வரப்பட்ட ஆதாயத்திரவியத்திலேயாவது ஒருவர் அபகரிக்க நாங்கள் சம்மதித்திருந்தாலும். பிராமணத் துரோகம் வந்து சம்பவிக்குமாகையால் அப்படிக்கெல்லாம் வராமல் தங்கள் அன்னதான தருமமும் சத்திரோத்திராபிவிர்த்தியாகும்படியாய் நம்முடைய சிஷ்ய பரம்பரையாய் தங்களுடைய தருமத்தை சந்திரார்க்கமாய் பரிபாலனம் பண்ணிக் கொண்டு நடப்பித்துக் கொண்டு வரும்படியாக நம்முடைய மனப் பூர்வமாய் சம்மதித்து எழுதிக் கொண்டு உடன்படிக்கை என்று சடையப்பத் தம்பிரான் எழுதிக் கொடுத்துள்ளார்கள். இஃது 1813இல் எழுதப்பட்டதாகும். இத்தருமமும் அன்னதானத்தையே குறிப்பிடுகிறது.

> "அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
> ஆலயம் பதினாயிரம் நாட்டல்
> பின்னருள்ள தருமங்கள்யாவும்
> பெயர் விளங்கியொளிர நிறுத்தல்"

எனும் பாரதியின் வாக்கிற்கிணங்கத் தருமங்களைச் செய்வதைக் காட்டிலும் அதனைப் பின்னரும் பெயர் விளங்கி நிற்குமாறு நடத்திப் புகழ் பெறுவதே சாலச் சிறந்தது

என்பதை உணர்ந்த ஸ்ரீகாசிமடம் இத்தருமங்களைச் செல்வனே நடத்தி வருவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

சொக்கலிங்கத் தம்பிரான் (1841 - 1862)

இவர்கள் காலத்தில் கண்டி சேஷமனாய்டு ஸ்ரீகாசித் தலத்தில் இருக்கும் ஸ்ரீகாளஹாஸ்தி தர்ம சத்திரத்தில் உள்ள சிவாலயத்தில் அமைந்துள்ள ஸ்ரீ காளஹாஸ்திப்தி ஈச்வர சுவாமிக்கு நித்திய நைவேத்திய தீபாராதனை முதலான தர்மங்களுக்குச் சிய்யவரம் கிராமத்திலிருந்து அரண்மனைக்குக் கொடுக்க வேண்டிய ரூ. 56ம் மேலை வகையறாவுக்கு இது வரையிலும் உத்தரவு பிறந்ததால் அதன்படி கணக்கு பரிஷ்காரம் பண்ணிக் கொண்டு எனக்கு இதன்படி செலுத்துக் கொள்ளுகிறோமென்று தர்மம் நடப்பித்துக் கொண்டிருக்கும் சொக்கலிங்க தம்பிரான் அவர்களுக்கு மனு செய்வித்துக் கொண்டுள்ளோம் என்று எழுதிக் கொடுத்துள்ளார்கள்.

குளம் வெட்டுதல் (1874 - 1940, 1941)

ஸ்ரீ காசிமடம் மேற்கொண்ட அறச்செயல்களில் நீர் நிலைகளை அமைத்தலும் ஒன்றாகும். குளம் தொட்டு வளம் பெருக்கி வந்தமை இதனால் தெரிகிறது. இவ்வகையில் 1874ஆம் ஆண்டு 14ஆவது பட்டம் காசிவாசி இராமலிங்க சுவாமிகள் காலத்தில் காசிமடத்தைச் சார்ந்த பொய்கைக் குளம் வெட்டப்பட்டு நான்கு புறமும் சிமெண்ட் தளமும், கைப்பிடிச் சுவர், படித்துறை முதலியவைகளும் கட்டப்பட்டன. இப்பணியைப் பின்வந்த சுவாமிகளான காசிவாசி சோம சுந்தர சுவாமிகளும், சாமி நாத சுவாமிகளும் செய்துள்ளனர். குளக்கரைகளைப் பழுது பார்த்துக் கட்டியதுடன் குளத்தின் நடுவில் நீராழி மண்டபமும் அமைத்துள்ளனர்.

மேலும் 1937இல் சாமிநாத சுவாமிகளின் உத்தரவுப்படி வீராக்கன் கிராமம் ஸ்ரீமாரியம்மன் கோயில் எதிரடிகுளமும் 1940இல் திருப்பனந்தாள் வீரியம்மன் கோயில் எதிரடி குளமும், 1941இல் திருலோக்கி கிராமம் பெருமாள் கோயில் எதிரடி குளமும் வெட்டப்பட்டிருக்கின்றன. இதனால் அன்னதானத்தோடு குளம் வெட்டி நீர் நிலை பெருக்கிய அறமும் தெரிகிறது.

அறுசுவை உண்டி வழங்கல் (1934)

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் சைவ அடியார்களுக்கும், சைவ மரபினர்களுக்கும் உணவு அளித்து வருவது யாவரும் அறிந்த ஒன்றாகும். இதனை மாகேசுவர பூசை என்று அழைப்பர். இஃது இன்றும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது இத்தகைய மாகேசுவர பூசை ஆதி குமரகுருபர சுவாமிகள் சிவப்பேறு பெற்ற நாளாகிய வைகாசித் திங்கள் அமரபக்ஷ திருதியையில் மிகச் சிறப்பாகக் கொண்டாப்பெறும். அன்று ஆயிரக்கணக்கானவர்கள் உணவருந்தி மகிழ்வர். அவ்வுணவு அறுசுவையுடன் வழங்கப்படும். அத்தகைய அறுசுவை உணவை நூறு பேருக்குத் தயாரிக்க ஆகும் உணவுப் பொருள்களைக் குறிப்பிட்டு (மளிகை சாமான் காய்கறி வகையறாக்கள்) 'நூறு பேர் அறுசுவை சமையல் திட்டம்' என்பதை 29 - 08 - 1934இல் ஏற்படுத்தி அதனைக் காசி மடத்தில் அடியார்கள் உணவருந்தும் இடத்திலேயே (பந்தி கட்டு) கல்வெட்டில் வெட்டி வைத்துள்ளார்கள்.

இதனால் சாப்பிடும் எண்ணிக்கைக்குத்தகப் பொருள்களை வாங்குவதற்கு எளிமையுடையதாய் இருப்பதுடன் அடியார்களை அறுசுவை அமுதூட்டி மகிழ்வித்த அறச்செயலும் புலப்படுகிறது.

காகிதச் சுவடியின் அமைப்பு முறை

காகிதச் சுவடிகளில் சில இராணி முத்திரை பதிக்கப்பட்ட பத்திரங்களில் அமைந்துள்ளன. மேலும் சில காகிதத்தின் ஓரத்தில் 'யானை' முத்திரை காணப்படுகிறது.

காகிதச் சுவடியின் தொடக்கம் ஆண்டாகவோ அல்லது மரியாதைக்குரிய சொல்லாகவோ அமைந்து தொடங்குகிறது. கொடுப்பவர் கையெழுத்தும், சாட்சிக் கையெழுத்துக்களும், பெறுபவர் கையெழுத்தும் காகிதத்தின் அடிப்பாகத்தில் அமைந்துள்ளன. தெலுங்கும் தமிழும் கலந்த நடையமைப்பும், தெலுங்கு உருது மொழி எழுத்துக்களும் கொண்டு சுவடிகள் காணப்படுகின்றன. கல்வெட்டினைப் போன்று தர்மங்களைப் பாதுகாக்கும் முறையில் 'சூரிய சந்திராதித்த வரைக்கும்' என்று குறிப்பிடுகின்ற முறை காணப்படுகிறது. தர்மத்தை அபகரிக்க நினைத்தால் ஏற்படும் பாவமும் கூறப்படுகின்றது. காகிதச் சுவடியின் அமைப்பு ஒன்றும் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இதுகாறும், காகிதச் சுவடியில் உள்ள தர்ம சாசனங்கள் பற்றியும், காகிதச் சுவடி அமைப்பும் பற்றியும் கண்டோம். இதுபோல் மேலும் ஆய்வு செய்தால் பல செய்திகளைக் காணமுடியும்.

□

அரங்க மு. முருகையன்
விரிவுரையாளர்
தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக்கழகம்

இரண்டாம் வீரா நாயக்கர் நாட்குறிப்பு

வரலாற்றின் சிறப்புக்களை அறியும் ஆவணங்களாக அவ்வக்கால இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச் சுவடிகள், நாட்குறிப்புகள் போன்றன துணை நிற்கின்றன. இந்தியாவில் குறிப்பாகத் தமிழகம் மற்றும் புதுச்சேரி வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு நாட்குறிப்பு மிகச் சிறந்த ஆவணமாகத் திகழ்கின்றது. கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் வரலாறும் மக்கள் நிலையும் ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பால் நன்கு விளக்கமுறுகின்றனது. இதைப் போலவே தமிழக வரலாற்றிற்குச் சிறந்த ஆவணமாக விளங்குவது இரண்டாம் வீரா நாயக்கர் நாட்குறிப்பாகும். இவ் ஆவணமும் கி. பி. 1778க்கும் 1792க்கும் இடையிலான வரலாற்றை விளக்குகின்றது.

புதுவையில் 1840 - 1850இல் பணிபுரிந்த எதுவர் அரியேல் (Edouard Ariiel) என்பவர் தமிழ் மற்றும் தமிழரின் பண்பாட்டு வரலாற்றில் கொண்ட ஈடுபாட்டின் காரணமாகத் தொகுத்து வைக்கப்பட்ட அரிய கையேட்டுப் பிரதிகளின் தொகுப்பிலிருந்து இந்நாட்குறிப்பு, பிரான்சின் தலைமை நூலகத்திலிருந்து பெறப்பட்டது.

> "MS. IND, 143 என்ற எண்ணுடைய கோப்பினுள்ளே வேறு பல குறிப்புகளோடு எதுவார் அரியேலால் 'வீரா நாயக்கர் தின சரிதை' என்ற தலைப்பு குறிக்கப்பட்டு, மூலப் பிரதியுடன் ஒப்பிட்டுப் பார்த்தபின் கையொப்பமிட்டு வைக்கப் பட்டிருக்கின்றது. சுமார் 320 பக்கங்கள் கொண்ட இத் சரிதைப்படி முழுவதையும் நுணுகியாராய்ந்த பின், வாசிப்பவர்களும் 1778 - 1792க்கான வரலாற்றை ஆராய்ச்சி செய்வோர்களும் நல்ல பயனடையும் படியாக இதை நாம் நான்கு அத்தியாயங்களாகப் பகுத்துப் பதிப்பித்திருக்கின்றோம்"[1]

எனும் பதிப்பாளர் ஓர்.சே. மா. கோபால் கிருஷ்ணன் கருத்தின் வாயிலாக இந்நாட்

---

1. ஓர். சே மா கோபால கிருஷ்ணன் **இரண்டாம் வீரா நாயக்கர் நாட்குறிப்பு** (1778 - 1792). ப. 4.

குறிப்பு பிரான்சிலிருந்து பதிப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

வீரா நாயக்கர் வரலாறு

புதுவையில் பிரஞ்சுக்காரர்களின் ஆட்சியின் போது காவல் துறையின் உயர்பதவிக்கு அடுத்தபடியாக இருந்த பதவி 'இரண்டாம் நயினார்' என்பதாகும். இரண்டாம் வீரா நாயக்கரின் கொள்ளுத்தாத்தாவான பெருமாள் நாயக்கர். இவரை அடுத்து வீரா நாயக்கர். பின்பு இவர்தம் பிள்ளையான ராஜகோபால் நாயக்கர் எனப் பரம்பரையாக 'இரண்டாம் நயினார்' பதவியில் பணியாற்றினர். இராஜகோபால் நாயக்கர் பிரஞ்சுக்காரர்களிடம் 38 ஆண்டுகள் இப்பதவியில் இருந்தார். இவர் திறமையோடு பிரஞ்சு கவர்னர் 'கோதஹே', லெரி, லாசு போன்றோரின் கீழ்ப் பணி புரிந்து சிறப்புற்றார். இவருடைய புதல்வரில் ஒருவரே வீரா நாயக்கர் ஆவார். தன்னுடைய தாத்தாவின் பெயரைக் கொண்ட வீரா நாயக்கர் தம் காலத்தில் புதுவையிலும், புதுவையைச் சார்ந்த இடங்களிலும் தமிழ் நாட்டிலும், தென்னிந்தியாவிலும் நடந்த சம்பவங்களைத் தனது தினசரிக் குறிப்பில் எழுதி வரலாற்று நாயகராகத் திகழ்கின்றார்.

புதுவை உள்ளிட்ட தமிழகப் பகுதிகளில் போர்ச்சுகீசியர், ஒலந்துக்காரர், டச்சுக்காரர் ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர் எனப் பல தரப்பட்ட மக்கள் வணிக மையங்களை அமைத்து அதன் வாயிலாக இம்மக்களிடையே அதிகாரங்களை மெல்லச் செலுத்தினர். அரசியல் போக்காலும் ஆட்சியதிகார நாடு பிடிச் சண்டைகளாலும் தமிழகம் அல்லலுற்ற காலத்தே ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரர்களும் இங்கிருந்த மன்னர்களையும் மக்களையும் பயன்படுத்திக் கொண்டு எத்தகு முறையில் போரிட்டனர் என்பதை இந்நாட்குறிப்பு விளக்குகின்றது

மேற்கண்ட சூழலில் புதுவையும் புதுவையைச் சார்ந்த பகுதிகளும் ஆங்கிலேயர் வசமும், பிரஞ்சுக்காரர் வசமும் மாறி மாறி இருந்துள்ளதை இந்நாட்குறிப்பால் உணர முடிகின்றது

தினசரிதை குறிப்பிடும் புதுவை

புதுச்சேரியின் அன்றைய வரலாற்றை நோக்கின் நிகழ்ந்த சண்டைகள் 1. ஆங்கிலேயர்களுக்கும் 2. திப்புவினுடைய அதிகாரத்திற்குட்பட்டிருந்தவர்களுக்குமிடையே நடந்தேறியது.

ஆங்கிலேயருடைய தாக்குதல்களில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளப் பிரஞ்சுக்காரர்கள் நவாபு முகமதலிகான், அயிதரலிகான் போன்றோரிடம் உதவி கேட்க அவ்உதவி சரியான நேரத்திற்குக் கிடைக்காமல் பிரஞ்சுக்காரர்கள் தங்களுடைய கோட்டைகளை வலுப்படுத்திக் கொண்டனர். இச்செய்திகள் பின்வருமாறு நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

> "ழெனேரால் முசியேபெலுக் கொம்பவர்கள முசியே துலாக் என்றிந்தப் பட்டணத்திலே பெரிய இஞ்சினீராயிருந்தவரை யழைத்துப் புதுவை நகரில் இருந்தவர்களை யெல்லாம் சேர்க்கச் சொல்லி கட்டளையிட்டு முலியேத்து மா 7ந் தேதி தானே

கோட்டை வேலை செய்யத் தக்கதாக உத்தாரம் கொடுத்தார்"[2]

மேலும் பிரஞ்சுக்காரர்களின் வேண்டுகோளுக்கேற்ப அயிதரலிகான் அனுப்பிய குதிரைகளும் உரிய காலத்திற்குள் வந்து சேரவில்லை.

"அயிதரலிகான், மராட்டியர் நிசாமல்லி கான் பசாலத்து சங்குயிவர்களை தமக்கொத்தாசை செய்யச் சொல்லிக் கேட்டெழுதிக் கொண்டதுக்கு மராட்டியர் மறுமொழியொன்று எழுதாமற் போனார்கள். அயிதரல்லிகானுடைய மறுமொழிப் பிறகாரம் மேற்படி குமுக்குக்கு குதிரையாறாயிரமும் அவு மாசத்தில் வந்து சேர வேண்டியதும் வராமற் போய் விட்டது. மைற்றவர்களை யொத்தாசை செய்யச் சொல்லிக் கேட்டுக் கொண்டதும் காரியமில்லாமற்றானே போய் விட்டது"[3]

எனும் குறிப்பால் அறியமுடிகிறது.

பிரஞ்சுக்காரர்கள் புதுச்சேரியை ஆண்டபோது ஆங்கிலேயர்களின் கப்பல் புதுவையைக் கைப்பற்றும் நோக்கோடு வந்தது. அப்போது நிர்வாகப் பொறுப்பிலிருந்த முசியே பெலுக்கொம்பவர்கள்,

"கப்பலுக்குத் தலைவனாயிருந்த முசியே துறொன் ழொலி என்பவனுக்கிட்டக் கட்டளையாவது : எதிரிகளுக்கெதிரே போகச் சொல்லியும் அவர்களுங்கள். பேரில் முதற்கை யெடுத்தாலொழிய நீங்களவர்களை எதிர்க்கத் தேவையில்லை யென்று மவர்களுங்கள் பேரில் கையெடாமல் சும்மாய் புதுச்சேரி துறைப்பிடிக்க வந்தாலவர்களை யப்பிறம் போகச் சொல்லி முதலறிவிக்க வேண்டியது. நல்ல தனத்துடனவர்களைப் பிறம் போகாவிட்டால் சண்டை துவக்கிக் கொள்ளச் சொல்லியும் அதன் முன் சண்டை துவக்கத் தேவையில்லை யென்றும் கப்பல் காரருக்குக் கட்டளை பிறப்பித்தான்"[4]

எனும் செய்தியால் அக்காலத்தில் முறையான அறிவிப்பிற்குப் பிறகே சண்டை தொடங்கும் வழக்கம் இருந்ததை உணர முடிகிறது. மேலும் நாட்குறிப்பில் போரில் இறந்துபட்டவர்களின் எண்ணிக்கை, பயன்படுத்தப்பட்ட பீரங்கிகளின் எண்ணிக்கை, காயம்பட்டவர்களின் எண்ணிக்கையென அனைத்துத் தகவல்களையும் நாட்குறிப்புத் தெளிவாகக் கூறுகிறது.

ஆங்கிலேயர்களுக்கும் பிரஞ்சுக்காரர்களுக்கும் நடந்த முதல் சண்டையில்

	கப்பல்கள்	பீரங்கிகள்	பரிவாரங்கள்
பிரஞ்சியருக்கு	5	168	1038
ஆங்கிலேயருக்கு	5	150	1010

2. ஓர். சே. மா கோபால கிருஷ்ணன். **மு. கா. நூல்**. ப. 4
3 **மேலது**. ப. 5.
4 **மேலது**. ப 13

இறந்து போனவர்கள் எண்ணிக்கை

ஆங்கிலேயருக்கு	- 11	காயம்	- 51
பிரஞ்சியருக்கு	- 30	காயம்	- 3

இச்சண்டையில் முதல் வெற்றி பிரஞ்சுக்காரர்களுக்கே என்பதை நாட்குறிப்பால் அறிய முடிகின்றது அடிக்கடி நிகழ்ந்த போர்களில் புதுச்சேரி அல்லல் பட்டுக் கிடந்தது என்பதை நாட்குறிப்பின் வழி உணரமுடிகின்றது.

நாட்குறிப்பில் - தண்டனை

அரசுக்கோ அல்லது சமுதாயத்திற்கோ புறம்பான முறையில் நடப்பவர்களுக்குத் தக்க தண்டனை வழங்கப்பட்டது. சாராயம் விற்றவர்களுக்கு எத்தகு தண்டனை முறை வழங்கப்பட்டிருந்தது என்பதை,

> "இற்றை நாள் வெகுகாலமாய் பெரிய கடையில் சாராயம் வித்துக் கொண்டிருந்த ஒரு யிங்கிலீசுக்காரனையும் பிராம்சுக்காறருடைய சொல்தாதாகிய அக்கித்தேன் ரெழிமாமுடைய சொல்தா தொருவனையும் கயற்றினாலே கட்டி இருவருடைய கழுத்துகளிலும் காகிதமெழுதிக் கட்டி மேற்படியாரைச் சுத்தி சிப்பாய்களை காவல் போட்டு கொம்பு தமுக்கு முதலான வாடம்பரத்துடன் நடுப் பிளாசிலே கொண்டு வந்து மேற்படியாருடைய நெத்திகளிலும் முதுகிலும் முத்திரைப் போட்டு வூரைச் சுத்தி திருப்பி பிறசித்தமான பின் மறுபடியும் சிறைசாலையில் வைத்தார்கள்"[5]

எனச் சாராயம் விற்றவருக்கான தண்டனை முறையைக் கூறுகின்றது.

பிரஞ்சுப் படையில் பணியாற்றியவர்கள் ஆங்கிலேயர்களுக்குப் பயந்து புதுச்சேரியை விட்டு வேறு பகுதிகளுக்கு ஓடுவதும் ஆங்கிலேயர்களுடைய கமபெனிகளில் சேர்ந்து கொள்வதும் வழக்கமாய் இருந்தது இப்படி ஓடிப் போனவர்களைத் தேடிப் பிடித்து வந்து அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

> "இந்த நாள் சாயங்காலம் சொல் தாது ராணுவத்தார்களை யெல்லாம் பிளாசிலே வரிசை வைத்து மேற் சொல்லப்பட்டவிரண்டு சொல் தாதுகளையும் சிறைச் சாலையிலிருந்து திட்டு வந்து மேற் சொல்லப்பட்ட விரண்டு வரிசைக்கு நடுவே விட்டு தலையின் மயிரை மொட்டையடித்து செய்ய வேண்டிய வவமான மெல்லாஞ் செய்தான பின் பீரங்கி குண்டு மாட்டி வைத்திருந்த சங்கிலியைக் கழுத்திலே மாட்டி வரிசைக்கு மத்தியிலே திருப்பி பங்கப்படுத்திய பின் கால் விலங்கு போட்டு (Galere) என்னும் ஆக்கினைக் குள்ளாக்கினார்கள்"[6]

---

5 ஓர் சே மா கோபால கிருஷ்ணன **மு. கா. நூல்** ப. 109

6. **மேலது**, ப 132.

தூக்குத் தண்டனை

இவையன்றிச் சிறையிலடைத்தவர்களைத் திரும்பவும் அழைத்து வந்து தூக்கு மரத்தண்டைத் தூக்கச் செய்தும் அப்போது அவர்களுடைய துணிகளைத் தோட்டிகள் பறித்துக் கொண்டார்கள்.

> "பிற்பாடு ஏணியின் பேரிலேற்றி கழுத்திலே கயிற்றை மாட்டித் தூக்கிலிட்டார்கள் பின்னுமரை மணிக்கெல்லாம் மற்றொருவனையு மந்தப் பிறகாரந் தூக்கிலிட்டார்கள்"[7]

வலங்கை - இடங்கைப் பூசல்கள்

தமிழ்ச் சமூக வரலாற்றில் இறுகிப்போன சாதிய அமைப்பின் வெளிப்பாடாக விளங்குவது இவ்வலங்கை இடங்கைப் பூசல்கள் ஆகும். சாதிய ஆய்வாளர்களும், வரலாற்றாசிரியர்களும் வலங்கைச் சாதியினர் 98 என்றும் இடங்கைச் சாதியினர் 98 என்றும் குறிப்பிடுகின்றனர். வலங்கையருக்கும் இடங்கையருக்கும் வாழ்க்கையில் சில உரிமைகளைப் பயன்படுத்துவதிலும், சமூக ஆளுமையில் இன்னார் இந்தப் பழக்கவழக்கங்களை மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்று சமூகச் சட்டங்களைத் தங்களுக்குள்ளே கொண்டதாலும் இவ்விரு தரப்பினரிடையே, மேற்கண்ட முறைகளைக் கடைப்பிடிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டபோது அங்குப் பூசல்கள் எழுந்துள்ளன.

ஆனந்தரங்கர் நாட்குறிப்பைப் போலவே வீரா நாயக்கர் நாட்குறிப்பும் வலங்கை இடங்கைப் பூசல்களைப் பதிவு செய்துள்ளன. இப்பூசல்கள் புதுவையில் உள்ள வரதராசப் பெருமாள் கோயிலில் நடைபெறும்

1. வைகுண்ட ஏகாதசி இரத உற்சவம் தொடர்பாகவும்
2. செட்டிமகன் ஒருவன் வழக்கத்திற்கு மாறாகக் குடை பிடித்து வந்ததாலும்
3. இறந்தவருடைய பிணத்தை எடுத்துச் செல்லுதல் தொடர்பாகவும்
4. வலங்கையர் வீதி வழியாக இடங்கையர் செல்லும் போதும், இடங்கையர் வீதி வழியாக வலங்கையர் செல்லும் போதும் இத்தகு பூசல்கள் எழுந்தன.

என்பதை நாட்குறிப்பு பல இடங்களில் சுட்டுகின்றது.

> "இற்றை நாள் வைகுண்ட யேகா தெசியான படியினாலே வரதராசப் பெருமாளுக்கு றத உற்சவஞ் செய்விக்க வேணுமென்று யோசித்துப் பத்து நாளைக்கு முன்னமேதானே மகாநாடு கூடி விபகாரம் பேசியு மொன்று மொவ்வாமற் போகவே வலங்கையாரும் இடங்கையாரும் கூடிக் கொண்டு முசியேதெ கொசிஞ்சி யவர்களிடத்தில் முறையிட்டுக் கொண்டவிடத்தில் இவருடைய ஞாயத்தையும் கேட்டு இடங்கையாருக்குத் தேரோட வெதினாலே உத்தாரம் கொடுக்கக் கூடாதென்று விளக்கஞ்

7 ஓர். சே. மா. கோபால கிருஷ்ணன், **மு. கா. நூல்**, ப. 133.

> செய்கீறீர்களென்று வலங்கையாரைக் கேட்டதுக்கு இவர்கள் சொன்னது : விடங்கையார் ரெப்போதும் நடவாத காரியத்தை நவமாயுண்டு செய்து கொள்ள பிரேத்தினம் செய்கிற படியினாலே யது கூடாத காரியமாய் இருக்கிறதென்று சொன்னதின் பேரில் ஒருவருக்கொருவர் தீராத சங்கதிகளாய் பேசி வளர்த்திக் கொண்டிருந்த படியினாலே துரைக்கு மனசிலே யாயாசம் வந்து"[8]

இருவரும் ஒத்து வந்தால் ஒழிய திருவிழாவை நடத்தக்கூடாது என்று கூறியனுப்பியதை நாட்குறிப்பால் அறிய முடிகிறது.

புதுவையில் இருந்த பள்ளித் தெருவில் இறந்து போன இலவாணிச்சியை அடக்கம் செய்ய எடுத்துக் கொண்டு போகையில் இடங்கையைச் சேர்ந்த கம்மாளர்கள் மறித்து விட்டனர். தாரை தம்பட்டம் அடிக்கக் கூடாது எனவும் மறித்தனால் வலங்கையர் துரையிடம் முறையிட்டனர். இதனாலும் சாதிப் போராட்டம் நிகழ்ந்ததை நாட்குறிப்பின் பக்கம் 158 தெளிவுபடுத்துகிறது.

இதைப்போன்று கி. பி. 1778 முதல் 1792 வரை தாம் நேரில் கண்ட வரலாறு மற்றும் பண்பாட்டுத் தரவுகளை இந்நாட்குறிப்பில் வீரா நாயக்கர் பதிவு செய்துள்ளார். இவர் வரலாற்றுத் தொலை நோக்குடையவர் எனும் புகழுக்குரியவராகின்றார். மேலும் இந்நாட்குறிப்பில் அரசியல் நிலை, பண்பாட்டுச் செய்திகள், மக்கள் நிலை போன்றவை பேச்சுத் தமிழிலும் பிற மொழி கலந்த நடையிலும் பதிவு செய்யப்பெற்று வரலாற்று ஆவணமாக மிளிர்கிறது.

□

8. ஓ சே மா கோபால கிருஷ்ணன், மு. கா. நூல், ப 136

சொ. இரவி
தமிழ்த்துறை
எஸ். கே. எஸ். எஸ். கலைக்கல்லூரி
திருப்பனந்தாள்

ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பில் வாழ்வியல்

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' - ஆம்! 'அறிவியலும் கலையும்' போற்றிப் பாதுகாக்கப் பெறவேண்டியவைகள். வரலாற்றில் இடம் பெறத்தக்க நற்பெற்றியர்கள் தங்கள் வாழ்வியலை முறையாக எழுதி வைக்கவில்லை. ஒரு சிலரே தங்கள் 'நாட்குறிப்பாக'வேனும் எழுதி வைத்தனர். அவர்கள் (வாழ்வியலை நேரில் கண்ணுற்றவர்கள்) செய்யுள் வடிவிலும் ஓலைச் சுவடியிலும் கையெழுத்தாகவும் எழுதி வைத்தனர். மேலும் நற்றமிழ் நெஞ்சங்கள் எழுதி வைத்த நற்குறிப்புக்களையும் பாதுகாக்கத் தவறி விட்டனர். வழி வழி வருவோர்க்கு வேண்டிய நற்கருத்துக்கள் இதனால் கிட்டாமல் போய் விடுகின்றன.

கட்டுரையின் பொருளாளர் 'புதுவை அறச்செம்மல் - திவான் - திருமிகு ஆனந்த ரங்கம் பிள்ளை'யவர்களின் வாழ்வியற் செய்திகளையும் முறையாக நம்மவர் பாதுகாத்து வைக்கவில்லை; இருப்பினும், பிள்ளையவர்கள் செய்த முற்பிறவிப் பலனின் காரணமாக அவரைப்பற்றிய ஓலைச் சுவடிகளும் அதன் செய்திகளும் - அவர் தாமே கையால் எழுதிய நாட்குறிப்புச் செய்திகளும் கிடைத்துள்ளன. அதனையொட்டி, இக்கட்டுரை பிள்ளையவர்களின் வாழ்வியலை ஆய்கின்றது.

தகைமை

ஆனந்தரங்கம் பிள்ளையவர்கள் பெயருக்கேற்பவே ஆனந்தமாய் வாழ்ந்தவர்கள். எளிய வாழ்க்கையையே விரும்பினார்கள். புதுவை அரசின் 'திவானாகவும்', 'நாட்டு மக்களின் தலைவராகவும்', பொருள் மிக ஈட்டினாலும் 'எளிய வாழ்க்கை' மேற்கொண்டவராகவும் இலங்கினார்கள்.

பிறப்பு

சென்னைப் பிரம்பூரில் கி. பி. 1709இல் சனிக் கிழமையன்று 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் வள்ளுவப் பெருந்தகையின் கூற்றை மெய்ப்பிக்க வந்துற்றார் போல இப்போதே நாம் அவரைப்பற்றி எழுத அப்போதே தோன்றினார் எனலாம். தந்தையார் திருவேங்கடம் பிள்ளையவர்கள்; மைத்துனர் 'நைனியாப் பிள்ளை' அவர்கள்.

திருவேங்கடம் பிள்ளையவர்கள் இந்து சமயங்களுக்கு இழைக்கப் பெறற இடையூறுகளை எதிர்த்துப் போராடியவர்; அதன் வழி மரபு ஊக்கம் பிள்ளையவர்களுக்கு ஏற்பட்டது. மைத்துனர் வேண்டுகோளால் தந்தைக்குப் பிறகு தாமே புதுச்சேரிக்கு வந்துற்றார்.

18ஆம் நூற்றாண்டில் இந்தியா

இந்திய வளப்பம் மற்றும் உயர்வை எண்ணிய பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்த எண்ணினர்; ஆங்கிலேயர்களுக்கும் இவ்வெண்ணம் எழுந்துற்றது[1]

இந்திய மக்களின் அன்பினையும் உதவியினையும் பெற அழைத்தனர். அரசின் உதவியை நாடினர்; அயலவன் மூக்கை நுழைத்ததால் 'தென்னாடு' பலதிறப்பட்ட இன்னல்களுக்கு உள்ளாகியது.

பிள்ளையவர்களின் பங்கு

அறிவும் ஆற்றலும் உடையவராய், நம் நாட்டு மக்களின் நல்வளர்ச்சி நன்மைகளையே பெரிதும் விரும்பியவராய், பன்மொழி வித்தகராய், பிரெஞ்சு ஆளுகை வந்துற்ற நிலையில் அதன் சிறந்த மதி நுட்ப முடைய ஆலோசகராய், அவ்வரசினைச் சீரிய முறையில் (நமக்குத் தீங்குவராமல்) நடத்தச் செய்யும் வழிகாட்டியாய் அமைந்தார் பிள்ளை

திவான்

காரியங்கள் ஆற்றுவதில் தம் அருமை பெருமைகளைக் காட்டியுள்ளமையை ஒலைச் சுவடியும் கையெழுத்துப் பிரதியும் எடுத்துரைக்கும் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கூட்டத்தார் 'உதவிதாரராக' (வியாபாரம் பெருக) நியமிக்கப் பெற்றார். வர்த்தக விருந்தினரைப் போற்றுதல் - உபசரித்தல் ஆகியவற்றில் உதவினார். செயல் திறமையால் 'திவானாக' மாறினார்; கி. பி. 1746இல் இப்பொறுப்பு ஏற்றார்.

மக்களின் தலைவர்

அரசியல் நிபுணர்களுடன் தொடர்பு கொண்டார்; முரண்பாடு களைந்து சமரசம் செய்தார். நாட்டின் சிற்றரசர்களும் பிள்ளையைப் பலபடப் பாராட்டியுள்ளனர்; அவர்கள்பால் நட்பும் மதிப்பும் உடையவராகத் திகழ்ந்தார்.

கி. பி. 1749இல் 'முஸபர் ஜங்கு' எனும் அதிகாரி பிள்ளையின் உயர்வு எண்ணித் தேர்ச்சிமிக்க 3000 குதிரைகளுக்கு, அவரைச் சொந்தக்காரராய் ஆக்கி 'மன சுபேதார்' என்னும் பட்டமும் வழங்கினார்.

இப்பட்டம் அக்பர் காலத்தது; எனவே இப்பட்டத்தால் பிள்ளையவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 24,000 ரூபாய் வருமானம் கிட்டியது. நேர்மை உழைப்பால் 'வஜாரத ராய விஜயர்' எனும் பட்டம் பெற்றார்.

செங்கற்பட்டின் கோட்டைத் 'தளபதி' ஆனார். ஜில்லாவின் 'ஜாகீர்தார்' ஆகவும் நியமனமானார்.

பட்டங்கள் வழி, பிள்ளையவர்களின் புகழ் ஓங்கவே கவர்னர் 'துய்ப்ளேக்ஸ்' பிள்ளையை இந்திய மக்களின் தலைவராக்கினார்

மரியாதை

கவர்னர் காரியாலயத்திற்கும் பல்லக்கில் அமர்ந்தே 'மேள வாத்தியங்கள்' முழங்கச் செல்வார். தங்கப்பிடியுடைய கைத் தடியும் பாதரட்சையும் அணிந்து செல்வதும் அவரது மரியாதையை உயர்த்திக் காட்டிற்று.

சிறந்த ஊர்க் காவலராயும் திகழ்ந்தார். ஊர்ச்சாவடி வழக்குகளை நேரில் கண்ணுற்று முரண்பாடு களைபவராயும் இலங்கினார். நாணயம் மிக்க முதலாளிகளைப் பல ஊர்களுக்கும் சென்று அவ்விடத்தின் நிலைமைகளை அறிந்து வரச் செய்தார்; அதன் வழி சபைகளுக்கு நல்ல யோசனைகளையும் வழங்கியுள்ளார்.

பலரின் தொடர்பு

பிள்ளையவர்கள் 'தென்னாட்டு மன்னர்களுடன்' தொடர்பு-கொண்டிருந்தார். அம்மன்னர்களுக்கு அன்பளிப்புப் பொருளாய் அழகிய 'புரவிகள்', 'நாய்கள்', 'பரிமளப் பொருட்கள்' போன்றவற்றை நல்கியுள்ளார்.

உள்நாட்டு வெளிநாட்டுடன் உறவினைப் பலப்படுத்திச் சிறந்த 'ராஜ தந்திரியாய்' – 'மத்தியஸ்தராய்'த் திகழ்ந்தார்.

குடிமக்களின் உரிமைகளை மதித்துக் காத்தார்; பலரது தொடர்பினால் நாட்டில் வெள்ளி, செம்பு, மற்றும் தங்க நாணயங்கள் நடைமுறையில் இருந்தன.

கி. பி. 1938 வரை, 'தங்கச் சாலை' யொன்று புதுச்சேரியில் அமைந்திருந்தமை எண்ணலாம்.

நாணயம் 'அச்சிடுவதில்' நாணயம் காத்த நாணயர்.

சிறந்த படைத்தளபதி

செலின் டேவிடு கோட்டையின் மீது பிரெஞ்சுக்காரர்கள் படையெடுத்த சமயத்தில் 'தக்க ஆலோசகராய்த் திகழ்ந்து' காத்துள்ளார். அச்சமயம் 'ஞாயிறும் ஞாயிற்றின் ஒளி போலவும்' திகழ்ந்தவர்கள் கவர்னர் 'துய்ப்ளேக்ஸும்', 'ஆனந்தரங்கம் பிள்ளையும்' ஆவர்.

'சரித்திர நாயக'னாய்ப் பிரெஞ்சுக் கம்பெனியில் பூசல்கள் வராதவாறு நடு நிலைமையுடன் திகழ்ந்தார். வர்த்தகத்தில் குறைபாடில்லை; ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களின் மூட்டைகளில் பிரெஞ்சு எழுத்து `R'; ம் பிள்ளையின் பெயரும் உடைய சின்னமும் காணப்பெற்றன.

சிறந்த நெசவாளர் நாட்டுப்பற்று மிக்கவர்

கைத்தறி நெசவாளர்களை உடன் நின்று ஊக்கப்படுத்தினார். நெய்யும் துணிகள் நேர்த்தி மிக்கவை; நம் நாட்டின் 'நெசவு வண்மை'யை உலக றியச் செய்தவர்.

தாம் வாங்கும் போதும் புதுச்சேரித் துணிகளையே ஏராளமாக வாங்கினார். 1. வெள்ளைத் துணிகள் 2. நீலந் தோய்த்த துணிகள் 3. சாய நூற்களைக் கொண்டு நெய்த துணிகள் 4. அச்சுக் குத்திய துணிகள் போல்வன வகைப்பாட்டினுள் அடங்கும்.

வெள்ளைத் துணிகளே 'தென்னாட்டுத் துணிகள்' என்று வழங்கப் பெற்றன. சாய நூற்களைக் கொண்டு சென்னையில் ஒருவகைத் துண்டும் (கைத்துண்டு) நெய்யப் பெற்றது; வெளி நாட்டவர் விரும்பி வாங்கிப் போற்றினர் ; அதற்குச் 'சென்னைக் கைத் துண்டு' என்று பெயரும் விளங்கிற்று.

கி. பி. 1762இல் 'புய்சி' என்பவர் ஐரோப்பாவிற்குச் சென்ற போது அந்தக் கைத் துண்டுகளில் 482 'போம்பாதூர்' அம்மையாருக்கு வொரு 'தங்கப் பெட்டியில்' வைத்துப் பரிசாகத் தந்துற்றார்; அதில் 'சைலாசு' துணிகள் 8அடி நீளம் உள்ளவை.

இவ்வாறு நாடே போற்றும் அளவிற்கு நெசவாளர் பணியில் தாமும் உடன் நின்று உரம் அளித்தார்.

சிறந்த வாணிகர் மற்றும் கணக்கர்

கடல் வழி வாணிபத்திற்கு அடிகோலியவர்; கப்பலின் பெயர் 'ஆனந்தப் புரவி' என்பதாகும். அவருக்கே சொந்தமான ஆனந்தப் புரவியாகும்.

பிள்ளையவர்கள் தமது 'நாட்குறிப்பில்' இதனையெல்லாம் தாமே விளக்கமாகக் கையால் எழுதி வைத்துள்ளார்; வாணிபத்தில் 'கணக்குப் பதிவியல்' முறையையும் கையாண்டுள்ளமை நாட்குறிப்பின் வழி தெளியலாம்.

தமது 'நாட்குறிப்பால்' நகைகள்மீது கடன் கொடுத்தமை பற்றியும், கிழக்கிந்தியக் கூட்டத்தாரிடமிருந்து சிற்சில நற்காரியங்களுக்கு முன்பணமாகப் பெற்ற தொகைகளைப் பற்றியும் எழுதி வைத்துள்ளார்.

சிலாசாசனப் பரிசோதகர் திரு 'துய்ப்ரேய்' என்பவர் கி. பி. 1928இல் பிள்ளையவர்களின் சொந்த இல்லத்தில் அவரது சந்ததியாரின் துணை கொண்டு 'புத்தகம்' ஒன்று கண்டெடுத்தார். அதுவொரு 'கணக்குப் பதிவேடு'; வரவு செலவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல் பற்றிய நிதிநிலை விவரங்கள் காணப்பெற்றன; அப்புத்தகம் இன்றைய 'வணிகவியல்' (Commerce) துறைக்கும் பெரிதும் பயன்படத்தக்கதாகும்.

கணக்கியல் குறிப்புக்கள் தமிழ் மொழியின் சாதாரண நடையே; பிள்ளைவர்கள் எழுத்தோ அல்லது சிப்பந்திகளின் எழுத்தோ ஆகலாம்; இக்குறிப்புக்கள் 'சரித்திரத் தொடர்பு' அற்றன என்றாலும் 'அரசியல் துறையில் அக்காலத்தில் ஈடுபட்டிருந்த பலரது பொருளாதார நிலையை' உணர்த்தவல்லன வெனில் மிகையாகாது.

'பிரெஞ்சு இந்தியச் சரித்திர ஆராய்ச்சிச் சங்கத்தார்' பிள்ளைவர்களின் 'கணக்குப் புத்தகத்தை'ப் பிரெஞ்சில் மொழி பெயர்த்து. கி. பி. 1930இல் வெளிப்படுத்தினர். இதன் மூலப் பிரதி 'புதுச்சேரி அரசாங்கப் புத்தக சாலையில்' வைக்கப் பெற்றுள்ளது.

புலவர்களைப் புரக்கும் புரவலர்

பன்மொழிப் புலமையும் கல்வித் திறமும் அன்பும் அடக்கமும் உடையவர்; தமிழ் மொழிப் பற்று மிக்கவர்; சிறந்த ஆன்மீக வாதி! பிள்ளையவர்களின் புகழ் பாடிப் பரிசில் பெற்ற புலவர்களும் ஏராளம்.

ஆனந்தரங்கம் பிள்ளையைப்பற்றிய செய்யுள் ஒன்று 'ஓலைச் சுவடி'யாய் இருக்கின்றது; புத்தக வடிவில் வெளி வந்துற்றால் நலம் பயக்கும்! இதனை யாத்தவர் இலக்கண விளக்கம் 'வைத்திய நாத தேசிகர்' ஆவார்.

புதுச்சேரிக்குச் சென்ற 'மதுர கவிராயர்' பிள்ளையின் கருணையுள்ளம் கண்டு,

"உலங்கொண்ட மணிப் புயனே! பிரம்பூரா
னந்தரங்கா! உன்பாற் செல்ல,
வலங்கொண்ட கருடனையாம் இடங்கண்டோம்;
. . . நினது நகை முகங்கண்டோம் . . ."

என உருகிப் பாடியுள்ளார்.

பிள்ளைமீது 'ஆனந்தரங்கக் கோவை'யும் பாடப் பெற்றுள்ளது. இக்கோவை இன்றும் ஓலைச் சுவடியாகவே உள்ளது.

கஸ்தூரி ரங்கய்யர் தெலுங்கில் எழுதிய 'ஆனந்தரங்க ராட் சந்தமுது' குறிப்பிடலாம். நடன மாதர் பாடி ஆடப் பயன்பெறும் நூல். இந்நூல் 1746இல் பிள்ளையின் அவையில் அரங்கேற்றம் செய்யப் பெற்றது.

சோதிடக்கலை, வான நூல் பயிற்சி முதலியன உடையவர் பிள்ளைவர்கள்.

சிந்தைநிறை செல்வங்கள்

கல்விச் செல்வம் முதலாம் எல்லா மங்களமும் உடையவர்; அவரது 'ஆனந்த மாளிகை' இல்லம் புதுச்சேரியில் உள்ளது; கலை நுட்பத்தோடு கூடிய இல்ல அமைப்பு கலைஞர்களை ஈர்க்கும். குதிரைகள், யானைகள், அழகிய வண்டி ஊர்திகள் யாவும் இல்லத்தை அலங்கரித்தன. அரசியல் - வர்த்தகத் தொடர்புக்கு யானைச் சவாரி - செய்வார்; மேலும் தமிழர்களின் திருமணங்களையும் செல்வச் செழிப்புடன் குறையாது மணங் குளிர நடத்தி வைத்தார்.

'அறங் காத்த செல்வரா'யும் திகழ்ந்தார். சத்திரங்கள் பல கட்டினார்; வழிப் போக்கர்களுக்கும் ஏழைகளுககும் 'கொள்ளுக் கஞ்சி' நீர் மோர் படைப்பார். பிள்ளையவர்கள் கோயில் காவலராயும் திகழ்ந்தார்கள்; சிறந்த திருமால் பக்தர்; கண்ணன் அவதாரத்தில் கருத்துடையவர். 'வேர்கடம்மா'- பேட்டையில் தான தருமங்கள் மேற் கொண்டவர். மேல் நாட்டு வர்த்தகர்களுக்கும் பேருதவி புரிந்தவர்.

ஆயர் தொல்குலத்திற் தோன்றியமையால் 'ஆசாரங்களை' அனுசரித்து நடந்தார். சமநோக்குடைய சிந்தனையாளர். தாமே முன் நின்று வேலையாட்களுடன் வேலை யாளாய்த் திகழ்ந்தவர்; எளிய வாழ்க்கையையே எண்ணியவராய் உள்ளத்துள் வாழ்ந்தமையால்பணியாட்களிடம் தற்பெருமை பாராட்டாமல் நடக்கும் நடமாடும் தெய்வம்.

நாட்குறிப்புக்கள்

பிள்ளையின் நாட்குறிப்புக்கள் இந்திய மற்றும் பிரான்ஸ், இங்கிலாந்து தேசங்களின் சரித்திரத்திற்கும் ஆதாரமாய் உள்ளன. தேச விரோதங்களைப் போக்க வல்லது' எல்லோரும் இந்தியர்கள் என்ற உணர்வை ஏற்படுத்துவது. வாழ்வாங்கு வாழ்வதற்கு வந்துதித்த தமிழ் ஓடையாம் பிள்ளையின் நாட்குறிப்புக்களும் ஓலைக் கையெழுத்துச் சுவடிகளும் போற்றிப் பாதுகாக்கப் பெற வேண்டியவை!

□

இராசு. பவுன்துரை
இணைப் பேராசிரியர்
கட்டடக் கலைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

கடாரம் - ஒரு மறு ஆய்வு

தமிழக வரலாற்று ஆவணங்களில் கடாரம் [Kadaram] என்றழைக்கப்படும் இடம் பற்றிய வரலாற்று அறிஞர்களின் கருத்துக்கள் பல்வேறு நிலைகளில் பேசப்படுகின்றன. இதுவரை வெளிவந்த கருத்துக்கள் அனைத்தும் 'கடாரம்' என்னுமிடம் மலாய்த் தீவுப் பகுதியில் அமைந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளன. இராசேந்திரசோழனின் 14ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு முதன் முதலில் 'கடாரம்' குறித்துப் பேசுகின்றது. 'கடாரம் கொண்டான்' என்ற மெய்க்கீர்த்தி கடாரத்தின் வெற்றியைக் குறிக்கின்றது. இருப்பினும் 'கடாரம்' பற்றிய கருத்துக்கள் மேலாய்வுக்குரியதாகவும் கருதப்படுகின்றது.

கடாரம் என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடமொன்று பண்டைய கொரிய நாட்டில் பேசப்படுகிறது. கி. பி. 4 - 5ஆம் நூற்றாண்டுகளில் கலை. இலக்கியம். பண்பாடு. கடல் வணிகம் போன்றவற்றில் கடாரம் நகர் சிறப்புப் பெற்றிருந்தது என்பதைக் கொரியா. ஜப்பான் ஆவணங்களும் சீனநாட்டுச் சான்றுகளும் வெளிப்படுத்துகின்றன. எனவே. கடாரம் குறித்த ஆய்வுகளை மறு ஆய்வு மேற்கொள்ளுதல் தேவையாகின்றது

கடாரம்

தென்னிந்திய வரலாற்று அறிஞர்களால் கணிக்கப்பெற்ற கடாரத்தின் இடக்கணிப்புமுறை மிகுந்த சிரமத்தைக் கொடுக்கிறது என்று கூறுகின்ற நீலகண்ட சாஸ்திரியார்[1] சீன வரலாற்றுக் குறிப்புகளில் இடம் பெறும் சன்-ஃபோ-திசி (San-fo-tsi) என்பது கடாரம். ஸ்ரீவிஜயம் ஆகிய இடங்களை ஆட்சி புரிந்தவரைக் குறிக்கும் பெயராகவும் கருதுகின்றனர்.[2] மேலும் முதலில் கடாரா அரிசிலிருந்த ஸ்ரீவிஜயம் பகுதிதான் முதன் முதலில் இராசேந்திரனால் கைப்பற்றப் பெற்றது எனக் கருதப்படுகின்றது. கடாரம் அரசு என்பது சுமத்திராப் பகுதியிலிருந்த 'பாலம்பாங்' பகுதியே என்றும் அது கடாரம் அரசின் தலைமைக்குரிய பகுதி எனக் குறிக்கப்படுவதாகவும் சாஸ்திரியார் கூறுகின்றார்.[3] நொபுரு கராசிமமா கடாரம்

1 K. A. Nilakanda Sastri,"The identification of Kadaram presents more difficulty", **The Cholas**, Madras, 1984, p. 215
2 **Ibid.**, p. 214.
3 **Ibid.**, p. 215.

அரசர்களும் ஸ்ரீவிஜயம் அரசர்களும் ஒன்றே எனத் தமிழர்கள் கருதுவதால் இதன் வரலாறு பிரச்சனைக்குரியதாகி விடுகிறது என்றும் சீன வரலாற்றுக் குறிப்புகளை ஆராயும்பொழுது. கி. பி. 1003 -1082 வரையுள்ள சான்றுகளில் கடாரம் மற்றும் சன்-ஃபோ-திசி, ஸ்ரீவிஜயம் ஆகிய மூன்று பெயர்களும் இடம்பெற்றிருப்பது பற்றிய குறிப்புகள் குறித்து மேலும் ஆராய வேண்டியுள்ளது எனக் கருதுகின்றார்.[4]

பேக்சே (Paekche) நாடு

கொரிய நாட்டை மூவேந்தர்கள் ஆட்சி செய்து வந்தனர். இம்மூன்று நாடுகளும் முறையே கோ கொரியோ [Koguryeo]. சில்லா [Shilla], [Paekche] பேக்சே என்றழைக்கப்பட்டன. பேக்சே நாட்டின் வரலாற்றுச் சான்றுகள் கி. பி. 2ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து கிடைக்கப் பெறுகின்றன. சீன, ஜப்பான், கொரியப் பண்பாட்டுத் தொடர்புகள் இந்நாட்டின் வரலாற்றுச் சிறப்பை உறுதி செய்கின்றன. இந்நாட்டு ஆவணங்களில் குடாரா [Kudara]. கடாரா [Kadara]. கடா [Kada] என்றழைக்கப்படுகின்ற நகரம் பேக்சே நாட்டின் வரலாற்றுச் சிறப்பிற்குரிய இடமாகச் சுட்டப்பட்டுள்ளது.

சிறகிக் குளம்

சிறகி [Siragi] பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களால் கி. பி. 398 இல் பேக்சே நாட்டில் ஒரு பெரிய குளத்தை வெட்டினர். இந்தப் பணியை முன்னின்று நடத்தியவர் 'தக்கசி-உதி-நோ-சுகுனே' என்று பேக்சே வரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன.[5] இக்குளத்திற்கு 'கடாரா நோ-இகி' என்று பெயரிட்டழைத்தனர். பிற்காலத்தில் கடாரா என்னும் பெயர் பேக்சே நாட்டின் பெயராகவும் சுட்டப்பட்டு வந்துள்ளதை ஆவணங்கள் வெளிப்படுத்துகின்றன.[6]

'தக்கசி' என்பதற்குத் 'தச்சன்' என்பது பொருளாகும். சோழ கங்கம் என்று இராசேந்திரசோழன் தன்வெற்றிச் சிறப்புக் கருதிப் பெயரிட்டதைப் போன்று கொரிய நாட்டின் கடாரா நதியின் சிறப்புக் கருதி அல்லது நாட்டின் பெயர்ச் சிறப்புக் கருதிக் 'கடாரா நோ-இகி' என்று பெயர் பெற்றிருக்கக்கூடும் எனக் கருதலாம்.

முன்னோர் தெய்வங்கள்

கொரிய நாட்டின் வரலாற்றுக் கூறுகளைக் காணும்பொழுது பல்வேறு செய்திகள் இந்தியப் பண்பாட்டின் தொடர்பை வெளிப்படுத்துவனாக அமைகின்றன.[7] குமி [Kume] என்னும் கடற்றெய்வத்தின் முன்னோர் வழித் தெய்வமாக சின்மோசின் [Chinmochin] அல்லது மாகெட்சு [Maketsu] என்னும் தெய்வம் பேசப்படுகிறது. சாசனங்களைப் படிக்கும் மரபினரான எசிக்கி [Achikki] கல்விக்குரிய முன்னோர் தெய்வமாகிய வாணியின் [Wani] தொடர்பில் வந்தவராகவும் சுட்டப்படுகின்றார்.

---

4 Noboru Karashima, "Indian Commerial activities Medieval Southeast Asia". Plenary Session Papers, 8th World Tamil Conference, Thanjavur, 1995, p. 14.

5 Wontack Hong, Paekche of Korea and the origin of Yamato Japan, Kudara International, Seoul, 1994, p. 112.

6 Raju Poundurai, Traditional Architecture of Korea, Seoul, 1996, p. 60.

7 Jon Carter Covell and Alan Covell, Korean impact on Japanese Culture, Seoul, 1984, p 56

காமு நாகி [Kamunagi]. அருடவாகி [Arudewake]. கிமி [Kimi] போன்ற வணங்குதற்குரியவர்கள் பூமி [Pumi] என்ற தெய்வத்தின் வழித்தோன்றலான அதிகிசி [Atikisi] மற்றும் நெசவுத் தொழில் தொடர்பில் காரா. குறே [Kure] (கூறை?) போன்ற சொல்லாட்சிகளும் பெயர்களும் இந்தியப் பண்பாட்டினை உணர்த்துகின்றன.

கடாராவும் பேக்சேவும்

பண்டைய கொரிய நாட்டிலிருந்த மூவேந்தர்களின் ஆட்சிக்குரிய ஒரு நாடாகிய பேக்சேவின் வரலாற்றில் 'குடாரா' அல்லது 'கடாரா' என்னும் பெயர் பல்வேறு நிலைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாகக் 'குடாரா' என்பதற்கு நதி. குளம். அரண்மனை. நாடு என்னும் பொருள் குறித்தே அமைகின்றன. ஜப்பானிய நாட்டில் குடியேறிய பேக்சே பகுதி மக்களால் குடாரா பெயர் சிறப்பாகப் பேசப்படுகிறது. புத்தரின் திருவுருவச் சிற்பம் "குடாரா கண்ணன் [Kudara Kannon] என்று அழைக்கப்படுகிறது. இச்சிற்பத்திற்குரிய இணையான பெயராக 'பேக்சே கூவானின்' என்றழைக்கப்படுகிறது. இங்கு 'குடாரா' என்பது பேக்சே நாடு என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்றொரு சான்று 'குடாரா தேரா' [Kudara Dera] என்பதாகும். இங்கு 'பேக்சே கோயில்' என்றும் பெயர் சுட்டப்படுவதாகவும் அல்லது 'பேக்சே அரண்மனை' என்றும் பெயர் கூறப்பட்டதாகவும் கருதலாம். ஏனெனில் 'தேரா' என்பதற்குக் 'கோயில்'. 'அரண்மனை' எனப் பொருள்படுகின்றது. இப்பெயர் முறைகளைக் காணும்பொழுது குடாரா என்பதற்குப் பேக்சே நாட்டைக் குறிப்பிடும் சொல்லாகவும் கருத வாய்ப்பாகின்றது எனக் கூறலாம். மேலும். பேக்சே நாட்டின் நதிக்கும் 'குடாரா' என்று பெயர். குடாரா நதிக்கரையில் அமைந்த பேக்சே அரண்மனை 'குடாரா (கடாரா) அரண்மனை' என்றழைக்கப்பட்டது.

பேக்சேவும் தென்னிந்தியாவும்

குடாரா என்பதுதான் கடாரம் என்றாகித் தென்னிந்தியாவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்ய மேலும் சில ஆவணங்கள் உதவுகின்றன. கி. பி. 384இல் மாறானந்தன் என்னும் பௌத்தத் துறவி தென்னிந்தியாவிலிருந்து பேக்சே நாட்டிற்குச் சென்று பௌத்த மதத்தையும் கோயிற் கட்டடக்கலைத் தொழில் நுட்பத்தையும் முதன் முதலில் கொரிய நாட்டில் (பேக்சே நாட்டில்) பரப்பியவர். எனவே. கி. பி. 4 ஆம் நூற்றாண்டிலேயே கொரியாவின் பேக்சே நாட்டிற்கும் தென்னிந்தியாவிற்கும் தொடர்புகள் இருந்துள்ளன என்பதையும் உணரமுடிகிறது. மேலும் தென்னிந்தியாவிலிருந்து சென்ற ஒரு பெண் தென்கொரியாவின் தென்பகுதியை ஆண்ட மன்னரை மணந்து அரசியாக வாழ்ந்த வரலாறும் கொரிய நாட்டின் கி. பி. 4 ஆம் நூற்றாண்டில் இடம் பெற்றுள்ளது. திராவிட மொழியின் தாக்கங்களும் கொரிய மொழியில் உள்ளன என்பதையும் ஒப்பிட்டுக் காணுதல் மேலும் அவசியமாகிறது.

சிறகிக் கோமா [Siragi Koma] என்னும் பெயர் பேக்சே நாட்டின் அரச சின்னமாகி சிங்கத்திற்கு (யாளி?) பெயராகியுள்ளது. கோ என்பதற்குப் பெரிய என்னும் பொருளே கொரிய மொழியில் இடம் பெறுகின்றது. கோ கொரியோ [Koguryeo] என்னும் பண்டைய கொரிய நாட்டின் பெயரில் இடம்பெறும் 'கோ' என்னும் முன்னொட்டுக்கு அரசன். பெரிய. சிறந்த. மா என்னும் பொருளே கொரிய மொழியில்

இடம்பெறுகிறது. 'மா' என்றால் 'விலங்கினம்' என்றும், சிறகி என்பதற்குக் கடலகனாகிய கடல் அரச விலங்கினமாகிய 'சிறகுடைய கடல் விலங்கு' என்ற பொருளும் உள்ளதால் பண்டைய தென்னிந்தியப் பண்பாட்டின் தொடர்பையும் அறியமுடிகின்றது. ஏனெனில் தமிழகத்தில் 'சிறகி' என்பதற்கு 'இருக்கின்ற இடத்தைச் சுற்றி அன்னியக் கடல் விலங்கினங்கள் வந்து தாக்காது பாதுகாக்கும் தன்மையைக் கொண்டது சிறகி என்னும் கடல் விலங்கினம் ஆகும்'. இப்பெயரைப் பேக்சே நாட்டின் அரச சின்னமாகக் கொண்டமையால் தென்னிந்தியத் தொடர்பு இருந்துள்ளதை உறுதிசெய்கிறது. எனவே, தென்கிழக்காசியாவில் பேசப்படும் கடாரம் பற்றிய வரலாறு தெளிவில்லை என்பதாலும் கி. பி. 4ஆம் நூற்றாண்டில் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்த பேக்சே நாட்டின் கடாரமே பின்னர்க் காலப்போக்கில் தென்கிழக்காசியப் பகுதியைக் குறிப்பிடும் ஓரிடமாகவும் நாடாகவும் பேசப்பட்டிருக்க வேண்டும். எனவே குடாரா அல்லது கடாரா என்னும் கொரிய நாட்டின் பேக்சே நாட்டின் பெயரே சோழர்களின் ஆவணங்களில் குறிக்கப்படும் கடாரமாக இருந்திருக்க வேண்டும் இருப்பினும் குடாரா என்னும் பெயர் கடாரா என்றழைக்கப்படும் பெயரும் ஒன்றாகக் கருதப்படலாமா என்ற வினா பொதுவாக எழுவது எளிது. குடம் என்பது கடம் எனப் பெயராகியது போல் இங்கு கடாரா என்பதும் குடாரா என்பதும் ஒன்றே எனக் கருதலாம். எனவே, இதுவரை வரலாற்று அறிஞர்களால் சொல்லப்பட்டுவரும் கடாரம் இருப்பிடம் ஸ்ரீவிஜயம் நாட்டில் உள்ளதாகவும் குறிக்கப்பட்டு வந்துள்ள கருத்தை மறு ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. ஏனெனில் பண்டையக் கொரிய நாட்டின் கடாரமே தமிழக வரலாற்றில் குறிக்கப்படும் கடாரம் எனக் கருதலாம்.

☐

க. இளமதி சானகிராமன்
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
புதுவைப் பல்கலைக்கழகம்

யாகோபு வைத்திய சிந்தாமணி 700

முன்னுரை

'யாகோபு வைத்திய சிந்தாமணி 700' என்னும் இக்காகிதச் சுவடி, இலேகியம், கிருதம், எண்ணெய், பற்பம், களங்கு, கட்டு, திராவகம், கியாழம், செந்தூரம், சூரணம், புகை, வைப்பு, குளிகை எனப் பல்வேறு மருத்துவ முறைகளைத் தந்து செல்கின்றது. இக்கட்டுரை, இச்சுவடியை யாத்த 'யாகோபு' குறித்தும், குறிப்பிடத்தக்க சில மருத்துவ முறைகளை மட்டும் இவண் விளக்கிச் செல்கின்றது.

காகிதச் சுவடி நிலை

கன்னி மாரா நூலகத்தில் காகிதச் சுவடியாக இருக்கும் இந்நூல் இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ் அவர்களால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பக்கங்கள் சரி வர இல்லையாதலால் பதிப்பித்த ஆண்டினை அறிய இயலவில்லை. தொட்டாலே ஒடிந்து விடும் நிலையில் இருப்பதுவே இச்சுவடியின் இன்றைய நிலை.

யாகோபு - பெயர் வரலாறு

இராம தேவர் என்ற பெயரோடு இருந்த ஒரு சித்தர் தாம் எழுதிய நூலைத் திருமூலரிடம் சிலர் கொடுக்க, அதனை அவர் கிழித்து எறிந்ததால் கோபமுற்று அக்கட்டத்தை விட்டுச் செல்கின்றார். குளிகை பாட்டு மக்கா தேசம் போகவே அங்கேயிருந்த முகமதியர்கள் இவருடன் வாதம் செய்து இவரது திறமையை அறிந்து நபிகளிடம் அழைத்துச் செல்கின்றார்கள். நபியும் இவரையறிந்து 'யாகோபு' என்று பெயரிட்டுச் சுன்னத்துச் செய்து தொப்பியும் தருகின்றார். இதனை,

"ஆதிமுத லென்பேரு இராம தேவர்
அடைவாகக் குளிகையிட்டு மக்கா தேசம்
வீதியிலே சென்று புக்கச் சாய்புகண்டு
விரும்பியே சாஸ்திரத்தில் மிகவும் பேசி" . . . (பா. 6)

"உறுதியுற்று யிருக்கையிலே யாகோப்பென்று
உண்மைப் பேர் கொடுத்துச் சுன்னத்துச் செய்து
அருமைபெறத் தொப்பியொன்று யீந்தாரப்போ
அசனுசனும் வேறல்ல நீநானென்றேன்" (பா :, 7)

என்ற பாடல்கள் வழி அறியலாம்.

இந்நூலின் வழி உரைக்கும் மருத்துவ முறைகளைப் பட்டியலிடும் யாகோபு, யார் யாருக்கு இந்நூலைத் தரல் வேண்டும்? யார் யாருக்குக் கொடுக்கக் கூடாது என்றும் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். இதனை,

"தன் மருகருங் கன்மருகருந தனங்கள் ரொம்பத்
தாட்டிகமாய்க் கொடுப்போர்க்கும் வழிபட்டோர்க்கும்
வன்மவினை தீருமெனறு யிந்நூல் தன்னை
வாழ்த்தியே கொடுத்துவிடு மற்றுமினனம்
கன்மமுள்ள கசடருக்குஞ் கண்டாளர்க்கும்
கலிமிடியின் காமியர்க்கும் பாதகர்க்கும்
நன்மையுள்ள நூல் கொடுத்தால் நரகமெய்தும்
நானிலத்தில் யாகோபு நலஞ் சொன்னேனே (பா : 12)

என்ற பாடலால் அறியலாம்.

மருத்துவக் குறிப்புகள்

பல்வேறு மருத்துவ முறைகளையும் குறிப்புகளையும் தம் சுவடியில் யாகோபு தந்து சென்றாலும் இலக்கியவாதிகளுக்கும் புரியக் கூடியதாய், அனைவரும் பயன் கொள்ளத்தக்கதாய் அமைந்த ஒரு சில மருத்துவக் குறிப்புகள் மட்டும் இவண் தரப் பெறுகின்றன.

காமாலை

சிறு நெல்லிதனைப் பிடுங்கி உரலில் இட்டு நன்றாக இடித்துப் பிழிந்து பசுவின் பால் நிறையவிட்டு, சிறிது படிகாரம் சேர்த்து உண்டு வந்தால் ஆறு நாட்களிலேயே உடலில் உள்ள காமாலை ஓடிப் போகும்.

கசப்பு, உப்பு, புளி சேர்க்கக் கூடாது.

இருமலுக்குக் கியாழம்

நெல்லி, தான்றிக்காய், இஞ்சி இவற்றைச் சமஅளவு எடுத்துயிடித்து, சட்டியில் இட்டு எட்டு பங்கு ஒரு பங்கு ஆகும் வரை காய்ச்சி, திரிகடுகுப் பொடியில் இட்டு மூன்று நாட்கள் உட்கொண்டால் தீராத உஷ்ணம், கபம், இருமல், கோழை முதலான அனைத்து நோயும் தீரும் உடல் உறுதியாகும்.

பித்த வெட்டை மற்றும் நீரிழிவு நோய்க்குக் கிருதம்

இருபது ரஸ்தாளிப் பழங்களோடு காராம் பசுவின் நெய், தேன், சர்க்கரை, எட்டு பலம் சீரகம் இவற்றைச் சேர்த்து இடித்து, சூரணம் கலந்து காய்ச்சித் தினந்தோறும் காலை மாலை இரண்டு வேளையும் ஒரு கரண்டி அளவு உண்ண, நீரிழிவு, பித்த வெட்டை, பயித்திய விகாரம் முதலான அனைத்தும் நீங்கும்.

மேகம் போகக் குமரி எண்ணெய்

இரண்டுபடி கற்றாழைச் சாற்றுடன் எட்டு பலம் குமரி, கெந்தி சேர்த்து ரெட்டி சிற்றாமணக் கெண்ணெய் கூட்டித் திரண்ட பதமாய் வடித்து உட்கொண்டால் மேகம்,

கிரந்தி முதலான பலவும் போய் விடும்.

வாந்தி பித்தம்

முப்பழத்தின் புறத் தோல்கள் நான்கு பலம். முதிர்ந்த சம்பா நெற்பொரி 4பலம். இவை இரண்டையும் காய வைத்து இடித்து வடி கட்டிச் சூரணத்தை அனுபானத்துடன் சாப்பிட இருமல், வாந்தி, பித்தம், கபம், வாய்நீர் முதலான அனைத்தும் குணமாகும். உடல் வலுவடையும்.

சூதகவாய்வு

அரை நாழி கற்பூரவல்லிச் சாற்றுடன் அரை நாழி வெங்காயச் சாறும், ஒரு படி முத்தெண்ணெயும் கால்பலம் சீரகத்தையும் சேர்த்து எண்ணெயில் இட்டுக் காய்ச்சி எட்டு நாட்கள் உட்கொண்டால் உள்மூல வலி, கடுப்பு, சீதம், இரத்தம் இவையனைத்தும் நிற்கும். ஒரு கரண்டி உட்கொண்டால் சூதகத்தவறும் போகும்.

அண்ட வீக்கம்

முடக்கத்தான் வேர், மிளகு, பூண்டு, முத்து விளக்கெண்ணைதனில் காய்ச்சி உண்ண விரைவாதம் அகலும்.

நுணாவின் வேரைக் காயவைத்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு கையாந்தரை, செருப்படியின் சாற்றில் இருகழஞ்சு அளவு கொடுக்க, சூலை, விரைவாதம் முதலானவை நீங்கும்.

வெட்டை

பொன் நிறமுடைய எலுமிச்சம் பழத்தின் சாறு எடுத்து (1 கரண்டி) அதனுடன் நல்லெண்ணெய் கலந்து ஆறு நாட்கள் குடிக்க, நீர்ச் சுருக்கு, வெள்ளைப் படுதல், பிரமேகம் முதலானவை போகும்.

கண்ட மாலைக்குத் தைலம்

சிறியா நங்கையிலைச் சாற்றில் நான்கு படி எடுத்து பசுவின் பால் நான்கு படி சேர்த்து எரிக்க நெய்யதாகும். அதனை எடுத்துத் தலையில் தேய்த்து முழுக, பித்தம் முதல் பொடுவுகள், கண்ட மாலை முதலானவை போய் விடும். குளிர்ச்சியாகும்.

பொன்னாங்கண்ணித் தைலம்

கல்லூரலில் பொன்னாங் கண்ணியை இட்டு ஆட்டிச் சாறெடுத்து அதனைப் போன்று இரு மடங்கு திலகம் சேர்த்து, யிடித்து அதனைப் போன்றே பாணி ரெட்டி வகையாக யெரித்து முடி ஊற்றிக் காய்ச்சித் தைலம் இறக்கித் தலையில் தேய்த்து முழுகிவரக் கண்கள் நன்கு துலக்கமாகத் தெரியும்.

இப்படி மூழ்கும் போது பாசிப்பயறும் சீயக்காயும் சேர்த்து அரைத்து மூழ்கினால் தலைக்குக் குளிர்ச்சியாகும். கண் பார்வை நன்கு தெரியும். வெள்ளெழுத்து

மாறிப் போகும்.

நோய்கள் அனைத்தும் நீங்க

ஒரு தூக்கு நல்ல இஞ்சியினை இடித்துச் சாறு எடுத்து எட்டு படி கடத்தில் இட்டு ஓமத்தையும் சேர்த்துக் காய்ச்சி வடித்து உண்டால் குன்மமெல்லாம் ஓடிப் போகும். இதனை,

''நல்லிஞ்சி தூக்கென்று யிடித்துச் சாரு
நலமாகப் படியெட்டுக் கடத்திலிட்டு
மெல்லவே ஓமமிகு நீரில் நேராய்
விதமாக வாலையிட்டு வடித்து உண்ண
கொல்ல வந்த குன்மமெல்லா மோடிப் போகும்
கொடுமையுள்ள வாயு முதல் வெப்பும் போகும்
மெல்லவே பிணியெல்லாம் மகன்று போகும்
மேதினியில் யாகோபு விளம்பினாரே (பா. 467)

என்ற பாடல்வழி யறியலாம்.

இளநீர்க் கிருதம்

இளநீரில் ஒரு சேர் உள்ளிப் பூண்டை உரித்துச் சேர்த்து அவித்து முன்னீர் தன்னில் உண்ண வேண்டும். திரி நேரத்தில் கால் வீக்கம், வயற் போதல், மூலவாய்வு இவையெல்லாம் ஓடி விடும். புளி சேர்க்கக் கூடாது

பிரண்டை ரசம்

பிரண்டையுடன் நல்லுள்ளியினை நீரில் கலந்து சட்டியில் போட்டு அவித்து அதைக் கடைந்து வைத்துக் கொண்டு ஒரு படி மோரில் மிளகாய், மிளகு, உப்பு, புளி இவற்றைக் கரைத்துப் போட்டுக் கொதிக்க வைக்க, 'பிரண்டைரசம்' கிடைக்கும். இதனை உண்டால் வாந்தி, வாய்வு, மந்தம், மாந்தம், பேதி, மூலவாய்வு முதலானவை ஓடி விடும். பசியுண்டாகும் வாய்வு நீங்கும் மூல முளையும் சுருங்கும். முளையு மில்லாது போகும்.

பிரண்டைச் சூண்ணம்

குழந்தைப் பாலில் பிரண்டையினை இட்டு, அவித்து வெந்த பாலுடன் பிழிந்து அதில் திரிகடுகு கிராம்பு, ஏலம் இவற்றை வகைக்கு ஒரு பலம் என இடித்துப் போட்டுச் சூரிய ஒளியில் காய வைத்துத் தூளாக்கி மூன்று விரலளவு ஆறு வேலை உண்ண வாத பித்தம், மூல வாய்வு, குன்மம், மாந்தம், கண்ணெரிவு, சோகை, கரப்பான் முதலான அனைத்தும் போகும். காயம் உறுதியாகும். மகத்தான இந்த மருந்தினை உட்கொண்டால் பல பிணிகளும் போகும்.

முடிவுரை

மனிதர்களுக்கு ஏற்படும் பல்வேறு வகையான நோய்களுக்கும் பல்வேறு வகைகளிலே யாகோபு மருந்து செய் குறிப்புகளைத் தந்து செல்கின்றார். இவர் போன்ற சித்தர்களின் மருத்துவக் குறிப்புகள் அடங்கிய காகிதச் சுவடிகள் எண்ணிலாதவை. அவை நன்முறையில் காக்கப் பெறவேண்டியவை காக்கும் பணிகளில் ஈடுபடுவோமாக!

□

வே. கலைச் செல்வி
ஆய்வாளர்
அரிய கையெழுத்துச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

சர்மாவின் பயண அனுபவங்கள்

பல்வகை இலக்கியங்களுள் பயண நூலும் ஒரு வகை. உலகப் பயணம் செல்லும் அரிய வாய்ப்பில்லாதவரும் உலகின் பல்வேறு நாடுகளைப்பற்றி ஓரளவேனும் அறிந்து கொள்ள இவ்வகை நூல்களே துணையாம். பயணத்தில் விளையும் பல்வேறு மனவுணர்வுகளுக்கிடையில், கண்ட காட்சிகளையும், இடங்களையும், சந்திப்பவர்களிடம் நிகழ்த்தும் உரையாடல்களையும் நினைவிற் கொண்டு அவற்றை எழுதும் போது, படிப் போருக்குச் சுவை குன்றாமலும், பயன்தரும் வகையிலும் படைப்பது எளிதன்று. நினைவாற்றலுடன் செய்யும் திறத்திலும் சிறந்து விளங்குதல் இதன் சிறப்பு.[1]

பயணக் கட்டுரை எழுதுவது என்பது ஒரு தனிக் கலை. சிறு கதை, பெருங் கதை ஆகியவற்றை எழுதுகிற முறைக்கும் பயணக் கட்டுரை எழுதுகிற முறைக்கும் வேறுபாடு உண்டு. இந்நூலின் வாயிலாக நாமும் அதே வகையில் இப்பயணத்தை முடித்துவிட்ட உணர்வைப் பெற முடிகிறது.[2]

காகிதச் சுவடியில் பயண இலக்கியமாக எடுத்துக் கொண்ட நூல் வெ. சாமிநாத சர்மா படைத்த 'எனது பர்மா வழி நடைப் பயணம்' எனும் நூலாகும்.

பயணக் கட்டுரைகள் தமிழ் இலக்கியத்திற்குப் புதியன அல்ல. ஏ. கே. செட்டியாரில் தொடங்கி சோமலெ, சி. சுப்பிரமணியம், காந்திமதி, தேவன், மணியன் முதலியோர் வாயிலாகப் பல கட்டுரைகள் தொகுப்புகள் வெளியாகியுள்ளன. பயணக் கட்டுரைகள் எழுதுவோர் பல நாடுகளுக்கும் சில நாட்கள் போய் வந்து விட்டு, கண்டதை, கேட்டதை எழுதுகிறார்கள். சில நாடுகளில் பல நாட்கள் வாழ்ந்து அந்நாட்டு மக்களோடு தோளோடு தோள் உரசி, பலவற்றைக் கூர்ந்து நோக்கி அலசி ஆராய்ந்து விஷயங்களை எடை மேடையில் சீர் தூக்கிப் பார்த்துக் கட்டுரை எழுதுவது இன்னொரு வகை.[3]

---

1. க. அன்பழகன், **பெருங் கவிக்கோவின் உலக உலா நூல்**, அணிந்துரை.
2. மு. கருணாநிதி, 'அணிந்துரை', சோலை இருகன், **கிழக்காசிய நாடுகளில் தமிழ் மணக்கிறது.**
3. எஸ். சத்திய மூர்த்தி, IAAS

'எனது பர்மா வழி நடைப் பயணம்' எனும் இந்நூல், ஆசிரியர் ஏறத்தாழ 10 ஆண்டுகள் பர்மாவில் தங்கி, வாழ்ந்து, வணிகத்தை மேற்கொண்டு, தமிழ்ப் பணி செய்து மாத இதழ் ஒன்றினை நடத்தி, திடீரெனத் தோன்றிய இரண்டாம் உலகப் போர்ச் சூழலில் பர்மா நகரினை விட்டு நீங்கி, தமிழகம் வந்து சேர வேண்டியிருந்த போது ஏற்பட்ட அனுபவங்களை இலக்கியமாகப் படைத்துள்ளார். இக்கட்டுரை அவர் கண்ட அனுபவங்களை ஆராய்கின்றது.

நூலாசிரியர்

வெ. சாமிநாத சர்மா இந்திய அரசியல், வரலாறு, ஆன்மீகம், சிறுகதை, நாடகம், கட்டுரை, கவிதை, மொழி பெயர்ப்பு எனப் பல்வேறு துறைகளில் இவர் சான்றாண்மை பெற்றவராக இருந்தார். மேலும் இவரது ஆங்கிலப் புலமை பன்னாட்டு வரலாறுகளையும், அந்நாட்டுத் தலைவர்கள் தம் நூல்களையும் தமிழுக்கும் தமிழர்க்கும் அறிமுகம் செய்தது. தேசபக்தன், நவசக்தி, சுயராஜ்யா, குமரி மலர், பாரதி போன்ற இதழ்களில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் பர்மாவில் வணிகத் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது, பண்டித நேருவின் வாழ்த்துக்களுடன் 'ஜோதி' பத்திரிகையைத் தொடங்கி நடத்தும் போது பெற்றார். இதில் இவர் ஐம்பதிற்கும் மேற்பட்ட புனை பெயர்களில் பல்வேறு பொருள்கள் குறித்தும் எழுதி வந்தார். இதில் தலையங்கமும், கேலிச் சித்திரங்களும் முக்கியம் வாய்ந்தவையாக மக்களால் புகழப் பட்டிருந்தன. ஆசிரியர் திரு. வி. க. விடம் பக்தி கலந்த அன்பும் நட்பும் கொண்டிருந்தார். வ. வே. சு. ஐயரிடமும் சுப்பிரமணிய சிவாவிடமும் பாரதியாரிடமும் நட்புப் பூண்டிருந்தார். தேசப்பற்று மிக்க தமிழ் இலக்கியவாதியாகத் திகழ்ந்தார்.

பயணநூல்பற்றிய பாராட்டுரைகள்

ம.பொ.சி.

> "மரண யாத்திரை கூறும் நூல் இது. இதற்கு இணை சொல்ல இன்னொரு நூல் எனது நினைவுக்கு வரவில்லை. பர்மாவாழ் தமிழர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை முறைப்படுத்தி, காரண காரியங்களோடு ஆசிரியர் சர்மா இந்நூலில் விளக்கியுள்ளதைப் படித்தபோது பலவிடங்களில் அழுதேன்"[4]

என்று குறிப்பிட்டுள்ளார்.

> "இந்நூல் காலா காலத்திற்கு அழியாத நூல்; பயண இலக்கியம் என்ற முறையில் நோக்கினாலும் சரி, வரலாற்று நூல் என்று கூறினாலும் சரி, தமிழ் நாட்டிற்குக் கிடைத்த ஓர் அரிய நூல்"[5]

என அமுதசுரபி விககிரமன் பாராட்டியுள்ளார்.

> "மன உணர்ச்சிகளுக்கு இனிய தமிழில் வடிகால் அமைத்துப் பயன்தரும் பயண இலக்கிய நூலைச் சர்மா படைத்தளித்துள்ளார். 'நூலின் பெரும்பகுதியில் தன்னுணர்ச்சி வெளிப்பாட்டின்

4 ம பொ சி. **எனது பர்மா வழிநடைப் பயணம்**, அணிந்துரை
5 விககிரமன **எனது பர்மா வழிநடைப் பயணம்** முன்னுரை

நுண்ணிய கூறுகள் திண்மையுற நிறைந்து விளங்குகிறது"[6]

எனப் பெ. சு. மணி பாராட்டியுள்ளார்.

போர்ச் செய்திகள்

பர்மாவின் தலைநகரான ரங்கூன் நகரத்தின் மீது 1941ஆம் ஆண்டு திசம்பர் 23ஆம் நாள் முற்பகல் 10. 45க்கு எண்பதுக்கும் மேற்பட்ட ஜப்பானிய விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன. 2000க்கும் மேற்பட்ட மக்கள் பிணமானார்கள். பலர் பெரிதும் காயமுற்றனர். கட்டிடங்கள் பல தரைமட்டமாகியும். நெருப்புக்கு இரையாகியும் சிதிலமாயின. ஓரிரு நாளில் மீண்டும் அப்பகுதியிலும் எண்பதுக்கும் மேற்பட்ட விமானங்கள் குண்டு பொழிந்து. பெருமை மிக்க நகரினை முற்றிலும் பொலிவிழக்கச் செய்தன. பிரிட்டிஷ் விமானங்களும். அமெரிக்க விமானங்களும் இரண்டு முறை எதிர் கொண்டு தாக்கி மொத்தம் 52 ஜப்பான் விமானங்களை வீழ்த்தின. விமானப் படைகள் மட்டுமன்றி ஜப்பானியக் காலாட் படைகள். பர்மாவின் தென் கோடிப் பகுதி வழியாகவும். மத்தியப் பகுதி வழியாகவும் வரத் தொடங்கின. விமானத் தாக்குதல்கள் நூற்றுக்கும் மேற்பட்ட முறைகள் தொடர்ந்ததால் விமான நிலையம். அரசுக் கட்டிடங்கள். அலுவலகங்கள். மின் உற்பத்தி நிலையங்கள். குடிநீர் விநியோக நிலையம். தபால் நிலையங்கள் முதலிய முக்கிய இடங்கள் தகர்க்கப்பட்டன.

போரின் விளைவுகள்

இங்ஙனம் 23 - 12 - 41 முதல் 22 - 02 - 42 வரையிலான இரண்டு மாத காலத்தில் 89 முறை ரங்கூன் நகரம் தாக்கப்பட்டது பிரிட்டிஷ் பீரங்கிகளின் எதிர்த் தாக்குதல்களினால் 200 ஜப்பானிய விமானங்கள் நாசமாயின.

தாக்குதல்கள் நடைபெற்ற காலத்தில் ரங்கூன் நகரம் இரவு நேரங்களில். இருட்டடிப்பும் அமுலில் இருநததால் பயங்கரமாகக் காட்சியளித்தது. ஜப்பானிய விமானங்கள் மேலே குண்டுகளைப் பொழியும் சத்தமும். பிரிட்டிஷ் பீரங்கிகள் கீழிருந்து வெடிக்கும் சத்தமும் குண்டுகளின் வெடிப்பினால் கட்டிடங்கள் எரிந்தும். சிதறியும் உண்டான சத்தமும் ஆடு. மாடுகள். நாய்களின் ஓலங்களும் மனிதர்களின் அழுகையும் உயிர் தப்பிய மனிதர்களுக்கு இயல்பாயிருந்தன. அரசினர் ஆங்காங்கு ஆள் பதுங்கு கிடங்குகளை அமைத்திருந்தனர். வீதிகளில் போய் வந்து கொண்டிருக்கும் மக்கள் அபாயச் சங்கு ஊதியவுடன் இந்தக் கிடங்குகளில் சென்று பதுங்கிக் கொள்வதும். அபாயம் விலகிய சங்கு ஊதியவுடன் வெளியில் வரவும் செய்தனர். வீட்டில் உள்ளவர்கள் வீட்டுத் தோட்டத்தில் நான்கடி ஆழத்திற்குத் தோண்டி மேலே மரப் பலகைகள் அல்லது தகடுகளை வேய்ந்து இலை. தழைகளைக் கொண்டு பரப்பி மூடி வைத்திருந்தனர். அதன் உள்ளே உடம்பைக் குறுக்கி அமர்வதும். வெளி வருவதும் அவர்களுக்குப் பெரும் சிரமத்தைக் கொடுத்தது. நாளடைவில் சிலர் பதுங்கு குழிகளில் வெறுத்து. மரணத்தை எதிர் நோக்கியும். தளர்ந்தும். திகிலடைந்தும். கலங்கியும் இருந்தனர். போரின் விளைவுகள் சொல்லொணாத் துயர் விளைவித்ததால் ஏறத்தாழ இரண்டு மாத காலங்கள் நகர்ந்த பின்னர். உண்பதற்கும்.

6 பெ. சு. மணி. **எனது பர்மா வழிநடைப் பயணம்**. என்னுரை

அருந்துவதற்கும். தங்குவதற்கும் வசதிகள் இல்லாது வாகனப் போக்குவரத்தும் அடியோடு நின்று போனதால். மக்கள் ரங்கூனில் இருந்து கிடைத்த வழிகளில் விரைந்து வெளியேறத் தொடங்கினர். ஆசிரியர் தனது துணைவியாருடன் வாழ்ந்திருந்த வீட்டின் மீதும் விமானங்கள் எரிந்து விழுந்தன.

சர்மாவின் பத்திரிகைப் பணியும் நின்று போய். அகதியான நிலைமைக்குத் தள்ளப்பட்டார். ரங்கூன் நகரத்தை விட்டு வெளியேறி இந்தியாவின் எல்லைக்குச் செல்லும் நடைப் பயணம் தொடங்கியது. இதனால் தமிழுக்கு ஒரு பயண இலக்கியமும் கிடைத்தது

ரங்கூனில் இருந்து நடைப்பயணத்தைத் தொடங்கியவர் 12-02-42 அன்று காலை கல்கத்தாவை அடைந்திருந்தார். 24 - 04 - 42 மாலை சென்னை வந்து சேர்ந்தார். நடைப்பயணத்தைத் தொடங்கியதிலிருந்து சென்னை வந்து சேர்ந்தது வரை அன்றாடம் எழுதிக் கொண்டு வந்திருந்த நாட்குறிப்பு இந்நூல் உருவாகக் காரணமாயிற்று. கையெழுத்துப் பிரதிகளாக இருந்த இந்நூல் 37 ஆண்டுகளுக்குப் பிறகு சர்மாவின் இறுதிக் கால ஆசையின்படி அச்சேறியது முதலில் அமுதசுரபி இதழில் கட்டுரையாக வெளியிடப்பட்டு. அனைவராலும் வரவேற்புப் பெற்றது.

பயணத்தில் கடந்து வந்த ஊர்கள்

சர்மா ரங்கூன் நகரத்தை விட்டுப் புறப்பட்டதும் கடந்து வந்த ஊர்களாகக் குறிப்பிடுபவை. ரங்கூன் - பக்கோடா - காலா பஸ்தி - பெரு நகரம் லெப்படாண் - புரோம் நகரம் - அல்லன் மியோ - தவுண்டிஞ்சி - ஏனாஞ்சங்கு - மெக்டீலா - சௌஸே மாந்தளை நகரம் - மாந்தளைக் குன்று - ஸ்காயிங் - ஆவா - வராவதி நதி மேற்கு. கிழக்குக் கரைகள் - பாலம் அமாபுரம் - மொனிவா - மியோஹாஸ் ஸ்டேஷன் யவடாஸ் ஸ்டேஷன் - சிந்த்வின் ஆறு - கலேவா படகுத் துறை - மித்தா நதி - இரண்டாஞ்சி - டாமு - வான்சிங் - வக்ஸீ (முகாம்) - லும்மிஸ் (முகாம்) சிட்டா (முகாம்) - நும்டாக் (முகாம்) - வான்சிஸ் (முகாம்) - ஹீரோக் சிந்தூர் - டிமாபூர் - இம்பால் - கோஹிமா - பாண்டு ஸ்டேஷன் - பிரம்ம புத்திரா நதி - அமிஸ்கோன் ஸ்டேஷன் - கோலக்கஞ்ச் ஸ்டேஷன் - சாந்தவிடா ஸ்டேஷன் - கல்கத்தா - (காசி - அலகபாத் - கயை - கல்கத்தா) - சென்னை.

பயணம் செய்த முறை

ஆசிரியர் நடைப் பயணம் என்று குறிப்பிட்டாலும். அதனை விடத் துயர் தரும் வாகனப் பயணங்களையும் இடையிடையே மேற்கொண்டுள்ளமையும் இந்நூலால் அறியப்படுகிறது.

ரங்கூன் நகரம் அழியத் தொடங்கியதும். அடுத்தடுத்துப் புறப்பட்ட கப்பல்கள். அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்றது. கப்பல்களில் செல்ல முடியாதவர்கள் தொடர்வண்டி வழியாகவோ. ஆற்று வழியாகவோ புறப்பட்டனர். கட்டணமேதும் செலுத்தி இத்தகைய பயணம் மேற்கொள்ள இயலாது கூலி வேலை செய்து பிழைத்து வந்தவர்கள் கால் நடையாகவே புறப்பட்டனர். வ. கு. சா. என்ற நண்பர் விட்டுச் சென்ற மோட்டார் காரினைப் பழுது நீக்கி. தனது துணைவியாருடனும். நண்பர்களுடனும். குறைந்த பட்ச சமையல் பொருள்கள். சாதனங்களுடனும். ஆசிரியரின் பயணம் தொடங்கியுள்ளது மாந்தளை நகருக்குப் பின். அதிகாரிகளின்

உதவியுடன் மொனிலா நகர் வரை தொடர் வண்டிப் பயணமும். படகுத் துறை சென்று நீராவிப் படகுப் பயணம் கலேவா நகர் வரையும் அமைந்தது. மலைப் பாறைகளை உடைத்து மலைப் பாதை அமைக்கும் ஒரிசா மாநிலக் கூலிகளை ஏற்றிச் செல்லும் லாரியில் மிகவும் கரடு முரடான பாதையில் கலேவா விலிருந்து இரண்டாஞ்சி நகர் வரையிலும். பின்னர் மறுநாள் கோடையின் சுட்டெரிக்கும் வெயிலில் அளவுக்கு மிஞ்சிய பாரத்துடன் திறந்த லாரியில் கரடு முரடான சாலையில் பசி, தாகம் உடல் வேதனைகளுடன் நூறு மைல் வரையிலும் டாமு நகர் பயணமும் அமைந்தது. பெண்களும் பொருள்களும் மாட்டு வண்டியிலும். வண்டியைத் தொடர்ந்து ஓட்டமும் நடையுமான மலைப் பயணமும். லக்ஸீ முகாம் வந்தடைந்த பின்னர்ச் சிந்து நேர டோல்ப் பயணமும். டோல்யைச் சுமக்கக் கூலி ஆள்கள் குறைந்த போது ஏனைப் பயணமும் தொடர்ந்தது. பின்னர் லாரிப் பயணமும் இம்பால் வரை லாரியில் நாற்காலிப் பயணமும் இறுதியில் கல்கத்தா வரை தொடர் வண்டிப் பயணமும் அமைந்தது.

முகாம்களின் நிலைமை

பல்லாயிரக்கணக்கான மக்கள் தாயகம் நோக்கிப் பல்வகை வழிகளிலும் பயணம் மேற்கொண்ட போது உணவும். உறையுளும் அளித்துக் காப்பாற்றியது. ஆங்காங்கே அவசரமாகவும் தற்காலிகமாகவும் ஆற்று ஓரங்களில் அமைக்கப்பட்ட முகாம்களே இம்முகாம்கள் சுகாதாரச் சூழ்நிலையில் அமைக்கப்பட்டாலும் சில பல நாள்களிலேயே அகதி மக்களின் அமைதியற்ற தன்மையாலும். சுயநலமிக்க. பொறுப்பற்ற தன்மைகளினாலும் நோய் பரப்பும் இடங்களாகவும் ஆபாசமான இடங்களாகவும் மாறிப் போயின என ஆசிரியர் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார்.

கலேவா படகுத் துறையில் இருந்து பயணிகள் இறங்கியதும். பர்மிய அரசு சுகாதார அதிகாரிகள் பிளேக். காலரா முதலிய நோய்த் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளாதவர்களுக்கு ஊசி போட்டனர். பின்னர் முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். இம்முகாமின் பெரும் பகுதி திறந்த வெளியாயிருந்தது. நடு நடுவே ஒரு சில கொட்டகைகளும் கூடாரங்களும் இருந்தன. பொதுவாக இந்த அகதிகள் முகாம் என்பது ஒரு சந்தைக் கூடமாகவே இருந்தது. சந்தை இரைச்சல் கடலோசையை விஞ்சி நின்றது.

டாமு நகர முகாமும் கலேவா முகாம் போன்றோ ஈரம் படிந்திருக்கும் மண் தரையை இலேசாகச் சமன்படுத்தியும் ஈரத்தரைமீது மூங்கிற் பாய்களை விரித்தும். சில முகாம்களில் மூங்கில்களை இணைத்துக் கட்டி மேடைகள் போலும் அமைக்கப்பட்டிருந்தன தங்கிப் போகிறவர்களுக்குத் தண்ணீர் வசதிக்கென அருவிகள் கூடிய மட்டும் சுத்தமாக இருக்க வேண்டுமென்பதற்காகப் பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டிருந்தன. முகாம்களில் ஐரோப்பிய அதிகாரிகளும். இந்தியத் துணை அதிகாரிகளும், பெயரளவுக்கு மருத்துவரும் இருந்தனர். முகாம்களில் வழங்கப்பட்ட உணவுப் பொருள்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ற நிலையில் இல்லாமல் இருந்ததுடன் பலருக்கு இரத்தப் போக்கை உண்டாக்கியிருந்தது. அதே போல் லக்ஸீ முகாம்களிலும் நோய்வாய்ப்பட்டவர்களின் முனங்கல் கேட்டுக் கொண்டிருந்தது. இருந்த இடத்திலேயே. மற்றவர்களுக்கு ஏற்படக்கூடிய அருவருப்பைப் பொருட்படுத்தாமல் நாணமோ. கூச்சமோ இன்றி மலஜலம் கழித்துக் கொண்டிருந்தனர் சிலர். மற்றொரு பகுதியில் 'ஐயோ' என்று சொல்லி அழக்கூட ஆள் இல்லாமல் இறந்து

போனவர்களைக் கூலியாட்கள் தூக்கிச் சென்று கொண்டிருந்தனர். இதற்கிடையில் ஏனையோரின் சமையலும் சாப்பாடும் நடந்து கொண்டிருந்தது என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார் லும்மிஸ் முகாம். சிட்டா முகம். தும்டாக் முகாம். வான்சிஸ் முகாம். இம்பால் முகாம் டிமாப்பூர் முகாம் முதலிய முகாம் அனுபவங்களையும் ஆசிரியர் விவரித்துள்ளார். ஜவஹர்லால் நேரு பர்மாவுக்குச் சுற்றுப் பயணம். வந்த போது அவரது உரையினை ஆங்காங்குத் தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லும் வாய்ப்பினைப் பெற்றிருந்தும். ஆசிரியர் நெருங்கிய பழக்கம் இருந்தும். அவரது 'ஜோதி' இதழைத் தொடங்கி வைத்திருந்தும். டிமாப்பூர் முகாமில் ஜவஹர்லால் நேரு வருகை தந்தபோது பரிதாபகரமான தாடி மீசை வளர்த்திருந்த தனது தோற்றுத்துடன் அவரைக் காணக் கூச்சம் கொண்டிருந்த செய்தியையும் விவர்த்துள்ளார்.

நண்பர்களின் உதவி

தனது வழிநடைப் பயணம் மூலம் உயிருடன் தாயகம் மீண்டதற்கு உதவியாக இருந்த பல நண்பர்களை நன்றியுடன் ஒவ்வோரிடத்திலும் குறிப்பிடுகின்றார். இருப்பினும் ஏனோ அவர் தம் முழுப் பெயர்களையும் அளிக்காது. சுருக்கெழுத்துக்களில் குறிப்பிடுகிறார் வ. கு. சா. வி. வே. ரா. ஹரி. ஏ. வி. ம.. கோ. ரா. ரா இ ரா. வி. க. மு. பா. நா. ச. எல். எம். சி. மோ. ரா. பா. சு. சி. ஐ. டி. நண்பர்கள். தபால் நிலையத் தணிக்கை அதிகாரிகள். சு ஆ. ம. ந முதலியோர்.

இராமகிருஷ்ண மடத்துத் துறவிகளில் சிலர் கலேவா அகதிகள் முகாம் அருகே இரவு பகலாகத் தங்கி. பிறர் பாராட்டுதல்களை எதிர் நோக்காது. அகதிகள் ஏற்படுத்தி வந்த கழிவுகளை. மனிதக் கழிவுகள் உள்பட அனைத்தையும் அவ்வப்போது தூய்மை செய்து வந்தனர்.

மேலும். இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் கடைசியாக உள்ள தொடர் வண்டி நிலையம் டிமாபூர் ரங்கூனில் இருந்து நடந்து மட்டுமே வந்து டிமாபூரை அடையும் சிறுபான்மையினர் சில இடங்களில் ஆழ்ந்த நீரோட்டங்களைக் கடந்தும். காட்டுப் பூச்சிகளின் தொல்லைக்கு ஆளாகியும். குடி தண்ணீர் கிடைக்காதும். நடைப் பயணத்தின் களைப்பு மிகுதியினாலும் பலரும் மாண்டனர் இங்கு பரந்த மைதானத்தில். விசாலமாக அமைக்கப்பட்டிருந்த முகாம்களில். உயிரிழக்கும் நிலைக்கு ஆளாகி வந்திருந்த நடைப்பயண அகதிகளுக்கு உணவு. தேவையான உதவிகளை ராமகிருஷ்ண மடத்தினரும். மார் வாரி கஷ்ட நிவாரண சங்கத்தினரும் உணவுகளைப் பரிவோடு கவனித்தும் அளித்தும் சிறப்பான உதவிகளைச் செய்துள்ளனர்.

அதே போல் பாண்டுஸ் தொடர்வண்டிப் பயணத்தில் வண்டி நிற்கும் போதெல்லாம் வழி நெடுக ஆங்காங்கு அக்கம் பக்கத்துக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் சுண்டல். வடை. ரொட்டி முதலியவைகளைத் தயாரித்து இலவசமாக வழங்கியும். உபசரித்தும் உதவினர்.

தொடர்வண்டி நிலையத்தில் அருகே அமைக்கப்பட்டிருந்த பெரிய கொட்டகையில் ஆங்கிலோ இந்தியப் பெண்மணிகள் வரும் பயணிகளுக்கு ஆகாரங்களைத் தயாரித்து உபசரித்து உதவினர். இராமகிருட்டிண மடத்துத் தொண்டர்களின் சேவை இங்கும் கிடைத்தது.

மேலும் வழிகளில் ஆங்காங்கே உதவி புரிந்த ஒரிசா மாநிலக் கூலிகளின் உபசரணையையும், பர்மிய வண்டியோட்டிகளின் இரக்க உணர்வினையும், மணிப்புரி மக்களின் கனிவான, தூய்மையான, தெய்வ பக்தி மிக்க, உழைப்புக்கு அஞ்சாத, வலிந்து உதவும் பண்பினையும் உணர்ந்து பாராட்டியுள்ளார். அதேநேரத்தில் மனிதாபிமானமற்ற பிறர் துயரில் இன்பம் கண்ட, கொடுமனம் படைத்த படகுக்காரர்களின் செயலையும், சில முகாம் அதிகாரிகளின் அலட்சியப் போக்கினையும் கடிந்துள்ளார்.

முடிவுரை

அன்றாடம் துயர் தரும் பயணத்தில் எழுதிச் சேகரித்த குறிப்புகளின் துணையுடன் ஆசிரியர் எதிர் கொண்ட இயற்கை வனப்பும், இன்ப நிகழ்வுகளும் துன்பச் சம்பவங்களும் படிப்போரைத் தாமே அவற்றை உணர்வது போல் செய்கிறது

இப்பயண நூல் வழியே போர்ச் செய்திகளையும், போரின் விளைவுகளையும், நாடு சிதறுண்டு போன அவலத்தினையும், மக்கள் அடைந்த துன்பத்தினையும் நெடும் பயணம் மேற்கொண்ட போது கடந்து வந்த ஊர்கள், எழில் மிகு காட்சிகள், சந்தித்த மக்கள் அவர்தம் வாழ்க்கை, சமுதாய முறைகள், சக பயணிகளின் இயல்புகள், முகாம்கள், உணவு, அதிகாரிகளின் போக்கு முதலியனவற்றை அறிய முடிகின்றன.

□

த. அனுராதா
ஆய்வாளர்
அரிய கையெழுத்துச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

அறிஞர் அண்ணாவின் கடிதங்கள்

முன்னுரை

காகிதச் சுவடிகளில் இலக்கிய, இலக்கண நூல்கள், ஆவணங்கள், நாட்குறிப்புகள் மற்றும் கடிதங்கள் போன்றவை காணப்படுகின்றன. இவற்றுள் காணப்படும் கடிதங்கள் இலக்கிய வகையுள் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

அறிஞர் அண்ணாவின் சிந்தனையும், எழுத்தும், பேச்சும் இலக்கிய உலகில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும் இவர்தம் கதைகள், கட்டுரைகள், நாடகங்கள், திரைப்பட வசனங்கள், சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள் போன்றவைகள் எழுத்தாற்றல் பெற்றவையாகும். அண்ணா எழுதிய கடிதங்கள் சிறந்த தமிழ் இலக்கியங்களாக விளங்குகின்றன. இக்கடிதங்கள் 'திராவிடநாடு' எனும் இதழில் வெளியிடப்பட்டுள்ளன. இக்கடிதங்களில் அரசியல் மற்றும் வரலாற்றுச் செய்திகள் போன்றவை காணப்படுகின்றன. இக்கடிதங்கள் புத்தக வடிவில் பல்வேறு தொகுப்புகளாக வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் பெரியார் தொடர்பான செய்திகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெரியார்பற்றி அண்ணாவின் கருத்துரைகள்

சுயமரியாதை இயக்கத்தின் தந்தையாகிய பெரியார் ஈ. வெ. இராமசாமி 1919இல் தமது வகுப்புரிமைக் கொள்கையைக் காங்கிரஸ் ஏற்றுக் கொள்வதாகக் கூறியதால் அதில் சேர்ந்தார். 1920இல் ஒத்துழையாமை இயக்கத்திலும், 1921இல் ஈரோட்டிலும் கள்ளுக்கடை மறியலிலும் ஈடுபட்டார். 1923இல் குடியரசு இதழ் தொடங்கினார். 1935இல் ஈ. வெ. ரா. வேலைத் திட்டத்தை நீதிக்கட்சி ஏற்றதால், 1936இல் அக்கட்சியை ஆதரித்தார். 13 - 11 - 1938இல் சென்னையில் திருமதி நீலாம்பிகை அம்மையார் தலைமையில் கூடிய தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில் பெரியார் என்ற பட்டமும் அளிக்கப் பெற்றார் 1939இல் திராவிட நாடு திராவிடருக்கே எனக் கூறினார் 1942இல் குடியரசு இதழ் நிறுத்தப்பட்டதால் அந்த அச்சகப் பொருள்களைப் பெரியார் கொடுத்துதவ அண்ணாவினால் திராவிடநாடு இதழ் வெளிவரத் தொடங்கியது. தொடர்ந்து பல்வேறு பணிகளில் ஈடுபட்டார். 1955இல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டார்.

மொழிப் போராட்டம்

இந்தித் திணிப்பை எதிர்த்தும் இந்தியக் கூட்டாட்சியில் தமிழர்கள் இருக்க விருப்பமில்லை என்பதை உணர்த்தவும் 17-07-55இல் திருச்சியில் கூடிய மாநாட்டில் பெரியாரின் ஆகஸ்டுப் போர் பற்றிய அறிவிப்பு வெளியானது. அதில் நாடெங்கும் இந்தியத் தேசியக் கொடியைக் கொளுத்தி அதன் மூலம் வடநாட்டுச் சர்க்காரைத் திராவிடத்தின் மனநிலையை அறியும்படிச் செய்வது என்பது தான் பெரியாரின் போர்த் திட்டமாகும்.

இதன்படி. ஆகஸ்டுப் போரில் எல்லாக் கட்சிகளையும் ஈடுபடும்படி அழைப்பு விடுக்கிறார் எல்லாக் கட்சிகளும் என்றால் நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் என்று பொருள் அல்ல. காங்கிரஸ். கம்யூனிஸ்ட் பிரஜா இந்து மகா சபை. தமிழரசு போன்ற கட்சிகள் யாவும் இந்தி மொழிபற்றிக் கொண்டுள்ள எண்ணம் இந்தி கூடாது என்பதல்ல. கட்டாயப்படுத்தி. அவசரப்படுத்த வேண்டாம் என்பதுதான் ஆனால் பெரியாரின் கொள்கை இந்தி கூடாது என்பதும். அதன்மூலம் இந்தியாவின் ஆட்சிக்குள் திராவிடம் இருத்தல் கூடாது என்ற எண்ணமும் கொண்டவர் இவ்வாறு முக்கியக் கொள்கையில் வேறுபாடான கருத்துக்கள் கொண்ட கட்சிகள் எதுவும் 'ஆகஸ்டுப் போர்' என்ற மொழிப் போரில் ஈடுபடாது. இந்தி எதிர்ப்பில் பெரியாரின் கொள்கையைப் பின்பற்றும் கட்சி திராவிட முன்னேற்றக் கழகமாகும் ஆனால் இலட்சியம். ஒரேவிதமாக இருந்தும் அந்தக் கட்சியை அழைத்துப் பேசித் திட்டம் மேற்கொள்ளாததால் போராட்டத்தில் ஈடுபடவில்லை.

மத்திய அரசின் சார்பாக நேருவும். மாநில அரசின் சார்பாகக் காமராசரும் கலந்து பேசி இந்தி எதிர்ப்புப் போரினை ஒரு முடிவுக்குக் கொண்டுவர முயன்றார். அதன்படி. மத்திய - மாநில அரசின் சார்பாக 30-07-55இல் இந்தி திணிக்கப்பட மாட்டாது என்ற உறுதிமொழியைக் காமராசர் வெளியிட்டார். இந்த உறுதிமொழி வெளியிடப்படும் முன் பெரியாரிடம் காண்பிக்கப்பட்டுத் திருத்தங்கள் செய்யப்பட்டன. இதனால் 31-07-1955இல் ஆகஸ்டுக் கிளர்ச்சியைப் பெரியார் நிறுத்தினார்.

தட்சிணப் பிரதேச முயற்சி

1956இல் காங்கிரசின் தட்சிணப் பிரதேச முயற்சியைப் பற்றித் தமிழர்களிடம் இருக்கின்ற தாய்மொழிப் பற்று. தமிழ் இனப்பற்று. வடமொழி எதிர்ப்பு ஆகிய வெறுப்பு போன்றவற்றை ஒழித்துக் கட்டுவதற்காகவே தட்சிணப் பிரதேசம் என்ற அடக்குமுறை மேற்கொள்ளப்படுகிறது. இது தொடர்ந்தால் தமிழ் நாட்டில் இரத்த ஆறு ஓடிப் பிணக்காடாகி விடும். அதன் பிறகுதான் காங்கிரசார் புது இணைப்பைக் காணப் போகிறார்கள் என 09-09-55இல் விடுதலையில் தலையங்கம் வெளியானது மொழிவாரி மாகாணப் பிரிவினைக்குப் பின் திராவிடநாடு என்ற கொள்கையைப் புறக் கணித்துத் தனித் தமிழ் நாடு கொள்கையை வலியுறுத்தினார். தட்சிணப் பிரதேச முயற்சியை எதிர்த்து ஒழியச் செய்தார்.

பிராமண எதிர்ப்பு

ஹோட்டல் போன்ற பொது இடங்களில் 'பிராமணாள்' என்ற பெயரை நீக்கும்

கிளர்ச்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றார். 26-11-57இல் பிராமணர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் அரசியல் சட்டத்தை நாடெங்கும் கொளுத்தும் போராட்டத்தை அறிவித்தார். குளித்தலை, பசுபதி பாளையம், திருச்சி ஆகிய இடங்களில் பேசிய பேச்சுக்கள் வன்முறையைத் தூண்டுவதாகக் காரணம் கூறியும் சட்ட எரிப்புத் தொடர்பாகவும் 06-11-57இல் திருச்சியில் கைது செய்யப்பட்டு உடனே விடுதலை செய்யப்பட்டார். 25-11-57இல் சட்ட எரிப்புக்கு முதல் நாள் திருச்சியில் மீண்டும் கைது செய்யப்பட்டு, திருச்சியில் 3 நாட்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டார். அரசியல் சட்டம் பிடிக்காதவர்கள் நாட்டை விட்டு வெளியேறலாம் என நேரு கூற, அதன் பிறகு சென்னை வந்த நேருவை 'முட்டாள் நேருவே! திரும்பிப் போ!' என்று தமிழர்கள் திரண்டெழுந்து திணற அடிக்க 14-12-57இல் 6 மாத சிறை வாசம் அனுபவிக்கலானார். 1010 பேரைச் சிறைக்கு அனுப்பிச் சென்னை 'முரளி பிராமணாள் கபே' முன் நடத்திய பிராமணாள் அழிப்புக் கிளர்ச்சி சங்கராச்சாரியார் ஆலோசனையுடன் 22-03-58இல் 'முரளி அய்டியல் ஓட்டல்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பெரியாரின் பார்ப்பன எதிர்ப்புப் பற்றி அவரின் நண்பர் ஆர். சீனிவாச ராகவன் என்ற பார்ப்பனரின் பேச்சு

> "தமிழ்த் தாத்தா அவர்களே! தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால் திராவிடக் கழகத்தாரின் கை ஓங்கி திராவிடர் கழகம் பலமிக்கதாகி, பிராமண சமுகத்தைத் திராவிடக் கழகத்தார்கள் ஒழித்து விடுவார்கள் என்று சில பிராமணர்கள் பயப்படுகிறார்கள். இந்தத் தவறான எண்ணத்தைப் போக்கவே பெரியாரைப் பேச அழைத்தேன்"[1]

என்றார்

இதில் உள்ள மூன்று வியப்புக்குரிய செய்திகள் :-

1) பெரியார் திராவிடத் தந்தை எனக் கூறப்படாமல் தமிழ்த் தாத்தா எனக் குறிப்பிடப்படுகிறது.
2) பார்ப்பணர் எனக் கூறப்படாமல் பிராமணர் என்ற வார்த்தைதான் குறிப்பிடப்படுகிறது
3) அமைதியான இந்தப் பேச்சுக்குக் காரணம் பேசிய இடம் மயிலாப்பூர் லட்சுமிபுரம் யுவர் சங்கம்

பெரியார் இதற்குக் கூறிய பதில் உரை

பிராமணர்கள் இந்த நாட்டிலே வாழக் கூடாதென்றோ இருக்கக் கூடாதென்றோ திராவிடர் கழகம் வேலை செய்யவில்லை. அது திராவிடர் கழகத்தின் திட்டமுமல்ல திராவிடர் கழகத்தினரும் நானும் சொல்வது பிராமணரல்லாதவர்களும் கொஞ்சம் வாழ வேண்டும். நாங்களும் கொஞ்சம் மனிதத் தன்மையோடு சமத்துவமாக இந்த நாட்டிலே இருக்க வேண்டும் என்பதுதான். இது பிராமணர்களை வாழக்கூடாது

1. அண்ணாவின் கடிதங்கள் இரண்டாம் பகுதி, கடிதம் 42, ப. 211

என்று சொன்னதாக அர்த்தமாகாது. அவர்களைப் போகச் சொல்ல வேண்டிய அவசியமுமில்லை. அவர்களுக்கும் நமக்கும் எவ்வித பேதமும் இல்லை. அவர்கள் அனுசரிக்கும் சில பழக்க வழக்கங்களையும் முறைகளையும்தான் நாங்கள் எதிர்க்கிறோம். நமக்கும் அவர்களுக்கும் என்ன பேதம்? ஒரே குழாயில் தண்ணீர் பிடிக்கிறோம். ஒரே தெருவில் வசிக்கிறோம். ஒரே தொழிலையே செய்கிறோம். நமக்குள் என்ன பேதம்? நம்மிடையே பேத உணர்ச்சி வளரக் கூடாது என்பதில் எனக்குக் கவலை உண்டு. இந்த எனது முயற்சியில் பலாத்காரம் சிறிதும் இருக்கக் கூடாது என்றார்.

பார்ப்பனீய ஒழிப்புத் திட்டம் தந்த பெரியாரின் பாதையில் செல்வோம். அதில் தவறில்லை என்கிறார் அண்ணா.

பெரியாரின் சிறப்புகள்

பெரியார் காஞ்சிபுரத்திற்கு இரண்டாவது முறை வந்தார். அப்போது வேறு எவரும் பேசாத அளவிலும் முறையிலும் பெரியார் அண்ணாவை ஏசினார். அதற்காகச் சிறிதும் வருத்தப்படாத அண்ணா பெரியாரின் சிறப்புகள்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

பெரியார் மூலம் புராணப்புரட்டு, புரோகிதப் புரட்டு, இதிகாசப் புரட்டு, காங்கிரசைப் புரட்டு என்பனவற்றுக்கெல்லாம் எதிர்ப்புரை, மறுப்புரை வழங்கியவரை அண்ணாவை ஏசும் நிலைக்கு ஆளாக்கி விட்டனர். பெரியாருக்கு இன்றுள்ள செல்வாக்கு சாமான்யமானதல்ல. அதை ஈட்டிட அவர் ஆற்றியுள்ள அரும்பெரும் பணியும் அபாரம். எதற்கும் அஞ்சுபவரல்ல. எதிர் நீச்சலில் பழகியவர். கொடி கோட்டை வாசலில் உள்ளதைக் கொளுத்த வேண்டுமென்றாலும், அதனால் ஏற்படக்கூடிய ஆபத்தைப்பற்றித் துளியும் கவலைப்படாதவர். அது அவரின் சேவையால் கிடைத்ததல்ல. இயற்கையான சுபாவம் அவரின் கண்களில் போபத்தையும், அலட்சியத்தையும் கண்டாலும், ஒருபோதும் பயத்தைக் கண்டதில்லை. அவரைப் பல கோணங்களில் பார்த்தவன். பல பிரச்சனைகள் குறித்த அவருடைய பிரத்யேகக் கருத்துக்களை அறிந்தவன். அவரிடம் மேஸ்திரி வேலையல்லவா பார்த்தேன் என்கிறார் அண்ணா.[2] எனவேதான் திராவிடர் கழகத்தில் வகுக்கப்படும் போர்த் திட்டம் அவருடைய ஆற்றலை அளவு கோலாகக் கொண்டு மட்டும் அமையக் கூடாது. எந்தக் கொள்கைக்காக இயக்கம் நடைபெறுகிறதோ அந்தக் கொள்கைக்குத் தீராப் பகையைத் தேடிப் பெறுவதாக இருத்தல் ஆகாது. பரவலான அளவில் செல்வாக்கு பெறத்தக்கதும், பகைக் கூடாரத்தில் உள்ளவர்களின் உள்ளத்திலும் பரிவு ஊட்டக் கூடியதுமாகத் திட்டம் இருக்க வேண்டும் என அண்ணா குறிப்பிடுகிறார். இக்கருத்து திராவிடர் கழகத்தில் இருந்த போதும் அதை விட்டுப் பிரிந்த பிறகும் அண்ணாவிடம் உள்ளது. பெரியாருக்குள்ள அஞ்சாமையும், எதிர் நீச்சுத் தன்மையும் எத்தகைய நிலைமையையும் சமாளிக்கும் திறமையும் இவருக்கு மட்டுமே உண்டு. திராவிடர் கழகத்துக்கு இல்லை எனப் பெரியாரும் நம்பாததால்தான் என்னையே நம்பி இதிலே கொடி எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபடுகிறேன் என்று வெளிப்படையாகக் கூறினார்.

2. **அண்ணாவின் கடிதங்கள் முதல் பகுதி**, கடிதம் 13, ப 123.

உண்மையில் இவரின் திறமையையும். பெற்றுள்ள செல்வாக்கையும் இம்மியளவும் குறைத்து மதிப்பிடாததால்தான் அவர் தன்னிலைக்குத் தகுந்த திட்டம் தீட்டும்போது அது முறையல்ல. இயக்கத்தின் இன்றைய நிலைக்கு ஏற்ற திட்டம் தீட்ட வேண்டும் என்று குறிப்பிடுகிறார் அண்ணா. பெரியாரின் நிலை வேறு; இயக்கத்தின் நிலை வேறு. பெரியாரால் தாங்கிக் கொள்ளக் கூடியதை எல்லாம் இயக்கமும் தாங்கிக் கொள்ள முடியும் என்பது தப்புக் கணக்கு.

காந்தியின் தத்துவங்களைத் தாகூரின் வேதாந்தத்தை நேருவின் அரசியலை அலசிக் காட்டி விளக்க வந்தவர் பெரியார். அவரின் பொதுத் தொண்டில் அளவு தரம் இவைகளைக் கவனிக்கும்போது அவர் உலக நாடுகள் மன்றம் பற்றி. ஊராள்வோர் கூறும் தத்துவம். திட்டம் பற்றி அறியாமையை அகற்றுவது பற்றிப் பேச வேண்டியவர் இன்று அண்ணாவைப் பற்றி. அவரின் பேச்சு. எழுத்து. சொத்து. அகம். சூது. சூழ்ச்சி பற்றி ஆராய்ச்சி நடத்துகிறார். மனித குலம் மடமையிலிருந்து விடுபட வழியென்ன என்ற மகத்தான பணியில் ஈடுபட்டிருந்த பெரியார் அண்ணாத்துரைக்கு ஓட்டுக் கிடைக்காமல் இருக்க என்னென்ன வழிகள் என்று பேசுவது மனவருத்தம் தரக் கூடியதாக இருக்கிறது.

அகில இந்திய காங்கிரஸின் ஆதிக்க ஒழிப்புக்கு ஜின்னா. அம்பேத்கர். பெரியார் தேவை எனப் பாராட்டும் நிலைக்கு உள்ளவர் பெரியார். அப்படிப்பட்டவரை என் செல்வாக்கை அழிக்கப் பயன்படுத்துவது வேடிக்கை மட்டுமல்ல. கோபத்தையும் ஏற்படுத்துகிறது என்றார் அண்ணா.

காங்கிரஸ் தொடர்பு

பெரியாரின் பேராற்றல் மட்டுமல்ல திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழிக்க உதவுபவை எனக் கருதிய காங்கிரஸ் வாண்டையார். மூப்பனார். கருப்பமபலத்தார் போன்றவர்களையும் ஆலை அரசர்கள். பஸ் முதலாளிகள் போன்றவர்களையும் சேர்த்துக் கொண்டு அழிக்க முனைந்தது.

இச்சமயத்தில் பெரியார் தி. மு. க. வுக்கு இட்ட பெயரே கண்ணீர்த் துளிக் கட்சி என்பது. ஏனெனில் பெரியாரின் பொருந்தாத் திருமணம்பற்றி மனம் குமுறியவர்கள் தெரிவித்த கருத்துக்களை 'கண்டனக் கணைகள்' என்ற தலைப்பிட்டுப் பத்திரிகையில் வெளியிட்டனர். அந்தத் தலைப்பு அண்ணாவிற்குப் பிடிக்காததால் 'கண்ணீர்த் துளிகள்' எனப் பெயர் மாற்றிச் செய்திகளை வெளியிட்டார். அதனையே பெரியார் கண்ணீர்த் துளிக் கட்சி எனக் குறிப்பிட்டார்.

காங்கிரசுக்குப் பல்வேறு வகையான வலிவுகளிருப்பினும் எதிர்ப்பு அலட்சியப்படுத்த முடியாத அளவிலும் தரத்திலும் வளர்ந்திருப்பதால். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக நிந்தித்த காங்கிரசார் நான்கு ஆண்டுகளில் பெரியாரை அணுகி வாழ்கின்றனர் இது பெரியாரின் பேராற்றலுக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டு.

பெரியார். காமராசர் நல்லவர். வல்லவர். நம்மவர் என்று சொல்கிறாரே தவிர காங்கிரசை அல்ல.

கைராட்டை - காட்டு மிராண்டிக் கருவி

ஆதாரக்கல்வி	-	பைத்தியக்காரத் தனம்
காந்தீயம்	-	முட்டாள் தனம்
தேசீயம்	-	பித்தலாட்டம் என்ற கருத்துக்களைப் பெரியார் மாற்றிக் கொள்ளவில்லை.

இராமன் அயோக்கிய சிகாமணி, சீதை சோரம் போனவள் என்ற கருத்துக்களையும் மாற்றிக் கொள்ளவில்லை. இராமாயணத்தைக் கண்டித்தால் முகம் சுளிக்கும் காங்கிரசார், காமராசரின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதற்காகப் பெரியாரின் அனைத்துப் பேச்சுக்கும் கை தட்டுகின்றனர்.

காங்கிரசின் தலைவர்களுக்குக் கிடைக்காத மதிப்பு பெரியாருக்குக் கிடைக்கிறது. அதற்குக் காரணம் பெரியார் தி. மு. க. வை எதிர்ப்பதுதான்.

60 ஆண்டுகளுக்கும் மேலாகப் பாடிய தேசிய கீதமும், 14 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் தேசிய ஆட்சியும் தேசிய ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தவில்லை. பெரியாரின் பாதத்தைத் தாங்கிப் பிடித்தால்தான் வெற்றி பெற முடியும் என்ற நிலையும் பரிதாபமானது என்கிறார் அண்ணா.

இவ்வாறு பெரியாரைப்பற்றி அண்ணா எழுதிய கடிதங்களில் காணமுடிகின்றன. திராவிட இயக்கத்தைப்பற்றியும் அக்கால அரசியல், வரலாறு முதலான பலவற்றையும் இக்கடிதங்கள் வெளிப்படுத்துகின்றன. தமிழ் நாட்டு வரலாற்றுக்கு இக்கடிதங்கள் பேருதவி புரியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

□

த. ரோஜாபாய்
ஆய்வாளர்
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

டி. கே. சி. யின் கடிதங்கள்

ஒரு மொழியில் உள்ள பலதிறப்பட்ட இலக்கியப் பிரிவுகளில் ஒன்றாகத் திகழ்வது கடித இலக்கியம். மற்ற இலக்கியங்கள் வளர்ந்து பரிணமித்துப் பொலிவு பெற ஒரு தொடக்கம் என்று கூட இதனைக் கூறலாம். ஒலியில் இருந்து தோன்றிய மொழி, எழுத்து வடிவம் பெற்றபின் ஒருவருக்கொருவர் கடிதம் வாயிலாகத்தான் தொடர்பு கொண்டனர். எனவே உரைநடை இலக்கியத்தின் தொடக்கநிலை கடித இலக்கியமே எனில் மிகையாகாது.

பொதுவாகக் கடிதம் எழுதுவது வெறும் செய்திககாகத்தான். அதில் 'நலம் விசாரித்தல்'. 'அரிசி விலை எப்படியிருக்கிறது?'. 'அக்கம் பக்கம் வீட்டுப் பிரச்சினைகள்', 'காய்கறி விலையேற்றம்', 'மாமனார், மாமியார், சொந்தக்காரர்களின் விசாரிப்புகள்' என்றுதான் இருக்கும். இக்கடிதங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையே இல்லை.

இத்தகைய காலகட்டத்தில் கடிதம் என்ற சொல்லுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் கலை, இலக்கியம் போன்றவற்றை அதில் புகுத்தி வைரமணிமுடி போன்று ஒளிரச் செய்தவர்களுள் இரசிகமணி டி. கே சிதம்பரநாத முதலியாரும் ஒருவர்.

ஐரோப்பிய நாடுகளில், குறிப்பாக ஃபிரான்சிலும், இங்கிலாந்திலும் கடிதங்கள் வாயிலாகவே இலக்கியம் வளர்ந்துள்ளது. உண்மையில் ஃபிரெஞ்சிலும், ஆங்கிலத்திலும் உள்ள உயர்ந்த இலக்கியங்கள் கடிதங்கள் எழுதி எழுதியே பழுத்தவையென்று அறிஞர்கள் கூறுவர்.

இரசிகமணியின் கடிதங்கள் ஒவ்வொன்றும் நேருக்கு நேர் நின்று பேசும்; இலககிய மணம் வீசும்; எளிமை, நுணுக்கம், உல்லாசம், நகைச்சுவை, கலைப்பாங்கு, தத்துவ ஆழம், ஆனந்தம் நிறைந்து ததும்பும்; உண்மையில் இவரது கடிதங்களைப் படித்தால் அவர் உயிருடன் இருந்து, நம்மோடு உறவாடிக் கொண்டும், உரையாடிக் கொண்டும இருப்பது போன்றதொரு தோற்றத்தை ஏற்படுத்தும்.

கடித இலக்கியத்தின் சிறப்பிற்குக் காரணம் அதன் இயல்பான தன்மைதான். டி கே. சியின் கடிதங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம.

1. திருநெல்வேலி வட்டத் தொட்டி என்று செல்லமாக அழைக்கப்படும் இரசிகமணியின் நெருங்கிய நண்பர்களுக்கு எழுதியது.
2. உறவினர்களுக்கு எழுதியது.
3. பிற அமைப்புகளுக்கும், அரசாங்கத்திற்கும் எழுதியது.

இத்தகைய கடிதங்களில் கலை, இலக்கியம், கவிதைகள், அறிவியல், சோதிடம், மருத்துவம், ஆன்மீகம், நட்பு எனப் பல தரப்பட்ட செய்திகளை விளங்கச் செய்து, இதயத்திற்கு இதமளித்து, மனத்திற்கு உற்சாகம் ஊட்டியுள்ளார்.

டி. கே. சி. யின் கடிதங்களிலுள்ள ஒவ்வொரு சொல்லிலும், எழுத்திலும் பொருள் முட்டித்ததும்பிக் கொண்டு நிற்கும். அபாரமான தெளிவும், உணர்ச்சியும், ஒளியும் இருக்கும். வெறும் கொச்சைப் பேச்சை வைத்துக் கொண்டு இந்த மாதிரி மாய வித்தைகள் செய்துவிட முடியாது. ஆண்டுக் கணக்கிலே பேச்சுத் தமிழின் உயிர்நிலையை அறிந்து, அனுபவித்து, அந்த அனுபவத்தால் பெற்ற மொழியறிவைக் கலைப் பாங்கோடு கையாளக் கற்றுக் கொண்டதால்தான் டி. கே. சி.யினுடைய எழுத்துத் தமிழுக்கு, பேச்சுத் தமிழின் இயல்பான சீலமும் வன்மையும் உயிர்த் துடிப்பும் கிட்டியுள்ளன.

டி. கே. சிக்கு ஒரு பருவத்தில் மூச்சுவிடுதல் போல் கடிதம் எழுதுவது தேவைப்பட்டுள்ளது. தனிமையில், உறக்கம் வராத நிலையில் கடிதம் எழுதி, மனநிறைவு பெற்றதைப் பின்வரும் கடிதப்பகுதி உணர்த்தும்.

> "என்னுடன் இருந்த நண்பர்களும் எல்லாருமாக நேற்றுப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். தங்கள் அண்ணியும் குற்றாலமும் ஆழ்வார் குறிச்சிக்குப் போயிருக்கிறார்கள். தங்கம் தென்காசி; ஆகவே, நான் <u>இனிது இனிது ஏகாந்தம் இனிது என்று, சிவமே என்றிருக்கிறேன்.</u> பலராமும் துணைக்கு இருக்கிறார். அருவிச் சத்தம் ஒன்று மட்டும் கேட்டுக் கொண்டிருக்கிறது. மற்றபடி நிசப்தம். மணி காலை 3. 30"

நட்பிற்குப் புத்துயிர் ஊட்டி நண்பர்களுக்கு எழுதிய கடிதம்

நீதிபதி எஸ். மகாராசனுக்குப் பத்து அல்லது இருபது பக்கங்கள் கொண்ட நீண்ட கடிதங்களைக் குற்றாலத்தில் இருந்து கொண்டு இரசிகமணி எழுதினார். உடனுக்குடன் பதில் கிடைக்கவில்லை என்பதனை (21-09-1949இல்) அவரெழுதிய மற்றொரு கடிதம் புலப்படுத்துகிறது.

> "கள்ளுக் கடைகளை அடைத்துவிட்டார்கள். ஆனால், அன்பைப் பகிஷ்கரிக்கவில்லை. கம்பர் சொல்லுகிறபடி, கள்ளும் அன்பும் ஒரே தன்மையானவைதான். அவைகளுடன் பழகுவது பிசகு, விடமுடியாத பழக்கமாய் விடுகிறது. சீவில்லிபுத்தூரிலிருந்து கடிதம் வந்து கொண்டே இருக்க வேண்டும். அல்லாத பக்ஷம் நாள் வெறித் தோடிப் போகிறது. ஆனால் ஆசைக்கும் ஒரு அளவு வேண்டும்"

மேலும் டி. கே. சி. 16-12-49இல் எழுதிய கடிதத்தில் ஒத்த உணர்ச்சி இருந்தால் மட்டும் போதாது என்று திருவள்ளுவரின்

''புணர்ச்சி பழகுதல் வேண்டா, உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்"

என்னும் குறளுக்கு கலை, கவிதை, நட்பு இவை வளர்ப்பதற்கு நெருங்கிப் பழகுதல் தேவை என்று அன்போடு சாடுகிறார்

கலப்படம் இல்லாது அன்பைப் பொழிவதிலே குற்றாலத்து அருவி போன்றவர் டி. கே. சி. இவர்தம் நண்பர்கள் எஸ். மகாராசன் மற்றும் வேலம்மாள் அவர்களுக்கு,

"உங்கள் இருவருக்குமே அரசியல் கிடையாது. நான் சொல்வதை வைத்து ஒரு புத்தகம் போடலாமே என்ற நினைப்பும் கிடையாது. ஆகையால் உங்கள் இதயங்களை அப்படியே என் கையில் நிபந்தனையற்றுக் கொடுத்துவிடுகிறீர்கள். கலை உலகத்தில் மிகவும் ஆழமான பொங்குமாங்கடல்கள் பல இருக்கின்றன. நான் எந்த ஆழத்திற்குப் போனாலும் நீங்கள் இருவரும் என்கையை இறுகப் பிடித்துக் கொண்டு வரத் தயாராக இருக்கிறீர்கள்"

என்று எழுதியுள்ளார். மேலும் ஒரு கடிதத்தில்

"ஒருவனுக்குக் கை நிறைய கிடைத்த வைரங்களை வைக்க பெட்டகமோ, வீடோ இல்லை. அவைகள் கிடைத்தன. அப்போது எவ்வளவு ஆறுதல் கிடைக்குமோ, அத்தகைய ஆறுதல் எனது பாடல்களை தாங்களிடமும், வேலம்மாளிடமும் ஒப்படைக்கும் போது கிடைக்கிறது. ஒப்படைத்த பாடல் சில இத்துடன்"

என்று தம் நண்பர்களுக்கு எழுதியதன் மூலம் அறியமுடிகிறது. டி. கே. சி. யின் ஏக்கத்தை,

"உடனிருந்து அனுபவிக்க 24, 000மைல் சுற்றளவுள்ள உலகத்தில் யாரும் இல்லையே - நீங்களும் தம்பியும் தவிர"

என்ற கடித வரிகள் காட்டுகின்றன. ஒத்து உணர்வதற்குத் தமக்கு நண்பர்கள் வேண்டும் என்பதை,

"கடவுள் பாடே கஷ்டமாய்ப் போய், மனுஷர்களைப் படைத்துக் கொண்டார்"

"தொட்டதெல்லாம் பஸ் மீகரணம் ஆக வேண்டும் என்று வரம் கேட்டான். சிவ பெருமான் கொடுத்தருளினார். சிவபெருமான் தலையிலேயே கை வைக்க ஆரம்பித்தான் அசுரன். கடவுள் பாடு அப்படி இருக்கிறது"

"கடவுளோடு ஒத்து அனுபவிக்க அவருக்கு ஆள் வேண்டுமாம்.

அப்படியானால் என்னோடு உண்மைகளை ஒத்து அனுபவிக்கத் தம்பியும் தாங்களும் வேண்டும் என்பதில் அதிசயம் ஒன்றும் இல்லை தானே"

என்ற கடித வரிகள் (01-02-49) காட்டுகின்றன.

டி. கே. சி. கடிதங்களில் நகைச்சுவையும் மருத்துவமும்

இரசிகமணி 03-09-47இல் எழுதிய கடிதத்தில் நகைச்சுவையும் மருத்துவமும் கலந்து காணப்படுகின்றது. சான்றாக.

"01-09-47 அன்று அனுப்பிய கடிதம் கிடைத்தது. உடம்பைப் பற்றியும். நோயைப்பற்றியும் எழுதிய குறிப்பு வெகு அழகாய் இருக்கிறது. ஆனால். நோய் அவ்வளவு அழகாய் இருக்கிறது என்று சொல்ல முடியாது"

"இரவில் படுக்கப் போகும்போது ஈரத்துணி ஒன்றைக் கழுத்தில் சுற்றி அதற்கு மேல் பிளானலையோ. பட்டையையோ சுற்றிக் கொள்ள வேண்டியது. அவ்வளவுதான் தூக்கம் வந்துவிடும். அநேகமாய்த் தொண்டையிலுள்ள புண் ஆறிவிடும்.

இந்த வைத்தியத்துக்கு ஒரே ஆக்ஷேபணைதான் இருக்கக்கூடும். அதாவது செலவு இல்லாத காரியமாக இருக்கிறது என்பதுதான். ஆனால் வியாதிக்கு அந்த விஷயம் தெரியாதல்லவா? ஏதோ ரொம்பச் செலவு செய்துதான் காரியம் நடந்திருக்கிறது என்று எண்ணிக் கொண்டு பயந்து விலகிவிடும்"

எனும் இக்கடித வரிகளில் ஆழ்ந்த உளநூல் புலமை. நுணுக்கமான நையாண்டி. மருத்துவம். நகைச் சுவை போன்றவற்றைக் காணமுடிகிறது.

டி. கே. சி. யின் உடல் நிலை கேட்டு எழுதிய கடிதத்திற்கு.

"என் உடம்பைப் பற்றி தாங்கள் மிக்க கவலை கொள்ளுவதாகத் தெரிகிறது. அது வேண்டாம். உடம்பு சரியாகத்தான் இருக்கிறது. இன்ஸுலின் இன்ஜெக்ஷன் கிடையாது. மற்றக் குத்துகளும் இல்லை. மலை ஏற முடியாது. மரம் ஏற முடியாது அவ்வளவுதான்"

என்று பதிலளித்துள்ளார்.

கால் புண் தொடர்பாக :

"என்னுடைய காலில் புண் கொஞ்சம் குணத்துக்கு வருகிறது. அதற்கு என்ன உபசாரம் எல்லாமோ செய்தாகிறது. நாலைந்து நாளில் குணமாய்விடும் என்று ஏகோபித்துச் சொல்லுகிறார்கள். புண்ணின் காதில் அந்த வார்த்தை விழும் என்று எண்ணுகிறேன்"

"இடது காலில் இருந்த புண் முற்றிலும் குணமாய் விட்டது.

குணமாகிறது என்று ஒன்று அதற்கு இருக்கிறதே; அதிசயந்தான். வலது கால் விஷயம் கொஞ்சம் கொஞ்சமாய்த்தான் சௌகரியப்பட்டு வருகிறது. ஆனாலும், வேண்டும் போது சேஷ்டை பண்ணி விடுகிறது எல்லாவற்றிற்கும் நாளாக வேண்டியிருக்கிறது. என்ன செய்யும், அப்பாவி உடல்! ஏதோ அதனால் கூடிய மட்டும் அங்கங்கே பழுது பார்த்துக் கொண்டிருக்கிறது அதன் மேல் குற்றமில்லை"

டி. கே. சி. **உணவுப் பத்தியம்** தொடர்பாக எழுதிய கடிதம்

"உளுந்து தோசை. ருக்மணி அம்மாள் (கல்கியின் மனைவி) அனுப்பிய நார்த்தங்காய் ஊறுகாய். இட்டலி. தயிர் எல்லாம் சேர்ந்து வாய்க்கு ருசியான ஆகாரமாக ஆகிவிடுகிறது போதும்தானே"

மேலும் நோய் பற்றி,

"உடலை உற்றநோய் மனசை எங்கெல்லாமோ செலுத்தி யிருக்கிறது. ஒரு சின்னஞ்சிறு உயிர்த் தாதுவிலிருந்து ஜீவன் முக்தர்வரையும் உள்ளிருந்து யோசனை பண்ணச் செய்திருக்கிறது"

என்று எழுதியுள்ளார்.

அன்பு

வள்ளுவர் அன்பைப் பற்றிச் சொல்லவந்தவர். ஆனால் எல்லாவற்றிலும் அல்லவா மத்தாப்புப் போட்டுவிட்டார்.

"ஆருயிர்க் (கு)
என்போடியைந்த தொடர்பு"

ஆகவே. குறளாசிரியர் சயின்டிஸ்ட் ஆக விளங்குகிறார்.

திருமூலரும் திருவள்ளுவரது வழித் தோன்றல் என்பதனை

"உடம்பினுக்குள்ளே
உறுபொருள்
கண்டேன்"

அந்த உயிர்த் தத்துவந்தானே சிற்பி. உடல் உடல் என்பதெல்லாம் அந்தச் சிற்பியின் கைக்குவந்த களிமண்தானே என்கிறார்.

மேலும் சமுதாய இயலைப்பற்றியும் இரசிகமணி ஆழ்ந்து சிந்தித்து. சமுதாயச் சடங்குகளில் பொதிந்துள்ள உண்மைகளையும் அழகுக்களையும் கடித இலக்கியம் வாயிலாக அளித்துள்ளார்.

"தைச் சங்கராந்தி என்றால் பெண்டுகளுக்கு வேலை. அன்று

சூரியன் உதிப்பது ஒரு தனி அழகு. குத்து விளக்கு. ஆரம். விபூதி. குங்குமம், கரும்பு. மஞ்சள் தோகை. குழந்தை. பெண்டுகள். அவர்களுடைய அழகான உடைகள். அடுப்புகள் எல்லாவற்றிற்கும் சூரியன் தங்க முலாம் பூசி விடுகிறது"

என்றும்.

"சித்திரக்கலை. சிற்பக்கலை. கோலக்கலை. சங்கீதக் கலை ஆகிய கலைகளை உள்ளடக்கியது நவராத்திரி விழா"

என்றும் கூறியுள்ளார்.

கோலத்திலிருந்து கவிதைக்கு. கவிதையிலிருந்து சிருஷ்டி தத்துவத்துக்குமே டி. கே. சியின் எளிமைக் கடிதங்கள் நம்மை இழுத்துச் சென்று விடுகின்றன.

சில்லறை விஷயங்களைப்பற்றிக் கடிதங்கள் விளக்கிக் கொண்டிருக்கும் போதே அரிய உண்மைகள் எல்லாம். அந்த ஒளியிலே தெளிவாகிவிடும். விஞ்ஞானம். சமயம். கடவுள் தத்துவம் - எல்லாவற்றைப் பற்றியுமே. மத்தாப்பூ போட்டுவிடும் அந்தக் கடிதங்கள்.

மேலும் டி. கே. சி. கம்பனுடைய உள்ளத்தில் நுழைந்து. அதன் அந்தரங்கத்தை அறிந்து. கம்பன் பாடல்களைப் பாடி. கவிவானம் உண்டாக்கி. அமுத மழை பொழியச் செய்வார்.

பெண்களைப்பற்றி டி. கே. சி.

உணர்ச்சியைப் பொறுத்த அளவில் பெண்கள் ஆடவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள்.

"உணர்ச்சி அவர்களிடம் (பெண்களிடம்) அளவில்லாமல் இருக்கிறது. அந்த உணர்ச்சியின் அளவையும் வேகத்தையும் ஆடவர் கண்டதில்லை.

கரும்பும் நாணலும் ஒன்றுதான். பாட்டின்படி ஓர் இனந்தான். நாணலை என்ன பிழி பிழிந்தால்தான் என்ன? சாறு வந்து விடுமா? வந்தாலும் எவ்வளவுதான் வந்துவிடும். காய்ச்சிச் சர்க்கரை எடுப்பதோ முடியவே முடியாது.

ஆனால் கரும்பு என்றால் வேறு விஷயம். ஒரு கரும்பை ஆலையில் கொடுத்துவிட்டால் ஆலை பிழிந்து கொடுக்கிற சாறு ஓர் உழக்கு.

நாணலுக்கும் கரும்புக்கும் உள்ள சம்பந்தந்தான் ஆடவருக்கும் பெண்டிர்க்கும் - உணர்ச்சி சம்பந்தப்பட்ட மட்டில்"

டி. கே. சி. திருச்சி உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது பாப்பம்மாள்

அண்ணியின் வீட்டில் தங்கிப் படித்தார். பெற்ற தாயைவிட அருளோடு அன்போடு பாதுகாத்த பாப்பம்மாளுக்கு 'பாப்பம்மாள் ஒரு இதிகாச பாத்திரம் மட்டும் அல்ல. ஒரு 'இதிகாசமேதான்' என்று அவரைக் குறிப்பிட்டுப் பெருமைப்படுத்துவார்.

பள்ளி வாழ்க்கையில் டி. கே. சி.

டி கே. சி. கல்வியை வெறுக்கவில்லை. உண்மையான கல்வியும். உண்மைக் கல்வியைச் சொல்லிக் கொடுக்கும் பள்ளியும் இல்லையே என்று வருந்தியதுண்டு.

கலையில் எல்லாம் சிறந்த கலை வாழ்க்கைக் கலை. அந்தக் கலையைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரிவிக்காமல் இருட்டடிப்புச் செய்து விடுகிறது பள்ளிக்கூடம்.

ஊருக்கு உபதேசம் செய்து விட்டுத் தம் காரியத்தைத் தமக்கு உகந்தபடிப் பார்த்துக் கொள்வது பொதுப்படையாக உலக இயல். ஆனால் டி. கே. சி.யிடம் சொல்லும் செயலும் ஒன்றுபட்டிருந்தன. தம் பேரன்மார் மூவரையும். பேத்தியையும் டி கே சி. பள்ளிக் கூடம் அனுப்பவில்லை. தாமே ஆசிரியராக அவர்களுக்கு ஞான குருவாக இருந்தார்.

தமிழ் ஸ்காலர்களுக்குத் தமிழில் நம்பிக்கையில்லை என்ற தமிழ்ப் பண்டிதர்களுக்கு 'சையன்ஸ் இங்கிலீஷிலா இருக்கிறது? இல்லை. அஸ்ட்ரானமி வானத்தில் இருக்கிறது. ஜியாலஜி பூமிக்குள் இருக்கிறது. பாட்டனி காட்டில் இருக்கிறது. பிஸியாலஜி நம் தேகத்தில் இருக்கிறது. சைக்காலஜி நம் உள்ளத்தில் இருக்கிறது. இங்கிலீஷ் பாசையில் எப்படியிருக்கும்? . . .சையன்ஸ் புத்தகத்தில் இருக்கிறது என்ற மூடபுத்தி ஒழிய வேண்டும். அப்போதுதான் நமது தமிழ்க் கல்வி உருப்படும் எனக் கல்வி பற்றிப் பேசுகிறார். 'தமிழனுக்குத் தமிழே துணை' என்ற எண்ணம் முதலில் வரவேண்டும் என்கிறார்.

03-09-48இல் சென்னையிலிருந்து எழுதிய கடிதத்தில் டி. கே. சி. பள்ளிக் கல்விமீது கொண்டிருந்த கருத்தைத் தெளிவுபடுத்துவதாக அமைகிறது. அக்கடிதத்தில் காணப்படும் செய்திகள் வருமாறு :

> "பள்ளிக் கூடத்தில் குழந்தைகளைக் கொஞ்சம் கருணையோடு நடத்தினால் உடம்பாவது நன்றாய் இருக்கும். பள்ளிக் கூடம் சீராவதற்குமுன் உலகமே பெரும் புரட்சி அடைய வேண்டும். நாளுக்குநாள் எனக்கு என்ன படுகிறதென்றால், உலகத்திலுள்ள மூடக் கொள்கைகளுக்கெல்லாம். வறண்ட வாழ்க்கைக்கெல்லாம். நம்முடைய அழகிய பண்பாட்டை விட்டு ஆடவர். பெண்டிர் சிலர் விலகிப் போவதற்கு எல்லாம் காரணம். பள்ளிக் கூடத்துப் படிப்புத்தான் என்று சொல்கிறார்.
>
> பிள்ளையார் குட்டைக் கண்ணிலே குட்டிக் கொண்டமாதிரி. விஷயம் அல்லாத. விளங்காத பாடங்களைக் குழந்தைகள் உள்ளத்துக்கு புகுத்தி விடுகிறோம். பிறகு சவலை நோய் தான். ஒரு உண்மையும் உள்ளத்தோடு சேர்ந்து ஐக்கியம் ஆவதில்லை"

டி. கே. சி. கொண்டிருந்த கருத்து சிந்திக்கத்தக்கது. இன்றைய நிலையிலும்

அவர் எண்ணிய, கூறிய கல்வி தொடர்பான கருத்துக்களில் சில மாறாமல் அப்படியே இருந்து வருவதைப் பார்க்க முடிகின்றன.

டி. கே. சி. யின் தமிழ்த் தொண்டு

மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும் பொழுதும் டி. கே. சி. தமிழ் மேல் உள்ள நம்பிக்கையை வெளியிடத் தயங்கவில்லை.

16-02-1954இல் காலை 6 மணியளவில் இரசிகமணி டி. கே. சி. இறைவன் திருவடி நிழல் அடைந்தார். அதற்கு முதல் நாள் பிற்பகல் இரண்டு மணியளவில் டாக்டர் சேஷகிரி ராவ் டி. கே. சி.யை நாடி பிடித்துப் பார்த்தார். அப்போது,

> "தாகம் அதிகமாக எடுக்கிறது. நாவறட்சி கடுமையாக உள்ளது. அது சரி 'நாவறட்சி' என்ற தமிழ் வார்த்தை ஆங்கிலத்தில் உண்டா என்று கேட்டவுடன் டாக்டர் இங்கிலீஷ் வார்த்தை தேடிப்பார்ப்பதில் திணறிவிட்டார்"

என்று கூறியுள்ளதிலிருந்து அவர் தமிழ்மீது கொண்டிருந்த காதல் புலனாகிறது. மேலும், '

> 'விவசாயியிடம் பேசுகிற பேச்சிலும், தச்சர்களிடமும், கொல்லர்களிடமும் உறவாடுவதில் கலைச் சொற்கள் கிடைக்கும். இதைச் செய்யாமல் 5ஆவது மாடியில் உட்கார்ந்து கொண்டு கலைச் சொல் தேடினால் எப்படிக் கிடைக்கும்"

என்றார்.

டாக்டர் போனபிறகு இரவு ஒரு மணிக்கு கண்ணைத்திறந்து என் பக்கத்தில் நிற்பது யார் என்று கேட்டார். 'குருக் களையா' என்றும் மீண்டும் 'மேலகரத்து சன்னதி மடத்துக் குருக்களையா' என்று சொல்கையில் 'ஓ, தேசிகர்வாளா' என்றார் டி. கே. சி. இல்லை, குருக்களையா என்றார்கள்.

அதற்கு டி. கே. சி.

> " 'இரண்டும் ஒன்று தான்' எல்லாம் ஒரு பொருட் பன்மொழிதான். 'பூஜை செய்யும் போது குருக்கள், மந்திரம் சொல்லும் போது தேசிகர், தேவாரம் பாடும்போது ஓதுவார், ஆள் ஒருவர் தான், பெயர் தான் வேறு"

என்றார்.

மீண்டும் விழித்து,

> " 'இலக்கண நியதி பாசைக்கு உள்ளேயே இருக்கிறது. இலக்கணப் புத்தகத்தில் இல்லை. 'கல்லெறிந்தான்' என்னும்போது ஒற்றுமிகும். 'காலொடிந்தான்' என்னும் போது ஒற்று மறையும். 'அவன் வந்தானா' என்னும் போது ஒரு உணர்ச்சி. 'அவன் வந்தானோ'

எனும் போது வேறொரு உணர்ச்சி. இந்த மாற்றங்களை பாசையே செய்கிறது. இலக்கணம் செய்வதில்லை"

என்றார்.

"உணர்ச்சியிலிருந்து தினுசு தினுசாக முளைக்கிற ஒவ்வொரு காயலையும், ஒவ்வொரு நிறத்தையும் தமிழ் அப்படியே கையில் எடுத்துப் பிடித்துக் காட்டும். இதர பாசை எதனாலும் அப்படி நிச்சயமாய்க் காட்ட முடியாது"

என்று கடைசியாகச் சொல்லி முடித்தார்.

பரம்பொருளோடு பரம்பொருளாய்க் கலந்து மருவுகிற வேளையிலும் தமிழின் எளிமையையும், அருமையையும் அன்பர்களுக்கு விளக்கிக் காட்டினார்.

இவ்வாறு இரசிகமணி டி. கே. சி. எழுதிய கடிதங்கள் வரலாற்றுக் கருவூலமாக - கலைக்கருவூலமாகத் திகழ்கின்றன. அவர் கடிதங்களின் மூலம் சொல்லிய கருத்துக்கள் என்றென்றைக்கும் ஆழ்ந்து சிந்திக்கக்கூடியவையாக இருக்கின்றன.

□

அ. அறிவு நம்பி
தமிழ்ப் பேராசிரியர்
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி

கந்தவருக்கச் சந்தவெண்பா ஓர் அறிமுகம்

இராமநாதபுரம் சமஸ்தான வித்துவானாகப் பணிபுரிந்த சரவணப் பெருமாள் கவிராயர் இயற்றிய மூன்று சிறு நூல்களின் தொகுப்பு 1878 ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. நூலினுள்

1) கந்தவருக்கச் சந்த வெண்பா
2) மதுரைக் கயற் கண்ணிமாலை
3) அடிமடக்கு ஆசிரிய விருத்தம்

ஆகிய இலக்கியங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் முதலாவதாய கந்தவருக்கச் சந்த வெண்பாவின் முன்னட்டைச் செய்திகள் வருமாறு : பிள்ளையார் சுழியினையடுத்து, வேலு மயிலும் என மட்டும் பொறிக்கப் பெற்றுள்ளது. அக்காலத்தில் 'துணை' என்பது போன்ற பின்னொட்டுகள் தேவையில்லாது சொல்லாட்சிகள் அமைந்திருந்தன போலும்.

அதற்குச் சற்றுக் கீழாக,

இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான்
ம. எா. எா. ஸ்ரீ துவாத்திரிம் சதவதானி
சரவணப் பெருமாள் கவிராயரவர்களியற்றிய
கந்தவருக்கச் சந்தவெண்பா

என்ற வரிகள் காணக்கிடக்கின்றன. நூலை அச்சாக்க உதவியோரைப்பற்றிய குறிப்பாகவும் அச்சுக்கூடம்பற்றிய குறிப்பாகவும் கீழ்க்காணும் வரிகள் முக்ப்பட்டையின் கீழ்ப்புறம் அமைந்துள்ளன.

இஃது
காரைக்கால் ம. எா. எா. ஸ்ரீ
குமாரசாமி செட்டியாரவர்கள்
ஷெ யூர்
ம. எா. எா. ஸ்ரீ மாணிக்க செட்டியாரவர்கள்

ஷெ யூர் ம. எ. எ. ஸ்ரீ
இராமசாமி செட்டியாரிவர்களால்
காரைக்கால்
முகம்மதுஸமதானி என்னு மச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.
ஈசுர ஞு பங்குனி மீ

இந்நூலின் ஆசிரியர் சேதுபதி மேல் விறலிவிடுதூது பாடிய முதலாவது சரவணப் பெருமாளின் பெயரரான இரண்டாவது சரவணப் பெருமாள் கவிராயர் என்று அறிய முடிகின்றது. இந்நூலின்கண் பாயிரம் - 1 வெண்பா + நூல் - 102 வெண்பாக்கள் + வாழி வெண்பா - 1 என 104 வெண்பாக்கள் உள. நூலுக்கு முன்னதாகப் பண்டை நெறிப்படிச் சாத்துக் கவிகள் தென்படுகின்றன. முதலாவது சாத்துக் கவியாக ஆற்றங்கரைச் சமஸ்தானம் ம. எ. எ. ஸ்ரீ கடிகை அங்கமுத்துப் புலவரவர்களியற்றிய அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் இடம் பெறுகிறது. இரண்டாவதாக மேற்படி சமஸ்தானம் சிதம்பர குமாருக் கவிராயரவர்களியற்றிய தாழிசை ஒன்றும், மூன்றாவதாக மேற்படி சமஸ்தானம் தானாபதி சீனிவாச ராயரவர்கள் இயற்றிய கழிநெடில் விருத்தம் ஒன்றும் நான்காவதாக ஷெ சொக்கலிங்கம் பிள்ளை இயற்றிய மேற்படி விருத்தம் ஒன்றும் உள்ளன. தொடர்ந்து வருகின்ற இரண்டு விருத்தங்களில் முதல் விருத்தத்தின் மேற் பகுதியில் இந்நூலியற்றியவரின் கனிட்டராகிய இராமசாமிக் கவிராயரியற்றிய விருத்தம் எனவும் இரண்டாவது பாடலின் மேல் மேற்படி கனிட்டராகிய லட்சுமணப் பெருமாள் கவிராயரியற்றிய மேற்படி விருத்தம் எனவும் சொற்றொடர்கள் காணப் பெறுகின்றன. நிறைவுப் பகுதியில் "இந்நூலியற்றியவரது மாணாக்கராகிய திருமலைராயன் பட்டணம் ம. எ. எ. வேலு பாத்தியாயர் இயற்றிய மேற்படி விருத்தம்" என்ற தலைப்பின் கீழ் ஒரு பாடல் இடம்பெற்றுள்ளது.

இப்பகுதியின் வழியாக நூலியற்றுவோர் தம்மையொத்த புலவர் பெருமக்களிடம், பிற மாந்தர்களிடம் முதலாவதாகவும், தம் குடும்பஞ் சார்ந்தார் அல்லது அவருக்கிணையாவர்களிடம் அடுத்தும் மாணவர்களிடம் அதற்கடுத்தும் சாற்றுக் கவிகள் வாங்கியுள்ளமை புலனாகும். கவிபுனைவோரில் புலவர், கவிராயர் போன்ற பின்னொட்டுகளைப் பாவலர்கள் பெற்றிருக்கச் சேனைக்குரியவர் 'தானாபதி சீனிவாசராயர்' என 'ராயர்' பின்னொட்டுடன் காணப்பெறுவது குறிக்கத்தக்கது. படையாளி படைப்பாளியாகவும் உள்ளார்.

இவர்களின் பாடல்கள் புலப்படுத்தும் செய்திகள் வருமாறு :

1. இராமநாதபுரம் என்ற பெயரின் சுருக்கம் முகவை என்பதாம்.

2. இராமநாதபுரம் மன்னரின் பெயர் சொக்கலிங்க துரை என்பது. அவரே இந்நூலை எழுதப் பணித்தவர்.

3. இந்நூல் முருகப் பெருமானைப் பாடிப் பரவிட உருவாக்கப் பெற்றது.

4. வருக்கச் சந்த வெண்பா எனும் புதுவகை இலக்கியமாக இந்நூல் வடிவமைக்கப் பெற்றுளது.

5. சரவணப் பெருமாள் சரசுவதியனையவர் எனப் புகழத்தக்க ஆற்றலுடையவர்.

சில புகழுரைகள் வருமாறு :

i. அரிய மாங்கனிக்காகக் கந்தன் பாரைச் சுற்றிவர, மூத்தவரான பிள்ளையாரோ வேறு வழியில் அக்கனி பெற முருகனுக்கு வசையேற்பட்டது. 'அது இன்று அகன்றது' என முருகன் மகிழ்வு கொள்ளுமாறு பாற்கடலிலிருந்து எழுந்த மதியம் போல் இந்நூல் இலங்குகிறது.

ii. "பெருமை வருக்கச் சந்தவெண்பாவைக் கேட்ட செவி பின்னரும்வே
றொரு கவிஞர் தங்கவிதை கேட்குமோ?"

iii. ஆறுபடையானைப் பற்றிய சரவணப் பெருமாளின் கவிகேட்டு, அதைப் போல் நம்மால் விள்ளமுடியாதெனக் கலங்கி, வேல் கொண்டான் மலையிலிருந்து இறங்கிவிட, 'கள்ளவிழ் வெண்கமல மகள்' வெட்கமுற்று ஆகம் விளம்பினாள்.

கந்த வருக்கம் என்ற சொல்லிற்கு வாசனைப் பொருள்கள் எனப் பேரகராதி விளக்கந் தரும். பிற அகராதிகளும் 'கந்தவர்க்கமும் கிளர் மணப் புகையும்' (திருவாத. புரா. திருப்பெருந். 70) எனும் இலக்கிய வரியைச் சுட்டும். இந்த எடுத்துக்காட்டைச் சுட்டி வாசனைப் பொருட்கள் என்ற பொருண்மையைப் பேசும்.

'வருக்கம் என்பதன் பொருளமையுமாறு முதலில் வரும் பாடல்கள் அகர வரிசையிலும், பின்னர் க, கா, கி, கீ - என மெய்யெழுத்து வருக்கங்களிலும் அமைந்துள்ளன. வெண்பாவில் கந்தனின் அருமை பெருமைகளை மேற் குறித்தாங்கு வருக்க முறையில் பாடப் பெற்றமையால் கந்த வருக்கச் சந்த வெண்பா என்ற தலைப்பு மிகப் பொருந்துவதாகின்றது.

இந்நூலோ கந்தனின் அருமை பெருமையைப் பேசும் வண்ண வெண்பாக்களின் தொகுப்பு என்ற பொருள் புலப்படுமாறு 'கந்த வருக்கச் சந்தவெண்பா' என்ற தலைப்பினைப் பெற்றுள்ளது. பாயிரத்தில் 'வேள் மேல் வருக்கச் சந்தத்தை வெண்பா' என வருதலான் கந்தவேள்மீது வருக்கச் சந்த வெண்பா பாடுவது நூலாசிரியர் நோக்கமென ஓரலாம்.

பாயிரத்தில் வேள்மாலைப் பாடப்புகுவதை ஆசிரியர் குறித்துக் காட்டுகிறார். மங்கையொருத்தியின் மையல் தீர மயில்வாகனனை நோக்கிப் பாடப்படுவதாக இந்நூலின் நோக்கம் அமைகின்றது.

'நூல்' என்ற உட்தலைப்பின் கீழ் இடம்பெறும் முதலாவது பாடல் வருமாறு :

"அங்கசனம்பாலு மருந்தாய்க்கு மட்டுமா மங்கைக்
கங்கசனம்பாலு மருந்தாய்க்கு மட்டுஞ் - சுங்கையுண்டா
கொஞ்சவளையாவுகுகந்த கொஞ்சுகுயிலால் வருந்தி
அஞ்சவளையாள் கடம்பையா" (1)

அந்தப் பெண் மனக்கவலை கொண்டு உருகுவதாகவும் அவளின் துயர் தீர்க்க ஆறுமுகவனே அருள்தர வேண்டுமெனவும் பாடல்களின் கருத்துகள் தொடர்கின்றன. ஒரே சொல்லாட்சிகளை மீளமீளப் பெய்து வெவ்வேறு பொருண்மையில் பயிலவிட்டிருப்பது இப்படைப்பாளியின் திறப்பாட்டை நிறுவும். பு ராண உறவைப் பாடவருங்கால்,

"உள்ளமுதலைப் பறிப்போர்க் குள்ளமுதலே யானை
உள்ள முதலைப் பகைதீர்த்தோன் மருகா"

என்பன போன்ற வரிகளைச் சுவைத்து மகிழமுடிகிறது. பல்வேறு இலக்கியச் செய்திகளையும், செவிவழிச் செய்திகளையும் இறக்குமதி செய்திருக்கும் இப்பாடல்களில் பலவற்றை அகராதிகள், பேரகராதி போன்றவற்றின் துணை கொண்டுதான் முழுமையாக உணரமுடியும்.

"ஔவையலுக் கொன்பானை யாண்டான் மருக நித்தம்
ஔவையலுக்குந் தேற்றி"

எனவரும் பாடலில் 'வாலகந்தசாமி' என்ற சொல்லாட்சி காணப்பெறுகிறது. 'பால' என்பதன் மாற்றுச் சொல்லாக 'வால' என்பது இன்றும் சிலருடைய பெயர்களில் இடம் பெற்றிருப்பது உடன் வைத்து எண்ணத்தக்கது.

"கும்பனுக்குஞ் சங்கரனுக்குங் குருவே பிள்ளைமதிக்
கும்பனுக்குஞ் சங்குவரிக்கும் குயிலுக் - கும்பயந்தேன்
தென்றலுக்கு மைங்கணைச் சிலம்பனுக்கு மென்செயச்சொல்
என்றலுக்கு மங்கை நித்தமே"

என்ற பாடலில் முருகன் குருநாதராய் நின்றமையும், மன்மதன் கணையால் வாடும் மங்கை வாடி நின்றமையும் ஒருசேரப் புலப்படுத்தப்படுகின்றன. இதுபோன்ற இருபத்து நான்கு பாடல்களில் பல்வேறு செய்திகளைப் பரிமாறுகின்றார் சரவணப் பெருமாள் கவிராயர்.

அதற்குப் பின் பாடல்கள் 'வெறிவிலக்கல்' என்ற தலைப்பில் இடம் பெறுகின்றன. இப்பாடல்களிலும் முருகன் பெருமைகள் புதிய முறையில் பேசப் பெறுகின்றன.

"- நல்லறத்தைக்
காதுவரை நந்தவொரு காலயிலெறிந்த முரு
காது வரை நந்தன் மருகா"

என்ற வரிகள் ஊன்றிக் கவனிக்கத்தக்கன. 'முருகா' என்ற சொல்லை ஈரடிகளில் வருமாறு பிரித்துப் போட்டு, எதுகை மோனையில் சிறக்கும் நூலாசிரியர் துவரை நந்தன் என்று புதுச் சொல்லாட்சி தருகிறார். கோயம்புத்தூர் என்பது கோவையெனச் சுருங்குமாப்போல் துவராகபுரி என்பது துவரையானமை எண்ணிக் களிக்கப்பாலது. பெரும்பாலான பாடல்களின் முதலிரு அடிகளில் ஒரு சொல்லோ சொற்றொடரோ மீளமீள வந்து பொருண்மையில் மட்டும் மாறுபட்டு நிற்பதால் படிப்பாருக்குப் பொருளறியும் வேலையும் மனவுவகையும் வாய்க்கப் பெறுகின்றன. நூலெழுதப்பட்ட காலத்தில் இவை உரை தேவையில்லாது உணரப் பெற்றிருக்கக் கூடும். சொற்களில் சில இனம் புரியாமல் உணரப்பெறும் ஆபத்தும் உளது.

ஒரு பதச்சோறு :-

"போதகங்கை கொண்டுரித்துப் பூண்டார்க்குரைத்த மறைப்
போதகங்கையீன்ற புதல்வகுக - நாதகங்கை
ஏறுதிருமால்மருக வேழைமயலாலுதக
ஆறுதிருமால் விழியினாள்" (5)

ஒரே வரிக்குள்ளாகச் சொல்லை மீளப் பெய்து, சித்தாடும் போக்கினால் படைப்பாளியின் சதுரப்பாடு தெற்றெனப் புலனாகிறது.

"நூறுதலையா சுரனை நூறுதலை வேலவருள்
ஆறுதலை யாறுதலையாய்"

எனவரும் வரிகளில் வெவ்வேறு பொருள்கள் தொனிக்க ஒரே சொல் அடுத்தடுத்து வந்து இன்பம் வளர்ப்பதைப் படிப்பார் உணரவியலும்.

எழுபத்திரண்டு பாக்களில் மேற்குறித்தவாறு மங்கையொருத்தியின் மையல் துயர், முருகனின் அருமைகள் ஆகியவற்றை விரவிச் சரவணப் பெருமாள் கவிராயர் இந்நூலை உருவாக்கியுள்ளார். எழுபத்தி மூன்றாவது பாடல் வாழி பாடும் வாழ்த்துப் பாடலாக அமைக்கப் பெற்றுள்ளது. இஃது அற்றைநாள் மரபென்பது உணரப்பெறுகிறது.

"வாழியயிராணி பெற்ற வாரணமான் வள்ளிமயில்
வாழியயிலார் கைம்மலர் வாழி – வாழி பொற்றாள்
வாழிவாழி கோழிதோகை வாழிவாழி வாகுவீரர்
வாழிவாழி சோதிவேலவன்"

என்ற நிறைவுப் பாடலில் கூடக் கவிராயரின் வித்தகம் புலனாம்.

சிற்றிலக்கியங்கள் பலவுருக்களைப் பெற்றுப் பண்டைக் காலத்தில் புனையப் பெற்றுள்ளன. முற்றிலும் புதிதாகப் பாடவேண்டும் என்ற வேணவா கவிஞர்களிடையே பேரளவில் இருந்தமையால்தான் பல்வேறு இலக்கியங்கள் பிறப்பெடுத்துள்ளன. புலவர்கள் மத்தியில் ஏற்பட்ட 'அறிவுப் போட்டி' அடிப்படையானது. புலமைக் காய்ச்சல் அல்லது போட்டியினாலேற்பட்ட பொறாமை போன்றவை எழுந்தனவா என்ற வினாவிற்குப் போதிய விடை கிடைக்கவில்லை. ஆனால் புலவர்களின் அறிவுக் கூர்மையும் உழைப்பும் ஒரு சேர அவர்களின் படைப்புகளில் காணப்பெறுவது என்னவோ உண்மை.

கம்பர் காலத்திலிருந்தே புலவர்களின் ஆற்றலைத் தூண்டிவிடப் புரவலர்கள் இருந்துள்ளமை பதிவு செய்யப் பெற்றுள்ளது. குறிப்பாகப் பல்வேறு மன்னர் பெருமக்கள் புலமையை மதிப்பதையும் புலவர்களை ஆதரிப்பதையும் அன்றாடத் தொழிலாகவே கொண்டிருந்தனர். மன்னர்களின் சிற்றின்ப வேட்கைக்கு உகந்ததாகச் சில 'கிளுகிளுப்பு' இலக்கியங்களும் தோன்றியுள்ளன. உடையார் முன் இல்லாராய் நின்ற போதிலும் கூட அவ்விலக்கியங்களிலும் புலவர் பெருமக்கள் தம் முத்திரைகளைப் பதிக்காமற் போகவில்லை. எனவே, ஆள்வாரின் ஆதரவும், எழுதுவாரின் தேவையும் ஒருங்கிணைந்த நிலையில் பல்வேறு சிறுசிறு இலக்கியங்கள் வடிவு கொண்டிருக்கின்றன. சரவணப் பெருமாள் கவிராயர் 'கந்த வருக்கச் சந்த வெண்பா'வை எழுதுமாறு தூண்டியவர் சொக்கலிங்க துரை என்னும் இராமநாதபுர சேதுபதி என்பது நினைவிற்குரியது. 'சமஸ்தானப் புலவர்' என்ற அடைமொழியும் கவனிக்கப்பெற வேண்டியது. அரசவையிலேயே புலவர்கட்குத் தனியிடம் தரப்பெற்று அவர்தம் அறிவுக்கு மரியாதை தரப் பெற்றமையைப் பிற வரலாறுகளும் எடுத்துரைக்கின்றன. சரவணப் பெருமாள் கவிராயரின் மூன்று நூல்களும் ஒரே தொகுப்பில் உள. ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையைச் சார்ந்து இலங்கும்.

கவிராயரின் புலமைத் திறனை இவை நன்கு சுட்டுகின்றன. தம் புலமையாற்றலை வெளிக் காட்டவே இவை போன்ற இலக்கியங்களைப் படைத்துத் தம் நுண்மாண் நுழைபுலத்தைப் புலப்படுத்தினர் புலவர் பெருமக்கள். எவ்வாறாயினும் 'கந்தவருக்கச் சந்த வெண்பா' என்ற தலைப்பில் முற்றிலும் புதிய முறையில், சரவணப் பெருமாள் கவிராயர் தம் மதிநுட்பங் கலந்து தந்துள்ள இந்நூல் படிக்கவும், இன்புறவும், தமிழையறியவும் பயன்படுகிறது என்பது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

☐

எஸ். கதிர்வேலு
தருக்கவியல் விரிவுரையாளர் (தே. நி.)
பெரியார் ஈ. வெ. ரா. கல்லூரி
திருச்சிராப்பள்ளி

தமிழில் காகிதக் கையெழுத்து இதழ்கள் ஒரு கண்ணோட்டம்

அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டின் கடைசி இரண்டு (Decades) பத்தாண்டுகளைச் சார்ந்த இக்கட்டுரையாளருக்குக் கிடைக்கப் பெற்ற அறுபதுக்கு மேற்பட்ட காகிதக் கையெழுத்து இதழ்கள் குறித்த தகவலை அறிவிப்பது இக்கட்டுரையாளரின் தலையாய நோக்கமாகும். இக்கட்டுரையின் முதல் பகுதி காகிதம்பற்றி வரலாற்று நோக்கில் ஆராயப்படுகிறது. இரண்டாம் பகுதி மேலே கூறப்பட்ட தலையாய நோக்கத்தைக் கூற விழைகிறது. மேலும் இதழ் வெளி வந்த ஊர் மாவட்டம், ஆசிரியரின் பெயர் ஆகியனவும் தரப்பட்டுள்ளன. காகிதக் கையெழுத்து இதழாக வெளிவந்து சாதனையும். விருதும் பெற்ற சில சிறப்பு இதழ்களும் ஆராயப்பட்டுள்ளன. 1977 முதல் 1997 வரை வெளிவந்த இதழ்களை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

SECTION - 1

1: 01 PAPER

The word is derived from the French papier. Through Latin from Greek papyros.

Papyrus, the paper reed, cyperus papyrus in ancient times cultivated in delta of Nile in Egypt, where it was used for various purposes and expecially for as a writing material. This material we call it as paper.

1: 02 PAPER MANUFACTURE

Paper is the general term used for the substance commonly used for writing or printing upon or for wrapping : All types of paper are made from bulps containing vegetable, mineral or man - made fibres, that form of matted or felted sheet on a screen when moisture is removed. This is how the paper was manufactured in the olden days.

1 : 03 HISTORICAL DEVELOPMENT

The paper making began from AD 105 when "**Tsai Lun**" a chinese court Official, developed the idea of forming a sheet of paper from the macerated bark of trees, hemp waste, old rags and fish nets. Prior to the invention of paper, ancient peoples employed many different substances for recording these thoughts among them papyrus, parchment, and vellum, cloth, bark, clay tablets and stone.

For more than 500 years the art of paper making remained in china. At the beginning of the 7th century AD the art of paper making spread into Japan. In AD 751 the Arabs occupying samarkand were attacked by the chinese. The Arab governor by capturing some skilled paper making workers learnt the art of paper making. eg. 9th century Arabic manuscripts. Following the caravan routes to Baghdad and Damascus the art of paper making reached, Egypt in the 10th Century. In the middle of the century the art of paper making reached, "Spain", "Italy".

1 : 04 PAPER MILLS

It appeared in the Italy in 1276, and in the France in 1348.

In the second half of the 14th century the use of paper for literary purpose had become well established in all over western Europe.

Paper was used in England at the beginning of the 14th century, but not until late in the 15th century did John Tate the first English paper manufactures, set up a mill in Hertford in U. K.

Ground wood paper made from mechanical and chemical wood pulps, is claimed to have been produced in the mill of, I. Augustus. Stan Wood and William Tower in Maine in 1863 Four years later a ground wood mill was established in curtisville. In these mills paper was produced in a larger scale.

1. 05 : INTRODUCTION OF PRINTING

Early printing books (the first to be illustrated was ulrich Boner's Der Edestein printed in 1461 by Albrecht pfister in Bamberg, Germany) with was full of illustrations not so much for the sake of scientific accuracy as to produce books that would be attractive to the larger public that printing made possible. It is the result of Renaissance of the 14th century. Presently its development and progress is varied in nature.

1. 06 : WRITING FLUID OR INK

Writing ink usually contain a colourant.

Soluable in water. They Contain small amounts of tannic or gallic acid for coloured inks various water soluable dyes are used.

Most of the inks are prepared from dye substances. This is used commonly as the writing fluid or ink. The dye substance used for various inks will be different depending on its colour. But the ink used in the general elections, which is called as indelible ink contains silver nitrate as main chemical constituent.

1 : 07 PRINTING

It is the mechanical multiplication of text, pictures or designs by putting printing ink on paper or some other suitably receptive surface. Broadly speaking, printing encompasses all production and use of printed matter. There are three main methods of printing. 1) letter press, in which the image is transferred from a printing surface raised slightly above the body of the type or printing plate. 2) intaglio, from a design engraved below the surface of the printing plate, and 3) offset lithography from a fit surface.

Letter press, which was used by the first European printers in the 15th century, is still the commonest method in printing technology. The perview of this paper is only to highlight the printing as a technology.

1 : 08 PRINTING PRESS

It is the machine in which type and illustration images are transferred to paper by means of printing ink. Printing presses can be classified into two major groups - 1) flat bed and 2) rotary - according to whether the form used for printing has a flat or curved surface. Flat bed press can be further subdivided as platen or cylinder according to whether (flate plate) or a cylinder is used for impressing the paper against the printing surface.

The scope of this paper restricts only with a description of the printing press.

பகுதி - 2

2 : I இலக்கியம்

இந்திய நாடு ஒரு துணைக் கண்டம். இந்தியாவில் பல மொழிகள். ஒவ்வொரு மொழிக்கும் ஒரு சீரிய வரலாறும் பண்பாடும் உண்டு. மொழியியல் விளக்கப்படி இயற்றமிழ் அகச் சிந்தனைகளையும், இசைத் தமிழ் ஆன்மாவின் இயல்பினையும் நாடகத் தமிழ் உடலின் மெய்ப்பாடுகளையும் குறிப்பிட நிற்கின்றன. மனிதனின் சிந்தனையை வளப்படுத்தி வாழ்வு செழிக்க வழி வகை செய்கிறது. உணர்வுகளைச் செம்மைப்படுத்தவும் மனித ஆற்றல் வளம் பெறவும் துணை புரிவது இசைத்தமிழ். முத்தமிழின் மூன்றாம் பகுதியான நாடகத் தமிழ் சிறப்பு மிக்கது. இயற்றமிழையும்

இசைத் தமிழையும் தன்னுள் கொண்டு உள்ளத்தால் மக்களிடம் நேரடித் தாக்கம் கொண்டது.

உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழி மிகத் தொன்மை வாய்ந்தது. மனித வளத்தை மேம்படுத்தி, மனித நேயத்தை வளர்க்கின்ற இலக்கியப் படைப்புகள் நிறைந்தது தமிழ். நன்மை பயப்பனவற்றைத் தன் மக்களுக்குத் தந்திடும் காரணத்தால் ஒரு நாட்டை நன்னாடு எனக் கூறுகிறோம். அதுபோலப் படைப்பாளி இலக்கியம் என்னும் நன்மையினைப் பயக்கின்றான்.

2 : 2 கையெழுத்து இதழ்களின் இலக்கியப்பணி

கட்டுரையில் விவரிக்கப்பட்ட கையெழுத்து இதழ்கள் தங்களின் பங்கிற்கு இலக்கியப்பணி ஆற்றின. இவ்விதழ்களில் இலக்கியப் படைப்புகளாகக் கவிதைகள், நூல் விமர்சனங்கள், திரை விமர்சனக் கதைகள், ஆன்மீக எழுப்பல், அரசியல் திறனாய்வு, கொள்கை முழக்கம் ஆகியன வெளிவந்தன.

2 : 3 தமிழில் கையெழுத்து இதழ்கள்

தமிழில் முதல் கையெழுத்து இதழ் கி. பி. 1870களில் இலங்கையில் தொடங்கியது. ஒரு நூற்றாண்டு வரை கையெழுத்து இதழ்கள் ஆர்வத்தின் வெளிப்பாடாகவும், இலக்கியம் படைக்க வேண்டும் என்ற வேகத்தாலும் கொண்டுவரப்பட்டன.

கையால் தாளில் ஒன்று அல்லது இரண்டு பிரதிகள் மட்டுமே எழுதப்பட்டு நெருங்கிய நட்பு உள்ளங்களிடம் தனிச் சுற்றுக்கு Private Circulation மட்டும் விடப்பட்டவை கையெழுத்து இதழ்கள் ஆகும். இனங்கள் தமிழன்பர்களின் இலக்கிய வேட்கைக்கு ஊற்றுக்களாக விளங்கி இலக்கியத் தாகத்திற்கு வெளிப்படையாக அமைந்தன. இதன் நிலைக்களனாகத் தமிழ்ச் சமுதாயத்தின் தமிழ் உணர்வுமிக்க தமிழர்கள் விளங்கினர்.

தமிழகத்தின் பல பகுதிகளிலும், தமிழகத்துக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக வளாகத்திலும், தமிழர் வாழும் வெளி மாநிலங்களிலும், வெளி நாட்டிலும் கையெழுத்து இதழின் பிரதிகளின் இலக்கிய உலா நடந்தது. 1977 முதல் 1997 வரை பங்களிப்புச் செய்தவற்றில் 60 இதழ்களின் கண்ணோட்டமே இவ்ஆய்வு.

தரமான இலக்கிய முயற்சிக்கு வடிவம், அமைப்பு என்கிற வரையறைகள் முதன்மை அல்ல ; ஆர்வமும், ஊக்கமும், தொடர் முயற்சியும் முக்கியம் எனப் பறைசாற்றியவாறு கையெழுத்து இதழ்கள் புதிய வீச்சாகத் தமிழகத்தில் பவனி வந்தன.

இக்கால கட்டத்தில் கையெழுத்து இதழ்கள் முழுவதும் கையெழுத்து இதழாகவும், தட்டச்சு செய்யப்பட்ட இதழாகவும், கையால் எழுதப்பெற்று சுருள் அச்சுப் பிரதிகளாகவும், நகல் அச்சுப் பிரதிகளாகவும் வெளிவந்துள்ளன. கையெழுத்துப் பிரதிகள் கையெழுத்துப்பிரதி இதழாகவே நிலைபெற்றவையும் உண்டு. படைப்பிலக்கியத்தில் உச்ச உயரிய (Sumum Bonum) வெளிப்பாடான அச்சு இயந்திரம் ஏறிய இதழாகவும் சில கையெழுத்து இதழ்கள் வெளிவந்தன. இவ்வகை வெளியீடுகள் சில நின்று போனதும் உண்டு.

இங்ஙனம் எண்ணற்ற கையெழுத்து இதழ்கள் கையெழுத்தில் இலக்கியம் படைத்தன. இவைகளை முறைப்படுத்தித் திரட்டி ஆய்வு செய்யவும், திறனாய்வு செய்து தொகுக்கவும், பாதுகாக்கவும் வேண்டியது தமிழ்ச் சமுதாயத்தின் பொறுப்பு ஆகும்.

2 : 4 தமிழில் காகிதக் கையெழுத்து இதழ்கள்

தமிழ் மிகவும் தொன்மையான மொழி; எத்தகைய செய்தியானாலும் வெளியிடும் ஆற்றல் பெற்ற மொழி. தமிழில் 1977 முதல் 1997 வரை வெளிவந்துள்ள காகிதத்தில் எழுதப்பட்ட தமிழ் இதழ்கள் குறித்த விவர அறிவிப்பு வருமாறு :

தமிழில் கையெழுத்து இதழ்கள் 1977 முதல் 1997 வரை வெளிவந்த ஊர்கள்

தமிழில் கையெழுத்து இதழ்கள் பின்வரும் ஊர்களிலிருந்து வெளி வந்தது கண்டறியப்பட்டது.

விசயபுரம் வடக்கு, செல்லூர், சூலேஸ்வரன்பட்டி, நாகர்கோவில், நாச்சியார் கோவில், படந்தாளுமூடு, தொப்பம்பட்டி, பூதப்பாண்டி, ஆரல்வாய்மொழி, வந்தவாசி, விழுப்புரம், பனங்காளை, இரையுமன்துறை, செங்குன்றம், மதுரை, ஆவத்திபாளையம், வெல்லமடம், குலசேகரம், மேல்பட்டி, கே. சாத்தனூர், திருமங்கலம், தேவகோட்டை, அம்பூர், திருச்சிராப்பள்ளி, அடையாறு, பேரணாம்பேட், சிதம்பரம், திருப்பரங்குன்றம், திருவானைக்காவல், அனிக்குறிச்சி, மணப்பாறை, வல்லம், வடகரை, ராமேஸ்வரம், திருப்பத்தூர், சிருதலைப்பூண்டி

இவ்வூர்கள் தமிழ் நாட்டின் பின் வரும் மாவட்டங்களைச் சார்ந்தன.

புதுக்கோட்டை, தஞ்சை, கோவை, கன்னியாகுமரி, வடஆற்காடு, தென்ஆற்காடு, சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம்.

தமிழ் அன்பர்கள் தாராவி, செம்பூர், பம்பாய், ராபர்சன்பேட் - கர்நாடகம், புதுச்சேரி மற்றும் ஃபிரான்ஸ் ஆகிய இடங்களிலிருந்தும் தமிழில் கையெழுத்து இதழ்கள் வெளியிட்டனர்.

2 : 5 1977 முதல் 1997 வரை தமிழில் கையெழுத்து இதழ்கள் நடத்திய அன்பர்கள்

மக்களின் சிந்தனை வெளிப்பாடாக இலக்கியம் முகிழ்த்தது. அதன் ஒரு ஊடகமாக இதழ்கள் வெளிவந்தன. இவ்விதழ்களைப் பின்வரும் தமிழ் அன்பர்கள் வெளிக் கொணர்ந்தார்கள்.

திருவாளர்கள் எம். எஸ். கோவிந்தராசன், கோமகன், ஓவியர் கானரசிவா, நசன், பி. விக்டர் வீரமணி, த. சிந்து குமார், கி. பாக்கிய

சாமி, சதீஸ் சிஸ்ரோ, வா. மு. கோமு, அந்திசத்தியன், சீனிவாசன், பி. எஸ். சிவகுமார், கே. ஜெமல் அகமது, லெ. னா. ராமசாமி, கலைச்செல்வன், வி. சாகர், மு. கி. பிரேம் குமார், எம். என். வடிவேலு, வண்ணை சிவா, அசுரன், ஆரணி, விளைலாசர், மோ. எட்வின் டேனியல், எம். பி. வெங்கடேஸ்வரன், பொறி. அமலன், வன கைதிநேசன், ப. சர்மிளா, ஆம்பூர் சலோ, சுரா இராம கிருட்டிணன், வே. சரவணன், ஜெம். சீனிவாசன், பரமேஸ்வரன், அழகிய பெரியவன், ப. நந்த கோபால், புதுவை தமிழ் நெஞ்சன், மே. மணிகண்டன், சசி விஸ்வசந்திரன், கவிப்பித்தன், இரா. விஸ்வேஸ்வர், பிரகதீஸ்வரன், மு. செந்தில் குமார், துளி துவக்கம் அனபுச் செல்வன், ப. மோகன் தாசு, ஆ. சி. சின்னப்பா, எஸ். சாமிஜி, மேகவண்ணன், மா. முத்துக் குமரன், ஜே. அன்புமணி, சூசைநாதன், கே. ஜெகநாதன், தி. அறிவின், இரா. உதய குமார், முகில்.

2 : 6 1977 முதல் 1997 வரை வெளிவந்த தமிழ்க் கையெழுத்து இதழ்களில் செய்திகள்

1977 தாழம்பு	:	இது 1983 முதல் மாதம் ஒரு இதழாக வெளி வந்தது. 1985ஆம் ஆண்டு வெளிவந்த 100ஆவது இதழ் மட்டும் அச்சுப் பிரதியாக வெளிவந்தது.
1982 சிதறல்	:	இது 1983 முதல் கையெழுத்து உருளச்சு நகல் இதழாக வெளிவந்தது.
1985 பாரதி	:	01-01-1986 முதல் தட்டச்சுப் பிரதி இதழாக வெளிவந்தது. 1992ஆம் ஆண்டு முதல் அச்சுப் பிரதியாக வெளிவந்துள்ளது.
1985 விடுதலைப் பறவை	:	கையெழுத்துப் பிரதி உருளச்சு நகலாக வெளிவந்தது. 1991ஆம் ஆண்டு முதல் பெயர் 'சிற்றிதழ்ச் செய்தி' ஆக மாற்றப்பட்டது. 1991ஆம் ஆண்டு முதல் அச்சுப் பிரதியாக வெளிவந்தது.
1985 மலர் மணம்	:	கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.
1985 சீறும் சிறுத்தை	:	1988 கையெழுத்து நகல் பிரதி. 1993 முதல் அச்சுப் பிரதியாக வெளிவந்தது.
1985 பாரி மலர்	:	கையெழுத்து நகல் இதழாக வெளிவந்தது.
1985 பைரவி	:	கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.

1987 சிந்தனைப் பூக்கள்	:	1988 முதல் கையெழுத்து நகல் இதழாக வெளிவந்தது.
1988 தமிழ் மலர்	:	கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.
1988 ஊன்று கோல்	:	1988 முதல் தட்டச்சு உருளச்சு இதழாக வெளிவந்தது. 1989 மே முதல் அச்சு பிரதியாக வெளிவந்தது. தற்போது வருவது இல்லை.
1988 நிலவு	:	கையெழுத்து இதழாக வெளிவந்தது.
1988 வண்டு	:	கையெழுத்துப் பிரதியாக வெளிவந்தது.
1989 இதய மலர்	:	கையெழுத்துப் பிரதி நகல் இதழாக வெளிவந்தது.
1989 குமரித் தென்றல்	:	கையெழுத்து. தட்டச்சு கலந்த இதழாக வெளிவந்தது.
1989 பூங்குயில்	:	கையெழுத்து இதழாக வெளி வந்து 1995 முதல் அச்சுப் பிரதியாக வெளிவந்தது.
1990 மனிதம்	:	நகலாக அச்சு இதழாக மார்ச்சு 1990இல் வெளிவந்தது.
1990 கிழக்கு	:	கையெழுத்து நகலாக இதழாக வெளிவந்தது.
1991 தமிழோசை வளம்	:	கையெழுத்து இதழாக வெளிவந்தது.
1991 நம் நண்பன்	:	பிரதி கையெழுத்து இதழாக வெளிவந்தது.
1991 மலர் விழி	:	கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.
1992 புஷ்பம்	:	கையெழுத்துப் பிரதி இதழாக வெளி வந்தது.
1992 இலக்கியா	:	கையெழுத்துப் பிரதி இதழாக வெளி வந்தது.
1993 நெசவு	:	1996 வரை கையெழுத்து நகல் 1997 அச்சுப் பிரதியாக வெளிவந்தது.
1993 பூச்சரம்	:	கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.
1993 தேனருவி	:	1997 முதல் அச்சுப் பிரதியாக வெளிவந்தது.
1993 தீவட்டி	:	1998 முதல் அச்சுப் பிரதியாக வெளிவந்தது.
1994 விடிவு	:	கையெழுத்து நகல் இதழாக வெளிவந்தது.
1995 தமிழர் முழக்கம்	:	3ஆவது இதழ் தட்டச்சாக வெளிவந்தது. 1996 முதல் அச்சுப் பிரதி இதழாக வெளிவந்தது.

1995 சிறை : 1995 முதல் 1996 சனவரி வரை கையெழுத்து இதழாக வெளிவந்தது. 1997 முதல் அச்சுப் பிரதி இதழாக வெளிவந்தது.

1995 சுருதி : அரசு கலைக் கல்லூரி காரைக்குடி மாணவர்கட்காக வெளிவந்தது. கையெழுத்து நகலாக வெளிவந்தது.

1995 வெண் தாமரை : முதல் 5 இதழ்கள் கையெழுத்து நகலாக வெளிவந்தது. 6ஆம் இதழ் முதல் 1996ஆம் ஆண்டு முதல் அச்சுப் பிரதியாக வெளிவந்தது.

1995 சிந்து : கையெழுத்து நகலாக வெளிவந்தது.

1995 உங்கள் சுடர் ஒளி : கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.

1995 சாரல் : கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.

1995 நாம் : கையெழுத்துப் பிரதி நகல் இதழாக வெளிவந்தது.

1997 முதல அச்சுப் பிரதியாக வெளிவந்தது.

1995 விடிவெள்ளி : கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.

1995 நிழல் : 2ஆவது இதழ் கையெழுத்து நகல் இதழாக வெளிவந்தது. 3ஆம் இதழ் அச்சுப் பிரதியாக வெளிவந்தது. இதன் பிறகு வெளியீடு நின்றது.

1995 மனிதம் : 1996ஆம் ஆண்டுக்குப் பிறகு வெளிவருவது இல்லை.

1996 சாப்பறை : கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.

1995 புதிய தமிழன் : கையெழுத்து நகல் அச்சு இதழாக வெளிவந்தது.

1996 எண்ணம் : கையெழுத்து நகல் அச்சு இதழாக வெளிவந்தது. குறியீடு வடிவெழுத்து அமைப்பு முறையைக் கொண்டு வெளிவந்தது.

1996 பல்வெளி : கையெழுத்து நகல் இதழாக வெளிவந்தது.

1996 சொல் : கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.

1996 தண்டோரா : கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.

1996 கவிக் காவிரி	:	4 இதழ்கள் கையெழுத்து நகலாக வெளிவந்தது. 5ஆம் இதழ் நவம்பர் 1996 முதல் அச்சுப் பிரதி இதழாக வெளிவந்தது. 1999 ஆகஸ்டில் 16ஆவது இதழ் வெளிவந்தது.
1996 ஒளி நெறி	:	முதல் இதழ் கையெழுத்துப் பிரதியாகவும் இரண்டாவது இதழ் முதல் நகலாகவும் வந்தது.
1997 புதிய விடியல்	:	1998 முதல் அச்சுப் பிரதியாக வெளிவந்தது.
1997 சங்கமம்	:	கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.
1997 கவித் துளி	:	கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.
1997 மின்னல்	:	கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.
1997 தலித் உரிமைக் குரல்	:	1998க்கு முன்பு வரை தட்டச்சுப் பிரதியாக வெளிவந்தது. இதன் பிறகு அச்சுப் பிரதியாக வெளிவந்தது.
1997 கரவொலி	:	கையெழுத்து நகலாக வெளிவந்தது. 1997 முதல் அச்சுப் பிரதியாக வெளிவந்தது.
1997 தமிழ் மொழி	:	கையெழுத்து, தட்டச்சு கலந்த இதழாக வெளிவந்தது.
1997 பிரகடனம்	:	கையெழுத்து நகலாக வெளிவந்தது. 1997 ஆகஸ்டு முதல் அச்சுப் பிரதியாக வெளிவந்தது.
1997 அறிவொலி	:	தி. அறிவின், அண்ணாநகர், கையெழுத்து நகலாக வெளிவந்தது.
1997 பாரத தீபம்	:	கையெழுத்து, தட்டச்சு நகல் இதழாக வெளிவந்தது.
1997 வான்மதி	:	கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது. முதல் இதழ் கையெழுத்து நகலாக வெளிவந்தது. இரண்டாம் இதழ் அச்சுப் பிரதியாக வெளிவந்தது. நான்கு இதழ்கட்குப் பிறகு வெளிவரவில்லை. 1998 முதல் அச்சுப் பிரதியாகச் சென்னையிலிருந்து வெளிவந்தது.
1997 உழவு	:	கையெழுத்துப் பிரதி இதழாக வெளிவந்தது.

2 : 7 சிறப்புக் கையெழுத்து இதழ்கள்

இதில் கையெழுத்து இதழ்கள் அஞ்சலக ஊடகத்தின் வாயிலாகவும் வெளிவந்தது. அவ்வாறு வெளிவந்த கையெழுத்து இதழ்கள் விருதும் பெற்றுள்ளன. அஞ்சல் அட்டை (Post - Card) மற்றும் அஞ்சலக உள்ளூர்க் கடிதம் (Inland Letter) என்கிற ஊடகத்தின் மீது கையால் எழுதப்பட்டும் கையெழுத்து இதழ்கள் விருதுகள் வழங்கப் பெற்றுச் சிறப்பையும் பெற்றன.

2 : 8 தமிழில் அச்சு

கி. பி. 1498இல் வாஸ்கோடகாமா கேரளாவில் உள்ள கள்ளிக் கோட்டைக்கு வந்தார். கி. பி. 1550இல் அம்பலக் காட்டில் திருச்சபை அமைக்கப்பட்டது. அங்கு பயன்படுத்த கி பி. 1584இல் இலிச்பனில் (போர்ச்சுகல்) 'கார்த்தில்யா' (சிற்றேடு) என்ற 38 பக்கத் தமிழ் நூல் அச்சாயிற்று. தமிழ் அச்சேறிய முதல் நூல் இதுதான். (ஆனால் தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தவில்லை) 'அம்மா' என்பதை (AMMA) - என்ற உரோமன் எழுத்துக்களில் அச்சிட்டார்கள்.

இந்தியாவில் முதல் அச்சகம் கி. பி. 1556இல் கோவாவில் அமைந்தது. கி. பி. 1557இல் 'தம்பிரான் வணக்கம்' என்ற தமிழ் நூல் கோவாவில் அச்சாயிற்று.

கி. பி. 1577இல் கொல்லத்துக்கு ஓர் அச்சகம் வந்தது. கி. பி. 1578இல் மீண்டும் தம்பிரான் வணக்கம் அச்சாயிற்று. பின்பு அச்சகம் கொச்சிக்கு மாற்றப்பட்டது. இங்கு கி. பி. 1578இல் மீண்டும் 'கிரீசித்தியானி வணக்கம்' என்ற பெயரில் 'தம்பிரான் வணக்கம்' அச்சானது

'மாசத்தினச் சரிதை' என்ற தமிழ் இதழ் கி. பி. 1812இல் வெளிவந்தது. ஞானப் பிரகாசம் என்னும் தமிழர் இதனை நடத்தினார். இதே ஆண்டில் உலகப் பொது மறையாம் திருக்குறள் முதன் முதலில் அச்சேறியது.

தமிழில் அச்சு இதன் பிறகு பலவிதக் கோணங்களில் வளர்ந்தது. இதனை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல.

முடிவுரை

இக்கட்டுரையில் ஆய்வாளர் இதுவரை கையெழுத்து இதழ்களின் தொடக்கம், வளர்ச்சி, இலக்கியப் பணி குறித்துத் தனது பார்வையை வெளியிட்டார்: மேலும் 1977 - 1997 வரையிலான கையெழுத்து இதழ்களின் பட்டியல் பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இக்காலகட்டத்தில் வெளிவந்த குறிப்பிடத்தக்க சில இதழ்கள் வருமாறு :

புதுச்சேரி மாநிலத்திலிருந்து - சாப்பறை, பாரதி , கர்நாடக மாநிலத்திலிருந்து - வண்டு, பம்பாய் தமிழ்ச் சங்கத்தால் மலர் மணம் கொண்டு வரப்பட்டது. தலித் மக்களின் இலக்கியமாக, சீறும் சிறுத்தை, தீவட்டி ஆகியவை வெளிவந்தன. தீவட்டி, விடுதலைச் சிறுத்தை திருமாவளவனின் நேர்காணலைக் கொண்டு பரிமளித்தது. பிரான்ஸ் தமிழ்ச் சங்கத்தால் பாரிமலர் கொண்டு வரப்பட்டது.

BOOKS FOR REFERENCE

- ----- **Encylopaedia Britannica**, INC ae dia publisher, William Bentam, London. Volumes 3 - p. 588 d; 11 - p. 1095 a; 12 - p. 277 c; 17 - p 280 a and 120 b; 18 - pp. 541 - 547; 21 - p. 919 a.

கா. கோவிந்தன், **தமிழர் வரலாறு**, கழக வெளியீடு, சென்னை, 1989.

இரா. பாவேந்தன், **தமிழில் அறிவியல் இதழ்கள்**, சாமுவேல் ஃபிஷ்கிறீன் பதிப்பகம், முதற் பதிப்பு 1998.

அ. மா. சாமி, **19ஆம் நூற்றாண்டின் தமிழ் இதழ்கள்**, நவமணி பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு 1995.

சோமலெ, **தமிழ் இதழ்கள்**, சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, சென்னை, 1975.

லேனா. தமிழ்வாணன், **தமிழ்ப் பத்திரிகையின் தோற்றமும் வளர்ச்சியும்**, மணிமேகலை பிரசுரம், சென்னை, 1987.

The Condensed Chemical Dictionary, Van. Nostrand Rein Hold Co., New York, 8th Edition 1971.

கலைக்களஞ்சியம் தொகுதி எட்டு, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1961.

பிற்சேர்க்கை

வ. எ.	**இதழின் பெயர்**	**ஆண்டு**	**ஆசிரியர் பெயர், ஊர், மாவட்டம், மாநிலம் / நாடு**
1	தாழம்பூ	1977-78	எம். எஸ். கோவிந்தராசன், விசயபுரம் வடக்கு, புதுக்கோட்டை.
2	சிதறல்	1982	கோமகன், செல்லூர், மன்னார்குடி.
3	பாரதி	1985	ஓவியர்காரைச் சிவா, புதுச்சேரி.
4	விடுதலைப் பறவை	1985	நசன், சூலேஸ்வரன்பட்டி, கோவை.
5	மலர்மணம்	1985	கிங்பெல், செம்பூர், பாம்பே.
6	சீறும் சிறுத்தை	1985	பி. விக்டர் வீரமணி, தாராவி, பாம்பே.
7	பாரிமலர்	1985	பிரான்ஸ் தமிழ்ச் சங்கம்.

8	பைரவி	1985	த. சிந்துக்குமார், நாகர்கோவில், கன்னியாகுமரி.
9	சிந்தனைப் பூக்கள்	1987	கி. பக்கிரிசாமி, நாச்சியார்கோவில், தஞ்சை
10	தமிழ் மலர்	1988	சதிஷ் சிஸ்ரோ, படந்தாலுமோடு, கன்னியாகுமரி.
11	ஊன்றுகோல்	1988	வா. மு. சோமு, கொப்பம்பட்டி, கோவை.
12	நிலவு	1988	அந்திசத்தியன், கன்னியாகுமரி.
13	வண்டு	1988	சீனிவாசன், ராபர்ட் சன்பேட், கர்நாடக மாநிலம்.
14	இதய மலர்	1989	பி. எஸ். பொன்ராஜ், பூதப்பாண்டி, கன்னியாகுமரி.
15	குமரித் தென்றல்	1989	கவிஞர் ஆர். எல். சாரதி, ஆரல்வாய்மொழி, கன்னியாகுமரி
16	பூங்குயில்	1989	டி. எல். சிவகுமார், வந்தவாசி, வடஆற்காடு.
17	மனிதம்	1990	தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், இணையகம்.
18	கிழக்கு	1990	அ. அருளமொழிவேந்தன், புதுக்கோட்டை.
19	தமிழோசை வளம்	1991	கே. ஜமீல் அகமது, விழுப்புரம்.
20	நம் நண்பன்	1991	லெ. னா. ராமசாமி, புதுக்கோட்டை.
21	மலர்விழி	1991	கலைச்செல்வன், பனங்காலை, கன்னியாகுமரி.
22	புஷ்பம்	1992	வி. சாகர், இரையுமன்துறை, கன்னியாகுமரி.
23	இலக்கியா	1992	மு. காளிதாசன், செங்குன்றம், சென்னை.
24	நெசவு	1993	மு. சே. கிருஷ்ணமூர்த்தி, மதுரை.
25	பூச்சரம்	1993	எம் என் வடிவேலு, ஆவத்திபாளையம், ஈரோடு.
26	தேனருவி	1993	வண்ணை சிவா, சென்னை.

27	தீவட்டி	1993	அசுரன், வெள்ளமடம், கன்னியாகுமரி.
28	விடிவு	1994	ஆரணி விளை. லாசர், குலசேகரம், கன்னியாகுமரி.
29	போர்ச்சேவகன்	1994	மோ. எட்வின் டேனியல், குலசேகரம், கன்னியாகுமரி.
30	கவிதைகள்	1994	முகில், இராணிப்பேட்டை.
31	தமிழர் முழக்கம்	1995	பொறி. அமலன். கே. சாத்தனூர், திருச்சிராப்பள்ளி.
32	சிறை	1995	வன கைதிநேசன், திருமங்கலம், மதுரை.
33	சுருதி	1995	ப. சர்மிளா, தேவகோட்டை, காரைக்குடி.
34	வெண் தாமரை	1995	ஆம்பூர் சலோ, ஆம்பூர், வடஆற்காடு.
35	சிந்து	1995	சுரா. ராமகிருட்டிணன், தேவகோட்டை.
36	உங்கள் சுடர் ஒளி	1995	வே. சரவணன், மணப்பாறை, திருச்சிராப்பள்ளி.
37	சாரல்	1995	பிஷப் ஹீபர் கல்லூரி மாணவர்கள் திருச்சி.
38	நாம்	1995	ஜெம். சீனிவாசன், அடையாறு, சென்னை.
39	விடிவெள்ளி	1995	பரமேஸ்வரன், பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.
40	நிழல்	1995	அழகிய பெரியவன், பேரணாம்பேட்டை, வடஆற்காடு.
41	மனிதம்	1995	ப. நந்தகோபால், ஆற்காடு.
42	காப்பறை	1996	புதுவைத் தமிழ் நெஞ்சன், பாண்டிச்சேரி.
43	புதிய தமிழன்	1996	மே. மணிகண்டன், சிதம்பரம், தென்ஆற்காடு.
44	எண்ணம்	1996	சசிவிஸ்வசந்திரன், திருச்சி.
45	புல்வெளி	1996	கவிப்பித்தன், ஆற்காடு.

46	சொல்	1996	இரா. விஸ்வேஸ்வரன், திருப்பரங்குன்றம், மதுரை
47	தண்டோரா	1996	திருவானைக்காவல், திருச்சி.
48	கவிக்காவிரி	1996	திருவைக்குமரன், திருச்சி.
49	ஒளிநெறி	1996	தி. நா. அறிவரசு, திருப்பூர்.
50	புதிய விடியல்	1997	பிரகதீஸ்வரன், அனிக்குறிச்சி, திருச்சி.
51	சங்கமம்	1997	மு. செந்தில் குமார், பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.
52	துளி	1997	துளி எனத் துவக்கம் அன்புச் செல்வன், திருமங்கலம், மதுரை.
53	மின்னல்	1997	மருத்துவம் ஆலை, யழகன், வல்லம், தஞ்சை.
54	தலித் உரிமைக்குரல்	1997	ப. மோகன் தாசு, தொப்பம்பட்டி, கோவை.
55	கரவொலி	1997	தி அன்பன், அண்ணாநகர், திருச்சி
56	தமிழ் மொழி	1997	எஸ். காமினி, வடகரை, கன்னியாகுமரி.
57	பிரகடனம்	1997	மேகவண்ணன், இராமேஸ்வரம், இராமநாதபுரம்.
58	வான்மதி	1997	மா முத்துக்குமரன், திருப்பத்தூர், இராமநாதபுரம்.
59	அறிவொலி	1997	தி. அறிவின், அண்ணாநகர், திருச்சி.
60	பாரததீபம்	1997	இரா. உதயகுமார், கம்பம்.
61	உழவு	1997	கே. ஜெகநாதன், திருதலைப்பூண்டி, செஞ்சி வட்டம்.

தகவல் : தி. ம. சரவணன், திருச்சிராப்பள்ளி.

□

சு. சண்முகசுந்தரம்
தேர்வுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை

காகிதச் சுவடிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

காகிதம் இக்காலத்தில் எங்கும் வழங்குகிறது. இரண்டொரு தலைமுறைக்கு முன் இந்தியாவெங்கும் பனையோலையே வழங்கியது.

பனையோலைக்குப் பதிலாகக் காகிதத்தைப் பயன்படுத்தத் தொடங்கியது சிறிது காலத்துக்கு முன்தான்.

இன்று பயன்படுத்தும் தாளுக்கு - 1900 வயது. முதன் முதலில் காகிதத்தைக் கண்டு பயன்படுத்தியவர் சீனரே.

மல்பெரி மரப்பட்டையில் இருந்து தாள் செய்தார்கள். பின்பு கந்தல் துணியில் இருந்து தாள் செய்தார்கள். கி. பி 105இல் சாய்லன் என்பவர் இதைக் கண்டுபிடித்தார்.

இந்தக் கண்டுபிடிப்புதான் இதழியலில் முதன்முதல் மிகப் பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது.

சீனர்களுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்த அரேபியர் இவர்களிடம் இருந்துதான் தாள் (காகிதம்) செய்யும் முறையை அறிந்து கொண்டார்கள். அரேபியர் தாளை 'காயிதம்', 'கடுதாசி', 'கடதாசி', 'கடிதம்' என்றெல்லாம் சொன்னார்கள்.

தாள் செய்யும் முறை உலகம் முழுவதும் பரவினாலும்கூடச் சீனத்தாள் சிறப்பாகக் கருதப்பட்டது; தமிழ் நாட்டுக்கும் வந்தது. தமிழில் 'சீனத்தாள்' என்ற புதுச்சொல் பிறந்தது.

கி. பி. 8ஆம் அல்லது 9ஆம் நூற்றாண்டில் பீகிங் கெஜட் (Peking Gazette) என்ற பத்திரிக்கை, மரத்தால் செய்த அச்சுக் கருவிகளைக் கொண்டு வெளியிடப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதனையே முதல் காகிதப் பத்திரிக்கையாகக் கருதலாம்.

இதழியல் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தவை காகிதமும் அச்சுக்

கலையும் ஆகும். இவை இல்லையென்றால் இதழியல் இந்த அளவிற்கு வளர்ந்திருக்க இயலாது

சீனர்களோடு வாணிபம் செய்த உலக நாட்டினர் காகிதம் செய்யும் கலையைக் கற்றுச் சென்றனர் கி. பி. 795இல் அரேபியர்கள் பாக்தாத்தில் காகிதம் செய்யும் ஆலை ஒன்றை நிறுவினர்.

அச்சுக்கலையும் முதலில் சீனாவில்தான் தோன்றியது மர எழுத்துக்களைச் செய்து. அவற்றில் மை தடவித் தாளில் அழுத்தி (Press) அச்சிட்டனர். அச்சகத்திற்கு 'பிரஸ்' என்று பெயர் வந்ததற்கு இதுவே காரணமாகும்.

கி. பி 1041இல் பிசெங் என்ற சீனாக்காரர் களிமண்ணில் எழுத்துக்களைச் செய்து விட்டு. தகடு சுற்றிக் கடினப்படுத்தி அச்சிடும் முறையைக் கொண்டு வந்தார். அதன் பின்பு அச்சுக்கலையில் புரட்சி ஏற்பட்டது.

காலப்போக்கில் கல்வெட்டுகளைப் போன்றே செப்புப்பட்டயங்களும் அழிவற்று விளங்கின. தங்கத் தகட்டில்கூட எழுதினார்கள். இலங்கையில் அனுராதபுரம் என்ற இடத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியில் தங்கத் தகட்டில் எழுதப்பட்ட சுவடி ஒன்று கிடைத்தது. அது 1500 ஆண்டுகள் பழமையானது. மொத்தம் 14 பக்கம் பாலிமொழியில் புத்தரின் அறிவுரைகள் எழுதப்பட்டுள்ளன.

களிமண் சுவடி

எழுதும் ஏடாக ஆமை ஓடு பயன்பட்டு இருக்கிறது. எலும்புகள்மீது எழுதியிருக்கிறார்கள் களிமண்ணைச் சமப்படுத்தி அதன்மீதும் எழுதினார்கள். ரோமர்கள் மரப்பலகைமீது மெழுகை உருக்கி வார்த்து அதன்மீது எலும்பு கொண்டு எழுதினார்கள்.

களிமண் எழுத்துக்கள் (தமிழ் எழுத்துக்கள்) சிந்து வெளியில் கிடைத்தன. பிறகு மரப்பலகைகளில் எழுத்துக்களைச் செதுக்கினார்கள். அச்சு தோன்றிய பொழுதுகூட மரப்பலகைகளில்தான் எழுத்துக்களைச் செதுக்கினார்கள்.

ஏடுகளைச் சுவடி என்றும் சொல்லுவர். கால்தடம் சுவடு எனப்படும் வரி வடிவம் என்பது ஒலி எழுத்தின் சுவடு தானே? எழுத்தின் சுவடு பதிந்த ஏடு 'சுவடி' என்று சொல்லப்பட்டது. 'இனிதினிதாய்' எழுந்த உயிர் எண்ணமெல்லாம் இலகுவது புலவர் தரும் 'சுவடிச் சாலை' என்கிறார் பாரதிதாசன்

காகிதமும் பனை ஓலையும்

1838 சூலை - ஆகஸ்டு இதழில் காகிதமும் பனை ஓலையும் என்ற கட்டுரை வந்தது அக்கட்டுரை:

"ஓலையினாலேயே மதக் கோட்பாடுகள் நிலைபெற்றன; வேதாகமங்கள் நிலைபெற்றன சனங்களுடைய தாவர சங்கம் சுதந்திரங்கள் நிலையாயின. குடும்பங்களின் வம்சா வழிகளும் அவரவர் சாதகங்களும் குறிக்கப்பட்டன.

பனையோலை இல்லாவிட்டால் முன் எத்தனையோ ஆயிரவருஷமாய் நம்

முன்னோர்கள் தாம் அடைந்த சீர்திருத்தத்தின் பயன் பிற்காலத்தவருக்கு எட்டாமல் அழிந்து போயிருக்குமே" எனக் கூறுகிறது (பக். 38 - 40).

பேப்பைரசு

தமிழர்கள் பனையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதிக் கொண்டு இருந்தபொழுது எகிப்தியர்கள் 'பேப்பைரசு' என்னும் நாணல் புல்லை எழுதும் ஏடாகப் பயன்படுத்திக் கூர்மையான எலும்புத் துண்டு கொண்டு எழுதினார்கள்.

இந்த 'பேப்பைரசு' என்பதிலிருந்துதான் 'பேப்பர்' என்ற சொல் பிறந்தது. இத்தகைய பேப்பைரசு சுருள்களைக் கிரேக்கர்கள் 'பிப்பிலியன்' என்றார்கள். இதற்கு 'நூல்' என்று பொருள். இதிலிருந்து 'பைபிள்' என்ற சொல் உண்டாயிற்று.

வளர்ச்சி

சீனர்களுடன் வணிகத் தொடர்பு கொண்டு இருந்த அரேபியர் அவர்களுடன் இருந்து காகிதம் செய்யும் முறையை அறிந்து கொண்டார்கள். அரேபியர் தாளை 'காகத்' என்றார்கள். 795ஆம் ஆண்டில் பாக்தாத்தில் தாள் ஆலை ஒன்றை அரேபியர்கள் நிறுவினார்கள்.

அரேபியர்களிடம் இருந்து இந்த வித்தையை இந்தியர்கள் கற்றார்கள் இவர்கள் 'காகிதம்', 'காயிதம்', 'கடுதாசி', 'கடதாசி', 'கடிதம்' என்றெல்லாம் தாளைச் சொன்னார்கள்.

எழுதப்பட்ட தாள் 'தாளிகை' என்றும் 'பத்ரம்', 'பத்திரிகை' என்ற பெயர் பெற்றது போலக் காகிதம் 'கடிதம்' என்று ஆயிற்று ஆகவே தாள் அஞ்சலைக் 'கடிதம்' என்கிறோம்.

சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதியில் 'சீனக் காகிதம்' என்ற சொல் காணப்படுகிறது.

1577இல் கோவாவில் அச்சான முதல் தமிழ் நூல் சீனத் தாளில் அச்சிடப்பட்டது.

அண்ணாமலைச் செட்டியார் காவடிச் சிந்தைத் 'திக்குக் காகிதம்' என்று விளம்பரம் செய்தார்கள்.

இன்று உலகம் முழுக்க 7000 வகைத் தாள்கள் தயாராகின்றன.

தாள்களில் ஒன்று எழுதும் தாள்; மற்றொன்று அச்சுத்தாள். மேலும் இரு பிரிவைச் சேர்த்து ஒன்று வணிகத்தாள், அணித்தாள். அதில் ஒன்று பொருள்களும் மற்றொன்று இல்லங்களை அழகு படுத்த மெல்லிய வானவில் போன்ற வண்ணத்தாள்.

'சன்' காகித ஆலை வெள்ளி விழா மலரில் (1986) தாளைப் பற்றிக் காணப்படும் சில விவரங்கள்:

உலகத் தாள் தயாரிப்பில் இதழ் தாள் 15 விழுக்காடு.

உலகத் தாளின் தேவை ஆண்டுக்கு 6. 25 விழுக்காடு பெருகுகிறது தயாரிப்போ 1. 5 விழுக்காடுதான் உயர்கிறது

இதழ் தாள் தயாரிப்பு ஏற்றுமதியில் கனடாவுக்கு முதலிடம்; பயன்படுத்துவதில் அமெரிக்கா முதலிடம் பெறுகிறது.

தமிழ் நாட்டில் அச்சுக்கலை தோன்றியபொழுது அச்சிடும் காகிதம் ஐரோப்பாவில் இருந்து இறக்குமதி செய்தார்கள்.

தரங்கம்பாடியில் தங்கித் தமிழ் கற்றுக் கொண்ட சீகன் பால்கு 1708இல் பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். 1713இல் அச்சிடவும் தொடங்கினார்.

தாள் ஆலைகள்

இப்பொழுது தமிழ்நாட்டில் 'சன் தாள் ஆலை' 'சேசாயி தாள் ஆலை' 'தமிழக அரசு ஆலை' என்று பல ஆலைகள் இருக்கின்றன. உலகில் உள்ள மிகப்பெரிய பத்து தாள் ஆலைகளில் சேசாயி ஆலையும் ஒன்று.

இந்தியாவில் 1983இல் 20 இலட்சம் டன் தாள் உற்பத்தி ஆயிற்று. இருபத்தொன்றாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் 42 இலட்சம் டன் தாள் தேவைப்படும் என்று மதிப்பிட்டு இருக்கிறார்கள்.

பிளாஸ்டிக் தாள்

இப்பொழுது 'பிளாஸ்டிக்' தாள் கூடத் தயாராகிறது. மழை, வெயில் பனியில் நனைந்து கிழிந்துவிடாமல் இருக்க அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளில் பிளாஸ்டிக் தாளில் இதழ்கள் அச்சிடுகிறார்கள். இவற்றின் மீது அச்சிடவும் செய்கிறார்கள்.

அறிவு வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் தாள் முக்கியம். அதனால்தான் 'காகிதம் செய்வோம்' என்று பாரதியார் பாடினார் போலும்!

அமெரிக்கர்கள் ஆண்டுதோறும் தலா 46 6 கிலோ தாள் பயன்படுத்துகிறார்கள இந்தியர்கள பயன்படுத்துவது வெறும் 0. 4 கிலோ.

1982 ஆம் ஆண்டு புள்ளி விவரத்தின் படி அமெரிக்கர்கள் ஆண்டுதோறும் தலா ஆயிரம் பக்கம் படிக்கிறார்கள். இந்தியர்கள் படிப்பதோ 32 பக்கந்தான்.

இதழ் தாள்

முன்னாளில் கையால்தான் தாள் செய்யப்பட்டது. 1809இல் டிக்கின்சன் என்ற அமெரிக்கர் தாள் செய்யும் பொறியை வடித்தார்.

முதலில் தாள் செய்யக் கந்தல் துணி மட்டுமே பயன்பட்டது. 1809இல் திலக்மேன் என்ற அமெரிக்கர் மரக்கூழில் இருந்து தாள் செய்தார்.

இன்றைய வளர்ச்சி நிலையில் பார்க்கும்பொழுது தாள் ஆலைகள் பல

நிறுவப்பட்டுள்ளன. பிளாஸ்டிக் தாள், இதழ் தாள், சணல் தாள் எனப் பல்வேறு தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. வரி அச்சு, நிழல் அச்சு, உருள் அச்சு, சுழல் அச்சு, வண்ண அச்சு எனப் பல்வேறு அச்சு முறைகள் உருவாகியுள்ளன. அச்சில்லா இதழ், மின்னிதழ் ஆகியவை வளர்ச்சியின் அடிப்படை ஆதாரமாக விளங்குகின்றன.

□

ஜெ. துரைராஜ்
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
மதுரை

வரலாற்றுப் பார்வையில் தலித் கலைகள்

முன்னுரை

தலித் மக்கள் பல்வேறு பெருமைக்குச் சொந்தமானவர்கள் ஆனால் காலங்காலமாகத் தமது பெருமையையும் சிறப்பையும் இழந்து வருகிறார்கள். தலித் மக்கள் சமுதாயத்திலும், சமயத்திலும் பொருளாதாரத்திலும் ஒதுக்கி ஓரங்கட்டப்படும் நிலையில் தங்கள் சிறப்புகளையும் காட்டி வருகின்றனர். மரபுப் பெருமைக்கும் பண்பாட்டுச் செய்திகளை வழிவழியாகக் கொண்டு வருவதுமான தலித் கலைகள் மெல்ல மெல்ல மறந்து, ஏன் நசுக்கப்பட்டு இழிவுபடுத்தப்பட்டு, அடக்குமுறைக் கலைகளைத் தூக்கிப் பிடிக்கத் தொடங்கிவிட்ட இந்நிலையில் தலித் கலைகள் இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்படுகிறது. தலித் சொல்லும் பொருளும், தலித் சொல் வளர்ச்சி, யார் இந்த தலித்? கலைகள் என்றால் என்ன? என்று வரிசைப்படுத்தி, குறிப்பாகத் தப்பாட்டம்பற்றி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தலித் சொல்லும் பொருளும்

தலித் என்ற சொல் 'தல்' (Dal) என்ற சமஸ்கிருத வேர்ச்சொல்லிலிருந்து வருகிறது. இதற்கு உடை அல்லது கீழ்ப்படுத்து அல்லது ஒடுக்கு என்பது பொருள். இச்சொல் சமூகப் பொருளாதார எதார்த்த வாழ்வில் உடைக்கப்பட்ட மக்கள் அல்லது ஒடுக்கப்பட்ட மக்களைக் குறிக்கிறது எபிரேய மொழியில் தலித் என்ற சொல் உடல் சார்ந்த தளர்ந்த நிலை; குறிப்பிடத் தகுதியில்லாத நிலை என்ற பொருளில் பயன் படுத்தப்படுகிறது. இச்சொல் அணி (Ani) என்ற இன்னொரு சொல்லுடன் இணையும் போது பொருளாதார நிலையுடன் தொடர்புடைய சொல்லாகிறது. தல் என்ற எபிரேய வினைச்சொல் ஏழ்மை என்ற பொருளில் வெறுமையான, சமமற்ற வறுமையான உலர்ந்து போன, நொடிந்து போன ஏழைகள், எளிதில் மீளமுடியாத பொருளாதார நிலையைச் சுட்டுகிறது என ஹார்வி என்பெர்க்கின்ஸ் கூறுகிறார். தலித் என்ற பொருளாதார அரசியல் நிலையில் ஒடுக்குதலினால் பாதிக்கப்படும் எல்லா நிலைகளிலும் உள்ளவர்களின் உண்மை நிலையை ஆழமான பொருளில் அறிந்து கொள்ளும சொல்லாகும் என்று M. E பிரபாகர் கூறுகிறார்.

அரவிந்து P. நிர்மல் என்பார் தலித் என்ற சொல்லின் பொருளை ஆறு வகைப்படுத்துகிறார்.

1. உடைந்த, கிழிந்த, வெடித்த, தெளிந்த
2. திறந்த, விரிந்த
3. இரு கூறாக
4. துரத்துண்ட வெளியேற்றப்பட்ட சிதறிய
5. ஏழ்மையான பிழியப்பட்ட அழிக்கப்பட்ட
6. வெளிப்படுத்தப்பட்ட காட்சிப் பொருள்

தலித் என்பது ஒரு குறிப்பிட்ட சாதியன்று மாறாகச் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட நொறுக்கப்பட்ட என்னும் பொருளோடு உரிமைகள் மறுக்கப்பட்டு, மனிதராக மதிக்கப்படாத அவல நிலையில் உள்ளோரைக் குறிக்கும் சொல் என்ற உண்மையினை உணர்ந்து கொள்ள வேண்டியது இக்காலத்தின் கட்டாயமாகும்.

யார் இந்த தலித்?

1. பொருளாதார அடிப்படைப் பிரிவுகள்	:	சுரண்டும் பணக்காரவர்க்கமும் ஏமாற்றப்பட்ட ஏழைகளும்
2 சமூக சாதிப் பிரிவுகள்	:	ஆதிக்கம் செலுத்தும் உயர் சாதியினரும் VS தீண்டப்படாத பெருவாரியான சாதியினரும்
3. பாலியல் பிரிவுகள்	:	ஆதிக்கம் செலுத்தும் ஆண்களும் அடிமைப்படுத்தப்படும் பெண்களும்
4. வர்க்கப் பிரிவுகள்	:	ஆரியரும் VS திராவிடரும் முன்னேறியவர்கள் VS பழங்குடியினர்
5. சமயப் பிரிவுகள்	:	பெருவாரியான இந்துக்கள் VS சிறுபான்மையான இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள், சீக்கியர் பிறர்.
6. பண்பாட்டுப் பிரிவுகள்	:	சமஸ்கிருதப் பண்பாட்டு மேலாண்மை VS உருக்குலைக்கப் பட்ட பண்பாடு (திராவிடர், பழங்குடியினர்)

தலித் மக்கள் சமுதாயத்திலும் இறையியலிலும் இடம் பிடிக்கின்றவர்கள். இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் நிலையில் இருக்கின்ற ஏழைகள். அட்டவணைப்படுத்தப்பட்ட சாதி (Scheduled Caste) பிற்படுத்தப்பட்ட சாதியினர் (Lowest Ranks of the Caste Hierarchy) பழங்குடியினர் ஏழைகளாகப் பிறந்து ஏழைகளாக மரிக்கின்ற மக்கள் பிறப்பிலேயே சாதியாலும் வகுப்பாலும் தாழ்வு

நிலைக்குத் தள்ளப்படுகின்ற மக்கள். தங்கள் அடிப்படைத் தேவைகளான உணவு, இருப்பிடம் மற்றும் அறிவு சார்ந்த தேவைகளைச் சந்திக்கப்படாத நிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள் தலித் ஆவர். மேலும் உழைப்பாளிகளை நிலமற்ற தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், சமூக அமைப்பிலும் பண்பாட்டிலும் அடிமைப் படுத்தப்படுகின்ற பெண்கள் மற்றும் நசுக்கப்படுகின்ற குழந்தைகள் தலித்துகள் ஆவர்

தலித்துகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சமுதாயத்தின் விளிம்பிற்குள் தள்ளப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், வருணாசிரம தர்மத்தால் வஞ்சிக்கப்பட்ட வருமாவர், சாதியற்றவர்கள், சாதிக்குப் புறம்பானவர்கள், மிலேச்சர்கள், பஞ்சமர்கள், தீண்டத்தகாதவர்கள் என்றெல்லாம் வர்ணிக்கப்பட்ட மக்களே இன்று தலித் என அழைக்கப்படுகின்றனர். இம்மக்களின் வாழ்வு நிலையோடு தொடர்புடையது கலைகள்.

கலைகள்

மனிதருக்கு இயல்பாகத் தோன்றுகின்ற உணர்வு கலையுணர்வு. உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளின் வெளிப்பாடே கலைகள். மனித உறவுகளையும் வாழ்க்கைக் குறிக்கோள்களையும் ஒழுங்குபடுத்துவதற்கான சமுதாயத்திடம் காணப்படும் நுட்பமான கருவியே கலை. எனவே கலை என்பது மனித வாழ்வில் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து காணப்படும் ஒன்றாகும். அழகு, சுவை, பயன், கற்பனை, உணர்ச்சி, அறிவு, உறவு, வாழ்க்கை, குறிக்கோள், இன்பம், துன்பம், எதிர்பார்ப்பு, நகைச்சுவை, விடுதலை போன்ற தகவல்களைப் பரப்பக்கூடிய கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

கலைகளின் வளர்ச்சி நிலையை மூன்று பிரிவாகக் கொள்ளலாம்.

1 தொன்மைக் கலை (Primitive art)
2. நாட்டுப்புறக் கலை (Folk art)
3. செம்மைக் கலை (Classical art)

தொன்மைக் கலையைப் பழங்குடி மக்களிடையேயும் (தலித் மக்கள்) நாட்டுப் புறக் கலையை நாட்டுப்புற மக்களிடையேயும் (தலித் மக்கள்) செம்மைக் கலையை உயர்குடி மக்களிடையேயும் காணலாம்

தொழிலும் தொழில் சார்ந்த மக்களையும் உள்ளடக்கியுள்ள கலை தொன்மைக் கலையும், நாட்டுப்புறக் கலையுமாகும் எனவே இவ்விரு கலைகளையும் தலித் கலைகள் என்று கூறலாம்.

தலித் கலைகள்

பண்டைக் கால மக்கள் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தி, பல கலைகளையும் உருவாக்கி மகிழ்ந்தனர். மன மகிழ்ச்சி ஒன்றே முக்கிய நோக்கமாக இருந்தது மனித உணர்வுகளுக்குக் கலைகள் வடி காலாய் இருந்தன. தலித் கலைகள் நாட்டுப்புற மக்களின் உயிர் நாடியாகும். இக்கலைகளை உழைப்போர் கலை என்றும் கூறலாம் தலித் கலைகள கிராமக் கடவுள் வழிபாட்டுடனும் விழாக்களுடனும்

தொடர்புடையதாகும். தலித் மக்களின் கலைகளும் வாழ்வியல் எதார்த்தங்களும் முன்னிறுத்தப்படுகின்றன. இக்கலைகள் தொழிலும் தொழிற் களமும் சார்புடையதாக விளங்குகின்றன. மக்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையது தலித் கலைகள்; உற்பத்தி உறவுகளோடும், இன வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்தவைகளாக விளங்குகின்றன. இவை தொழிற் சார்பு, விடுதலை போன்ற கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

குறவன் குறத்தி ஆட்டத்தில் தாமே உருவாக்கி உற்பத்தி செய்த பாசி, மணி சீப்பு போன்ற பொருள்களைப் பண்டமாற்றுப் பெற வேண்டி

''பச்சபபாசி பவளப்பாசி வாங்கிலியோ ஆயாலோ
பச்சைப் புள்ளைக்குக் கோத்துப் போட்டா
நல்லா இருக்கும் ஆயாலோ, தா அசக் அசக்''

எனக் குறவனும் குறத்தியும் தமது உற்பத்திப் பொருளகளை ஆடிப்பாடிக் கூட்டம் சேர்த்து விவரங்கள் கூலி விற்பனை செய்வதும் குறி நிகழ்த்தும் தன்மையிலும் உற்பத்தி உறவுகளோடும், இன வாழ்க்கையோடும் தலித் கலைகள் பின்னிப் பிணைந்திருக்கின்றன. வகை வகையான துடைப்பங்கள், செருப்புகள், இசைக் கருவிகள், கயிறு, பாய், முறம் போன்ற சிறு சிறு உற்பத்திப் பொருள்களை ஆடிப்பாடி, தங்கள் கலைகளை வெளிப்படுத்தி விற்பது தலித் கலைகளின் சிறப்புத் தன்மையாகும். தலித் கலைகளில் சிலவற்றை இப்பகுதி ஆராய்கிறது.

சிலம்பாட்டம்

சிலம்புதல் என்பதற்கு ஒலித்தல் என்று பொருள். இக்கலை வீரத்தைக் காட்டவும், தற்காப்புக்காகவும் பயன்பட்ட வீர விளையாட்டுக் கலையாகும். நுட்பமான செயல் திறன்களையும் சிலம்பாட்டக் கலை விளக்குகிறது.

காவடி ஆட்டம்

முருகனுக்குக் காவடி எடுத்து ஆடுதல் காவடி ஆட்டமாகும். காவடி ஆட்டத்தை இயக்குவது தலித் கலைகளாகிய தப்பு ஆட்டமும், நையாண்டி மேளமும் என்று சொன்னால் மிகையாகாது.

கரகாட்டம்

கரகாட்டம் மாரியம்மன் தொடர்புடையதாகும். இந்த ஆட்டத்தை இயக்குவதும் தலித் கலைகளாகிய தப்பும், நையாண்டி மேளமும் ஆகும்.

கும்மி

பெண்கள் ஆடும் ஆட்டங்களில் கும்மி ஆட்டம் சிறப்புடையதாகும். இக்கும்மி பெண்களை விடுதலை வாழ்வுக்கு இட்டுச் செல்வதும், ஒற்றுமையை வளர்க்கவும் உதவுகின்றன.

ஒயில் கும்மி

தலித் கலைகளில் மற்றொன்று ஒயில் கும்மியாகும். ஆடவர் ஆடும்

ஆட்டம் தமிழ்ப் பண்பாட்டின் சின்னமாக விளங்குகிறது. ஆடவர் தலையில் முண்டாசும், கழுத்தில் பூமாலையும், காலில் சலங்கையும் அணிந்திருப்பர். கையில் கைக் குட்டை வைத்திருப்பர்.

கோலாட்டம்

இரண்டு கோல்களைப் பயன்படுத்தி ஒன்றுடன் ஒன்று மோதி ஒலி எழுப்புகின்ற ஆட்டம் கோலாட்டமாகும்.

பொய்க்கால் குதிரையாட்டம்

காலில் கட்டையைக் கட்டிக் கொண்டு குதிரை போன்ற உருவில் குதிரையில் அமர்ந்து சவாரி செய்வது போன்ற தோற்றத்துடன் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டமாகும். இவ்வாட்டத்தை ஆடச் செய்வது தலித் கலைகள் (நையாண்டி மேளம், தப்பு) இக்கலைக்கு மராத்திய மன்னர்கள் பெரும் ஆதரவு தந்தார்கள்.

பிற ஆட்டங்கள்

கழியல் ஆட்டம், கரடி ஆட்டம், வர்ணக் கோடங்கி ஆட்டம், புலி ஆட்டம், பேயாட்டம், பாவை ஆட்டம் போன்ற ஆட்டங்களும் தலித் ஆட்டங்களாகும்.

வில்லுப் பாட்டு

நாட்டுப்புறக் கலையிலும் தலித் கலைகளில் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பது வில்லுப்பாட்டு ஆகும். வில்லடித்துப் பாடுதல் வில்லுப் பாட்டின் உறுப்புக்களாக அமைந்த இசைக் கருவிகள், வில், உடுக்கை, குடம், தாளம், கட்டை, பம்பை, உறுமி, தக்கை, துந்துபி எனத் தலித் கலைக் கருவிகளே வில்லுப் பாட்டை இயக்குகிறது.

இதுகாறும் தலித் மக்களிடையே வழக்கத்திலிருந்து வரும் பல்வேறு கலைகள் பற்றிச் சுருக்கமாக ஆராயப்பட்டன. அடுத்து தப்பாட்டாத்தைக் குறித்து விரிவாக ஆராய்வது பொருந்தும்.

தப்பு

தப்பாட்டம் என்பது தப்பான ஆட்டமன்று அது சரியான ஆட்டமாகும். தப்பைத் தொட்டால் தீட்டு, தப்பை அடித்தால் அசுத்தம் என்ற நிலையில் தப்பு தலித் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த புறைதான் இந்தத் தப்பு. போர்க் குணம் மிக்கதும், தாளம் கொண்டதுமானதான் இக்கலை. சிறப்புப் பெறுவதோடு இன்னும் இக்கலை அனைவருடைய ஒப்புதலும் பெற வேண்டும். தவிலோசைக்கும், மிருதங்க ஒசைக்கும் இருக்கும் மதிப்பு தப்போசைக்கும் கிடைக்க வேண்டும்.

இம்மண்ணின் கலைகள் வரலாற்றுச் சின்னங்கள். வரலாறுகள் மாறும்போது பல படிப்பினைகளையும் நமக்குத் தருகின்றன.

"தப்பாட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மாறுதலான
அனுபவமாகி இரத்தத்தில் இலேசான துடி துடிப்பு ஏறுவதை

உணர முடியும்"[1]

"பதினான்காம் நூற்றாண்டில் கல்வெட்டுகளில் 'தப்பு சேவை' என்கிற சொல் இருக்கின்றது"[2]

தப்புதல் என்றால் அடித்தல் என்பது பொருள். தப்பாட்டம் திராவிட மொழிகள் அனைத்திலும் ஒரே பொருளிலேயே வழங்கப்படுகிறது. இது தெய்வ வழிபாட்டுடன் இணைந்ததாகவே இருந்திருக்கிறது. கிராமத்தில் குழந்தை பிறக்கும்பொழுதும், பெயர் வைக்கும்பொழுதும், ஒரு பெண் பூப்படையும்பொழுதும், திருமணம் மற்றும் திருவிழாக்கள் நடக்கும்பொழுதும், வெற்றி பெறும்பொழுதும் தப்பாட்டம் சிறப்பிடத்தைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இத் தப்பாட்டம் பிற்காலத்தில் சாவுக்கு மட்டும் அடிக்கும் பழக்கமாகி விட்டது. இத்துடன் நவீனம் என்ற பெயரால் இக்கலைகளை அழிக்கின்ற முயற்சியும் ஒருபக்கம் நடைபெறுகிறது. தப்புக் கருவியில் தகிட தகிட என்ற திஸ்ர நடையும், தகதிமி தகதிமி என்ற சதுஸ்ர நடையும் வாசிக்கிறார்கள் இதனுடன் கண்ட நடையும் வாசிப்பதுண்டு. இப்பொழுது சரியான தாளத்துடன் தொடர்ந்து இரண்டு முதல் மூன்று மணி நேரம் வரை ஆடக் கூடிய அளவுக்குத் தப்பாட்டம் வளர்ந்துள்ளது.

தப்பாட்டக் கலைஞர் தப்புக் கருவியை உருவாக்குகின்றனர். முதலில் வேப்ப மரத்தின் வேர்களை வட்ட வடிவத்தில் தப்புக் கட்டையைக் கடைந்து கொள்ள வேண்டும். எருமைக் கன்றுக் குட்டியின் தோலை முடி யெல்லாம் நீக்கிப் பதப்படுத்தி நன்றாக ஊற வைக்க வேண்டும். புளியங்கொட்டையை அரைத்துக் காய்ச்சி, பசை உண்டாக்கி, அப்பசையை வளையத்தின்மீது தடவி, தோலை வளையத்தின் மீது ஒட்டி, தோலின் ஓரங்களில் சிறு சிறு துளையிட்டுக் கயிற்றினால் இழுத்துக் கட்ட வேண்டும். பின்னர் வெயிலில் நன்றாகக் காய வைக்க வேண்டும். நன்கு காய்ந்த பின்னர்க் கயிற்றை அப்புறப்படுத்த வேண்டும். தீயில் காய்ச்சுவதற்கு முன்பே தீம் என்ற ஓசை எழுப்பக்கூடியதாக ஆகிறது. பின்னர் இத் தப்பைத் தப்பாட்டத்திற்குப் பயன்படுத்தலாம்.

இத் தப்பைத் தோளில் தொங்க விட்டு வயிற்றுப் பகுதியில் இடுக்கிக் கொண்டு மேலே மெல்லிய குச்சி, கீழே தடிமனான குச்சியில் தாள லயத்துடன் அடிக்க தப்பில் எழுகிற ஒலி காதுகளுக்கு இனிமையைக் கொடுக்கிறது.

இந்தத் தப்புக்கு வழி நடத்துவது துடுப்பு என்னும் தோல் கருவியாகும். சிறு நாதஸ்வரம், தவில் ஆகியவற்றை இணைத்து, காலில் சலங்கைச் சத்தத்துடன் ஆடுகிறார்கள்.

"தப்பாட்டத்தின் சிறப்பு அதன் அழுத்தமான சப்தம். எந்த அளவுக்கு தப்பில் அதிர்வு உண்டாகிறதோ அந்த அளவுக்கு ஆடுகிறவர்களின் உடம்பிலும் அது பிரதிபலிக்கும்".[3]

---

1 அகிலா நியூஸ் **தமிழர்கள் மறந்ததும் மறக்காததும்** ப. 20.

2. **மேலது**. ப 23

3. **மேலது**. ப 23.

விளம்பம் அல்லது மத்திமத்தில் தொடங்கிப் படிப்படியாக ஓசை உயர்ந்து கூடித் துரித கதியில் போய் முடியும் இதுதான் கிராமியக் கலையின் அல்லது தலித் கலையின் தீவிரம் என்று கூறலாம்.

தப்பை எழிலுடன் வாசித்தபடி விதவிதமான ஆட்டங்களுடன் கூடிய அடிகளுடன் ஆடுவதற்கே தனி வலு தேவை. உடல் வலுவை அடிப்படையாகக் கொண்ட இக்கலையின் உயிரான இன்னொரு செய்தி அதன் வேகம். இக்கலையில் அதற்குத் தகுந்த உடலசைவு. நெருங்கி நின்று பார்க்கும் போது மனத்தில் ஒருவிதமான எழுச்சியை உண்டு பண்ணக்கூடிய சாத்தியமிருப்பது தெரியவரும்.

தப்பாட்டம் நிகழ்ச்சி முடிந்த பிறகும் வெகு நேரம் அதன் அதிர்வு ஆட்டம் மனத்தில் நிலைத்திருக்கின்றது. எந்தக் கலைக்குமில்லாத ஈர்ப்புச் சக்தி இக்கலைக்கு உண்டு

கிராமிய உடையுடன் தலையில் ஒரு ரிப்பன் கட்டிக் கொண்டு எட்டிலிருந்து பத்துப் பேர் வட்டமாகவும் எதிரெதிராகவும் தப்புக் கருவியை வாசித்தப்படி. காலில் சலங்கைச் சத்தத்துடன் அடிகளை எடுத்து வைத்து ஆடுகிறார்கள் தப்பில் வேகம் கூடக் கூட ஆட்ட வேகமும் அதிகரிக்கும் ஆண்கள் மட்டுமே ஆடிய இக்கலை இன்று பெண்களுக்கும் பயிற்சி கொடுத்து அவர்களும் ஆடி வருகின்றனர்.

தஞ்சை. பெரியார். மதுரை மாவட்டங்களில் வாழும் தலித் மக்களிடம் இக்கலை பிரபலம் பெற்றிருக்கிறது தற்காலத்தில் இக்கலைஞர்கள் மேலை நாடுகளுக்குச் சென்று அங்கு பாராட்டப்பட்டனர். அரசு நிகழ்ச்சிகளிலும். தேசிய நிகழ்ச்சிகளிலும் இக்கலை இடம் பெற்றிருக்கிறது. தப்பாட்டக் கலைஞர்களின் ஒற்றுமையோடு தங்கள் உரிமைகளை அரசாங்கத்திடமும் மக்களிடமும் கேட்டுப் பெற ஒரு சங்கம் மதுரை மாவட்டத்தில் தமிழ் நாடு இறையியல் கல்லூரியின் ஆதரவுடன் தொடங்கப்பட்டுள்ளது. பல நவீன நாடகங்களில் தப்பாட்டம் இடம் பெற்றிருப்பது அதற்கு மேலும் மெருகு சேர்த்திருப்பதையே காட்டுகிறது.

முடிவுரை

தலித் கலைகள் சமூக மேடைகளாலும். சாதிய அடக்கு முறைகளாலும். அரசாட்சிகள் மாறியதாலும். படை யெடுப்புகள் பலமுறை நடந்தமையாலும். சுதந்திரப் போராட்டம் வேண்டி அனைத்துத் தரப்பினரும் ஒன்று சேர்ந்து மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்பட அவர்தம் கலை இலக்கியங்களைப் பயன்படுத்திய முறைகளாலும் தலித் கலைகளின் வடிவங்கள் இன்று பிறவற்றில் கலக்கப்பட்டன. தலித் மக்களை ஓரங்கட்டுவது போன்று தலித் கலைகளில் பல இன்று ஓரங்கட்டப்பட்டு மரபுச் சொத்துக்களை அலட்சியப்படுத்தியும் இழிவுபடுத்தியும் வருகின்ற நிலை இருப்பது வருந்துதற்குரியது. ஆனால் தலித் கலைகள் தொழில் வளர்ச்சிக்கு. இன வேற்றுமையின்மை. இன எழுச்சி ஒற்றுமை. நம் நாட்டின் பண்பாட்டினைப் பேணிக் காக்கும் பெருமை. மனித வாழ்வின் விடுதலைக் கூறுகள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள சிறப்பினையுடையது தவறானதாகக் கருதப்பெற்ற இக்கலை மனித மாண்பை வெளிப்படுத்துகிறது. மிகச் சரியான கலையாக இன்று புது வடிவம் பெற்று வருவதும். இக்கலையை எல்லா நிலைகளிலும்

பயன்படுத்துவதன் மூலம் இக்கலையின் வளர்ச்சியும் பெருமையும் உலகுக்கு வெளிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அப்போது தலித் கலைகள் மக்களை விடுவிக்கும் ஒரு சிறந்த ஆயுதமாக அமையும்.

நூலோதி

1. அகிலா நியூஸ், **தமிழர்கள் மறந்ததும் மறக்காததும்**, நியூ எட் பப்ளிகேஷன்ஸ் அண்டு கம்யூனிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை, 1996.
2. சு. சக்திவேல், **நாட்டுப்புற இயல் ஆய்வு**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1992.
3. ஏ. குணசேகரன், **நாட்டுப்புற நிகழ் கலைகள் ஒரு பார்வை**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரை வேட் லிமிடெட், சென்னை, 1993
4. சு. சண்முக சுந்தரம், **நாட்டுப்புற இயல்**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1989.
5. சுதானந்தா, **ஆட்டமும் அமைப்பும் : ஒரு நாட்டுப்புற நிகழ் கலைபற்றிய ஆய்வு**, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1991.
6. **வாழ்வியற் களஞ்சியம் தொகுதி ஆறு**, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.
7. ஜெ. துரைராசு, **தென்னிந்தியத் திருச்சபை திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர்த் திருமண்டிலத் தலித் கிறிஸ்தவர்கள் ஓர் ஆய்வு : 1947 - 1997**, தமிழ்ப் பல்கலைக்கழக முனைவர் (Ph. D) பட்டம் பெறுவதற்காக அளிக்கப்பெற்ற வெளியிடப்படாத ஆய்வேடு, தஞ்சாவூர், 1998.

☐

தே. கோபாலன்
தொல்லியல் அலுவலர்
நாகர்கோவில்

நாஞ்சில் குறவன் வரலாறு

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் நாஞ்சில் குறவன் வரலாறு (டி. எண். 3919) தொடர்பான காகிதச் சுவடி உள்ளது.

கோட்டாரில் இருக்கும் கேசவன் அண்ணாவி காரியக்கார குமாரன் ராமசாமி அண்ணாவியினால் தெரியப்பட்ட வரலாறு தறியாபுத்துவைச் சேர்ந்த நிட்டலணாயன்னா அய்யரால் கி. பி. 1817ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 7ஆம் நாள் இத்தாள் சுவடி எழுதப்பட்டுள்ளது. நாஞ்சில் நாட்டைக் குறவர் பரம்பரையினர் ஆண்டு வந்த விவரங்களை இத்தாள் சுவடி கூறுகிறது.

இலக்கியங்களில் குறவர்

சங்க இலக்கியங்களில் குறவர்பற்றிய குறிப்புகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. குறவர் இனத்தினர் குறிஞ்சி நிலத்திற்குரிய மக்களாவர் பொதியமலைக் குறவர்களைப் பற்றி அகநானூறு கூறுகின்றது. திரிகூடராசப்பக் கவிராயரின் குற்றாலக் குறவஞ்சியும் இங்கு நினைவு கூரத்தக்கது.

கல்வெட்டுக்களில் குறவர்

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம் நாகலாபுரத்திலுள்ள சிவன் கோயில் முருகன் சன்னதியில் பொறிக்கப்பட்ட கி. பி. 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டில் 'வேடன் அம்பலக்காரர் தாண்டவன்' எனக் காணப்படுகிறது. இங்கு தாண்டவன் என்ற குறவனுக்கு 'அம்பலக்காரன்' என்ற பட்டப்பெயர் இருந்துள்ளது தெரியவருகிறது. இதிலிருந்து ஒரு கிராமத்திற்குத் தலைவனாகக் குறவனொருவன் இருந்துள்ளது தெளிவாகிறது. கி. பி. 1ஆம் நூற்றாண்டில் 'குறவன்' என்ற தமிளி எழுத்தில் பொறிக்கப்பட்ட சங்க கால மோதிரம் ஒன்று கரூரில் கிடைத்துள்ளது.

குறவர் சிற்பங்கள்

கி. பி. 16ஆம் நூற்றாண்டில் கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் திருநெல்வேலி மாவட்டம் கிருஷ்ணாபுரத்தில் காணப்படும் குறவன் - குறத்தியரின் சிற்பங்கள் கலை நயத்துடனும் உயிரோட்டமாகவும் வடிக்கப்பட்டுள்ளன. இளவரசியைக் கடத்திச் செல்லும குறவன் கத்திக் குத்து பட்டதனால் அதன் வலியை அவன் முகத்தில் தெரியும் வண்ணம் துல்லியமாக வடித்துள்ளனர். ஸ்ரீவைகுண்டம் பிரம்மதேசம் ஆகிய இடங்களிலும் குறவர் சிற்பங்கள் காணப்படுகின்றன.

திருவிழாவில் குறவர்

கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம் குமார கோவில் திருவிழாவின் போது நம்பிராஜன் எனும் குறவர் தலைவன் வள்ளியை முருகனுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் விழா இன்றும் நடைபெற்று வருகிறது.

நாட்டார் வழக்காற்றில் நாஞ்சில் குறவன் வரலாறு

நாஞ்சில் குறவன் தாடகிமலையில் இரும்பைத் தங்கமாக்கும் பச்சிலையைக் கண்டுபிடிக்கிறான். கூடை, பெரம்பு, மொடை செய்து விற்றுப் பணம் வாங்காமல் அதற்குப் பதிலாகப் பழைய இரும்புச் சாமான்கள் பெறுகின்றான். அதைக் கொண்டு பழைய இரும்புகளையெல்லாம் தங்கமாக மாற்றுகிறான். அதனை விற்றுப் பெரும் செல்வந்தனாகிறான். இச்செல்வத்தினைக் கொண்டு மதுரை மகாராசாவிடமிருந்து நாஞ்சில் நாட்டுப் பகுதியை ஆளும் உரிமையைப் பெறுகின்றான். நாஞ்சில் குறவனுக்கு உதவியாக மதுரை மகாராசா அழகப்ப முதலியை உடன் அனுப்பி வைக்கின்றார்.

நாஞ்சில் குறவன் தன் மகனுக்கு அழகப்ப முதலியிடம் பெண் கேட்கிறான். தாழ்ந்த சாதிக்காரன் தன்னிடம் பெண் கேட்டுவிட்டான் என்ற அவமானம் பொறுக்க மாட்டாமல் அழகப்ப முதலி குறவர் கூட்டத்தினரைக் கொல்லுவதற்குப் பொறிப்பந்தல் அமைத்து அதில் திருமணம் நடத்த ஏற்பாடு செய்கின்றார். மண மகனையும், மணமகளையும் பந்தலில் உட்கார வைத்து. குறவர் கூட்டத்தின ரனைவரும் பந்தலில் கூடியிருக்கும் வேளையில் 'பொறியைத் தட்டடா புத்திகெட்ட ஆசாரி' என அழகப்ப முதலி கூறியவுடன் பொறி தட்டி கல் மண்டபம் சரிந்து விழுந்து குறவர் கூட்டத்தினரனைவரும் மாண்டு விடுகின்றனர். இது நாட்டார் வழக்காற்றில் தெரியவரும் நாஞ்சில் குறவன் வரலாறாகும்

இப்பகுதியில் அமைந்துள்ள வயல் 'குருதி வயல்' என்றே இன்றும் அழைக்கப்படுகிறது. இங்கு வயலுக்கு அடைக்கும் தண்ணீர் சிவப்பாய் இருப்பதாகக் கூறப்படுகிறது. அழகப்ப முதலி பெண்ணைக் கொன்றதால் அவர் வீட்டில் பெண் வாரிசே இல்லை எனக் கூறுவது நாட்டார் வழக்காறு. முதலியார் சமூகம் மதுரையிலிருந்து குமரி மாவட்டத்திற்கு வந்தவர்கள் எனக் கூறப்படுகிறது.

தாள் சுவடியில் நாஞ்சில் குறவன் வரலாறு

தாள் சுவடியில் காணப்படும் செய்திகள் அதில் உள்ளவாறே இப்பகுதியில் தரப்படுகின்றன.

திருவிதாங்கோடு சமஸ்தானத்துக்கு சேர்ந்த அகஸ்திசுரமண்டபத்தின் வாதிக்கலு ரெண்டு தாலுக்கும் கூடிய பனிரெண்டு பிடாகை என்கிற பனிரெண்டு மாகாணமும் சேர்ந்த சீர்மைனாஞ்சினாடு ஆண்டு வரப்பட்ட நாஞ்சில் கொறவன் வரலாறு சத அளயஎஞ செனவரி மீ எஉ தறியாபுத்து நிட்டலனாயன்னா அய்யற

பூற்வம் சேற சொள பாண்டியர் தொரத்தனங்கள் நின்று மனேமனே அறசர்களாகவும் கண்டவரெல்லாம் வேட்டக்காறறாக இருக்கிறதாளையில் கோணங்கிக் கொறவனென்றொனு கொறவன் உண்டு. அந்தக் கொறவன் யீசசன்

கசம்பு கழிச்சிம கூடைமொறம் கட்டிக் கொண்டு பழச்சிக் கொண்டு இருந்தான். ஷெ கொறறவனுக்கு ரெண்டு பெண்டாட்டி. மூத்தாளுக்கு ஒரு பிள்ளை ஷெ பிள்ளையும் பதினெட்டு வயசு காரனாக இருந்தான். இப்படி இருக்கிற நாளையிலே மேலே எழுதிய கோணங்கிக் கொறவன் பெண்டாட்டிமாறும் புள்ளையுடனே கூட புறப்பட்டு பெறம்பும் யீச்சும் கண்டவிடமெல்லாம் கழிச்சிகூடெமொறங்கள் கட்டி வித்துக் கொண்டு வருகிறபோது பூதபாண்டிக்கு கிழக்கு உள்ள தாடகிமலையில் யீச்சம் பெறம்பும் கண்டு யீச்சம் பெறம்பும் கழிச்சுக் கொண்டு றொம்பறொம்ப யீச்சிம் பெறம்பு பொதளும் கண்டு முலைக்கி ஒருத்தராக கூடைக்கி பெறம்புகழிச்சுக் கொண்டு இருக்கிறபோது ஷெ கோணங்கிகுறவன் மகன் ஒரு பெரிய பெறப்பம் பொதரை கண்டு வொதை கழிச்சிதுடங்கி அறிவாளைப் போட்டு தரையில் பொளத கழிக்கிற போது அறிவாள் சொற்னைச் சாயயாகி கண்டுது

ஷெ தான் என்னமோ வேண்டும். தாய் தகப்பனை நினைவிளிச்சிபெ புட்டு அவானனவருமாக அந்த பொளதயை சோதிணைப்பண்ண உடனே ஒரு தைலக்கிணறு காணப்பட்டது.

அந்தக் கிணறு கண்டவுடனே கூடை டடுகிற ஆங்ன இரும்பு கத்திகள் உள்ள [தெ] ல்லாம் அந்த கிணத்துல தொகச்சி எடுத்தார்கள்.

ஷெ இரும்பு துகச்செதெல்லாம் சொற்னமாக பத்தரைமாத்துத் தங்கமாக காணப்பட்டது உடனே அந்த தைலக்கிணரெ மூடி மறைத்துப் போனார்கள்

ஷெ கோணங்கிக் கொறவன் வந்து கொறத்தியரெ என்று விடுகட்டிக் கொண்டு பிறபலமாகி கொறத்தியரெ யென்று ஊர் பேறும் உண்டாக்கி நாளுக்கு நாள் வற்திச்சு குடிகளை யெல்லாரையும் வசைப்படுத்திக் கொண்டு சீமை ஆளப்பட்டவனாக தளத்தையும் சேத்து கோணங்கிக் கொரவன் ராசா வென்று பேர் எடுத்து கொரத்தியரை கிராமத்துல் பெரிய 88 அரமனைகள் கட்டிதொடு பிடாகையும் சீமை ஆண்டுக் கொண்டு வந்தானென்று சொல்லப்படுகிறது.

கொல்லம் சளருயரு ஆண்டுக்கு யிப்பறம் மேல் எழிதிய கோணங்கிக் கொறவனறாசியம் ஆண்டு வருகிற தாளைவே சுசெந்திராம் கன்னியாகுமாறி மொதலாகிய மகாசேஷத்திரங்களெல்லாம் ஷெ கொணங்கிக் கொறவன் அதிகாரத்துக்குள் பட்டு அனேகம் தற்மங்கள் பண்ணானென்றும் அந்த கோணங்கிக் கொறவன் அதிகாரத்தில் குடிகள் அவனுக்கு கொடுக்கிறதென்ன வெண்றால் ஷூ க. இ தேஞ்சம்பட்டிகாற உளவு சாமான் இறிம்புவகை எல்லாம் கொண்டு வந்து ஒப்பிச்சுப் போட்டு குடிகள் பயிரிடும் பலனை யெல்லாம் சற்வமும் குடிகளெ அனுபவிச்சுக் கொண்டு வருகிறதென்று சொல்லப்படுகிறது.

ஷெ கோணங்கிக் கோறவன் தொவாளை அ கஸ்த்திசுராமவகைகு ரெண்டு தாலுக்குலுள்ள பணிரெண்டு பிடாகையிலும் உள்ள குடிகளிடத்தில் தெஞ்சம்பட்டிக்காற யிறிம்புசாமான் கத்திக் கொண்டு அந்த இரும்புகளையெல்லாம் தான் கண்டு யிரிக்குற தாடகி மலையில் பெறப்பன் பொதிரின் கீழ் எண்ணை கிணத்துல தொகைச்சி சொற்னமக கண்டு அந்த சுவர்ணமான பத்தரை மாத்துத் தங்கத்தைக் கொண்டு வந்து தனக்கு வேண்டிய பிறகாரம் உண்டு பண்ணிக் கொண்டு வெகு

பலவானாகவும் [செ]ணைகள் செனங்களையும் வச்சுக் கொண்டு ராச்சியபாரம் பண்ணினானென்றும் சொல்லப்படுகிறது.

க. ஷெ கோணங்கிக் கொறவன் முப்பதஞ்சு வருஷம் ஆண்டு வந்தானென்று சொல்லப்படுகிறது.

உ. ஷெபடியான் மகன் பொம்மயக் கொறவன் தான் கண்ட எண்ணைக் கிணரை வெகு ரகசியமாக வைத்துக் கொண்டு திறமையிலு குடிகளுக்கு மிகவு சகாயக்காரனாக வெகுமதிகள் கொடுத்து தமக்கு ராசயோகமாக உள்ள இறிம்பு சாமான்களை வரவழைச்சுக் கொண்டு வெகுபணமும் சொர்ணம் உள்ளவனாக வெகு சனங்களை சேர்த்து பதினாயிரம் தளம் நூறு யானைகள் நூறு கொறவராகிய செனங்களையும் சேத்து வைத்துக் கொண்டு குடிகள் தன் திறமையிலுள்ளவற்கள் யெல்லாம் ஒண்ணுலு குறவில்லாமலிருக்க வேணுமென்று வெளவெல்லாம் குடிகளுக்கே விட்டு கொண்டு தானே ராசாவென்று பெறப்பட்டு குடிகளெல்லாம் வெகுவசியப்படுத்திக் கொண்டு முப்பத்தி ரெண்டு வருஷம் ஆண்டுக் கொண்டு வந்தானென்று சொல்லப்படுகிறது.

ஷெ யான் மகன் னஞ்சிக் கொறவன்யென்று வெகுபுத்திவானாக தோன்றி ஆயுதமுஸ்திசுகளும் உண்டாக்கி சுத்துப்பாணையக் காறற்களுக்கெல்லாம் மிண்டறாகவும் யாருக்கும் வணங்காமல் இருக்கிற நாளையில் ஷெ னஞ்சிக் கொறவன் ராஜ்யத்தில் யாதொரு குடிகளும் தொழுளாளிகளும் ஒண்ணுலு கொரவில்லாமல் வெகு சம்பன்னனாகயிருந்து கொண்டு ராசாவுக்கு ராசயோகம் வருடிந்தோரும் யிரிம்புயெனத்தை குடுத்து வருகிற நாளையில் ஷெ னஞ்சிக் கொறவனுக்கு பிள்ளைகள் இல்லாதே யிரிந்து அது விசாறந்துடங்கி இருந்தது.

ஷெ னஞ்சிக் கொறவனுக்கு எழுவேர் பெண்டாட்டிமாளா கலியாணம் பண்ணினான்.

ஷெ னஞ்சி கொறவனுக்கு கடசி பெண்டாட்டியானவளுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அந்த பிள்ளை புரந்த உடனே நமக்கு எழுவது வயசுக்குமேல் பிள்ளை பிறந்துதே என்று சந்தோஷப்பட்டு வேண்டிய தற்மங்களை எல்லாம் செயித்து தன்னுடைய ராச்சியத்தில் உள்ள குடிகளை எல்லாரையும் வறித்து விற்ந்து பண்ணி வெகு சந்தோஷத்துடனே குடிகளுக்கெல்லாருக்கும் பாக்கு வெத்திலெ சந்தனம் புஷ்பம் குடுத்து நீங்கள் என்ளு சாதியாரென்றும் கேழ்க்க வேளாழற் ஒசந்த சாதி யென்றும் அறிஞ்சு குடிகள் எல்லோரும் கேழ்க்கத் தக்கதாய் எனக்கு எழுவது வயசுக்கு மேல் பிள்ளை உண்டென்று தெய்வம் கொடுத்து இருப்பதுனாலே இந்த பிள்ளை பிறந்தது எனக்கு வெகு சந்துஷ்டியாச்சுது. ஆனால் என் மனசுலே ஒரு நினைப்பு இருக்கிறது. அதை நீங்கள் நடத்தி அந்த நினைப்பு னடக்கு மட்டியாயி நீங்கள் னம்முட ராச்சியத்தில் உள்ள குடிகள் யெல்லாரும் நடத்த வேணுமென்று சொன்னால் யென்னமோ வென்று அப்போதை சபையிலிருந்த குடிகள் யெல்லாவர்களும் னஞ்சி கொறவன் சொன்ன வாற்தைக்கி அப்படியே னாங்கள் நடந்து கொள்கி றோமென்று சொல்லிக் கொண்டு போனார்கள்.

ஷெ னஞ்சி கொறவன் தன் குழந்தைக்கி ஆராமாசத்தில் சொறுணறு

கலியாண மென்று மிகவும் பிறபலமாக ஆறம்பிச்சு குடிகளையெல்லாரையும் வறித்தி அவாளவாளுக்கு வெரெ வேரே ஜாதி மறியாதி பொலெ விறுந்துகளுக்கு பிரயத்தினம் செய்து வெளளாழரை குஞ்சி குடடிகள் சகிதமாயி விறிந்துக்கு வரவேணுமென்று கட்டளையிட்டு யெல்லாறுக்கும் விறிந்திட்டு சபைகுட்டி வெள்ளாழற் தவிற மத்தபெரை யெல்லாம் பாக்கு வெத்திலை செந்தணம் குடுத்துனுப்பி போட்டான்.

வெளளாழரையெல்லாம் ஒரு கூட்டமாக கூட்டி னம்முடை கொழந்தை புரந்த சந்தோஷத்தினாளே நான் கேட்டுக் கொண்டதற்கு உங்கள் மனசு மட்டி நடந்து கொள்ளுகிறோமென்று நீங்கள் சொல்லி இருக்கிறீர்களே. ஆனகனாலே உங்கள் பொண்ணை என் பிள்ளைக்கு கொடுக்க வேணுமென்று கேட்டான் னஞ்சிக் கொறவன் கேட்ட பேச்சிக்கு வதில் சொல்லத்தோணாமல் வெள்ளாழறனவரும் மனம் குழந்து இறிந்தார்கள். அப்போ பெரிய வீட்டு முதலி என குறவற் எனக்கு பெறந்து மூணு மாசமாச்சது உன் பிள்ளைக்கு என் பெண்ணைக் கொடுக்கலாகும் யென்று சொன்னார். பகுமதிகள் குடுத்து பெறிவிட்டு முதலியானுக்கு தன்னுடைய மந்திரியாகவே சகலமும் கொடுத்தான்

வெள்ளாழற்யெல்லோறும் கூடியோசித்து கொறவனை கொண்ணு போட வேணுமென்று நினைத்தார்கள்.

பெறி விட்டு முதலியாற் கொறவனுக்கு மந்திரியாக நின்று நம்முட குழந்தைகள் கலியாணம் எல்லாவரைப் போலே ஒலைப் பந்தல் கூடாது. கல்பந்தலாக வேணுமென்று சொல்லி றாச்சியத்தி உள்ள கல்களையும் கல்த்தச்சமாரையும் வறித்த அஞ்சி வருஷம் கல்பந்தல் வேலை செய்விச்சி பெறி வீட்டு முதலியாற் யோசினைனாலே கல்பந்தலுக்கு பண்டிகள் சூத்திரம் வச்சாற என்று சொல்லப்படுகிறது

மேலெழுதிய னஞ்சி கொறவன் பிள்ளைக்கு அஞ்சாம் வயசு நிறயற காலத்தில் பெறி வீட்டி முதலியாற் பெண்ணை கலியாணம் பண்ண வேணுமென்று நினைத்து கலியாணத்துக்கு வேண்டியதுகளெல்லாம் வருத்து சகலமானங்களயும் வருத்தி கலியாணப் பந்தலில் பெண்ணும் பிள்ளையயும் உள்க்காற வைச்சுகிறது தந்திரங்களெல்லாம் நடத்தி நீங்கள் யெல்லாறும் உங்கள் கொறசாதி அனவரும் பந்தலில் இருக்க வேணுமென்றும் பிள்ளை மனைமேல் இருக்க வேணுமென்றும் பொண்ணை பெண்ணை அம்மாள் எடுத்துக் கொண்டு மேள தாளத்துடனே பந்தலில் உள்ள சம பந்தியெனத்தாரை சுத்தி வந்து பின்னே புள்ளை பொண்ணுக்குத்தாலி கட்டுகிற எங்கள் வெள்ளாழசாதி வழக்கமென்று சொல்லி திட்டப்படுத்தி கொறசாதி வகைக்காரரெல்லாரை கல்பந்தலில் உள்காரவச்சி மெளகாறற் றெல்லாரை கல் பந்தலில் உள்காரவச்சி மெளகாறற் றெல்லாரை கல் பந்தலில் உள்காறவச்சி மேணகாறற் மத்துள [பேர்] கள் கூடிவெள்ளாழற் யெல்லா பொண்ணை தூக்கிக் கொண்டு மேளதாளத்துடனே கல்பந்தல் சுத்தி வருகிற போது கல்பந்தலுக்கு உள்ள சூத்திரம் திருப்பின உடனே கல்பந்தல் விழுந்து கொறவற்னசிச்சி போனார்களென்று சொல்லப்படுகிறது

நாஞ்சிக் குறவன் ஆண்டபடியினாலே அந்த னாட்டுக்கு நஞ்சினாடென்று பேறவரபபட்டதென்றும் கொறவற் பட்டத்துக் குறத்தியரையென்று இப்பவும் தென்றும் சொல்லப' 'டுகிறது.

னாஞ்சினாட்டில் உயருந் கோட்டை நெல் விரைப்பு நஞ்சை பூமியென்றும் புத்தனாடு கோட்டையும் ஆக உயஅ க் கோட்டையும் விளை லக்ஷத்துமுப்பத்து னாயிரம் பணவு

னாஞ்சினாடு ஆண்டு வரப்பட்ட யெடைப்பாளைக் காறனாகியும் தெஞ்சம்பட்டி கொளுக்காற முதலான யிர்ம்பு சாமான் வாங்கிக் கொண்டு கொறத்தியரை ராசதாணியில் ஆண்ட கொறவற்வ ஞூ கொல்லம் சளருயரு ஆண்டுகிப்பிறம்

க. கோணங்கிக் கொறவன் பட்டம் - ஞூ ஙயரு

உ. ஷெயான் மகள் பொம்மய குறவன் - ஞூ ஙயஉ

ங. ஷெயான் மகன்னஞ்சி கொறவன் கொறவற் பட்டம் - ஞூ எயரு

கொல்லம் ருளகூ ஆண்டு கிப்பறம் மேல் எழிதிய னுஞ்சினாட்டுக்கு பெரிய வீட்டு முதலி முதலாகிய வெள்ளாழரை அதிபதிகளாக இருந்தார்கள் என்றும் அப்பால் அரைமனையாய் பாபு அவர்கள் சற்காறிலே.. மகுடுக்க திருவாங்கோடமலயாளம் ராசாவுக்கு ஷெ னாஞ்சினாடு திருவிதாங்கோடு சமுஸ்தானத்தை சேறப்பட்டுதென்றும் சொல்லப்படுகிறது.

நாஞ்சிக் குறவன் குறத்தியறையை தலைநகராகக் கொண்டு நாஞ்சி நாட்டை ஆண்டு வந்துள்ளான். நாஞ்சிக் குறவன் ஆண்டதால் 'நாஞ்சில் நாடு' என்றும் குறவர் பட்டம் இருந்ததினால் 'குறத்தியறை'[1] என்றும் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

காலம் : கொல்லம் 455 -க்குப் பின் (கி. பி. 1279க்குப் பின்)

1. கோணங்கிக் கொறவன் 2. பொம்மய கொறவன் 3. நாஞ்சிக் கொறவன் என்ற மூன்று குறவர் ராசாக்கள் 142 ஆண்டுகள் நாஞ்சில் நாட்டுப் பகுதியினை ஆண்டு வந்துள்ளனர். இவர்களது ஆட்சி எந்த ஆண்டிலிருந்து தொடங்கியது என்று சரியாகக் குறிப்பிடப்படவில்லை. கொல்லம் 455க்குப் பின் என்றுதான் தாள் சுவடி குறிப்பிடுகிறது. கொல்லம் 509க்குப் (கி. பி. 1333க்குப் பின்) பின் நாஞ்சில் நாட்டுக்குப் பெரிய வீட்டு முதலி முதலாகிய வெள்ளாளரே அதிபதிகளாக இருந்துள்ளதாகத் தாள் சுவடி குறிப்பிடுகின்றது. இதிலிருந்து கி. பி. 1279 - 1333க்கும் இடைப்பட்ட காலத்தில் நாஞ்சில் குறவர் ஆட்சி இருந்துள்ளது தெரியவருகிறது. சுமார் 54 ஆண்டுகள் இவர்களது ஆட்சி இருந்திருக்கலாம். ஆனால் ஒவ்வொரு இராசாவும் ஆண்ட வருடங்களின் கூட்டுத் தொகை தாள் சுவடியின்படி 142 ஆண்டுகள் (35 + 32 + 75) ஆகிறது. ஆட்சிக் காலம் முரண்படுவது காலம் தவறுதலாகக் குறிக்கப்பட்டுள்ள தென்பதை உறுதிப்படுத்துகிறது.

இறுதியாகக் கொல்லம் 992இல் (கி. பி. 1817இல்) தாது வருடம் தனு மாதம் 24ஆம் தேதி நாஞ்சில் நாடு திருவிதாங்கோடு சமஸ்தானத்திலே சேர்க்கப்பட்டதாகத் தாள் சுவடி குறிப்பிடுகிறது.

---

1. சமணப் பெண் துறவியரான குறத்திகள் வாழ்ந்த குகை உள்ள இடம் என்பதால் குறத்தியறை என்று வழங்கப்படுவதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது

நாஞ்சில் குறவன் வரலாறு பற்றி நாகம்மையாவின் திருவிதாங்கூர் மாநில நூல் தொகுதி 1இல் (Travancore State Manual Vol - I) குறிப்பு காணப்படுகிறது பாண்டிய நாடு இசுலாமியரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த போது திருவிதாங்கூர் ராஜ்யத்தில் நாஞ்சில் குறவன் நாஞ்சில் நாட்டைக் கைக்கொண்டு குறுநில மன்னனாக இருந்து வந்தான் மதுரை அரசு இசுலாமியரிடமிருந்து விடுபட்ட பிறகு கி. பி. 1117இல் (292 M. E.) திருவிதாங்கூர் மன்னன் நாஞ்சில் குறவனையும் அவனது மக்களையும் விரட்டியடித்தான் என இந்நூல் குறிப்பிடுகிறது. தாள் சுவடி குறிப்பிடும் வரலாறும் காலமும் சிற்சில மாற்றங்களுடன் நாகம்மையாவின் நூலில் காணப்படுகிறது. கோணங்கிக் குறவனே தைலக் கிணற்றைக் கண்டுபிடித்ததாக இந்நூல் குறிப்பிடுகிறது. ஆனால். தாள் சுவடி அவனது மகன் பொம்மையக் கொறவனே கண்டுபிடித்ததாகக் குறிப்பிடுகின்றது நாஞ்சில் நாடு திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் இணைந்த ஆண்டு கி பி 1817 எனத் தாள் சுவடி குறிப்பிடுகிறது. திருவிதாங்கூர் மன்னன் நாஞ்சில் குறவனையும். அவனது மக்களையும் விரட்டியடித்த ஆண்டு கி. பி. 1117 எனக் குறிப்பிடுகின்றது. இவ்விரண்டிற்கும் 700 ஆண்டுகள் வித்தியாசப்படுகிறது. இக்கால முரண்பாடுகள் இதன் வரலாற்றுத் தன்மையினையும் உண்மையினையும் ஐயப்பட வைக்கிறது.

ஆட்சிப் பரப்பு

நாஞ்சில் கொறவர் ஆட்சியின்கீழ் இருந்த ஆட்சிப் பரப்பு அகஸ்தீஸ்வர மண்டலத்தில் உள்ள அகஸ்தீஸ்வரம். தோவாளை ஆகிய இரண்டு தாலுகாக்களுடன் கூடிய 12 பிடாகைகள் எனத் தாள் சுவடி குறிப்பிடுகிறது. தற்போதைய கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம். தோவாளை. கல்குளம். விளவங்கோடு என நான்கு வட்டங்கள் கொண்டதாக விளங்குகின்றது. இவற்றுள் நாஞ்சில் நாடு எனப்படுவது அகஸ்தீஸ்வரம். தோவாளை ஆகிய வட்டங்கள் அடங்கிய பகுதியாகும். கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டங்கள் அடங்கிய பகுதி வேணாடு என வழங்கப்பட்டது. தாள் சுவடி குறிப்பிடும் தாடகிமலைப் பகுதி தோவாளை வட்டத்தில் பூதப்பாண்டிக்குக் கிழக்கேயுள்ள மலைப் பகுதியாகும் குறத்தியறை தலைநகராக விளங்கியுள்ளது. இது இராசதாணி எனத் தாள் சுவடி குறிப்பிடுகிறது. மதுரை மகாராசாவிடம் ரூ 1. 30. 000 விலை கொடுத்து நாஞ்சில் நாட்டில் 25 கோட்டையும் (நெல் விதைப்பு நஞ்சை பூமி) புத்த நாட்டில் 3 கோட்டையும் ஆக உயர் கோட்டை 28உம் நஞ்சை பூமியும் நாஞ்சில் கொறவன் விலை கொடுத்து வாங்கினான் எனத் தாள் சுவடி குறிப்பிடுகின்றது.

அழகப்பமுதலியும், பெரிய வீட்டு முதலியும்

மதுரை மகாராசா நாஞ்சில் குறவனுக்கு அமைச்சராக அழகப்ப முதலியை உடன் அனுப்பி வைத்தார் என நாட்டார் வழக்காறு குறிப்பிடுகிறது. நாயக்கர் ஆட்சியின் போது முதலியார் சமூகத்தினைச் சேர்ந்தவர்கள் முக்கியப் பதவிகளில் இருந்துள்ளனர். இவர்கள் மதுரையிலிருந்தே குமரி மாவட்டத்திற்கு வந்துள்ளனர். கன்னியாகுமரி காசி விசுவநாதர் கோயில் முக மண்டபத்திற்கு அழகப்பமுதலி ஒரு தூண் கொடையாக அளித்துள்ளார். கி.பி. 18ஆம் நூற்றாண்டு எனப் பொறிக்கப்பட்டுள்ளது. நாஞ்சில் கொறவன் பெண் கேட்ட அழகப்பமுதலி இவர்தானா என்பது ஆய்விற்குரியது. தாள் சுவடியில் நாஞ்சில் குறவன் அமைச்சராகப் பெரிய வீட்டு முதலி என்பவர் குறிப்பிடப்படுகிறார்.

குறவர் குடியிருப்புகள்

நாகர்கோவிலிலுள்ள மீனாட்சிபுரம் சாலை முன்பு 'குறத்தியரை முடுக்கு' என வழங்கப்பட்டுள்ளது. இதே போல் திருவள்ளுவர் தெரு முன்பு குறவன் முடுக்கு என வழங்கப்பட்டுள்ளது. இதிலிருந்து குறவர் குடியிருப்புகள் நகரம் உள்பட மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்திருக்கிறது என ஊகிக்க இடமுள்ளது.

சோறுணறு கல்யாண விழா

தாள் சுவடியில் சோறுணறு விழா குறிப்பிடப்படுகிறது. குமரி மாவட்டத்தில் குழந்தை பிறந்து ஆறு மாதம் கழித்து முதன் முதலில் அக்குழந்தைக்கு அரிசி உணவு கொடுப்பதை ஒரு குடும்ப விழாவாகக் கொண்டாடுவது இன்றும் வழக்கில் உள்ளது. இதனைச் 'சோறு கொடுத்தல்' என அழைக்கின்றனர். பெரும்பாலும் கோயில் பிரசாதத்தை வைத்துச் சோறு ஊட்டுவது வழக்கம். அதில் சோறு, சர்க்கரைப் பாயாசம் மற்றும் மிளகு ஆகியன முதலில் ஊட்டும் உணவாக அமைந்துள்ளது. இதனையே உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரையும் அழைத்து ஒரு விழாவாகக் கொண்டாடுகின்றனர். இதுவே 'சோறுணறு கல்யாணம்' எனத் தாள் சுவடி குறிப்பிடுகின்றது.

தாள் சுவடியில் எடுத்தாளப்பட்டுள்ள மலையாளச் சொற்கள்

இத்தாள் சுவடியில் ஏராளமான மலையாளச் சொற்களும் வடமொழிச் சொற்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. குமரி மாவட்டமும் கேரளமும் அருகருகே இருக்கும் பகுதிகளாகும். எனவே, மலையாள மொழியின் தாக்கம் குமரி மாவட்டத்தில் காணப்படுவது இயல்பே. தாள் சுவடியில் பயன்படுத்தப்பட்டுள்ள மலையாள மற்றும் வடமொழிச் சொற்களும் அதற்கு இணையான தமிழ்ச் சொற்களும் வருமாறு :

மலையாளச் சொற்கள்

1.	ப[பி]ழச்சி கொண்டு	- வாழ்ந்து கொண்டு
2.	கழிச்சி	- வெட்டி நீக்கி
3.	சொற்னச் சாய	- தங்க நிறமாகி
4.	நிளை விளிச்சி	- கூவி அழைத்து
5.	தைலக் கிணறு	- எண்ணெய்க் கிணறு
6.	ஆங்ஙன	- அங்கே
7.	தொகச்சி	- நனைத்து
8.	வற்திச்சு	- பெருகி (அ) வளமாகி
9.	சேஷ்த்திரங்	- கோயில்
10.	ஒப்பிச்சுப் போட்டு	- ஒப்படைத்து
11.	சகாயக்காரணாக	- உதவி செய்பவனாக
12.	விசாரந்	- கவலை

13. வறித்தி - வரவழைத்து

14. சந்துஷ்டி - மகிழ்ச்சி

15. குஞ்சி குட்டிகள் சகிதமாயி- குழந்தை குட்டிகளோடு

16. னசிச்சு - நசுங்கி, நாசமாகி

வடமொழிச் சொற்கள்

1. பூற்வம் - பண்டைக்காலம்
2. பிறபலமாகி - புகழ் பெற்று
3. மகாசேஷ்த்திரங் - புண்ணிய பூமி
4. சற்வமும் - அனைத்தும்
5. ராச்சியபாரம் - ராசாங்கம்
6. வருஷம் - ஆண்டு
7. சகாயக்காரணாக - உதவி செய்பவனாக
8. ஆயுத முஸ்திசுகளும் - படை ஆயத்தங்கள்
9. வெகு சம்பன்னனாக - பேரும் புகழுமுடையவனாக
10. வெகு சந்தோஷத்துடனே- மிக்க மகிழ்ச்சியுடனே
11. புஷ்பம் - பூமலர்
12. பிரயத்தினம் - முயற்சி
13. சூத்திரம் - பொறி
14. றாசதானி - ராசாங்கம், அரசு
15. சமஸ்தானம் - ராசாங்கம்

முடிவுரை

நாஞ்சில் குறவன் ஆட்சி நடைபெற்றதாகக் குறிப்பிடப்படும் கால கட்டத்தில், அதாவது கி பி. 1279 - 1333க்கு இடைப்பட்ட காலத்திலும் அதற்கு முன்பும் மதுரை மகாராசாவாக சடாவர்மன் சுந்தர பாண்டியன் (கி பி. 1251 - 1310) இருந்துள்ளான். இவனுக்கும் வீரபாண்டியனுக்கும் இடையில் நடைபெற்ற வாரிசுரிமைப் போரில் மாலிக்காபூர்-துணையுடன் வீரபாண்டியனை வென்று ஆட்சிக் கட்டிலேறியவனாவான் அவனி வேந்தராமன், கோதண்டராமன் என்ற விருதுப் பெயர்களுக்கு உரியவனே இந்தச் சடாவர்மன் சுந்தரபாண்டியனாவான். எனவே இம்மன்னனிடமிருந்தே நாஞ்சில் குறவன் நாஞ்சில் நாட்டை விலைக்கு வாங்கியிருக்க வேண்டும். இதுகாறும் கிடைத்துள்ள சடாவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டுக்களில் நாஞ்சில் குறவன் பற்றிய குறிப்பு ஏதும் காணப்படவில்லை.

நாஞ்சில் குறவன் அரசாண்ட வரலாறு உண்மையாக நிகழ்ந்தது என்பதற்கான ஆதாரங்கள் ஏதும் இதுகாறும் கிடைக்கப் பெறவில்லை. குமரி மாவட்டத்தினுடைய வரலாறு காலமுறைப்படி, பிரதேச முறைப்படி, அரச பாரம்பரிய

முறைப்படி இன்றும் தெளிவுபட எழுதப்படவில்லை. மூன்று பேரரசுகளின் ஆட்சி அமைவுக்குள் மாறி மாறி அகப்பட்டதற்கான சான்றுகள் கிடைக்கப்பெறுவதால் இம்மண்ணின் வரலாறு இன்னும் குழப்பம் நிறைந்ததாகவும் தெளிவு பெறாததாகவும் இருந்து வருகிறது. எனவே நாட்டார் வழக்காற்றில் வலுவாகப் பேசப்படும் நாஞ்சில் குறவன் வரலாற்றினைப் பொய்யென்று ஒதுக்கவும் இயலவில்லை

நாட்டார் வழக்காற்றில் வழங்கப்பட்ட கதையின் அடிப்படையிலேயே சிற்சில மாற்றங்களுடன் தாள் சுவடியும் எழுதப்பட்டுள்ளது. தாள் சுவடி கி. பி. 1817இல் எழுதப்பட்டிருக்கிறது. இதன் இறுதியில் "திருவிதாங்கோடு சமஸ்தானத்தை சேரப்பட்டதென்று சொல்லப்படுகிறது" என எழுதப்பட்டுள்ளது. 'சொல்லப்படுகிறது' என்பதிலிருந்து நாட்டார் வழக்காற்றுக் கதையின் அடைப்படையிலேயே இச்சுவடி எழுதப்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது.

□

க. தனலெட்சுமி
ஆய்வாளர்
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

மராத்தியர் கால வழக்குகளும் தண்டனைகளும்

போசள குலத்தைச் சார்ந்த மராத்திய மன்னர்கள் தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டு கி. பி. 1676 முதல் கி. பி. 1855 வரை 13 அரசர்கள் 180 ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்கள் காலத்தில் நீதி மன்றங்கள் எவ்வாறு செயல்பட்டன என்பதை அறிய மோடி ஆவணங்கள் தக்க சான்றுகளாக விளங்குகின்றன. மராத்தியர் கால நீதிமன்றங்களில் எவ்வகையான வழக்குகள் நடைபெற்றன என்றும் அதற்கு வழங்கப்பட்ட தண்டனைகள் குறித்தும் இக்கட்டுரை ஆராய்கிறது

நீதிமன்ற முறைகள்

நாயக்கர்களைப் பின்பற்றி மராத்திய மன்னர்கள் நீதி வழங்கினர். தொடக்க காலத்தில் நாட்டின் நிர்வாகத் தலைவராக இருந்த அரசரே நீதியின் பிறப்பிடமாக விளங்கினார் நாடு பல நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. எனவே சுபேதார், அமல்தார், மற்றும் கிராமப் பஞ்சாயத்துக்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் விசாரணைகளை மேற்கொண்டு தீர்ப்பு வழங்கின. பின்னர் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப் பெற்றன.

மராத்திய மன்னர் ஷாஜி சிவில், கிரிமினல் நீதிமன்றங்களை முதலில் ஏற்படுத்தினார் பின்னர்ப் பிரதாப்சிங் நீதிமன்றங்களை ஏற்படுத்தித் தலைநகரில் நீதிபதியையும் அவருக்கு உதவியாக நீதிமன்ற ஆணைகளைப் பதிவு செய்து வைப்பதற்காகக் கணக்குப் பிள்ளையையும் நியமனம் செய்தார் இந்த நீதிமன்றம் வழக்குகளை விசாரித்து அரசரிடம் மேல்முறையீட்டிற்காக அனுப்பியது. அமர்சிங் காலத்தில் நீதி நிர்வாகமுறை மிகவும் ஊழல் நிரம்பியதாகவும், சீர்கெட்ட நிலையினதாகவும் விளங்கியது. நீதிபதிகள் ஒழுக்கமற்றவர்களாக இருந்தனர்.

அமர்சிங்கிற்குப் பின்னர் வந்த இரண்டாம் சரபோசி ஊழல்களை நீக்கி நாட்டின் நிர்வாகத்தைச் சீர் திருத்தி அமைத்தார் இதனால் நீதிமன்றங்கள் மீண்டும் பொலிவு பெற்றன. சரபோசி அரசரான பின்பு கி. பி. 1800இல் நான்கு நீதிமன்றங்கள்

ஏற்படுத்தப் பெற்றன.[1]

தஞ்சை மராத்தியர்கள் நியாய சபா, முத்ரிதசபா, தர்ம சபா, நியாயதீச சபா என்ற நால்வகை நீதி மன்றங்களை ஏற்படுத்தி இருந்தனர். ஒவ்வொரு நீதிமன்றத்திலும் ஒவ்வொரு வகைப்பட்ட வழக்குகள் விசாரணை செய்யப் பெற்றன. நியாய சபை குற்றவியல் வழக்குகளையும், முத்ரித சபை சொத்துரிமை பற்றிய வழக்குகளையும், தர்ம சபை கோயில் மற்றும் தர்ம ஸ்தாபனங்களின் வழக்குகளையும் விசாரணை செய்தன. நியாயதீச சபை எனப்பட்ட 'பிரதிஷ்டித சபா', மேற்கூறிய மூன்று நீதி மன்றங்களில் விசாரணை செய்யப்பட்ட வழக்குகளுக்கு 'மேல் முறையீட்டு நீதிமன்றமாக' விளங்கியது.

'முத்ரித சபை' சிறிய வழக்குகளை விசாரணை செய்யும் நீதி மன்றமாகச் செயல்பட்டது. இங்கு 100 ரூபாய்க்குக் குறைவான வழக்குகள் விசாரணை செய்யப்பட்டன. நியாய சபையும், முத்ரித சபையும் தங்கள் சபையில் விசாரிக்கப்பட்ட வழக்குகளை மேல் முறையீட்டிற்காகத் தர்ம சபைக்கு அனுப்பி வைத்தன.[2]

'தர்ம சபை' மிகப் பெரிய சபையாகக் கருதப்பட்டது. ஏனெனில் இங்கு 100 சக்கரத்திற்கு மேலான வழக்குகள் விசாரித்துத் தீர்க்கப்பட்டன. மேலும் பிரதிஷ்டித சபையில் எல்லா வகை வழக்குகளும் விசாரிக்கப்பட்டன. 1827க்குரிய ஓர் ஆவணத்தின் மூலம் இச்சபையில் இரண்டுக்கு மேற்பட்ட நியாயாதிபதிகள் இருந்தனர் என்பது தெரிய வருகிறது. மேலும் மற்ற நான்கு சபைகளின் சட்ட ஆட்சி (விசாரணை) எல்லைக்குள் (Jurisdiction) வாராதவை பிரதிஷ்டித சபையில் விசாரிக்கப் பெற்றன

மேல் முறையீட்டு மன்றங்கள்

நியாயநிசி மஹால்

இம்மஹால் முக்கியமான மேல் முறையீட்டு மன்றமாகச் செயல்பட்டது. அதில் எல்லா வழக்குகளுக்கும் அரசர் வழங்கும் தீர்ப்பே இறுதியானது. இங்கு கொலை மற்றும் பெரிய அளவிலான திருட்டு சம்பந்தப்பட்ட வழக்குகள் விசாரணைக்காக வந்தன. ஆனால் நால்வகை நீதிமன்றங்கள் ஏற்பட்டதால் நீதி வழங்கும் பொறுப்பு அரசரிடம் இருந்து நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டது. இதனால் நியாயநிசி மஹால் என்ற அமைப்பு மறைந்து போயிற்று.

கார்பார் பிரசங்கம்

நியாய சபை, முத்ரித சபை, தர்ம சபை போன்றவற்றின் மேல் முறையீடுகள் பிரதிஷ்டித சபையிலும், சரிவர விசாரிக்கப்பட்டுத் தீர்க்கப்படாமல் இருக்கும் போது அவ்வழக்குகள் கார்பார் பிரசங்கத்திற்கு அனுப்பித் தீர்க்கப்பட்டன. கார்பார் பிரசங்கத்தில் தர்ம சபையில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு மேல்முறையீடு செய்யப்பட்டது. இங்கு நீதியை நிலை நாட்டுவதற்காக வழக்கு சம்பந்தப்பட்ட

---

1 N. Subramanian, **History of Tamil Nadu (A. D. 1565 - 1956)**, p 242.

2. பா சுப்பிரமணியன் (ப ஆ) **தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும்** பக். 195 - 196

ஆவணங்கள் வரவழைக்கப்பட்டு ஆராயப்பட்டன. பின் 'இசுபால்' என்ற சபைக்கு மேல் முறையீட்டிற்கு அனுப்பி நியாயம் வழங்கப்பட்டது. கார்பார் பிரசங்க சபாவில் ஹுஜுர்நவிஸ் என்ற அரசரின் தலைமைச் செயலர் நீதிபதியாக இருந்தார்.

சபா மஜ்கூர்

இது நான்கு சபைகளின் தீர்ப்பையும் எதிர்த்து மேல் முறையீடு செய்யும் நீதிமன்றமாகும். நியாய சபை, நியாயதீச சபை, தர்ம சபைகளில் தீர்ப்புகள் வழங்கியதை எதிர்த்துச் சபா மஜ்கூரில் முறையீடு செய்து நியாயம் பெற்றதாகப் பல்வேறு குறிப்புகள் காணப்படுகின்றன.

அரசர்கள்

சபைகளில் வழக்குகள் விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்புகள் கூறப்பட்டாலும் அவை நேர்மையான வகையில் இருக்கவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது வழக்கைப் பற்றிய விவரங்களை அரசருக்குத் தெரிவித்து நியாயமான தீர்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அரசர் வழங்கும் தீர்ப்பே இறுதியானதாக இருந்தது அரசரது தீர்ப்பை மாற்றும் அதிகாரம் யாருக்கும் இல்லை. இதனால் அரசர் எந்தச் சபையில் கூறப்பட்ட தீர்ப்பையும் மாற்றி அமைக்கும் உரிமை உடையவராக இருந்தார் என்பதை அறியமுடிகிறது

அதிகாரிகள்

ஒவ்வொரு நீதிமன்றத்திலும் இருந்த நீதிபதி அத்யக்ஷ எனப்பட்டம் பெற்றிருந்தார். 'தபனகர்த்தா' என்பவர் ஒவ்வொரு மன்றத்தின் தலைமை அதிகாரியாக இருந்தார் திம்மத் என்ற அதிகாரியின் கையொப்பம் தாங்கியே தீர்ப்புகள் கூறப்பட்டன மன்றங்களிலிருந்து வெளிவரும் ஆவணங்களும் தீர்ப்புகளும் பட்னாவிஸ் என்ற அதிகாரியின் முத்திரையைப் பெற்றிருந்தன.[3] நியாய சபாவில் 17 பேர் நியாயதீச சபையில் 17 பேர். தர்ம சபையில் 15 பேர். முத்ரித சபையில் 34 பேர் என்ற அளவில் அதிகாரிகள் பணிபுரிந்தனர். முத்ரித சபாவில் அதிகமான சிவில், கிரிமினல் வழக்குகள் விசாரணைக்கு வந்தன.

வழக்குகளும் விசாரணைகளும்

வேத சாஸ்திரம், தர்மம், நியாயங்களில் சிறந்தவர்கள் அடங்கிய சிறிய கூட்டத்தினர் பண்டிதர்களாகவும், நீதிபதிகளாகவும் விளங்கினர். இவர்கள் இந்து தர்ம சாஸ்திர முறைப்படிச் சாஸ்திரங்கள், வடமொழி கிரந்தங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தித் தீர்ப்புகளைக் கூறினர். சரஸ்வதி மகாலிலுள்ள தர்ம சாஸ்திரிகள் இந்நூல்களைப் பார்த்துக் கூறிய கருத்துக்களைக் கொண்டும், தர்ம சாஸ்திரிகளிடமிருந்து அந்நூல்களைப் பெற்றும் அதன்படித் தீர்ப்புகள் முடிவு செய்யப்பட்டன. விஞ்ஞானேசுவரி போன்ற கிரந்தங்களைக் கொண்டு தண்டனை அளிக்கப்பட்டது

---

3 ஆர் ஜெயராமன், 'தஞ்சை மராட்டிய மன்னர் காலத்தில் மக்கள் வாழ்க்கை நிலை', **தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக் கருத்தரங்கு** 1983.

நீதிமன்றங்களில் வழக்குகளை முத்திரையுடைய பத்திரங்களின் மேல் எழுதிக் கொடுக்க வேண்டும். முத்திரைப் பத்திரங்களில் எழுதப்படாத மனுக்கள் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளபடாமல் தள்ளுபடி செய்யப்பட்டன. இதற்காக நீதிமன்றங்களில் முத்திரைப் பத்திரங்கள் தயாரித்து விற்பனை செய்யப்பட்டது. 10 பணத்திற்குக் குறைவான வழக்குகள் பற்றிய மனுக்கள் முத்திரைக் காகிதத்தின் மேல் கொடுக்க வேண்டியதில்லை. வழக்குகளின் மதிப்பிற்கேற்ப முத்திரைப் பத்திரங்களின் மதிப்பும் அதிகரிக்கப்பட்டது என்பதைப் பின்வரும் குறிப்பு தெரிவிக்கிறது.

வழக்கின் மதிப்பு	**முத்திரைப் பத்திரத்தின் மதிப்பு**
ரூ 16 - 64	2 அணா
ரூ 65 - 125	¼ ரூ
ரூ 126 - 250	½ ரூ
ரூ 251 - 500	1 ரூ
ரூ 501 - 1000	2 ரூ
ரூ 1001 - 2000	4 ரூ
ரூ 2001 அதற்கு மேல்	8 ரூ

நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்ட வழக்குகள் பல்வேறு பெயர்களில் குறிப்பிடப் பெற்றிருக்கின்றன. அவையாவன .

1. ஸ்தேயபதம்	சபையில் விதிக்கப்பட்ட அபராதத் தொகையைச் செலுத்துவதற்குக் காலக் கெடு கேட்டுப்பெறப் படும் வழக்கு[4]
2. ரிணாதானபதம்	கடன் பாக்கி பற்றிய வழக்கு[5]
3. பிரகீர்ணகபதம்	நாட்டின் பொதுவாக சொத்துக்களை ஆக்ரமிப்புச் செய்தவர்கள் மீது போடப்படும் வழக்கு[6]
4. சாஹஸபதம்	வன்முறை பற்றிய வழக்கு[7]
5. நிஷபதம்	ஏழைகளைப் பற்றிய வழக்கு[8]
6. அர்த்த சம்பக்திக்க பதம்	நிலையில்லாப் பொருள் பற்றிய வழக்கு[9]
7. பூமிவர்த பதம்	நிலங்கள் பற்றிய வழக்கு[10]
8. தாயபாகம்	தாயாதிகள் அங்கங்களுக்குள் பிரித்துக் கொள்ளும் உரிமை பற்றிய வழக்கு[11]
9. பூர்வீக சொத்தின் பதம்	மூதாதையர்கள் தேடிய சொத்துக்களைப் பெறத் தொடுக்கப்படும் வழக்கு[12]
10. நிட்சே பதம்	குற்றவாளிக்கு ஜாமீன் கொடுத்தல் பற்றிய வழக்கு[13]

4-13. பா சுப்பிரமணியன் (ப. ஆ.), **மு. கா. நூல்** தொகுதி 2 பக் 432, 419, 424, 426 427, 443, 464, 556, 428, 444.

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வழக்குகள் விசாரணை செய்யப்பட்ட பின்னரும், ஒரு சபையிலிருந்து மற்றோர் சபைக்கு மேல் முறையீட்டிற்காக அனுப்பப்பட்டு விட்டாலும், வழக்குத் தொடுத்தவர் சபைக்கு ஒழுங்காக வராதபோதும், முத்திரைப் பத்திரங்களில் வழக்குகள் எழுதப்படாதபோதும் அவ்வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டவர்க்கு ஆஜர் சாமீன் தரப்பட்டது. அரண்மனையில் குற்றவாளியை எந்த நாளில் ஆஜர் படுத்துவதாகக் கூறிக் குற்றவாளிக்குப் பொறுப்பேற்று ஒருவர் அளிக்கும் உறுதி மொழியானது ஆஜர் சாமீன் ஆகும். நீதிமன்றத்தில் வாதியும், பிரதிவாதியும் நேரில் ஆஜராகித் தங்கள் வழக்குகளை எடுத்துரைத்தனர். வாதிக்கும், பிரதிவாதிக்கும் தனிப்பட்ட முறையில் வாதாடுவதற்காக வழக்குரைஞர்கள் போன்றவர்கள் இல்லை. நீதிபதி இரு தரப்பினரின் வாதங்களையும் கேட்ட பின் தீர ஆராய்ந்து தீர்ப்புகளை வழங்கினார் இதற்காகச் சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். இவ்வாறாக மராத்தியர் ஆட்சியின் போது பலவிதமான நீதிமன்றங்களில் பல வகையான வழக்குகள் நடைபெற்றன.[14]

தண்டனைகள்

இவர்கள் காலத்தில் குற்றங்களுக்கு ஏற்றவாறு தண்டனைகள் அளிக்கப்பட்டன. மேலும் பெரிய குற்றங்களுக்குப் பெரிய அளவிலான தண்டனைகளும், சிறு குற்றங்களுக்குச் சிறு தண்டனைகளும் வழங்கப்பட்டன.

திருட்டு, பொய்ச் சாட்சி சொல்வது, பொய்ப் பத்திரம் தயாரித்தல், கலப்படம் செய்தல், சுகாதாரக்கேடு விளைவித்தல் போன்றவை குற்றங்களாகக் கருதப்பட்டன. குற்றம் செய்தவர்களுக்குக் கடுங்காவல் அபராதம், கோட்டை எல்லையிலிருந்து நாடு கடத்தல் போன்ற தண்டனைகளுடன் கசையடி பிரம்படியும் விதிக்கப்பட்டன.

திருடுவது மிகப் பெரிய குற்றமாகக் கருதப்பட்டு அத்திருட்டைச் செய்தவர் கடுமையாகத் தண்டிக்கப் பெற்றார் இரும்புச் சங்கிலி திருடியவனைப் பிடித்து 1 மாதம் அவன் கண்களைக் கட்டிக் கால்களில் சங்கிலி பூட்டி அவனிடம் மராமத்து வேலைகள் வாங்கப்பட்டன. பின் சங்கிலியை அவிழ்த்து விட்டு மூட்டையுடன் கோட்டை வெளியில் 4 வீதிகளிலும் அவனை அலையவிட்டனர். ஒவ்வொரு வீதியிலும் கால் முட்டிக்குக் கீழ் பிரம்பால் 12 அடிகள் முதல் 24 அடிகள் வரை அடித்துவிடப்பட்டது சிலரிடம் சென்னைப் பட்டின ரூபாய் நாணயங்களில் அபராதத் தொகையும் வசூலிக்கப்பட்டது.

பொய்ச் சாட்சி, பொய்ப் பத்திரம் தயார் செய்தவர்கள் உடல் முழுவதும் கருப்பு, வெள்ளைப் புள்ளிகளை இட்டுக் கழுதையின் மேல் வால் பக்கம் முகம் இருக்குமாறு உட்கார வைத்துக் கழுத்தில் எருக்கம்பூ மாலைகளைப் போட்டுக் குற்றத்தின விவரத்தைக் கூறி 4 வீதிகளிலும் சுற்றி வர்ச் செய்து 5, 6 ஆண்டுகள் சிறையில் அவர்கள் அடைக்கப்பட்டனர். மேலும் பொய் முத்திரை தயாரிததவர்களுக்குக் கன்னத்திலும், நெற்றியிலும் 35 தமிழ் எழுத்துக்கள் பச்சை குத்தப்பட்டன[15]

---

14 **மோ. ஆ. குறிப்புகள்** 11 - 13, 19

15 **மோ. ஆ. கு.** 9 - 9

குற்றவாளிக்கு இரு மடங்குத் தண்டனை அளிக்கப்பட்டபோது. அவனுக்காகப் பொய்ச் சாட்சி சொன்னவனுக்கு 1 மடங்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. குற்றவாளிக்கு 6 அடி வீதம் 4 வீதிகளிலும் அடிக்கப்பட்டது போல் பொய்ச் சாட்சி சொல்பவனுக்கு 3 அடி வீதம் 4 வீதிகளிலும் அடித்து விடப்பட்டது என்பது தெரிய வருகிறது.

சுகாதாரக்கேடு விளைவிப்பவர்களுக்கு அபராதங்கள் விதிக்கப் பட்டிருக்கின்றன. ஆட்டு உரோமம் எரித்து நாற்றம் உண்டாக்கியவனுக்கு ரூ 7 அபராதமாக விதிக்கப்பட்டது. கோட்டையின் நான்கு வீதிகளின் சாக்கடைகளிலும் உள்ள மண்ணை உடனுக்குடன் எடுத்துச் சுத்தம் செய்யாமல் இருந்ததற்காக ரூ 6 அபராதமாகப் பெறப்பட்டதாகத் தெரிகிறது.

பொருட்களில் கலப்படம் செய்பவர்களிடம் அபராதம் வசூலிக்கப்பட்டது. நெய், விளக்கெண்ணெய்களில் கலப்படம் செய்த வியாபாரிக்கு அபராதம் ரூ 5உம் அரிசிக்காரி நனைந்து போன அரிசியை விற்றதால் அபராதமாக 2 பணமும் வசூல் செய்யப்பட்டிருப்பதை அறியமுடிகிறது.

சிறு சிறு குற்றங்களுக்குத் தண்டனைக்குரிய அபராதமானது பணமாகவும். தேங்காயாகவும் வசூலிக்கப்பட்டிருக்கின்றன.

இரவுக் காவல் வராததால் அபராதம் ½ ரூ[16]

காவல்காரியை அடித்ததற்கு அபராதம் ½ ரூ

வண்ணான் நாகமுத்து வெளுத்த துணியில் முள்ளிருந்ததால் 6 தேங்காய் அபராதம்

சமையல் செய்ய 11 நாழிகைக்கு அரிசி தர உத்திரவிட்டதைக் காலம் கழித்துக் கொடுத்ததால் 12 தேங்காய்

பணியாளர்கள் ஒழுங்காகப் பணிக்குச் செல்லாததும். பணியின் போது கவனக்குறைவுடன் நடந்து கொள்வதும் சிறு சிறு குற்றங்களாகக் கருதப்பட்டிருப்பது தெரிய வருகிறது

குற்றம் செய்தவர்களுக்கு உடலில் உபத்திரவங்கள் ஏற்படும் என்ற நம்பிக்கை இருந்ததாகத் தெரிகிறது என்பது பின்வரும் குறிப்பின் மூலம் அறியமுடிகிறது.[17]

"வெள்ளிப் பாடகம் திருடியவனுக்கு வயித்துக் கடுப்பு பீங்கான் யானைத் தந்தம் சிவப்புக் கல் திருடியவனுக்குப் பக்க சூலை.

நகை திருடியவனுக்கு கால் வீக்கம்.

ஈயம் பச்சைக் கல் கொடுத்து உருக்கியவனுக்கு காலில் வாயுப் பிடிப்பு"

16 மோ. ஆ. கு. 2 - 10
17 மோ. ஆ. கு. 1 - 36

பழங்காலத்தில் குற்றவாளிகளைக் காய்ச்சிய எண்ணெயில் கைவிடச் செய்து குற்றவாளி தண்டிக்கப்பட்டது போன்று மராத்தியர் காலத்திலும் தண்டனை வழங்கப்பட்டது. இரண்டாம் சரபோசி ஆட்சியின் போது நிலத் தகராறில் சம்பந்தப்பட்ட நபரின் கைகளைக் காய்ச்சிய எண்ணெயில் நனைத்து அவனது குற்றத்தை நிரூபித்ததாகவும் இது கடவுளால் அளிக்கப்பட்ட தீர்ப்பு என்றும் கருதப் பட்டதாகத் தெரிகிறது

நீதித்துறையிலிருந்து கிடைத்த வருவாய்

நீதிமன்றங்களில் வழக்கு மனுக்கள் கொடுக்கும் போது முத்திரை மனுக்களாக இல்லாவிட்டால் தள்ளுபடி செய்யப்படும் என்பது பொதுவான விதியாகும் எனவே முத்திரைப் பத்திரங்கள் அதிகமாக விற்பனை செய்யப்பட்டு அரசாங்கத்திற்கு வருவாய் கிடைத்தது. நீதிமன்றங்கள் முத்திரைப் பத்திரங்களை விற்று வருவாய் சேகரித்தன. நியாயதீச சபை மூலம் (கஜானாவுக்கு) கருவூலத்திற்குக் கம்பெனி ரூ 300 முத்திரைப் பத்திரம் விற்று வரவு வந்தது.[18] காவல் வருமானம் மூலமும் அரசாங்கம் வருவாய் பெற்றது.[19] குற்றவாளிக்கு அளிக்கப்பட்ட தண்டனைகளில் ஒன்று அபராதம் வசூலிப்பதாகும். இதுவும் அரசிற்கு வருமானம்தான் மராத்தியர் காலத்தில் சிறு சிறு குற்றங்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டதால் ஏராளமான நிதி வசூலானது.

முடிவுரை

ஒவ்வொரு நீதிமன்றத்திலும் பல வகையான வழக்குகள் நடைபெற்றன. குற்றங்களுக்கேற்றவாறு குற்றவாளிகளுக்குத் தண்டனைகள் அளிக்கப்பட்டன.

1799இல் இரண்டாம் சரபோஜி தஞ்சையில் நீதிமன்றங்களை உண்டு பண்ணவும், சிவில், கிரிமினல் வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரத்தையும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு விட்டுக் கொடுத்தார். இதனால் ஆங்கிலேயர்களின் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப் பெற்றன. 1801இல் ஆங்கிலப் பாராளுமன்றத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சட்டத்தின்படிச் சென்னையில், 'சுப்ரீம் கோர்ட்' எனப்பட்ட 'தலைமை உயர்நீதிமன்றம்' ஏற்படுத்தப் பெற்றது. மராத்திய உயர் அதிகாரிகள விசாரணைக்காக இந்த நீதிமன்றத்திற்குச் சென்றனர். 1855இல் இரண்டாம் சிவாஜி இறந்த பின் அவரது மனைவி காமாட்சிபாயி சென்னப் பட்டணம் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தார்.

1855இல் மராத்தியர் ஆட்சி தஞ்சையில் முடிவடைந்த போது நீதி மன்றங்களும், தண்டனை முறைகளும் மாற்றி அமைக்கப்பட்டன. ஆங்கிலேயர்களின் ஆட்சியின் புதிய முறையிலான சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

□

18 மோ. ஆ. கு. 1 - 32

19 மோ. ஆ. கு. 15 - 23

சி. இலட்சுமணன்
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

இலண்டனிலுள்ள இந்திய அலுவல் ஆவணங்கள்

பதினேழாம் நூற்றாண்டு இந்தியாவைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகவும்; அந்நூற்றாண்டில் நிலவிய சமூகப் பொருளாதார அரசியல் நிலைகளைச் சித்திரிக்கும் சான்றுகளாகவும்; இந்திய வரலாற்றாய்விற்கும், புதிய வரலாற்று வரைவிற்கும் வளம் சேர்க்கும் முதன்மை ஆதாரங்களாகவும் விளங்குபவை இந்திய அலுவல் ஆவணங்களாகும். இவ் ஆவணங்களைப் பற்றி அறிமுகம் செய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இந்திய அலுவல் ஆவணங்கள் - விளக்கம்

'இந்தியா' என்பது பிரிட்டீஸ் இந்தியாவையும், 'அலுவல்' என்பது ஆங்கிலேயரின் ஆட்சி மற்றும் நிர்வாகச் செயன்முறைகளையும் குறிப்பதாகும். எனவே இந்திய அலுவல் ஆவணங்கள் என்பதற்குப் பிரிட்டீஸ் இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சி தொடர்பாக நிலவிய நிர்வாகச் செயன்முறைகள் பற்றிய ஆவணங்கள் என்று விளக்கம் தரலாம். இவ் ஆவணங்கள் இலண்டனிலுள்ள நூலகத்தில் உள்ளன. இந் நூலகம் 'இந்திய அலுவல் ஆவணங்களைக் கொண்ட நூலகம்' (India Office Records Library) என்ற பெயரில் இயங்கி வருகிறது.

ஆவணங்களின் விளக்க அட்டவணை

இந்திய அலுவல் ஆவணங்களின் விளக்க அட்டவணையே (Catalogue of the Home Miscellaneous of the India Office Records) இக் கட்டுரைக்கு முதன்மை ஆதாரமாக அமைந்துள்ளது. சாமுவேல் சார்லஸ் ஹில் (Samuvel Charles Hill) என்பவரால் இவ் விளக்க அட்டவணையை உருவாக்கும் பணி தொடங்கப் பெற்று, அச்சாகிக் கொண்டிருக்கும் நிலையில் இவர் காலமாகிவிட்டதால் வில்லியம் ஃபோஸ்டர் (William Foster) என்பவரால் முடிக்கப் பெற்றது. பல்வகைப்பட்ட உள்நாட்டு விவகாரங்களைப் பற்றிய இந்திய அலுவல் ஆவணங்கள் என்னும் வரிசையில்; இலண்டனிலுள்ள இந்திய அலுவலகத்திற்காக; எழுதுபொருள் அலுவலகத்தால் 1927இல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ் அட்டவணையை உருவாக்கத் தொடங்கிய காலத்தில் 'உள்நாட்டு

விவகாரங்கள் பற்றிய வரிசை' என்று தொடங்கப்பட்டதென்றும் பின்னர் இத்திட்டத்திலிருந்து விலகிவிட்டமை குறித்தும் வில்லியம் ஃபோஸ்டர் தமது முன்னுரையில் பின்வருமாறு சுட்டுகின்றார்.

> "பிரிட்டிஸ் இந்திய நிர்வாக ஆவணங்களின் பாதுகாப்பு அலுவலகத்தில் முதல் பதிவாளராகவும், ஆவணக் கண்காணிப்பாளராகவும் விளங்கிய டான்வெர்ஸ் 1884இல் நூல்கட்டுமானத் தொகுதிகளாகக் காணப்பட்ட ஆவணங்களை; ஆலைகள் தொடர்பான ஆவணங்களுடனும், கப்பல்கள் பற்றிய ஆவணங்களுடனும் ஒப்புநோக்கிய நிலையில் உள்நாட்டு விவகாரங்கள் பற்றிய பல்வகை ஆவணங்கள் என்னும் தலைப்பில் ஒழுங்குபடுத்தினார். பின்னர் உள்நாட்டு விவகாரங்கள் என்பது கைவிடப்பட்டு அனைத்து ஆவணங்களும் சேர்க்கப்பட்டன"

ஆனால் உள்நாட்டு விவகாரங்கள் பற்றிய பல்வகை ஆவணங்கள் (Home Miscellaneous Series) என்ற தலைப்பு மட்டும் மாற்றப்படவில்லை. இத்தலைப்பு முதல் 47 தொகுதிகளுக்கு மட்டும் பொருத்தமாகலாம் என்பது இவர்தம் கருத்தாகும்.

ஆவணங்களின் தொகுப்புப் பற்றிய தோற்றுவாய்

682 பக்கங்களைக் கொண்ட இச் சுவடி விளக்க அட்டவணை ஆங்கிலத்தில் அமைந்துள்ளது இவ் அட்டவணையின் அகராதி 146 பக்கங்களில் அமைந்துள்ளது. இந்திய அலுவலக ஆவணங்களின் உள்ளடக்கம் மற்றும் ஆவணங்களின் தொகுப்புப் பற்றிய விளக்கங்களை வில்லியம் ஃபோஸ்டர் தமது முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

பேட்வுட் காகிதச் சுவடிகள் (Birdwood papers) கிழக்கிந்தியக் கம்பெனி சுவடி வரிசை (East Indies), வெல்லஸ்லி காகிதச் சுவடிகள் (Wellesley papers), ஜேம்ஸ் கம்மிங் மற்றும் தன்வேர்ஸ் தொகுப்புகள் (James Cumming and Danvers Collections), சார்ட்டர்ஸ் (Charters), பிரெஞ்சு இந்திய ஆவணங்கள (French India Records), ஆலைகள் தொடர்பான ஆவணங்கள், (Factory records), ஃபிஸ்டர்ஸ் காகிதச் சுவடிகள் (Fisters papers) மற்றும் அரசியல் துறை ஆவணங்கள், பழமையான விளக்க அட்டவணைகள், அகராதி அட்டவணைகள், தனியார் அன்பளிப்புகள் ஆகியவை இந்திய அலுவல் ஆவணங்களாகத் திகழ்கின்றன.

பேட்வுட் காகிதச் சுவடிகள் என்பன ஜார்ஜ் பேட்வுட் (George Bird wood) என்பவரால் 17ஆம் நூற்றாண்டிலுள்ள ஆவணங்களைத் தொகுத்து வழங்கியதாகும். கிழக்கிந்தியக் கம்பெனி வரிசை என்பன (East Indies Series) 1748 முதல் 1784 வரையுள்ள இடைப்பட்ட காலத்தில் இந்திய விவகாரங்கள் தொடர்பாக மாநில அலுவலகங்களின் செயலாளரால் பெறப்பட்ட ஆவணங்களாகும். இவ் ஆவணங்களைப் பற்றிய விளக்கங்கள் 93 முதல் 190 வரையுள்ள தொகுதிகளில் தரப்பட்டுள்ளன. ஏறத்தாழ 100 ஆவணத் தொகுதிகள் கிழக்கிந்தியக் கம்பெனி தொடர்பாக அமைந்துள்ளமை நோக்கத்தக்கதாகும்.

வெல்லஸ்லி காகிதச் சுவடிகள் (Wellesley papers) என்பது சென்னை

மும்பை முதலிய இடங்களிலுள்ள மாநில ஆளுநர்களிடமிருந்து பெறப்பெற்ற கடிதங்களின் மூல ஆவணங்களாகும். இத்தகைய ஆவணங்கள் தொகுதி 457 முதல் 479 வரை 22 தொகுதிகளில் அமைந்துள்ளன.

பிரிட்டீஸ் இந்திய ஆட்சிக் குழுவின் வருவாய் மற்றும் நீதித்துறைகளின் தலைவராகிய ஜேம்ஸ் கம்மிங் (James Cumming) பணியாற்றிய காலத்தில். நீதித்துறை இயக்குநர்களிடமிருந்து 4000 டாலருக்கு வாங்கப்பெற்றவை ஜேம்ஸ் சேகரிப்புகள் என அழைக்கப்படுகின்றன. மற்றுமொன்று தன்வேர்ஸ் (Danvers Collection) என்பவரால் தொகுக்கப்பெற்ற பதிவு செய்யப்படாத காகிதச் சுவடிகளின் தொகுப்பாகும். இவை விளக்க அட்டவணையில் 719, 720 ஆகிய தொகுதிகளில் அமைந்துள்ளன. இத் தொகுப்புகள் சார்ட்டர்ஸ் (Charters) பிரெஞ்சு இந்தியா (French India) ஆலைத் தொடர்பான ஆவணங்கள் (Factory Records) என்னும் தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கிழக்கிந்தியக் கம்பெனியினரின் சோதனைத் துறையினரால் (Examiner's Department in the East India) 1804இல் தொகுக்கப்பெற்ற ஆவணங்கள், விளக்க அட்டவணையில் 716ஆவது தொகுதியில் அமைந்துள்ளன. எஞ்சியவை ஃபிஸ்சர்ஸ் காகிதச் சுவடிகள் (Fisher's Papers) என அழைக்கப்படுகின்றன. இச் சுவடிகள் சோதனைத் துறையில் இப்பணிக்காக 1814இல் நியமனம் செய்யப்பெற்ற தாமஸ் ஃபிஸ்சர் (Thomas Fisher) என்பவரால் தொகுக்கப்பட்டதாகும்.

இவைதவிர அரசியல் துறை மற்றும் பழைய விளக்க அட்டவணைகள். அகராதி அட்டவணைகள், தனியார் அன்பளிப்புகள் ஆகியவை எஞ்சிய தொகுப்புக்களாகக் காணப்படுகின்றன.

கிழக்கிந்தியக் கம்பெனி நடவடிக்கைகள்

இந்திய அலுவல் ஆவணங்களில் ஏறத்தாழ எட்டில் ஒருபகுதி கிழக்கிந்தியக் கம்பெனி நடவடிக்கைகள்பற்றிய ஆவணங்களாகத் திகழ்கின்றன. நூற்றுக்கணக்கான ஆய்வுகள் மேற்கொள்வதற்குரிய முதன்மை ஆதாரங்கள் இதன்கண் காணப்படுகின்றன. சான்றாகச் சிலவற்றைக் கீழே காணலாம்.

இந்தியாவிற்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே நிகழ்ந்த சச்சரவுகள் மற்றும் போர் குறித்த நடவடிக்கைகள், டியூப்ளக்ஸ் (Duplex), கடீகன் (Godehen), முகம்மது அலி (Muhammad Ali), சாந்த சாகிப் (Chanda Sahib), முஜபர் ஜாங் (Mujafar Jang), நசீர் ஜாங் (Nasir Jang) ஆகியோர் நடவடிக்கைகளும் டெல்கி நிகழ்வுகளும் காணப்படுகின்றன.[1] இங்கிலாந்து மகாராணிக்கு 1770இல் ஆர்காட் நவாபு எழுதிய கடிதங்கள்,[2] மராத்தியர்களுடன் கர்னல் உப்டன் (Upton) செய்து கொண்ட உடன்படிக்கை.[3] 1778இல் சந்திரநாகூர் ஒப்படைப்பு, பிரெஞ்சுப் போர்ச் சிப்பாய்களை அதிகரித்தல், கூக்ளி நதிப் பாதுகாப்பு, கர்னல் லெஸ்லி (Col. Leslie), நஜாப் அலி (Najab Ali) போன்றோர் படையெடுப்பு பற்றிய குறிப்புகள்.[4]

1. Vol. 93 : 3.
2. Vol. 103 : 7
3. Vol. 123 : 5.
4. Vol. 143 : 3.

ஹேஷ்டிங்ஸ் (Hastings). அயர் கூட் (Eyre Coote). வீலர் (Wheler). பிரான்ஸிஸ் (Francis) போன்றோர் 1781இல் எழுதிய தீர்மானங்கள்.[5] 1782இல் சென்னையில் புயல் மற்றும் பஞ்சம். உணவு தானிய ஏற்றுமதித் தடை. ஹைதர் அலி இறப்பு. திப்பு சுல்தான் போர். மராத்தியர் நிகழ்வுகள்.[6] சிட்னி பிரபுக்கு (டுடிசன ளுலனநேல) அனுப்பப்பட்ட கடிதங்கள் போன்ற பல ஆவணங்கள உள்ளன.

காலவரிசையில் இந்திய வரலாற்று நிகழ்ச்சிகள்

554ஆவது தொகுதியில் 1 முதல் 400 வரையுள்ள பக்கங்களில் அமைந்துள்ள ஆவணங்களில் 1773 சனவரி 30 முதல் 1798 அக்டோபர் 15 வரை இந்தியாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள கடிதத் தொடர்புகளின் அடிப்படையில் காலவரிசையில் தரப்பட்டுள்ளன. 558ஆவது தொகுதியில் 1 முதல் 605 வரையுள்ள பக்கங்களில் அமைந்துள்ள இவ் ஆவணங்கள் 1782 முதல் 1790 வரை அதாவது மராத்தியப் போர் முடிவுற்றது முதற்கொண்டு பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் காட்டுகின்றன. இவற்றைச் சுவடி நிலையில் முதன்மை ஆதாரமாகக் கொண்டு முனைவர்ப் பட்ட ஆய்வுகள் மேற்கொள்வோர் பட்டங்கள் பெறுவதோடு வரலாற்றுலகிற்கும் பயனுள்ள பங்களிப்பினை நல்கிய பெருமைக்குரியவராகலாம்.

வங்காளப் புரட்சியும் இருட்டறைத் துயர நிகழ்ச்சியும்

1740இல் நவாப் பதவியேற்ற அலிவர் டி கான் 1756இல் காலமானார். இவருடைய பேரன் ஸிராஜ்-உத்-தௌலா (Siraj-ud-daula) இவருக்குப் பின் பதவிக்கு வந்தார் வில்லியம் கோட்டையின் அரணமைப்புகளை வலிமைப்படுத்தியதன் மூலம் பிரிட்டிஷார் இவரது கோபத்திற்கு ஆளாயினர். புதிய அரண்களை அழிக்குமாறு இவர் விடுத்த ஆணைக்கு அவர்கள் கீழ்ப்படியவில்லை. தப்பியோடிய ஒருவனைத் திரும்ப ஒப்படைக்க மறுத்ததன் மூலம் இவரது சினத்தை மேலும் அவர்கள் தூண்டினர். அனைத்திற்கும் மேலாகத் தமக்குத் தரப்பட்டிருந்த வாணிபச் சலுகைகளை ஆங்கிலேயர் தவறாகப் பயன்படுத்தத் தலைப்பட்டனர். 1756இல் காஸிம் பஜாரில் (Cassim bazar) இருந்த ஆங்கிலேயப் பண்டகசாலையை இவர் முற்றுகையிட்டதுடன் கல்கத்தாவையும் கைப்பற்றினார். கல்கத்தாவை இவரிடம் ஒப்படைப்பதற்கு முந்தைய நாளில் ஆங்கிலேய ஆளுநர் டிரேக் (Drake) மற்றும் பலரும் அங்கிருந்து தப்பியோடினர். எஞ்சியிருந்தவர்கள் ஹோல்பெல்லின் தலைமையில் தாக்குதலைச் சிறிது எதிர்த்து நின்றனர் அவர்களின் முயற்சி சிராஜ்-உத்-தௌலாவிடம் சிறைக்கைதிகள் ஆவதிலேயே முடிவடைந்தது. அவர்களில் 146 சிறைக் கைதிகளை 18 அடி சம சதுரமான அறையில் நவாப் அடைத்து வைத்ததாகவும். புழுக்கமான இரவுப் பொழுது கழித்து 23 பேர்கள் மட்டுமே உயிரோடு இருந்ததாகவும் கூறப்படுகின்றது. இருட்டறைத் துயரநிகழ்ச்சி (Black hole tragedy) என்றழைக்கப்படுகின்ற இக் கொடூரமான நிகழ்ச்சியைப் பற்றிய ஆதாரம் புதிராகவே புதைந்து கிடக்கின்றது என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.[7]

மேற்குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வின் ஆதாரம் இந்திய அலுவல் ஆவணங்கள் 804ஆவது தொகுதியில் 443-505; 510-514; 546-554 ஆகிய

5 Vol. 153 12. 6 Vol 173 : 10.

7 டி எஸ் இராமலிங்கம் **இந்திய வரலாறு** டி எஸ் எஸ் ஆர் பப்ளிகேஷன்ஸ் மதுரை. 1974. ப. 190

பக்கங்களில் காணப்படுகின்றன. இவ்விவரங்களை சிராஜ்-உத்-தௌலாவுடன் நடந்த சண்டை. காஸிம் பஜார் மற்றும் கல்கத்தாவைக் கைப்பற்றிய நிகழ்ச்சி. மற்றும் இருட்டறைத் துயர நிகழ்ச்சி என்னும் தலைப்புகளில் சுவடி விளக்க அட்டவணை காட்டுகின்றது. வரலாற்றாசிரியர் குறிப்பிடுவது போலப் புதைந்து கிடக்கும் இவ் அரிய ஆதாரங்களை ஆராய்ந்து வரலாற்றுலகிற்கு அறிவிக்க வேண்டியது அறிஞர்கள் கடப்பாடாகும்.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை விளக்குவதற்கு முக்கியச் சான்றாதாரங்களாக. 1756 சனவரி 3ஆம் தேதி சந்திர நாகூரிலிருந்து எழுதப்பட்ட பிரஞ்சுக் கடிதமும். 1756 அக்டோபர் 13ஆம் தேதி சென்னை நிர்வாகக் குழுவினர் இயக்குநர்களுக்கு எழுதிய கடிதங்களும் காணப்படுகின்றன என்பதை.

> "(Vol. 804 : 27) pp. 443-505, 510-514, 546-554 papers concerning the quarrel with Siraj-ud-Daula his capture of Cossim bazar and Calcutta and the Black hole. (Note : especially the French evidence in a letter from Chandranagore dated 13th July 1756 on p. 553 and that in the letter from the Madras council to the Directors dated 13th October 1756 on pp. 560-561"

எனச் சுவடி விளக்க அட்டவணை குறிப்பிடுகிறது.[8]

இவற்றை மேலும் ஆராய்ந்துரைக்கின்ற நிலையில் இருட்டறைத் துயர நிகழ்ச்சியை உறுதிப்படுத்துவதோடு வேறு பல உண்மைகளும் வெளிவரக்கூடும். சிராஜ் - உத் - தௌலாவின் கொடுங்கோல் தன்மையை வரலாற்றுலகிற்கு அறிவிப்பதற்கு இவை தக்க சான்றுகளாய் விளங்குகின்றன என்பதும் எண்ணிப் பாாககத்தககதாகும.

சதி (Sati)

கணவன் இறந்தவுடன் மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்ததென்பது வரலாற்றுச் செய்தியாகும். இவ் வரலாற்றுச் செய்தியை இக்காலத்தில் மறுத்துரைப்பாரும் உளர். உடன்கட்டை ஏறுதல் என்பது உண்மை நிகழ்ச்சிகள் அல்ல. கண்ணகி காலத்துப் பாண்டிய மன்னன் இறந்தவுடன் அவன் மனைவி கோப்பெருந்தேவி அவன்மேல் விழுந்து இறந்தாள் என்பது உடன்கட்டை ஏறுவதன்பால் நிகழ்ந்ததல்ல. கோப்பெருந்தேவி அந்நேரத்தில் மாரடைப்பால் இறந்தாள் என்பதே உண்மை. உடன்கட்டை ஏறுதல் என்பது புராண நிகழ்ச்சிகளேயன்றி வேறில்லை என்றெல்லாம் வாதிடுவோர்க்குச் சான்று பகரும்வண்ணம் சதி (Sati) பற்றிய பல ஆவணங்கள் 274, 540, 541 ஆகிய தொகுதிகளில் காணப்படுகின்றன என்பது இவண் குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் காணலாம்

1822 மே 24இல் நிசாமட் அடல்ட் (Nizamat Adult) என்பவர் வங்காளத்தி

8. **Catalogue**, pp. 529-530.

ளுள்ள கீழ்மட்ட மற்றும் மேல்மட்ட மாகாணங்களில் நடைபெற்றுவரும் உடன்கட்டை ஏறுதல்பற்றிய அறிக்கையினை அளித்துள்ளார். அவ்வறிக்கையில் 1820ஆம் ஆண்டு 597 உடன்கட்டை ஏறுதல் நிகழ்ந்ததென்றும், 1821இல் 654 நிகழ்ந்ததென்றும் குறிப்பிடுகின்றார்.[9] உடன்கட்டை ஏறுதல்பற்றிய 1823இன் அறிக்கையின் அடிப்படையில் இவ்வழக்கத்தை ஒழிக்க வேண்டுமென்று வங்காள அரசாங்கம் 1824 டிசம்பர் 3இல் ஒரு தீர்மானம் கொண்டு வந்தது.[10]

சென்னை அரசாங்கத் தலைமைச் செயலாளரின் பிரதிநிதி வில்லியம் பிளாக்பார்ன் (William Blackburne) 1882 ஏப்ரல் 27இல் எழுதிய தமது அறிக்கையில், தஞ்சை மன்னர் அமர்சிங் இறப்புப்பற்றியும், அவர்தம் இரு மனைவியர் உடன்கட்டை ஏறிய நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகின்றார்.

> "William Black Burne Resident to chief secretary Madras Government 27th April 1802 death of Amirsingh Raj of Tanjore and death of by Sati two of his widows"[11]

அவ் இருவரையும் சாத்வீக முறையில் உடன்கட்டை ஏறவேண்டாமென்று பெண்கள் எல்லோரும் தடுத்ததையும் பொருட்படுத்தாமல் நெருங்கிய உறவினர்கள் கெஞ்சி மன்றாடிக் கேட்டுக் கொண்டதையும் பொருட்படுத்தாமல் அரசாங்க அதிகாரிகளின் அச்சுறுத்தல்களுக்கு இணங்காமல் தன்னிச்சையாக இருவரும் உடன்கட்டை ஏறினர் என்றும் நெருப்பால் ஏற்படும் வேதனையைப் போக்குவதற்கு எவ்வித மருந்துகளையும் பயன்படுத்தவில்லை யென்றும் தமது அறிக்கையில் வலியுறுத்திக் கூறுகின்றார்.

> "In this case the sati was absolutely voluntary. The ladies resisting the entreaties of their nearest relations and also the threats of officials. Nor was any attempt made by drugs of any kind to render them insensible to the pain of the fire"[12]

விண்ணப்பங்கள், ஆணைகள், உடன்படிக்கைகள்

இந்திய அலுவலக ஆவணங்களில் விண்ணப்பங்கள், ஆணைகள், ஒப்பந்தங்கள் குறித்த ஆவணங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. தொகுதி 78இல் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றிய அலுவலர் பலருடைய விண்ணப்பங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒருசில வருமாறு :

---

9 Vol. 540 . 1 (pp 1 - 189).
10 Vol 541 . 3 (pp. 373 - 391)
11 Vol. 274 · 6 (pp 463 - 479) and see a letter to the editor of Vol. IV Misc. Tracts p 124 dated 16th October 1802
12 Ibid.

ஆண்டு	பக்கம்	பெயர்
1728	21	Jonah Ingram
1753	429 - 433	Dawsonne Drake
1763	-	Josiah Bullock
1769	-	Thomas Adair
1771	-	Col, John Wood
1773	-	Lieut, William Blacker
1773	-	Ensign Bartholomew vigors
1773	-	Sanurel Backer
1774	-	Evance
1760	437	Major Charles Morgan
1773	443	Liet, Col, Robert Cay
1782	665	J, G, Booth
1783	673 - 674	George Cumming

1725 முதல் 1783 வரை கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகள் அனுப்பிய ஆணைகள் காணப்படுகின்றன. சான்றாக. வில்லியம் எல்லிஸ் (William Ellis). வில்லியம் மெக்ஒயர் (William Megwire). காப்டன் தாமஸ் பென்விக் (Capt. Thomas Únwick). ஜான் எல்வின் ரெஞ் (John Elwin Wrench). காப்டன் வில்லியம் லேன் (Capt. William Lane). சார்லஸ் வோட்டர்ஸ் (Charles Waters) போன்றோர் ஆணைகளைக் குறிப்பிடலாம்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஒப்பந்தங்கள் காணப்படுகின்றன. இவற்றை ஆராய்ந்தால் அரிய வரலாற்றுச் செய்திகள் கிடைக்கக்கூடும். சான்றாக.

ஆர்காட் நவாபுக்கும் ஹைதர் அலிக்கும் இடையேயுள்ள ஒப்பந்தம்[13]

ஆர்காட் நவாபுக்கும் டச்சுக்காரர்களுக்குமிடையே உள்ள ஒப்பந்தம்[14]

ஆர்காட் நவாபுக்கும் திப்பு சுல்தானுக்கும் இடையேயுள்ள ஒப்பந்தம்[15]

நேபாள மன்னர் ராஜராம் பகதூரின் வாணிப ஒப்பந்தம்[16]

லாகூர் மன்னர் ரஞ்சித் சிங்கின் ஒப்பந்தம்[17]

13, 14. Vol. 126 : 1.
15. Vol. 182 : 8.
16. Vol. 638 : 2.
17. Vol. 638 . 6

கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் கொச்சி மன்னருக்கு மிடையேயுள்ள ஒப்பந்தம்[18]

போன்றவற்றைக் கூறலாம்.

இவ் விண்ணப்பங்கள், ஆணைகள், ஒப்பந்தங்கள் ஆகியவற்றை வழங்கியவர்களின் பெயர், ஆண்டு, நாள் போன்ற விவரங்கள் மட்டுமே விளக்க அட்டவணையில் தரப்பட்டுள்ளன. இவற்றின் உள்ளடக்கம்பற்றிப் பெரும்பாலும் குறிப்பிடவில்லை என்றே கூறலாம் ஒப்பந்தங்கள் குறித்துத் தனியாக மிகப்பெரிய அளவில் ஆய்வு செய்யத்தக்க முதன்மை ஆதாரங்கள் இவற்றில் உள்ளன. இவற்றை ஆராய்ந்தால் அன்றைய சமூகப் பொருளாதார அரசியல் நிலையை அறுதியிட்டுக் கூறலாம்

தஞ்சாவூர் தொடர்புடையவை

1786, 1788ஆம் ஆண்டுகளில் டச்சு அரசாங்கம் தஞ்சாவூர் ராஜாவுக்குக் கடன் கொடுத்த விவரம்;[19] இந்திய நாட்டு அதிகாரங்கள் மற்றும் முகம்மது அலி, சலாபாத் ஜாங், மைசூர், தஞ்சாவூர், தொண்டைமான் பாளையக்காரர்கள் தொடர்புடைய செய்திகள்,[20] ஆர்காட்டு நவாபின் கூடுதலான தேவைகள் மற்றும் கர்னாடக அலுவல்கள்;[21] சென்னையிலிருந்து வந்த அறிவுரைகள், ஹைதர்அலி, மராட்டியர் தொடர்பான செய்திகள், 1770இல் வந்தடைந்த பிரஞ்சுக் கப்பல்கள், ஹைதர் அலிக்கும் பிரஞ்சுக்காரர்களுக்குமிடையே உள்ள அலுவல் தொடர்புகள், தஞ்சாவூர் ராஜாவுக்கும் ஹைதர் அலிக்கும் இடையே நிகழ்ந்த சதித் திட்டம், மற்றும் ஹைதர் அலிக்கு எதிராக மராட்டியர்களுக்கு நவாப் உதவி செய்தல்[22] இதுபோன்று தஞ்சையோடு தொடர்புடைய நூற்றுக்கணக்கான வரலாற்றுச் செய்திகள் இவ் ஆவணங்களில் புதைந்தும் பொதிந்தும் காணப்படுகின்றன.

மன்னர்கள்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மைசூர், பெனாரஸ், சிவகங்கை, தஞ்சாவூர் போன்ற பல மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

சான்றாக, ஆங்கிலேயர்களுக்கு எவ்விதச் சலுகையும் வழங்கக்கூடாது என்று அமர்சிங் நேபாள மன்னருக்கு எழுதிய கடிதம் காணப்படுகிறது.[23] இக்கடிதம் தடை செய்யப்பட்ட கடிதங்கள் என்னும் தலைப்பின்கீழ்த் தரப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மன்னர் சரபோஜி மற்றும் அமர்சிங் பற்றிய குறிப்புகள் உள்ளன.[24] சர் ஆர்ச்சிபால்டு காம்பெல் (Sir Archibald Cambell) 12 பண்டிதர்களின் அறிவுரையின் பேரில் கிறிஸ்தவப் பாதிரியார் பேட்ரிக் சுவார்ட்சை (Rev. Friderich Schwartz) மொழிபெயர்ப்பாளராக மன்னர் சரபோஜி மற்றும் அமர்சிங் ஆகியோர்க்கு நியமித்தார்.

18 Vol 638 . 9
19. Vol. 57 (7) pp. 95-104.
20 Vol 94 (9) pp 40-42, 64-7, 75-77.
21. Vol 104 (1, 2) pp. 1-30.
22 Vol 105 (7) pp 69-7, 72-91, 92
23 Vol 650 · 6.
24 Vol. 571 . 4

சரபோசியின் பாதுகாப்பாளராக விளங்கிய அருள்திரு சுவார்ட்ஸ் சென்னை அரசாங்கத்திற்கும் தஞ்சாவூருக்குமிடையே செயல்பட்டார். அமர்சிங்கை மேன்மைப்படுத்தியதற்காகத் தனிநபர் அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்ள ஆர்ச்சிபால்டு மறுத்து விட்டார்.[25]

திருச்சிராப்பள்ளியை ஒப்படைத்து விடுவதாக ஆர்காட்டு நவாபிற்கும் மைசூர் மன்னர்க்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கை காணப்படுகிறது.[26] சிவகங்கை பாளையக்காரர் சின்ன மருதுவுக்கு எதிராகப் படையெடுப்பது குறித்து எப். ரஸல் (F. Russell) எழுதிய விளக்கக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இத்தகைய ஆவணங்களை ஆராய்கின்ற நிலையில் பல மன்னர்களின் வரலாறு புனரமைப்பும் புதுப்பொலிவும் பெறும் என்பதில் ஐயமில்லை.

ஹைதர் அலியைப்பற்றி ஏறத்தாழ 100க்கு மேற்பட்ட ஆவணங்கள் காணப்படுகின்றன. சான்றாக, ஹைதர் அலி மற்றும் மராட்டியர் பற்றிய குறிப்புக்கள், ஹைதர் அலியுடன் பிரஞ்சுக்காரர்களின் கடிதத் தொடர்புகள், தஞ்சாவூர் மன்னருக்கும் ஹைதர் அலிக்குமிடையேயுள்ள சதி ஆலோசனை போன்றவை 1770இல் எழுதப்பட்ட ஆவணங்கள் காணப்படுகின்றன.[27]

1781இல் போர்த்துக்கீசியருக்கும் ஹைதர் அலிக்கும் இடையே நிகழ்ந்த புகழ்பெற்ற உடன்படிக்கை,[28] கடல் கொள்ளைக்காரர்களில் ஹைதர் அலியின் கப்பல்களுள் ஒன்று கைப்பற்றல்,[29] ஜன. 30, 1783இன் ஹைதர் அலியின் இறப்பு[30] போன்றவற்றின் ஆவணங்களும் காணப்படுகின்றன. ஹைதர் அலியின் வரலாற்றைப் புனரமைப்புச் செய்ய இவ் ஆவணங்கள் பெரிதும் உதவும்.

சட்ட ஆலோசகர் எப். ரஸல் (F. Russell) குறிப்பு மற்றும் சின்ன மருதுவுக்கு எதிரான படையெடுப்புப்[31] பற்றிய பல்வேறு நிகழ்ச்சிகள் குறித்த செய்திகள் காணப்படுகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் நுண்படச்சுருள்

இலண்டன் மாநகரில் இந்திய அலுவல் ஆவணங்களைக் கொண்ட நூலகத்தில் இவ் ஆவணங்கள் காகிதச் சுவடிகளாக உள்ளன. இவற்றைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏறத்தாழ 14 ஆண்டுக்கு முன்னரே நுண்படச்சுருள் நிலையில் விலைக்குப் பெற்றுப் பாதுகாத்து வருகிறதென்பது வரலாற்றாசிரியர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும். நுண்படச் சுருள்களாக இவ் ஆவணங்கள் உள்ளமையால் எவரும் பயன்படுத்தாத நிலையில் உள்ளன. இவ் ஆவணங்கள் தக்க ஆய்வுக் குறிப்புகளுடன் வெளியிடப்பட வேண்டும் என்பது எண்ணிப் பார்க்கத்தக்கதாகும்.

---

25. Vol 571 : 4.
26. Vol. 170 : 23.
27. Vol. 105 : 7.
28 Vol. 157 : 6
29. Vol. 158 : 5.
30. Vol. 173 : 10.
31. Vol 390 : 1.

முடிவுரை

கிழக்கிந்தியக் கம்பெனிகளின் நிர்வாகச் செயன்முறைகள், வங்காளப் புரட்சியின் விளைவாக நிகழ்ந்த இருட்டறைத் துயர நிகழ்ச்சி, சமுதாயக் கொடுமைகளுள் ஒன்றாகச் சித்திரிக்கப்படும் சதி பற்றிய வரலாற்று உண்மைகள், ஆங்கிலேய ஆட்சியின்போது மாநில ஆளுநர்களிடமிருந்து பெற்ற மூல ஆவணங்கள், நிர்வாகச் செயன்முறைக்காக வெளியிட்ட ஆணைகள், மன்னர்களுக்கிடையே நிகழ்ந்த உடன்படிக்கைகள் போன்ற பல்வேறு வகையான ஆவணங்கள் உள்ளன தஞ்சையோடு தொடர்புடைய நூற்றுக்கணக்கான வரலாற்றுச் செய்திகளும் காணப்படுகின்றன. இந்திய வரலாற்று நிகழ்வுகளின் குறிப்பேடுகளாக விளங்கும் இந்திய அலுவல் ஆவணங்களைப் பதிப்பித்து வெளியிடத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இவற்றை வெளியிட்டால் தமிழ்கூர் நல்லுலகத்திற்கு மட்டுமல்ல இந்திய வரலாற்றிற்குப் பெரும் பங்களிப்பினை நல்கிய பெருமை இப்பல்கலைக்கழகத்திற்குச் சேரும். நுண்படச் சுருள்களாக விலைக்கு வாங்கி ஏறத்தாழ 14 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் இவ் ஆவணங்கள் பதிப்பிக்கப்படவில்லை என்பது எண்ணிப் பார்க்கத்தக்கதாகும். ஆயிரக்கணக்கான வரலாற்றாய்வுகளுக்கு உறுதுணையாகும் முதன்மை ஆதாரங்களாக விளங்கும் இவ் ஆவணங்களின் வெளியீடு என்பது வினாக்குறியாகவே விளங்குகிறது.

□

செ. இராசு
சிறப்புநிலைப் பேராசிரியர்
கல்வெட்டியல்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

திருக்குறள் அரிய கையெழுத்துப்பிரதி

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏறக்குறைய 200 ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட திருக்குறள் காகிதப்பிரதி ஒன்று கிடைத்துள்ளது. பரிமேலழகர் உரையுடன் கூடிய அப்பிரதி தஞ்சாவூர் வேதநாயக சாஸ்திரியார் (07-09-1774 - 24-01-1864) வீட்டில் கிடைத்தது.

24 செ. மீ. நீளமும், 19 செ. மீ. அகலமும் உடைய பழமையான தாளில், அதிக அளவில் நாற்பது வரிகள் எழுதப்பட்டுள்ளது. குறில் நெடில் வேறுபாடு இல்லாமல், மெய்யெழுத்துக்கள் புள்ளி பெறாமலும் எழுதப்பட்டுள்ளது. அக்காலக் கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும், ஓலை ஆவணங்களிலும் எழுதப்பட்ட எழுத்துக்கள் போலவே கையெழுத்துக் காணப்படுகிறது. கறுப்பு மையினால் எழுதப்பட்டுள்ளது. சொல்லுக்குச் சொல் பெரும்பாலும் இடைவெளியின்றியே எழுதப்பட்டுள்ளது.

பாரதத்தை ஆசிரியர் பெயருடன் வில்லிபாரதம் என்றும், இராமாயணத்தை ஆசிரியர் பெயருடன் கம்பராமாயணம் என்றும் குறிக்கப்படுவதுபோல் நூல் தலைப்பு 'திருவள்ளுவன் குறள்' என்று எழுதப்பட்டுள்ளது சிறப்புக்குரியதாகும்.

முதலில் 'அதிகார அட்டவணை' கொடுக்கப்பட்டுள்ளது. 'இல்லற இயல்' என்பது 'இல்லற இயல்பு' என்று எழுதப்பட்டுள்ளது. ஏழாவது அதிகாரம் மக்கட்பேறு. இது 'புதல்வரைப் பெறுதல்' என்று குறிக்கப்பட்டுள்ளது. துறவற இயல் என்பது துறவறம் என்று மட்டும் எழுதப்பட்டுள்ளது. ஓரிடத்தில் அத்துச் சாரியை பெறாமல் அறத்துப்பால் என்பது அறப்பால் என எழுதப்பட்டுள்ளது.

முப்பத்தெட்டாவது 'ஊழியல்' என்பது அறத்துப்பாலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளதைப் பொருட்பாலின் பாயிரம் என்று தனியாக ஓரியல்போல் எழுதப்பட்டுள்ளது.

அதிகாரப் பிரிவுகள் கீழ்வருமாறு உள்ளன.

1 - 4	-	பாயிரம்
5 - 24	-	இல்லறவியல்பு

25 - 37	-	துறவறம்
38	-	பொருட்பால் பாயிரம்
39 - 63	-	அரசியல்
64 - 73	-	அமைச்சியல்
74 - 95	-	அங்கவியல்
96 - 103	-	ஒழிபியல்
104 - 115	-	களவு
116 - 133	-	கற்பு

மூன்றாவது இன்பத்துப்பால் 'காமத்துப்பால்' என்று எழுதப்பட்டுள்ளது.

இறுதியில் 'முப்பாலுக் கதிகாரம் 133க்கு குறள் 1330' என எழுதப்பட்டுள்ளது (இது தவறாக 1333 என எழுதப்பட்டுள்ளது).

உரை தொடங்குமுன்.

ஆயிரத்து முன்னூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடே பகர்வீரேன் - போயொருத்தர்
வாய்க்கேட்க வேணுமா மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருத்த லாம்

என்ற வெண்பா 'காப்பு' என்ற தலைப்பில் காப்புச் செய்யுளாக எழுதப்பட்டுள்ளது.

காப்புச் செய்யுளை அடுத்துப் பரிமேலழகரைப்பற்றி 22 வரிகள் கொண்ட மிக அழகிய ஆசிரியப்பா 'அகவல்' என்னும் தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. மிகப் பழைய பரிமேலழகர் பதிப்பில் இப்பாடல் காணப்படுகிறது. பிற்காலப் பதிப்புக்களில் இப்பாடல் இடம்பெறவில்லை. மு இராகவையங்கார் இப்பாடலைத் தம் பெருந்தொகை நூலில் (எண் 1543) பதிப்பித்துள்ளார். இப்பிரதியில் சில பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன.

இதனை 'உரைச் சிறப்புப் பாயிரம்' என்று மு. இராகவையங்கார் பதிப்பித்துள்ளார்.

திருந்திய தமிழின் தெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவர் ஆய்ந்துதன் வாக்கால்
அறம்பொருள் இன்பம் வீடென நான்கின்
திறம்தெரிந் துரைத்த செவ்விமுப் பாலுக்கு
ஒருரை யன்றி ஒன்பது சென்று
ஐயுற வாக நையும் காலைப்
வள்ளுவர் மீளவும் வந்துதித் துலகோர்க்
கொள்ளிய பொருளை உரைத்தனன் என்ன
எழுத்து முதலா இலக்கண வகையும்
வழுக்கில்வே தாகம வகையதன் பயனும்

தங்கிய	குறட்பா	தமிழ்மனு	நூலுக்கு
இதுவே	உரையென	யாவரும்	வியப்பப்
பொழிப்பக	லத்தொடு	நுட்ப	எச்சம்
விழுப்பொருள்	தோன்ற	விரித்தினிது	உரைத்தோன்
வடநூல்	துறையும்	தென்திசைத்	தமிழும்
விதிமுறை	பயின்ற	நெறியறி	புலவன்
அன்பருள்	நாண்ஒப்	பரவுகண்	ணோட்டம்
நன்றறி	வாய்மை	நற்றவம்	உடையோன்
இத்தகை	யன்றி	ஈசன்	அருளால்
உய்த்துணர்	வுடையஒர்	உண்மை	யாளன்
பரிமே	லழகன்	எனப்பெயர்	படைத்துத்
தரைமேல்	உதித்த	தகமை	யோனே

என்பது அச்சிறப்புமிகு ஆசிரியப்பாவாகும்.

இதுபோல் பரிப்பெருமாள் உரைக்கும் ஓர் உரைப்பாயிரம் உள்ளது. அது பரிப்பெருமாளே எழுதியதுபோல் காணப்படுகிறது (பெருந்தொகை 1539).

தொண்டை மண்டல சதக மேற்கோள் பாடலில் (41) திருக்குறள் பழைய உரைகாரர் பத்துப் பேரையும் தொகுத்துக் கூறும் பாடல் ஒன்றுள்ளது (பெருந்தொகை 1538).

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி - திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்
கொல்லையுரை செய்தா ரிவர்

என்னும் இப்பாடலில் பரிமேலழகர் ஐந்தாமவராகக் கூறப்படுகிறார். ஆனால் இக் கையெழுத்துப் பிரதி அகவலில் ஒன்பது உரையாசிரியருக்குப் பின் பத்தாவது உரைகாரராகப் பரிமேலழகர் தோன்றினார் என்று கூறப்பட்டுள்ளது. மேலே காட்டப்பட்ட வெண்பா காலமுறைப்படி வரிசையாக உரையாசிரியர்களைச் சுட்டிக் கூறவில்லை என்று தெரிகிறது.

இறுதியில் பரிமேலழகர் பற்றிய நான்கு வெண்பாக்களும், ஒரு கட்டளைக் கலித்துறைப் பாடலும் காணப்படுகின்றன.

பாவெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ - நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி.

திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தங்
கருத்தமைதி தானே கருதி - விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே லழகனென்னும்
மன்னு முயர்நாமன் வந்து.

தெய்வப் புலமைத் திருவள் ளுவர்குறளில்
உய்விக்கு நூலெல்லா முள்ளதெனச் - செய்வித்தான்
தத்துவமெல் லாமுடம்பிற் றந்துணர்வார் போலுலக
மொத்தபரி மேலழக னோர்ந்து.

முன்னுரைத்த தேவர் குறட்பாவி னுக்கு
இன்னதிது வென்றுரைக்க வெய்தினான் - முன்னூற்
பரிமே லழகியகோப் போற்று தமிழ்க்கூடல்
பரிமே லழகியனென் பான்.

விரைத்தா ரலங்கல் திருவள் ளுவர்முன்னம் வெண்குறட்பா
நிரைத்தார் மிகுபொருள் நான்கும் விளங்க நெறிப்புலவர்
உரைத்தார் பலரும் அதற்குரை தன்னை உலகறியக்
கருத்தான் வகுத்தமைத் தான்கலை தேரொக்கை காவலனே.

பரிமேலழகருக்கு 'ஒக்கைகாவலன்' என்ற பெயர் உண்டு என்றும், அவர் மதுரையைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றும் இப்பாடல்களால் அறியப்படுகிறது. ஆனால் மு. இராகவையங்கார் பரிமேலழகர் காஞ்சிபுரத்தவர் என்று ஆய்ந்து நிறுவியுள்ளார் (*சாசனத் தமிழ்க்கவி சரிதம் காண்க*).

`மிகச் சிறந்த பரிமேலழகர் உரை எழுதப்பட்ட ஓலைச்சுவடியைப் பார்த்து எழுதப்பட்டது இந்தக் காகிதப் பிரதி என்பது தெளிவாகிறது.

திருவள்ளுவர் குறள்

அதிகார அட்டவணை

க. அறத்துப்பால்

பாயிரம்

கடவுள்வாழ்த்து
வான்சிறப்பு
நீத்தார்பெருமை
அறன்வலியுறுத்தல்

இல்லறவியல்

இல்வாழ்க்கை
வாழ்க்கைத்துணைநலம்
புதல்வரைப்பெறுதல்
அன்புடைமை
விருந்தோம்பல்
இனியவைகூறல்
செய்ந்நன்றியறிதல்
நடுவுநிலைமை
அடக்கமுடைமை
ஒழுக்கமுடைமை
பிறனில்விழையாமை
பொறையுடைமை
அழுக்காறாமை
வெஃகாமை
புறங்கூறாமை
பயனிலசொல்லாமை
தீவினையச்சம்
ஒப்புரவறிதல்
ஈகை
புகழ்

துறவறவியல்

அருளுடைமை
புலான்மறுத்தல்
தவம்
கூடாவொழுக்கம்
கள்ளாமை
வாய்மை
வெகுளாமை
இன்னாசெய்யாமை
கொல்லாமை
நிலையாமை
துறவு
மெய்யுணர்தல்
அவாவறுத்தல்

அறத்துப்பால்
அதிகாரம் ௩௮

உ. பொருட்பால்

பாயிரம்

ஊழ்

அரசியல்

இறைமாட்சி
கல்வி
கல்லாமை
கேள்வி
அறிவுடைமை
குற்றங்கடிதல்
பெரியாரைத்துணைக்கோடல்
சிற்றினஞ்சேராமை
தெரிந்துசெயல்வகை
வலியறிதல்
காலமறிதல்
இடனறிதல்
தெரிந்துதெளிதல்
தெரிந்துவினையாடல்
சுற்றந்தழால்
பொச்சாவாமை
செங்கோன்மை
கொடுங்கோன்மை
வெருவந்தசெய்யாமை
கண்ணோட்டம்
ஒற்றாடல்
ஊக்கமுடைமை
மடியின்மை
ஆள்வினையுடைமை
இடுக்கணழியாமை

திருவள்ளுவர் குறள்

காப்பு

[illegible]

அகவல்

[illegible]

ஆ. ஜான்துரை
மணப்பாறை

மிஷனரி அறிக்கைகள் - ஓர் ஆய்வு

முன்னுரை

மேலை நாடுகளில் தோன்றிய மிஷனரி இயக்கங்கள். நற்செய்தி அறிவிக்கும் பொருட்டு. தம் மிஷனரிகளைக் கடல் கடந்து கீழைநாடுகளுக்கு அனுப்பிவைத்தன. நற்செய்தி என்பது மக்களை அடிமைப்படுத்தும் அனைத்துத் தளைகளிலிருந்தும் விடுவித்து முழுமனித விடுதலையை மனுக்குலத்துக்குப் பகிர்ந்தளிப்பதேயாம். இவ்வெண்ணத்துடன் இந்தியாவின் தென்பகுதியான தமிழகத்தில் காலடி எடுத்துவைத்த லூத்தரன் மிஷன். இலண்டன் மிஷனரிச் சங்கம். மெதடிஸ்ட் மிஷனரிச் சங்கம் ஆகிய சீர்திருத்தத் திருச்சபைத் திருத்தொண்டு நிறுவனங்கள் கல்வி. மருத்துவம். சமயம் ஆகியவற்றினூடே சமுதாய மேம்பாடடைய வழிவகுத்த கடிதங்கள். அறிக்கைகள். குறிப்பேடுகள். இலண்டன் தாய்க் கழகத்துடன் கொண்ட தொடர்பறிக்கைகள் ஏராளமானவைகள் ஆலய ஆவணக் காப்பகங்களில் பழுதுபட்ட நிலையில் விரவிக் கிடக்கின்றன. அவ்வாறு கிடைக்கப்பட்ட தகவல்கள். அரிய கையெழுத்துச் சுவடிகள் இவண் சுருக்கமாக ஆராயப்படுகின்றன.

தரங்கை மிஷன் அறிக்கைகள்

டென்மார்க் அரசால் அனுப்பப்பட்டவரும் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவருமான பர்த்தலே மேயு சீகன்பால்க். ஹென்றி புளூச்சாவ் ஆகிய இருவரும் தமிழகக் கிழக்குக் கடற்கரைப் பகுதியான தரங்கம்பாடிக்கு 1706ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 9ஆம் நாள் வந்திறங்கினர். அக்காலத்தில் ஐரோப்பிய வாணிகத் துறையில் பேசப்பட்ட போர்த்துக்கீசு. பொது மக்கள் பேசிய தமிழ் மொழி ஆகியனவற்றைக் கற்றுத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொண்டனர். ஜெர்மானிய வீரர்களுக்குத் தங்கள் மொழியில் இறை வழிபாடு நடத்தினர். ஐரோப்பியர்களுக்குக் குற்றேவல் புரிந்த பணியாளர்களுக்கு நாள்தோறும் கிறிஸ்தவப் போதனை வழங்கினர். அநாதைப் பிள்ளைகளுக்கு இல்லம் தோற்றுவித்தனர். தமிழ். போர்த்துக்கீசியம். ஜெர்மன் மொழிகளில் கல்வி பயிற்றுவிக்கப்பட்டது. பல மொழி வரம் பெற்ற சீகன்பால்க் புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழி பெயர்த்தார். அச்சிடும் பொறியை 1712ஆம் ஆண்டு ஐரோப்பாவிலிருந்து கொணர்ந்து தமிழ் நூல்களை அச்சிட்டார். இந்த அச்சுப் பொறியே இந்தியாவிற்கு வந்த முதல் அச்சுப் பொறியாகும். அச்சுப் பதிப்பிற்கான தாள்களையும் பொறையாரில் தயாரித்தார். இத்தகு செய்திகளடங்கிய குறிப்புகள் அரிய கையெழுத்துச் சுவடிகளாய் ஆலய அறைகளில் வைக்கப்பட்டுள்ளன.[1] பல தமிழ்ப்

1. புது எருசலேம் ஆலயம். TELC. தரங்கம்பாடி. கள ஆய்வு நாள் 18-08-1996

பாட நூல்களையும், தமிழ் ஜெர்மன் மொழி அகராதியையும் எழுதித் தொகுத்தார். தென்னிந்தியாவிலுள்ள இந்து சமயத்தை ஆய்வு செய்து ஜெர்மன் மொழியில் எழுதினார்.

அநாதைச் சிறுவர்களுக்கு மட்டுமன்றி அனைத்து மாணவர்கட்கும் இலவசக் கல்வி கொடுக்கப்பட்டது. கல்வி புகட்டும் ஆசிரியர்களை உருவாக்கும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டது. நற்செய்திப் பணியாளர்களை உருவாக்கும் பயிற்சிக் கூடமும் தோற்றுவிக்கப்பட்டது. ஏழை மக்கள் பாதுகாப்புடன் தங்கிட வீட்டுமனைகள் கட்டப்பட்டன. இறை வழிபாட்டுக்கு வழிபாட்டு மனைகள் அமைக்கப்பட்டன.[2] இவ்வாறு லுத்தரன் மிஷனின் பணித்தள அறிக்கைகள் அரிய கையெழுத்துச் சுவடிகளாய் இன்றும் வைக்கப்பட்டிருக்கின்றன.

இலண்டன் மிஷனரிச் சங்க அறிக்கைகள்

இலண்டன் மிஷனரிச் சங்கம் தென்னிந்தியாவில் பல்வேறு இடங்களில் கல்வி, மருத்துவம், சமயம் ஆகிய துறைகளில் பணியாற்றியது. தென் தமிழ் நாட்டில் திருவாங்கூர்ப் பகுதியென்ற தற்போதைய கன்னியாகுமரி மாவட்டப் பகுதிகளில் 1806ஆம் ஆண்டில் ரிங்கல் துபே என்பவரால் மிஷனரிப் பணி தொடங்கப்பட்டது. 1818ஆம் ஆண்டு சார்லஸ் மீட், ஸ்டீபன் நீல் ஆகியோர் நாகர்கோயிலைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு, குறிப்பாக நெய்யூரில் ஆண்கள், பெண்கள் பள்ளிகளையும், விடுதிகளையும் நிறுவினர். 1874ஆம் ஆண்டு ஒரு மருத்துவமனையைத் தோற்றுவித்தனர். 1893ஆம் ஆண்டு நாகர்கோயிலில் கல்லூரி ஒன்றும் தொடங்கப்பட்டது போன்ற அறிக்கை ஏடுகள் இன்றும் அழியாமல் காக்கப்படுகின்றன.[3]

கொங்கு நாட்டுப் பகுதிகளான ஈரோடு, கோயம்புத்தூர், சேலம் பகுதிகளில் இலண்டன் மிஷனரிச் சங்கம் தொடக்கக் கல்வி முதல் தொழில் நுட்பக் கல்வி வரைக்கும் அடித்தளமமைத்தன. சமுதாயப் பள்ளிகளையும் தோற்றுவித்து விழிப்புணர்வுக் கல்வியளித்தன என்பதற்கு ஈரோடு பிரப் ஆலய ஆவணக் காப்பகத்திலுள்ள அரிய கையெழுத்துச் சுவடிகள் சான்றளிக்கின்றன.

சீர்திருத்தத் திருச்சபைத் திருத்தொண்டர்கள் இந்தியரைக் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களைக் கிறிஸ்தவராக்குவது மட்டுமல்லாது கல்வி மூலம் சமுதாய மாற்றத்தைக் கொணர்வதையே தலையாய பணியாகக் கொண்டு செயல்பட்டனர். இதனை அடிக்கோடிட்டுக் காட்டும் நிலையில் ஆயர் எபிநேசர் ஈஜென்கின்ஸ் கல்வி, மருத்துவம், நற்செய்திப் பணிக்கு முன்னோடியாகவும், கிறிஸ்தவ வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் விளங்குகிறது என மிஷனரிச் செய்தி அறிக்கையில் குறிப்பிடுகின்றார்.[4]

சமத்துவ சமுதாயம் நிறுவும் அறிக்கைகள்

கிறிஸ்தவத் திருமறை சுட்டும் யூதர் புறவினன் என்ற வேறுபாடு, ஒன்றாக

2. **Tablet**, On the well behind the alter of the New Jerusalem Church at Tranqubar.
3. **London Missionary Society : The one hundred and forty years first Annual Report** (West minister, 1936), pp. 40 ff.
4. **Missionary Notice**, Vol. XXI, Oct. 1876, pp. 335 ff.

உண்ணாத பாகுபாடு. கலப்பு மணம் புரியாத செயல்பாடு போன்றவை இந்தியச் சமுதாயத்திலும் இழையோடியிருப்பதையறிந்து அதனைக் களைந்திடக் கல்வியை ஆற்றல்மிகு கருவியாய்ப் பயன்படுத்தினர். தீண்டாமைச் சமுதாயத்தைப் பீடித்த தொழு நோய்: அதனைக் களைந்திடும் மருத்துவமனை கல்விக்கூடமேயெனப் பள்ளிகள் பல திறந்தனர். முழு மனித முன்னேற்றமே மிஷனரிச் சங்கங்களின் குறிக்கோளாய்த் திகழ்ந்தது. சமுதாய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து மக்கள் என்ற தகுதியைக் கல்வி மூலம் பெறச் செய்வதே திருத்தொண்டர்களின் நோக்கமாயிருந்தது என்பதை கார்டியன் இதழ்[5] எதிரொலிக்கிறது.

நற்செய்திப்பணிக்குக் கருவியாகக் கல்வி செயல்பட்டதென்ற நிலையன்றிக் கல்வியே மனிதனை முழு மனிதனாக்குவது என்ற ஆழ்ந்த குறிக்கோளுடன் கிரிப்ஸ் ஐயர் 1827ஆம் ஆண்டு சேலத்தில் பள்ளிகளைத் தொடங்கிச் சமுதாய மாற்றத்துக்குத் தடமமைத்தார்.[6]

திருச்சபை வழங்கும் கல்வியின் நோக்கம் அறிவற்ற கிறிஸ்தவ சமுதாயத்தை அமைப்பதும் அவர்தம் தாய்மொழியிலேயே திருமறையைக் கற்றுக் கொடுப்பதும், கட்டுப்பாட்டுடன் வாழ்வதுமேயாம் என்ற சீரிய நோக்கத்தைச் செயல்படுத்தினர்[7] என்று வெஸ்லியன் மெதடிஸ்ட் சங்க அறிக்கை கோடிட்டுக் காட்டுகின்றது.

சாதி அமைப்புக்கு வெளியே தீண்டத்தகாதோராக்கப்பட்ட 50 மில்லியன் மக்களின் சமுதாய விடுதலைக்குக் கல்வியை ஆற்றல் மிக்க கருவியாகக் கருதி இலண்டன் மிஷனரிச் சங்கம் பள்ளிகளைத் தொடங்கியதென மிஷனரி அறிக்கை குறிப்பிடுகின்றது.[8]

மிஷன் தொடக்கக் கல்வி அறிக்கை

அறியாமை இருளில் அல்லலுறும் மக்களுக்கு அறிவொளி ஏற்றுவதே நற்செய்திப் பணி என்ற நோக்கத்துடன் மிஷனரி பள்ளிகள் பலவற்றைத் தொடங்கினர். இத்தகு மிஷன் பள்ளிகளில் படித்து வேலை வாய்ப்புப் பெற்றோர் கிராமங்களில் தம் மக்களுக்குக் கல்வியைக் கற்றுக் கொடுப்பதிலும். திருப்பணியாற்றுவதிலும் தம்மை இணைத்துக் கொள்வோரே மிஷன் பள்ளியின் நோக்கத்தை நிறைவேற்றுவோராவர். பொருளாதாரத்தில் சுயச்சார்பு எய்திட வேளாண்மைப் பணியில் ஈடுபடுவதுடன் குடிசைத் தொழில்களையும் கற்கும் மாந்தர் வாழ்வு வளம் பெறும். கற்குமிடம் சமுதாயக் கூடமாகவே மிளிர்ந்திடும் என்று மிஷன் கல்வி அறிக்கை விளம்புகிறது.

திருச்சிராப்பள்ளி குழு இயக்க அறிக்கை (MMS)

தொடக்கப் பள்ளிகள் மிக அதிகமாகத் தோற்றுவிப்பதற்குக் காரணம் தென்னிந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்ட தலித் மக்களுக்குக் கட்டாயமாகக் கல்வியளிக்க வேண்டும். பெண் கல்விக்கும் தொடக்கக் கல்வித் திட்டத்தில் சிறப்பு நிதியுதவி அளிக்க

5. H. A. Popley, **Gaurdian**, May 28, 1936, p 345.
6. T. C. Whitney, **Hundred Years of Salem Mission History**, pp. 816 ff.
7. **Wesleyan Methodist Society**, p. 18.
8. **Mission Report**, 1919, p. 6.

வேண்டும் 1913ஆம ஆண்டிலிருந்து உயர் கல்விககு அதிக நிதியுதவி குறைககபபட்டுத் தொடக்கக் கல்விக்கு அதிக நிதி வழங்கப்பட்டது.[9] சார்லஸ் உட் கல்வி அறிக்கையின் விளைவாக அரசின் நிதியுதவி மிஷன் பள்ளிகளுக்குக் கிட்டியது இதனால் மிஷனரிச் சங்கங்கள் பல தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கின என்று மிஷனரி அறிக்கைகள்[10] பறைசாற்றுகின்றன

மிஷனரிகளால் தொடங்கப்பட்ட பள்ளிகள் சாதி வேறுபாடின்றி எல்லா இன மாணவர்கட்கும் பாகுபாடின்றிக் கல்வியைக் கற்றுக் கொடுத்தன எனக் கடிதங்கள் தகவல் தருகின்றன 'முழு மனிதனுக்கும் முழுக்கல்வி' வழங்கிடும் மிஷன் பள்ளிகளில் முதல் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் கல்வி கற்காதவர்களாயிருந்தாலும் தங்கள் பிள்ளைகளாவது கல்வி கற்கட்டும் என்ற ஆர்வத்தினடிப்படையில் எல்லாக் குழந்தைகளையும் பள்ளிக்குக் கட்டாயம் அனுப்ப வேண்டும் என்று தீர்மானித்தனர்; ஏழைக் குழந்தைகள் தங்கிப் பயில இலவச விடுதிகள் அமைத்துத் தந்து உணவு, உடை, மருத்துவம், கல்வி ஆகியனவற்றை அவர்களுக்கு இலவசமாகத் தந்தனர் என ஆண்டறிக்கை[12] சான்று பகர்கின்றது.

முடிவுரை

மிஷனரி அறிக்கைகள், அரிய கையெழுத்துச் சுவடிகளாய் ஆலய அறைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன அழிவை எதிர்நோக்கியுள்ள இக்கடிதங்களுள், குறிப்பேடுகள், ஆண்டறிக்கைகள் போன்றவை தரும் செய்திகள் வரலாற்று நிகழ்வுகள் பேணிக் காக்கப்பட வேண்டியவை என்பதை அறிவுறுத்துகின்றன. அவை தரும் செய்திகள் குறிப்பாகக் கல்வி, மருத்துவம், சமயம், சமுதாய மேம்பாடு ஆகிய துறைகளில் மிஷனரிகள் ஆற்றிய பணிகள்பற்றியதாகும் வரலாற்றுப் பார்வையுடன் லுத்தரன் மிஷன் அறிக்கைகள், மெதடிஸ்ட் மிஷனரிச் சங்க அறிக்கைகள் ஆகிய சீர்திருத்தத் திருச்சபைகள் ஆற்றிய மனிதவள மேம்பாட்டுப் பணிகள் சிலவற்றை இவண் சுருக்கமாக ஆய்ந்திட முடிந்தது. இவற்றை ஆய்வுக்குட்படுத்தி ஆவணக் காப்பகத்தில் கணினி வழியே காக்கப்படவேண்டியது மிகவும் தேவையான ஒன்றாகும்.

நூலோதி

1. **Annul Reports of the MMS 1820 - 1947** (Various Volumes)
2. **Education in the Mass Movement area of Trichinopoly Dt.** Dec. 1941.
3. **London Missionary Society : Mission Reports** 1848, 1919, 1920, 1927, 1930 (West Minists : LMS), 1934.
4. **Tranqubar Mission Reports** (Various Volumes).

9 **Education in the Mass Movement Area of Trichirappalli District : Report of the Education Sub Committee** (Trichy · Dodson Press, 1942), pp. 1-3.

10 **The Wesleyan Methodist Church : Report of the South India Provincial Synod** (RSIPS), (Mysore . Wesley Press, 1936), p 21.

11 Mss, 'Madras' Box (1822-1824), Letter of Rev. James Mowat to Rev Richard Watson, Nagapattinam, dt 11th June 1823.

12. **Annual Reports of the MMS 1820-1947**, Vol. XIV, 1860, pp. 28-31.

□

ப. உஷாராணி
ஆய்வாளர்
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

மராத்தியர் காலக் கப்பல் கட்டும் தொழில்

கி. பி. 1676 முதல் கி. பி. 1855 வரை தமிழகத்தின் தஞ்சாவூர்ப் பகுதியை ஆண்ட மராத்தியர்கள் தமது அன்றாட அலுவல்கள். வரவு செலவுக் கணக்குகள். கடிதப் போக்குவரத்து போன்றவற்றை மராத்திய மோடி எழுத்துக்களில் எழுதி வந்துள்ளனர். அத்தகைய மோடி ஆவணங்களைக் கொண்டு தஞ்சாவூர் மராத்தியர்களின் கப்பல் கட்டும் தொழில் வளர்ச்சிபற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கப்பல் கட்டும் தொழில்

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது தமிழர்தம் முதுமொழி. முற்காலத்தில் ஒரு நாட்டு மக்கள் தங்கள் நாட்டுப் பொருள்களை மற்றொரு நாட்டிற்குப் பாய்மரக் கப்பல்களில் எடுத்துச் சென்று விற்றுவிட்டுத் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கி வந்தனர். இவ்வாறு மக்கள் போக்குவரத்திற்கும் வாணிபத்திற்கும் கப்பல்களைப் பெரிதும் பயன்படுத்தியதை இலக்கியங்கள். கல்வெட்டுக்கள். ஆவணங்கள் போன்றவற்றின் மூலம் அறியமுடிகின்றன. தமிழகத்திலேயே பல துறைமுகங்கள் இருந்துள்ளன. அதனால் தமிழகத்தை ஆட்சி செய்த பல்வேறு மன்னர்கள் படகு. தோணி. கப்பல் போன்றவற்றைக் கட்டுவதிலும் சிறந்து விளங்கியுள்ளனர் என்பதைப் பல சான்றுகளின் மூலம் அறியமுடிகின்றன அவ்வகையில் மராத்தியர்கள் ஆட்சியிலும் தஞ்சாவூரில் கப்பல் கட்டும் தொழில் காணப்பட்டது.

கி. பி. 1821 மார்ச்சுத் திங்கள் ஐந்தாம் நாள் கல்கத்தாவில் கப்பல் கட்டுகிற இடத்தை இரண்டாம் சரபோஜி மன்னர் பார்வையிட்டார். அங்குக் கப்பலின் நீள அகலத்துக்குத் தகுந்தபடிப் பள்ளம். கப்பலின் உயரத்திற்குத் தக்கபடி ஆழம். சுற்றிலும் இறங்குவதற்குரிய படிகள். கப்பலுக்கு நங்கூரம். அப்பள்ளத்திற்கு மேற்புறம் கங்கையாறு. ஆற்றுநீர் பள்ளத்திற்குள் வராமலிருக்கப் பலவகைக் கதவுகள். ஊற்றுநீர் தேங்கினால் அந்நீரை அப்புறப்படுத்தும் குழாய்கள். கப்பல் வேலை முடிந்ததும் கதவுகளைத் திறந்தால் கங்கையாற்று வெள்ளம் வந்து நிரம்புதல். கப்பலை எளிமையாகக் கங்கையாற்றுக்குக் கொண்டு செல்ல முடியும் என்பதையெல்லாம் மன்னர் அறிந்தார். இவற்றை 25-07-1821இல் காசியிலிருந்து அவர் எழுதிய

கடிதத்திலிருந்து அறியமுடிகிறது இவற்றையெல்லாம் அறிந்த சரபோஜி மன்னர் தஞ்சாவூரிலும் இந்த முறைகளைப் பின்பற்றிக் கப்பல் கட்டும் தொழிலை மேன்மைப்படுத்தியிருக்கக்கூடும் என்று எண்ணமுடிகிறது.

கி பி 1826இல் சாலுவநாயக்கன் பட்டினத்தில் அரண்மனையாருக்குக் கப்பல் இருந்ததாகத் தெரிகிறது[1] தஞ்சாவூரில் பட்டுக்கோட்டையிலிருந்து 10 மைல் தொலைவிலுள்ள சாளுவநாயக்கன் பட்டினம் மிகப் பெரிய துறைமுகமாக விளங்கியது. வெளிநாடுகளுடனான வாணிபத்திற்கு இத்துறைமுகம் பயன்படுத்தப்பட்டதால் கப்பல் கட்டும் தொழிலைச் சரபோஜி இங்கு அமைத்தார். இதனால் இவ்விடம் சரபேந்திரராச பட்டினம் எனப்பட்டது. கப்பலுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் இங்குச் செய்யப்பட்டன.[2]

சரபோஜி மன்னர் காசிப் பயணம் சென்றபொழுது கப்பல் வேலையில் திறமை மிக்க ஆங்கிலேய நாட்டைச் சார்ந்த மிஸ்தர் யுஷ்டவிகஷ என்பவனை ரூ 180க்கு மாதச் சம்பளத்தில் நியமித்தார். பின்னர் அவனைத் தஞ்சாவூருக்கு அனுப்பி. அவன் உதவிக்குத் தச்சர். கொல்லரை உடன் அனுப்பி. சிறிய மற்றும் பெரிய கப்பல்களைக் கட்டச் செய்ய ஆணை பிறப்பித்தார்.[3] இதன் மூலம் மராத்தியர்கள் இத்தொழிலுக்குத் திறமையான ஆட்களை நியமித்துள்ளனர் என்பது தெரிகிறது.

சாளுவநாயக்கன் பட்டினத்திலுள்ள கப்பலின் வேலைக்காகச் சுரப்பின்னை மரங்களை வெட்டிச் சேகரம் செய்து கொண்டு வருவதற்காகப் படகோட்டி மாரியப்பாவை அனுப்பியுள்ளது.[4] இங்குள்ள பெரிய கப்பலுக்குப் பாய்மரம் நாகூரிலிருந்தும் பரங்கிப்பேட்டையிலிருந்தும் வாங்க ஆட்களை அனுப்பியுள்ளார்.[5] இந்தச் செய்தியானது இங்குப் பெரிய அளவிலான கப்பல்கள் கட்டப்பட்டன என்பதை அறியமுடிகிறது. கப்பல் கட்டுவதற்குச் சாமான்கள் திருச்சிராப்பள்ளியிலிருந்தும் வரவழைக்கப்பட்டுள்ளன.[6] கப்பல் சாமான்கள் கொண்டு வருவதற்குச் சாளுவநாயக்கன் பட்டினத்திற்கு 4 ஒட்டகம் போகிறது[7] என்ற குறிப்பிலிருந்து கப்பல் கட்டத் தேவையான பொருள்கள் இங்குத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்பது தெரிகிறது.

சரபேந்திரராச பட்டணம் 'மகாதேபிரசாத்போட்' சிறு கப்பல் மிகவும் பழுதாகிவிட்டதனால் புதுச் சாமான்கள் வாங்குதல்[8] என்பதன் மூலம் சிறு கப்பல்களும் இங்குக் கட்டப்பட்டுள்ளன என்பதை அறியமுடிகிறது.

கி. பி 1811இல் சமுத்திரம் என்னும் ஏரியிலுள்ள கப்பல் பழுது பார்க்கக் கருங்காலிப் பலகை 17 இரும்பு எடை 3 கொடுக்கப்பட்டது.[9] இலங்கை போன்ற

1 கே எம். வேங்கடராமையா. **தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்**. ப 392
2 வீ. சொக்கலிங்கம். 'மோடிப் பலகணி - கப்பல் செய்தி. **சரசுவதி மகால் இதழ்**. தொகுதி 16. ப. 8
3. கே. எம். வேங்கடராமையா. **மு. கா. நூல்**. ப. 392
4. பா. சுப்பிரமணியன் (ப. ஆ). **தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும்**, **தொகுதி** 1. ப 158
5 **சரசுவதி மகால் மோடி ஆவணத் தமிழாக்கக் குறிப்புகள்** தொகுதி 4. ப 16
6 பா சுப்பிரமணியன் (ப ஆ) **மு. கா. நூல், தொகுதி 1**. பக். 469-470.
7 **ச. ம. மோ. ஆ. கு. தொகுதி 1**. ப 43
8 **ச. ம. மோ. ஆ. கு. தொகுதி 1**. ப 10.
9 **ச. ம. மோ. ஆ. கு. தொகுதி 21**. ப 26

நாடுகளிலிருந்தும் கப்பல்கள் பழுது பார்க்க இங்கு வந்தன. 1826இல் மட்டும் 4 கப்பல்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் தயாரித்த கப்பல்களில் முத்திரைகள் இடம்பெற்றன. இந்த முத்திரைகளை நீக்க முயன்றவர்களுக்கு 25 சக்கரம் 2 பணம் அபராதத் தொகையாக வசூலிக்கப்பெற்றது.[10]

சாளுவநாயக்கன் பட்டணம் கப்பல் வேலைக்காரர்கள் 3 பேர் கண்டியூரில் தண்ணீர் வேலை செய்கிறார்கள்.[11] காரைக்கால் துறைமுகம் இளைய கப்பலோட்டிகள் வேண்டும். நல்ல கட்டு மஸ்தான ஆட்களுடன் 9 பேர்களில் 7 பேரை அனுப்ப உத்திரவு. அவர்கள் தடல் அப்பாசாமி, சுப்பராவ், சாமாஜி, ஹிரோஜி, கோவிந்தராவ், லிங்கோஜி, சந்திரராவ் என்பவர்கள் ஆவர்.[12] இதன் மூலம் கப்பல் வேலை செய்யச் சிறந்த ஆரோக்கியமானவர்களையே நியமித்துள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது.

சரபேந்திரராசபுரத்தில் சர்க்காருக்குரிய கப்பலில் சில இடங்களில் செப்புத் தகடுகள் போடுவதற்கும், தார் பூசுவதற்கும், கோழி வெட்டிக் கடலில் தள்ளுவதற்கும் ரூ 200 செலவாகும். அதிகமாய்ப் பழுது பார்க்க அவசியம் இல்லாததால் கப்பலுக்குரிய செலவுகள் யாவும் செய்து கொண்டு ஆண்டொன்றுக்கு ரூ 600 வாடகை கொடுப்பதாக 'ஜேம்ஸ்ரோஸ்' என்பவர் 25-01-1838இல் கடிதம் எழுதினார். அதன்படி 16-07-1838இல் சரபேந்திரராச பட்டணம் மத்தியஸ்தர் கனகசபையா பிள்ளைக்கு ஜேம்ஸ்ரோஸ் கப்பல் பத்தா கூலி உடன்படிக்கை எழுதிக் கொடுத்தார். அந்தப் பாய்மரக் கப்பலுக்குப் பெயர் 'பிரகதீசுவரப் பிரசாத்' என்பதாகும்.

குத்தகைக்கு எடுத்துக்கொண்ட ஜேம்ஸ் ரோஸ் சாதாரண மனிதர் அல்லர். மிக்க திறமையுடையவர். நன்கு கணக்கெழுதுவதில் வல்லவர். கப்பலைப் 'பத்தா கூலி' எடுப்பதில் மிக்க அனுபவம் உள்ளவர். 1836இல் மேஸ்டர் பீடன் துரையினுடைய 'வெங்கிட்டரெட்டி' என்ற கப்பலையும், 1837இல் பாவாநகர் அரசருடைய 'தவுலத் பிரசாத்' என்ற கப்பலையும் பத்தாகூலிக்குப் பிடித்து அனுபவித்தவர்.[13] கப்பலைக் குத்தகைக்கு விட்டுப் பழுது பார்க்கும் நிலையும் அக்காலத்தில் நிலவியுள்ளது.

சரபேந்திரராச பட்டணம் கப்பல் ஜேர்மங்கசாரி நாகப்பட்டணம் கொண்டுபோய்ச் சாயம் பூச மற்ற வேலைகள் செய்த செலவுகள்[14] என்பதன் மூலம் நாகப்பட்டணத்தில் சாயம் பூசப்பட்டது என்பதை அறியமுடிகிறது. இவ்வாறாக அரசருக்குச் சொந்தமான கப்பல்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால் பழமையான சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் இரண்டாம் சிவாஜி காலத்தில் 1838இல் ஒரு கப்பல் சர்க்காரிலிருந்து வாடகைக்கு விட்டிருக்கிறார்கள்.[15] மராத்தியர் காலத்தில் அரசாங்கத்தால் இத்தொழிலுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் தனியார் கப்பலும் காணப்பட்டது என்ற செய்தியும் உள்ளது.

கி. பி. 1777இல் அதிராம்பட்டினம் வியாபாரி கப்பலில் அரிசியை ஏற்றிக்கொண்டு கொழும்புக்குச் சென்றார். திரும்பி வரும்பொழுது கொட்டைப்பாக்கு

10. பா. சுப்பிரமணியன் (ப. ஆ.), **மு. கா. நூல், தொகுதி 1**. ப. 161.
11. **ச. ம. மோ. ஆ. கு. தொகுதி 4**. ப. 9.
12. **ச. ம. மோ. ஆ. கு. தொகுதி 21**. ப. 26.
13. கே. எம். வேங்கடராமையா (ப. ஆ.), **மு. கா. நூல்**. பக். 393 394.
14. **ச. ம. மோ. ஆ. கு. தொகுதி 4**. ப. 32.
15. கே. எம். வேங்கடராமையா (ப. ஆ.), **மு. கா. நூல், தொகுதி 1**. ப. 391.

ஏற்றிக்கொண்டு வந்தார் என்பதன் மூலம் இக்கப்பல் அதிராம்பட்டினம் வியாபாரியினுடையதாக இருக்கக்கூடும் எனத் தெரிகிறது.[16] இவ்வாண்டில் காதர்கட் மரக்காயரின் கப்பலுக்குப் பட்டணச்சேரியின் முத்தியான் உத்தரவின்றிக் கட்டுமரத்தை விட்டதனால் அபராதம் வங்கினது என்பதன் மூலம் காதர்கட் என்பவரிடம் கப்பல் இருந்தமையும்,[17] கி. பி. 1777இல் மிஸ்தர் தான்வேல் ஸாமர்யேன் என்னும் வெள்ளைக்காரர் நமது இராஜ்யத்தில் நெல்லை வாங்கிக் கொண்டு, நாகூர், திருமுல்லைவாசல் துறைமுகத்திலிருந்து நெல்லைக் கப்பலில் ஏற்றிச் சென்னப்பட்டினத்திற்கு அனுப்புகிறார்[18] என்பதன் மூலமும் தனியாரிடம் கப்பல் இருந்திருக்கலாம் என்பதை அறியமுடிகிறது.

ஏற்றுமதியும் இறக்குமதியும்

கி. பி. 1806இல் கொல்பேனா, மலாக்கா துறைமுகங்களுக்கு முத்துச்சிப்பி 15 தூக்கு. சாமிநாத செட்டியாரின் கப்பலில் நாகூர்த் துறைமுகத்திலிருந்து ஏற்றி அனுப்பினார். ஸேக் மயாரான்கதா என்பவருடைய கப்பலில் முத்துச்சிப்பி 5 தூக்கு அனுப்பப்பெற்றது[19] என்ற ஆவணச் செய்தியின் மூலம் தனிநபர்களிடம் இருந்த கப்பல்களில் இங்கிருந்து ஏற்றுமதிப் பொருள்கள் அனுப்பப்பட்டதை அறியமுடிகிறது.

இத்தகைய கப்பல்களின் மூலம் அயல்நாட்டு வாணிபம் சிறந்த முறையில் இருந்தது என்பதைச் சில ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன. கி. பி. 1803இல் சூலை 18ஆம் தேதி ஜேனஸ் ஸ்டூட் என்ற கப்பலில் ஒயின் சாராயம் அனுப்பப்பட்டுள்ளது. மேஸ்தர் பென்ஜாமின்துரியின் சாகேப் இவர்களுக்கு அன்னிய தேசத்திற்குச் சாராயப் பீப்பாய்கள் அனுப்பித்த செலவு[20] கி. பி. 1807இல் சென்னையிலிருந்து கப்பல் நாகூர்த் துறைமுகத்திற்கு வந்து சாமான்களை இறக்கி வெட்டாறு வழியாகப் பெரிய பெட்டிகளைத் தஞ்சாவூருக்குக் கொண்டு வருதல்[21] என்ற செய்திகளின் மூலம் தஞ்சாவூரில் ஏற்றுமதியும் இறக்குமதியும் நடைபெற்றுள்ளன என்பதும் விளங்குகிறது. இவ்வாறாகக் கப்பல் போக்குவரத்தின் மூலம் மராத்தியர் காலத்தில் தஞ்சாவூரிலிருந்து நெல், முத்துச்சிப்பி, அரிசி, சாராயம், மது பானங்கள் முதலான பல்வேறு பொருள்கள் கொழும்பு, மலாக்கா, கொல்பேனா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதியும் அங்கிருந்து கொட்டைப்பாக்கு போன்ற பொருள்கள் இறக்குமதியும் செய்யப்பட்டுள்ளன.

கப்பலை ஓட்டிய மாலுமிகளுக்கு ஒரு மாதத்திற்கு 53 சக்கரம் சம்பளமாகக் கம்பெனியால் அளிக்கப்பட்டிருக்கிறது. கப்பலிலிருந்து நிலத்திற்குச் செய்திகள் அனுப்பக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

படகு கட்டும் தொழில்

பெரிய கப்பல்கள் மட்டுமின்றிச் சிறிய படகுகளும் உள்நாட்டுப் போக்கு

---

16 கே. எம். வேங்கடராமையா (ப. ஆ.), **மு. கா. நூல், தொகுதி 1** ப. 392.

17. பா. சுப்பிரமணியன் (ப. ஆ.), **மு. கா. நூல், தொகுதி 1**, ப. 161

18 கே. எம். வேங்கடராமையா (ப. ஆ.), **மு. கா. நூல், தொகுதி 1**, ப. 392.

19 **மேலது**, ப. 391.

20 **ச. ம. மோ. ஆ. கு. தொகுதி 20** பக். 9, 10.

21. பா. சுப்பிரமணியன் (ப. ஆ.), **மு. கா. நூல், தொகுதி 1** ப. 381.

வரத்திற்காகக் கட்டப்பெற்றன. காவிரியாறு பல கால்களாய் ஓடி வளப்படுத்தும் மராத்தியர் ஆட்சியில் தஞ்சாவூரில் ஆறுகளைக் கடக்கப் பாலங்கள் இன்மையால் மக்கள் படகுகளிலேயே பயணம் செய்தனர். எனவே படகு கட்டும் தொழில் அக்காலத்தில் சிறப்புற்றிருந்தன.

கி. பி. 1754இல் காவேரி, அரசலாறு, கொள்ளிடம் ஆகிய இம்மூன்று ஆறுகளுக்கும் படகு தயார் செய்யவும்,[22] கி. பி. 1768இல் சாதம்பங்குடித் துறைமுகத்திற்குக் கொள்ளிடத்தில் படகைக் கட்டவும்,[23] கி. பி. 1811இல் விண்ணாற்றில் படகு விடுவதற்காகவும்[24] செலவு செய்யப்பட்டன. மேலும் படகு செய்வதற்காகச் சாரங்கபாணி அய்யாவிற்கு 100 சக்கரம் கொடுக்கப்பட்டது. தவிர படகு வேலை, இதற்குக் காசிரட்டு (முரட்டுத்துணி) வாங்கியது, புதிய படகுகளைத் தயார் செய்து பூசை போடுதல்,[25] சர்க்காரின் 2 படகுகளுக்குத் தார் தடவுதல்[26] என்ற ஆவணச் செய்திகள் மூலம் தஞ்சாவூரிலேயே படகு கட்டப்பெற்றதை அறியமுடிகிறது.

கி. பி. 1814இல் திருவையாற்றில் புதிய படகு தயார் செய்ததைக் காரைக்கால் துறைமுகத்தில் நங்கூரம் போட்டு வைக்கப்படுவதால் அதற்குப் படகோட்டிகளை அனுப்புதல்,[27] கி. பி. 1832இல் திவான்சாயேப் (இரண்டாம் சிவாஜி) கோடிக்கரையிலிருந்து சாலுவநாயக்கன் பட்டணத்திற்குச் சமுத்திரமார்க்கமாகப் படகில் உட்கார்ந்து வந்ததற்குப் படகுக்காரனுக்குக் கூலி வாடகை ரூ 16,[28] படகு வேலையில் சிறந்தவர்களான காத்தான், மாரீ, கந்தன் என்ற மூவருக்கும் அவர்களது திறமையைப் பாராட்டி 3 சக்கரம் இனாம்[29] என்பதன் மூலம் படகோட்டிகளுக்குக் கொடுக்கப்பட்ட கூலி விவரம் தெரிகிறது.

திருவையாறு, சரபேந்திரராச பட்டணம் போன்ற இடங்களில் படகுகள் தயார் செய்யப்பட்டன. ஒரு படகைத் தயாரிக்க 10001 ரூ செலவிடப்பட்டது. சரபேந்திரராச பட்டணத்தில் படகு ஒன்றைப் பழுது பார்க்க ரூ 535-0-3 செலவாயிற்று.[30]

தோணி கட்டுதல்

படகுகளுடன் தோணிகள் அல்லது பரிசல்கள் என்பதையும் பயன்படுத்தியுள்ளனர். வேதாரண்யம், கோடிக்கரை முகாமிலிருந்து இரண்டு தோணிகள் தயாரிப்பதற்குப் புன்னைக்காய் மரங்களும் பலகையும் வருகின்றன. 'விட்டு விடுக' என்று சுங்கத்துறைக்கு 1811இல் ஆணை பிறப்பித்ததாக இருக்கும் குறிப்பு தோணிகள் செய்வதுபற்றி அறிவிப்பதாய் உள்ளது.[31] கி. பி. 1826இல் கொள்ளிடத்தில்

22. பா. சுப்பிரமணியன் (ப. ஆ.), **மு. கா. நூல், தொகுதி 1**, ப. 381.
23. **மேலது** ப 121.
24. **மேலது**. ப 192
25. **மேலது**. ப 139.
26. **மேலது**. ப 135.
27. **மேலது**. ப 11.
28. **மேலது**. ப. 356
29. **மேலது**. பக். 139, 140
30 **ச. ம. மோ. ஆ. கு. தொகுதி 25**, ப. 39.
31 கே. எம். வேங்கடராமையா (ப. ஆ.). **மு. கா. நூல்**. ப. 391.

வல்லத்தாத் தொரையில் பரிசிலை விடுகிற ஆசாமிக்கு 30[32] என்பதன் மூலம் அவர்களுக்குக் கொடுத்த கூலிபற்றி அறியமுடிகிறது.

ஓடம் திருவாதி கொடமுரட்டிக்குப் புதிது செய்ய வேண்டும். கடகாலுக்குப் புதிதாக இருந்தும் கெட்டுப்போயிருக்கிறதைப் புதுப்பிக்க வேண்டுகிறது. கும்பகோணம், பாபநாசம் ஆறுகளுக்குப் புது ஓடம் செய்ய வேண்டும்[33] என்பதன் மூலம் ஓடங்களும் தயாரிக்கப்பட்டதை அறியமுடிகின்றன.

முடிவுரை

தஞ்சாவூர் மராத்தியர்கள் காலத்தில் கப்பல் கட்டும் தொழில் நடைபெற்றது என்பதை மோடி ஆவணங்களின் துணைகொண்டு அறியமுடிகிறது. காரைக்கால், கோடியக்கரை, சரபேந்திரராச பட்டணம், நாகூர், நாகப்பட்டினம் போன்ற துறைமுகங்களில் கப்பல் போக்குவரத்து நடைபெற்றது என்பதையும் அறியமுடிகிறது. இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்திற்கு முன்னரே இத்தொழில் வளர்ச்சி பெற்றிருந்தாலும் இவர் காலத்தில்தான் தொழில்நுட்பங்களுடன் திறமையான ஆட்களின் உதவியால் இத்தொழில் மேலும் வளர்ச்சி பெற்றது. மக்கள் போக்குவரத்திற்கும் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. அக்காலத்தில் செல்வந்தர்கள் தாங்களே சொந்தமாகக் கப்பல்களை வைத்திருந்தனர். இத்தொழில் மூலம் வாணிபம் வளர்ச்சி பெற்றது தஞ்சாவூர் மராத்தியர்கள் இத்தொழிலுக்குப் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளனர்.

□

---

32 பா சுப்பிரமணியன (ப ஆ) மு. கா. நூல், தொகுதி 1. ப. 468

33. ச. ம. மோ. ஆ. கு. தொகுதி 8 ப 8

த. அமுதா
ஆய்வாளர்
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

நேருவின் கடிதங்கள்

முன்னுரை

நேரு தம் மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள் குடும்ப நலத்தையும், நிகழ்வுகளையும் கொண்டவை அல்ல; உலகளாவிய பார்வையில் தம் மகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அவர் எழுதியுள்ளார். தமது நூல்களின் வழியாகவும், கல்விச்சாலைகளின் மூலமாகவும் தாம் அறிந்த உலக வரலாறு, இயற்கை நிகழ்வுகள், விலங்குகள், மனிதரின் இன, மொழி, வரலாறு, பண்பாடு, நாகரிகம், இன்னபிற தகவல்களை இளம் உள்ளத்தில் பதியும்வண்ணம் எழுதியுள்ளார். ஜவஹர்லால் நேரு தம் மகள் இந்திராவுக்கு எழுதிய 31 கடிதங்களின் மூலம் உலகப்போக்கையும் நோக்கையும் நன்கறிந்த இந்திரா பிற்காலத்தில் இந்திய நாட்டின் பிரதமராகத் திகழ்ந்தார். கடிதங்களின் மூலம் ஒருவரது வாழ்வைச் சீரமைத்துச் செழிப்பாக்கி வெற்றி கொள்ள முடியும் என்பதை இவரது வாழ்க்கை அனைவருக்கும் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. நேரு தம் மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்களை சி. ரா. வேங்கடராமன் என்பவர் 'ஜவஹர்லால் நேருவின் கடிதங்கள்' என்ற தலைப்பில் தமிழில் நூலாக வெளியிட்டுள்ளார். இந்நூலை அடிப்படையாகக் கொண்டு இவர்தம் கடிதங்களில் உள்ள செய்திகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

இயற்கை தொடர்பான செய்திகள்

வரலாறு என்பது அந்நாட்டின் இயற்கை அமைப்பின் அடிப்படையில்தான் உண்டாக்கப்படுகிறது. மனிதன் இன்று இயற்கையை வென்று வெண்ணிலாவில் காலடி எடுத்து வைத்துச் சாதனைகள் பல புரிந்துள்ளான். பூமியின் இயற்கைத் தன்மையால் அவன் வரலாற்றை ஆட்டிப் படைக்கிறான். பூமிப்படத்தை உற்றுநோக்கும்போது சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கேற்பவே நாடுகளும் நாட்டு மக்களும் உருவாகியிருப்பதை அறியமுடிகிறது. ஒரு நாட்டின் வரலாற்றைச் சந்தர்ப்பச் சூழ்நிலைகளே உருவாக்குகின்றன. புவியியலே வரலாற்றியலை ஆக்குகிறது என்பதை அறியலாம்.

"ஒரு நாட்டின் வரலாற்றை அறிவியலின் அடிப்படையில் தெற்றென அறிய வேண்டுமானால் அந்நாட்டின்

புவியியலைப்பற்றிய அடிப்படை உண்மைகளை அறிந்தாக வேண்டும். பொதுவாக அந்நாட்டிச் ;வியியலும் உள்நாட்டு அமைப்புகளும் பற்றி நாம் அறிவோமானால் அந்நாட்டின் வரலாற்றை ஒருவாறு கணித்துவிடலாம்"[1]

என்று இயற்கையைப்பற்றி கோ. தங்கவேலு கூறுகின்றார்.

நேரு தமது கடிதத்தில் இயற்கையைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார் :

இந்தியா ஒரு பெரிய நாடானாலும் உலகப் பரப்பில் அது ஒரு சிறுபகுதியாகும். நாம் வசிக்கும் இப்பூமியின் வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டுமானால் இதில் அடங்கியுள்ள எல்லா நாடுகளையும் இதில் வசித்த எல்லா மக்களையும்பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும். இப்பூமி மிகமிகப் பழமையானது. கோடானுகோடி வருடங்கள் வயதுள்ளது. மனிதர்களுக்கு முன்பு மிருகங்கள் வாழ்ந்தன. மிருகங்களுக்கு முன்பாக உயிருள்ளவை ஒன்றுமே வசிக்கவில்லை ஒருகாலத்தில் இவ்வுலகமானது ஒரு நெருப்புப் பந்து போல எரிந்து கொண்டிருந்தது. அதன் வெப்பத்தினால் எவ்வுயிரும் பிழைக்க முடியவில்லை என்று பிராகிருத சாஸ்திர நிபுணர்கள் கூறுகின்றனர். அவர்கள் எழுதிய நூல்களைப் படித்து மலைகளையும் பாறைகளுக்கிடையே படிந்து கிடக்கும் பழைய மிருகங்களின் எலும்புகளையும் (Fossils) நாம் கவனித்துப் பார்த்தால் அவர்கள் சொல்கிறபடி இருந்திருக்க வேண்டும் என்பது தெரியவருகிறது.

பண்டை வரலாறுகளை அறிந்து கொள்ளப் புத்தகங்கள் இல்லை என்றாலும் அவற்றைவிட வரலாற்றுச் செய்திகளைச் சொல்லக்கூடியவைகள் மலைகளும், குன்றுகளும், கடல்களும், நட்சத்திரங்களும், நதிகளும், பாலைவனங்களும், மிருகங்களின் கற்படிந்த உருவங்களுமாகும்.' இவைகள்தான் பூமியின் வரலாற்றை அறியப் பயன்படும் புத்தகங்களாகும் ஒவ்வொரு சிறு கல்லும் இயற்கைப் புத்தகத்தின் ஒரு தாளாகும்

பூமி சூரியனையும், சந்திரன் பூமியையும் சுற்றுகின்றன. பூமியைப் போலவே இன்னும் பல கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. அவை எல்லாவற்றிற்கும் பூமி உட்படச் சூரியனைச் சேர்ந்த கிரகங்கள் என்று பெயர். சந்திரன் பூமியை ஒட்டியிருப்பதால் அதற்கு உபக்கிரகம் என்று பெயர். மற்றக் கிரகங்களுக்கும் இதேபோல் உபகிரகங்கள் உண்டு. சூரியனும் உபகிரகங்களோடு கூடிய மற்றக் கிரகங்களும் ஒன்றுசேர்ந்து ஒரு குடும்பமாக வாழ்கிறது. இதற்குச் சூரிய மண்டலம் என்று பெயர் சூரியன் மற்றக் கிரகங்களுக்குத் தந்தை என்ற முறையில் இருப்பதால் அம்மண்டலத்தைச் சூரிய மண்டலம் எனக் கூறுவதை இதன் மூலம் அறியமுடிகிறது.

இரவில் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் வானில் தெரிகின்றன. இவற்றில் சில நட்சத்திரங்கள் சில கிரகங்களாகும் நட்சத்திரங்களைவிடக் கிரகங்கள் இப்பூமியைப் போல் அளவில் சிறியதாகும். ஆனால் நட்சத்திரங்களைவிடக் கிரகங்கள் பூமிக்கு அருகில் இருப்பதால் பெரியனவாகக் காணப்படுகின்றன. சந்திரன்

1 கோ தங்கவேலு. **இந்திய வரலாறு** ப 5.

சிறு குழந்தையைப் போன்றது: அது பக்கத்தில் இருப்பதால் பெரியதாகக் காணப்படுகிறது. கிரகங்களுக்கும், நட்சத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால் நட்சத்திரம் விட்டுவிட்டு ஒளிவீசும்: கிரகம் விட்டுவிட்டு ஒளிவீசாது. சூரியனின் வெளிச்சத்தைப் பெறுவதால்தான் கிரகங்கள் ஒளி வீசுகின்றன.

சூரியனின் ஒளியைத்தான் கிரகங்களிடமிருந்தும் சந்திரனிடமிருந்தும் பெறுவதை அனைவரும் காண்கின்றோம். ஆனால் நட்சத்திரங்கள் சூரியனைப் போன்றவை: அதனால் அவைகள் எல்லாம் தாமாகவே ஒளிவீசுகின்றன. மேலும் அவைகள் வெப்பமாக இருக்கின்ற காரணத்தினால் கொழுந்துவிட்டு எரிகின்றன. சூரியனும் ஒரு நட்சத்திரம் போன்றது. அது அருகிலிருப்பதால் பெரிய நெருப்புப் பந்து போலத் தோன்றுகிறது. சூரியன் கோடானுகோடி மைல்களுக்கு அப்பால் மிகத் தொலைவில் இருக்கிறது. மற்ற நட்சத்திரங்கள் அதைவிட இன்னும் அதிகத் தொலைவில் இருக்கின்றன. நட்சத்திரங்களின் இயல்பை அறிந்த வான நூல் வல்லோர் நீண்ட காலத்திற்கு முன்பு பூமியும் மற்றக் கிரகங்களும் சூரியனோடு சேர்ந்து இருந்தன என்கின்றனர். சூரியனிடமிருந்து சிறிய நெருப்புத் துண்டுகள் பொறிகள் போல் பிரிந்து வானில் பறந்தன. ஆனால் அவை தனது தந்தையான சூரியனை விட்டுப் பிரிந்து போகாமல் இருந்தன. ஏதோ ஒரு கயிற்றால் கட்டப்பட்டவை போல் சூரியனைச் சுற்றிச் சுற்றி வருகின்றன. கயிற்றைப் போன்ற இவ்விசித்திரமான விசையானது பழுவுள்ள பொருள்களை இழுக்கும் தன்மையுடையது. நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள் எல்லாவற்றையும்விட இந்த உலகமே பெரிது அதனால்தான் இது நம்மிடமுள்ள எல்லாவற்றையும் தன்னிடம் இழுத்துக் கொள்கிறது.

பூமியும் சூரியனிடமிருந்து சிதறிய பகுதியாகும் அப்போது அது அதிக வெப்பமுடையதாக இருந்திருக்கும். வெப்பமான ஆவியும் காற்றும் அதைச் சூழ்ந்து கொண்டிருந்தன. சூரியனைவிட மிகச் சிறியதான இப்பூமி விரைவில் வெப்பம் தணிந்து குளிர்ச்சியடைந்தது. சூரியனின் வெப்பங்கூட முன் இருந்ததைவிட இப்போது குறைந்து வருகிறது. அது குளிர்ச்சியடைய அனேக கோடி ஆண்டுகள் ஆகும். பூமியின் சூடு மெள்ள மெள்ளத் தணிந்து பூமியின் மேல்பகுதி குளிர்ச்சியடைந்தது. பூமியின் உட்புறம் அதிக வெப்பமாக இருந்தது. இப்போதும் நிலக்கரிச் சுரங்கத்தில் இறங்கிச் சென்றால் கீழே போகப் போக வெப்பம் அதிகரிப்பதை உணரமுடிகிறது.

இந்திய நாட்டின் கடற்கரையைப் போலவே அதன் மலைத்தொடர்களும் நீளமானவைகளாகும். பரந்த உள்நாட்டுப் பகுதியும், வெப்ப மண்டலங்களும், குறைவெப்பப் பகுதிகளும், தட்பப்பகுதிகளும் இந்நாட்டில் ஒருங்கே அமைந்துள்ளன. அடர்ந்த காடுகளும் மிக நீண்ட சமவெளிகளும், பரந்த பாலை நிலங்களும், கடல்களும் அமைந்துள்ள இந்திய நாட்டில் பல்வேறு வகையான இயற்கை வண்ணங்களும் மக்களும் அமைந்திருப்பது இயல்பேயாகும். எனவே இந்நாட்டு வரலாற்றை ஓரேமாதிரியான இயற்கையின் அடிப்படையில் உண்டான வரலாறு எனக் கூறுவதற்கில்லை. பலதரப்பட்ட இதன் தட்பவெப்பத்திற்கும் இயற்கை அமைப்புகளுக்கும் ஏற்றவாறே இதன் வரலாறும் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறியமுடிகிறது.

வரலாற்றுச் செய்திகள்

> "வரலாறு மாறுபட்ட கோணத்திலும் எழுதப்படலாம். வரலாற்று மனிதர்களையும் நிகழ்வுகளையும் மறு மதிப்பீடு செய்வது ஒருவகையாகும். புரட்சியினால் ஏற்படும் மாறுதல்களை அடிப்படையாகக் கொண்டு வரலாறு எழுதப்பட்டாலும் அதன் பின்பு ஏற்படும் அமைதியில் பழைய நினைவுகளை நாட்டுப்பற்றோடு நினைவுகூர்வது வரலாற்று மீட்டுருவாக்கமாகும்"[2]

என்ற அறிஞர்தம் கூற்றுக்கேற்ப வரலாற்று நினைவுகளை அறிவுறுத்தும் நோக்கில் நேருவின் கடிதங்கள் அமைந்துள்ளன.

> "காலமென்னும் கட்டடத்தின் மேல் கட்டப்படுவதே வரலாறாகும். கால வரன்முறையும், புவியியலும் வரலாற்றியலின் இரு கண்களாய் விளங்குகின்றன"[3]

இவ்வாறு வரலாற்றைப்பற்றி இயற்கை என்ற நூலின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. முதன் முதலில் இவ்வுலகத்தில் சில விலங்குகளே இருந்தன. பின்னர்தான் ஆண்களும், பெண்களும் தோன்றினர். ஆனால் அவர்கள் இக்காலத்தவர்களைப் போல அழகாக, நாகரிகமாக இருக்கவில்லை. விலங்குகளுக்கும் அவர்களுக்கும் இடையில் வேறுபாடு இல்லாமல் நடந்து கொண்டனர் சிறுகச் சிறுக அனுபவம் பெற்று ஆலோசிக்கக் கற்றுக் கொண்டனர். மனிதனுக்கு பகுத்தறிவு அதிகரிக்க அதிகரிக்க அவன் சாமர்த்தியசாலியாகவும், அறிவுள்ளவனாகவும் ஆனான் நெருப்பை உண்டாக்கவும், பூமியைத் திருத்திப் பயிர் செய்யவும், உடுக்கத் துணி நெய்யவும், குடியிருக்க வீடு கட்டவும் கற்றுக் கொண்டான். அனைவரும் ஒன்று சேர்ந்து ஓரிடத்தில் வசித்ததால் நகரங்கள் ஏற்பட்டன. நகரங்கள் ஏற்படுவதற்கு முன்பு மனிதர்கள் நாடோடிகளாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சென்று கூடாரங்களை அமைத்து வாழ்ந்து வந்தனர்.

நகரங்கள் வளரவே, மனிதர்கள் அழகிய பல கலைகளைக் கற்றனர், எழுதக் கற்றுக் கொண்டனர். எழுதுவதற்குக் கடிதம் இல்லாததால் அவர்கள் பூர்ஜமரத்தின் பட்டையில் எழுதி வந்தனர். இம்மரத்தை ஆங்கிலத்தில் பர்ச் என்று கூறுவதுண்டு. பனை ஓலையிலும் எழுதி வந்தனர். பண்டைக் காலத்தில் அரசர்களும், சக்கரவர்த்திகளும் தங்களுடைய அரசாட்சியைப்பற்றிய வரலாறுகளைக் கற்பலகைகளிலும், தூண்களிலும் வெட்டி வைத்தனர். அலகாபாத் கோட்டையில் அசோகருடைய பெரிய கல் தூண் ஒன்றுள்ளது அதில் இந்தியாவில் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த அசோகருடைய பிரகடனம் ஒன்று வெட்டப்பட்டுள்ளது

மனிதனின் தோற்றமும் வளர்ச்சியும்

மனிதன் தோன்றிய தொடக்க காலத்தில் குளிர் அதிகமாக இருந்ததால்

2 N Subramanian, Historiography, p 68
3 கோ தங்கவேலு மு. கா. நூல் ப. 5

அதைப் 'பனியுகம்' என்றனர். வடதுருவத்தில் தற்காலத்தில் காணப்படும் பனியாறுகள் முன்பு இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் பரவியிருந்தன. அதனால் மக்கள் அதிகத் துன்பத்துடன் அப்போது வாழ்ந்திருக்கின்றனர். பண்டைக்கால மனிதனை 'ஹீடல்பர்க்' மனிதன் என்றழைக்கின்றார். ஜெனிவாவில் ஹீடல்பார்க்கிற்கு அருகில் மண்ணில் புதைந்து ஒரு மண்டையோடு எடுக்கப்பட்டது. அது ஆதி மனிதன் மண்டையோடு என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

பஞ்சாபும் ஐக்கிய மாகாணத்தில் சில இடங்களும் கடலாக இருந்திருக்கின்றன. தென்னிந்தியாவும் மத்திய இந்தியாவும் இமயமலைப் பகுதியிலிருந்து ஒரு கடலால் பிரிக்கப்பட்டு அவை எல்லாம் ஒரு தீவாக இருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. உறைபனி ஐரோப்பா ஆசியாக் கண்டங்களிலிருந்து மறைந்த பின்னர் வெப்பம் உண்டானதால் மக்கள் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று குகைகளில் குடியேறினர். கல் ஊசிகளும் கூர்மையான கருவிகளுமே அவர்களிடம் இருந்தன. இவற்றைக் கொண்டு குகைகளின் சுவர்களில் அவர்கள் விலங்குகளின் உருவங்களைக் கீறி வரைந்தனர். அவர்கள் எழுதியுள்ள சித்திரங்கள் மிக அழகாக இருக்கின்றன. நேரு இந்திராவுக்குக் கடிதம் எழுதும் பொழுதே கற்கால மனிதர்களின் சித்திரங்களைப் படம் பிடித்து அனுப்பியுள்ளார்.

அக்கால மக்கள் கல்லினால் செய்த கருவிகளைக் கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்ததால் அவர்கள் காலத்திற்குப் பழைய கற்காலம் என்று பெயர். உலகத்தின் சீதோஷ்ண நிலையானது பெரிதும் மாறி வெப்பம் அதிகரித்தது மத்திய ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பெரிய காடுகள் உண்டாயின. இக்காடுகளில் ஒரு புது ஜாதி மனிதர்கள் வாழ்ந்தனர். முன்புள்ள பழைய கற்கால மக்களைவிட இவர்கள் அறிவு உள்ளவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் வாழ்ந்த காலம் பின் கற்காலம் அல்லது பெருங்கற்காலம் என்று கூறப்படுகிறது.

பெருங்கற்காலத்து மக்கள் விலங்குகளின் தோலையும், சணல் செடியின் நாரினால் செய்த கரடுமுரடான துணியையும் அணிந்து கொண்டனர். ஜெனிவார் காட்சிச்சாலையில், ஏரி நடுவே கட்டப்பட்ட வீட்டின் அழகிய சிறு மாதிரிக் கட்டிடம் ஒன்று இருந்ததாகக் கூறப்படுகிறது. ஏரியின் நடுவே மரத்தின் கால்களை ஊன்றி அவற்றின் குறுக்கே மரத்தினால் மேடை செய்து அதன்மீது வீடு கட்டப்பட்டிருக்கிறது. அந்த வீட்டிற்குச் செல்ல ஏரியின் நடுவே ஒரு பாலம் போடப்பட்டிருக்கிறது. இவர்கள் தாமிரத்திலும், வெண்கலத்திலும் கருவிகள் செய்யத் தொடங்கினர். தாமிரமும் தகரமும் சேர்ந்தால் வெண்கலமாகிறது. தங்கத்தையும் பயன்படுத்தினர். இவர்கள் காலத்தின் இறுதியில் மக்களுக்கு ஒரு விபத்து ஏற்பட்டது. அதில் நீரில் மூழ்கி அனைவரும் இறந்திருக்கலாம் என்று கிறிஸ்தவர்களின் வேதாகமத்திலிருந்தும் சமஸ்கிருதப் புத்தகங்களிலிருந்தும் மகாப் பிரளயம் ஏற்பட்டது பற்றிக் கூறுவதன் மூலம் இம்மக்கள் இனம் எவ்வாறு அழிந்தது என்பது தெரியவருகிறது.

இனங்கள் மற்றும் மொழிகள் தொடர்பான செய்திகள்

இந்தியாவில் முதன் முதலில் வாழ்ந்தவர்கள் திராவிடர்கள். பிற்காலத்தில் ஆரியர்களும் கிழக்கேயிருந்து மங்கோலியர்களும் வந்தார்கள். இப்பொழுதுங்கூடத் தமிழ்நாட்டில் வசிப்போரில் பெரும்பாலோர் திராவிடர்களின் சந்ததிகளேயாவர்

திராவிடர்கள் மிகவும் முன்னேற்றமடைந்து இருக்கின்றனர் அவர்கள் தங்கள் மொழியிலேயே பேசி வந்தனர். பிற நாட்டினரோடு ஏராளமாக வாணிபம் செய்து வந்தனர்.

பண்டைக் காலத்தில் மத்திய மேற்கு ஆசியாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் ஒரு புதிய ஜாதியரான ஆரியர்கள் வளர்ச்சியடைந்து வந்தனர் சமஸ்கிருதத்தில் 'ஆர்ய' என்ற சொல்லுக்குக் கௌரவமுள்ளவன் அல்லது மேற்குலத்தில் பிறந்தவன் என்பது பொருள் சமஸ்கிருதம் பேசியதால் இவர்கள் தாம் மேற்குலத்தினர் என்று நினைத்தார்கள் உலகத்திலுள்ள மக்கள் அனைவரும் முதலில் ஆரிய வகுப்பில் இருந்து வந்தவர்களாவர். ஐரோப்பா, வட இந்தியா, பாரசீகம், மெசபடோமியா ஆகிய இடங்களில் உள்ள மக்கள் தற்காலத்தில் ஒருவருக்கொருவர் மாறுபட்டாலும் அவர்கள் ஒரேவர்க்கத்தைச் சேர்ந்த ஆரியவர்க்கமாவர் என்று நேரு கூறுகின்றார்.

மங்கோலியர் என்ற பெரும் இனத்தவர்கள் கிழக்காசியாவில் சீனா, ஜப்பான், திபெத், சியாம் பர்மா போன்ற நாடுகளில் பரவினர். இவர்கள் மஞ்சள் ஜாதியினர் என்று கூறுவர். இவர்கள் உருவ அமைப்பு கன்னத்தின் எலும்பு உயர்ந்தும் கண் குறுகியும் காணப்படும். ஆப்பிரிக்காக் கண்டத்தில் வாழ்பவர்கள் நீக்ரோ இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஆரியர்களுமில்லாமல், மங்கோலியர்களும் இல்லாமல் கறுப்பு நிறத்தைக் கொண்டவர்கள் என்பது தெரியவருகிறது.

Father, mother என்ற எளிய வார்த்தைகள் இந்தியில் 'பிதா', 'மாதா' என்றும் இலத்தீனில் 'பேடர்', 'மேடர்' என்றும், கிரீக்கில் 'பேடர்', 'பீடர்' என்றும், ஜெர்மனியில் 'வேடர்', 'முத்தர்' என்றும், பிரெஞ்சில் 'பேரி', 'மேரி' என்றும் இதேபோல் பல மொழிகளிலும் கூறப்படுகின்றன மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதற்கு இந்த உலகை ஓர் ஏற்ற வீடாகச் செய்வது நம் கடமை என்று நேரு கூறுகின்றார்

பண்பாடு தொடர்பான செய்திகள்

பண்டைக்காலத்து மக்கள் தங்களுக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டங்கள் எல்லாம் தெய்வத்தின் கோபத்தால் ஏற்பட்டது என நினைத்தனர். காடுகள், மலைகள், நதிகள், மேகங்கள் இவற்றிலெல்லாம் இறைவன் இருப்பதாக எண்ணினர் கடவுள் நல்ல குணம் கொண்டவர் என்று நினைக்கவில்லை இதற்கு மாறாகக் கடவுள் கோபம் கொண்டவர் என்பதற்கு அஞ்சி அவருக்கு அடிக்கடிப் பூசைகளும் பலகாரங்களும் கொடுத்து வந்தனர் சில நேரங்களில் பூகம்பமோ அல்லது வெள்ளமோ, கொள்ளை நோயோ ஏற்பட்டு மக்கள் இறந்து போனால் இது கடவுளின் கோபத்தினால் ஏற்பட்டது என்றெண்ணி அவரைச் சாந்தப்படுத்தப் பெண்களையும், குழந்தைகளையும் பலி கொடுத்தனர். இது கொடூரமான செயலாகும் என்று நேரு தம் கடிதத்தில் கூறுகின்றார் பயப்படும் மனிதன் எதையும் செய்யத் துணிவான் என்ற அடிப்படையில் உலகத்தில் மதம் அல்லது சமயம் இப்படித்தான் உண்டாகியிருக்க வேண்டும் என்பது தெரியவருகிறது என்கிறார்.

முன்பு விவசாயம் என்பது என்னவென்று தெரியாமல் இருந்து வந்தனர். வேட்டையாடுவதை மட்டுமே தெரிந்திருந்தனர் விவசாயத்தைக் கற்றுக்கொண்ட பிறகு

அவர்களுக்கு வேலை செய்வது எளிதாகியது. புலால் உணவைத் தேடிச் செல்ல வேண்டிய கட்டாயம் இல்லாமற் போனது. விவசாயம் ஏற்பட்டதும் அதன் மூலம் பல தொழில்களும் ஏற்பட்டன. ஆண்கள் தோட்ட வேலை செய்தும், பெண்கள் ஆடு மாடுகளை மேய்த்தும் பால் கறந்தும் வந்தனர். அதிகப்படியான தானியங்களைச் சேகரித்து வைத்தனர். அக்காலத்தில் 'பாங்குகள்' இல்லை. நாணயங்களும் கிடையாது. எவர் ஒருவரிடம் அதிகமான தானியங்களும் ஆடு மாடுகளும் ஒட்டகங்களும் இருக்கின்றனவோ அவரே பணக்காரன் என்று மக்கள் எண்ணினர்.

ஒரு குழுவின் தலைவனுக்கு பேட்ரியாக் (Patriarch) என்று பெயர். இது இலத்தீன் மொழியிலுள்ள 'பேடர்' என்ற சொல்லிலிருந்து வந்தது. இதற்குத் தகப்பன் என்று பொருள். அவனே தன் ஜாதிக்குத் தகப்பனாகவும் தலைவனாகவும் விளங்கினான். 'பாட்ரியா' என்ற சொல்லும் இலத்தீன் மொழியிலிருந்து வந்ததுதான். இதற்கு 'தந்தை நாடு' அல்லது 'ஒருவன் பிறந்தநாடு என்பது பொருள்'. குழுத்தலைவனது பதவி எப்பொழுது பரம்பரையாக ஆக்கப்பட்டதோ அப்போதே தலைவன் பதவி அரசப்பதவியாகியது. கடவுளே தம்மை அரசராக்கினார் என்று கூறிக் கொண்டனர். இதற்குத் 'தெய்வீக உரிமை' என்று பெயர்.

வட அமெரிக்காவின் மெக்சிகோ நாட்டிலுள்ள யுகடான் என்ற ஊரிலும் தென் அமெரிக்காவிலுள்ள பெரு என்னும் நாட்டிலும் சிதைந்துபோன பழைய கட்டிடங்களைப் பார்க்கலாம். எனவே யுகடானிலும், பெருவிலும் நாகரிகம் படைத்த மக்கள் வாழ்ந்திருக்கின்றனர் என்பது தெரியவருகிறது மக்கள் மெசபடோமியாவில் டைக்ரீஸ், யூப்ரடிஸ் நதிகளுக்கிடையிலும் இந்தியாவில் கங்கை, யமுனை நதிக்கரைச் சமவெளியிலும் குடியேறினர். அங்கு பெரிய நகரங்கள் உண்டாயின. அவர்களுக்கு உணவையும், நீர் வளத்தையும் கொடுத்த நதியைப் புனிதமாகக் கருதினர். எகிப்து நாட்டில் நீல நதியை 'எங்களப்பன் நிலன்' என்று வணங்கி வந்தனர். கங்கையைக் கங்கம்மா என்றும் அழைத்தனர்.

சிரியாவிலுள்ள டமாஸ்கஸ் புகழ்பெற்ற நகரமாகும். இன்றும் உலகத்திலுள்ள நகரங்களில் இந்நகரம் மிகவும் புராதனமானது என்றே கூறுகின்றனர். பிரயாகை, அலஹாபாத், பாட்னா, பாடலிபுத்திரம் இவை இந்தியாவின் புராதன இடங்களாகும். எகிப்து நாட்டில் முக்கோணக் கோபுரங்களும், லக்ஸாரில் பல கோயில்களும் இன்றளவும் உள்ளன. எகிப்து நாட்டு அரசர்களுக்குப் பரோக்கள் என்று பெயர். உலர்ந்த மானிடச் சவத்திற்கு மம்மி என்று பெயர் என்பது தெரிய வருகிறது.

நில அடிப்படையிலும், மொழி அடிப்படையிலும், இன அடிப்படையிலும், சமய அடிப்படையிலும், அரசியல் அடிப்படையிலும் உலக நாடுகள் ஒன்றிணைந்து காணப்படுவதுதான் வரலாற்றுண்மையாகும். ஆனால் இந்தியா இவைகளில் வேறுபட்டிருப்பினும் தேசியம் என்ற அடிப்படையில் பண்பாடு என்னும் பாறையின்மேல் மிகச்சிறந்த ஒற்றுமையைக் கட்டியிருக்கிறது. நவீன அறிவியலும், அரசியலும் வளர்ந்துவரும் இந்நாளில் இந்தியா அத்தகைய நவீனங்களை உடனுக்குடன் பெற்று அவற்றின் வழி பாரம்பரியமாகக் காத்துவரும் அதன்

ஒற்றுமையைக் காத்து மேலும் வலுப்படுத்தி வாழவேண்டும்.

முடிவுரை

பண்டித நேரு தம் மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்களிலிருந்து அறியப்படும் செய்திகளைச் சுருக்கமாகப் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்.

1. உலகத் தோற்றத்தில் சூரியனும், பிற கோள்களும் சூரிய மண்டலத்தில் உருவான வரலாற்றினைத் தெளிவுபடுத்துகின்றார்.
2. உலகத்தின் தொடக்க கால வரலாற்றினை அறியப் பயன்படும் சான்றுகளை எடுத்துக்காட்டி விளக்கம் தருகின்றார்.
3. மனிதன் தோன்றிய வரலாறு மற்றும் அவன் எவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்தான் என்பதையும் விளக்குகின்றார்.
4. ஜாதிகள் தோன்றிய விதம் பற்றியும் மொழிகள் எவ்வாறு உருவானது என்பது பற்றியும் கூறுகின்றார்.
5. சமயம் உருவான விதம், விவசாயத்தின் தோற்றம், மக்களின் நாகரிக வளர்ச்சி போன்றவற்றைத் தெளிவாக விளக்குகின்றார்.

பண்டைய உலகத் தோற்றம், விலங்குகள், மானிட இனம், பண்பாடு, மொழிகள், இயற்கை மற்றும் வரலாற்றுச் செய்திகளை அறியமுடிகின்றது. இதனால் கடிதங்களிலிருந்தும் ஒரு பொருள் பொதிந்த நூலைப் பெறமுடியும் என்பது புலனாகிறது

நேருவின் கடிதங்களில் சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய கருத்துக்கள் நிறைந்திருக்கின்றன. ஒருவருடைய நலத்தையும் மற்றும் சொந்தத் தகவல்களையும் கடிதங்களில் பரிமாறிக்கொள்ளும் நிலையில் நேருவின் கடிதங்களில் இவ்வளவு செய்திகள் அடங்கியிருப்பது அனைவரையும் வியப்பில் ஆழ்த்துகிறது.

☐

தி. மகாலட்சுமி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் காகிதச் சுவடிகள்

உயர்தமிழ் ஆய்வுக்கு வழிவகுக்கும் வகையில் 1972இல் தொடங்கப்பெற்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுகள் பலவகைப்பட்டன. இவற்றுள் சுவடியியல் ஆய்வும் அடங்கும். அவ்வகையில் இந்நிறுவனச் சுவடிப்புலத்திற்கு முதன்முதலில் கால்கோளிட்டவர் இந்நிறுவன மேனாள் இயக்குநர் ச. வே. சுப்பிரமணியன் ஆவர். அவரது முயற்சியால் ஓலைச்சுவடிகள் திரட்டப்பெற்றன. 1979இல் சுவடியியல் பட்டய மேற்படிப்புப் பட்டயக் கல்வி தொடங்கப்பெற்று, 1980 முதல் சுவடிப் பதிப்புகளும், சுவடிப் பதிப்பு நூல்களும் வெளிவரத்தொடங்கின. அதுபோது டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகத்துடன் இணைந்து திங்கள்தோறும் சுவடியியல் கருத்தரங்குகளும் நடத்தப்பெற்றன. 1984 முதல் உ. வே. சாமிநாதையர் பெயரில் அமைக்கப்பெற்ற அறக்கட்டளையின் சார்பில் சுவடிப் பதிப்புத் திறனாய்வு நூல்களும் வெளிவரத் தொடங்கின. இதே காலகட்டம் சுவடி அட்டவணை, சுவடிப் பாடநூல் எனும் பரிமாணங்களுக்கும் வித்திட்டது.

இதுகாறும் 44 சுவடிப் பதிப்புகளும், 80க்கும் மேற்பட்ட சுவடிப் பட்டய ஆய்வேடுகளும் வந்துள்ளன. 33 ஆய்வேடுகள் நிறுவனத்திலுள்ள சுவடி நூல்கள் இவற்றுள் 4 தாள் சுவடிகள், 2 ஆய்வேடுகளாகத் தரப்பட்டுள்ளன. அச்சானவற்றுள் 11 நூல்கள் இந்நிறுவனச் சுவடிகள். இவற்றுள் 8 ஆய்வேடுகளாகத் தரப்பெற்றுப் பின் நூலாக்கப் பெற்றவை.

காகிதச் சுவடிகள்

இந்நிறுவனச் சுவடிக் காப்பகத்தில் ஏறக்குறைய 600 சுவடிக் கட்டுகளும், அவற்றில் 950க்கும் மேற்பட்ட நூல்களும் உள்ளன. இவைதவிர 27 காகிதச் சுவடி நூற்கட்டுகளும், அவற்றுள் 58 நூல்களும் உள்ளன. பொருண்மை அடிப்படையில் நான்கு தொகுதிகளில் வெளிவந்துள்ள (4ஆம் தொகுதி அச்சில்) இந்நிறுவனச் சுவடிகளின் விளக்க அட்டவணையில் இக்காகிதச் சுவடிகளின் அட்டவணையும் இடம்பெற்றுள்ளது.

அளவு

கட்டபொம்மு கும்மி என்ற நூல் 18 X 5 செ. மீ. நீள அகலமும், 3 மி. மீ

பருமனும் உள்ள 4 நோட்டுகளில் எழுதப்பெற, அயோத்தி கதையும் ஏறக்குறைய இதே அளவில் அமைகிறது. 33 X 22 செ. மீ. நீள அகலமும் 3.5 மி. மீ. பருமனும் உள்ள 8 நோட்டுகளில் 37 நூல்கள் இடம்பெற, பிற நூல்களின் நீள அகலம் ஏறக்குறைய இதே அளவில் அமைகிறது.

குலால புராணம், வைகுண்ட அம்மானை, கட்டபொம்மு கும்மி, பதார்த்த குணசிந்தாமணி, மருத்துவக் குறிப்புகள், மருத்துவத் திரட்டு போன்ற நூல்கள் பெருநூல்களாகவும்; ஞான கற்பம் 222, திருஏரகப் புராணம், சிற்ப சாத்திரம், சோமவார நாடகம், நம்பிராயன் கதை போன்றன ஓரளவு பெரிய நூல்களாகவும்; பூந்தாது, போத வாக்கியம், சதுர்கோணமாலை போன்றன சிறு நூல்களாகவும்; பரம ஞானம், கம்பு சூத்திரம், கந்தனுடைய நூலருமை, தண்டகம் நூற்றில் ஞானம் போன்றன மிகச்சிறு நூல்களாகவும் உள்ளன.

நூல் விளக்கம்

இந்நூல்களுள் 17 நூல்கள் அச்சானவை. 29 நூல்கள் அச்சாகாதவை. பிற 12உம் அசசானதாகத் தெரியவில்லை. அச்சானவற்றுள் நான்கு மட்டுமே நிறுவனக் காகிதச் சுவடிகள் நல்ல நிலையிலுள்ள நிறுவனக் காகிதச் சுவடிகளுள் 54 முழுமை பெற்றும், 14 முழுமை பெறாமலும் உள்ளன. இவற்றுள் 40 நூல்கள் செய்யுள்களாகவும், 11 நூல்கள உரைநடைகளாகவும், 7 நூல்கள் பாடலும் உரைநடையும் கலந்தவையாகவும் உளளன. உரைநடை - செய்யுள் (1 : 14), செய்யுள் - உரைநடை (1 : 10), உரைநடை - செய்யுள் - உரைநடை (6 . 35) என்றவாறு பாடலும் உரைநடையும் கலந்துள்ளதேயன்றிப் பாடல், பாடலுக்குப் பொருள் என்றவாறு எந்நூலும் இல்லை.

சித்தர்

நந்தி தேவர், அகத்தியர், இராமதேவர், கொங்கணர், திருவள்ளுவர், தட்சிணாமூர்த்தி, சிவசுப்பிரமணியர் ஆகிய சித்தர்களின் பெயர்களில் மருத்துவம், ஞானம் தொடர்பான நூல்கள் உள்ளன. நந்தி தேவர், திருமூலருக்கு அருளிச் செய்ததாகவும் (1 4 10 12. 13) சிவசுப்பிரமணியர் அகத்தியருக்கு அருளியதாகவும் (1 : 11) சில நூல்களில் கூறப்பெறுகின்றன. போத வாக்கியம் (1 . 11) என்ற நூல் இறுதியில் சுப்பிரமணியர் கும்பமுனிக்கு அருளிச் செய்தார் என்றும் கூறப்பெறுகின்றது. சுப்பிரமணியர் என்பது முருகக் கடவுளைக் குறிப்பதாயின் இந்நூல் ஆசிரியர் அகத்தியர் ஆதல் வேண்டும். இதுபோல் நந்தி அருளிய நூல்களின் ஆசிரியர் திருமூலர் ஆதல் வேண்டும்.

திருநந்தி அருளிச்செய்த அல்லது உபதேசித்த என்பது சைவமரபு. சுப்பிரமணியர் அகத்தியருக்கு அருளிச்செய்த என்பது கௌமார சமயமரபு நந்தியை முன்னிறுத்துவது நூல் காலத்தால் முற்பட்டது எனவும், தமிழ்க் கடவுள் முருகனை முன்னிறுத்துவது நூலின் தரத்தை, மதிப்பை உயர்த்துவது எனவும் கருத இடமளிக்கிறது

வரலாறு

காகிதச் சுவடிகளில் 9 நூல்கள் கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி

நூலகம் (7), ஆசியவியல் ஆய்வு நிறுவனம் (2) ஆகியவற்றிலுள்ள ஓலைச்சுவடிகளின் நிழற்படப் பிரதிகள். ஏனையவை கையெழுத்துப் பிரதிகள். படியெடுத்தவர்கள் ஓலைச்சுவடிகளின் ஏட்டெண்களைப் போட்டு எழுதும் முறையினைப் பின்பற்றியுள்ளனர். இதன்வழி 11 நூல்கள் ஓலைச்சுவடிகளிலிருந்து படியெடுக்கப் பட்டதையும், விடுபட்ட ஏடுகள் விவரத்தையும் (ஏடுகள் விடுபட்ட நூல்கள் 20 : 51; 3: 27; 3 : 29; 4 : 30) அறியமுடிகிறது. குலால புராணம் என்ற ஒன்றைத் தவிரப் பிற நிறுவனச் சுவடிகளுக்குக் காகிதச் சுவடிகள் இல்லை.

5 நூல்கள் காகிதச் சுவடியைப் பார்த்துப் படியெடுக்கப்பட்டவை.

காட்டு : "புரசைவாக்கத்தைச் சேர்ந்த எல். ஆர் சுப்பிரமணியம் என்பவருடைய காகிதப் பிரதியைப் பார்த்துப் படியெடுக்கப்பட்டது (2 : 16-20)."

பிற நூல்களின் படியெடுக்கப்பட்ட விவரம் அறிய இயலவில்லை. மேற்சுட்டிய காட்டின்வழி ஐந்து நூல்களின் (2 : 16-20) உரிமையாளர் சுப்பிரமணியம் என்பதும், "திருபியாகு ராம்பிரசாத் அவர்களின் மருத்துவக் குறிப்புகள் (5 : 32-34)" என்பதன்வழி இதன் ஆசிரியர் இவர் என்பதும் தெரிகிறது.

துறையூர் விருத்தாசலம் குமாரதேவர் மடத்துச் சுவடியின் பிரதி (7 : 36), பாண்டிச்சேரி இன்டாலஜி நிறுவன ஓலைச்சுவடிப் பிரதி (24 : 55-56) என்ற குறிப்புகள் எந்தெந்த இடங்களிலிருந்து சுவடிகள் கிடைத்தன என்பதைக் காட்டுகிறது

சிற்றிலக்கிய நூல்களைப் (18 : 47-49) படியெடுத்ததுடன் நிறுவனத்திற்குக் கடிதத்தின்வழி 09-12-80இல் அனுப்பியவர் நெய்க்குப்பிக் கிராமக் (வீராபுரம் அஞ்சல், வெள்ளி மேட்டுப்பட்டி, திண்டிவனம்) கணக்குப்பிள்ளையாகிய ஆர். சண்முகம்பிள்ளை. நூல் ஆசிரியர் வைரபுரம் திண்டிவனம் வட்டத்தைச் சார்ந்த இராம. சண்முகம். 14-03-1937ஆம் ஆண்டு திருக்கோவலூர் ஸ்ரீபாணி பாத்திரதேசிகராதீன மேல்மடத்து வித்வான் ஆ. பழநிஸ்வாமி சிவாச்சாரியார் வழங்கியுள்ள மதிப்புரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. கம்பு சூத்திரத்தைப் படியெடுத்தும், நேரில் வந்து கொடுத்தும் உதவியவர் கூடலூர் அ. அருணாசலம். குலால புராணத்தை ஓலைச்சுவடியாக அளித்தவர் தமிழூர் சி. இலட்சுமணன்; படியெடுத்தவர் அந்நாள் சுவடிப் பட்டய மாணவர் சென்னி துரேந்திரநாதன்.

நூல் தலைப்பு

நூற்பெயர் இல்லாதவற்றிற்கு அந்நூற்செய்திகளை உட்கொண்டு வழங்கப்பட்ட தலைப்புகள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன.

(குஷ்டநோயும் மருந்தும்) 1 : 1
(சில நோய்களும் சில மருந்தும்) 1 : 2

எழுத்து மயக்கம்

காகிதச் சுவடிகளைப் படியெடுத்தவர்க்ள் ஓரளவு பிழை களைந்தும், அடி, சீர் பிரித்தும் எழுதியுள்ளனர். இருப்பினும் கவனமின்மை, எழுத்துகளைப் புரிந்து கொள்வதிலுள்ள இடையூறு போன்றவற்றால் இவர்களாலும் சில தவறுகள்

ஏற்பட்டுள்ளன.

அலரிவேர் (6 : 35. பக். 4) - அவுரிவேர்

தாகத்தோடு (5 : 32. பக். 1) - நாகத்தோடு

மூணுவீசை (5 : 32. பக். 1) - மூன்றுவிசை (முறை)

நீரும் (5 : 32. பக். 7) - தீரும்

இதுபோன்ற தவறுகள் படியெடுத்தவர்களால் ஏற்பட்டதா, பார்த்துப் படியெடுத்தவற்றிலேயே இருந்ததா என அறியமுடியாத நிலை பல இடங்களில் உள்ளது

பூரணச்சந்திபோதயம் (5 : 32. பக். 1) - சந்திரோதயம்

பூணிருப்பு (5 : 32. பக் 7) - பூணீருப்பு

"உரைதிட்டா ருத்தார மடிபேடன்[1] கேட்டு
உண்மையுடன் அமர்[2]பதத்தைத் தொழுது போற்றி
. . . .
அசைந்திட்ட[3] கல்பமெல்லாம் , ..." (2 : 21. பக் 148)

1 அடியேன் 2. அவர் 3. அறைந்திட்ட

முற்குறிப்பு - பிற்குறிப்பு

முற்குறிப்பு - பிற்குறிப்புகளின்வழி நூலின் பெயர், நூலாசிரியர் பெயர் நூலை ஏட்டில் எழுதியவர் பெயர், முகவரி, காலம், நூல் வரலாறு, சுவடியை எழுதத் தொடங்கிய நாள், எழுதி முடித்த நாள், சுவடி உரிமையாளர், சுவடியைப் படியெடுக்கச் சொன்னவர், "நூலை எடுத்தவர் இன்னாரிடம் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற குறிப்பு" (1 15) முதலான செய்திகளை அறியமுடிகிறது.

1. இந்நூலின் ஆசிரியர் வெங்கியருள் வடவன் (சீரங்கராயருடதன் சீசன்) எழுதியவர் புகழழகு தன் புதல்வன்.
2. மாசி மாதம் 7ஆம் தேதி 10.3.1886 அயோத்திகதை நாராயண நாடார் குமாரர் தங்கையா (நாடார்) கன்னங்குளம்.
3. புலமாடக்கோன் வாசித்து வருகிற வன்னிராயன்கதை (12 : 41)
4. என்னசயன் ப. ஆசிர்வாதம் படித்து வருகின்ற வர்மசாஸ்திர ஏடு. நவம்பர் 1915. மருவத்தூர் (3 : 24)

பிற்குறிப்பு

1. 1611 மேற்படி வருசம் அப்பிசி மாதம் 20ந் தேதி புதன்கிழமை நம்பி கதை முகிர்ந்தது (17 · 46).
2. சர்வசித்து வருஷம் தை மாதம் 21ந் தேதி முடிந்தது (15 : 44).
3. கொல்லமாண்டு 1054 (கி பி. 1879) சித்திரை மாதம் 17ந் தேதி அழநேரி (13 : 42).
4. கும்பமுனிபுரத்தில் வாழுங் குமாரசுவாமி நாடரீன்ற பாலன் ஆறுமுகப் பெருமாள் சுருக்கிச் சொன்ன கதை (27 : 58).

இவைதவிர முற்குறிப்புவழி சாதன நாதாந்தமாலை (1 · 15) என்ற நூலும், பிற்குறிப்புவழிச் சுகாதாரக் களஞ்சியம் (5 · 32) என்ற நூலும் அச்சில் வெளிவந்த நூல்களைப் பார்த்து எழுதப் பெற்றவை என்று தெரியவருகிறது.

முற்குறிப்பு

ஆசிரியர் பெயர், அச்சுக்கூடம், அச்சிட்டவர், பதிப்பாண்டு (1769), நூல் கிடைக்குமிடம், விலை, அச்சுநூலைப் பெயர்த்து எழுதிய நூலின் ஆண்டு (1897), இதைப் பார்த்து எழுதி உருவான நூலின் ஆண்டு (1911), நூலைப் பயன்படுத்தியவர் யாரிடம் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற குறிப்பு, மறுபதிப்பு ஆசிரியர் அனுமதியின்றி கூடாது என்ற விளம்பரம் (பக். 77-79) மிக விளக்கமாகச் சுவைபடக் கூறப்பெற்றுள்ளன. இக்குறிப்பின் வழி 1911ஆம் ஆண்டு எழுதப்பெற்ற நூலைப் பார்த்து எழுதப்பட்டது இந்நிறுவனக் காகிதச்சுவடி என்பதும் தெரிகிறது.

பிற்குறிப்பு

"சுகாதாரக் களஞ்சியம் முதற்காண்டம், இரண்டாம் காண்டம், மூன்றாம் காண்டம்,...... கந்தசாமி நாயக்கர் இயற்றிய இரங்கோன் பர்மா யெக்கோ பிரஸில் பதிப்பிக்கப்பட்டது. 1906. சிவசமயம்." இந்நூலின் நூற்பெயரை அறிய இப்பிற்குறிப்பே துணைபுரிந்தது.

பொருண்மை

சிற்றிலக்கியம் 4, இலக்கணம் 1, புராணம் 2, நாட்டுப்புற இலக்கியம் 11, மருத்துவம் 24, மந்திரம் 2, ஞானம் 11, நுண்கலைகளான அங்கவியல், மனைசாத்திரம், ஆரூடம் ஆகியவை 3 என்ற பொருண்மைகளைக் கொண்டனவாக இந்நூல்கள் அமைகின்றன.

சிற்றிலக்கியம்

சிவகிரி குமரசதகம் என்ற 1-48 பாடல்களையுடைய நூல் குறையானது. இதுபோன்ற நூல் ஓலைச்சுவடியில் (274 . 496) 1-102 பாடல்களில் முழுமையாக இடம்பெற்று, 1984இல் இந்நிறுவனச் சுவடிப்பட்டய ஆய்வேடாக அளிக்கப்பெற்று, 1995இல் நூலாக வந்துள்ளது. வைரபுரம் நகரில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரர் உடனாய திரிபுரசுந்தரி அம்பிகை மேல் அமையப்பெற்ற ஒருபா ஒருபஃது, நவமணிமாலை, திருவூசல் ஆகியன பிற மூன்று நூல்களாம்.

நாடகத்தின் தொடக்கம் போல், இம் முதல் நூலின் தொடக்கம் அமைவதை,

"தாதவிழ் தண்மலர்ப் பொழில்எனும் அரங்கில்
மாதர் வண்டினம் நல்லியாழ செய்ய
. . . .
மயிலெனும் பொதுமகள் நல்லியாழ் செய்ய" (பா. 1)

ஒரே பொருளுக்குப் பயன்படும் உவமை ஒருசொற் பன்மொழியாக அமைவதை,

"ஒண்சடை மதியமும் தண்ணிலவு எறிக்க" (பா. 4)

என்ற அடியும் காட்டுகின்றன.

நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை, கொச்சகக் கலிப்பா, குறளடி வஞ்சிப்பா போன்ற யாப்பு வடிவங்களும், ஒன்பான் சுவையுமிக்க இரண்டாம் நூலில் அன்னையின் அருளிச்செயலும், கருணை உள்ளமும், சின்முத்திரை வடிவும் பொருண்மையாகிச் சிற்றின்பத்தினும் பேரின்பமே சிறந்தது என்பதும், யாக்கை நிலையாமை என்பதும் உணர்த்தப் பெறுகிறது.

மூன்றாம் நூலில் ஊஞ்சல் கட்டுவதற்கான அடிப்படைச் செய்திகளில் ஆடிப் பொன்னூஞ்சல் பற்றியுள்ள செய்திகள் பொருளால் பழமையெனினும், சொல் நயத்தால் புதுமைப் பொலிவு பெறுகிறது.

கவின் சொல்லும், கவிதையழகும், வித்தகப் பொலிவும், பழந்தமிழ்க் கருத்தும், இறைவன் இறைவியின் ஒல்காப் புகழும் பரவியுள்ள இந்நூற்கள் வெளிவரின் தமிழுக்கு ஏற்றம் தரும் வரவுகளாக அமையும்.

புராணம்

குலால புராணத்தில் பாயிரம் தொடங்கி மங்கள வாழ்த்து முடிய உள்ள பகுதியில் குலால புராண சரித்திரம், புராண வரலாறு, பதினெண் கணங்களுதித்த வகை, சுவாயம்புவ மனுவம்ச வரலாறு முதலானவை இடம்பெற்றுக் குலாலர் இனத்திற்குப் பெருமை சேர்க்கிறது. இந்நூல் வெளிவரவேண்டிய சிறந்த நூலாகும்.

திருஏரகப் புராணம் அச்சான நூல். இப்புராணத்தில் இறைவன், இறையடியார் பற்றி ஆறு துதிப்பாடல்களும் சாரணியச் சருக்கம் முதல் தீர்த்தச் சருக்கம் வரை 11 சருக்கங்களும் உள்ளன.

நாட்டுப்புறவியல்

இப்பொருண்மையில் வரும் 11 நூல்களில் தொன்மக்கூறுடைய கதைப் பாடல்களே மிகுதி. சாதியப் பிரச்சினை, சமயப்பூசல், மதத்துக்கிடையே நிகழும் சமூகப்புரை போன்றவை சமுதாயப் பார்வையில் சீர்கேடுடையன என்றாலும் இந்நூல்கள் இவற்றை எப்படிப் படம் பிடித்துக் காட்டுகின்றன என்று ஆய்ந்தறிவதற்கு நல்ல தரவுகளாகின்றன.

அரவமுத்து, வன்னிராயன், சின்னணஞ்சான் போன்ற கதைத் தலைவர்கள் கண்ட அவலங்கள் மக்கள் திருந்துவதற்குப் பாடங்களாகின்றன.

அயோத்தி கதை, வைகுண்ட அம்மானை, சோமவார நாடகம் ஆகியன பக்திக்கு வித்திடும் பனுவல்கள். இவை அக்காலத்து மக்களின் மனநிலையை, சங்கத் தமிழர்களைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் இறவாத் தன்மை பெற்றவை.

வைகுண்ட அம்மானை, கட்டபொம்மு கும்மி, குருக்களாஞ்சி கதை, இடைச்சி செல்வி கதை ஆகியவை அச்சானவை குருக்களாஞ்சி கதை ஆசியவியல் நிறுவனத்தின்வழி The Wandering Voice என்ற நூலில் வெளிவந்துள்ளது. இந்நூலிலுள்ள மூன்று கதைகளுள் இதுவுமொன்று. இடைச்சி கதையின் இறுதிப்பகுதி

அச்சு நூலினின்று சற்று வேறுபடுகின்றது. இந்நூல்பற்றி நா. வானமாமலை. "ஐவர் ராசாக்கள் கதைக்குக் கிடைக்கும் பெரும்பாலான சுவடிகளில் இதுபோன்ற தனிக்கதை இல்லையாதலால் ஐவர் ராசாக்கள் கதையில் வரும் ஒரு நிகழ்ச்சி தனிக்கதையாகப் பாடப்பெற்றுவிட்டது" என்று கூறுவர்.

தடிவீரன் கதை. வன்னிராயன் கதை என்ற இரண்டும் ஒரு நூலாகவும் (1996). சின்னணஞ்சான் கதையில் வரும் சுடலமுத்து வீரன் கதை துணைக்கதையாகவும் இடம்பெற்று அவை ஒரு நூலாகவும் (1998) நிறுவன வெளியீடுகளாக வந்துள்ளன. முதல் நூல் தமிழக அரசின் இரண்டாம் பரிசைப் பெற்றுள்ளது. சின்னணஞ்சானின் மற்றொரு பிரதியான நிறுவன ஓலைச்சுவடி ஓரளவு சிதைந்த நிலையிலுள்ள குறையான நூலாகும். நூல் வெளியீட்டில் இரு மூலங்களும் இடம்பெற்றுள்ளன

அயோத்தி கதை. சோமவார நாடகம். நம்பிராயன் கதை ஆகியன வெளிவர வேண்டிய நூல்கள். நம்பிராயன் கதை சுவடிப்பட்டய ஆய்வேடாக (1998) அளிக்கப் பெற்றுள்ளது. நம்பிராயன் கதை. தபுவீரன் கதை போன்றவை மலையாள நாட்டைச் சார்ந்த கதைகளாக இருப்பதால் மந்திரச் செய்திகளுக்கு முக்கியத்துவம் தரப்பெற்றிருக்கிறது.

மருத்துவம்

மருத்துவத்திலுள்ள வர்மம் தொடர்பான ஏழு நூல்களில் குறிகுணம். நோய். மருந்துசெய்முறை. உடம்பில் வர்மமுள்ள இடம். மருத்துவம் செய்முறை. வர்மப் பரிகாரம் போன்றன கூறப்பெறுகின்றன. பீரங்கி 100. ஒடிவுமுறிவு சாரி ஆகிய அச்சானவை. பீரங்கித் திறவுகோல் 16. வர்ம வைத்தியம். வாத வைத்தியம் காலம். உடல்குறி அறிதல். கம்பு சூத்திரம் ஆகியன அச்சாகாதவை. கம்பு சூத்திரத்தில் சிலம்பத்திலுள்ள 18 அடவுகள். ஆசானாகத் தகுதிகள். மிருகங்களுடன் சிலம்பப் போர் புரியும் முறைகள். சிலம்பத்தில் உயர்ந்த போர் முறையான வர்ம அடிகள் ஆகியன உள்ளன. கம்பின் பயன்பாடு பற்றி இந்நூல் கூறுவது சிந்தித்தற்குரியது.

> "முள்ளன் அத்ட்டும்
> கனி உதிர்க்கும்
> கவுநாய காக்கும
> ஆழ மளக்கும்
> கையில் கம்பிருந்தக்கால்"

இச்சிறிய நூல் வெளிவரின் ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்னுள்ள சிலம்பம்பற்றிய சில அரிய உண்மைகள் தெரியவரும்.

மேலும் குருமுகம். வயிராக்கிய சதகம். பரிமுப்புச் சூத்திரம் 16. சூத்திரம் 16. பஞ்சரத்தினத் திருப்புகழ் ஆகியனவும் அச்சாகவேண்டிய நூல்களே. இறுதி மூன்றும் மூப்புப்பற்றிய நூல்கள். கந்தனுடைய நூலருமை என்ற நூலில் (2 : 23) யோகமுப்பு. இரசவாதம் பற்றி 5 பாடல்களும். ஞானவழி நின்று மருத்துவம் செய்ய வேண்டுமென்பது பற்றி 2 பாடல்களும் உள்ளன.

அகத்தியர் முப்பு 30இல் (11 : 40) காப்புடன் 31 பாடல்கள். அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலுள்ள அகத்தியர் முப்பு 50 எனும் சுவடி நூலில் வரும் 1

வானும் புவியும் மதியுங் கதிரொளியும் என்ற 2ஆவது காப்பே இந்நூலின் முதற் காப்பாய் வருகிறது. இதுபோல் ஒரே பாடல் பல நூல்களில் காப்பாய் அமைவதையும் பார்க்க முடிகிறது. எனவே இந்நூலின் 2ஆம் பாடல் ஒன்று என்ற எண்ணையே பெறுதல் வேண்டும். ஏனெனில் இதுவே நூலின் முதற்பாடலாகும். காப்புப பாடல்கள் தொடரெண் பெறுவதால் வயிராக்கிய சதகம் 100 பாடல்களில் அமையாமல் 104 பாடல்களில் அமைகிறது நூல் எண் ஒன்று எனத் தொடங்காத இந்நிலையை மிகுதியான சுவடிகளில் காணமுடிகிறது இருப்பினும் காப்புப் பாடல் எண்ணின்றி அமைதலும் (1.3). எண் பெறினும நூல் எண் ஒன்று என்றே அமைதலும் (283 : 505) பல சுவடிகளில் காணப்படவே செய்கின்றது.

பதார்த்த குணசிந்தாமணி

601 பாடல்களையுடைய பதார்த்த குணசிந்தாமணி (4 : 31) என்ற நூலும், 91 பாடல்களையுடைய சரக்கு சிந்தாமணி என்ற நூலும் மருந்துச் சரக்குகளின் மருத்துவக் குணங்களைக் கூறுகின்றன. மேலும் முதல் நூலில் இறைச்சி, மலர், காய்கறி, கிழங்கு, கீரை, உலோகம், நவரத்னம் முதலான சரக்குகளின் குணங்களும், குறிப்பிட்ட சில மருந்துகள் பல நோய்களைக் குணப்படுத்தும் என்பதும், மருந்து உட்கொள்ளும்போது ஒதுக்க வேண்டிய உணவு வகை, நோயின் குறிகுணம், நோயறிந்து மருந்து உட்கொள்ளும் வகை முதலியனவும், இரண்டாம் நூலில் தாம்பிரப்பற்பம், தங்கப்பற்பம் முதலானவற்றின் செய்முறைகளும் கூறப்பெறுகின்றன.

இவ்விரு நூல்களையும் பதார்த்த குண சிந்தாமணி என்ற பெயரில் வெளிவந்த சில அச்சு நூல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்த அளவில் அவற்றிலுள்ள பெரும்பான்மையான பாடல்கள் அச்சுநூல்களினின்றும் வேறுபட்டனவாகத் தெரிகின்றன பதார்த்த குணசிந்தாமணி என்ற பெயரில் நிறுவனத்தில் சில ஓலைச்சுவடிகளும் உள்ளன எனவே இப்பொருண்மையிலுள்ள சுவடிகள் அனைத்தையும், அப்பொருண்மை தொடர்பான அச்சு நூல்களுடன் ஒப்பிட்டு அச்சிடுதல் ஆய்வுலகிற்கு நலம் பயக்கும்.

எனவே வெளிவந்த நூலின் பெயரைப் பெற்றுள்ள பிற சுவடிகளிலுள்ள பாடல்கள் முழுமையாக வேறாக இருக்கலாம். அல்லது அச்சுநூலில் இடம்பெறாத நூற்றுக்கணக்கான புதிய பாடல்கள் அவற்றுள் இருக்கலாம். எனவே இதுபோன்றவற்றைக் கருத்தில் கொண்டு பதிப்பிக்க முற்படின் வந்தவை மீண்டும் அசசில் வருவது தவிர்க்கப்படுவதோடு, அச்சில் வெளிவந்த நூல் தொடர்பான இதுவரை கிட்டாத கூடுதல் செய்திகளும், புதிய செய்திகளும் கிட்ட வாய்ப்பு ஏற்படும்.

உரைநடை நூல்கள்

சில நோய்களும் சில மருந்துகளும், குஷ்டநோயும் மருந்தும், சுகாதாரக் களஞ்சியம், நோயும் மருந்தும், மருத்துவக் குறிப்புகள், மருத்துவத் திரட்டு போன்ற நூல்கள் பெரும்பாலும் உரைநடையில் அமைந்த பல மருத்துவக் குறிப்புகளைத் தன்னகத்தே கொண்ட பெரும் திரட்டுகளாக விளங்குகின்றன. மேலும் பல சித்த மருத்துவ நூல்களினின்று எடுக்கப்பட்ட பல்வேறு மருந்துகளின் செய்முறைகள் பற்றிய குறிப்புகளின் பயன்பாடு கருதிய தொகுப்புகளாக அமைகின்றன. பல்வேறு

மருத்துவர்களின் பட்டறிவு அனுபவங்களால் குவிக்கப்பட்டுள்ள இத்திரட்டுகளை மருத்துவத் தீபிகை எனலாம்.

குஷ்ட நோயும் மருந்தும் (1 : 1) என்ற நூலில் தொழுநோய் பற்றியும் அதற்கான மருத்துவ முறையும் கூறப்பெறுகின்றன. இந்நோய் தோன்றி வெளிப்படும் முறை, குணம் என்பதும், அசாத்திய குஷ்டங்கள் தவிர மற்றெல்லா வகைக் குஷ்டங்களுக்கும் துவாதச் செந்தூரம் பயன்படும் என்பதும், அதன் விளக்கமான செய்முறையும் இந்நூலின் சிறப்பை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

சுகாதாரக் களஞ்சியம் (5 : 32) என்ற நூலில் பவழ பற்பம் (பக். 4), பஞ்சமுகப்பிர்மாஸ்த்திரம் (பக். 5) போன்றவற்றின் செய்முறைகள் புதிய முறைகளாகவும், வீரக்கட்டு (பக். 9) செய்முறை வித்தியாசமானதாகவும், நேர்வாளச் சுத்தி (பக். 5), படிகாரத் திராவகம் (பக். 5), புருஷரத்தினத் தயிலம் (பக். 8) போன்றவற்றின் செய்முறைகள் சிறப்பானதாகவும் அமைகின்றன.

நோயும் மருந்தும் (5 : 33) என்ற பெருநூலின் நோய், நோய்க்குரிய மருந்து, மந்திரம், வசியம் முதலான கூறப்படுவதுடன் நன்னாரி, இஞ்சி, மாதுளம்பழம், சந்தனம் முதலான சர்பத் வகைகளும், சோப் தயாரிக்கும் முறையும், கருப்பு பூட்ஸ்பாலிஸ், வாசனைக் கருப்புச் சாந்து, இங்க் பவுடர் முதலியவற்றின் செய்முறைகள் இடம்பெற்றிருப்பது சிறப்பான பகுதியாக அமைகிறது. இந்நூலில் மருத்துவக் குறிப்பு முடியுமிடங்களில் ஆமென் என்ற சொல்லாட்சி இடம்பெறுவதால் இசுலாமியர் படியெடுத்த சுவடியாக இருக்கலாம்.

மருத்துவக் குறிப்புகள் (5 : 34) என்ற பெருநூலில் உரைநடைப் பகுதிகளுக்கிடையே 'இராமதேவர் சூத்திரம் பத்து' என்ற தனிநூல் இடம்பெற்றுள்ளது. மேற்சொன்ன திரட்டுகள் வேறு பல நூல்களிலிருந்து உருவானவை என்பதை இது மெய்ப்பிக்கின்றது.

இந்த இராமதேவர் சூத்திரம் பத்து என்ற நூல் அகத்தியர் சூத்திரம் பத்து (199 : 404) என்ற பெயரில் நிறுவன ஓலைச்சுவடியாக உள்ளது. இந்நூல் தட்சிணாமூர்த்தி சூத்திரம் பத்து என்ற பெயரிலும் கிடைக்கின்றது. அதுமட்டுமின்றி இந்த ஒரே நூல் மூன்று ஆசிரியர்களின் பெயர்களில் பல சுவடி நூலகங்களில் காணப்படுகின்றது.

அகத்தியர் பெயரில் அமைந்த நூல்களில் தட்சிணாமூர்த்தி பெயரும், தட்சிணாமூர்த்தி பெயரில் அமைந்த நூல்களில் அகத்தியர் பெயரும் காணப்படுகின்றன.

காட்டு : 1. அகத்தியர் முப்பு (2. 529 : 863)
தெட்சிணாமூர்த்தி அருளிச்செய்த முப்பு அன்பது
முற்றும் (நூல் இறுதி)

2. தட்சிணாமூர்த்தி வகாரம் 16 (த. 803-2)
பேணவே பதினாறு மிதுவே யாகும்
பலமாகும் அகத்தியர்வாக் கியந்தான் முற்றே
(இறுதிப் பாடல், 16)

இதுமட்டுமன்றி ஒரே நூல் இவ்விரண்டு ஆசிரியர்களின் பெயர்களிலும் இருப்பதைப் பல நூல்களில் காணமுடிகின்றது.

காட்டு :	அகத்தியர் சூத்திரம் முப்பத்திரண்டு (ச. 129.6)	ஒரே நூல்
	தட்சிணாமூர்த்தி 30 (த 501)	

ஒரே நூல் அகத்தியர், கொங்கணர், தேரையர், திருமூலர் போன்றோர் பெயர்களில் அமைதலைச் சுவடிகளில் ஆங்காங்கே காணத்தான் செய்கிறோம்.

காட்டு :	ஆசிரியர் சூரிய வாகட வெண்பா	ஒரே நூல்
	தேரையர் நோயின் சாரம்	

இருப்பினும் அகத்தியரின் நூல்கள் தட்சிணாமூர்த்தி பெயரிலும் கிடைப்பதே பரவலாகக் காணப்படுகின்றது.

எனவே அகத்தியரின் வேறு பெயராகத் தட்சிணாமூர்த்தி என்ற பெயர் இருக்க வாய்ப்பு இருப்பதால் மேற்சொன்ன 'சூத்திரம் பத்து' என்ற நூல் இவ்விருவர் பெயரில் அமைதல் ஏற்புடைத்தே. ஆயின் இந்நூல் இராமதேவர் பெயரிலும் கிடைக்கின்றது. இந்நூலுக்குக் கிடைக்கும் மாற்றுச் சுவடிகளில் பல இராமதேவர் பெயரிலேயே கிடைக்கின்றன. அவற்றுள் ஒன்றான 'ராமதேவர் ஆயிரத்தில் சூத்திரம் பத்து' (ச. 289 A) என்ற நூலைப் பார்க்கும்போது இந்நூல் இராமதேவர் நூலாக இருத்தல் கூடும் என்ற எண்ணத்திற்கும் இடமளிக்கிறது

ஒரு நூலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர் என்ற நிலை ஏற்பட்டதற்கான காரணங்களை ஓரளவு அறிய முடிந்தபோதிலும் மேலும் தெளிவுபடுத்தப்பட வேண்டிய நிலை உள்ளது.

இத்திரட்டுகளிலுள்ள மருத்துவக் குறிப்புகள் தெளிவுடனும், வட்டார வழக்கை எதிரொலிப்பதாகவும் உள்ளன.

வட்டார வழக்கு :

குமுரக்காய்த்தெடுத்து (5 : 32, பக். 4)	: கொதிக்க வைத்து
மூணுவிசை (5 : 32, பக். 2)	: மூன்று முறை
குறுசினி ஓமம் (4 : 30, பக். 6)	: குரோசாணி ஓமம்

மேலும் இந்நூல்களில் எளிய நடையிலான அரிய, புதிய மருத்துவ முறைகள் சொல்லப் பெற்றுள்ளன இவற்றுள் பல பாமர மக்களும் புரிந்து தயாரிக்க முடிந்த மருத்துவக் குறிப்புகளை, மருந்து செய்முறைகளை விளக்குவனவாக விளங்குகின்றன. அவை எளிய முறைகளே ஆயினும் அவற்றையெல்லாம் ஆய்வுக்குட்படுத்தி வெளிப்படுத்தும் நிலை விரைந்து உருவாகுதல் வேண்டும். இவை அனைத்தும் தனித்தனி நூல்களாக வெளிவரும் தகுதி படைத்தனவே. இருப்பினும் குஷ்டம், நீரிழிவு, மஞ்சள் காமாலை, இரத்தக் கொதிப்பு, காலரா பேதி, கண் நோய், காசநோய், தலைவலி, பல்வலி, விசக்கடி, வசிய மருந்து, பற்பம், செந்தூரம், குளிகை, சுத்திமறை முதலான தலைப்புகளில் இந்நூல்களில் கிடைக்கும் செய்திகளோடு பிற நூற் செய்திகளையும் வகுத்து, தொகுத்து, தனித்தனி நூல்களாகக் கொண்டுவரின்

தமிழுக்கும். மருத்துவ உலகுக்கும். சுவடி ஆய்வார்க்கும் பெரிதும் பயன்தரும் மருந்து செய்முறைகளைத் தேர்ந்து சோதிக்க. மாற்று மருந்து செய்முறைகளை அறிய மிகவும் பயனுடையதாக இருக்கும்.

மந்திரம்

செய்யுள் வடிவிலான சர்வசம்ஹார விஞ்சையில் (2 . 22) சர்வ சங்கார மந்திரத்தைக் கற்கும் முறையும். அடையும் நன்மைகளும் கூறப்பெறுகின்றன. மேலும் பிள்ளையுண்டாக. வயிற்றில் இறந்த குழந்தை வெளிவர. ஏவல் பில்லி சூனியம். கண்ணேறு. சுரம். சன்னி. குட்டம் முதலியன அண்டாதிருக்க மந்திரத்துடன் கூடிய மருத்துவ வழிமுறைகளைக் கூறுகிறது இந்நூலும். மாந்திரீகம் என்ற நூலும் அச்சாகாதவை.

ஞானம்

சித்தர் பெருமக்கள் தங்களுடைய ஞானயோக மார்க்கத்திற்குத் தொன்மையான சைவ சமய தத்துவத்தையும். நான்கு வேதங்கள் சொன்ன வேதாந்த தத்துவங்களையும் பயன்படுத்திக் கொண்டு ஞானம். யோகம் ஆகியவற்றில் தெளிவும் விளக்கமும் அறிதற்பொருட்டுப் பல்வேறு நூல்கள் செய்தனர். பின்வந்தோர் அவர்களது கருத்துக்களோடு தங்களது கருத்துக்களையும் இணைத்துச் சொல்லியுள்ளனர். இவ்வகையில் எழுந்த ஞானம் தொடர்பான அரிய நூல்கள் பல வெளியிடப்படாமலே உள்ளன. இப்பொருண்மையிலுள்ள 11 நூல்களும் அச்சாகாதவைகளாகவே தெரிகின்றன.

இவ்வுலகு தோன்றிய விதம். பஞ்சபூதச் சேர்க்கையால் நிகழும் நிகழ்வுகள் (1 4), கருத்தோற்றம். உருவ அமைப்பு. ஆயுள். வீடுபேறு (1 . 3). துன்பங்களை. பந்தங்களை விலக்கி யோகவழி நின்று சித்துக்கள் கைவரப்பெற்றுச் சோதி வடிவான இறையை அடையும் முறை (1 11; 1 : 12). மருத்துவத்திற்கு ஞானமார்க்கத்தின் தேவை (1 : 5), அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் உள்ள இறைத் தத்துவத்தோடு கூடிய தொடர்பு (1 . 10). விந்து. நாதம். கருவாசல். பிறவாநெறி போன்ற ஞானமார்க்கத்திற்குரிய சிந்தனை (1 : 6). பிறவியிலிருந்து விடுபட்டு முத்தி அடையும் வழிமுறை (1 · 7). பிரபஞ்ச அளவை (1 ; 14), யோகமார்க்கத்தால் விளையும் ஞானத்தின்பாற்பட்ட உச்சிநீர் சுரத்தல் (பேரின்ப ஊற்று) (1 : 15) போன்றவை இந்நூற்களில் விளக்கம் பெறுகின்றன.

மானுடர் பழவினையை நீக்கவல்லது சதுர்கோண மாலையாகிய நூல் (1 : 7) என்பதும். நான்முகனும். திருமாலும் அளந்து காணமுடியாத ஆடல்வல்லானின் அருட்பொலிவினை எண்ணித் துதிப்போர் வாக்குச் சுத்தி பெறுவர் என்பதும் இந்நூலின் இறுதியில் அமையும்.

> தேடறிய திருமேனி அயனும் மாலும்
> 　　தேடியறி யாப்பழம் பொருளே நீயும்
> தேடிய காலாடிய பொற்சிவந்த பாதம்
> 　　தெரிசித்துச் சதுற்கோண மாலை பத்தும்
> பாடிவிடாய் நெஞ்சகமே இந்தப் பததும்
> 　　படிப்பவர்கள் பழவினைகள் எல்லாம் ஒழிந்து

பாடியிட ஜெயவாக்குப பெருவ ரின்னூல்
பயனருகில் மெஞ்ஞானத் தலைவா ஆமே (பா. 11)

என்ற இப்பாடலால் தெரியவருகிறது. திருவிளையாடல்களில் ஒன்றான விண்மணி அளந்த நிகழவு ஈண்டு ஆசிரியரால் நினைவுகூரப்படுவது அவருக்குள்ள சைவ சித்தாந்த ஈடுபாட்டைக் காட்டுகிறது

ஜெனன சக்கரம் (1 : 13) என்ற இந்நூல் 186 : 386 என்ற எண்ணுடைய ஓலைச்சுவடி போன்றதே. தத்துவம் (1 : 12) என்ற நூல் 141 : 311 என்ற எண்ணுடைய ஓலைச்சுவடி போன்றதே

மாணிக்கவாசகரின் ஞானத்தாழிசை (. 6) என்ற நூல் 334 : 566 என்ற எண்ணுடைய ஓலைச்சுவடி நூலினைப் போன்றதே. ஒரு நூலுக்குப் பல பிரதிகள் உருவாகும்போது அவற்றில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பது கண்கூடு. காட்டாக மேற்சுட்டிய இரண்டு நூல்களைக் காண்பது பொருந்தும்.

தாள் சுவடியில் நூல் தலைப்பு மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச்செய்த ஞானத் தாழிசை என்றும், ஓலைச்சுவடியில் மாணிக்கவாசகரருளிச் செய்த ஞானம் - தாழிசை என்றும் உள்ளன. தாள் சுவடியில் 10 பாடல்களும் ஓலைச்சுவடியில் 11 பாடல்களும் உள்ளன. ஓலைச்சுவடியில் வரும் பத்தாம் பாடல் தாள் சுவடியில் இல்லை. இரு நூல்களிலும் முதல் இறுதிப் பாடல்களிலுள்ள பாடவேறுபாடுகளைக் காட்டிலும் மிகுதியான பாடவேறுபாடுகள் பிற பாடல்களில் இருக்கின்றன. பாடல்களே வேறுவேறு என்று எண்ணக்கூடிய அளவிலும் சில பாடல்கள் உள்ளன. பாடல் எண்களின் அமைப்பு முறையிலும் மாறுபாடுகள் உள்ளன.

தாள் சுவடி	**ஓலைச்சுவடி**
1	1
3	2
4	3
9	4
6	5
7	6
3	7
8	8
2	9
-	10
10	11

பாடல்கள் முறைமாறி இடம்பெற்றிருப்பினும் பொருளை அறிந்து கொளவதில் இடையூறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே பொருள் தொடர்ச்சி என்றில்லாமல் ஞானத்தை அறிவுறுத்தும் வகையில் நூல் அமைகிறது என்பது தெரிகிறது.

அகத்தியர் தண்டகம் நூற்றில் தொல்லிய ஞானம் அறியவும் (1 : 5), கொங்கணர் பரமஞானத்தில் சொல்லியது (1 : 8) என்ற தலைப்புகளின்வழி இவை வேறு வேறு

நூல்களின் பிரதிகள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆயின் இங்ஙனம் உருவாக்கப்பட்ட பல நூல்கள் தனிநூல் அமைப்பிலே முழுமை பெற்றும் காணப்படுகின்றன (குணவாகடம். 2. 68 : 96). இங்ஙனம் சிறு நூலிலிருந்தும், பெரிய நூலிலிருந்தும் தனிநூல் அமைப்பில் நூற்றுக்கணக்கான நூல்கள் உருவாகியுள்ளன. மேலும் பல நூற்செய்திகளைத் தொகுத்து ஒரு நூல் உருவாதல். பிற நூற் செய்திகள் உரைநடையில் உருவாதல் என்ற நிலைகளைக் கருத்தில் கொண்டால் அச்சாகாத நூல்களின் எண்ணிக்கை அறுபது விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருக்கும்.

சைவ தத்துவம்

அச்சாகியுள்ள நாதாந்தத் திறவுகோல் என்ற நூல் நாதமாகிய ஓங்கார ஒலியைக் கடந்து அதாவது நாதாந்த நிலையைக் கடந்து சோதி வடிவான இறையைக் காண்பதற்கான வழிமுறையைக் கூறுகிறது. இந்நூலில் காப்புப் பாடல் நீங்கலாக 1 - 41 பாடல்கள் இடம்பெற்று முற்றும் என்ற சொல்லும் இடம்பெற்றுள்ளது இதே பெயரில் அமையும் நிறுவன ஓலைச்சுவடியில் (79 : 177) காப்பு உட்பட 99 பாடல்கள் இந்நூலும் முழுமை பெற்றுள்ளது. இரு நூல்களிலும் முதலிரண்டு பாடல்கள் ஒன்று போலவே உள்ளன.

அங்கவியல்

ஸ்ரீரிகளின் சரீரலட்சணம் (1 : 9) என்ற அங்கவியல் பற்றிய நூல் அச்சாகாதது. அகத்தியர் சுப்பிரமணியக் கடவுளிடம் பெண்களில் பதிவிரதை யாரென்று திருமணத்திற்கு முன் அறிவது எப்படி என்று கேட்க இறைவன் அருளிச் செய்த வசன காவியம் இது என்பதனை நூல் தொடக்கத்தின் வழி அறியமுடிகிறது. பெண்களுடைய கைரேகை, முகம், கூந்தல், உடற்சுழி முதலான உறுப்புகளின் அமைப்பு, தன்மை முதலியவற்றின் வழி அவர்களது குணம், உடல் தன்மை, உடல் நலம், ஆயுள், பொருளாதாரம் முதலியன இதில் கண்டறியப்படுகின்றன.

மனைநூல்

அச்சாகாத சிற்ப சாத்திரம் என்ற நூல் தொடக்கப் பகுதிகள் இல்லையெனினும், உள்ள செய்திகள் அறுசீர் விருத்தத்தில் 641ஆவது பாடல் முதல் 1204ஆவது பாடல் வரை தொடர்ச்சியாய் அமைந்து முற்றுப்பெற்றுள்ளது இந்நூல் மயமதம் என்ற நூலின் சிறப்பையும், மயனுடைய நெறியையும், வீடு கட்டும் இலக்கணத்தையும், மயனின் புகழையும் விதந்தோதுகிறது.

ஆரூடம்

சித்தினாரூட சிந்து என்ற நூலில் உலகிலுள்ள விசச் செந்துக்களின் பெயர்கள், விசங்களின் கொடிய தன்மைகள், பாம்பு கடித்த நேரம், தோன்றும் அறிகுறிகள், மரணத்திலிருந்து மீளுவதற்கான மந்திர, தியான, மருத்துவ முறைகள், பாம்பு கடித்தால் மீள முடியாத நட்சத்திரங்கள், திதிகள், விசச் செந்துக்களிடமிருந்து தப்பிப் பிழைத்தால் உயிரோடிருக்கும் காலம் முதலான செய்திகள் கூறப்பெற்றுள்ளன..

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளில் நிறுவனக் காகிதச் சுவடிகள் கிடைத்த வரலாறு அவற்றின் அமைப்பு முறை, அச்சான விவரம், அச்சாகாத நூற்களின் சிறப்பு,

வெளிவரவேண்டிய மிகச்சிறந்த நூல்கள். நூற்பொருண்மை, சுவடிகளைப் பதிப்பிக்கும்போது ஏற்படும் சிக்கல், தீர்வு போன்றன தொகுத்தளிக்கப் பெற்றது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் காகிதச் சுவடிகள் பொருளடிப்படையிலான அட்டவணை

(அ) சிற்றிலக்கியம்

1. சிவகிரி குமர சதகம் 23 : 54
2. வைரபுரம் திரிபுர சுந்தரியம்மை நவமணிமாலை 18 : 48
3. வைரபுரம் சோமசுந்தரேசர் ஒருபா ஒருபஃது 18 : 47
4. வைரபுரம் எயிலிம்மை தீருவூசல் 18 : 49

(ஆ) புராணம்

5. குலாலபுராண சரித்திரம் 8 : 37
6. திருஏரகப் புராணம் 19 : 50

(இ) நாட்டுப்புறவியல்

7. அயோத்தி கதை 20 : 51
8. அரவமுத்துவீரன் கதை 27 : 58
9. இடைச்சி செல்லி கதை 14 : 43
10. கட்டபொம்மு கும்மி 9 : 38
11 குருக்களாஞ்சி கதை 16 : 45
12. சின்னணைஞ்சான் கதை 26 : 57
13. சோம்வார நாடகம் வீராந்தி கதை (நாடகம்) 15 : 44
14. தடிவீரன் கதை 13 : 42
15. நம்பிராயன் கதை 17 : 46
16 வன்னியராயன் கதை 12 : 41
17 வைகுண்ட அம்மானை 21 : 52

(ஈ) மருத்துவம்

18. அகத்தியர் அருளிய முப்பது 11 : 40
19. அகத்தியர் கம்பு சூத்திரம் 10 : 39
20. உடல்குறி அறிதல் 3 : 29
21. ஒடிவு முறிவுசாரி 3 : 26
22. கந்தனுடைய நூலருமை ஐந்து 2 : 23
23. (குஷ்டநோயும் மருந்தும்) I : I
24 சரக்கு சிந்தாமணி 4 : 30
25. சில நோய்களும் சில மருந்துகளும் 1 : 2
26. சுகாதாரக் களஞ்சியம் 5 : 32
27. திருவள்ளுவநாயனார் அருளிச் செய்த சூத்திரம் 16 2 : 17
28. திருவள்ளுவநாயனார் அருளிச் செய்த பஞ்சரத்தினத் திருப்புகழ் 1 : 18
29. திருவள்ளுவநாயனார் அருளிச் செய்த பரிமுப்பு சூத்திரம் பதினொன்று 2 : 16

30. தெட்சிணாமூர்த்தி பகவான் அருளிச்செய்த குறுமுகம் நூறு 2 : 21
31. நாதாந்தத் திறவுகோல் 1 . 3
32. நோயும் மருந்தும் 5 . 33
33. பதார்த்த குணசிந்தாமணி 4 : 31
34. பீரங்கித் திறவுகோல் பதினாறு 3 : 25
35. பீரங்கி நூறு 3 : 24
36. புலஸ்தியனாரருளிச் செய்த வைராக்கிய சதகம் 1 : 19
37. புலஸ்தீசர் விளக்கிய ஞானகற்பம் 222 1 : 20
38. (மருத்துவக் குறிப்புகள்) 5 : 34
39. (மருத்துவத் திரட்டு) 6 : 35
40. வர்ம வைத்தியம் 3 : 27
41. வாத வைத்தியம் காலம் 3 : 28

(உ) மந்திரம்

42. (மாந்திரீகம்) 24 : 55
43. சர்வ சம்ஹார விஞ்சை 2 : 22

(ஊ) ஞானம்

44. அகத்தீச மகாமுனிவர் அருளிச் செய்த தண்டகம் நூற்றில் சொல்லிய ஞானம் அறியவும் 1 : 5
45. அமிர்த வாசகமென்னும் ஞானயோக சாதன நாதாந்த மாலை 1 : 15
46. கொங்கணர் பரம ஞானத்தில் சொல்லியது 1 : 8
47. சிவசுப்பிரமணியர் போத வாக்கியம் 1 : 11
48. திருநந்திதேவர் திருமூலர்க்கு உபதேசித்த தத்துவங்கள் 1 : 12
49. திருநந்திதேவர் திருமூல தேவருக்கருளிச் செய்த பூந்தாது 1 : 14
50. திருநந்திதேவர் திருமூல தேவருக்கு உபதேசம் பண்ணின மூலாதாரத் திருமந்திரம் 1 : 10
51. திருநந்திதேவர் திருமூலதேவர்க்கருளிச் செய்த தத்துவ உபதேச ஜெனன சக்கரம் 1 : 13
52. மாணிக்கவாசகர் அருளிச் செய்த சதுர்கோண மாலை 1 : 7
53. மாணிக்கவாசகர் அருளிய ஞானத் தாழிசை 1 : 6
54. ஸ்ரீ நந்தி தேவர் திருமூலர்க்கு அருளிச் செய்த ஞானபோதமாகிய உபதேச புவன கோசம் 1 : 4

(எ) நுண்கலை

55. ஸ்ரீரிகளின் சரீர லெட்சணம் 1 : 9
56. சிற்ப சாஸ்திரம் 22 : 53

(ஏ) இலக்கணம்

57. சித்தினாரூட சிந்து 25 : 56
58. புறப்பொருள் வெண்பாமாலை 7 : 36

□

S. Johnson Samuel
Research Scholar
Department of Rare Paper Manuscripts
Tamil University
Thanjavur

VANKAM
(A Sea going vessel of Caṅkam period)

Maritime activity of India in general, and Tamil Nadu in particular is one of the oldest in the world. Maritime contact of the people of this land with the ancient civilizations has been proved by a number of excavations and numismatics. Anthropological evidences and ethnography of crafts' designs belong to various countries, confirm the same. Further, ancient, medieval, and modern literature contain illustrious information about the maritime activity of the region. Yet, the details that are found in the above mentioned sources do not have reference to any type of craft's shape, structure, measurement, and materials used. The various authors, historians, the geographers, and the foreign visitors to India ignored the importance of these details that a student of this field is left in darkness, while he attempts to identify the crafts of Caṅkam period.

Variety of ancient crafts *thimil, ōtam, kalam, nāvāy, ampi, niranimatam, cōṅku,* and *vaṅkam*, and their usage recorded in the Caṅkam literature do not provide the details of the structure or the components of the crafts. Yet, Periplus informs us of two types of Indian crafts, the Caṅkara and the Kolandiphonta, with little details about the structure. The first one was a double canoe - coast line carrier, made by joining two dug-outs, while the second one is a large sea-going vessel, the kolandia, built with 'prows at each end', as observed by Pliny.

Caṅkara is supposed to be, the Tamil *caṅkatam*, the Malayalam *caṅkatam* and the Kanarese jaṅgala. *Caṅkatam* or the double canoe (shoe dhono) of the River Gotavari is the existing specimen of caṅkara.

Vaṅkam is a large vessel finds, its place in Caṅkam Literature. *Vaṅkam* means, waves, sea and large sea-going vessel. The Bay of Bengal,

the eastern sea is known as *Vankāla viri kutā* in vernacular. This craft must have been sailing to the south eastern countries across the Bay of Bengal to reach Java, Cumatra, Burma and Sri Lanka for trade that this craft might be called a *vankam*, suggest G. Victor Rajamanickam and S. Arulraj.

The Bay of Bengal was not known to the Cankam Tamils as, *Vankak katal* or *Vankāla viri kutā*. Rather, it was known to them as, *Kuta katal*, (kuta = east + katal = sea) the eastern sea. So, naming the vessel after sailing in the Bay of Bengal may not be apt. The craft was named after *vankam*, waves and the craft sailing over the wave is *vankam* is also not specific, as all crafts sail over the waves.

These crafts might have been named after the frames, *vanku* or *vankukkāl*. *Vankam* may be the first kind of the frame built craft. Cankam literature, has references to the sea-going crafts *Vankam*, built with ribs. While examining the evolutionary developments in the ship building techniques leads to argument, if the *vankam* was a skeleton built (frame-first) or a shell built (plank-first) vessel. Undoubtedly, the *vankam* must have been a plank-first vessel, as the Indian ships belonged to the early centuries of the Christian era were sewn crafts and no iron nails were used. The shell-built ships must have been strengthened with battens inboard. The frame built structure of the craft with *vanku* or *vankukkāl* is better applicable because of its specific identity. Narrinai (258 : 8-10) pictures *vankam* as ships built with masts and sails.

Apart from the traditional maritime activity of the Tamils, the colonization of Java, Cumatra, Borneo, Bali, Malay Archipelago, etc., by the Indians and the associated missionary endeavours of the Buddhist monks in these lands provide information to identify the Indian native crafts. Ashoka the Great, the great Buddhist monarch of India commenced the propaganda of Buddhism in the eastern lands in 244 B. C. The ships sailed for the Southeast Asian countries and farther from the Kalinka and the Orissa coasts, is still celebrated by the natives. Hornell is of the opinion that the first large high seagoing ships that were seen by the Malays was the Dravidian ships of South India. The ancient Indian ships, were the vessels with double outrigger and had an even prow at stern and stem. This arrangement was of great usefulness to sail the craft without turning in the rough seas, and by steering with the help of two quarter paddles. The absence of rudder, is favoured by Hornell on examining the ship-coins of Andhras dated to the second and third centuries A. D. and the Boro Budur scenes. The ancient crafts used by the navigators of Kalinka and Orissa to sail in the high seas were also of the same type of the ancient crafts of Tamils, i. e., two masted outrigger vessel, both bow and stern sharp, with quarter steering paddles

and without a rudder.

Schoff and Hornell (1920) record a similar type of crafts with two masts, having pointed prows, planks strengthened with battens and equipped with a stout outrigger. i. e. the *kullä* or *kullan* of the Coromandel coast. As a practice, the Tamil mariners unlash the outrigger frame when the vessel is beached or anchored. It can be inferred that the *vaṅkam* of Caṅkam period, kolandiophonta, the craft recorded by Periplus, the kolandia of Pliny, and the *kullà* or *kullan* or *kalla-tōni* observed by Hornell, could have been one and the same type of Indian native craft that is extinct.

It can be undoubtedly inferred that the sewn, plank-first and frame built, two or three masted Indian craft rigged by sails and paddles, with sharp bow and stem without rudder was, the celebrated vessel of Caṅkam literature 'the *vaṅkam*'.

BIBLIOGRAPHY

James Hornell. **The Origins and Ethnological Significance of Indian Boat Designs.** Memoirs of the Asiatic Society of Bengal, The Asiatic Society, Calcutta, 1920.

Raghavan, V.S.V., **Periplus (A.D. 50-80)**, Manivacakar Nulakam, Chennai, 1977.

Schoff, W.H., **The Periplus of the Erythraean Sea (Translation)**, London, 1912.

Victor Rajamanickam, G. and Arulraj, V.S., **Caṅka Ilakkiyatthil Kalaṅkal,** Arul Printers, Thanjavur, 1994.

□

த. பூமிநாகநாதன்
ஆராய்ச்சி உதவியாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

தாள் சுவடிகளில் மருத்துவம்

தமிழகத்தில் சுவடிப் பாதுகாப்பில் பெருமையோடு பேசப்படும் நூலகங்களில் தலையாயதாக விளங்குவது அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகமாகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சென்னை மாகாண ஆளுநராக வந்த காலின் மெக்கன்சி (கி. பி. 1754 - 1821), டாக்டர் லெய்டன் (கி. பி. 1803 - 1811), சி. பி. பிரௌன் (கி. பி. 1798 - 1827) ஆகிய மூவரும் தங்கள் முயற்சியால் திரட்டிய சுவடிகளைக் கொண்டு கி. பி. 1869இல் ஒரு நூலகமாகத் தொடங்கினர். அது கி. பி. 1876இல் மாநிலக் கல்லூரிக்கு மாற்றப்பட்டது. பின்னர், அதே ஆண்டில் இன்றைய சென்னைப் பல்கலைக்கழக வளாகத்திற்கு மாற்றப்பட்டு, தனி நூலகமாகவே இயங்கி வருகிறது. பன்மொழிச் சுவடிகள் சுமார் அறுபத்தையாயிரம் மற்றும் பன்மொழி தாள்சுவடிகள் சுமார் இருபத்தைந்தாயிரம் எண்ணிக்கை கொண்டதாகவும் விளங்குகிறது இந்நூலகம். இதில் தமிழ்ச்சுவடிகள் சுமார் பதினேழாயிரமும் அம்மொழி சார்ந்த தாள்சுவடிகள் சுமார் ஐயாயிரத்திற்கு மேலும் இருப்பதாக அந்நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை மூலமாக அறியமுடிகின்றது.

ஈண்டு இந்நூலகத்தின்கண் காணும் தாள் சுவடிகளில் பதிவாகியுள்ள மருத்துவச் சுவடிகளை (நூல்களை) வகை தொகை செய்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வகையும் தொகையும்

தாள்சுவடிகளில் பொதிந்துள்ள மருத்துவம் சார்ந்த ஏடுகளைக் கணக்கிட்டால் முன்னூறுக்கும் மேற்பட்ட மருத்துவம் தொடர்பான நூல்கள் கிடைக்கின்றன. மருத்துவம் என்ற சொல் மானுட மருத்துவத்திற்கும் விலங்கின மருத்துவத்திற்கும் பொதுவாக அமையும் பெயர் எனலாம். இதனையே அக்காலத்தில் வாகடம் என்ற சொல்லால் அழைப்பர். குழந்தை வாகடம் என்ற சொல் மருத்துவத்தில் பழகிவரும் சொல்லாகும். மாட்டுவாகடம், அசுவ அல்லது குதிரை வாகடம், யானை வாகடம் போன்ற பிரிவுகள் விலங்கின மருத்துவத்தை விளக்குவனவாக அமைகின்றன.

இத்தகைய வாகடம் அல்லது மருத்துவம் என்பது சித்தர்கள் சொன்ன

மருத்துவமாகவும், அனுபவ மருத்துவம் என்ற பெயரில் பல்வேறு மருத்துவர்கள் தந்த செய்திகளாகவும் வைத்தியம் என்ற பெயரில் பலதரப்பட்ட மருத்துவ. மருந்து செய்யும் முறைகளை உள்ளடக்கிய செய்திகளாகவும் என மூன்று நிலைகளில் இத்தாள் சுவடிகள் காணப்பெறுகின்றன.

சித்தர்கள் சொன்ன நூல்கள்

தமிழகத்தில் பொதுவாகச் சித்தர்களாலேயே மருத்துவம் ஓங்கி வளர்ந்ததென்ற நம்பிக்கை உண்டு தமிழில் சித்தர்கள் எத்தனைபேர் என்பதில் கருத்து மாறுபாடுகள் இருந்தாலும் பதினெண்பேர் என்ற வழக்கு மக்களிடையே செல்வாக்குப் பெற்றது இப்பதினெட்டுச் சித்தர்கள் நிரல்படுத்திக் காட்டும்போது ஆய்வாளருக்கு ஆய்வாளர் வேறுபடுவதும் உண்டு எது எவ்வாறாயினும் அகத்தியர். உரோமரிஷி. காகபுசுண்டர். இராமதேவர். கொங்கணர். சுத்தானந்தர். திருமூலர். தேரையர். நந்திதேவர். பிரமமுனி. மச்சமுனி. வான்மீகர் போன்ற பெயர்கள் மருத்துவச் சித்தர்களாகப் பன்னெடுங்காலமாக வழிவழியாகச் சொல்லப்பட்டுவரும் சித்தர்களின் பெயர்களாகும்.

இச்சித்தர்கள் மருத்துவத் துறையில் பல்வேறு நிலைகளில் தங்கள் ஆய்வுகளை நடாத்தித் தாங்கள் கண்டறிந்த நுணுக்கமான கருத்துக்களை மரபுவழிச் செய்யுள் வடிவில் பாடல்களாகத் தந்துள்ளனர். இவர்களுடைய நூல்களில் பெரும்பாலான நூல்கள் இன்று தனியார்களாலும். பல்வேறு நிறுவனங்களாலும் அச்சுப் புத்தகங்களாக வந்துள்ளன. வெளியில் வராத நூல்களும் ஓலைச்சுவடிகளாகவும் தாள் சுவடிகளாகவும் இலங்குகின்றன. இந்நூலகத்தைப் பொறுத்தவரை ஓலைச் சுவடியிலிருந்து பிரதி செய்யப்பட்ட கையெழுத்துப் பிரதிகளே பெரும்பாலும் தாள் சுவடிகளாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய தாள் சுவடிகளில் அகத்தியர். இராமதேவர். உரோமரிஷி. கொங்கணர். கௌசிகமுனி. சிவவாக்கியர். சுத்தானந்தர். சுப்பிரமணியர். சூதமுனி. தட்சணாமூர்த்தி. தன்வந்திரி. திருமூலர். தேரையர். நந்திதேவர். பிரமமுனி. புலத்தியர். புலிப்பாணி. போகர். மச்சமுனி. வான்மீகர் போன்றோர் பெயர்களில் நூல்கள் காணப்படுகின்றன

அகத்தியர்

இவருடைய பெயரில் சௌமிய சாகரம். இரத்தினச் சுருக்கம். குரு நூல் வைத்தியம் 600. சரக்கு. தண்டகம். தீட்சை நாடி சூத்திரம். நட்சத்திர காண்டம். நாடி வைத்தியக் குறிப்பு. நிகண்டு 800. நோயின் சாரம். பச்சிணி 131. பதார்த்தகுண சிந்தாமணி. கருக்குரு 1000. உதரக்கிரியை வைத்தியம். பிள்ளைப்பிணி வாகடம். பற்பவகை. விஷபேதி வைத்தியம். வைத்திய செந்தூரம் முன்னூறு. பரிபூரணம் 1200. வைத்தியம் 1500 போன்ற பல்வேறு துறை சார்ந்த மருத்துவ நூல்கள் காணப்பெறுகின்றன. இவற்றில் சௌமிய சாகரம். இந்திரசாலம் 1200. சகல கலைக்கியானம். பரிபூரணம் 1200. வைத்திய செந்தூரம் 300. வைத்தியம் 1500 போன்ற நூல்கள் அச்சு நூல்களாக வெளிவந்துள்ளன.

அகத்தியர் சூத்திரம் 8. தந்திரம் 200. தந்திரம் 12. திரட்டு 80. பட்சிணி 131.

அனுபோக சூத்திரம். அனுபவ வைத்தியம் முதலான பல்வேறு நூல்கள் இன்று வரை பதிப்பாகவில்லை.

இராமதேவர்

இவரது பெயரில் இராமதேவர் ஆயிரம், இராமதேவர் முப்பு விவரம். இராமதேவர் வைத்தியம் 80. இராமதேவர் பட்சிணி, யாகோபு என்ற இராமதேவர் வைத்தியம் முதலான நூல்கள் உள்ளன.

கொங்கணர்

இவருடைய நூல்களாகக் கொங்கணர் கற்பம், கொங்கணர் கடைக்காண்டம். கொங்கணர் வாகடம். கொங்கணர் முதற்காண்ட உரை. கொங்கணர் வைத்தியம் ஆகிய நூல்கள் தாள்சுவடிகளாக உள்ளன.

சட்டைமுனி

இவரது பெயரில் உப்புக்கட்டு 100, சரக்கின் பெயர், குணவாகடம். தாதுநிதானம். சட்டைமுனி சாத்திரம். சகல வைத்தியம், சட்டைமுனி ஆயிரம். கற்பம். நிகண்டு ஆகிய நூல்கள் பதிவாகியுள்ளன.

தன்வந்திரி

இவரது நூல்களாகக் கருக்கிடை 200, கலைஞானம் 200, தன்வந்திரி சத ஸ்லோகம், தன்வந்திரி சிந்தாமணி, தன்வந்திரி சிமிட்டு, இரத்தினச் சுருக்கம், தன்வந்திரி சூத்திரம், தண்டகம், நாடி சாத்திரம், நிகண்டு, முப்பு 500, வாகடசுரநூல், வாதம் 50, தன்வந்திரி வாதம், அறுவகைக்குணம், வாலை சாத்திரம், வைத்தியம் காவியம் 1000, வைத்திய சாத்திரம், வைத்தியம் 70, தாதுபுஷ்டிக் குளிகை ஆகியன தாள்சுவடிகளாக உள்ளன.

திருமூலர்

கருஉற்பத்தி, திருமூலர் சூத்திரத்திரட்டு, சூத்திரம் 508, நாடி சூத்திரம், வாகடம், வாத திரவியம் 200, வாத சூத்திரம் 3000, வைத்தியம் 600, வைத்திய முறை வசனம் ஆகியவை இவர் பெயரில் அமைந்தவை.

நந்தீசர்

சதுர வாகடம் பகுதி ஒன்று மற்றும் இரண்டு, வாதசூத்திரம், வாதகாண்டம், திருமந்திரம், நந்தி நூல், நந்தீசர் திறவுதாழ், சூத்திரம், நந்தீசர் கடைக்கற்பம், நந்தீசர் சாத்திரம், நாடி நிதானம், நயனவிதி, நாடிநூல் ஆகியன இவர் பெயரில் அமையும்.

தேரையர்

தேரையர் வைத்தியம் 1000, கசாயத் திரட்டு, தைல வர்க்கச் சுருக்கம், நோயின் சாரம், தேரையர் பாடல், வைத்தியத் திரட்டு 48 முதலான நூல்கள் இவரது பெயரில்

தாள்சுவடிகளாகக் காணப்படுகின்றன.

பிரமமுனி

கருக்கிடைச் சூத்திரம் 380, கருக்கிடை நிகண்டு, பிரமமுனி சூத்திரம் 360, பிள்ளைப் பிணி வாகடம், பால சிகிச்சை, பிரமமுனி நாடி, பிரமமுனி வைத்தியம் ஆகிய நூல்கள் இவரது பெயரில் உள்ளன.

புலிப்பாணி

புலிப்பாணியார் பாடல், புலிப்பாணி வைத்தியம் 500, பெண்கள் குழந்தைகள் வைத்தியம், புலிப்பாணித் திரட்டு, பெருநாடி, புலிப்பாணி பலதிரட்டு முதலிய நூல்கள் இவரது பெயரில் தாள்சுவடிகளாக அமைந்துள்ளன.

போகர்

போகர் சாகரம், நவரத்தின வைப்புச் சூத்திரம், போகர் நிகண்டு, பச்சிலை மூலிகை வைத்தியம், பூரணக் குளிகை போகர், ஜனன சாகரம், போகர் 700 ஆகியன இவரது பெயரில் காணப்படுகின்றன.

தட்சிணாமூர்த்தி

தட்சிணாமூர்த்தி சாலம் ஆறுகாண்டம், நட்டாமுட்டி சூத்திரம், தட்சிணாமூர்த்தி பாடல் பின் 80, வாகடம், வைத்தியம், கடைக்காண்டம் 600, வைத்திய வல்லாதி, தட்சிணாமூர்த்தி சூத்திரம் முதலிய நூல்கள் இவர் பெயரில் அமைகின்றன.

வான்மீகர்

வான்மீகர் அடிதலை கயிற்றுச் சூத்திரம், கற்பச் சூத்திரம், நாடி சூத்திரம், மணிக்கடை கயிற்றுச் சூத்திரம், வாத நாடி சூத்திரம், பலவிரல் சூத்திரம் போன்ற நூல்கள் இவரது பெயரில் தாள்சுவடிகளாக அமைந்துள்ளன.

இவையன்றிச் சுந்தரானந்தர் அதிசயம், சுந்தாரனந்தர் கூட்டின சாத்திரம், சுந்தாரனந்தர் கேசரி வித்தை ஆகிய நூல்கள் சுந்தரானந்தர் பெயரிலும், புலத்தியர் நாடி சூத்திரம், (இ)டமரானந்தர் சூத்திரம், இடைக்காட்டுச் சித்தர் பாடல், கமலமுனி சுருக்கம், கயிலாசமூர்த்தி வாதநூல், சிவ வாக்கியர் நாடி சூத்திரம், சூதமுனி சூத்திரம், கருவூரார் கருக்கிடை, கருவூரார் பலதிரட்டுச் சூத்திரம், கருவூரார் நொண்டி போன்ற நூல்கள் அந்தந்தச் சித்தர் பெயரிலேயே வழங்கப்படுவதைக் காணலாம்.

இதுவரை பார்த்தவகையில் மேற்சொன்ன சித்தர்களாக விளங்கும் பெரியோர்களின் பெயரில் அமைந்த பல்வேறு வகையான மருத்துவ நூல்களில் ஓலைச் சுவடியை மூலமாகக் கொண்டு வெளிவந்த நூல்களே அதிகம். தாள் சுவடியைக் கொண்டு வெளிவந்த நூல்கள் மிகக் குறைந்த எண்ணிக்கை உடையவையே. பொதுவாக, பதிப்பு நிறுவனங்கள் - இரத்தின நாயகர் சன்ஸ், சண்முகானந்தர் டிப்போ, தாமரை நூலகம் போன்ற பதிப்பகங்கள் சுவடியைக் கொண்டே பதிப்புகளை வெளிக்கொணர்ந்துள்ளன. ஆனால், ஆய்வு நிறுவனங்கள் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஆசியவியல் நிறுவனம், சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம்,

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியன மூலச் சுவடியோடு, தாள் சுவடிகளையும் கருத்தில் கொண்டு தங்களது பதிப்புகளை வெளிக்கொணருகின்றன.

சித்தர்கள் என மக்களால் போற்றப் பெற்ற இப்பெரியோர்கள் இரசவாதம் நோக்கித் தங்கள் ஆய்வைச் செலுத்திய போது அவர்களுக்கு உபரியாகக் கிடைத்ததே இம்மருத்துவப் பட்டறிவு. ஆயினும், தமிழில் மருத்துவத் துறைக்கு மூல நூல்களைத் தந்த பெருமை இவர்களையே சாரும். கீழ்த் திசைச் சுவடி நூலகத்தில் இப்பெரு மக்கள் சொன்ன பல்வேறு நூல்கள் இன்னும் தாளில் உறங்கிக் கொண்டே கிடக்கின்றன. அவையாவும் வெளிவரின் சித்தர்களின் மருத்துவ ஞானத்தை உலகறிய வாய்ப்பாகும்.

அனுபவ வைத்தியம்

மருத்துவம் என்பது உடம்பில் ஏற்படும் நோய்களுக்குத் தீர்வுகாணும் ஒரு கல்வியாகும். இதனை நம் முன்னோர்கள் சித்தர்கள் வாயிலாக அறிந்து கொண்டனர் என்பர். இருப்பினும் இத்துறை தற்போது மூவரால் கையகப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். அஃதாவது நிறுவன வாயிலாக முறையாக மருத்துவக் கல்விகற்ற மருத்துவர்கள் என்ற ஒரு சாராரிடமும், பாரம்பரியமாக மூலிகைகளோடும் அவை ஆற்றும் மருத்துவச் சிகிச்சையோடும் காலம் காலமாகத் தொடர்புடைய பாரம்பரிய மருத்துவர்கள் என்ற கல்விசாரா மருத்துவர்களிடமும், மேற்சொன்ன இருவர் கூட்டத்திலும் பணியாளராகவோ அல்லது பிணியாளராகவோ இருந்து தாம் கண்டு கேட்டு உய்த்து உணர்ந்த பட்டறிவைக் கொண்டு தன்னை ஒரு மருத்துவனாகக் கருதிக் கொள்ளும் மருத்துவப் பட்டறிவாளனான அனுபவ வைத்தியர் என்பாரிடமும் ஆகிய இம்மூவரிடமே மருத்துவத் தொழில் நிலை பெற்றுள்ளது. இப்படிப் பார்க்கும்போது முறை சார்ந்த கல்வி வாயிலாக வந்த பட்டறிவாளர்கள் 'மருத்துவர்' என்ற பெயரிலும், ஏனையோர் 'அனுபவ வைத்தியர்' என்ற பெயரிலும் மக்களிடையே செல்வாக்குப் பெறலாயினர்.

அவ்வகையில் அனுபவ வைத்தியம் என்ற பெயரில் இந்நூலகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தாள் சுவடிகள் உள்ளன. இச்சுவடிகள் பெரும்பாலும் ஒரு பெருந்தலைப்பில் பல்வேறு நோய்களுக்கான மருந்து செய்முறைகளையும் மருத்துவ முறைகளையும் எடுத்தியம்புவனவாக அமைகின்றன. இதையறிந்தவர் (மருத்துவர்) இம்மருந்து செய்யும் முறை, மருத்துவ முறை ஆகியனவற்றை யாரிடமிருந்து கற்றுக் கொண்டார் அல்லது தெரிந்து கொண்டார் என்ற விவரத்தைச் சுவடிக் குறிப்பாகத் தருவதில்லை. அதே போன்று தன்னைப் பற்றிய தற்குறிப்பையும் தருவதில்லை. இதன் காரணமாக இவ்வகையான மருத்துவக் குறிப்புகள் பிறர் பயன்பாட்டிற்குத் தரவுகளாக அமையாமலேயே போய்விடுகின்றன.

தமிழாய்வு செய்யும் நிறுவனங்கள் கூட இவ்வகையான சுவடிகளை ஆய்வுக்கோ அல்லது பதிப்பிற்கோ பெரும்பாலும் உட்படுத்திக் கொள்வதில்லை. ஆயினும், தமிழ்ப் பல்கலைக்கழகம் போன்ற பெரிய நிறுவனங்கள் இன்று இத்தகைய தாள் சுவடிகளின் அருமை பெருமை கருதிப் பாடல் வடிவம் என்றாலும் சரி அல்லது உரைநடை வடிவம் என்றாலும் சரி வேற்றுமை கருதாது நூல் சொல்லும் கருத்துக்கு முக்கியத்துவம் தந்து பல்வேறு மருத்துவ நூல்களைப் பதிப்பித்து வருகிறது. சென்னைக்

கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உரைநடையாக விளங்கும் பலநூறு நூல்கள் பல்வேறு செய்திகளைத் தன்னகத்தே பெற்று மருத்துவச் சாலையாக விளங்கிய போதிலும் அவற்றை வெளிக்கொணர ஆர்வலர்கள் இல்லாத காரணத்தால் இம்மருத்துவக் களஞ்சியங்கள் தூசுபடிந்து காணப்படுகின்றன.

பொதுவாக. இந்நூல்களில் நாடியில் தொடங்கி உச்சி முதல் உள்ளங்கால் வரை. கண் முதல் கணுக்கால் வரை. அசீரணம் தொடங்கி வாதரோகம் வரை. பட்சி தோசம் தொடங்கி மந்திரக் கட்டுகள் வரை இப்படிப் பல நிலைகளில் செய்திகள் விரவிக் கிடக்கின்றன. இவற்றை நாம் பறவை நோக்காகப் பார்ப்போமேயானால் இந்நூல்கள் பேசும் பல்வேறு செய்திகள் கீழ்க்கண்டவாறு அமையும்.

குழந்தை வாகடம்

இதனில். பிறந்த குழந்தையின் தொடக்கநாள் தொடங்கி. பதினொரு வயது வரை அமைந்த காலகட்டத்தில் ஏற்படும் நோய்களுக்கும் தோசங்களுக்குமான பரிகாரங்கள் கூறும் பிள்ளைப் பிணி வாகடநூல்கள்; காலை. மதியம். மாலை. இரவு போன்ற வேளைகளில் வானில் பறக்கும் பறவைகளால் குழந்தைகளுக்கு ஏற்படும் நிழல் தோசங்கள் பற்றிப் பேசும் பால தோசங்கள் ; குழந்தைகளுக்கு அவ்வக்காலத்தில் கட்ட வேண்டிய காப்புக் கவசங்கள் பற்றிப் பேசும் மந்திர. மாந்திரீகச் சுவடிகள் போன்றன சிறு சிறு நூல்களாக உரைநடையில் காணக்கிடக்கின்றன.

பெண் மருத்துவம்

பெண்களுக்கான கற்பத் தருவாயில் ஏற்படும் கோளாறுகள். மகப்பேற்றின் போது ஏற்படும் சிக்கல்களுக்கான தீர்வுகள். வயிற்றில் குழந்தை சிதைந்தோ. இறந்தோ பிறந்தால் அதற்கான வெளியேற்று முறைகள். மார்பகம் தொடர்பான நோய்களுக்கான பரிகாரங்கள். மாதவிடாய் தொடர்பான நோய்கள். சூதக நோய்கள். பூப்பெய்துவதில் ஏற்படும் சிக்கல்களும் அதற்கான தீர்வுகளும். பெண்களின் அழகு சாதனப் பொருட்களான கண் மை. உடற்பூச்சுக்கான பஸ்பங்கள். எண்ணெய் ஆகியவை பற்றியும் பல நூல்கள் விரிந்த அளவில் பேசுவதை அறியலாம்.

மந்திரங்கள்

எண்ணியது எண்ணியவாறு நடைபெற ஒரு போக்குச் சிந்தனையோடு ஓர் இறைவனை மனத்தில் எண்ணியபடி அவ்விறைவனுக்கு உரிய மூலமந்திரத்தைச் சொல்லப்பட்ட அளவு அஃதாவது நூற்றியெட்டு. ஆயிரம். இலட்சம் என்ற கணக்கில் உருச் செய்தல் என்பதனையே மந்திர உச்சாடனம் என்பர். அவ்வகையில் குழந்தைகளுக்கான தோஷங்களை விலக்கும் மந்திரங்கள். அட்டமாச் சித்தியைப் பெற்றுத் தரும் வாலை மந்திரங்கள். தெய்வங்களைக் கட்டுப்படுத்தும் கட்டு மந்திரங்கள். பில்லி சூனியம் செய்து பிறரை வருத்தவும் மற்றும் பேய் பிசாசுகளை விரட்டவோ அல்லது வசீகரிக்கவோ பயன்படும் ஏவல் மந்திரங்கள். விஷக்கடிகளைக் கட்டுப்படுத்த அல்லது விலக்க அல்லது விட உயரினங்கள் நம்மை அண்டாமல் தடுக்கப் பயன்படும் கவச மந்திரங்கள் போன்ற பல்வேறு நிலைகளில் மந்திரங்கள் காணப்படுகின்றன. இவை இத்தனையுமே மருத்துவத் துறையோடு இணைத்தும் பேசப்படுகின்றன. தட்சிணாமூர்த்தி கடைக்காண்டம். தன்வந்திரி கருக்கிடை.

விஷவைத்தியமும் மந்திரமும். வைசூரிக்கு மருந்து போன்ற இந்நிறுவனத் தாள்சுவடிகளை இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

மாந்திரிகம்

மருந்து. இறைவழிபாடு இவையோடு நோயைப் போக்க மாந்திரிகத்தையும் நம்பினர். அதன் பயனாக மாந்திரிகம் என்ற கலை தமிழகத்தில் தழைத்தோங்கியே இருந்தது. கண்கட்டு வித்தை. பில்லி சூனியம். கண்ணேறு. காணாக்கடி. மரணம். தம்பனம் போன்ற கர்ம காண்ட வித்தைகள் ஆகியவற்றால் ஏற்படும் உடல் உபாதைகளைத் தீர்க்க மாந்திரிகத்தையே அன்றைய சமுகம் நம்பியது. அவ்வகையில் மாந்திரிகத்திற்கான வழிபாட்டு முறைகள். படையல் வகைகள். சடங்குகள் முதலியன பல்வேறு நூல்களாக எழுந்தன. இத்துறையில் சல்லியம் என்ற நூல் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. விஷபேதி வைத்தியம். சாப நிவர்த்தி தீட்சை. நட்சத்திரக் காண்டம். விஷவைத்தியமும் மந்திரமும். வைத்தியப் பலதிரட்டு போன்ற தாள்சுவடிகள் இது தொடர்பானவையாக அமைந்துள்ளதைக் காணலாம்.

சோதிடம்

சோதிடக்கலை என்பது இந்நாட்டின் பழம்பெரும் கலைகளில் ஒன்றாகும். கோள்கள் ஒவ்வொன்றும் மனித உடலில் ஒவ்வோர் உறுப்புகளுடனும் தொடர்புடையதாகக் கருதுவது இக்கலை. ஆகவே நோய்கள் ஏற்படுவதற்கும் அகாலமரணம் எய்துவதற்கும். தீரா நோய்கள் ஏற்படுவதற்கும் கிரகக் கோளாறுகள் தான் காரணம் என இக்கலை வலியுறுத்தும். ஒருவனை நோய் வந்தணுகுவதற்குச் சோதிடப் பிடிதம் என்று கூறும் சோதிட சாத்திரம். ஒருவன் பிறக்கும் போது சூரியன் எந்த இராசியில் இருக்கின்றதோ அந்த இராசியின் ஆதிக்கத்தைக் கொண்டும் நோய் ஏற்படும். காட்டாகக் கன்னி இராசியில் சூரியன் இருக்கும் போது பிறப்பவர்களுக்குக் குடல் நோயும் மேடராசியில் சூரியன் இருக்கும் போது பிறப்பவருக்குத் தொண்டை நோயும் உண்டாகும்.

கட்டுதல். பற்று. ஒற்றடம். பூச்சு. வேது. களிம்பு ஊதல் முதலிய புற மருந்துகள் 32இல் 'அட்டை விடல்' என்பதும் ஒன்றாகும். கெட்ட நீர். சீழ் மற்றும் அசுத்த இரத்தத்தை வெளியேற்ற அட்டையை விடுதல் அக்காலச் சித்தமருத்துவர் மேற்கொண்ட ஒரு முறை. இதுபற்றி மருத்துவ நூல் ஒன்று ஓர் அட்டவணைக் குறிப்பைத் தருகிறது. அதனை ஈண்டுக் காண்போம். பிரதமை - பெருவிரல்: துதியை உள்ளங்கால். திரிதியை முழங்கால் சதுர்த்தி - தொடை பஞ்சமி - குய்யம் சஷ்டி - நாடி சப்தமி - தனம் அஷ்டமி - சரம் நவமி - கழுத்து தசமி - அந்தரம் ஏகாதசி - நாக்கு சாளதசி - நெற்றி சதுர்த்தி - பிடரி பூரணம் - உச்சி எனக் குணபாடம் என்ற மருத்துவ நூல் விளக்குகிறது.

நாடியைப்பற்றிக் கூறும்போது திங்கள். புதன். வெள்ளி - வாதம்: சனி. ஞாயிறு. செவ்வாய் - பித்தம்: வியாழன் சுக்கிலபட்சம் - வாதம்: வியாழன் கிருஷ்ணபட்சம் சிலேத்துமம் என நாடி நூல் கூறுகிறது.

ரேவதி - பரணி. சுவாதி . ஆயில்யம் போன்ற நட்சத்திரத்தில் சிலேத்துவ நாடி மிகுந்து காணப்பட்டால் அந்நோயாளி மரணம் எய்துவார் எனக்கூறும். இதே போன்று 27 நட்சத்திரத்திற்கும் பலன் உண்டு. பாம்புக்கடி பற்றிப் பேசும் போது.

செவ்வாய் தனது பகையான சந்திரனது வீட்டில் (எட்டாம் இடத்தில் மேலாதிக்கம் பெற்றுச் சந்திரன் 7ஆம் வீட்டில் இருந்தால் செவ்வாய்க்கு உரியவர்) அதாவது செவ்வாய் உச்சநிலையில் இருந்த போது பிறந்தவர் பாம்பு கடித்தும் சாவர் எனச் சோதிட நூல் கூறுகின்றது. அதே போன்று புதன் அல்லது வெள்ளி உச்சநிலையில் இருக்கும்போது பிறந்தவர் ஏதாவது ஒருவகை நஞ்சால் மரணம் எய்துவர் எனத் தீர்மானிக்கின்றன சோதிட நூல்கள். கிரகணம் அன்று பாம்பு கடித்தால் அவனை இறைவன்கூடக் காப்பாற்றுவது கடினம் எனச் சித்தராரூடம் கூறும்.

வைத்தியம்

வைத்திய நூல் என்பதற்கும் அனுபவ வைத்தியம் என்பதற்கும் வேறுபாடுகள் உண்டு. நோய்வாய்ப்பட்ட ஒருவருக்கு மருத்துவம் செய்ய வேண்டிய மருத்துவரை நாடும் பொழுது மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையே நடக்கும் உரையாடலை வைத்து இன்ன நோய் இவருக்கு என்பதனை அவர் அறிந்து கொண்டு அந்நோய்க்கு அம்மருத்துவர் தரும் மருந்தினைத் தெரிந்து கொண்டு, அதே நோய் மற்றொருவருக்கும் வருங்காலத்து இவர் அந்நோயாளிக்கு அறிவுரை தரும்போது அனுபவ வைத்தியராகிறார். இதுவன்றி முன்னர்ச் சொன்னது போலக் கற்றுத் துறைபோகிய மருத்துவரிடமோ பாரம்பரிய மருத்துவரிடமோ. பணியிற் சேர்ந்து பெற்றுக் கொண்ட பட்டறிவைக் கொண்டு தம் ஆசான்கள் தொடர்பு இல்லாத பிற ஊரில் மருத்துவம் செய்பவரும் அனுபவ வைத்தியராகிறார்.

பொதுவாகத் தாயை மருத்துவராகக் கருதுவது மரபு. இதனைத் தாய்க்கு ஒழித்த சூல் இல்லை என்ற ஒரு மரபுத் தொடர் உறுதி செய்கிறது. ஒரு குடும்பத்தில் அன்னையானவள் குடும்ப உறுப்பினர்களின் உடல்நலத்தில் அக்கறை கொண்டவளாக விளங்குவதால் அவர்களின் விருப்பு வெறுப்புக்கு உணவு செய்வதை விட அவர்கள் உடல் ஆரோக்கியம் கருதியே உணவு சமைப்பது இயல்பு. அவ்வகையில் மருத்துவப் பொருள்களாக விளங்கும் உணவுக்குப் பயன்படும் மிளகு. சீரகம், பூண்டு. பெருங்காயம் போன்ற மூலிகைப் பொருள்களும் கீரை. கொடியில் விளையும் காய்கள். மணத்தக்காளி போன்ற காய்கறிகளை உணவிற் சேர்த்துச் செய்வதன் மூலம் குடும்பத்தின் பொது உடல் நலத்தைப் பேணுகிறாள் எனலாம். இதுவன்றிச் சிறுசிறு நோய்களுக்குக் குறிப்பாகத் தலைவலி. உடல்வலி. வாந்தி. பேதி. மயக்கம். இருமல். சுரம் போன்றவற்றிற்கான கசாயம். வேதுபிடித்தல். தயிலம். உணவாகத் தரும் மருந்துகள் போன்றவற்றைத் தாய்வழியாக அறிந்து வைத்திருப்பர். இந்த அனுபவமுறையை நாம் பாட்டி வைத்தியம் என இன்றும் சிறப்பித்துக் கூறுகிறோம் அவ்வகையில் அனுபவ வைத்தியத்தின் வகைபாடுகள் பலவகையாகப் பிரிந்து செல்வதைக் காணலாம்.

இங்குக் குறிப்பிடப்படும் வைத்தியம் என்பது தாள்சுவடி தயாரித்தவர்கள் தாங்கள் பார்த்து எழுதிய மூலப்படியில் தலைப்பு இல்லாது இருந்த காரணத்தால். சொல்லப்பட்ட செய்திகளைத் தொகுத்து வைத்திய நூல் எனத் தலைப்பிட்டனரா அல்லது பல்வேறு நோய்களுக்கான மருந்துகள் கூறப்படுவதால் இதனை வைத்திய நூல் என்று கூறினரா? என்ற விவரங்களை அறிய முடியவில்லை ஆயினும் இந்த வைத்தியநூல் என்ற தலைப்பில் பல்வேறு விதமான தகவல்களைக் கொண்ட நூல்கள் காணப்படுகின்றன.

அனுபவ வைத்தியம் என்பதில் பொதுநிலையில் மருத்துவம் பேசப்பட்டதே ஒழிய வைத்தியம் என்ற தலைப்பில் பகுப்பு முறையும் பேசப்பட்டுள்ளது என்பது ஈண்டுக் கவனிக்க வேண்டிய ஒன்றாகும். வைத்திய அகராதி என்றும். வைத்திய கிரந்தம் என்றும். வைத்தியத் திரட்டு என்றும். வைத்திய நூல் என்றும். வைத்திய குணவாகடம். வைத்திய முறைகள் என்றும் பல்வேறு நிலைகளில் அமைகின்றன. இவையன்றி வைத்தியமும் மந்திரமும் வைத்திய மூலிகை. வைத்திய விசயம். நாடி நிதானம். வைத்திய வசனம். வைத்திய சதகம் போன்ற தனி நூல்களும் காணக்கிடக்கின்றன இவற்றுள் சில நூல்களைப் பற்றி இப்பகுதி விளக்குகிறது.

வைத்திய அகராதி

இந்நூல் 50 பக்கங்களைக் கொண்டு முழுமையானதாக விளங்குகிறது. ஆனால் தொகுத்த ஆசிரியர் பெயர் இன்னதென்று தெரியவில்லை. மருத்துவம் தொடர்பான மூலிகைகள். மருந்துகள். துணை மருந்துகள். நோய்ப் பெயர் விளக்கங்கள். பத்தியங்கள் போன்ற பலதரப்பட்ட செய்திகள் ஈண்டுச் சொல்லப்பட்டுள்ளன. பொதுவாக அகராதி. இலக்கியம் போன்ற செறிவுமிகுந்த செய்திகளுக்கே தயாரிக்கப்படுகிறது. ஈண்டுக் காணப்படும் அகராதி சித்தர்கள் சொன்ன நூல்கள் வடிவான மருத்துவச் செய்திகளுக்கும். உரைநடை வடிவாகச் சொன்ன அனுபவ வைத்தியச் செய்திகளுக்கும் நடைமுறையில் பழகிவரும் மருத்துவம் தொடர்பான வழக்காறுகளுக்கும் பயன்படும்படியாக இவ்வகராதிகள் விளங்குகின்றன. பொதுவாக வைத்திய அகராதி என்ற பெயரில் இந்நூலகத்தில் காணப்படுவது போலப் பிற நிறுவனங்களில் காணக்கூடும். அவற்றையெல்லாம் தொகுத்து. கூறியது கூறல் தவிர்த்துப் பெரிய அளவில் அகராதிகளாக வெளிவருமாயின் சித்த மருத்துவத் துறைக்குப் பெரும் பயன் அளிக்கும்.

வைத்தியக் கிரந்தம்

இந்நூல் மல்லே கவுண்டன் பாளையம் வாத்தியார் என்ற மருத்துவரின் மருத்துவ முறைகள் பற்றியும். அவர் பல்வேறு நோய்களுக்கு எந்தெந்த விதமான மருந்துகளைத் தந்தார் என்பதுபற்றி நோட்டுப் புத்தகத்தில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 150 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிரதியாகத் தெரிகின்றது. இதில் காணும் சில மருத்துவ முறைகள் எல்லோர்க்கும் பயன்படும்படியாக அமைந்துள்ளன. சில சிறப்பான செய்திகள் வருமாறு :

1. நிக்காத பேதிக்கு மோரில் எலும்பிச்சம் பழம் பிஞ்சு கொடுக்கவும்.
2. ஆறாத புண்ணுக்கு அரிதாரம் போடவும்
3. பனையது கனியைச் சுட்டுப் பொடித்து மோரில் கொடுக்கத் தீராத பேதிகளெல்லாம் தீரும்
4. கடுகு. முள்ளிக்காய் தீ வளர்த்து வெள்ளாட்டுக் கோமியத்தில் 3 நாள் கொடுக்கவும் (1படி கோமியம்) கார்ப்பு. புளிப்பு தவிர்க்கவும்.
5. தென்னை மரத்தினுடைய இளம்வேர். பாக்கு மரத்தினுடைய இளம் வேர். கரும்பனையின் இளம் வேர். எலிப்புழுக்கை. சிறுநெருஞ்சில். வெள்ளிரிவிதை. சமன்காடித் தண்ணீரில் அரைத்து நாடியில் தேய்த்தால்

உடன் மூத்திரம் விடும்.

6. திப்பிலி, ஏலம், கருஞ்சீரகம், நற்சீரகம் இந்நான்கும் சமன் அளவு பொடித்துக் கோவைக் காயைப் பிளந்து உள் விதைகளை எடுத்துவிட்டு, அதில் வைத்து மூடி சீலை சுத்தி, செம்மண் கட்டி அனலில் புடமிட்டுப் பிட்டெடுத்துத்தேன், சக்கரை, எலுமிச்சைச் சாறு, கடுக்காய்ச் சாறு, முலைப்பால், மோர், வேப்பஞ்சார், தும்பைச்சாறு, துத்திச்சாறு இதுவெல்லாம் பாங்கு. இதுகளில் கொடுக்கவும். அந்திரசுரம், தாபசுரம், அக்கினிக்காய்ச்சல், உப்பிசம், பித்துப் பேசுகிறது, குளிர் நடுக்குதல், காமாலை, வயித்துவலி எல்லா வியாதிகளுக்கும் பாங்குடனே கொடுக்கத் தீரும்

அனுபவ வைத்தியம் வசனம் (ஆர். 6348)

இது 54 பக்கங்களைக் கொண்டது. காதில் கீழ் பாய்தலுக்கு மருந்து, உடல் வாதத்திற்கு மருந்து, வயிற்று வியாதிக்கு மருந்து, மண்டை சூலைத் தயிலம் தயாரித்தல், கெர்ப்ப விப்புருதி, கல்லெரிப்பு, வாய்வுக்கு மாத்திரை இப்படிப் பல்வேறு செய்திகளைக் குறித்து வரும் இந்நூலில் இன்று மக்களிடையே பொதுவாகக் காணப்படும் மூலம் என்ற நோய்க்கு ஒரு அருமையான எளிய கைமருந்தை இந்நூல் கூறுகிறது அது பற்றிய செய்தி வருமாறு .

மூலம் என்பதை உள்மூலம், வெளிமூலம் என இரு வகையாகப் பகுத்துக் கூறுவர் மருத்துவர் இன்றைய அலோபதி மருத்துவம் அறுவை சிகிச்சை அல்லது கதிர்வீச்சு சிகிச்சை வழியாகவே இதற்கு மருத்துவம் செய்கிறது. பல்வேறு அனுபவ சித்த வைத்தியர்கள் தங்களுக்குத் தெரிந்த முறையில் இம்மருத்துவ முறையை வாணிகமாக்கிச் செய்து வருகின்றனர். இந்நிலையில் இன்றுவரை இந்நோய் தீராத அல்லது தீர்க்க முடியாத நோயாகவே விளங்கி வருகிறது. ஆனால் இந்நூலில் காணும் மருந்து மற்றும் மருத்துவமுறை உணவு மூலமாகவே நோயைத் தீர்வு செய்து அம்மூலமானது தானே விழுந்துவிடும்படியாகச் செய்ய முடியும் எனக் கூறுகிறது. மருந்து விவரம் வருமாறு :

> "விடைக் கோழியைக் கொன்று மயிரைப் பறித்துப் போட்டுத் தோலுமுறித்துப் போட்டு, குடலும் காலும் தலையும் நீக்கி கடைச்சுக்கு, இந்துப்பு, பெருங்காயம், கடுகு, வெள்ளுள்ளி, மிளகு, சாரணைவேர், நற்சீரகம் இவற்றையெல்லாம் சேர்த்துக் கோழி வயிற்றைப் பிளந்து அதன் உள்ளே வைத்து கோழி வயிற்றிலும் மேலும் பூசி, பச்சையாய் இருக்கும் கள்ளி மரத்தை வெட்டி பத்தலாகத் தோண்டி அதனுள்ளே வைத்துக் கட்டி எருவடக்கி நன்றாய்ச் சுட்டு எடுத்து நிழலில் உலர்த்தி உலர்ந்ததைப் பொடி செய்து வைத்துக் கொண்டு நாள் ஒன்றுக்கு விரற்கடிப் பருமானங் கொள்ளவும் மூலம் விபம் தோதல் மாறும்".

இப்படி அன்றாடம் கிடைக்கும் பொருளைக் கொண்டு கடுமையான உடல் உபாதை ஏற்படுத்தும் மூலத்திற்கு மருந்து எத்தனை எளிமையாகச் சொல்லப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

அனுபவ வைத்தியம் (ஆர். 5630) என்ற மற்றொரு நூலில் குட்டத்திற்குச் சூரணம். படர் தாமரைக்குப் பூச்சி மருந்து. நாய்க்கடிக்கு மருந்து. மாலைக் கண்ணுக்கு. மண்டைக் கரப்பானுக்குத் தைலம். பித்தத்துக்குத் தைலம். எலிக்கடிக்கு எண்ணெய். விரை வீக்கத்திற்குப் பத்து போன்ற ஓர் இல்லத்திற்குத் தேவையான பயனுள்ள மருந்துகளும். மருத்துவ வகைகளும் கூறப்பெற்றுள்ளன.

முடிவுரை

மருத்துவம் என்பது அக்காலம் தொட்டு இன்று வரை கல்விசார் மருத்துவம். அனுபவ வைத்தியம் என இரு பெரும் பிரிவுகளில் இருந்தாலும் எழுத்து வகையாகப் பார்க்கும் போது. வைத்திய நூல் என்ற ஒருவகையும் இருப்பதை அறிய முடிந்தது.

நாட்டுப்புற வியலுக்கு இன்று சமுகம் நல்ல வரவேற்புத் தந்து வருகிறது. சித்தர் சொன்ன சித்த மருத்துவமும் பட்டறிவாளர்கள் சொன்ன அனுபவ வைத்தியமும் நாட்டுப்புற மருத்துவக் கலையே எனத் துணிந்து கூறலாம்.

நாட்டுப்புறக் கலைக்கு ரிஷிமூலம் தெரியாது. அனுபவ வைத்தியத்திற்கு மூலாதாரம் இருந்தாலும் இன்று பெரும்பாலும் கிடைக்கப் பெறுவதில்லை. எது எவ்வாறாயினும் அனுபவ வைத்தியம். வைத்தியம். வைத்திய முறை. வைத்தியம் வசனம். வைத்தியம் பலதிரட்டு. வைத்திய நூல். வைத்திய விஷயம் என்ற அமைப்பில் காணும் மருத்துவ நூல்கள். அவை கூறும் மருத்துவ முறைகள் மற்றும் மருத்துவச் செய்திகள் போன்றன மக்கள் மன்றத்தைச் சென்றடைந்தால் இன்றைய நாகரிக உலகில் வாழும் இளந்தலைமுறையினர் தம் முன்னோர்களின் மருத்துவத் துறை சார்ந்த நுண்மாண் நுழைபுலத்தைக் கண்டுணர வாய்ப்பாகும்.

அறிவியல் கோட்பாடுகள். தகவல் தொடர்புக் கோட்பாடுகள் என்று உலகம் வளர்ந்து சுருங்கி விட்ட நிலையில் இம் மண்ணின் மருத்துவம் மீட்டுருவாக்கம் செய்யப்படவேண்டியது இன்றியமையாதது. அதற்கு இதுபோன்ற தாள்சுவடிகள் அச்சுருவாக வெளிக் கொணரப்பட வேண்டும்.

□

த. கலா
ஆய்வாளர்
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

செங்கற்பட்டு ஆவணங்கள் நில அளவு

நாடு நல்லநிலையில் இருக்கவேண்டுமாயின் அந்த நாட்டின் சுற்றுச் சூழல் நில அமைப்பு நிர்வாகத்திறமை தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். இந்த அடிப்படைகளை வைத்தே ஒரு நாட்டின் வளர்ச்சியைக் கணிக்கமுடியும். ஒரு மனிதன் உண்ணும் உணவு உடுக்கும் உடை பயன்படுத்தும் பொருள் அனைத்தையும் அவனுக்குக் கொடுப்பது நிலமே. அதனால் நிலங்களைத் தரம் பிரிப்பதும் பராமரிப்பதும் தேவையான ஒன்றாகும். இதனைக் கி பி. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் செங்கற்பட்டு மாவட்டம் முழுவதும் முறையாக அளந்துள்ளதை ஆவணங்களின் வழியாக அறியமுடிகிறது.

கி. பி. 1743இல் ஏற்பட்ட கர்நாடகப் போரில் ஆங்கிலேயர்கள் நவாப்பிற்கு உதவி செய்தமையால் செங்கற்பட்டு மாவட்டம் முகமது அலியால் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டது. செயின்ட். ஜார்ஜ் கோட்டையைச் சுற்றியுள்ள இப்பகுதிகள் ஆங்கிலேயருக்குப் போர் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்ந்தமையால் இப்பகுதியைத் தம் முழுமையான ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வருவதற்கு முன்பாக இப்பகுதியின் மதிப்பையும் வருவாயையும் அறியும் பொருட்டு ஆங்கிலேயர்கள் நில அளவை தொடர்பான விரிவான கணக்கெடுப்பு ஒன்றைத் தாமஸ் பெர்னார்டு என்பவர் தலைமையில் மேற்கொண்டனர் பெர்னார்டு கணக்கெடுப்பின் வாயிலாகப் பெறப்பட்ட கணக்கு சென்னை ஆவணக் காப்பகத்தில் Board of Revenue Miscellaneous Series என்னும் பிரிவில் 40 தொகுதிகளும் Chinglepet District Record Series எனும் பிரிவில் 10 தொகுதிகளும் ஆக 50 தொகுதிகள் தாள் சுவடிகளாக உள்ளன இதன் மூல ஆவணங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறையில் ஓலைச் சுருணைகளாக உள்ளன. இக்கணக்கெடுப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட மூலச் சான்றுகள் செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள் ஆகும்.

ஓலை ஆவணங்கள்

இம்மாவட்ட ஆவணங்கள் கி பி. 1760 - 1860 வரையிலான காலத்தைச் சேர்ந்ததாகும். இந்த ஆவணங்கள் வழி ஒவ்வொரு கிராமத்தின் அமைப்பு நிலப் பயன்பாடு நில அளவு சமூகப் பொருளாதார நிலை. நிலத் தீர்வை முதலியவற்றை

அறிந்து கொள்ள முடிகிறது. இந்த ஆவணங்களைப்பற்றி பெர்னார்டு என்பவர் செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்த கவுன்சிலின் ஆளுநருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுவதாவது : நாட்டின் நிலை மற்றும் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றிய ஆய்வினை மேற்கொள்ள ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஆவணங்கள் எனக்கு உதவின. இவ் ஆவணங்கள் நிலப் பிரிவு, நிலப் பயன்பாடு, மொத்தக் குடியிருப்பு, மக்களின் உடைமை, சிறப்புரிமைகள், கால்நடைகள்பற்றிய வருவாய்க் கணக்குகள் ஆகும். ஒவ்வொரு கிராமத்தின் மொத்த மகசூலும் தோஸ்த் அலி காலத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட தீர்வை விழுக்காட்டின்படிப் பிரிக்கப்பட்டதைப் பற்றிக் கூறுகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார். நிலங்களின் தரத்தைப்பற்றித் தெரிந்து கொள்வதற்காக நிலங்கள் தரம் வாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தரம் பிரிக்கப்பட்ட நில அளவை ஆவணங்களைப்பற்றிக் கூறும் ஏட்டிற்குத் 'தரப்படி வகை ஏடு' என்று பெயர். ஒவ்வொரு கிராமத்தைப்பற்றிய செய்திகளும் தரப்படி வகை ஏட்டுடன் தொடங்குகிறது. நிலங்களை 24 அடி கொண்ட கோலால் 100 குழி கொண்டது ஒரு காணி என அளந்துள்ளனர். இந்த ஆய்வானது செங்கற்பட்டு மாவட்டத்தில் நில அளவை எவ்வாறு நடைபெற்றது என்பதைப் 'புதுப்பாக்கம்' என்ற ஊரை முன்மாதிரியாகக் கொண்டு விளக்க முற்படுகிறது.

புதுப்பாக்கம்

புதுப்பாக்கம் செங்கல்பட்டு மாவட்டத்தில் கோவளம் சீமையில் தையூர் மாகாணத்தில் அமைந்துள்ளது. 1762ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 30ஆந்தேதி நந்தன வருடம் புரட்டாசி மாதம் 18ஆந்தேதி இஞ்சிநீர் பாரநிட்டு ராசஸ்ரீ செங்கல்வராய முதலியார் அவர்கள் திட்டப்படிக்கு தரப்படி வகையேடு 24 அடிக்கோலால் குழி 100க்குக் காணி 1 ஆக நஞ்சை காணி 281 புஞ்சை காணி 799க்கு ஆக 1080 காணி நிலத்தில் புதுப்பாக்கம் அமைந்துள்ளது. நிலங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை : 1. புறம்போக்கு நிலம் 2. மானிய நிலம் 3. வாரப்பற்று நிலம் ஆகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டே நில அளவு நடத்தப்பட்டுள்ளது.

புறம்போக்கு நிலங்கள்

கோயில், குளம், குட்டை, தாங்கல், ஏரி, மலை, மடு களத்து மேடு, மந்தை வெளி, சாவடிமேடு, கிராம நத்தம், சேரி நத்தம், ருத்ரபூமி இவைகளை உள்ளடக்கி இருப்பதே புறம்போக்கு நிலப்பகுதியாகும். இந்நிலப் பகுதிகள் அமைந்துள்ள இடங்களைத் தெரு திசை விளக்கத்துடன் கூறப்பட்டுள்ளது. புறம்போக்கு நிலத்தில் முதலில் குறிப்பிடப்படுவது ஊரின் நடுவில் அமைந்துள்ள கோயில்கள் ஆகும்.

		எண்		குழி
1.	நடுத்தெரு புழுதி விநாயகர் கோயில்	1	-	10
2.	நடுத்தெரு பெருமாள் கோயில்	1	-	30
3.	வடக்கு அகத்தீசுவரன் கோயில்	1	-	160
4.	வடக்கு அம்மை கோயில்	1	-	20
5.	வடமேற்கு பிடாரி அலங்காரி கோயில்	1	-	60

6.	வடக்கு பொன்னியம்மை கோயில்	1	-	50
7.	வடக்கு பறச்சேரி அம்மை கோயில்	1	-	25
	ஆக கோயில்	7	-	300

இந்த ஊரில் உள்ள பெரிய கோயில் அகத்தீசுவரன் கோயிலாகும். மற்றக் கோயில்களை விட அதிகப் பரப்பளவில் இக்கோயில் அமைந்துள்ளது. இந்த ஊரில் அம்மன் வழிபாடு இருந்துள்ளது. அதனால்தான் அம்மன் கோயிலின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது.

குளம் மூன்று 12 காணி நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

		எண்		காணி
1.	தெற்கு குளம்	1	-	7
2	வடமேற்கு செட்டிகுளம்	1	-	3½
3.	மேற்கு மலையண்டை குளம்	1	-	1½
		3		12

குளங்களில் பெரியகுளமாகத் தெற்குக் குளம் 7 காணி நிலத்தில் அமைந்துள்ளது. பொதுப் பயன்பாட்டிற்காக இந்தக் குளம் இருந்திருக்கலாம்.

குட்டை கேணி 20- ம் 10 காணி நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

		எண்		காணி
1.	வடக்கு பொன்னி குட்டை	1	-	¼
2.	வடக்கு ஈசுவரன் குட்டை	1	-	¼
3.	மேற்கு பிடாரி குட்டை	1	-	¼
4.	வடக்கு அம்மை குட்டை	1	-	¼
5.	வடக்கு தாசி குட்டை	1	-	¼
6.	வடக்கு வேலன் குட்டை	1	-	¼
7	வடசேரி தாங்கல் குட்டை	1	-	3
8.	நயினான் குட்டை	1	-	¼
9.	கிழக்கு சாட்டைக் கேணி குட்டை	1	-	¼
10.	கணக்கு குட்டை	1	-	1
11.	பூர்மண் குட்டை	1	-	¼
12.	கிழக்கு கிடாவெட்டிப் பள்ளம்	1	-	¼
13	கிழகக்கு கரும்படி குட்டை	1	-	¼
14	நயினான் குட்டை	1	-	¼
15	கிழக்கு வண்ணான் கேணி	1	-	½
16	கிழக்கு விழல் குட்டை	1	-	¼
17.	கிழக்கு எல்லைக் குட்டை	1	-	¼
18.	கிழக்கு குடுமி குட்டை	1	-	¼

19.	கிழக்கு நாவிதன் குட்டை	1	-	¼
20.	மேற்கு செவன் தாங்கல் குட்டை	1	-	1½
		20	-	10

20 குட்டை கேணிகளில் மூன்று மட்டுமே அதிகப் பரப்பளவில் அமைந்துள்ளது. இவ்வூரில் குளத்தை விடக் குட்டைகளே மிகுதியாகக் காணப்படுகின்றன. ஐந்து குட்டைகள் கோயில்களின் பெயர்களில் அமைந்துள்ளன. இக்குட்டைகளைக் கோயில் பயன்பாட்டிற்கும் கோயில் சார்ந்த அமைப்புகளுக்கும் பயன்படுத்தி இருக்கலாம். வடசேரி தாங்கல் குட்டை 3 காணி நிலத்தில் உள்ளது சேரி நத்தத்தில் உள்ள மக்களின் பயன்பாட்டிற்காக இந்தக் குட்டை இருந்திருக்கலாம். 7 குட்டைகள் கிராம மிராசுகளின் பெயர்களில் அமைந்துள்ளன. இக்குட்டைகளை இவர்கள் மட்டுமே பயன்படுத்தி இருக்கலாம். 7 குட்டைகள் பொதுப் பெயர்களைக் கொண்டுள்ளன. இவைகள் பொதுப் பயன்பாட்டிற்காக இருந்திருக்கக் கூடும்.

ஏரி 1உம் தாங்கல் 2உம் உள்ளன. 150 காணி நிலப்பரப்பில் இவை அமைந்துள்ளன.

		எண்		காணி
1.	மேற்கு ஏரி	1	-	100
2.	தென்மேற்குத் தாங்கல்	1	-	10
3.	கிழக்குத் தாங்கல்	1	-	40
		3	-	150

இந்த மூன்று அமைப்புகளும் நீர்ப் பாசனத்திற்காகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.

தோப்புகள் மூன்று உள்ளன. இவை மூன்றும் பனந்தோப்புகள் ஆகும்.

		எண்		காணி
1.	தெற்குப் பனந்தோப்பு	1	-	10
2.	இளந்தோப்பு	1	-	10
3.	இளந்தோப்பு	1	-	5
		3	-	25

இந்த ஊரில் மற்றத் தோப்புகள் இருந்ததற்கான செய்திகள் ஆவணத்தில் இல்லை. ஆனால் பனந்தோப்புகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. வருவாய்க்கு உரிய தோப்பாகப் பனந் தோப்பு இருந்துள்ளது.

களத்து மேடு 2 - நாலு காணி நிலத்தில் அமைந்துள்ளது.

		எண்		காணி
1.	கிழக்குக் களத்து மேடு	1	-	1
2.	வடக்குக் களத்து மேடு	1	-	3
		2	-	4

களத்துமேடு என்பது அறுவடையான தானியங்களை அடித்துச் சுத்தப் படுத்துவதற்காக அமைந்த இடமாகும். 3 காணி நிலப்பரப்பில் இந்த ஊரின் வடக்குப் பகுதியில் களத்துமேடு அமைந்துள்ளது. ஆகையால் இப்பகுதியில் விளைநிலங்கள் அதிகமாக இருந்துள்ளன.

மலை கலிங்கல் ஓடை 82 காணி நிலப்பரப்பில் அமைந்துள்ளது. ஊரின் மேற்குப் பகுதியில் 80 காணி நிலப்பரப்பில் மலை இருந்துள்ளது. ஊரின் வடக்குப் பகுதியில் 2 காணி நிலப்பரப்பில் கலிங்கல் ஓடை காணப்பட்டுள்ளது. கலிங்கல் என்பது ஏரி. தாங்கல். ஆறு போன்ற பெரிய நீர்ப்பாசன அமைப்புகளில் தண்ணீரைச் சீராக மற்ற இடங்களுக்குச் செல்ல வைக்கும் அமைப்பாகும். இந்த அமைப்புகளுக்கு அருகில் ஓடைகள் இருக்கும். இதற்குக் கலிங்கல் ஓடை என்று பெயர். இந்த ஊரில் முறை வைத்து நீர்ப்பாசனம் செய்யப்பட்டுள்ளது.

கிராம நத்தம்

கிராம நத்தத்தில் 30 வீடுகள் 35 காணி நிலப்பரப்பில் அமைந்துள்ளன.

		வீடு எண்	-	வீடு குழி	-	பிழக்கடை குழி
1.	விஷ்ணு பிராமணன் வீடு	1	-	4	-	96
2.	சீர்கருணர் வீடு	4	-	70	-	30
3.	ஏகாம்பரம் வீடு	1	-	15	-	85
4	முத்துக்குமாரப்பிள்ளை வீடு	0	-	10	-	90
5.	தியாகப்பய்யர் வீடு	1	-	15	-	85
6.	சீர்க்கருணக்கப்பிள்ளை வீடு	1	-	30	-	70
7	தச்சன் வீடு	4	-	70	-	330
8.	கருமான் வீடு	1	-	4	-	46
9.	குடுமி வீடு	0	-	10	-	40
10.	குசவன் வீடு	1	-	15	-	60
11	நாவிதன் வீடு	1	-	15	-	45
12.	வண்ணான் வீடு	1	-	2	-	48
13.	வடமலைச் செட்டி வீடு	1	-	10	-	15
14.	சாணர் குமரன் வீடு	1	-	10	-	100
15.	சாணாக் காதன் வீடு	1	-	4	-	16
16	சாணர் முனியன் வீடு	1	-	2	-	18
17	சாணர் வீடு	3	-	16	-	134
18.	பிள்ளையன் பயண்டி வீடு	1	-	10	-	80
19.	வெறியன் வீடு	1	-	15		(விடுபட்டுள்ளது)

20.	நல வெள்ளாழர், தாயப்பன் வீடு	0 - 20 - 80	
21.	சின்ன தாயப்பன் வீடு	0 - 30 - 70	
22.	ஏகாம்பரம் வீடு	0 - 30 - 70	
23.	வெங்கடேசன் வீடு	0 - 50 - 120	
24.	தம்பியனன், பொன்னன் வீடு	0 - 40 - 55	
25.	வேட்டக்காரன் வீடு	0 - 2 - 25	
	ஆக வீடு	25 - 368 - 1532 = 19 காணி	

ஆக வீடு 25க்கு வீட்டுக் குழி 368 - பிழக்கடைக் குழி 1532 ஆக குழி 1900 ஆக 19 காணி நிலமாகும். இந்த ஊரில் சாணர் வீடுகளும் நலவெள்ளாழர் வீடுகளும் அதிகமாக உள்ளன. வீடுகளின் அளவு யாருக்கும் மிக அதிகமாகவோ மிகக் குறைவாகவோ இல்லை என்பது தெரிய வருகிறது.

பறையர் வீடு 10 உள்ளன.

		வீடு எண்	வீடு குழி	பிழக்கடை குழி
1.	தலையாரி வீடு	1	5	20
2.	வெட்டியான் வீடு	1	20	80
3.	முற்றன் வீடு	1	10	40
4.	ஆண்டி வீடு	1	2	33
5.	தொப்புளான் வீடு	1	2	33
6.	மாம்பாத்தான் வீடு	1	5	30
7.	தம்பான் வீடு	1	4	31
8.	ஆண்டி வீடு	1	5	20
9.	சின்னியன் வீடு	1	10	35
10.	பெருமாள் வீடு	1	4	21
		10	69	331

ஆக மொத்தக் குழி 400க்குக் காணி 4 ஆக வீடு 35க்குக் காணி 22 குடியில்லாமனை ராசாமனை 3க்குக் காணி 4 இராணுவத்தார் பலபட்டடை மனை 19க்குக் காணி 5 தெரு சதிரம் 4க்குக் காணி 1½ நலவெள்ளாழர் தெரு 1க்குக் காணி 1 நாரசம் காணி ½ ஆக நத்தம் காணி 35 ஆகும். செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊரிலும் சேரி நத்தம் என்பது தனியாகவே உள்ளது. சேரி நத்தத்தில் புழக் கடைப் பகுதியின் அளவு 80 குழி தான் அதிகமானதாகும். புழக்கடைக் குழி குறைவாக அளிக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர உள்ள புறம்போக்குப் புஞ்சை நிலங்கள்

		எண்	காணி
1.	கிழக்குப் பூந்தோட்டம்	0	1
2.	களர் தெற்கு (தரிசு நிலம்)	0	35

3.	களர் மேற்கு	0	-	15
4.	மேற்கு வடக்கு ருத்திரபூமி	2	-	2
5.	மேற்குக் காடு	0	-	190
6.	கல்லுமேடு	1	-	200

ஆக. புறம்போக்குப் புஞ்சை நிலம் 769 காணி நிலத்தில் அமைந்துள்ளது.

மானியங்கள்

மானிய நிலம் என்பது வரியில்லாத நிலமாகும். கிராம மிராசுதாரரைச் சேருகிற பழமானியம் என்பது வழிவழியாகக் கொடுக்கப்பட்டு வந்த நிலமாகும்.

		காணி
1.	நஞ்சை பழமானியம்	39½
2.	புஞ்சை பழமானியம்	10½
		50

50 காணி நிலங்கள் பழமானியமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அதற்கான விவரம் :

			காணி
1.	பிள்ளையார் மானியம் நஞ்சை	-	1
2.	பெருமாள் மானியம் நஞ்சை	-	1
3.	ஈஸ்வரன் மானியம் நஞ்சை	-	1
4.	அம்மன் மானியம் நஞ்சை	-	½
5	பிடாரி மானியம் நஞ்சை	-	½
6.	பஞ்சாங்கம் மானியம் நஞ்சை	-	½
7.	கிராம மானியம் நஞ்சை	-	3
8.	கணக்கு மானியம் நஞ்சை	-	14
9.	கணக்கு மானியம் புஞ்சை	-	4
10.	சருப்பு மானியம் நஞ்சை	-	2
11.	சருப்பு மானியம் புஞ்சை	-	1
12.	தச்சன் மானியம் நஞ்சை	-	2
13.	தச்சன் மானியம் புஞ்சை	-	1
14.	தோப்பு மானியம் நஞ்சை	-	½
15.	தோப்பு மானியம் புஞ்சை	-	½
16.	பூந்தோட்டம் மானியம் நஞ்சை	-	1
17.	பனிசவன் மானியம் நஞ்சை	-	1½
18.	அங்கசாலை மானியம் நஞ்சை	-	1
19.	கம்புகட்டி மானியம் நஞ்சை	-	½
20.	வண்ணான் மானியம் நஞ்சை	-	½
21.	வண்ணான் மானியம் புஞ்சை	-	1

22.	நாவிதன் மானியம் நஞ்சை	-	1
23.	நாவிதன் மானியம் நஞ்சை	-	1
24.	தூக்குரி மானியம் புஞ்சை	-	1
25.	வெட்டியான் மானியம் நஞ்சை	-	1
26.	பவுனியன் மானியம் நஞ்சை	-	½
27.	குடுமி மானியம் நஞ்சை	-	2
28.	குடுமி மானியம் புஞ்சை	-	1

கிராம மிராசுதாரரைச் சேருகிற பழமானியம் நஞ்சைக் காணி 39½ புஞ்சைக் காணி 10½ ஆகக் காணி 50 ஆகும். மேலே கொடுக்கப்பட்டுள்ளவர்கள் கிராம மிராசுதாரர்கள் ஆவர். கோயில்களுக்காக அளிக்கப்பட்ட மானியங்கள் கோயில் பராமரிப்புக்காகவும் கோயில் பணியாளர்களின் ஊதியத்துக்காகவும் அளிக்கப் பட்டவையாகும். தோப்பு, பூந்தோட்டம் இவைகளுக்காக அளிக்கப்பட்ட மானியம் இவைகளின் பராமரிப்புக்காக அளிக்கப்பட்டவையாகும். கிராம மானியம் என்பது கிராமப் பராமரிப்புக்கும் மற்றப் பெயர்களில் அளிக்கப்பட்ட மானியங்கள் அவர்களின் ஊதியத்திற்குப் பதிலாக அளிக்கப்பட்டவையாகும்.

வாரப் பற்று செய்கால் நிலம்

வாரப் பற்று செய்கால் நிலம் என்பது அரசாங்கத்திற்குச் சொந்தமான பயிர் செய்யக் கூடிய தரமான நிலமாகும். இதில் கிடைக்கும் வருவாய் அரசாங்கத்தையே சேரும்.

		காணி
1	கிழக்கு நஞ்சை	48
2.	வடக்கு நஞ்சை	65
3.	மேற்கு நஞ்சை	35
		148

வாரப்பற்று புஞ்சை நிலம் 14 காணி ஆகும்.

		காணி
1.	கிழக்குப் புஞ்சை	3
2.	தெற்குப் புஞ்சை	8
3.	மேற்குப் புஞ்சை	3
		14

வாரப்பற்று நஞ்சை கரம்பு நிலம் 93½ காணியாகும். கரம்பு நிலம் என்பது பயிர் செய்ய முடியாத தரிசு நிலமாகும்.

		காணி
1.	வடக்கு நஞ்சை	40
2.	வடகிழக்கு நஞ்சை	30
3	மேற்கு கிழக்கு நஞ்சை	23½
		93½

வாரப்பற்று புஞ்சை கரம்பு நிலம் 5½ காணியாகும். இது அரசாங்கத்திற்குச் சொந்தமான உபயோகமில்லா மேட்டு நிலப்பகுதியாகும்.

		காணி
1.	மேற்குப் புஞ்சை கரம்பு	2½
2.	தெற்குப் புஞ்சை கரம்பு	3
	ஆக	5½

ஆக நஞ்சை காணி 281உம் புஞ்சை காணி 799உம் ஆக. புதுப்பாக்கத்தின் மொத்த நிலப்பரப்பு 24 அடி கொண்ட கோலால் அளக்கப்பட்ட அளவையின்படி 1080 காணி என்பது மேலே குறிப்பிட்டுள்ள செய்திகளின்படி உறுதிப்படுத்தப் படுகிறது.

நில அளவுமுறை பிரதேசத்திற்குத் தக்கவாறு வேறுபட்டது. நிலம் அல்லது வேலி என்பது ஒரு நிலஅளவாக இருந்தது. இதுவே வடமொழியில் வாடிகா என்று அன்பில் செப்பேட்டில் குறிக்கப்படுகின்றது. அது மேலும் ½. ¼. 1/8. 1/20. 1/80. 1/320 என்ற பாகங்களாக வகுக்கப்பட்டதாகும். அதுவே மேலும் இரண்டு சில நிலைகளில் பிரிக்கப்பட்டன. அவை 1/320 என்றும் $(1/320)^2$ என்றும் வகுக்கப்பட்டன. மூன்றாம் நிலையான $(1/320)^3$ பிரிவு கூடக் காணப்பட்டுள்ளது. நிலஅளவை முறை எவ்வாறு நுணுக்கமாக வரையறுக்கப்பட முடிந்தது என்பது வியப்பாகவே இருக்கின்றது. செங்கற்பட்டு மாவட்டத்தில் நில அளவைக்காக 17ஆம் நூற்றாண்டில் 24 அடிக்கோலையே பயன்படுத்தியுள்ளனர் இதற்கு முன்னோடியாகப் பிற்காலச் சோழர் காலத்தில் 10ஆம் நூற்றாண்டில் பதினாறு அடிக்கோல் கடிகைக் களத்துக் கோல் ஸ்ரீபாதகோல் மாளிகைக் கோல் ஆகிய அளவைக் கோல்கள் இருந்துள்ளன. ஆனால் செங்கற்பட்டு மாவட்டத்தில் 17. 18ஆம் நூற்றாண்டு வரை 24 அடி கொண்ட கோலால் 100 குழி கொண்ட நிலம் 1 காணி என்ற அளவுகோலையே பயன்படுத்தியுள்ளனர். இந்த அளவு முறை மாறுபடவே இல்லை. ஆனால் முதலாம் இராசேந்திரன் காலத்தில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கீழூரில் 1 மா நிலம் 16 அடிக்கோலால் 256 குழிகள் கொண்டதாயிருந்தது. இதற்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு கீழூர் அருகிலுள்ள திருவாமாத்தூரில் 'ஒரு மா' நிலம் 16 அடிக்கோலால் 200 குழிகள் கொண்டதாயிருந்துள்ளது. கி. பி. 1094இல் திருக்கடையூரில் 138 குழிகள் கொண்டது 'ஒரு மா'. ஆனால் கி. பி. 1110இல் திருவாவடுதுறையில் ஒரு மா என்பது 128 குழிகள் மட்டுமே கொண்டிருந்தன. ஆனால் செங்கற்பட்டு மாவட்டம் முழுவதும் காணியின் அடிப்படையில் நிலங்கள் அளக்கப்பட்டுள்ளன. இந்தக் காணியின் அளவு மாறுபடவே இல்லை. 24 அடி கொண்ட கோலால் 100 குழி கொண்டது ஒரு காணி

ஆகும். இந்த அளவை முறை மாறுபடாதது குறிக்கத்தக்கதாகும்.

மேலே கண்ட தரவுகளைக் கூர்ந்து பார்க்கும் போது இரண்டு செய்திகள் புலப்படுகின்றன 1. வரலாற்றுச் சான்றுகளாக ஓலை ஆவணங்களும் பயன்பட வல்லன. 2. ஓலை ஆவணங்கள் பல்வேறு வகைப்பட்ட சமூகப் பொருளாதாரச் சூழல்களை அளிக்கவல்லன. இவற்றை ஆய்வு செய்வதற்கு மூல ஓலைகளையும் அவற்றின் படி ஓலைகளாக - சுருக்கக் குறிப்புகளாகக் காணப்படும் தாள் சுவடிகளையும் காணும் வாய்ப்பு ஒருசேரக் கிடைக்குமானால் மேற்கண்ட நில அளவை மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளைச் செம்மையாகச் செய்ய முடியும் எனலாம். இதற்குச் செங்கற்பட்டு ஆவணங்களே சான்றுகளாம். இவை மூலை ஓலைகளாகவும் கிடைக்கின்றன. தாள் சுவடிகளில் படிகளாகவும் சுருக்கங்களாகவும் கிடைக்கின்றன. அவற்றை முறையே பயன்படுத்தி ஆய்வு செய்தால் பல்வேறு செய்திகளின் உண்மை நிலை புலப்படுவது உறுதியாகும்.

பயன்பட்ட நூல்கள்

1. ஓலைச் சுவடித்துறை. **செங்கற்பட்டு மாவட்ட ஓலை ஆவணங்கள்.**
2. K. A. நீலகண்ட சாஸ்திரி. **சோழர்கள்.**
3. தி. புஷ்கலா. **செங்கற்பட்டு ஆவணங்கள் - சமூகப் பொருளாதாரம்.** (முனைவர் பட்ட ஆய்வேடு). தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர்.

□

ஆ. தசரதன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தமிழ் நாடகவியல் தாள் சுவடிகள்

முன்னுரை

சென்னை. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள தாள் சுவடிகள் இருவகைப்படும். வெவ்வேறு இடங்களிலிருந்து பெறப்பட்ட தாள்சுவடிகள் முதல் வகை. அந்நூலகத்திலுள்ள ஓலைச் சுவடிகளைப் புத்தாக்கம் (Restored) செய்ததால் ஏற்பட்ட தாள் சுவடிகள் இரண்டாம் வகை. முதல் வகையில் மூல நூல்களாக அமைவனவும் (Original manuscripts), படிகளாக (Paper manuscripts) அமைவனவும் என இரு பிரிவுகள் உள்ளன. இவற்றுள். மீண்டுமொரு முறை புத்தாக்கம் செய்து வைக்கப் பெற்ற தாள் சுவடிகள் சில காணப்படுகின்றன. இரண்டாம் வகையில். ஓரிரண்டு புத்தாக்கத் தாள் சுவடிகள் மீண்டுமொரு முறை புத்தாக்கம் பெற்றுள்ளதைக் காணலாம். இவ்வாறாக. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தாள் சுவடிகளை வகைப்படுத்தலாம்



இலக்கணம். இலக்கியம். சாசனம். கைபீதுகள். வமிசாவளிகள். காவிய - புராண - சிற்றிலக்கியங்கள். நாட்டுப்புறப் பாடல்கள். மருத்துவ - சோதிட - அகராதி

நூல்கள். மரபு அறிவியல் நூல்கள். கல்வெட்டுகள். கணக்கு நூல்கள் எனப் பரவலாக அந்நூலகத்தில் தாள் சுவடிகள் பாதுகாக்கப் பெறுகின்றன. இவற்றுள் தமிழ் நாடகவியல் தொடர்பான இரு தாள் சுவடிகளை மட்டுமே இக்கட்டுரை ஆராய்கின்றது.

தமிழ் நாடகவியல் தாள் சுவடிகள்

முத்தமிழில் ஒன்றான நாடகத்தமிழில் நாடக இலக்கியங்களும். அவற்றுக்கான இலக்கண நூல்களும் குறைவாகவே கண்டறியப்பட்டன. நாடகங்களுக்காகவே நாடக இலக்கண நூல்கள் பழங்காலத்தில் தோன்றிப் பின் அழிந்து போயின என்பர். ஆயினும் பிற்காலச் சோழர் காலத்திலேயே தமிழ் நாடகவியல் பரவலாகவிருந்தது. சோழர் வரலாறுகள் நாடகமாக நடத்தப்பெற்றன. மிகவும் பிற்காலத்தில். மரபு நாடகங்கள் புது வடிவங்களில் அமைந்தன. நொண்டி. குறவஞ்சி. பள்ளு. குளுவ. கூத்து எனப் பெயர் பெற்று அவை மக்களால் போற்றப்பட்டன. நிகழ்த்து கலைகளாக இருந்த இவை பின்பு ஓலைச்சுவடிகளில் இடம்பெற்றன. தஞ்சைச் சரசுவதி மகால் நூலகம். அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம். காஞ்சிபுரம் சங்கரமடம் மற்றும் பிறவிடங்களிலும் இவ்வகை ஓலைச்சுவடி நாடகங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள ஓலைச்சுவடி நாடகங்கள் சிலவற்றை **நாடகத்தமிழ்** (1933) என்ற நூலில் பம்மல் சம்பந்த முதலியார் வரிசைப்படுத்தியுள்ளார். 19ஆம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டிலும் தோற்றம் பெற்ற பல நாடகக் குழுக்கள். நாடகக் கலைஞர்கள். நாடகக் கதைகள் போன்றவற்றை நடிகர்களும். ஆய்வாளர்களும் நூல்களாக எழுதியுள்ளனர்.

செய்யுள் நடையிலேயே எழுதப்பட்டிருந்த தமிழ் நாடகங்கள். 1891 முதல் பம்மல் சம்பந்த முதலியார் தொடக்கம் வசன நடையிலும். சிறுபான்மை செய்யுள் கலந்தும் எழுதப்படத் தொடங்கின. 1897இல் பரிதிமாற்கலைஞரே அவ்வகைச் செய்யுள் நாடகங்களின் இலக்கணங்களைச் செய்யுள் நடையிலமைந்த தம் **நாடகவியல்** என்ற நூலில் வரையறுத்தார். விபுலானந்தர் **மதங்க சூளாமணி** என்ற தமிழ் நாடக இலக்கண நூலை 1926இல் வெளியிட்டார். எஸ். குருசாமி என்பவர் பாலர் நாடகக்குழுவின் இலக்கணத்தை உரைநடையில் 1948இல் எழுதினார். வடமொழி மரபு - தமிழ் மரபு எனும் இரு மரபுகளின் அடிப்படையில். **நாடகவியல் விளக்கம்** என்ற தலைப்பில் ஆசிரியர் பெயரிடப்படாத நாடக இலக்கண நூலின் தாள் சுவடி ஒன்றும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் கண்டறியப்பட்டது. இதுவும் எஸ். குருசாமியின் **நாடகமும், நாடகக் கம்பெனி அனுபவங்களும்** எனும் தாள் சுவடியுமே அருமை கருதி இங்கு ஆராயப்படுகின்றன. (காண்க : அட்டவணை எண் 1).

நாடகவியல் - விளக்கம்

தற்காலத் தமிழ் நாடகங்களுக்கென எழுந்த நாடக இலக்கண நூல்களில் பரிதிமாற்கலைஞரின் நாடகவியல் எனும் நூலில் 1. பாயிரம். 2. பொதுவியல்பு. 3. சிறப்பியல்பு 4. உறுப்பியல்பு. 5. நடிப்பியல்பு எனும் ஐந்து இயல்கள் இடம் பெற்றன. அரங்கவியல் தொடர்பாக. வாழ்த்து. நடத்துநர். முன்னுரை. குறிப்பு. அங்கம். களம். கூற்று. பின்னுரை. நாடக சாலை. நடிப்பியல்பு. வருண பேதம் எனும் உறுப்புக்களை அவர் விளக்குகின்றார். இவ்வடிப்படையிலேயே **நாடகவியல் விளக்கம்** எனும்

நூலும் அமைந்துள்ளது. ஒருவேளை பரிதிமாற்கலைஞரின் **நாடகவியல்** நூலுக்கு விளக்கமாகக் கூட இந்நூல் இருக்குமோ என எண்ணுவதற்கு இடமளிக்கும் வகையில் அதன் பகுப்பு முறை அமைந்துள்ளது. ஆயினும், அந்நூலுக்குச் சற்று அதிகமாக வகைப்படுத்தப்பட்டிருப்பதை இத்துடன் இணைக்கப் பெற்றிருக்கும் கோட்டுருவ விளக்கத்திலிருந்து (காண்க : அட்டவணை எண் 2) தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு உறுப்பும், இந்நூலாசிரியரால் நன்கு உரைநடையில் விளக்கப்பட்டுள்ளமை அறியக் கிடக்கின்றது

இந்நூலின் தொடக்கப் பகுதி வருமாறு :

> "இந்நாடகவியல் நூல் நான்கு பெரும் பகுதிகளில் இயல்கின்றது. அவை - பொதுவியல், சிறப்பியல், உறுப்பியல், நடிப்பியல் என்பனவாம். இவற்றுள் பொதுவியல் நாடகத்தின் பொதுவிலக் கணங்களையும், சிறப்பியல் அதன் சிறப்பிலக்கணங்களையும், உறுப்பியல் நாடகப் பாத்திரங்கள் முதலியவற்றின் இலக்கணங்களையும், நடிப்பியல், அந்நாடகப் பாத்திரங்கள் நடித்ததற்கான இலக்கணங்களையும் பற்றி விளங்கக் கூறும்."

இந்நூலின் இறுதிப் பகுதி, நடிப்பியல் என்ற இயலின், ஆறாம் பிரிவாகிய 'நாடக சாலை' என்பதில் 'காணுநரிருக்கை'யோடு முடிவடைகின்றது. தாள் சுவடியின் முதலில் அட்டவணையும், முதல் பக்கம் அச்சிட்ட பக்கமாகவும், எஞ்சிய பக்கங்கள் அச்சிடுதலுக்கேற்றவாறு எழுதப்பட்டிருப்பதையும் பார்க்கும் போது, இத்தாள் சுவடி அச்சிட்டு வெளியிடுவதற்குத் தொடங்கப் பெற்று, ஏதோ காரணத்தால் நின்று போய்விட்டிருக்கிறது எனத் தெரிகிறது. வடமொழி நாடக இலக்கண மரபும் தமிழ் நாடக இலக்கண மரபும் சேர்ந்து உருவாகிய இந்நூல் அச்சிட்டு வெளியிடப் பெறுமாயின், தமிழ் நாடகவியலுக்கு அணி சேர்ப்பதாக அமையும்.

நாடகமும், நாடகக் கம்பெனி அனுபவங்களும்

1951 -52இல் 'தமிழ் நிலையம்' எனும் நிறுவனத்தார் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திற்கு அளித்த தாள் சுவடியான **நாடகமும், நாடகக் கம்பெனி அனுபவங்களும்** என்ற நூலை 1948இல் எஸ். குருசாமி என்பவர் எழுதியுள்ளார். அந்நூலகம் வெளியிட்டுள்ள மூவருடச் சுவடிகள் விளக்க அட்டவணையில், ஆர் எண் 2562இன் கீழ்ப் பின்வருமாறு இத்தாள் சுவடி பற்றிய விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது. தொடக்கப்பகுதி வருமாறு :

நாடகமும் நாடகக் கழக அனுபவங்களும்

முன்னுரை

"நாடகம் ஓர் அரிய கலை. இதில் ருசி ஏற்படுவதென்பது இயற்கை. அது பிறவியிலேயே நம்முள் அமைய வேண்டும் . . ."

அத்தியாயம் 1

கலை விளக்கம்

"நாடகம் என்பது இயல், இசை, நாடகம் என்று முத்தமிழில் ஒன்று.

நாடகத்தை ஒரு பெரிய ஆத்ம சாதனக் கருவியாக முன்னோர் பலர் கண்டதனால் தான். அதற்குத் தமிழில் இடங்கிடைத்து ...”

இந்நூலின் இறுதிப்பகுதியும், நூலகத்தாரின் குறிப்பும் கீழே கொடுக்கப் படுகின்றன.

“இத்தகைய மேன்மையான நாடக, நாட்டியக் கலைகளைப் பலர் இகழ்ந்து பேசாவண்ணம் காத்து . . . கலைச்செல்வியின் காப்பாளராகப் பல்லாண்டுகள் வாழப் பரமனை நாம் மனமாரப் பிரார்த்திப்போமாக.”

கலை யோங்குக! கலை வாழ்க!!

முற்றும்

“இந்நூல், நாடக அனுபவங்கள் என்னும் பெயர்த்து. குருசாமி என்பவரால் எழுதப்பெற்றது. நன்றாக இருபது அத்தியாயங்களாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. முகவுரை தொடங்கி முடிவுரையோடு முடிவுற்றது. கருத்துக்கள் அனுபவமுள்ளன. ஆய்ந்து கொள்ள நன்று.”

'தமிழ் நிலையம்', 'எஸ். குருசாமி' போன்ற பெயர்கள்பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் எஸ். குருசாமி எழுதிய சில நாடகங்கள் ஏ. என். பெருமாளால் குறிப்பிடப்படுகின்றன. தம் நாடகக் கம்பெனி அனுபவங்களை வைத்துத் தற்சார்பு இன்றி எஸ். குருசாமி இந்நாடக இலக்கண நூலை எழுதியுள்ளார். அவரெழுதியுள்ள சில பகுதிகளிலிருந்து அவர்பற்றிய செய்திகளையும் நூலின் இயல்பையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

“சுமார் ஒன்பது வயதில் நடிக்கத் தொடங்கினேன். இன்று வரை அதை மறக்க முடியவில்லை, அதில் சுமார் நாற்பது ஆண்டுகளாக அனுபவம் உண்டு. இருபதாம் வயதிலிருந்து நாடக ஆசிரியராகத் தொடங்கினேன். இவ்வளவில் நடித்துள்ள நாடகங்கள், நூற்றுக்கணக்கானவை. எழுதியவைகளும் பற்பல. அநேக தொழிலாளிகளுடைய நெருங்கிய பழக்கமும் ஏற்பட்டது. ஆனால் 1920ஆம் ஆண்டு முதல் இருந்த பாய்ஸ் கம்பெனிகள் பழக்கங்களும் நன்றாகப் புலப்பட்டன. அக்கம்பெனிகளில் உள்ள பற்பலரைத் தற்பித்துச் செய்யும் சந்தர்ப்பமும் வெகுவாகக் கிடைத்தது. அத்தகைய கம்பெனிகளில் ஊடாடி, அந்த நடிகர்களுடனும் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பமும் கிடைத்தது.”

“இம்மாதிரி கம்பெனி அனுபவங்களும். இதற்கு முற்பட்ட சிற்சில நாடகக் கம்பெனிகளின் பழக்கமும் அடியேனுக்குச் சுமார் முப்பத்தைந்து வருஷங்களாக உண்டு. அக்கம்பெனி நடிகர்களுடன் பழகும் சந்தர்ப்பமும் ஏற்பட்டு அவர்களுக்கு நாடகங்கள் போதிக்கும் சந்தர்ப்பங்களும் பல ஏற்பட்டன. இயல்பாகவே நாடகக்கலையிலும் ருசியுண்டு. அதனால்

சொந்தமாகச் சுமார் இருபது வருடங்கள் தனிப்பட்ட ஒரு சபையையும் நடத்தி அதன் மூலமாக சிற்சில நற்பணிகளுக்கும் தொண்டாற்றியிருக்கிறேன். எனவே எளியேனுக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு. தற்காலம் பிரபலமான நாடகத் தொண்டு புரியும் கம்பெனி போன்றவைகளுக்கு நற்பயனளிக்கத் தக்க சிலவற்றைக் கூறத் துணிந்தேன்"

"இவ்வளவு காலமாகக் கவனித்த பல அனுபவங்களைக் குறித்து வைத்தால். இத்தொழிலில் உள்ளவருக்கும். நாடகாபிமானிகளுக்கும் வருங்காலத்துப் பயன்படுமே யென்ற நோக்கமே இந்நூலை யெழுதும்படி தோன்றியதற்குக் காரணமாகும்" (முன்னுரை)

எஸ். குருசாமியினுடைய முன்னுரையிலிருந்து அவர் ஏறத்தாழ 1900இல் பிறந்திருக்கலாமென்று எண்ணத் தோன்றுகிறது. 1910 முதல் 1948 வரை. தாம் பார்த்த. கேட்ட. நடித்த. எழுதியவற்றிலிருந்து தமிழ் நாடகவியலுக்கு அணிசேர்க்குமுகமாக இந்நூலை எழுதியுள்ளார்

நூலமைப்பும் சிறப்பும்

நாடகமும், நாடகக் கம்பெனி அனுபவங்களும் என்ற பாலர் தமிழ் நாடகவியல் நூல், நூலாசிரியர் முன்னுரை, முடிவுரைகள் நீங்கலாக இருபது அதிகாரங்களில் உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. 1. கலை விளக்கம், 2. பராமரிப்பு. 3 பாய்ஸ் கம்பெனிகள், 4. நாடகக் கதை. 5. வசனம் - நடை. 6. பாட்டு. 7. நடிப்பு. 8 காட்சிப் பொருள்கள். 9. பாடல்கள். 10. நாடகாசிரியர்கள். 11. நடிகர்கள். 12. ஒப்பனை. 13. நாடக நிருவாகிகள். 14. நாடகப் பணியாளர்கள். 15. நாடகப் பொருள்கள் பாதுகாப்பு. 16 நடிகர்களுடைய உரிமை. 17. பின்னணி இசை. 18. மேலாளர். 19. விளம்பரம். 20 புத்தக சாலை - முதலாளி - கணக்கர் எனும் பெயர்களில் தனித் தனி அதிகாரங்கள் எழுதப் பெற்றுள்ளன.

இருபதாம் நூற்றாண்டின் ஐம்பதுகளில் தமிழ் உரைநடை எவ்வாறிருந்தது என்பதற்கு இந்நூலும் ஒரு சான்று. ஆயினும் இந்நூலில் வடமொழிச் சொற்கள். வடமொழி எழுத்துக்களின் கலப்பு தவிர்க்க முடியாதவை போல் அமைந்துள்ளன. எளிமையாக. உவமைத் தொடர்களுடன், சான்றுகளுடன் எழுதப்பட்டுள்ள இந்நூல் தமிழ் நாடகவியலில் சிறந்த சேர்க்கையாகும்.

முடிவுரை

தற்காலத் தமிழ் நாடகக் குழுக்களில் பாலர் நாடகக் குழுக்களின் (Boys Companies) இலக்கணங்களை வரையறுத்த **நாடகமும், நாடகக் கம்பெனி அனுபவங்களும்** என்ற தாள் சுவடி இப்போது பதிப்பித்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலிருந்து வெளியிடப் பெறுகின்றது. அதைப் போன்று, தமிழ் மரபு - வடமொழி மரபு நாடக இலக்கணங்களை நான்கு இயல்களில் வரையறை செய்து எழுதப் பெற்றுள்ள **நாடகவியல் விளக்கம்** என்ற நூலும் பதிப்பாகி வெளியிடப் பெறுமாயின் நாடகத் தமிழ் அன்னைக்கு அணி சூட்டியதாகும்.

1அட்டவணை எண் 1

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக நாடகவியல் தாள் சுவடிகளின் விவரக்குறிப்பு

வ.எ.	நூல் பெயர்	ஆசிரியர்	காலம்	எழுத்து நிலை	நூலகத்திற்கு அளித்த காலம்	அளித்தவர் பெயர்	சுவடி எண்	கட்டு எண்	அளவு	பக்கம்	வரிகள்	புத்தாக்கம் செய்யப்பட்ட நாள்	ஆண்டு	புத்தாக்கம் செய்தவர்	சரி பார்த்தவர்
1	நாடகவியல் விளக்கம்	-	-	ஓரளவு தெளிவு	-	-	ஆர். எண். 5765	டி. ஆர். எண் 1089	30 x 22 செ.மீ.	33	பக்கத்திற்கு 30 வரிகள்	-	-	-	-
1 அ	நாடகவியல் விளக்கம்	-	-	நன்று	-	-	ஆர். எண். 7377	டி. ஆர். எண் 1425	33 x 24 செமீ	31	பக்கத்திற்கு 24 வரிகள் வரை	5-4-1959 முதல் 16-4-1959	1959-1960	பி.மரியதாசு யண	1.பி. மரியதாசு 2.மு. நாரா சாமி
2	நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	எஸ். குரு சுவாமி	10-4-1948	தெளிவு	1951-1952	செயலர். தமிழ் நிலையம்	ஆர். எண் 2562	டி. ஆர். எண்	30 x 22 செ.மீ.	121	பக்கத்திற்கு 21 வரிகள்	-	-	-	-

அட்டவணை எண் 2

நாடகவியல் விளக்கம்

I பொதுவியல்

1. கதை

1. மெய்யுரை
2. பொய்யுரை
3. புனைந்துரை

2. நற்பொருள்

1. அறம்
2. பொருள்
3. இன்பம்
4. வீடு

3. சந்தி

1. முகம்
2. பிரதிமுகம்
3. கருப்பம்
4. விளைவு
5. துய்த்தல்

4. சுவை

1. உவகை
2. பெருமிதம்
3. நகை
4. சமம்
5. வெகுளி
6. வியப்பு
7. இழிப்பு
8. அவலம்
9. அச்சம்

5. பொருத்தம்

1. இடம்
2. காலம்
3. செயல்

6. நடை

1. வாசகம்
2. செய்யுள்
3. இசைப் பாட்டு

7. கவிக்கூற்று

1. நடிப்போர் குறிப்பு

8. பாத்திரம்

1. தலைவன்
2. தலைவி
3. தலைவற்குற்றார்
4. விதூடகன்
5. விடன்
6. சேடன்

9. கதாந்தம்

1. நற்பொருளிறுதி
2. தீப்பொருளிறுதி

10. பாத்திரச் சிறப்பு

தலைமக்கள்

தலைவன்	தலைவி
1. திரோதாத்தன்	சுகுணை
2. தீரசந்தன்	சாந்தை
3. தீரோத்ததன்	அரக்கி
4. தீரலலிதன்	காமினி

II சிறப்பியல்

1. சாதி

1. நாடகம்
2. பிரகரணம்
3. பாணம்
4. வியாயோகம்
5. சமவகாரம்
6. இடிமம்
7. ஈகாமிருகம்
8. அங்கம்
9. வீதி
10. பிரகசனம்

2. உபசாதி

1. நாடிகை
2. துரோடகம்
3. கோட்டி
4. சட்டகம்
5. நாட்டியராசகம்
6. பிரத்தானம்
7. உல்லாப்பியம்
8. காவியம்
9. பிரேங்கணம்
10. இராசகம்
11. சமுலாபகம்
12. திருக்கதிகம்
13. சிற்பகம்
14. விலாசிகை
15. துன்மல்லிகை
16. பிரகரணி
17. அல்லீசம்
18. பாணிகை

3. ஒழிபு

1. நயநிலைப்படலம்
2. உண்ணாடகம்
3. மாநாடகம்
4. முந்நாடகம்
5. நாடக நூல்
6. நாடகக் காப்பியம்
7. கூத்து நூல்
8. விருத்தி

1. சாத்துவதி
2. ஆரபடி
3. கைசிகி
4. பாரதி

III உறுப்பியல்

1. வாழ்த்து

2. நடாத்துநர்

1. சூத்திரதாரன்
2. நடி

3. முன்னுரை

4. குறிப்பு

5. அங்கம்

6. களம்

7. கூற்று

1. தற்கூற்று
2. புறக்கூற்று
3. முன்னிலைக்கூற்று
4. விட்புலக்கூற்று
5. சொல்வகை

8. கூத்து

1. பரதநாட்டியம்
2. குரவைக்கூத்து
3. நகைக்கூத்து
4. முதலிடை கடைக்கூத்துக்கள்
5. வரிக்கூத்து

1. கண்கூடுவரி	5. கிளர்வரி
2. காண்வரி	6. தேர்ச்சிவரி
3. உள்வரி	7. காட்சிவரி
4 புறவரி	8. எடுத்துக்கோள்வரி

9. பின்னுரை

1 பரதவாக்கியம்

10. ஒழிபு

1. பெயரீடு
2. புனைவுமுறை

IV நடிப்பியல்

1. மெய்ப்பாடு

1. நிலை மெய்ப்பாடு
2. பொது மெய்ப்பாடு

2. விறல்

3. ஒற்றுமை

4. அவிநயம்

1 ஆங்கிகம்
2. வாசிகம்
3. ஆகாரியம்
4. சாத்துவிகம்
5. சுவையவிநயம்

1. உவகையவிநயம்	6. வியப்பவிநயம்
2. பெருமிதத்தவிநயம்	7. இழிப்பவிநயம்
3 நகையவிநயம்	8. அவலத்தவிநயம்
4. சமநிலையவிநயம்	9. அச்சவவிநயம்
5. வெகுளியவிநயம்	

5. நிலை

1. கோலம்

6. நாடகசாலை

1. நேபத்தியம்
2. அரங்கம்
3. எழினி
4. காணுநரிருக்கை

மு. அருணகிரி &
க. ஆறுமுகப் பெருமாள்
தியாகராசர் கல்லூரி
மதுரை

சுவர் விளம்பரங்களும் பெண்ணுரிமைச் சிந்தனையும்

முன்னுரை

உலகிலுள்ள எந்த இயக்கமானாலும் அதன் வளர்ச்சிக்குப் பிரசாரம் பிரதானமாக அமைகிறது. இத்தகைய பிரசாரம் மேடை. நாடகம். பத்திரிகை. நூல். துண்டுப் பிரசுரம் போன்றவற்றின் வாயிலாகச் செய்யப்படுகிறது. திராவிடர் கழகம் தனது கொள்கைகளை வெளிப்படுத்த இத்தகைய பிரசாரச் சாதனங்களுள் மேடை. பத்திரிகை. நூல் ஆகியவைகளை அடிக்கடியும். முறையாகவும் பயன்படுத்தி வருகிறது நாடகத்தைத் தொடக்க காலங்களில் மட்டுமே பயன்படுத்தி வந்தது. துண்டுப் பிரசுரத்தை அவ்வப்போது தேவைப்படும் சமயங்களில் மட்டுமே பயன்படுத்தி வருகிறது. அண்மைக் காலமாகத் திராவிடர் கழகம் தனது கொள்கைகளைப் புதுமையான முறையில் - சுவரோரத் தொடர்கள் மூலமாகச் - செய்து வருகிறது. திராவிடர் கழகத்தின் இத்தகைய சுவரோரத் தொடர்களுள் பெண்ணுரிமைபற்றிய தொடர்களை மட்டுமே மையமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. இதில் மதுரை நகரில் காணப்படுகின்ற தொடர்கள் மட்டுமே ஆராயப்படுகின்றன. அவற்றுள் ஆங்கிலத்தில் அமைந்த தொடர்கள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

தொடர்களைச் சுவர்களில் எழுதக் காரணம்

மனிதன் சூழ்நிலைகளால் வளர்க்கப்படுகின்றான். மாறிவரும் இந்நாட்டில் அவன் புறச்சூழ்நிலைகளால் பெரிதும் பாதிக்கப்படுகின்றான்; நிம்மதியைத் தேடி நிம்மதி இல்லாமல் அலைந்து கொண்டிருக்கின்றான். எதையும் தாமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மை மக்களிடம் குறைவாகக் காணப்படுகிறது. திராவிடர் கழகத்தின் பொதுக் கூட்டங்களுக்கு வரக்கூடியவர்கள் மிகவும் குறைவு. இத்தகைய சூழ்நிலைகளின் பின்னணியில் பார்க்கின்ற பொழுது மக்களைச் சென்று சேருகின்ற. எளிமையான பிரசாரம் தேவைப்படுகிறது. அதற்குச் சுவர்களில் எழுதும் முறை. எளிமையாகத் தென்பட்டதாலும். எல்லோராலும் அடிக்கடிப் பார்க்கக்கூடிய. படிக்கக்கூடிய வாய்ப்புக் கிட்டும் என்பதாலும் கையாளப்பட்டது எனலாம்.

தொடர்களை எழுதும் இடங்கள்

தொடர்களை எழுதுவதற்குச் சாலையோரத்துச் சுவர்கள். பள்ளி. கல்லூரி.

மருத்துவமனைகளின் சுற்றுச் சுவர்கள், மேம்பாலங்களின் ஓரப்பகுதிகள், கைப்பிடிச்சுவர்கள் போன்ற இடங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பெண்ணடிமையும், பெண்ணுரிமையும்

பெண்ணடிமை என்பது கண்டிக்கப்பட வேண்டிய செயல்களுள் ஒன்று. இயல்பாகவே காலத்தின் கரங்கள் தன் தாலாட்டை என்றும் ஆண்களுக்கே அளித்து வந்திருக்கிறது. 'தந்தை மகற்காற்றும் நன்றி' என்றும் 'மகன் தந்தைக்காற்றும் உதவி' என்றும் பாடித் திருவள்ளுவரும் ஆண்களையே முன்னிலைப்படுத்துகின்றார். பெண்கள் என்றாலே அலட்சியப்படுத்திப் பார்க்கும் கண்ணோட்டத்தில்தான் இந்தச் சமூகம் பெண்ணினம் முழுவதையும் நடத்தி வருகிறது. பாட்டாளிகளுக்கு விடுதலை கேட்டுப் போராடிய இயக்கங்கள்கூடப் பெண்ணினத்தின் விடுதலைக்குப் போராடவில்லை. ஒருவேளை அத்தகைய இயக்கங்கள் பாட்டாளி வர்க்கம் என்றாலே ஆண்கள்தான் என்று எண்ணியிருக்கக்கூடும்.

பெண்ணடிமை : அக்காலமும், இக்காலமும்

> "ஒரு தேசத்தின் நாகரிகம் அல்லது அறிவு முதிர்ச்சி இன்ன தன்மையுடையதென்று கண்டுபிடிக்க வேண்டுமாயின் அதைக் கண்ணாடி போல விளக்கிக் காட்டுவது அந்த நாட்டில் வழங்கும் பாஷையிலுள்ள இலக்கியம். அதாவது காவியம் முதலிய நூல்களேயாம்"[1]

என்பார் பாரதியார். இலக்கியம் என்பது அது தோன்றிய காலச் சமுதாயத்தைக் காட்டும் கண்ணாடி. பாரதத்தில் நிலவிவரும் இதிகாசங்களான இராமாயணமும், மகாபாரதமும் பெண்ணடிமைத் தனத்தைச் சுட்டிக் காட்டுகின்றன. 'தீ'கூடச் சீதையைத் தீண்டிவிட முடியாது என்பதை உணர்ந்த இராமன், அவள் அசோகவனத்தில் இருந்து திரும்பியபின், தவறு செய்திருப்பாளோ? என்று எண்ணி, 'தீக்குளிக்க' வைக்கின்றான். இது ஒருவகையில் பெண்ணடிமை எனலாம். சீதையைத் தீக்குளிக்கச் சொன்ன இராமன் தானும் தன் மெய்மையை நிலைநாட்டத் தீக்குளிக்கவில்லை. இராஜசபையின் நடுவே துரௌபதை துகிலுரியப்பட்டதும் பெண்ணடிமையின் ஒருபகுதி எனலாம். பத்தினிப் பெண்களின் வாழ்க்கையெல்லாம் கொத்தடிமைகளின் வாழ்க்கை யாகத்தான் இருக்கிறது. பெருவியாதி பிடித்த கணவனை விபசார விடுதிக்கு அழைத்துச் சென்றாள் நளாயினி. தம்பியின் காமத்தைத் தணிவிக்கத் தானே தயார் என்றாள் அருணகிரிநாதரின் சகோதரி. இவையெல்லாம் அக்காலப் பெண்களின் அவலநிலையினைக் காட்டுகின்றன.

வானத்தில் மனிதன் குடியேறுவதற்கான அறிவியல் திட்டங்கள் தொடங்கிவிட்டன. கணிப்பொறி என்ற இயந்திர முளையும், ரோபோட் என்ற இயந்திர மனிதனும் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. இந்த அறிவியல் உலகத்தில்கூடப் பெண்கள் அடிமைகளாகவே இருக்கின்றனர். அண்மையில் இராஜஸ்தான் மாநிலத்தில் கணவனுடன் உடன்கட்டை ஏற முயற்சித்த ருப்கன்வரின் நிலையும் இக்கருத்துக்கு

1 சி. சுப்பிரமணியபாரதி, **பாரதியார் கட்டுரைகள்**, பக். 116, 117.

வலுவூட்டுகின்றது. பெண்களைப் போகப் பொருளாகவும், பொழுது போக்குக் கருவியாகவும் கருதும் போக்கு அன்று முதல் இன்று வரை காணப்படுகிறது. மனித சமுதாயத்தில் பெண்களுக்குச் சமநீதி கிடைக்காத நிலை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே தொடர்ந்து நீடித்து வருகிறது.

இத்தகைய நிலையிலுள்ள பெண்களின் அவலத்தைப் போக்கிட முனைந்தே திராவிடர் கழகம் பின்வரும் தொடர்களை எழுதியுள்ளது.

பெண்ணுரிமை தொடர்பான திராவிடர் கழகத்தின் தொடர்கள்

1. பெண்ணுக்கு உரிமை வேண்டும்
   மண்ணுக்கு வளமை வேண்டும்
2. பெண்ணுக்குச் சமஉரிமை வழங்குக
3. பெண் என்பவள் கடைச்சரக்கல்ல
4. பெண்கள் சமூகத்தின் கண்கள்
5. பெண்கள் சமூகத்தின் அங்கங்கள்
6. வரதட்சணை என்பது சமூகக் கொடுமை
7. மாமியார் பற்ற வைக்கும்போது வெடிக்காத ஸ்டவ்
   மருமகள் பற்ற வைக்கும் போது வெடிக்கும் மர்மம் என்ன?
8. வரதட்சணை வாங்குவதும் கொலைக் குற்றமும் ஒன்றாகும்
9. திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறதென்றால்
   ரொக்கத்தால் நிச்சியிக்கப்படுவது ஏன்?
10. வாழத் துடிக்கும் இளம் பெண்ணே
    வரதட்சணையை எதிர்த்துப் போராடு
11. பெண்ணே உன்னை நாடாமல்
    பொன்னையும் பொருளையும்
    நாடுபவனை ஏற்றுக் கொள்ளாதே
12. மாமியாரே! நீயும் முன்னாளில்
    ஒரு மருமகள் தான்
13. பெண்ணே! உனக்கொரு நீதி
    ஆணுக்கொரு நீதியா?
14. பெண்ணே பெண்ணே திரும்பிப்பார்
    பெரியார் கொள்கையை நினைத்துப்பார்

தொடர்களின் பாகுபாடு

மேற்கூறிய தொடர்களைப் பின்வருமாறு பகுக்கலாம்.

1. பெண்ணின் பெருமையை உணர்த்தும் தொடர்கள்
2. பெண்ணின் உரிமையை உணர்த்தும் தொடர்கள்

3. வரதட்சணை எதிர்ப்புத் தொடர்கள்

4. முரண்பாடான தொடர்

பெண்ணின் பெருமையை உணர்த்தும் தொடர்கள்

பெண். மணம் முடிக்கும் வரை பெற்றோர்க்கு அஞ்சி வாழ்கின்றாள். மணம் முடிந்ததும் கணவனுக்கும் அவன் வீட்டார்க்கும் அஞ்சி வாழ்கின்றாள். பின்னர் அவள் பெற்ற பிள்ளைகள் பெரியவர்கள் ஆனதும் அவர்களுக்கு அஞ்சி வாழ்கின்றாள். இடைப்பட்ட தம் வாழ்நாளில் இந்தச் சமூகத்திற்கு அஞ்சி வாழ்கின்றாள். மணம் முடிக்கும் காலத்தில் அவளை மணமகனும் அவன் வீட்டாருமே தெரிவு செய்கின்றனர். அவளைப் பிடிக்கவில்லையானால் ஒதுங்குகின்றனர். இதே உரிமை பெண்ணுக்கும் கொடுக்கப்படுகிறதா? என்றால் இல்லை. 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று அவள். பெற்றோர் காட்டியவனுக்குத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். கடையிலுள்ள சரக்கை வாங்குவோன் வாங்க வரும் வரை வியாபாரி காத்திருப்பதைப் போலப் பெண்ணைப் பெற்றவர்களும் காத்திருக்கின்றார்கள்.

> "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொளவதால்
> அறிவில் ஓங்கிஇவ் வையகந் தழைக்குமாம்"[2]

என்ற பாரதியின் வரிகள் கூடப் பெண்களைக் கடைச் சரக்காகக் கருதும் போக்கினைக் கண்டு வெளிப்படும் கருத்து எனலாம். கடைச் சரக்கு அழகு படுத்தப்படுவதே போலப் பெண்ணும் அழகு படுத்தப்படுகின்றாள். கடைச் சரக்கு வாங்குவோனுக்காகக் காத்திருப்பதைப் போலப் பெண்ணும் தன்னை மணப்பவனுக்காகக் காத்திருக்க வேண்டியவளாகின்றாள். சரக்குக்குரிய வியாபாரி நல்ல வாடிக்கையாளரை எதிர்பார்த்துக் காத்திருப்பதைப் போலப் பெண்ணைப் பெற்றவர்கள் அவளை விரும்பும் ஒருவன் வரும்வரை காத்திருக்கின்றனர். இவ்வாறாக. பெண். பிறப்பு முதல் இறப்பு வரை கடைச் சரக்காக நடத்தப்படும் அவலநிலையைக் கண்டுதான் திராவிடர் கழகம்.

பெண் என்பவள் கடைச் சரக்கல்ல

என்னும் தொடரை எழுதியுள்ளது

நாளைய சமுதாயம் இன்றைய கன்னிப் பெண்களின் மடியில் உறங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் பெருக்கத்திற்கும் அச்சமுதாயத்தைச் சார்ந்த பெண்ணே முதற்காரணம். உயிர்களைத் தாங்கும் உயர்ந்த பணி பெண்ணுக்கு இருப்பதால்தான் அவளுக்குக் 'கற்பு' இன்றியமையாதது என்று வலியுறுத்தப்படுகிறது. கற்புடைய பெண்களாலேயே ஒழுக்கமுடைய. சுகாதாரச் சுத்தமுடைய சமுதாயத்தை உருவாக்க இயலும். எனவே. ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பணியில் அடித்தளமாக அமைபவள் பெண்ணே என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு ஒரு சமுதாயத்தின் அடித்தளமாக. ஆணிவேராக அமையும் பெண்ணை. இச்சமூகம் ஆண்டாண்டுக் காலமாக அடக்கியே வைத்திருக்கிறது. அவள்சமுகத்தின் அங்கமாகக் கருதப்படவில்லை. பத்து மாதம் சுமந்து பெற்ற தாயின்

2 சி. சுப்பிரமணியபாரதி. **பாரதியார் கவிதைகள்**. ப 501

பெயரைத் தலைப்பெழுத்தாகப் (INITIAL) போடமுடியாதபடி அவளுடைய தலையெழுத்து இருக்கிறது. 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று வள்ளுவரும் பெண்ணை அஃறிணையாகவே காட்டுகின்றார். திரு. வி. கலியாணசுந்தரனார் கூட

"ஆண் மகன் பெண் மகளைத் தனக்குரிய காமப் பொருளாகவும், பணியாளாகவும் கொண்ட நாள் தொட்டுப் பெண் மகள் உரிமையை இழக்கலானாள்"[3]

என்று சமுதாயத்தில் அவளது நிலையைக் காட்டுகின்றார். சமுதாயத்தில் அவள் இருந்த நிலையையும், இருக்கின்ற நிலையையும், இருக்க வேண்டிய நிலையையும் உணர்ந்து தான் திராவிடர் கழகம்,

பெண்கள் சமுகத்தின் கண்கள்
பெண்கள் சமுகத்தின் அங்கங்கள்

என்பன போன்ற தொடர்களை எழுதியுள்ளது.

பெண்ணின் உரிமையை உணர்த்தும் தொடர்கள்

"உரிமை எல்லார்க்கும் பொதுவானது. வானத்தில் மேகம் தவழ்வது போலவும், கடலில் அலை எழுதுவது போலவும், பறவை அழகிய சிறகை வீசிப் பறப்பது போலவும், பெண் தனது உள்ளத்தெழும் விருப்ப வழி நடக்கும் உரிமையுடையவளாதல் வேண்டும்"[4]

என்றும்,

"உரிமை என்பது ஒருவர் கொடுப்பதுமன்று ; மற்றொருவர் வாங்குவதுமன்று. அஃது எவ்விடத்தும் எல்லாவிடத்தும் இயல்பாய் அமைந்து கிடப்பது. சிலர் தமக்குள்ள வன்மையால் பிறர் உரிமையை மறித்தும் பறித்தும் வருகின்றனர்"[5]

என்று உரிமை குறித்துத் திரு. வி. கலியாணசுந்தரனார் கூறுகின்றார். ஆண்கள் தங்களிடமுள்ள வன்மையால் பெண்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை அடிமைகளாக்கி வைத்தனர். இத்தகைய,

"பெண்களின் அடிமைத்தனம் பெண்களை மட்டும் பாதிப்பதில்லை. அது மற்றொரு வகையில் ஆண்களையும் பாதிக்கின்றது"[6]

என்பார் பெரியார். இந்தச் சமுதாயத்தையும் பாதிக்கின்றது என்றும் கூறலாம். ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்கும் உரிமை தரப்படவில்லை என்பதால் அவர்களுக்குக் கல்வியும் மறுக்கப்படுகிறது. இருப்பினும் சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் கவிபாடி இருக்கிறார்கள். இருந்தபோதிலும் பெண்களுக்குக் கல்வி

3. திரு வி. கலியாண சுந்தரனார், **பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை**, பக். 34, 35.
4. **மேலது**, ப. 61.
5. **மேலது**, ப. 33.
6. ஈ. வெ இராமசாமி (பெரியார்), **பெண் ஏன் அடிமையானாள்?**, ப. 87

மறுக்கப்பட்டிருக்கிறது. கல்விக்குரிய கடவுளை - சரஸ்வதியை - பெண்ணாகக் காட்டியவர்கள் அவளைக் கல்லாகப் படைத்தார்கள். கல்லாகப் படைத்ததனால் தானோ என்னவோ அவளது இனத்தை - பெண்ணினத்தை - கல்லாமல் வைத்திருக்க வேண்டும் என்பதிலும் சிலர் கவனமாக இருக்கின்றார்கள்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே"[7]

என்னும் புறநானூற்றுப் பாடல்கூடப் பெண்ணை பிள்ளைபெறும் இயந்திரமாகவே காட்டுகிறது. இப்பாடலைப் பாடிய பொன்முடியார் ஒரு பெண்பாற்புலவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெண்களின் உரிமைகள் மழுங்கடிக்கப்படுகின்றன. அல்லது மறக்கடிக்கப் படுகின்றன. அவள் வேட்டையாடப்படும் மானாக, வித்தை காட்டும் புலியாக, கிளியாக நடத்தப்படுகின்றாள். பெண்ணுக்கு எல்லா நிலைகளிலும், எல்லா இடங்களிலும் சமஉரிமை வழங்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டுதான் திராவிடர் கழகம்,

பெண்ணுக்குச் சமஉரிமை வழங்குக
பெண்ணுக்கு உரிமை வேண்டும்
மண்ணுக்கு வளமை வேண்டும்

என்பன போன்ற தொடர்களை எழுதியுள்ளது. மண் வளமாக இருந்தால் தான் அதில் போடப்படும் விதைகள் பலன் தர முடியும். பெண் சமஉரிமை உடையவளாக இருந்தால் தான் இச்சமுதாயம் சிறந்து விளங்க முடியும். இங்கு,

"பெண்ணடிமை தீருமட்டும்
பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீருவதும்
முயற் கொம்பே"[8]

என்ற பாரதிதாசனின் வரிகள் நினைவுகூரத்தக்கதாகும்.

வரதட்சணை எதிர்ப்புத் தொடர்கள்

திருமணத்தின் போது பெண் வீட்டாரிடம் பணத்தையும், பொருட்களையும் வலுக்கட்டாயமாக வாங்கிவரும் முறையே வரதட்சணை. இது முன்னாளில் சீதனம் என வழங்கப் பெற்றது. இச்சீதனம் எவ்வாறு தோன்றியது என்பதை, செ. கணேசலிங்கன்,

"நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில்தான் பெண்களின் திருமணத்தின் போது சீதனம் வாங்கும் முறை ஏற்பட்டது. சொத்துடைமை ஆண் வழியாக இருந்தபோது பெண்ணை மற்றொரு குடும்பத்துக்கு மணமகளாக அனுப்பும் வேளைக்கு நிலப் பிரபுக்கள் தமது அந்தஸ்தை நிலைநாட்டச் சீர்கள்

---

7. **புறநானூறு**, பாடல் : 312.

8. பாரதிதாசன், **பாரதிதாசன் கவிதைகள்**, ப. 3

வழங்கினர்; பரிசுகள் தந்தனர். இன்று இவ்வழக்கம் கட்டாயச் சீதனம் பெண்ணுடன் வழங்கப்படுவதை வலியுறுத்துகிறது. ஒவ்வொரு சாதியிலும் சீதனம் (அல்லது சீர்) வழங்குவது வெவ்வேறு வடிவமாக உள்ளது"[9]

என்று கூறுகின்றார். இந்தச் சீதனமே இன்று இங்கு வரதட்சணையாக வளர்ச்சி பெற்றுள்ளது எனலாம். இது குறித்துப் பாரதியார்,

"மானமுடைய தேசங்களிலே சீதனம் கொடுத்தல் பெண்களின் பெற்றோர் செய்வது சாதாரணமேயாம். ஆனால் மாப்பிள்ளைகளுக்கு விலைத்தரங்கள் போட்டு. இன்ன பரீக்ஷை தேறினவனுக்கு இத்தனை ரூபாய் கிரயம் என்று முடிவு செய்து வைத்து அதன்படி விவாஹங்கள் நடத்தும் வழக்கமில்லை. சீனா, ஜப்பான், நவீன பாரசீகம் முதலிய எல்லா மனுஷ்ய தேசங்களிலேயும் விவாஹம் அன்பையே ஆதாரமாகக் கொண்டு செய்யப்படுகிறது. இங்கே, பணத்துக்காக விவாஹங்கள் செய்து கொள்ளுகிறார்கள் . . . . . மாப்பிள்ளைகளோ உயர்ந்த கிரயங்கள் கொடுத்தாலொழிய அகப்படுவதில்லை"[10]

என்று கூறுகின்றார். வலுக்கட்டாயமாக வாங்கப்படும் இந்த வரதட்சணையைக் கண்டித்துத்தான் திராவிடர் கழகம்,

வரதட்சணை என்பது சமூகக் கொடுமை
திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிற தென்றால்
ரொக்கத்தால் நிச்சயிப்பது ஏன்?

என்பன போன்ற தொடர்களை எழுதியுள்ளது.

வீட்டுக்கு வரும் மருமகளிடம் பெறும் பணத்தைக் கொண்டே தமது சமூகநிலையையும், பொருளாதார நிலையையும் பெருக்கிக் கொள்ளலாம் என்று பலர் நினைக்கின்றனர். இந்த நினைப்பு நிறைவேறாத இடங்களில் ஸ்டவ்கள் வெடிக்கின்றன. எனவே தான் திராவிடர் கழகம்,

மாமியார் பற்ற வைக்கும் போது வெடிக்காத ஸ்டவ்
மருமகள் பற்றவைக்கும்போது வெடிக்கும் மர்மம் என்ன?

என்ற தொடரை எழுதியுள்ளது.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்"[11]

என்றார் பாரதியார். இன்றோ மாதரை வரதட்சணைக் கொடுமையால் இழிவு படுத்துகின்றனர். மடமையைக் கொளுத்துவதை விட்டுவிட்டு அவளைக் கொளுத்துகின்றனர்.

---

9 செ. கணேசலிங்கம், **பெண்ணடிமைதீர**, ப. 63.
10 சி. சுப்பிரமணியபாரதி, **பாரதியார் கட்டுரைகள்**, பக். 267.-268.
11 சி. சுப்பிரமணியபாரதி, **பாரதியார் கவிதைகள்**, ப. 180.

மருமகள் என்னும் பெண்ணின் கொடுமைக்கு மாமியாரே காரணம் என்பதனால்தான் திராவிடர் கழகம்.

மாமியாரே! நீயும் முன்னாளில் ஒரு மருமகள் தான்

என்னும் எச்சரிக்கைத் தொடரை எழுதியுள்ளது.

அண்மைக் காலமாகப் பெண்ணின் குணத்தை நாடாமல் பணத்தை நாடும் போக்கு அதிகரித்து வருகிறது. நல்ல பெண்ணாய் இருப்பினும் கேட்ட வரதட்சணை கொடுக்கவில்லை என்பதற்காக அவள் மறுக்கப்பட்டிருக்கின்றாள். நல்ல பெண்ணாய் இல்லாமல் இருப்பினும் அவளிடம் பணம் குவிந்திருந்தால் அவள் ஏற்கப் பட்டிருக்கின்றாள். திருமணத்திற்கு விலக்காவோரைக் குறித்துக் கூறுகையில் திரு. வி. கலியாணசுந்தரனார்,

> "பெண்மையை விரும்பாது பொருட்காதல் மட்டுங் கொண்டு. 'இவ்வளவு ஆயிரம் கொடுத்தால் பெண்ணைக் கொள்வேன்' என்று சொல்வோனும் விலக்கானவனே... என்னை? அவனது காதல் பொருளைப் பற்றிக் கிடக்குமேயன்றிப் பெண்ணைப் பற்றிக் கிடப்பதில்லை. மேலும் அன்னான் பொருளின் பொருட்டு மற்றொரு பெண்ணை நாடினும் நாடுவன். இந்நாளில் பொருள் மணங்கள் பல நடைபெறுகின்றன. இம்மணங்கள் அன்பற்றனவாம். பெண் வாழ்விற்கெனப் பெற்றோர் அன்பால் பொருள் கொடுக்கலாம். அது வேறு. பொருட்கு முதன்மை அளித்து. 'இவ்வளவு வேண்டும்' என்று வலியுறுத்துவது பெண்ணின் நுண்மை யுணர்ந்து மணஞ் செய்வதாகாது"[12]

என்பார் அழகுக்காகவோ. பணத்திற்காகவோ ஒரு பெண்ணை மணப்பது அடித்திருக்கும் வர்ணத்திற்காக வீட்டை விலைக்கு வாங்குவதற்கு ஒப்பாகும். பொன்னுக்காகவும். பொருளுக்காகவும் பெண்ணை மணக்க விரும்புவோனை மறுதலிக்க வேண்டும் என்ற உண்மையை உணர்ந்துதான் திராவிடர் கழகம்,

பெண்ணே உன்னை நாடாமல்
பொன்னையும் பொருளையும்
நாடுபவனை ஏற்றுக் கொள்ளாதே

என்ற தொடரை எழுதியுள்ளது

ஆடவனைப் பெற்றவர்கள் தம் பிள்ளைக்கு அதிக விலை கேட்கின்றனர். பெண்ணைப் பெற்ற பரிதாப ஜீவனோ சில சமயங்களில் தன் பெண்ணுக்கு ஒரு மணமகனைத் தேடுவதற்குள் அனைத்தையும் விற்க நேரிடுகிறது. சில சமயங்களில் பிச்சைக்காரனாகவும் ஆகிவிட வேண்டியிருக்கிறது. இந்தியக் குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் மகள் என்பவள் பெருந் தொல்லையாகக் கருதப்படுகிறாள். தமிழகத்தில் கூட உசிலம்பட்டியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஒரு பழக்கம்

12. திரு. வி. கலியாண சுந்தரனார். **பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை**. ப. 211.

இன்றும் வழக்கத்தில் உள்ளது. பெண் குழந்தை பிறந்தவுடன் அதன் மெல்லிய இதழ்களிடையே கொதித்துக் கொண்டிருக்கும் கருவாட்டுக் குழம்பினை ஊற்றிக் கொன்று விடுகின்றனர். இதே போலத் திருமங்கலத்தை அடுத்துள்ள சிற்றூர்களில் பெண் குழந்தை பிறந்தவுடன் அவர்களது இதழ்களுக்கிடையே பச்சை நெல்லை வைத்து உறங்க வைப்பர். காலையில் குழந்தை இறந்து விடும். இத்தகைய தவறுகள் பெண்களின் சம்மதத்தின் பேரிலேயே நிகழ்கின்றன. இப்படிப்பட்ட கொடூரங்களுக்குக் காரணம் அவள் குடும்பத்திலுள்ள பொருளாதாரச் சிக்கலே; அதாவது எதிர்காலத்தில் அவளால் தோன்றவிருக்கும் வரதட்சணைச் சிக்கலே எனலாம்.

பிறக்கும் குழந்தை ஆணாக இருந்தால் மண்ணில் பட்டால் மாசுபடும் என்று கண்ணில் வைத்துக் காக்கிறார்கள். பெண்ணாக இருந்தாலோ மண்ணில் பட்டால் தமக்கு மாசு உண்டாகும் என்று கருதியோ என்னவோ பெற்றோர்கள் அம்மண்ணுக்கே இரையாக்குகிறார்கள். இத்தகைய தவறுகளையெல்லாம், மனமறிந்து செய்யும் குற்றங்களையெல்லாம் தாங்கிக் கொள்வதால் தானோ என்னவோ பெண்ணினத்தின் பெயரால் இந்தப் பூமியைப் 'பூமா தேவி' என்று அழைத்துப் பொறுமையின் சின்னமாக ஆக்கிவிட்டார்கள்.

சில பெண்கள் தவறு செய்யும் இத்தகைய நிலையினைக் கண்டு பல பெண்கள் கொதித்து எழாமல் இருக்கும் நிலையினைத் திராவிடர் கழகம் உணர்ந்து தான்,

> பெண்ணே உனக்கொரு நீதி
> ஆணுக்கொரு நீதியா?
>
> வாழத்துடிக்கும் இளம் பெண்ணே
> வரதட்சணையை எதிர்த்துப் போராடு

என்பன போன்ற தொடர்களை எழுதியுள்ளது. இவற்றுள்,

> பெண்ணே உனக்கொரு நீதி
> ஆணுக்கொரு நீதியா?

என்னும் தொடரில் இன்னொரு உண்மையும் மறைந்துள்ளது.

மனைவியை இழந்தவன் மறுமணம் செய்து கொள்ளலாம். கணவனை இழந்தவள் அப்படிச் செய்ய முடியாது; கூடாது. காரணம் ஆணின் அடக்கியாளும் பண்பேயன்றி வேறில்லை. இளம் வயதிலேயே கணவனை இழந்தால் அப்பெண் விரும்பும் சமயத்தில் அவளுக்கு மறுமணம் செய்விப்பது தவறல்ல. திரு. வி. கலியாண சுந்தரனார் கூட

> "பெண்மகள் கைம்மை எய்தினால் என்ன? ஆண்மகன் அந்நிலை எய்துவதில்லையோ? பெண்மகள் கைம்மை எய்தியதும் அவள்பாலுள்ள இயற்கை ஓடிவிடுகிறதோ? உயிர் போய் விடுகிறதோ? கடவுள் மறைந்து விடுகிறாரோ? படைப்பில் என்ன குறைவு ஏற்படுகிறது? அவள் 'எதிரில் வரக்கூடாதாம் :

கூட்டங்களில் போகக் கூடாதாம் ; நல்வினைகளில் தலைகாட்டக் கூடாதாம் ; உடையையும் உணவையும் சுருக்கல் வேண்டுமாம் ; அப்பெண் மூதேவியாய் விட்டாளாம் ; கைம்மை எய்திய ஆண்மகனோ எல்லாவற்றினுங் கலந்து கொள்ளலாம் ; அவன் பல்லிழந்த முதியனாயினும் பதினாறு வயதுக் கட்டழகியை மணஞ்செய்யலாம் ; என்ன வேற்றுமை ; இவ்வேற்றுமை இயற்கையில் உள்ளதா? கடவுள் கண்டதா? இஃது இரக்கமிலா வன்கணாளர் இடைக்காலத்தில் விதித்த கொடுமை! கொடுமை!"[13]

என்று ஆவேசப்படுகின்றார். மறுமணத்தில் ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் வழங்கப்பெறும் நிலையை உணர்ந்துதான் திராவிடர்-கழகம்.

பெண்ணே உனக்கொரு நீதி
ஆணுக்கொரு நீதியா?

என்னும் தொடரை எழுதியுள்ளது எனலாம்.

வரதட்சணையைக் கண்டிக்கும் திராவிடர் கழகத்தின் தொடர்களுள்,

வரதட்ச்ணை வாங்குவதும் கொலைக் குற்றமும்
ஒன்றாகும்

என்பதும் ஒன்றாகும். இதில் வேண்டுகோள் ஒன்று மறைந்திருக்கிறது. அதாவது கொலை செய்பவர்களுக்கு அளிக்கப்படும் தண்டணை வரதட்சணை வாங்குபவர் களுக்கும் அளிக்கப்படும் என்று அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்பதாகும். இப்படிச் செய்வதன் மூலம் வரதட்சணை வாங்குவோர் எண்ணிக்கை குறையலாம். 'வரதட்சணை வாங்குவது தவறு' என்று சட்டம் இருக்கிறது. இருந்து என்ன பயன்?

திட்டம் போட்டுத் திருடுற கூட்டம்
திருடிக் கொண்டே இருக்குது - அதைச்
சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம்
தடுத்துக் கொண்டே இருக்குது

(படம் : திருடாதே)

பொருளுக்கு உரியவனுக்குத் தெரிந்தே திருடுகிற கூட்டம்தான் வரதட்சணையை வலுக்கட்டாயமாக வாங்கும் கூட்டமாகும். இத்தகைய கூட்டத்தின் திருட்டை ஒழிக்கச் சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும் என்று திராவிடர் கழகம் கருதுகிறது எனலாம்.

முரண்பாடான தொடர்

"ஆண்கள் முயற்சியால் செய்யப்படும் எவ்வித விடுதலை இயக்கமும் எவ்வழியிலும் பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்க முடியாது . . . பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாக

---

13 திரு. வி. கலியாண சுந்தரனார், **பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை,** ப. 290.

வும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல"[14]

என்பார் பெரியார்; இவ்வாறு கூறியவரால் தொடங்கப் பெற்றதுதான் திராவிடர் கழகமாகும். இது பெண்களின் உரிமைகளை முழங்குவதோடன்றிச் சுவர்களில்.

பெண்ணே பெண்ணே திரும்பிப்பார்
பெரியார் கொள்கையை நினைத்துப்பார்

என்றும் எழுதுகிறது.

முடிவுகள்

1. திராவிடர் கழகத்தின் சாலையோரத் தொடர்களுள் சுமார் பதினான்கு பெண்களைப் பற்றியவை ஆகும். அவற்றுள் ஏழு வரதட்சணை பற்றியவை ஆகும்.
2. பதினான்கு தொடர்களில் நான்கு தொடர்கள் பெண்களை நேரிடையாகக் கேட்டுக் கொள்ளும் தொடர்களாகும். எஞ்சிய பத்துத் தொடர்களும் அவர்களது உரிமை. வலிமை போல்வனவற்றை வலியுறுத்துவாகும்.
3. தொடர்கள் உரைநடையிலோ. கவிதை நடையிலோ அமையாது பெரும்பாலும் கவிதை கலந்த உரைநடையில்தான் அமைகின்றன எனலாம்.
4. திராவிடர் கழகத்தின் தொடர்கள் அதன் கொள்கைகளோடு சம்பந்தப் பட்டவைகளாகவே பெரும்பாலும் அமைகின்றன. அவை உணர்த்தும் உண்மைகள் பெரும்பாலும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளாகவே இருக்கின்றன.
5. திராவிடர் கழகம் இத்தகைய தொடர்களைச் சுவர்களில் எழுதக் காரணம் மக்கள் பார்வையில் விழும் என்பதாலும் அதன் மூலம் அவர்களிடையே விவாதங்கள் எழும் என்பதாலும் ஆகும்.
6. திராவிடர் கழகத்தைப் போல வேறு எந்த இயக்கமும் மக்களுடைய தேவைகளை. குறிப்பாகப் பெண்களுடைய கோரிக்கைகளை இவ்வளவு பரவலாகச் சுவர்களில் எழுதியதாகத் தெரியவில்லை.
7. விதவை மணத்தை ஆதரிக்கும் தி. க. அதுபற்றிய தொடர்களை எழுதுவதில் அவ்வளவாக ஆர்வங் காட்டவில்லை.
8. பெண்ணினம் எவ்வாறு விடுதலை பெறும். அதற்கான தீர்வு என்ன என்பது பற்றிய தொடர்களை எழுதவில்லை.
9. பொருளாதாரத்தில் சிக்கித் தவிக்கும் மனித இனம் அதிலிருந்து ஒட்டு மொத்தமாக மீளும் போதுதான் பெண்ணினமும் விடுதலை பெறும். அதற்காகத் திராவிடர் கழகம் போராடினாலும் சமூக மாறுதலை அது பெண் விடுதலையுடன் பார்க்கவில்லை. ஏனெனில் சமுதாய மாற்றம் என்பது அணுகுண்டல்ல. போட்டவுடன் வெடிப்பதற்கு. அத்தகைய சமுதாய மாற்றங்கள் நிகழும் வரை பெண்ணின் உரிமைகளும். அடிமைத் தனங்களும் சுட்டிக் காட்டப்பட வேண்டும்.

14 ஈ. வெ. இராமசாமி (பெரியார்). **பெண் ஏன் அடிமையானாள்?**. பக். 82. 83.

எ. ஜான்சன் ரெத்தினசாமி
ஆய்வாளர்
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தஞ்சைத் திருப்பணி அறிக்கை - ஓர் ஆய்வு

முன்னுரை

கிறித்தவத் திருச்சபைகளை இந்தியாவில் தொடங்கிய திருத்தொண்டுப் பணியாளர்கள் தங்களது பணிகளை, பணியிடங்களை, பார்த்த மக்களை, பழக்கவழக்கங்களைப்பற்றித் தங்களது தினப் பதிவேடுகளிலும், நாட்குறிப்புகளிலும், கடிதங்களிலும் பதிவு செய்துள்ளனர். அப்பதிவுகள் இன்று ஆராயப்படவேண்டிய பெரிய ஆழ்கடலாகவும், ஆராய்ச்சியாளர்களை வரவேற்கிற பெரிய ஆவணப் பெட்டகங்களாகவும் உள்ளன என்றால் மிகையாகாது. இதனடிப்படையில் எத்தனையோ செய்திகள் இருந்தாலும் 1836இல் தஞ்சைத் திருச்சபையில் திருத்தொண்டர்கள் (Missionary) செயல்படுத்திய திருத்தொண்டுகள், பள்ளிகள் அக்கால ஆசிரியர்கள், உபதேசியார்கள், மாணவ மாணவிகளின் எண்ணிக்கை போன்ற விவரங்களை உரிய ஆவணங்களின் அடிப்படையில் இக் கட்டுரை ஆராய்கிறது.

தஞ்சையில் கிறித்தவம்

தஞ்சையில் கிறித்தவம் 16ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இயேசு சபையினரால் (Jesuits) தொடங்கப்பட்டது. அப்பொழுதிருந்த மன்னர்கள் தஞ்சையில் கிறித்தவத்தை அனுமதிக்கவில்லை. இதனால் பலவித உயிர் இழப்புகளையும் சிறை வாசங்களையும் திருத்தொண்டர்கள் அனுபவிக்க வேண்டி இருந்தது. இக்கால கட்டங்களில் தஞ்சையின் அரண்மனைப் பணியாளரான இராசநாயக்கன் (1700 - 1771) என்ற உரோமன் கத்தோலிக்கர் தரங்கையில் பதிப்பிக்கப்பட்ட புதிய ஏற்பாட்டை 1727இல் பெற்றார். அவர் அதில் ஆர்வம் கொண்டவராகத் தரங்கை சென்று, தரங்கை லுத்தரன் சபையில் தன்னை இணைத்துக் கொண்டார். அங்கு அவருக்கு உபதேசியராகப் பயிற்சியளிக்கப்பட்டுத் தஞ்சைக்கு அனுப்பப்பட்டார். ஏனெனில் தஞ்சைக்குள் எந்த வெளிநாட்டுத் திருத்தொண்டரும் 1727 வரை அனுமதிக்கப்படவில்லை. சீகன்பால்கு பாதிரியார் இந்தியரைப் போல உடையணிந்து தஞ்சைக்குள் நுழைய முனைந்த போது, அவர் எல்லையில் தடுத்து நிறுத்தப்பட்டு, திருப்பி அனுப்பப்படுகிறார். தஞ்சை மண்ணின் மைந்தரான

இராசநாயக்கன் மூலம் தான் தஞ்சையில் சீர்திருத்தத் திருச்சபை 1727இன் பிற்பகுதியில் தொடங்குகிறது. இதுபற்றிய செய்திகள் பனைவோலையில் எழுதப்பட்டுள்ளன. இச்சுவடி ஜெர்மனியின் ஹல்லே (Halle) பல்கலைக்கழக ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருவதைக் காணலாம்.

1728இல் தெலுங்கு ராசா என்ற மன்னர், தரங்கையிலிருந்து பிரஸ்ஸிர் (Pressier) என்ற திருத்தொண்டரை, தன் மகள் திருமணத்திற்குத் தஞ்சைக்கு அழைக்கிறார். இவர்தான் தஞ்சைக்குள் நுழைந்த முதல் லூத்தரன் திருச்சபையின் வெளிநாட்டுத் திருத்தொண்டர். இவரைத் தொடர்ந்து சுவார்ட்சு பாதிரியார் (1726 - 1798), பெர்சிவல் பாதிரியார், ஹாப்ரோ பாதிரியார் (1791 - 1827), G. U. போப் பாதிரியார் (1820 - 1908), பவர் பாதிரியார் (1813 - 1889) போன்றோர் எஸ். பி. சி. கே. எஸ். பி. ஜி என்ற திருத்தொண்டுச் சங்கங்களுடன் (Mission Boards) இணைந்து செயல்பட்டனர். இவர்கள் அவ்வப்பொழுது தலைமையகத்துக்குத் தங்களது பணியின் செயல்களை, முன்னேற்றங்களை, வளர்ச்சிகளை அறிக்கையாக அளித்து வந்துள்ளனர். இத்தகைய அறிக்கைகளை, நாட்குறிப்புகளை உலகமெங்கிலும் உள்ள பல நினைவரங்குகளிலும், ஆவணக் காப்பகங்களிலும் இன்றைக்கும் பாதுகாத்து வருகின்றனர். அவற்றுள் இராயல் டேனிஷ் நூலகம், கோப்பன்கேஹன், இலண்டனில் உள்ள இந்திய அலுவலக நூலகம், ஜெர்மனியில் உள்ள ஹல்லே பல்கலைக்கழகம், மற்றும் ஃபிராங்கே பவுண்டேஷன் போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இவற்றில் ஆய்வுகளை மேற்கொண்டு தமிழகம், தமிழ் மக்கள், தமிழ்ப் பண்பாடு தொடர்பான பல செய்திகளை வெளிக் கொணரலாம். இவ்வரிசையில் அண்மையில் கிடைத்த தஞ்சைத் திருப்பணியின் 1836ஆம் ஆண்டு ஆண்டறிக்கையாகும். இதில் பணி விவரங்களின் மூலம் அப்போதைய திருப்பணிகளையும், திருப்பணி ஆற்றும் முறைகளையும் அறியமுடிகின்றன. இவ்வாண்டறிக்கை எந்தப் பாதிரியாரால் எழுதப்பட்டது என்று அறிய இயல வில்லை. ஆனால் 1836இல் ஹென்றி பவர் என்ற பாதிரியார் பணியாற்றியுள்ளார். ஆகவே அவர் இதனை எழுதி இருக்க முடியும் என எண்ண முடிகிறது.

1836இன் அரையாண்டு அறிக்கை

இவ்வறிக்கை 1836 சனவரி 01 முதல் சூன் 30 வரை ஓர் அரையாண்டு அறிக்கையாகவும், சூலை 01 முதல் திசம்பர் 31 வரை இரண்டாம் அரையாண்டு அறிக்கையாகவும் எழுதப்பட்டுள்ளது. தஞ்சைத் திருத்தொண்டுப் பணியானது (Tanjore Mission) நான்கு வட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை தஞ்சை வட்டம், இடம் பெயர்ந்து சென்றோர் வட்டம், இராசகிரி வட்டம், கொள்ளிடம் வட்டம் என்ற நான்காகும். மேலும் திருப்பணி என்பதை ஆலயம், ஆன்மிகம் என்று மட்டும் குறிக்காமல் பள்ளிகள், மாணவ மாணவியர் எண்ணிக்கை, ஆசிரியர் ஆசிரியைகளின் விவரம், அவர்களது ஊதிய விவரம், பள்ளிகளின் கட்டிட நிலை போன்ற விவரங்கள் அதில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டத்திலும் இருந்த கிராமங்கள், கிறித்தவ மக்கள், அவற்றில் ஆண்கள், பெண்கள், பள்ளியில் பயிலும் குழந்தைகள், அவர்களிடம் திருப்பணி ஆற்றிய தமிழ்ப் பாதிரியார்கள் (Nattive Priest) உபதேசியார் போன்றோர் விவரங்கள் ஒவ்வொரு வட்டங்கள் வாரியாக அறிக்கையாக அளிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் அறிக்கையாகக் கிறித்தவர் எண்ணிக்கை, பணியாற்றிய உபதேசியார்கள் போன்றோர் விவரமும்; இரண்டாவது அறிக்கையாகப் பள்ளிகள் பற்றிய விவரங்களும்; மூன்றாவது அறிக்கையாகப் பிறப்பு, இறப்பு, திருமணம், திருமுழுக்கு போன்ற விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

திருச்சபை

தஞ்சையைத் தலைமையகமாகக் கொண்டு களிமேடு அதனுடன் 3 கிராமங்கள், வல்லம், சத்திரம், அணைக்காடு, ஆதனூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், கூடலூர், பசுபதிகோயில் வரதப்பன் பேட்டை, பூதலூர், சித்திரை குடியுடன் 3 கிராமங்கள், விண்ணமங்கலம், புதுப்பட்டி, குமுளூர் கும்பகோணம், ஆரமுண்டான்பட்டி, மெய்ஞானபுரம், அடைஞ்சூர், பனையக் கோட்டை, சடையங்கால் ஆகிய ஊர்களில் திருச்சபைகள் இருந்துள்ளன. இவர்களுக்குப் பணியாற்றிய தமிழ்ப் பாதிரியார்கள் ஞானப் பிரகாசம், பாக்கிய நாதன், விஸ்வநாதன் என்பவர்கள் ஆவர். இவர்களோடு பணியாற்றிய உபதேசியார்கள் தாமஸ், பவுல் (Paul), சாலொமோன், ஈசாக் (Isac), கனகராயன், நல்லதம்பி, பிச்சை முத்து, ஞானப் பிரகாசம், அருமைநாயகம், சாந்தப்பன், தானியேல், தேவசகாயம், கிறிஸ்டியான், குருபாதம், ஆபிரகாம், மிகாவேல், இயேசுவடியான், இஸ்ரவேல், ஞானாபரணம் ஆகியோர் ஆவர். தஞ்சை வட்டத்தில் ஆண்கள், பெண்கள் குழந்தைகள் சேர்த்து 1457 கிறித்தவர்கள் இருந்துள்ளனர். இவற்றில் 611 குழந்தைகள் பள்ளியில் பயின்றுள்ளனர்.

பள்ளிகள்

ஊர்	ஆசிரியர்	மாதச் சம்பளம் ரூ - அணா
களிமேடு	கனகராயன்	5 - 12
வல்லம்	மதுரநாயகம்	3 - 00
	ஜேசுதாசன்	3 - 12
பூதலூர்	தேவசகாயம்	4 - 00
புதுப்பட்டி	பாக்கிய நாதன்	3 - 08
கூடலூர்	சாந்தப்பன்	3 - 08
சீராளூர்	தேவசகாயம்	3 - 08
கண்ணைந்தங்குடி	மாசில்லாமணி	3 - 08
	குருபாதம்	1 - 08
மெய்ஞானபுரம்	தாவீது	அரிசி மட்டும்
பனையக்கோட்டை	ஆபிரகாம்	5 - 04
சடையங்கால்	நல்லதம்பி	3 - 12
அணைகாடு	மைக்கேல்முத்து	3 - 8
சாளுவநாயக்கபட்டினம்	E. பெஞ்சமின்	4 - 00
ராமநாதபுரம்	E. ஞானப்பிரகாசம்	14 - 00
வரதப்பன் பேட்டை	ஞானாபரணம்	3 - 8
கும்பகோணம்	E. பாக்கியநாதன்	7 - 00
	J. அருளானந்தம்	3 - 08

611 பள்ளிக் குழந்தைகட்குத் தஞ்சை வட்டத்தில் 18 ஆசிரியர்கள் பாடம் கற்பித்துள்ளனர். இவர்கட்கும். தஞ்சையின் மையப் பள்ளியில் ஆசிரியப் பணியாற்றிய ஆங்கில ஆசிரியர் ஐவர். தமிழாசிரியர் எழுவர். பெண்கள் தையல் ஆசிரியை இருவர் இவர்கட்கும் சேர்த்துச் சம்பளத்துக்கு ஒவ்வொருமாதமும் செலவிடப்பட்ட தொகை ரூ 341. 08 அணா ஆகும். இப்பள்ளிகளில் சில சொந்தக் கட்டிடத்திலும். ஆலயத்திலும். வாடகை வீடுகளிலும் நடத்தப் பட்டுள்ளன. குறிப்பிட்டுள்ள சில ஊர்களை இப்போது கண்டு பிடிக்க இயலவில்லை. இதனைத் தொடர்ந்து தஞ்சை வட்ட அறிக்கையில் அவ்வாண்டு நிகழ்ந்த திருமணம். திருமுழுக்கு. திருவிருந்து போன்ற விவரங்களும் துல்லியமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்து சென்ற தஞ்சை மக்கள் வட்டம்

தஞ்சையின் மையத் திருப்பணி மூலம் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு. பணி காரணமாக வேற்று ஊர்களில் தங்கியிருந்த மக்கள். உபாத்தியாயர். உபதேசியார்களது விவரங்களை இவ்வறிக்கை கூறுகிறது. இவ்வட்டம் தொடர்புடைய ஊர்களாவன: பாபநாசம். திருப்பலாய்த் துறையுடன் இரண்டு கிராமங்கள். காளபோகம் அதனுடன் ஐந்து குக்கிராமங்கள். கபித்தலம். தாராசுரம். கஞ்சனூர். தேரழுந்தூர். விட்டலூர். முளையூர். நாங்கூர். மணிகிராமம். சரபோசிராசபுரம். (80 மைல்) குமார மங்கலம் (75 மைல்) வதிஷ்டர்குடி. லெட்சுமாங்குடி மற்றும் கூத்தா நல்லூர் ஆகிய ஊர்களை விசுவாசம் என்ற தமிழ்ப் பாதிரியார் (Native Priest - நாட்டையர்) கண்காணித்து வந்துள்ளார். மேற்சொன்ன ஒவ்வொரு கிராமங்களிலும் உபதேசியார்களாகச் சத்தியநாதன். தவசியப்பன். பிச்சைமுத்து. தேவபிரசாதம். தாவீது. காபிரியேல். வரதப்பன். பரமானந்தம். வரதமுத்து. தேவநேசன். மதுரநாயகம் மற்றும் ஜவான் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இவ்வூர்களில் கள ஆய்வுகள் மேற்கொண்டால் பல செய்திகள் கிடைக்க வாய்ப்புள்ளது. மேற்சொன்ன ஊர்களில் ஆண்கள். பெண்கள். குழந்தைகள் சேர்த்து 1217 கிறித்தவர்கள் இருந்துள்ளனர். மேற்சொன்ன பல ஊர்களில் இன்று ஆலயமோ. பள்ளியோ இருந்ததற்கான அடிச் சுவடுகள் எதுவும் இல்லை. இவ்வட்டத்தில் 11 மிஷன் பள்ளிகள் இருந்துள்ளன

பள்ளிகள் விவரம்

ஊர்	ஆசிரியர்	சம்பளம் ரூ - அ
பாபநாசம்	மதுரநாயகம்	3 - 00
	நாராயணசாமி	3 - 08
திருப்பலாய்த்துறை	தைரியநாதன்	3 - 08
புதுப்படையூர்	சாந்தப்பன்	3 - 08
கஞ்சனூர்	தாவீது	3 - 04
விட்டலூர்	சத்தியநாதன்	3 - 04
முளையூர்	தேவப்பிரசாதம்	3 - 08
மணிகிராமம்	வேதநாயகம்	3 - 08
சரபோசிராசபுரம்	தேவசகாயம்	3 - 08
நாங்கூர்	தேவநேசம்	3 - 08
குமார மங்கலம்	தேவவியாசர்	3 - 08

தேரழந்தூர்	காபிரியேல்	3 - 08

இவ்வூர்களில் மொத்தம் 133 மாணாக்கர் கல்வி பயின்றுள்ளனர். ஆசிரியர்கட்கு ஊதியமாக ரூ 62. 12 அணா மொத்தமாகச் செலவிடப்பட்டுள்ளது.

இராசகிரி வட்டம்

திருச்சபை

இராசகிரியை மையமாகக் கொண்டு சுங்கான்திடல், அம்மன் பேட்டை, தண்டான் கோரை, வீரசிங்கம் பேட்டை, இராசகிரி, மாங்குடி, திருப்பூந்துருத்தி, பள்ளியேறி, செங்கிப்பட்டி ஆகிய இடங்களில் சொந்தமாக இடம் வாங்கப்பட்டு ஆலயங்களும், பள்ளிகளும் இருந்துள்ளன. இவற்றில் இன்றும் அம்மன் பேட்டை, மாங்குடி, திருப்பூந்துருத்தி, பள்ளியேறி ஆகிய இடங்களில் ஆலயங்கள் உள்ளன. இந்த ஊர்கள் பாக்கியநாதன் என்ற தமிழ்ப் பாதிரியாரின் கண்காணிப்பில் இருந்துள்ளன. ஈசாக்கு, பரமானந்தம், பிச்சானந்தம், ஞானாதிக்கம், நல்லதம்பி, இராயப்பன் ஆகியோர் உபதேசிகளாகப் பணி செய்துள்ளனர். ஆண்கள், பெண்கள், சிறுவர் என 187 பேர் திருச்சபையில் இருந்துள்ளனர். 111 சிறுவர், சிறுமியர் பள்ளிகளில் கல்வி பயின்றுள்ளனர்.

இராசகிரி வட்டப் பள்ளிகள்

பள்ளி	ஆசிரியர்கள்	ஊதியம் ரூ - அ
அம்மன்பேட்டை	பிச்சைமுத்து	3 - 8
தண்டான் கோரை	பரமானந்தம்	3 - 12
இராசகிரி	சவரிமுத்து	3 - 8
மாங்குடி	நல்லதம்பி	3 - 12
வீரசிங்கம்பேட்டை	பிச்சானந்தம்	3 - 8
பள்ளியேறி	பாக்யநாதன்	4 -
செங்கிப்பட்டி	சவரி முத்து	3 - 8

40ரூபாய் 4 அணா அவர்கட்கு ஊதியமாக ஒவ்வொரு மாதமும் செலவிடப்பட்டுள்ளது.

கொள்ளிடம் வட்டம்

கொள்ளிடக் கரையில் இருக்கும் மேட்டுப் பட்டி, விரகாலூர், புதுக்கோட்டை, குலமாணிக்கம், கோக்குடி, பூண்டி, கல்லகுடி ஆகிய ஊர்களில் பணியாற்றியுள்ளனர். இராசகிரி வட்டத்தைக் கண்காணித்த பாக்கியநாதன் பாதிரியாரே இதனையும் கவனித்துள்ளார். இவருடன் பணியாற்றிய உபதேசிகள் இன்னாசிமுத்து, சின்னப்பன், சின்னான், இராயப்பன், சவரிமுத்து மற்றும் முத்துசாமி என்பவர்கள். ஆண்கள், பெண்கள் சிறுவர் என 463 கிறித்தவர்கள் இருந்துள்ளனர். பள்ளியில் பயின்ற மாணாக்கர் 83 பேர்கள்.

கொள்ளிடம் வட்டப் பள்ளிகள்

பள்ளி	ஆசிரியர்	ஊதியம்
		ரூ அ
மேட்டுப்பட்டி	இன்னாசி முத்து	5 - 0
விரகாலூர்	சின்னப்பன்	3 - 0
	இன்னாசி	5 - 0
குலமாணிக்கம்	சின்னான்	5 - 0
கோக்குடி	திருச்செல்வம்	5 - 0
பூண்டி	இராயப்பன்	4 - 0
கல்லக்குடி	முத்துசாமி	3 - 8

சம்பளம் மொத்தத்தில் ரூ 41. 6 அணா மாதம் செலவிடப் பட்டுள்ளது.

முடிவுரை

இக்கட்டுரையில் ஊர்கள், நபர்கள், ஊதியங்கள் மட்டும் குறிப்பிட்டிருந்தாலும் தொடக்கக் கல்வியை இந்த 2000ஆம் ஆண்டில் நூறு விழுக்காடு இன்றளவும் தர இயலாத நிலையில் 164 ஆண்டுகளுக்கு முன் இன்றும் குக்கிராமங்களாக இருக்கிற இவ்வூர்களில் தொடக்கக் கல்விக்காகத் தஞ்சைத் திருப்பணித் தலைவர்கள் செய்துள்ள பங்களிப்பு இன்றைக்கு மேற்குறித்துள்ள எல்லா ஊர்களிலிருந்தும் படித்தவர்கள் உருவாகி உலகின் பல இடங்களில் உள்ளனர் என்பது மறைக்க, மறுக்க முடியாத உண்மை எனலாம். தஞ்சையைச் சுற்றி எல்லாத் திசைகளிலும் தங்களது பணியை அவர்கள் செய்துள்ளனர். ஒவ்வொரு ஊரின் திசையும், மைல் அளவும் இவ்வறிக்கையில் கூறப்பட்டிருப்பது சிறப்பிற்குரியது. தலைமைத்துவப் பொறுப்புகளைத் தமிழர்கட்குச் சொல்லிக் கொடுத்துத் தஞ்சைத் திருப்பணியை வெற்றிகரமாகச் செயல்படுத்தியவர்கள். பதவிகளையும் பொறுப்புகளையும் பிரித்து ஒரு முன்மாதிரித் தலைவர்களாக உருவாகி உள்ளனர். ஒவ்வொரு ஊரைப் பற்றியும், விவரங்களையும் மிகத் துல்லியமாகக் கணக்கிட்டுள்ளனர். ஒவ்வொரு நபரும் மிக முக்கியமானவர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது தெரியவருகிறது.

கிறித்தவம் இறக்குமதி செய்யப்பட்ட சமயம் என்ற விமர்சனங்களுக் கிடையில் அதனை ஏற்றுக் கொண்ட இங்குள்ள ஆசிரியர்கள், உபதேசியார்கள் (Native Catechist) தமிழ்ப் பாதிரியார்கள் (Native Priest) மூலம் தான் கிராமங்களில் கல்வியும் விழிப்புணர்வும், சுயமரியாதைகளும் வளர்க்கப்பட்டன என்பதற்கு நல்ல சான்றாகும். இவ்வறிக்கையைத் தயாரித்தவர் ஓர் ஐரோப்பியர். ஆனால் அவர் குறிப்பிட்டுள்ள மக்கள் அனைவரும் தமிழ் மக்கள். ஆகவே எதுவும் இறக்குமதியோ, புகுத்தவோ செய்யப்படுவதில்லை என்பது இதன் மூலம் தெரிய வருகிறது.

இதுபோன்ற பல கையெழுத்து ஆவணங்களைக் கண்டு பிடித்துச் சேகரித்துப் பல செய்திகளை வெளிக்கொணரத் தமிழ் பல்கலைக்கழகத்தின் அரிய கையெழுத்துச் சுவடித் துறையின் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவை.

துணை நின்ற நூல்கள்

1. ஞான சாமுவேல், **தரங்கை மிசியோன் சரித்திரம்,** TPPH, சென்னை. 1955.

2. சே. சுந்தரராசன், **உலகக் கிறித்தவத் தமிழ்த் தொண்டர்,** நவமணி பதிப்பகம். அரக்கோணம். 1990.

3. சபாபதி குலேந்திரன், **கிறித்தவ வேதாகமத்தின் வரலாறு,** இந்திய வேதாகமச் சங்கம். பெங்களூர். 1967.

கட்டுரைகள்

1. தானியேல் ஜெயராசு, **Dual Identity of Tranquebar Christians,** தர்ம தீபிகா. சென்னை. 1997.

2 தானியேல் ஜெயராசு, **Indian Founders of the Protestant Church in South India,** Endowment Lecture at The Aaron Chair of Christianity, Gurukul, Chennai, 1999.

3. ——————— 1836இல் எழுதப்பட்ட தஞ்சைத் திருப்பணி ஆண்டறிக்கைப் பட்டியல்.

4. கையெழுத்துப் படிவத்தின் சில படிவங்கள்.

த. கோ. பரமசிவம்
[illegible]
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

அச்சு நூல்களுக்குப் பின்பும் ஓலைச் சுவடிகள்

மனித குலத்தின் கருத்துப் பரிமாற்றத்திற்காகத் தோன்றிய மொழி ஒலி வடிவிலேயே பன்னெடுங்காலம் இருந்தது. நாளடைவில் ஒலி வடிவத்தில் வரி வடிவங்களும் தோற்றுவிக்கப்பெற்று அவ்வொலிகள் வரி வடிவ நிலையில் பதிவு பெற்றன. எழுப்பப்பெறும் ஒலி எழுத்தானது. அதுவே எழுதப்பெறுதலின் எழுத்தாகவும் பொருள் பெற்றது. இவ்வாறு மலர்ந்த மொழி பல்வேறு பொருள்களைக் கொண்டு பல்வேறு பொருள்களின் மீது பதிவு செய்யப்பெற்றன. எழுதப்பெற்றன. மண். கல். மரம். மூங்கில். நாணல். எலும்பு. துணி. இலை. ஓலை. பட்டை. தோல். மடல். உலோகம் எனப் பல பொருள்கள் எழுது பொருள்களாக மாறின. மனித குலம் தழைத்த எல்லாப் பகுதிகளிலும் இவை வழக்கில் இருந்தன என்றாலும் சிற்சில பகுதிகளில் சில எழுதுபொருள்கள் பரவலாகவும் பெருவாரியாகவும் பயன்படுத்தப் பெற்றன. மேலை நாடுகளில் தோல். துணி. மூங்கில் போன்றன பெருவாரியாகப் பயன்பட்டன. ஆயின் கீழைநாடுகளில் மரப் பட்டைகளும். ஓலைகளும். உலோகத்தகடுகளும் அதிகம் பயன்படுத்தப் பெற்றன. இவ்வாறே எழுதுகோல்களின் வண்ணம். வடிவு போன்றனவும் மாறுபட்டன. இன்றோ உலகம் முழுவதும் ஒருபடித்தாகத் தாள்களே எழுது பொருள்களில் முதல் இடம் பெற்றுள்ளன. எழுதுபொருளாகத் தாள்கள் உற்பத்தி செய்யப் பெற்றவுடன் நூல்களின் பலபடிகளை உருவாக்கிப் பல்வேறு இடங்களுக்கும் பரவலாக்கிய பெருமை அச்சுக் கலைக்கு உரியதாம். இக்கட்டுரை அச்சு நூல்கள் தோன்றிய பிறகும் தமிழ்நாட்டில் ஓலைச் சுவடிகளில் படி எடுக்கும் வழக்கம் தொடர்ந்ததைக் காண முயல்கிறது.

தமிழ்நாட்டின் எழுதுபொருள்கள்

தொல் பழங்காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் எழுதுபொருள்களின் பதிவுகள் காணப்படுகின்றன. தொல்காப்பியர்க்கு முற்பட்ட காலத்திலும் பல்வேறு வகையிலும் தமிழ்மொழி இலக்கிய இலக்கணச் செறிவுடன் காணப்பெற்றன. எழுதுபொருள்களாக உலோகத் தகடுகள். சுவர். கற்பாறைகள். மடல்கள். துணி. ஓடுகள். ஓலைகள் பயன்படுத்தப் பெற்றன. நடுகற்களில் ஓவியமும் விளக்கமும். சிறப்பமாக வடித்த நிலை (பீடும் பெயரும் எழுதிய) தலைவியின் உருவெழுதிய கிழியைத் தலைவன் கொண்டிருந்தது. கோவலனுக்கு மாதவி எழுதிய மண்ணுடை முடங்கல்.

அகழ்வாய்வுகளில் கிடைத்த மண்பானைகளில் உள்ள எழுத்துகள். கற்பதுக்கை மற்றும் படுக்கைகளில் உள்ள வடிவங்கள். கோயிற் கல்வெட்டுகள். செப்பேடுகள் எனப் பலப்பல சான்றுகள் மிக எளிய நிலையிலேயே கிடைக்கின்றன. இவற்றையெல்லாம் ஊடுருவிக் காணும் போது பனை ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்பெற்ற வழக்கமே பெருகவும் மிகப் பரவலாகவும் இருந்தமையைத் தமிழகத்தில் உணரலாம். இன்றைய நிலையில் தாள்களின் பயன்பாடு எளிமையாகவும். பரவலாகவும் பெருகவும் இருப்பதுபோல் அன்று ஓலைகளின் பயன்பாடு இருந்திருக்கிறது. எழுதுவதற்குப் பயன்பட்ட ஓலைகளின் வகைகளும் பலவாக இருந்திருக்கின்றன. நாட்டுப் பனைஓலைகள். சீதாள. கூந்தற் பனைஓலைகள். திருநெல்வேலி ஓலைகள். யாழ்ப்பாண ஓலைகள். மலையாள ஓலைகள் எனப்பலவாகும். இவை தனித்தனியே அகலம். நீளம். பருமன் ஆகியவற்றில் வேறுபட்டும் ஓலை அமைப்பு என்பதில் ஒன்றுபட்டும் காணப்பெற்றன. பாலபாடம் படிக்கும் அரிச்சுவடி எண் சுவடிப் பயிற்சிக் காலமுதலாகப் பெருங்காவியங்களைப் படி எடுக்கும் வரை எல்லா நிலைகளிலும் இவை பயன்பட்டன.

இலக்கிய இலக்கண நூல்களோடு. மருத்துவம். சோதிடம். வானநூல். பூமிநூல். உடற்கூறு நூல்கள். வீட்டுக் குறிப்புகள். உடன்படிக்கைகள். அரச ஆணைகள். கொடைகள். பத்திரப் பதிவுகள். உரிமைச் சாசனங்கள் என அனைத்துமே ஓலைகளில் தான் கிடைக்கின்றன. அண்மையில் செங்கற்பட்டு. செங்கோட்டை. புதுக்கோட்டை. தஞ்சாவூர். குடந்தை ஆகிய ஊர்களிலிருந்து தமிழ்ப் பல்கலைக்கழகம் பெற்றுவந்துள்ள ஆவணச் சுவடிகள். நிலஅளவைகள். வரிவிதிப்பு முறைகள். கோயிற் கணக்குகள். அரசாங்க வருவாய் மற்றும் செலவுத் திட்டங்களைத் தாங்கிய பெருஞ்சுவடிகளாக - சுருணை நிலையில் உள்ளன. மூன்றடிக்கும் மேற்பட்ட நீளமுள்ள அவை ஆவணக் களரிகளில் பாதுகாக்கப் பெற்றன. அவற்றுள் பல.ஓலைகளில் காலம் குறிக்கப்பட்டுள்ளது. கி. பி. 1740 முதல் 1775 வரையிலான கணக்குகளை அவை பெற்றுள்ளன. ஒவ்வொரு மாவட்ட ஆவணக் களரியிலும் கிட்டத்திட்ட ஒரு லாரி அளவிலான சுருணை ஓலைகள் இருந்திருக்கின்றன. அவற்றுள் பல ஆங்கில முத்திரைகளைப் பெற்றிருப்பது நோக்கத்தக்கதாகும். HUZUR RECORDS, TRIVANDRUM என்னும் எழுத்துடன் முத்திரைகளைப் பெற்றுள்ளன. சிலவற்றில் அந்த ஏட்டின் விலை காலணா. அரையணா. ஓரணா என்ற மதிப்பும் முத்திரையாகக் குத்தப்பட்டுள்ளது. இன்று பல்வேறு மதிப்புகளைப் பெற்றுப் பதிவுகளுக்குப் பத்திரங்களாகப் பயன்படும் தாள் பத்திரங்களைப் போன்றே அன்றும் அரசாங்கத்திடமிருந்து மதிப்புடைய முத்திரை ஓலைகளைப் பெற்றே ஆவணங்களை எழுதினர் பதிவு செய்தனர் என்பது உறுதியாகிறது. அத்துடன் காகிதம் எனும் தாளின் வருகைக்குப் பின்பும் தமிழகத்தின் எழுதுபொருளாக ஓலைச் சுவடியின் பயன்பாடு பெருக இருந்திருக்கிறது என்பதையும் உணரலாம். இதற்கு மற்றொரு சான்றாக. செங்கற்பட்டு மாவட்ட ஆவண ஓலைச்சுவடிகளைப் பார்த்து. பெர்னார்டு என்னும் பொறியாளர் ஆங்கில அரசுக்காகக் காகிதத்தில் எழுதிய குறிப்புகள். சுருக்கங்கள் அதே காலத்தைச் சார்ந்தவையாக இருப்பதைச் சென்னை ஆவணக் காப்பகத்தில் காணலாம்.

கல்வியுடன் தொடர்புடைய தட்சிணாமூர்த்தி. பிரம்மா. கலைமகள் போன்ற பெருந்தெய்வங்களின் கைகளில் ஓலைச் சுவடிக்கட்டு இருப்பதைச் சிற்பங்கள் மற்றும்.

சிற்ப நூல்களிலும் காணலாம். மாணிக்கவாசகர். கம்பர். திருவள்ளுவர் போன்ற புலவர் சிற்பங்களிலும் ஓலைச்சுவடி தவறாமல் இடம் பெற்றிருக்கும். இவை ஓலைச்சுவடி தமிழகத்தில் பெற்றிருந்த சிறப்பைக் காட்டுவன எனலாம். எனவே தொன்றுதொட்டு சென்ற நூற்றாண்டு வரை தமிழகத்தின் எழுதுபொருளாக ஆட்சி செய்தவை ஓலைகளே என்பதை உணரலாம்.

படித்தலும் படி எடுத்தலும்

ஓலைச் சுவடிகள் பெரும்பாலும் 300. 400 ஆண்டுக்காலமே வாழும் தகுதி படைத்தன. சுவடிகளின் ஆயுட்காலம் முடியுந்தறுவாயில் அவற்றைப் புதிய சுவடிகளில் படி எடுத்து எழுதிக் காப்பாற்றும் வழக்கம் உலகெங்கும் காணப்பட்ட முறையாம். காலங்காலமாகப் படி எடுத்துப் படி எடுத்துக் காப்பாற்றிய காரணத்தால்தான் தொல்காப்பியம். சங்க இலக்கியங்கள் போன்ற 2000 ஆண்டுகளுக்கு முந்திய நூல்களையும் நாம் பெறமுடிந்தது. படி எடுத்த விவரத்தைக் குறிப்பதும் பிற்குறிப்பில் அடங்குவதாகும். ஓலைச் சுவடிக்கட்டுகளின் தலைப்பு ஏட்டிலும் இறுதி ஏட்டிலும் சில குறிப்புகள் நூலுக்குப் புறம்பாகக் காணப்படும். அவை முற்குறிப்புகள் பிற்குறிப்புக்ள் எனப்படும். அக்குறிப்புகளில் பயனுள்ள பலவகைச் செய்திகள் காணப்பெறும். நூல். நூலாசிரியர். சுவடி உரிமையாளர். எழுத்தாளர் விவரம். காலக்குறிப்புகள். நூற்பயன். நூலகக் குறிப்பு. பிற அட்டவணை எனப்பல குறிப்புகள் இருக்கும். அத்தகு குறிப்புகளிலிருந்து . . சுவடி படிக்கின்ற வழக்கம் போலச் சுவடிகளைப் படி எடுத்துப் பாதுகாக்கும். புதுக்கும் வழக்கம் இருந்தமையும் நாம் காணலாம். (அடைப்புக் குறி எண்கள். ஓலைச் சுவடித்துறைச் சுவடி எண்களாம்)

"குப்பணன் நீதி ஒழுக்கம். செல்லப்பகவுண்டன் எழுதியது" (1672)

"விளம்பி வருஷம் ஆவணி மாதம் 7ம்தேதி ஞாயிற்றுக் கிழமையன்றைக்கு தாராபுரந் தாலுகா தம்பரெட்டிப்பாளையம் கிராமம் பாளையத்திலேயிருக்கும் பொன்னைய கவுண்டன் மகன் பெத்தாக்கவுண்டன் நீதி சாரம் எழுதி முடிந்தது" (1577).

"தென்கரைநாடு தூரம்பாடிக்கிராமம் நத்தப்பாளையம் பெரியணப்புலவன் மகன் சாமிப் புலவனுக்குப் படிக்கும்படி கொடுத்து வைத்தது" (1668)

"அடியேன் சுப்பிரமணியன் சுய ஹஸ்தலிகிதமாக அடங்கன் முறையும் சேத்திரக் கோவையும் எழுதி நிறைந்தன" (1927)

"இது ஏழூரு புதுப்பட்டியிலிருக்கும் பட்டணசாமி வெங்கட்ராம செட்டியிடம் இருந்த பசும் பையை வாங்கிப் பார்த்து எழுதியது. ராசிபுரம் பருத்திக்கால் சீரங்க செட்டி சுவடி" (2270)

"பழைய புத்தகத்திலிருந்து எடுத்து எழுதினது" (558)

"சுப்பராய முதலியார் படிக்கின்ற தொட்டியம். எடுத்தவன் படித்துக் கொடுக்கவும் (679) திரௌபதை அம்மனானை. இதை

ஆருவொருவர் எடுத்துப் படித்த பேரும் இந்தச் சுவடியிலே பிழை இருந்த இடத்திலே திருத்தவும்" (766)

இவ்வாறு படி எடுத்து எழுதும் போது மூலச் சுவடியாக இருந்த சுவடியின் பெயரைக் குறிப்பிடுவதும் இது அதற்குச் சரியான படி நகல் என்றெல்லாம் குறிப்பிடுவதும் சில சுவடிகளில் காணலாம்.

"பிங்கள வருடம் மார்கழிமாதம் 22ந்தேதி ஞாயிற்றுக் கிழமையிலான சுவடியைப் பார்த்து எழுதப்பட்ட தேதி குரோதன வருடம் பங்குனி மாதம 2ம்தேதி எழுதி முடிந்தது" (8)

"அசலுக்குச் சரியான நகல் (2113)
இந்த நகல் எழுதினது மேற்படி கிராமத்திலிருக்கும் முகில் வண்ணம் பிள்ளை பேரன் பழநிக் குமாரப்பிள்ளை" (2113)

சுவடி எழுதுங்காலம்

இவ்வாறெல்லாம் சுவடிகளை எழுதுவதும். படி எடுப்பதும் எல்லாக் காலத்தும் நடந்ததாகக் கொண்டாலும் நூற்படிகளின் தேவை எழுந்த காலத்தும். பழைய சுவடிகள் அழிவுறும் நிலைக்குச் செல்லும் போதும் புதியபடிகள் உருவாக்கப்பெற்றன எனலாம். ஆடிப்பெருக்கு. கலைமகள் விழாக் காலங்களில் பழையனவற்றைக் கழிப்பதற்காகவும் புதிய சுவடிகளாக அவை படி எடுக்கப்பெற்றன. இவ்வழக்கமே நாளடைவில் அச்சு நூல்களைப் பார்த்தும் எழுதும் நிலைக்குத் தள்ளப்பட்டன போலும். கல்விக்குக் காலமில்லை நேரமில்லை என்றாலும் தனிப்பட்டவரின் சூழல். காலத்தின் தட்பவெப்பநிலை போன்ற ஏதுக்களால் படிப்பதும் அதைச் சுவடியில் எழுதுவதும் வரையறைக்குட்பட்டுவிடுவதை நாம் காணமுடிகிறது. சுவடிகள் சிலவற்றில் காணப்படும் குறிப்புகள் சுவடி எழுதுவதற்கென்றே குறிப்பிட்ட சில மாதங்கள் ஒதுக்கப் பெற்ற சூழலைப் புலப்படுத்துகின்றன.

குறிப்பாக ஆவணி. புரட்டாசி. ஐப்பசி. கார்த்திகை மாதங்கள் தமிழகத்தின் மழைக் காலமாகக் கருதமுடிந்தன. துறவியர் ஓரிடத்தே தங்கியிருந்து கல்வி கேள்விகளில் காலத்தைச் செலவிடுவர். தொடர் பயணங்களுக்கு இம்மாதங்கள் இடையூறாக இருப்பதே காரணம் எனலாம். ஆவணி அமாவாசை தொடங்கி ஐப்பசி வரை 'சாதுர்மாசம்' எனப்படும் விரதம் அந்தணர்களாலும். துறவிகளாலும் கொண்டாடப்படுகிறது. ஆவணி அமாவாசையில் வியாசபூசை செய்து வேதங்களைப் படிக்கத் தொடங்குகின்ற சடங்கை இன்றும் காணலாம். இச்சாதுர்மாசம் முழுவதும் அறிவு நூல்களை. வேதங்களைக் கற்பதில் செலவிட்டனர் நம் முன்னோர்

சமணத் துறவியரால் செய்யப்பெற்ற நூல்கள் அனைத்தும் இக்காலத்தில் தான் மலர்ந்திருக்க வேண்டும் என்பது போன்ற குறிப்புகள் ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாகக் கிடைக்கின்றன. மழைக்காலத்தில் சிறுபூச்சிகளும். புழுக்களும் தோன்றுவது இடையூறாக இருக்கும் என்று நம்பிய அவர்கள். ஓரிடத்தே தங்கியிருந்து அறநூல்களைச் சொல்வதிலும். கல்வி கேள்விகளில் ஈடுபடுவதிலும் காலத்தைச் செலவிட்டிருக்கின்றனர்.

இத்தொகுதியில் காணப்படும் சமணநூல்கள் அனைத்தும் இச் "சாதுர்மாச" காலத்திலேயே சுவடியில் எழுதப்பட்டதாகக் காணப்படுகின்றன. சிலவற்றின் குறிப்புகளைக் காண்போம்.

"பராபவ வருஷம் கார்த்திகை மாதம் 16ம் தேதி ஆதி வாரம் ஏகாதசி நாழி 6. ப3/ 4இ . . . . எழுதி நிறைவேறியது"

அப்புாண்ட நாதர் உலா. . . (2006)

"பராபவ வருஷம் கார்த்திகை மாதம் 28ம் தேதி சஷ்டி 21¼ உத்திரம் 50 இந்த சுபத்தினத்தில் திருக்கோவிலூர் அதுகுடி வீரசோழபுரம் ராசப்ப நயினார் குமாரன் நல்ல தம்பி எழுதி நிறைவேறியது."

. . அடிமதிக் குடி அய்யனார் பிள்ளைத் தமிழ் . . (2020)

இன்னொரு சுவடி துறவி ஒருவரால் எழுதப்பட்டதாகவே காணப்படுகிறது. அச்சுவடியின் பிற்குறிப்பு. நூலின் தலைப்பு. சுவடி எழுதியவர். காலம் ஆகியவற்றைத் தெளிவுடன் சொல்லியிருக்கிறது.

"துன்மதி வருஷம் ஐப்பசி மாதம் 5ந்தேதி சனி வாரதினம் உத்திர நட்சத்திர தினத்தில் மேரு மந்திர மாலை பூர்த்தியாய்த் திருப்பறம்பூர் ஸ்வஸ்தி ஸ்ரீ தர்ம ஸாகர ஸ்வாமியால் எழுதி முடிந்தது "

மேருமந்திர மாலை.. (2017)

இவ்வாறெல்லாம் பலவாகப் படி எடுத்த சுவடிகளைப் போற்றிப் பாதுகாக்கவும் வளர்க்கவும் கவிராயர்களும் பிற புலவர்களும் துணை நின்றனர். சுவடிக் காப்பகங்கள் சரஸ்வதி பண்டாரம். பொத்தக. புஸ்தக சாலை எனும் பெயரில் அழைக்கப் பெற்றன. சுவடிக் காப்பகங்களிலும் கவிராயர் குடும்பங்களிலும் ஏராளமான சுவடிகள் காணப்பட்டன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் காகித காலத்தில் வாழ்ந்தவர். எனினும் அவர் கம்பராமாயணத்தை மூன்று முறை ஓலைச் சுவடியில் படி எடுத்து எழுதியதாகக் கூறுவர். சுவடிப் படிகள் பெருகி வளர்வதைப் புலவர்கள் எவ்வாறு வரவேற்றனர் என்பதற்கு இது பெருஞ்சான்றாகும்.

பெரியபுராணத்தில் சுந்தரர் அடிமை ஓலையைக் கிழித்த போது "இது மூல ஓலை இல்லை. வெறும் படி ஓலைதான் மூலஓலை என்னிடம் பாதுகாப்பாக உள்ளது" என்னும் வேதியர் கூற்றும் கையெழுத்து ஒப்பீட்டைப் பிற ஆவணங்களுடன் ஒப்பிட்டுக் காண்க என்னும் கூற்றும் படி ஓலைகளின் பரவலையும் இன்றியமையாமையையும் தெளிவுபடுத்துகின்றனவாம். எனவே. தமிழரிடம் தாம் பயிலும் எதனையும் படி எடுத்துப் பாதுகாப்பதும் பரப்புவதும் மரபாகப் போற்றப்பெற்றது புலனாம். அந்த வகையில் அச்சு நூல்கள் தோன்றிய பின்பும் ஒருநூலுக்குப் பல படிகளாகக் காகித அச்சு நூல்கள் தோன்றிய பின்பும் அவற்றைப் படியெடுக்கும் வழக்கம் இருந்ததைச் சில சுவடிகள் மூலம் காணலாம்.

தாள் சுவடியும் அச்சுக் கலையும்

நூல்களைப் படியெடுத்துப் பிழைப்பு நடத்தும் தொழில் பரவலாகக் காணப்பட்டது. பயின்முறை எழுத்தரைவிடத் தொழின்முறை எழுத்தர் மிகுந்திருந்தனர் ஆதலின் ஐரோப்பிய நாடுகளில் அச்சுக்கலை மலர்ந்தபோது படி எடுப்போரின் தொழில் பாதிப்படையும் என்பதால் அச்சுக்கலை பேயின் வேலை என்று தடுத்தனர். ஆயின் தமிழகத்தில் தொழில்முறை எழுத்தர் இருந்தநிலையிலும் அச்சுக் கலையை வரவேற்றனர்.

இந்திய மொழிகளிலேயே தமிழ் மொழியில்தான் முதன்முதலாக அச்சு நூல் வெளியானது தரங்கம்பாடியும் காகித ஆலை நிறுவப்பட்ட பொறையாறும் இந்தியக் காகித வரலாற்றில் முதலிடம் பெறுவன எனலாம். 1557இல் கொல்லத்தில் அச்சான தம்பிரான் வணக்கம் 1715இல் பொறையாறில் காகித ஆலை நிறுவப்பட்டது இதனை நிறுவும் தொடர்ந்து பல நூல்கள். 1806இல் கொடுத்தமிழ். 1812இல் திருக்குறள். நாலடியார். 1811இல் தமிழ் விளக்கம். 1824இல் சதுரகராதி. 1830இல் நீதிநெறி விளக்கம் எனத்தொடர்ந்து நூல்கள் அச்சாகி வளர்ந்தன. அச்சுப்பொறிக்கு முன்பே காகிதம் வந்துவிட்டது. சீனாவில் மலர்ந்த காகிதம் அரேபியர்களால் 11ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் அறிமுகமானது. என்றாலும் சீகன்பால்கு அவர்கள் 1715இல் பொறையாறில் ஆலைநிறுவிய பின்பே பெருக வழக்கத்திற்கு வந்தது. என்றாலும் காகித வரவுக்குப் பின்பும் தமிழர்கள் தொடர்ந்து ஓலைகளில் எழுதுவதையும். படியெடுப்பதையும் மேற்கொண்டனர். வீரமாமுனிவர் போன்றோரும் ஓலைகளில் எழுதிப் பாதுகாக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் (1815 - 1876) தம் கவிதைகளை ஓலைகளிலேயே எழுதுவதற்கு ஆட்களைப் பணியமர்த்தியிருந்தார். அவரே கைப்பட எழுதிய சுவடிகள் பலவாகும் ஆயின் அக்காலத்து வாழ்ந்த இராமலிங்க அடிகளார் ஓலைகளைவிடத் தாள் சுவடிகளிலேயே பெரும்பாலானவற்றை எழுதிவந்தார். ஆனால் அவருக்குப் பிறகும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839 - 1898) ஒரு இலட்சம் பாடல்களுக்கும் மேலாக ஓலைச் சுவடிகளிலேயே எழுதி வந்தார்.

1820ஆம் ஆண்டுகளில் இலங்கை ஆளுநர் அவர்கள் பாதிரிமார்களின் வெளியீடுகளைத் தடை செய்தபோது. பனை ஓலைகளில் எழுத்தாணி கொண்டு தொழில்முறை எழுத்தர்களைக் கொண்டு தம் பிரசாரங்களை வெளியிட்டனர் அப்பாதிரிமார்கள். இவ்வாறே பலயிடங்களிலும் காகிதங்களில் பக்கம் பக்கமாகப் படியெடுத்து தம் நூல்களைப் பரவச் செய்தனர். இது ஓலைகளைப் படியெடுப்பது போல அமைந்தது. வீரமாமுனிவர் சதுரகராதி 1824இல் வெளிவந்தது. அந்நூலை ஓலைகளில் படியெடுத்துப் படிக்கும் வழக்கம் தொடர்ந்தது. இவ்வாறு காகிதமும் அச்சும் தோன்றி வளர்ந்த பின்பும் ஓலைகளின் பயன்பாடு தொடர்திருந்தமையை நாம் உணரமுடிகிறது. எனினும் மிகப் பரவலாக அச்சு நூல்கள் தோன்றிய பின்பும் ஓலைச் சுவடிகள் படி எடுக்கப் பெற்ற செய்தி வியப்பாக இருக்கிறது.

அச்சு நூல்களுக்குப் பின்பும் ஓலைச் சுவடிகள்

அச்சுப் பொறியும் அச்சு நூல்களும் தோன்றிய பின்பும் ஓலைச் சுவடிகளின் பயன்பாடு இந்தியாவில் பெருக இருந்தது. தமிழகத்திலும் ஓலைச் சுவடிகளில்

எழுதியும், படித்தும் பாதுகாக்கும் வழக்கம் தொடர்ந்தது. சிறப்பாக, அச்சான நூல்களை அச்சுப் புத்தகங்களைப் பார்த்து மீண்டும் ஓலையில் எழுதிப்படிக்கும் வழக்கம் இருந்ததைச் சில சுவடிகளின் பிற்குறிப்புகள் முற்குறிப்புகள் புலப்படுத்துகின்றன

'கைவல்யநவநீதம்' என்னும் சுவடியில்.

"இது கொளத்தூர் வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் கேட்டுக் கொண்டபடி பொய்கைப்பாக்கம் வீராசாமி முதலியாரவர்கள் இளைய சகோதரராகிய அப்பாசாமி முதலியாரால் தமது வித்துவரக்ஷாமிர்த அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

குரோதி வருஷம் பங்குனி மாதம். இதன் விலை 5 3/4 மேற்படி அச்சுப் பொத்தகத்தைப் பார்த்துக் கோரிப்பாளையம் பாக்கிய முதலியார்க்காக மதுரை ராமாயணச் சாவடிக் கணக்குத் தவசிக் கோன் மகன் தேவேந்திரன் எழுதியது. பராபவ வருஷம் மார்கழி மாதம் 20ம்தேதி (1778)"

என்னும் குறிப்பு காணப்படுகிறது. இது அச்சு நூலைப் பார்த்து எழுதிய விவரத்தைத் தெளிவாகக் குறிப்பிடுதல் நோக்கத்தகுவதாம்.

சூடாமணி நிகண்டு (1840) என்னும் சுவடியில்.

"இஃது பொய்கைப் பாக்கம் ஹரிஹர புத்ர உபாத்தியாயரவர்கள் குமாரராகிய அப்பாசாமி முதலியாரவர்களால் தமது வித்வரக்ஷாமிர்த அச்சுக் கடத்தில் பதிப்பிக்கப்பட்டது. குரோதி வருஷம் மாசி மாதம். இதன் விலை 3"

என்று காணப்படும் குறிப்பினால் மேற்படி சுட்டிய செய்திகள் உறுதி செய்தல் காணலாம்.

செங்குந்தர் சரித்திரச் சுருக்கம் என்னும் சுவடியின் பிற்குறிப்பு.

"இது மயிலை இலட்சுமண சுவாமி முதலியாரால் வர்த்தமான தரங்கிணி அச்சுக் கடத்தில் பதிப்பிக்கப்பட்ட செங்குந்தர் பிள்ளைத் தமிழ் என்னும் நூலின் முகவுரை. அச்சு நூலைப் பார்த்து உலகுடையா பாளையம் அருணாசல முதலியார்குமாரன் ஆறுமுகக் கவிராயர் எழுதியது (2046)"

என்று காணப்படுகிறது. அச்சகத்தின் பெயரையும் இது சுட்டுதல் காணத்தகுவதாம் மற்றொரு சுவடி கதித்த மலை முருகன் பதிகம் (2057) இக்குறிப்பை முற்குறிப்பாகவே தருகிறது.

"ஊற்றுக்குழிக் கதித்தமலை முருகன் மீதில் பதிகம் சிந்து. இஃது கொங்கு தேசத்தில் குறும்பு நாடு விசயமங்கலம் குருஸ்தானம் மடாதிபராகிய கூனம்பட்டி மாணிக்கவாசக சுவாமிகள் சிஷ்யரான மேற்படி நாட்டுக்கு அதிபரான படைத்தலை

வேளாளர் ஐவரில் நான்காவது கோயமுத்தூர் சில்லா ஈரோட்டுத் தாலுக்கா தேவஸ்தானம் கமிட்டி மெம்பரில் ஒருவராகிய கம்புளியம் பட்டிக் கிராம மணியம் சின்னரங்கையக் கவுண்டர் குமாரன் மணியம் நாகப்ப கவுண்டனால் இயற்றப்பட்டு கூனம்பட்டிக் கிராம முன்சீப் தர்மகர்த்தராகிய வில்லேஜ் மாஜிஸ்திரேட் குழந்தை கவுண்டன் கேட்டுக் கொண்டபடிக்குச் சென்னை கலாநிதி அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. பல வருஷம் தை மாதம்"

இக்குறிப்பு பதிப்பாசிரியர், நூலாசிரியர் வம்ச வரலாற்றையே தருவதைப் போன்ற விரிவைக் கொண்டதாகும். கிட்டத்தட்ட இதுபோன்ற வரலாற்றுடன் காணப்படுவது தெய்வயானை ஏசல் (2059) என்பது.

"எட்டி குடி ஏசல் என்று வழங்குகின்ற தெய்வானை ஏசல். இஃது களத்தூர் தமிழ்ப்புலவர் வேதகிரி முதலியார் குமாரர் ஆறுமுக முதலியாரால் பரிசோதித்துத் தக்கோலம் நரசிம்முலு நாயகர் அவர்களது விவேக சந்த்ரோதய அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது"

நாடகசாலை தீக் கோள் கும்மி (2060) என்னும் சுவடி அச்சு நூலின் விலையைக் கூடப் பதிவு செய்து காட்டுகிறது.

"இஃது திருநெல்வேலி பூ. குல்வீர ராமப் பெருந் தெருவில் இருக்கும் பழனியாண்டி முதலியார் குமாரர் பிச்சைக் கண்ணு முதலியார் அவர்கள் இயற்றியது. மேற்படியூர் வி. சா. முகம்மது கண் ராவுத்தர் கேட்டுக் கொண்டபடி கலைக்கியான விளக்க அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை அணா 2. 1886 - ஆம் வருஷம்."

திருக்குறள் (அறத்துப்பால்) நூலும் உரையும் கொண்ட சுவடி ஒன்று (860) மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிட்டும் இரட்டை ஒற்றைக் கொம்புகளிடையே மாற்றம் காட்டியும், பகர வளைவு பிறைவளைவு, உடுக்குறி, புள்ளடிக்குறி போன்ற குறியீடுகளைப் பயன்படுத்தியும் எழுதப் பெற்றுள்ளது. இது பெரும்பாலும் அச்சு நூலொன்றைப் பார்த்து எழுதியதாகத் தோன்றுகிறது. சில சுவடிகளில் அச்சு நூலைப் பார்த்து எழுதிய குறிப்பும் காணப்படுகிறது. இந்த ஏடு அச்சுப் புத்தகத்தைப் பார்த்து எழுதியதாகும். (அமிர்த வாசகம் 723) என்ற குறிப்பைக் கொடுத்துவிட்டுக் கீழ்க்காணும் விளம்பரத்தையும் சேர்த்து எழுதியிருக்கின்றனர்.

"விளம்பரம் இந்த சாத்திரம் செலவான பிறகும் இந்நூலாசிரியர் உத்தரவின்றி யாராவது அச்சிட்டாலும் அப்படி அச்சிட்டதை விலை வைத்து விற்பனை செய்தாலும் இவர்கள் மேற்சொல்லிய ஆசிரியர் முதலியவர்கள் சாபத்திற்குள்ளாகாமற் போகார்களென்று உறுதியாய்க் கூறலாகின்றது. இப்படிக்கு ஸ்ரீரங்கம் வீரராகவ கிருஷ்ணதாசன். இந்த புத்தகம் பெருமாள்

பேட்டை கோவிந்தராஜநாயகரால் அச்சடுக்கி பிரகரஞ் செய்யலாயிற்று."

இவற்றையெல்லாம் உற்று நோக்கும் போது சில கருத்துக்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய நிலையில் இருப்பதை உணரலாம்

1. காகிதப் பெருக்கம் பரவிய போதும் மரபை மாற்றாநிலை தொடர்ந்திருக்கும்.
2. காகிதத்தின் விலை ஓலைகளை விடக் கூடுதலாயிருந்திருக்கும்.
3. காகிதத்தில் அச்சிட்ட நூற் படிகள் தேவைக்கேற்ப இருந்திரா.
4. காகிதத்தின் வாழ்நாள் நம்பிக்கையூட்டும்படி அமையவில்லை.
5. ஓலைகளில் எழுதினால் அவை 300, 400 ஆண்டுகளுக்காவது வாழும் என்னும் பட்டறிவு.
6. ஓலைச் சுவடிகளுக்குக் கொடுக்கப்பட்ட தெய்வாம்சம்.

இத்தகு எண்ணங்களால் காகித நூல்களை மீண்டும் பழைய மரபில் ஓலைகளில் எழுதிப் படித்தனர் போலும். இத்தகு நூல்களையும் அவற்றின் படி ஓலைகளையும் தொகுத்து ஒப்பு நோக்கி ஆய்வு செய்தால் மேலும் தெளிவு பெறுதல் கூடும். சுவடி ஆய்வாளர் இத்தகு ஆய்வுகளிலும் முற்படுவாராக.

□

மோ. கோ. கோவைமணி
ஆய்வு உதவியாளர்
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

அமுதத்தில் காகிதச் சுவடிப் பதிப்புகள்

பருவ இதழ்களில் பனையோலைச் சுவடிப் பதிப்பு நூல்கள், காகிதச் சுவடிப் பதிப்பு நூல்கள், நிகழ்கால நூலாசிரியரின் நூல்கள் என மூன்று நிலைகளில் நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழகத்தில் இதழ்களின் வரலாறு கி. பி. 1812இல் தொடங்குகிறது. அதுமுதற்கொண்டு இதுநாள்வரை பல்வேறு வகையான இதழ்கள் வெளிவந்தும்: வெளிவந்துகொண்டும் இருக்கின்றன. பருவ இதழ்களில் காகிதச் சுவடிப் பதிப்பின் வரலாறு கி. பி. 1849இல் தொடங்குகிறது. நற்போதகம் (1849) எனும் மாத இதழில் 'இரட்சணிய யாத்திரீகம்' என்ற காப்பிய நூல் 14 ஆண்டுகள் தொடராக வெளிவந்துள்ளது. இது தொடங்கிப் பல பருவ இதழ்கள் காகிதச் சுவடிப் பதிப்பு நூல்களை வெளியிட்டும் வெளியிட்டுக் கொண்டும் இருக்கின்றன. இதில் குறிப்பிடத்தக்க பருவ இதழ் 'மாதாந்திர அமுதம்' ஆகும்.

மாதாந்திர அமுதம்

கோவை, சின்னவேடன்பட்டி கௌமார மடத்தின் வெளியீடே 'மாதாந்திர அமுதம்' எனும் பருவ இதழாகும். இவ்விதழ் கி. பி. 1980ஆம் ஆண்டு சூலை மாதம் தொடங்கி, தொடர்ந்து வெளிவந்து கொண்டு இருக்கிறது. திசம்பர் மாதம் 1999ஆம் ஆண்டு வரை இவ்விதழில் 20 குடங்களும் (தொகுதி) 6 திவலை (பகுதி) களும் ஆக 246 திவலைகள் வெளிவந்துள்ளன. டி. என். சுகி சுப்பிரமணியம் குடம் 7 திவலை 9 வரைக்கும் இதழாசிரியராக இருந்துள்ளார். அதன்பிறகு இவரது மகன் சுகி. சிவம் குடம் 9 திவலை 10 முதல் ஆசிரியராக இருந்து வருகின்றார். முதல் பதினைந்து குடங்களுக்குத் தவத்திரு சுந்தர சுவாமிகளும் 16ஆவது குடம் முதல் தவத்திரு குமரகுருபர சுவாமிகளும் சிறப்பாசிரியராகப் பணியாற்றி வருகின்றனர்.

மாதாந்திர அமுதம் ஒரு சமய இலக்கியப் பருவ இதழாகும். இதில் ஆய்வுக் கட்டுரைகள், நூல் மதிப்புரைகள், பொதுக் கட்டுரைகள், ஒரு நூல் தொடர்பான தொடர் ஆய்வுக் கட்டுரைகள், மூல நூல்கள் (ஓலை மற்றும் காகிதம்), மூல நூல் உரைகள், மூலமும் உரையும், மூல நூலின் கதைச் சுருக்கங்கள், சிறுகதைகள், நாடகங்கள், குழந்தை இலக்கியங்கள், தலவரலாறுகள், மடத்து விழாச் செய்திகள், சிறப்பாசிரியர் பங்கு பெறும் நிகழ்ச்சிகள் எனப் பலநிலைகளில் இப்பருவ இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது.

மாதாந்திர அமுதத்தில் நூல்கள்

மாதாந்திர அமுதத்தில் வெளியான நூல்களை ஐந்து நிலைகளாகப் பிரிக்கலாம். அவை,

1. பனையோலைச் சுவடிப் பதிப்பு நூல்கள்
2. காகிதச் சுவடிப் பதிப்பு நூல்கள்
3. நிகழ்காலப் புலவர்களின் நூல்கள்
4. திருமுறை நூல்கள்
5. பிற பதிப்பு நூல்கள்

என அமையும். இவ்வெல்லாவற்றையும் நோக்கின் ஆய்வு விரியும். எனவே, காகிதச் சுவடிப் பதிப்பு நூல்கள் மட்டும் இவண் ஆய்வுப் பொருளாக அமைகிறது.

மாதாந்திர அமுதத்தில் காகிதச் சுவடிப் பதிப்பு நூல்கள்

தவத்திரு இராமானந்த சுவாமிகள் மற்றும் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் ஆகியோரின் நூல்கள் இப்பிரிவில் அடங்குவன ஆகும். இவ்விருவரும் எழுதிய காகிதப் படிகள் இன்றும் கோவை கௌமார மடத்தாரால் பாதுகாக்கப் பெற்று வருகின்றன. தவத்திரு இராமானந்தரின் சண்முகமாலை மற்றும் இராமானந்தத் திரட்டு ஆகிய இரண்டு நூல்களும் ; தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் கருணாம்பிகை யமக அந்தாதி, அறநெறிவெண்பா, ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி, ஈச்சநாரி விநாயகர் பதிகம், தண்டபாணிமாலை, தண்டபாணி சுவாமிகளது சரித்திர சார வண்ணம், குருந்தமலை குழந்தை வேலாயுதசாமி பிள்ளைத்தமிழ், பக்தமான்மியத்தில் 'கபீர்தாச கதி'யில் ஒருபகுதி மற்றும் போசலபாவா கதி, கோவை இராமநாதபுரம் விநாயகர் பதிகம், பேரூர் ஸ்ரீ அகிலாண்ட நாயகி பதிகம், வெள்ளக்கிணற்று வள்ளிநாயகன் பதிகம், காரமடை ஆண்டாள் பதிகம், கீரநத்தம் விநாயகர் பதிகம், கீரநத்தம் விநாயகர் திருப்புகழ் போன்ற நூல்கள் மாதாந்திர அமுதத்தில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் நூல்களை மட்டும் இப்பகுதி ஆராய்கிறது.

தவத்திரு கந்தசாமி சுவாமிகள்

கி. பி. 18. 04. 1892ஆம் நாளன்று வெங்கடசாமிக் கவுண்டருக்கும் குட்டியம்மைக்கும் தவப்புதல்வராக இவர் அவதரித்தார். கந்தசாமி எனப் பெயர் சூட்டினார் தவத்திரு இராமானந்த சுவாமிகள். இவர் தொட்டையக் கவுண்டரின் திண்ணைப் பள்ளியில் தொடக்கக் கல்வியைக் கற்றார். சிறுவர் கந்தசாமி, கல்வியில் சிறந்து விளங்கினாலும் இளமையிலேயே தம் பெற்றோர்களை இழந்தார். உலகின் நிலையாமை அவர் உள்ளத்தில் ஆழப்பதிந்துவிட்டது. அதனால் சிறுவயதிலேயே ஆன்மீகத் தேடலில் ஈடுபட்டுவிட்டார். சிறுவயதிலேயே கோவை சின்னவேடன் பட்டியில் தவத்திரு இராமானந்த சுவாமிகளால் நிறுவப்பட்டு நடத்தி வந்த கௌமார மடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டார். அதுமுதற் கொண்டு தவத்திரு இராமானந்தரைத் தமது குருவாக ஏற்றுக் கொண்டு ஆன்மீகத் தொண்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார் தமது சொத்துக்களையும் திருமடத்திற்குக் கொடுத்துவிட்டார். பிறகு 29. 01. 1923ஆம்

நாளன்று தவத்திரு இராமானந்த சுவாமிகளால் துறவு பெற்று, கௌமார மடத்தின் இரண்டாவது சந்நிதானமாகப் பொறுப்பேற்றார். அதற்கு முன்னும் பின்னும் தமது குருவான தவத்திரு இராமானந்தரின் கட்டளைப்படிப் பலப்பல நூல்களை எழுதியுள்ளார் இவர் இயற்றிய மொத்தச் செய்யுட்கள் 14,481 என்று கோவை கௌமார மடத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இச்செய்யுட்கள் எல்லாம் அங்குப் பாதுகாக்கப்பெற்று வருகின்றன. 10. 12. 1948ஆம் நாளன்று கந்தவேலைப் போற்றிய தவத்திரு கந்தசாமி சுவாமிகள் இறைவனடி ஒன்றரக் கலந்தார்.

இவர்தம் நூல்களின் பட்டியலைச் 'சிரவையாதீனம் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் வரலாறு' எனும் நூலின் பிற்சேர்க்கை 1இல் விவரமாகத் தரப்பெற்றுள்ளது. மேலும் இவரைப்பற்றிப் பிறர் பாடிய நூல்களின் பட்டியலை இதே நூலின் பிற்சேர்க்கை 2இல் தரப்பெற்றுள்ளது. இந்நூல்களில் பெரும்பான்மை கௌமார சபை வெளியீடாகப் பலநிலைகளில் அச்சாகியுள்ளன. தனி நூலாக மட்டுமல்லாமல் கௌமாரசபை வெளியீடான 'மாதாந்திர அமுதத்'திலும் இவர்தம் நூல்கள் பல வெளிவந்துள்ளன.

தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் நூல்கள்

மாதாந்திர அமுதத்தில் தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் நூல்களை இரண்டு நிலைகளாகப் பகுத்து ஆராயலாம். அவை,

1. தவத்திரு கந்தசாமி சுவாமிகள் இயற்றிய நூல்கள்
2. தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பற்றிய நூல்கள்

என்பனவாகும்.

1) தவத்திரு கந்தசாமி சுவாமிகள் இயற்றிய நூல்கள்

தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் கருணாம்பிகை யமக அந்தாதி, தண்டபாணி சுவாமிகளது சரித்திர சார வண்ணம், ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி, தண்டபாணி மாலை, பக்த மான்மியத்தில் 'கபீர்தாச கதி'யில் ஒரு பகுதி மற்றும் போசலபாவா கதி, குருந்தமலை குழந்தை வேலாயுதசாமி பிள்ளைத்தமிழ், சிரவை சற்குரு பதிகம், மகாலக்குமி பதிகம், ஈச்சநாரி விநாயகர் பதிகம், கோவை இராமநாதபுரம் விநாயகர் பதிகம், பேரூர் ஸ்ரீஅகிலாண்டநாயகி பதிகம், வெள்ளக்கிணற்று வள்ளிநாயகன் பதிகம், காரமடை ஆண்டாள் பதிகம், கீரநத்தம் விநாயகர் பதிகம், கீரநத்தம் விநாயகர் திருப்புகழ் போன்ற நூல்கள் மாதாந்திர அமுதத்தில் வெளிவந்துள்ளன

அ) கருணாம்பிகை யமக அந்தாதி

கொங்கு நாட்டில் தேவாரப்பாடல் பெற்ற சிவத்தலங்கள் ஏழில் வரலாற்றுச் சிறப்புமிக்கது அவிநாசி என வழங்கும் திருப்புக்கொளியூர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலை உண்ட பாலகனை எழுப்பிய சிறப்பமைந்தது. கருணாம்பிகை பாதிரி மரத்தின்கீழ்த் தவம் புரிந்து வலப்பாகம் பெற்றது. பலரால் பூசித்துப் பெரும்பேறு பெற்றது. இத்தலப்பெருமையினையும் இத்தலத்தில் வீற்றிருக்கும் கருணாம்பிகை

அம்மையையும் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் யமக அந்தாதியாக 30 பாடல்கள் பாடியுள்ளார். இதற்குச் சிரவையாதீனப் புலவர் ப. வெ. நாகராசன் உரை எழுதியுள்ளார். இவ்வுரையுடன் இந்நூல் மாதாந்திர அமுதத்தில் குடம் 9 திவலை 2. 3. 4. 5. 6களில் முதல் 29 பாடல்கள் மட்டும் வெளிவந்துள்ளன. இறுதிப்பாடல் வெளிவரவில்லை. இந்நூல் 1988ஆம் ஆண்டு தனி நூலாக அச்சாகியுள்ளது. இதிலும் 29 பாடலும் அதற்கான உரையும் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக உரையாசிரியரை நேரில் (30-11-1999) கேட்டபோது,

> "குடம் 9 திவலை 7இல் இறுதிப் பாடலும் அதற்கான உரையும் வெளிவந்திருக்க வேண்டும். ஆனால், அதில் வெளிவர வில்லை. பின்னர்த் தனி நூலாக வெளிக்கொணரும்போது அமுதத்தில் வெளிவந்த 29 பாடல்களை மட்டும் அச்சிட்டு நூல் முற்றும் எனப் போட்டுவிட்டார்கள்"

என்கிறார். அடுத்த பதிப்பு வரும்போது 30ஆவது பாடலையும் அதற்கான உரையையும் சேர்த்து வெளியிடல் சாலச்சிறந்ததாகும்.

ஆ) தண்டபாணி சுவாமிகளது சரித்திர சார வண்ணம்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றின் நிகழ்ச்சிகளைத் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் 'சரித்திர சார வண்ண'மாகப் பாடியுள்ளார். தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் வண்ணத்திரட்டில் இதுவொரு பகுதியாக மூலம் மட்டும் இடம்பெற்றுள்ளது (1929). சிரவையாதீனப் புலவர் இல. பழனிச்சாமி உரையுடன் இந்நூல் மாதாந்திர அமுதத்தில் குடம் 9இன் திவலை 9-12களிலும், குடம் 10 திவலை 1-7களிலும் வெளியாகியுள்ளது. இந்நூல் பதப்பிரிப்பு, அருஞ்சொற்பொருள், பொழிப்புரை என்றவாறு உரையமைப்பு அமைந்துள்ளது. இவ்வண்ணப்பாடல் தனிச்சிறப்பு வாய்ந்தது என்பதை இதன் உரையாசிரியர் கூற்றால் உணரலாம். அவை,

> "அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் முன்னாள் சேதுபதி சமஸ்தானத்தில் ஒரு கலை மட்டும் பாடிய மகாவல்லபமான இந்தச் சந்தக்குழிப்பு, வடலூர் திருவருட்பிரகாச வள்ளலாரால் பாராட்டிய பெருமிதம் பெற்றது. இந்தச் சந்தக்குழிப்பை வைத்துக்கொண்டு மிகச் சாதுரியமாகச் சிரவை மகாசந்நிதானம் அருள்மிகு கந்தசாமி சுவாமிகள் மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் சரித்திர சார விண்ணப்பமாக எட்டுக்கலைகள் அமைத்து அருளிச் செய்த இந்த வண்ணப்பாடல்"
>
> (மாதாந்திர அமுதம், குடம் 7 திவலை 9, ப. 14)

எனக் குறிப்பிடுகின்றார்.

இ) ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி

கோவை மாநகரிலிருந்து பொள்ளாச்சி செல்லும் சாலையில் கலையழகு மிளிரத் திருவருட் பொலிவுடன் விளங்குவது ஈச்சநாரி அருள்மிகு விநாயகர்

திருக்கோயில். தேங்காய் உடைப்பாரைத் தேங்காது காத்தருளும் பெருமான் ஈச்சனாரி விநாயகர். பாண்டி மண்டலத்தில் பிள்ளையார்பட்டி விநாயகர் போலக் கொங்கு மண்டலத்தில் ஈச்சநாரி விநாயகர் விளங்குகின்றார். இவ்விநாயகர் பேரில் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி பாடியுள்ளார். இந்நூல் பத்துப் பாடல்களுக்கு ஒரு யாப்பாகப் பத்து வகையான யாப்பில் அமைத்துப் பாட்டின் அந்தத்தில் வரும் சொல்லே அடுத்த பாடலின் முதல் சொல்லாக வருவதே இந்நூலின் யாப்பமைதி. இந்நூல் எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எண்சீர் விருத்தம், எழுசீர் விருத்தம், அறுசீர் விருத்தம், கலிவிருத்தம், கொச்சகக் கலிப்பா, கலித்துறை போன்ற பா வகைகளாலானது. இந்நூலின் 100 பாடல்களும் மாதாந்திர அமுதத்தில் குடம் 13 திவலை 12லும்; குடம் 14 திவலை 1-6களிலும் வெளிவந்துள்ளன.

ஈ) தண்டபாணி மாலை

ஆறுபடைவீடும், ஆறு திருமுகமும், ஆறெழுத்து மந்திரமும், ஆறாவது திதியாகிய சஷ்டியும், ஆறு பெண்களுக்குரிய கார்த்திகை நட்சத்திரமும், ஆறாவது கிழமையாகிய வெள்ளிக்கிழமையும் தனக்கு உரியதாகக் கொண்ட திருமுகப் பெருமானுக்கு ஆறுஆறு முப்பத்தாறு என்று வண்ணச்சரபர் பாடிய படைவீட்டுத் திருப்புகழைப் போல் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்மீது 37 விருத்தப் பாவால் பாடப்பெற்றதே தண்டபாணி மாலை எனும் நூல். இதன் முதல் இரண்டு அடிகள் தோத்திரமாகவும் அடுத்த இரண்டு அடிகள் கந்தபுராண வரலாறாகவும் ஒவ்வொரு பாடலும் அமைந்துள்ளது. மூன்று முறை இந்நூல் இதற்குமுன் தனிநூலாக வெளிவந்துள்ளது என்றாலும் மாதாந்திர அமுதத்தில் குடம் 14 திவலை 7இல் முதல் 15 பாடல்கள் மட்டும் அச்சாகியுள்ளது. இதற்குமேல் உள்ள பாடல்களைப் பற்றி இவ்விதழில் அறியமுடியவில்லை.

உ) பக்த மான்மியம்

வடமொழியில் சந்திரதத்தரால் இயற்றப்பெற்ற பக்தமாலா (வைணவ, சாத்தேய, சைவ பக்தர்களது சரித்திரம்)வில் வைணவ அடியார்களின் வரலாறுகளைத் தமிழில் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் இயற்றியுள்ளார். இதில் வடநாட்டு வைணவ அடியார்கள் 98பேரும் தென்னாட்டு வைணவ அடியார்கள் 6பேருமாக ஆக 104 அடியார்களின் வரலாறுகளைத் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் 7307 செய்யுட்களாக முறைமே பக்தமான்மியம், பக்தமான்மிய அனுபந்தமாகப் பாடியுள்ளார். இதில் 'கபீர்தாச கதி'யில் ஒருபகுதியும், 'போசலபாவா கதி'யும் மட்டும் மாதாந்திர அமுதத்தில் இடம்பெற்றுள்ளன.

கபீர்தாச கதி : பக்தமான்மியத்தில் 51ஆவது கதியாக இடம்பெற்றிருப்பது கபீர்தாச கதியாகும். இது 200 பாடல்களைக் கொண்டது. தாய் மதமான இஸ்லாம் மதத்தைத் துறந்து வைணவ மதத்தைத் தொழுதவர் கபீர்தாசர். இதனால் டில்லி பாதுஷாவிடம் இன்னல்கள் பல பெற்றவர் ஆயினும் இறுதியில் பாதுஷா மனம் திருந்த வழி வகுத்தவர் இவர். இவர்தம் வரலாற்றின் சில பகுதிகள் (பக்தமான்மியப் பாடல் எண் 154-160) மட்டும் தவத்திரு மருதாசல சுவாமிகளால் உரை (பதப்பிரிப்பு, பொழிப்புரை) எழுதப்பட்டு மூலமும் உரையுமாக மாதாந்திர அமுதத்தில் குடம் 12

திவலை 12இல் வெளிவந்துள்ளது.

போசலபாவா கதி : பக்தமான்மிய அனுபந்தத்தில் முதலாவது கதியாக இடம்பெற்றிருப்பது 'போசலபாவா கதி'யாகும். இது 125 பாடல்களைக் கொண்டது. வேளாளர் குலத்தில் பாண்டுரங்கக் கடவுள் வீற்றிருக்கும் பண்டரிபுரத்திற்கு அருகே உள்ள பால்காட்டூரில் பிறந்தவர் போசலபாவா. இவருக்கு மாண்கோபோதல் எனும் மற்றொரு பெயரும் உண்டு. திருமால் திருவடிகளை வணங்கி அடியவர்களுக்கு வறுமை வந்தபோழ்தும் அன்னதானம் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டவர். இந்நூலுக்குத் தவத்திரு மருதாசல சுவாமிகள் உரை எழுதியுள்ளார். இவ்வுரையுடன் இந்நூல் மாதாந்திர அமுதத்தில் குடம் 15 திவலை 8, 9, 11, 12களிலும்; குடம் 16 திவலை 2, 3, 4களிலும் வெளிவந்துள்ளது.

இவ்வுரையாசிரியர் (மருதாசல சுவாமிகள்) பக்தமான்மியத்தில் இடம்பெற்றிருக்கும் அடியவர்களின் கதைச் சுருக்கத்தினை மாதாந்திர அமுதத்தில் கடந்த 18 மாதங்களாகத் (திசம்பர் 1999 வரை) தொடர்ந்து எழுதி வருகின்றார்.

ஊ) குருந்தமலை குழந்தை வேலாயுதசாமி பிள்ளைத்தமிழ்

குருந்தமலையில் வீற்றிருக்கும் குழந்தை வேலாயுதசாமி மீது தவத்திரு கந்தசாமி சுவாமிகளால் பாடப்பெற்றதே குருந்தமலை குழந்தை வேலாயுதசாமி பிள்ளைத்தமிழ் எனும் நூல். இந்நூல் விநாயகர் மற்றும் சற்குரு துதியோடு பருவத்திற்குப் பப்பத்துப் பாடல்கள் வீதம் 102 பாடல்களால் ஆனது. முருகப்பெருமானின் திருவிளையாடல்களைப் பிள்ளைத்தமிழாகப் பாடப் பெற்றுள்ளது. இதற்குத் தவத்திரு மருதாசல சுவாமிகள் உரை எழுதியுள்ளார். இந்நூல் மூலமும் உரையுமாக மாதாந்திர அமுதத்தில் குடம் 16 திவலை 9-12களிலும்; குடம் 17 திவலை 1, 3, 5, 6, 8, 9, 10களிலும் வெளிவந்துள்ளது. இந்நூல் தனி நூலாகவும் அச்சிடப்பெற்றுள்ளது.

எ) அறநெறி வெண்பா

கொல்லாமை மற்றும் உலக மாந்தர்தம் இயல்புகளை 20 வெண்பாக்களில் தவத்திரு கந்தசாமி சுவாமிகளால் பாடப்பெற்றதே அறநெறி வெண்பா. இந்நூல் மாதாந்திர அமுதத்தில் குடம் 13 திவலை 10இல் வெளிவந்துள்ளது.

ஏ) பதிகங்கள் மற்றும் திருப்புகழ்

தவத்திரு கந்தசாமி சுவாமிகள் 150க்கும் மேற்பட்ட பதிகங்களையும் பதிகம் பாடிய தலங்கள்தோறும் திருப்புகழ்களையும் பாடியருளியவர். இவர்தம் பெரும்பான்மையான பதிகங்களும் திருப்புகழ்களும் அச்சு வடிவம் கண்டுள்ளன. எனினும் சில பதிகங்களும் திருப்புகழ்களும் மாதாந்திர அமுதத்தில் மூலமாகவும் மூலமும் உரையுமாகவும் வெளிவந்துள்ளன. அவை பின்வருமாறு :-

ஈச்சநாரி விநாயகர் பதிகம் : முன்னர்க் குறிப்பிட்ட ஈச்சநாரி விநாயகப் பெருமான்மீது தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பதிகம் ஒன்றும் பாடியுள்ளார். விநாயகப் பெருமானின் பெருமைகளைக் கூறித் தன்னை எவ்வாறெல்லாம் வைத்துக் காக்க வேண்டும் என்ற விண்ணப்பங்களுடன் இப்பதிகம் பாடப்பெற்றுள்ளது. காப்பு

வெண்பா ஒன்றுடன் 13 கட்டளைக் கலித்துறையினாலான இந்நூலுக்குச் சிரவையாதீனப் புலவர் ப. வெ. நாகராசன் உரை எழுதியுள்ளார் (பொழிப்புரை, குறிப்புரை). இவ்வுரையுடன் இந்நூல் மாதாந்திர அமுதத்தில் குடம் 19 திவலை 8, 9 களில் வெளிவந்துள்ளது.

சிரவை சற்குரு பதிகம் : சிரவையாதீன முதல்வர், சிரவையாதீன முதல் குருமகா சந்நிதானமான தவத்திரு இராமானந்த சுவாமிகளின் பெருமைகளைப் பாடுகிறது சிரவை சற்குரு பதிகம். இந்நூல் 13 பாடல்களைக் கொண்டது. சுவாமிகள் தம்முடைய இளம் பருவத்திலேயே எழுதப்பெற்ற நூலாகக் கூறப்படுகிறது. இந்நூல் மாதாந்திர அமுதத்தில் குடம் 13 திவலை 11இல் வெளிவந்துள்ளது.

மகாலக்குமி பதிகம் : செம்பங்கத்தில் திருக்கோயில் கொண்டுள்ள மகாலக்குமிமீது தவத்திரு கந்தசாமி சுவாமிகளால் இளம் பருவத்தில் பாடப்பெற்றதே மகாலக்குமி பதிகம். 11 கட்டளைக் கலித்துறையாலான இந்நூல் மாதாந்திர அமுதத்தில் குடம் 13 திவலை 11இல் வெளிவந்துள்ளது.

சிரவை சற்குரு பதிகம் மற்றும் மகாலக்குமி பதிகம் ஆகிய இவ்விரு பதிகங்களும் ஈச்சநாரி அருள்மிகு விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி எனும் தனிநூலின் முற்பகுதியாக முறையே இடம்பெற்றுள்ளன.

கோவை இராமநாதபுரம் விநாயகர் பதிகம் : இந்நூல் கோவை மாநகரத்து இராமநாதபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் விநாயகப் பெருமான்மீது பாடிய 11 பாடல்களைக் கொண்டது. சிரவையாதீனப் புலவர் ப. வெ. நாகராசன் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார். இவ்வுரையுடன் இந்நூல் மாதாந்திர அமுதத்தில் குடம் 19 திவலை 2, 3 களில் வெளிவந்துள்ளது.

பேரூர் ஸ்ரீ அகிலாண்டநாயகி பதிகம் : திருப்பேரூர் தலத்தே வாழும் ஸ்ரீ அகிலாண்டநாயகியின் சிறப்பை இந்நூல் எடுத்துக் காட்டுகிறது. காப்பு வெண்பா ஒன்றுடன் 11 எழுசீர் ஆசிரிய விருத்தப் பாடல்களால் ஆனது இந்நூல். இதற்குப் ப. வெ நாகராசன் உரை எழுதியுள்ளார் இவ்வுரையுடன் இந்நூல் மாதாந்திர அமுதத்தில் குடம் 19, திவலை 3, 4 களில் வெளிவந்துள்ளது.

வெள்ளக்கிணறு வள்ளிநாயகன் பதிகம் : வெள்ளக்கிணறு என்னும் தலத்தில் வள்ளிநாயகி தெய்வயானையாரோடு கோயில் கொண்டுள்ள முருகப்பெருமானாகிய வள்ளிநாயகனின் பெருமைகளைப் பாடுவதாக இந்நூல் அமைந்துள்ளது. காப்பு வெண்பா ஒன்றுடன் 13 எழுசீர் ஆசிரிய விருத்தப் பாவாலான இந்நூலுக்குப் ப. வெ. நாகராசன் உரை எழுதியுள்ளார். இவ்வுரையுடன் இந்நூல் மாதாந்திர அமுதத்தில் குடம் 19 திவலை 5, 6களில் வெளிவந்துள்ளது.

காரமடை ஆண்டாள் பதிகம் : காரமடை என்னும் தலத்தில் கோயில் கொண்டுள்ள ஆண்டாளின் பெருமைகளைப் பாடுவதாக இந்நூல் அமைந்துள்ளது. காப்பு வெண்பா ஒன்றுடன் 11 அறுசீர் ஆசிரிய விருத்தப் பாவாலானது இந்நூல். இதற்குப் ப. வெ. நாகராசன் உரை எழுதியிருக்கிறார். இவ்வுரையுடன் இந்நூல் மாதாந்திர அமுதத்தில் குடம் 19 திவலை 6, 7களில் வெளிவந்துள்ளது.

கீரநத்தம் விநாயகர் பதிகம் : ஐந்து கைகளை உடையவரும் கீரநத்தத்தில் திருக்கோயில் கொண்டுள்ளவருமான விநாயகப் பெருமான்மீது பாடப்பெற்றது இந்நூல். காப்பு வெண்பா ஒன்றுடன் 13 எழுசீர் ஆசிரிய விருத்தப் பாவாலான இந்நூலிற்குப் ப. வெ. நாகராசன் உரை எழுதியுள்ளார். இவ்வுரையுடன் இந்நூல் மாதாந்திர அமுதத்தில் குடம் 19 திவலை 9-11களில் வெளிவந்துள்ளது.

கீரநத்தம் விநாயகர் திருப்புகழ் : மேற்படி விநாயகப் பெருமான்மீது பதிகம் மட்டும் பாடாமல் திருப்புகழும் பாடிப் பரவசம் கொண்டுள்ளார் தவத்திரு கந்தசாமி சுவாமிகள். இந்நூலுக்குப் ப. வெ. நாகராசன் உரை எழுதியுள்ளார். இவ்வுரையுடன் இந்நூல் மாதாந்திர அமுதத்தில் குடம் 19 திவலை 11, 12 களில் வெளிவந்துள்ளது.

2) தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பற்றிய நூல்கள்

தவத்திரு கந்தசாமி சுவாமிகளைப் பற்றி ஸ்ரீல ஸ்ரீ கந்தசாமி சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்று வண்ணம், ஸ்ரீல ஸ்ரீ கந்தசாமி சுவாமிகள் பிள்ளைத்தமிழ், தவத்திரு கந்தசாமி சுவாமிகள் மன்னைக் காஞ்சி ஆகிய நூல்கள் மாதாந்திர அமுதத்தில் வெளிவந்துள்ளன. அவற்றை இப்பகுதி ஆராய்கிறது.

அ) ஸ்ரீல ஸ்ரீ கந்தசாமி சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்று வண்ணம் : வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளுக்கு வாழ்க்கை வரலாற்று வண்ணம் பாடிச் சிறப்புச் செய்தவர் தவத்திரு கந்தசாமி சுவாமிகள். இவருக்குத் தவத்திரு சுந்தர சுவாமிகள் வாழ்க்கை வரலாற்று வண்ணம் பாடிச் சிறப்புச் செய்துள்ளார். வண்ணம் பாடியவருக்கு வண்ணம் பாடியவராகத் திகழ்கின்றார் தவத்திரு சுந்தர சுவாமிகள். இந்நூல் தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாக் குருபூசை மலரில் (1951) வெளிவந்துள்ளது. என்றாலும் மாதாந்திர அமுதத்தில் குடம் 13 திவலை 10இல் மீண்டும் வெளிவந்துள்ளது.

ஆ) ஸ்ரீல ஸ்ரீ கந்தசாமி சுவாமிகள் பிள்ளைத்தமிழ் : தவத்திரு கந்தசாமி சுவாமிகள்மீது சிரவையாதீனப் புலவர் கு. நடேசகவுண்டரால் பிள்ளைத்தமிழ் பாடப்பெற்றுள்ளது. பருவத்திற்கு ஏழு பாடல்கள் வீதம் இந்நூல் அமைந்துள்ளது. இதற்குத் தவத்திரு மருதாசலசாமி உரை எழுதியுள்ளார். மாதாந்திர அமுதத்தில் காப்புப் பருவம் ஏழு பாடல்களும் செங்கீரைப் பருவத்தில் 5 பாடல்களும் ஆகப் பன்னிரண்டு பாடல்கள் மட்டும் மூலமும் உரையுமாக வெளிவந்துள்ளது. மற்ற பகுதிகள் மாதாந்திர அமுதத்தில் வெளிவரவில்லை. இந்த 12 பாடல்கள் குடம் 13 திவலை 7, 8 களில் வெளிவந்துள்ளன.

இ) தவத்திரு கந்தசாமி சுவாமிகள் மன்னைக் காஞ்சி : கு. நடேசகவுண்டரால் பாடப்பெற்றதே இந்நூல். 32 அடிகளைக் கொண்ட ஆசிரிய அடிகளால் ஆனது இது. மாதாந்திர அமுதத்தில் இந்நூல் குடம் 13 திவலை 10இல் வெளிவந்துள்ளது.

இவ்வாறு மாதாந்திர அமுதத்தில் இடம்பெற்ற தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் நூல்களைத் தொகுத்துக் காணலாம்.

முடிவுகள்

1. பருவ இதழ்களில் சுவடிப்பதிப்பு நூல்களை வெளியிட்டுத் தனக்கென ஓரிடத்தைப் பெற்றுள்ளது 'மாதாந்திர அமுதம்'.
2. கந்தசாமி சுவாமிகளின் நூல்கள் எல்லாம் ஒரே தொகுப்பாகக் கிடைத்தால் மேலாய்வுக்கு வழிவகுக்கும்.
3. கந்தசாமி சுவாமிகளின் பாடல்களில் காணக்கூடிய சொல்லமைப்பும் மொழியமைப்பும் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. சங்க இலக்கியப் பாக்களுக்கு நிகராக இவர் பாடல்கள் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றன. எனவே, இவரது பாடல்களின் மொழிநடையையும் சொல்லாட்சியையும் ஆய்வு செய்தால் புதிய பல நெறிகள் உருவாவதற்கு வாய்ப்பாக அமையும்.

☐

சொ. மணிவண்ணன்
தேர்வுநிலை விரிவுரையாளர்
அரசர் கல்லூரி
திருவையாறு

கம்பனின் கவித்திறன்

'கல்வியிற் பெரியவன் கம்பன்' படைத்த இராமகாதை மொழிபெயர்ப்பு நூலாயினும் முதல் நூலுக்குரிய தகுதியைப் பெற்றுத் தமிழுக்குப் பெருமை சேர்த்து வருகிறது. வான்மீகி இராமாயணத்தைப் படித்த கம்பன், இராமன் ஆற்றலிலும் அளப்பரிய குணச்சிறப்பிலும் தன் மனத்தைப் பறிகொடுத்ததனால் தமிழுக்குக் கிடைத்த தனிப்பெருஞ்செல்வமே கம்பராமாயணம். இறைவன் மனிதனாகத் தோன்றித் தன்னுடைய அரிய செயல்பாடுகளால் மாமனிதனாக உயர்ந்த நிலையை இராமன் வழி கண்டு கொண்ட கம்பர், அவனிடம் கொண்ட ஈடுபாட்டில் தமிழுலகம் பெற்ற பேரிலக்கியமே இராமாயணம். இதனால்தான் பாரதி 'கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்' என்று போற்றிப் புகழ்ந்தார். இத்தகைய சிறப்புமிக்க கம்பராமாயணத்திற்குப் பன்னெடுங் காலமாகப் பலரும் உரையெழுதி இருக்கின்றனர். பல திறனாய்வு நூல்களும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அந்த வரிசையில் தோன்றிய ஆய்வு நூல்தான் 'கம்பன் கவித்திறன்' என்பதாகும். கம்பராமாயணத்தில் குறிக்கத்தக்க செய்யுட்களை எடுத்துக்கொண்டு அவற்றிற்கு நுட்பமாகப் பொருள் காணும் வழியாகக் கம்பன் படைப்பாற்றலை எடுத்துக் காட்டும் நோக்கில் பல கட்டுரைத் தொகுப்புக்களைக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் தஞ்சாவூர் மாவட்டத்தில் கல்லணையிலிருந்து கீழ்த்திசையில் 12 கி மீ. தொலைவிலுள்ள இளங்காடு என்னும் கிராமத்தைச் சேர்ந்த தமிழறிஞர் சிங்காரவேல் சேதிராயர் ஆவார். அச்சில் வெளிவராமல் தாளில் எழுதப்பட்டு இருப்பது இவண் குறிப்பிடத்தகும்.

இளங்காடு கிராமத்தில் தமிழ்ப்புலமை மிக்க சான்றோர்கள் பலர் காலங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். தற்பொழுதும் இவ்வூரில் பலர், தமிழாசிரியர்களாகத் திகழ்கின்றனர். இங்கு தமிழார்வம் மிக்க சான்றோர்களால் நிறுவப்பட்ட 'நற்றமிழ்ச் சங்கம்' ஏறத்தாழ நூற்றாண்டுப் பழமை மிக்கதாக உள்ளது. இச்சங்க விழாவிற்கு வருகை தந்த தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதய்யர், ஊரின் எல்லையிலிருந்து காலணி அணியாமலே நடந்து வந்ததாக ஒரு தகவலுண்டு. அதற்கு அவர் கூறிய காரணம், தமிழ் மணம் கமழும் இவ்வூரில் காலணி அணிந்து நடக்க மனம் ஒப்பவில்லை என்பதுதான். இத்தகைய சிறப்பிற்குரிய தமிழ் மண்ணில் தோன்றிய தமிழ்ப்பெருந்தகைதான் செ. சிங்காரவேல் சேதிராயர் இவர் தமிழாசிரியராய்ப் பணிபுரிந்து தகைமை சான்ற புலமையால் பலரது போற்றுதலுக்கும் உரியவராகத் திகழ்ந்தவர். கம்பராமாயணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர்

கம்பனது புலமைத்திறனைப்பற்றித் தனித்தன்மை மிக்க சில கட்டுரைகளைப் படைத்துள்ளார் காகிதச்சுவடியில் எழுதப்பட்ட அச்சு வடிவம் பெறாத அவருடைய கம்பனது நுட்பவுணர்வு கட்டுரைத் தொகுப்பின் சுவைமிக்க சில விளக்கங்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

அயோத்தி நகர மக்களின் கல்விச் சிறப்பினைக் கூறவந்த கம்பன்.

"கல்லாது நிற்பார் பிறரின்மையின் கல்வி முற்ற
வல்லாரு மில்லை அவை வல்லர் அல்லாரு மில்லை"
(பால. நகர. 74)

என்று குறிப்பிடுகின்றார்.

அயோத்தி நகரில் யாவரும் கற்றவரே என்று கம்பன் கூற விரும்புகின்றான். அப்போது கல்லாதார் இன்மையின் என்று கூறினாலே அவன் கூறவிரும்பும் பொருள் அமைந்து விடும். ஆயினும். கல்லாது நிற்பார் பிறரின்மையின் என்று பிறர். நிற்பார் ஆகிய சொற்களைச் சேர்த்துக் கூறியதில் மிகுந்த நுட்பத்தைச் சிங்காரவேல் சேதிராயர் காணுகின்றார்.

'பிறர்' என்பது மற்றையோர் எனப் பொருள்படுவது. அது முன்னர்க் கருதியார்க்கு எதிர்நிலையில் நிற்பாரைக் குறிப்பதாகும். ஈண்டுப் பிறர் என்பது கற்றாரின் நீங்கிய இல்லார் எனப்படுதலை நாம் உணர்தல் வேண்டும். அங்ஙனமாகக் கல்லாதார் என்றே கூறி ஒழியாது 'பிறர்' என்னும் சொற்கொண்டு கல்லார் என்பது உணருமாறு கூறியது. கல்லார் எனப்படுவோரைக் கற்றாரின் நீங்கிய பிறர் எனக் கூறப்படுவதில் பொருட்சிறப்பு உள்ளது.

கல்லார்க்கும் கற்றார்க்கும் உள்ள வேறுபாட்டினை உணர்த்த வந்த வள்ளுவர்.

"விலங்கொடு மக்கள் அனையா இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்" (குறள்.410)

என்கிறார். ஈண்டு கற்றாரோடு கல்லாதார் என்னாது கற்றாரோடு ஏனையவர் என்றது யாது கருதியோ? • பெரியார் எனப்படும் சொல் நற்பண்புகள் நிறையப்பெற்ற மக்களையும் சிறியார் எனப்படும் சொல் நற்பண்புகள் குறையப் பெற்ற மக்களையும் குறிக்கும் வகையில் அமைந்த மறுதலைச் சொற்கள். குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல் என்னும் குறள் குணம் குறைந்தவரும் மக்கள் இனத்தைச் சார்ந்து நிற்பவரே என்பதனைக் குறிப்பதாகக் கொள்ளுதல் பொருந்துவதே எனவே மறுதலைச் சொற்களால் குறிக்கப்பெறும் ஓரினஞ்சார்ந்த பொருள்கள் தம்முன் ஏற்றத் தாழ்வுடன் ஒன்றனை ஒன்று சார்ந்து நிற்பனவாகவே கருதப்படலாம். மேற்காட்டிய குறளில் 'கற்றாரோடு ஏனையவர்' என்னாது கற்றாரோடு கல்லாதார் எனக் கூறியிருப்பின் முன்பு கூறியவாறு கற்றாரும் கல்லாரும் ஏற்றத்தாழ்வுடன் ஓரினம் சார்ந்தவராகவே கருதப்படுவர். அவ்வாறு கொள்ளும்போது அவர் விலங்கொடு மக்களனையர் எனும பிறப்பினால் ஒவ்வாத விலங்கினை உவமையாகக் காட்டல் பொருந்தாது. ஆகலான் 'கற்றாரோடு ஏனையவர்' என்றார். ஏனையவர் என்ற சொல் மற்றவர் பிறர் என்னும் பொருள்பட நிற்பது. இதனால் கற்றாரோடு' முரண்பட்டார்.

கல்லார் என்பதாயிற்று. அஃது உயர்திணைக்கும். அஃறிணைக்கும் உள்ள முரணைக் குறிப்பது. பெருமை. சிறுமைக்குரிய முரண் ஓரினஞ் சார்ந்தது. இஃது அற்றன்று எனவே கம்பர். 'கல்லாது நிற்பார் பிறர் இன்மையின்' என்று கூறிய நுட்பம் எண்ணி மகிழத்தக்கதாகும்.

இனி 'நிற்பார்' என்னும் சொல் இடம் பெற்றதுபற்றியும் சேதிராயர் கருத்துக் கூறுகிறார். செல்வம் என்பது தன்னை நன்னெறிப்படுத்துவார்க்கு இம்மை மறுமையில் நற்பயன் அளிக்கவல்லது. அவ்வாறு அதனை நன்னெறிப்படுத்துதற்கு உதவுவது கல்வியறிவு; அவ்வறிவு இல்லார். செயற்குரியன செய்து அறமும் புகழும் பெறாது வறிதே காலங்கழிப்பர். அதனால் அவர் இயக்கமற்றவராகவே - மரமாகவே - கருதப்படுவர். மேலும் நிற்றல் என்பது தொழிலொழிவு என்னும் பொருள் தருதலோடு மறைதல் (தொகுதல்) என்னும் பொருளிலும் வரும். பெருஞ்செல்வம் படைத்தோர் பலராலும் அறியப்படுதல் போலக் கல்வியாளரும் பலராலும் அறியப்படுவர். கல்வியிலார் அங்ஙனம் அறியப்படாமையின் 'நிற்பார்' என்று கம்பர் குறித்தார்.

ஈண்டு. நிற்பர். பிறர் என்ற சொற்களை இடம்பெறச் செய்த கம்பரின் நுட்பவுணர்வினைச் சேதிராயர் விளக்கும் நயம் எண்ணி மகிழத்தக்கது.

சொல்லின் செல்வனாகிய அனுமனது சொல்வன்மையினை நுட்பமாக எடுத்துரைக்கும் கம்பனின் படைப்புத்திறனைச் சேதிராயர் பின்வருமாறு விளக்குகின்றார்.

இலங்கையில் *சீதை இருந்த* நிலையை அனுமன் இராமனிடம் தெரிவிக்கிறான். அதற்குரிய பாடல் :

"விற்பெருந் தடந்தோள்வீர வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன்
இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றுங் களிநடம் புரியக் கண்டேன்"
(சுந்தர. திருவடி. 62)

என்பதாகும்.

"மரத்தில் மறைநதது மாமத யானை
மரத்தை மறைத்தது மாமத யானை

என்றனர் சான்றோர்.

வினைவலான் செய்த மரத்தினான் இயன்ற யானை ஒன்று; அது பார்ப்பார் உள்ளத்து யானை என்று உணர்தற்கேற்ப வடிவமைக்கப் பெற்றது. பயான்றரன்றிப் புதிதாகக் காண்போர் உண்மை யானை என்றே உணர்வர். அதன் உண்மை யுணர்ந்தோர் அஃது உண்மை யானையன்று; மரத்தினானியன்றது என அவர்க்கு எடுத்துக்காட்டியவழி முன்னர் உண்மை யானை என உணர்ந்தார். ஐயன்மீர்! யாங்கள் அதனை மரம் என நினைத்திலேம். உண்மை யானையென்றே நினைத்தோம் என்பர். அதுபோலவே சீதையைக் கண்ட அனுமன் அவள் பெண் வடிவு காணானாய். அப்பெண் வடிவில் மிக்குத் தோன்றிய கற்பினியல்பு. பொறுமையின் தன்மை. இற்பிறப்பின் பண்பு ஆகிய இவற்றையே உணர்கின்றான். இதனையே அவ்வனுமன்

இராமனிடம். "இற்பிறப்பென்ப .... களிநடம்புரியக் கண்டேன்" என்கின்றான்

இங்கு அனுமனின் அறிவுத்திறன் கம்பரால் காட்டப்படும் முறையை விளக்கிய சேதிராயர். கம்பனின் மற்றொரு நுட்பமான படைப்புத்திறனை விளக்குகிறார்.

போர்க்களத்தில் இலக்குவனை எதிர்த்து இந்திரசித்து வீரவாதம் நிகழ்த்துகின்றான்.

> "முன்பிறந்த நின்தமையனை முறைதவிர்த்து உனக்குப்
> பின்பிறந்தவ னாக்குவென் பின் பிறந்தோயை
> முன்பிறந்தவ னாக்குவென் இது முடியேனேல்
> என்பிறநதனாற் பய னிராவணற் கென்றான்"
>
> (யுத்த. பிரமாத்தி. 63)

இந்திரசித்து. இலக்குவனை அழித்து இராமனையும் அழிப்பதாகக் கூறும் இப்பாடலின் நயம்பற்றிச் சேதிராயர் பின்வருமாறு விளக்குகின்றார்.

சாலவித்தைக்காரன் ஓர் கலத்தை எதிர்நிற்போரிடைக் காட்டி இதனுள் ஒன்றுமில்லை பாருங்கள்; இதனுள் சர்க்கரை வரச் சொல்கிறேன் என்று கூறி அக்கலத்தை அவர் எளிதில் உணராதவாறு அங்குமிங்கும் அசைத்தெடுத்துப் பின்பு சர்க்கரையைக் காட்டுகிறார். பின்னர்ச் சர்க்கரையை மணலாக்கிக் காட்டுகிறேன் என்று முற்கூறியவாறே செய்து மணலைக் காட்டுகின்றான். அதுபோலவே கம்பன். இலக்குவனுக்கு முன் பிறந்த இராமனை. அவனுக்குப்பின் பிறந்த தம்பியாகவும். இராமனுக்குப் பின்பிறந்த இலக்குவனை அவ்விராமனுக்கு முன்பிறந்த அண்ணனாகவும் காட்டி நம்மை மகிழச் செய்யும் சாலவித்தைக்காரனாக விளங்குகிறான்.

இந்திரசித்து வீரவாதம் செய்யும் பாடலில் 'முறைதவிர்ந்து' என்பதற்குப் பிறப்பு முறையை ஒழித்து என்பது பொருள். அஃது உனக்கு முன்பிறந்த இராமனை அண்ணன் முறையை ஒழித்துத் தம்பி முறையோனாகவும் அவற்குப் பின்பிறந்த இலக்குவனாகிய உன்னைத் தம்பி முறை ஒழித்து அண்ணன் முறையோனாகவும் செய்வேன் என்பதைக் குறிக்கும்.

மற்றொரு பொருள் - முன் பிறந்தவர் முன்னர் இறத்தலும் அவர் பின் பிறந்தவர் அவர்க்குப் பின் இறத்தலும் முறையாகும் என உலகம் பொதுவாகக் கருதுகின்றது. இப்போது. உலகம் கொள்ளும் அப்பொதுமுறையை ஒழித்து உனக்கு முன்பிறந்தோனாகிய இராமனை உனக்குப் பின் கொல்வேன்; இராமனுக்குப் பின் பிறந்தோனாகிய உன்னை உனக்கு முன் பிறந்தோனாகிய இராமனைக் கொல்வதற்கு முன் கொல்வேன் என்பதாகும். எனவே 'பின்பிறந்தவனாக்குவென்' என்பதனை. 'பின்பிறந்தவனாக்குவேன்' எனவும் 'பின்பு இறந்தவனாக்குவேன்' எனவும். 'முன்பிறந்தவனாக்குவென்' என்பதனை முன்பிறந்தவனாக்குவேன் எனவும் முன்பு இறந்தவனாக்குவேன் எனவும் பிரித்தல் வேண்டும்.

இங்கு. 'பிறத்தல்' என்ற சொல்லை முன். பின் என்றும் சொற்களோடு இயைபுபடுத்திக் கம்பன் காட்டும் அற்புத நயத்தினைச் சேதிராயர் நுண்மாண்

நுழைபுலத்துடன் எடுத்துக்காட்டும் திறன் உணர்ந்து போற்றத்தக்கது.

அடுத்து இராவணன் மனைவி மண்டோதரியின் உணர்வினைக் கம்பர் நுட்பத்துடன் வெளிப்படுத்துவதைச் சேதிராயர் விளக்குகிறார்.

இராமனால் இராவணன் கொல்லப்பட்டான். இஃதுணர்ந்த அவ்விராவணன் மனைவி மண்டோதரி பெருந்துயர் கொண்டு போர்க்களம் புகுகின்றாள். புகுந்த அம்மண்டோதரி தன் கணவன்பால் எத்துணைப் பற்றுள்ளம் உடையவளாக இருந்தாள் என்பதனை உணர்த்தப் போந்த கம்பன்.

"நினைந்ததும் மறந்ததும் இலாத நெஞ்சினாள்"
(யுத்த. இரா. வதை. 228)

என்பதனால் குறிப்பிடுகின்றான். நினைப்பென்பதுள் வழி மறப்பிலாமையும். மறப்பென்பதுள்வழி நினைப்பிலாமையும் உள்ளத்துப் பொருந்துவன. "நினைந்ததும் ....நெஞ்சினுள்" என்றவழி இல்லாமை என்ற பொதுத் தன்மையில் நினைவும் மறதியும் சமநிலைப்பாற்படுவனவே. அங்ஙனமாக, மறதியின்மை காரணமாக எஞ்ஞான்றும் நினைவுண்மை நிலைபெறுதல் போல. நினைவின்மை காரணமாக எப்பொழுதும் மறதியுண்மை கோடலும் பொருந்துவதாகும். இவ்வாறிருக்க. மறதி உண்மை என்பதொன்றனை யொழித்து நினைவுண்மை மாத்திரை கோடல் பொருந்துவதாகாதே.

"உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்"
(குறள். 1125)

இக்குறளும். நினைத்தலும் மறத்தலுமிலாத நிலையினைக் கூறுவதே. அங்ஙனமாயின். 'நினைந்தது மறந்ததுமிலாத நெஞ்சினாள்' என்பதற் குரைத்தாங்கு ஈண்டும் உரைத்தல் கூடுமோ எனின்? கூடாது. ஏன்? இக்குறளில் 'மறப்பின்' என்னும் எச்சச்சொல் மறவாமையை உணர்த்தி நிற்றலின் மறதி உண்மை அழிந்தொழிய நினைவுண்மையே பெறப்படும். மறப்பின் உள்ளுவன் என்பது மறவாமையை உணர்த்துவதாயினும் அம்மறவாமையை வலியுறுத்தற் பொருட்டுப் பின்னர் மறப்பறியேன் என்றான் என்க. இக்கருத்து இக்குறளில் அமையுமாறு உணர்ந்து. பரிமேலழகர். "ஒருபொழுதும் மறத்தலை அறியேன் ஆகலான் நினைத்தலையும் அறியேன்" என நுணுக்கம் கூறினார் என்க என்பதும் அறிதல் போல. "நினைந்ததும் மறந்ததுமிலாத நெஞ்சினாள்" என்றவிடத்து மறதி ஒழிந்து நினைவுண்மை கோடற்கிடனின்றே எனின்? தன் கணவன் இறந்தவுடன் அவற்கண்டு அவள் அரற்றிய. 'தேவர்க்கும்' எனத் தொடங்கும் செய்யுளில். "எவர்க்கும் வலியானுக் கென்றுண்டாம் இறுதியென ஏமாப்புற்றேன்" (இராவ. வதை 242) எனவும். 'அரைகடையிட்ட' எனத் தொடங்கப்பெறும் செய்யுளில். "அளப்பரி யவரமென்னும் பாற்கடலைச் சீதையெனும் பிறைகடையிட்டழிப்ப தனையறிந்தேனோ தவப்பயனின் பெருமை பார்ப்பேன்" (இரா. வதை. 243) எனவும் வரும் அடிகளுள். 'எவர்க்கும் வலியான்' என்பது அம்மண்டோதரி தன் கணவன் ஆற்றல்பற்றி எண்ணியிருந்த எண்ணம் கருதியது. ஆற்றல் பற்றிய அவ்வெண்ணம் அவனை நினையாது தனியே அவன் ஆற்றலை மாத்திரம் நினைந்திருந்தனள் என்பது பொருந்தாது.

ஒருபொருளின் பண்பினை உணரும் ஒருவன், அப்பண்பினுக்கு முதலாகவுள்ள பொருளை நினையாதிருத்தல் கூடாதன்றே? அடுத்தது இராவணனுடைய வரமென்னும் பாற்கடலைச் சீதையெனும் பிறைகடையிட்டழிப்பதனை யான் அறியேன். ஆயின், அவனுடைய தவத்தின் பயனாகவுள்ள பெருமையையே நோக்கி நின்றேன் என்கின்றாள். அம்மண்டோதரி, ஈண்டும் மேற்கூறியாங்கு அவன் பெருமை நோக்கிய அவள் அவனை எண்ணாதிருந்தனள் என்பது பொருந்தாது. எனவே, மேற்காட்டிய ஈரிடத்தும் அவ்விராவணன்றன் ஆற்றலும் பெருமையும் நினைந்திருந்தனள் என்பது பெறப்படுதலின் அப்பண்புகளுக்கு முதற் பொருளாகவுள்ள தன் கணவனையும் நினைந்தவளேயாகல் வேண்டும். ஆகலின், 'நினைந்ததும் மறந்ததுமிலாத நெஞ்சினுள்' என்பது தன் கணவனை மறத்தலின்றி நினைந்தே இருந்தனள் என்பது ஒருதலையாதல் உணர்க. அன்றி, அம்மண்டோதரி, தன்கணவன் குற்றங்களை நினையாதவள் எனவும், குணங்களை மறவாதாள் எனவும் கொள்வாரும் கொள்க.

இதுகாறும் இடம்பெற்றவை இளங்காடு செ. சிங்காரவேல் சேதிராயர், கம்பராமாயணப் பாடல்களுக்கு ஆய்ந்து எழுதிய உரைத்தொகுப்புகளில் ஒருசில சான்றுகளாகும். அவரது உரைத்திறனை உணர்த்தும் வகையில் உரைநடையில் மாற்றம் செய்யாமல் அப்படியே தரப்பட்டுள்ளது. சேதிராயரது கட்டுரைத் தொகுப்புகளை நுணுகி ஆராய்ந்தால் அவரது திறனாய்வுத் தகுதியை நன்கு அறியமுடியும். அதற்கு அன்னாரது உரைத்திறன் மிக்க கட்டுரைகள் அச்சு வடிவம் பெறுவது இன்றியமையாததாகும்.

□

வே. இரா. மாதவன்
இணைப்பேராசிரியர்
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தணிகைவேள் பாரதியாரின் தாள் சுவடிகள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தமிழகத்தில் தோன்றி எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்திருந்த முதுபெரும் தமிழறிஞர் தி. வெ. தணிகைவேள் பாரதியார் ஆவார். இவர் பாடிய பல்லாயிரக்கணக்கான பாடல்களையும் உரைநடைப் பகுதியையும் தாமே தம் கைப்படத் தாள்களில் எழுதி வைத்துள்ளார். அவற்றுள் பல இன்று கிடைக்கவில்லை. இப்பொழுது கிடைத்துள்ள சில காகிதச் சுவடிகளை ஆராயும்முகமாக இக்கட்டுரை அமைகிறது.

வாழ்வும் வாக்கும்

தணிகைவேள் பாரதியாரின் முன்னோர்கள் தஞ்சையைச் சார்ந்தவர்கள். இசைத்துறையில் ஈடுபாடுள்ளவர்கள். இவர்கள் பின்னாளில் செங்கை மாவட்டத்தைச் சார்ந்த திருப்போரூரில் குடியேறி வாழ்ந்தனர். வேளாளர் குலத்தைச் சார்ந்த இவருடைய தந்தையார் பெயர் வெங்கடாசலம். தாய் தெய்வயானை அம்மாள் ஆவார். இவர்களுக்கு ஒரே மகனாகத் தோன்றிய இவர் இளமையில் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். கோவை சுப்பிரமணிய சாஸ்திரியிடம் மாணவராயிருந்து தென்மொழி, வடமொழி பயின்றார். ஆசிரியரின் முழு அன்பைப் பெற்ற இவர், முருகப் பெருமானை உபாசனா மூர்த்தியாகக் கொண்டவர். சிவதீக்கை பெற்றவர். இவர் சைவராகத் திகழ்ந்தவராயினும் வைணவத்தைப் போற்றியவர். வைணவ சித்தாந்தத்தையும் வைணவ பாடியத்தையும் நன்கறிந்தவர். தேவார இசையொப்பத் திவ்வியப்பிரபந்தத்தையும் பாடும் திறத்தவர். சைவ வைணவ வேறுபாடில்லாத நெறியாளர். இயற்றமிழைச் சொற்பெருக்காற்றியவர். இசைத்தமிழால் இசைத்தவர். நாடகத்தமிழாலும் நிகழ்ச்சிகளைச் செய்தவர்.

திருக்கழுக்குன்றத்தில் சிலகாலம் வாழ்ந்திருந்த இவர், அருகிலுள்ள விளாகம் என்னும் கிராமத்தில் நாடகத் தமிழுக்காகத் தொண்டாற்றியுள்ளார். திருமங்கையாழ்வார் சரித்திரத்தை இசை நாடகமாகப் படைத்துள்ளார். மேலும், பண்டரிநாதர் இசைப் பாடல்களைப் பலருக்கும் பயிற்றுவித்துள்ளார். இன்றும் அப்பகுதி மக்கள் இதனைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளில் புலமை மிக்கவராகத்

திகழ்ந்த இவர் சிறந்த சொற்பொழிவாளராகத் திகழ்ந்தவர். மகாபாரதம், இராமாயணம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், வில்லிபாரதம், பெரியபுராணம், அடியார் வரலாறுகள், திவ்வியப் பிரபந்தம் எனப் பல தலைப்புகளில் தொடர்ச்சியாகப் பல நாள்களுக்குத் தென்னகம் முழுவதும் பொழிவுகளைச் செய்துள்ளார். இத்தகைய நிகழ்ச்சிகளில் அவ்வப்பொழுது நிகழ்ச்சிக்கு ஏற்றவண்ணம் விருத்தப் பாக்களையும், இசைப்பாக்களையும் உருவாக்கி, இராக, தாளம் அமைத்துப் பாடுவது இவருக்கே உரியதாகும்.

எழுத்தாற்றல்

கவியாற்றலும், சொல்லாற்றலும், இசையாற்றலும் ஒருங்கிணைந்த இவர் எழுத்தாற்றலும் கொண்டவர். தம் நிகழ்ச்சிகள் அத்தனையையும் தம் கைப்படத் தாள்களில் எழுதி வைத்துள்ளார். சித்தாந்தம், வேதாந்தம் இவைகளில் தெளிவான கருத்துடைய இவர் பல மாணாக்கர்களுக்கு இவற்றைப் பாடமாகவும் நடத்தியுள்ளார். அதற்கான குறிப்புகளையும் எழுதி வைத்துள்ளார்.

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் தன்னை அதில் முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட இவர் மிக எளிமையாகவே வாழ்ந்தவர். சென்னை பெரம்பூரில் காந்தி நினைவில்லத்தில் தேவாரப் பாடசாலையை நடத்தியுள்ளார். காஞ்சிபுரத்திலும் திருவொற்றியூரிலும் தங்கியிருந்து பல தமிழறிஞர்களுடன் மொழி ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளார். ந. மு. வேங்கடசாமி நாட்டார், கி. வா. ஜகன்னாதன், மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, வித்யானந்தகிரி சுவாமிகள், குக ஸ்ரீ கண்ணன் அடிகள் போன்றோர் தணிகைவேள் பாரதியாரின் பேரன்பர்களுள் சிலராவர்.

பட்டங்கள்

இவர் பல சமயங்களில் பலரால் பல பட்டங்கள் பெற்றுள்ளார். கி. பி. 1929இல் பரங்கிமலையடுத்த நந்தம்பாக்கத்தில் நடந்த கலித்தொகை மாநாட்டில் தலைமை வகித்த காசிவாசி யதீந்திர சுவாமிகள் இவருக்கு அளித்த பட்டம் **'பாரதி'** என்பதாகும்.

1939இல் தஞ்சாவூர் மாவட்டத்தில் இவர் சைவ, வைணவச் சொற்பொழிவுகள் ஆற்றியபோது, சைவ வைணவப் பெரியார்கள் கூடி அளித்த பட்டம் **'இருசமய நம்பி'** என்பதாகும்

இவ்வாறே, முத்தமிழ்த்துறைவாழ் அருட்கவி, வித்தியாசாகரர், வண்ணப்புலவர், நாற்கவிப் புலவர், கவிஞர்சிகாமணி, இருமொழிப்புலவர், செந்நாப்புலவர், முத்தமிழ் நம்பி, தொண்டைமான் நம்பி, வியாச நம்பி, முருகருட் பெருங்கவிக்கோ, திவ்வியப்பிரபந்த மாமணி எனப் பல பட்டங்களைப் பெற்றுள்ளார். இவைதவிர, இவருடைய மாணாக்கர்கள் இவரைப் பணிவன்போடு 'தகைவேள்' என்றே அழைப்பர் என்ற இவர்தம் மாணாக்கர் சு. த. இட்டலிங்கம் பிள்ளை ஒரு தனித்தாளில் குறித்துள்ளார்.

உரைகளும் குறிப்புகளும்

திருப்புகழ் சதுரர் சே. தா. இராமலிங்கம் பிள்ளை இவருடைய பாடல்களுக்கு

எழுதிய உரைகளும் காகிதச் சுவடிகளாகக் கிடைக்கின்றன. பாரதியார் சொற்பொழிவாற்றும் நிகழ்ச்சிகளில் இவருடைய இளவல் கண்ணப்பரும் பிற மாணாக்கர்களும் 'கையேடு' வாசித்ததாகக் குறிப்புகள் கிடைக்கின்றன அதற்காகவும் இவர் குறிப்புரைகளைத் தாள்களில் எழுதி வைத்துள்ளார்.

இவருடைய நிகழ்ச்சிகளில் பல அன்பர்கள் கேட்டவுடனேயே பாடிய ஆசு கவிகள் பலவற்றை ஆண்டு, மாதம், நாள் குறிப்புகளுடன் எழுதி வைத்துள்ளார். அவை சிலேடை, யமகம், சித்திரகவி எனப் பலவகையில் உள்ளன. இவரிடம் 'பாரதி என்ற பட்டத்தின் தகைமை'பற்றி ஓர் அன்பர் கேட்டவுடன்,

''கலைவாணி யாற்றலுங் காசற்ற பேச்சுங்
கலைவாணர் மெச்சுங் கவிதை - அலையாத
வாரமும் கேட்ட வகையே பாடுவோன்
பாரதியா மென்றே பகர்'

என்று பாடியுள்ளார். இதுவே இவர்தம் கவியாற்றலுக்குச் சான்றாகும்.

பாரதியாரின் இலக்கிய நயங்களை விரிப்பின் பெருகும். அவை தனி ஆய்வுக்குரியதாகும். எனவே, அவர்தம் கையெழுத்துச் சுவடிகளைப்பற்றி மட்டும் இப்பகுதி ஆராய்கிறது.

கையெழுத்துப் பிரதிகளின் சீர்மை

சொற்பொழிவுக்காகவும், பாடம் சொல்லவும், பிற நிகழ்ச்சிகளுக்காகவும் கையெழுத்துப் பிரதிகளை எழுதி வைத்த இவர் அவையனைத்திலும் ஒரு சீர்மையைக் கொண்டுள்ளார். முழு வெள்ளைத்தாளிலும், நோட்டுப் புத்தகங்களிலும் எழுதியுள்ளார். தனி நூல் படைப்புக்களை எழுதும்பொழுது, அவை அச்சில் எவ்வாறு அமைய வேண்டுமென அவர் விரும்பினாரோ அவ்வண்ணமே எழுதி வைத்துள்ளார். முதலில் நூற்பெயர், நூலாசிரியர் பெயர் (பட்டங்களுடன்), எழுதிய ஆண்டு, மாதம், எழுதுவித்தோர் விவரம், நூற்பயன் ஆகியவற்றையும் குறித்துள்ளார்.

காலத்தைக் குறிப்பிடும்போது, தவறாமல் கலியுக ஆண்டையே எழுதுகிறார். ஆங்கில ஆண்டைச் (கிறித்துவ ஆண்டு) சில இடங்களிலேயே குறிப்பிடுகிறார். பாடல் எண்களைத் தமிழ் எண்களிலேயே எழுதியுள்ளார். முன்னுரையில் நூல் எழுதிய வரலாற்றையும் குறிக்கிறார். இவர் தரும் காலக்குறிப்புகள் பல ஆய்வுக்குத் துணைபுரிவன. ஒவ்வொரு காகிதச் சுவடியிலும் இவர் 'தி. வெ. தணிகைவேள் பாரதியார்', 'சுவாமி த. வே. பாரதியார்' என இவ்வாறு கையொப்பமிட்டுள்ளார். தாம் அவ்வப்போது தங்கியிருந்து எழுதிய முகவரிகளையும் இவர் அங்கங்கே குறித்துள்ளார். பின்னாளில் அச்சில் வரும்பொழுது இவை உதவியாகும் என எண்ணியே அவர் இவ்வாறு எழுதியிருத்தல் வேண்டும்.

படைப்பும் அச்சும்

இவருடைய படைப்புகள் பற்றிய பட்டியல் இக்கட்டுரையின் இறுதியில் இணைக்கப் பெற்றுள்ளது. அவற்றுள் சில ஏடுகளே அச்சில் வெளிவந்துள்ளன. பல இன்னும் காகிதச் சுவடிகளாகவே உள்ளன. சேக்கிழார் நூற்றந்தாதி, வறுமைக்கு விடை

கொடுத்த வெண்பா மாலை ஆகிய நூல்களை இக்கட்டுரையாளர் அச்சில் பதிப்பித்துள்ளார். பிற இன்னும் அச்சிடப் பெறவேண்டும்.

ஆய்வுக் குறிப்புகள்

சுமார் அறுபது ஆண்டுகட்கு முன்னர், திருவரங்கம் திருக்கோயில் கருவறையில் தீ விபத்து நேர்ந்தமை இன்று பலருக்கும் தெரிய வாய்ப்பில்லை. அன்று நடந்த அத் தீச்செயலைக் கண்டு வருந்திய இந்நூலாசிரியர் அரங்கநாதரின் சீற்றத்தாலேயே இது நிகழ்ந்தது என்று கூறிச் 'சீரங்கநாதன் சீற்றந்தணி மாலை' என்னும் தனி நூலைப் பாடியுள்ளார். இது, இக்கோயில் வரலாற்றில் இடம்பெறும் ஓர் இலக்கியமாகும்.

ஒரு தனி ஏட்டில், 32 இராமாயணங்கள் பெயரும் அவை ஒவ்வொன்றிலு முள்ள பாடல் எண்ணிக்கைகளைத் தனித்தனியே குறித்துள்ளார்.

> "இதுவல்லாமலும் நாமாவளியாக, சிந்தாக, குறமாக பலவிதமாகவும் இராமாயணங்கள் நிலவி இருக்கின்றன"

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறே 19 பாரதங்களின் பெயரும் அவை ஒவ்வொன்றிலுமுள்ள பாடல் எண்ணிக்கைகளையும் தனித்தனியே குறித்துள்ளார்.

> "இதுவல்லாமல் நாமாவளியாக, சிந்தாக, குறமாக, பலவிதமாகவும் மகாபாரதங்கள் நிலவி இருக்கின்றன என்பதைப் பணிவோடும் வணக்கத்தோடும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் சேர வேண்டியதிருப்பின் புலவர் பெருமான்கள் தெரிவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்"

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய ஆய்வுக் குறிப்புகள், பிற்காலப் பதிப்பு உருவாக்கங்களுக்கு எவ்வளவு உறுதுணையாகும் என்பதைப் பதிப்பறிஞர்கள் நன்கறிவர்.

மக்கள் தந்த வரவேற்பு

சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்பு பல ஊர்களிலிருந்தும் பலரும் இவரைச் சொற்பொழிவாற்ற அழைத்து மகிழ்ந்துள்ளனர்.

> "பெரியாழ்வார் அருளிச்செய்த 'மரவடியை' பாசுரங்கள் 10ம் வியாக்யானம் செய்யவும்"

என்றும்,

> "ஸ்ரீ குலசேகர ஆழ்வார் பாசுரம் 'இருளிரியச் சுடர்மணிகள்' பாசுரங்கள் வியாக்கியானம் செய்யவும்"

என்றும் இவ்வாறு அந்நாளில் பணவிடைக் கூப்பனிலேயே (Money Order)

சொற்பொழிவுத் தலைப்புகளைக் கேட்டு 'எழுதிப் பலரும் முன்பணம் அனுப்பியுள்ளமைக்குச் சான்றுகள் பல கிடைக்கின்றன. அவர் காலத்தில் இவருடைய புலமைக்கும் எழுத்துகளுக்கும் பொதுமக்கள் அளித்த வரவேற்பு எத்தகையது என்பது இவற்றால் புலனாகின்றன.

முன்னுரை தரும் விளக்கங்கள்

இவர்தம் நூல்களுக்கு எழுதியுள்ள முன்னுரைகளின் சிறப்புகள் பல குறிப்பிடத்தக்கன. காட்டாக, 'தாமரையும் சைவலமும்' என்ற நூலின் கையெழுத்துப் பிரதியிலுள்ள முன்னுரையை இவண் காணலாம்.

முன்னுரை

"அன்பர்களே! உலகியலை மக்கள் எளிதில் தெரிந்து கொள்ள தாமரையும் சைவலமும் ஒன்றுக்கொன்று வினாவிடையெனப் பேசுவதாக, உண்மை நிறைந்த கருத்தோவியத்தை நன்றாகப் படித்து அதன்மூலம், மக்கள் உண்மைகளைத் தெரிந்து அந்த வழியைக் கைப்பற்றுவார்களாயின், பற்றாக்குறை, பலவீனம், பலநோய்கள், வாழ்க்கையில் சங்கடம், மனநிம்மதியில்லாமை, பயம், பல துன்பங்களில்லாமல் வாழலாம். இதனால், பழமையும் புதுமையின் பாகுபாடுகளும் நன்கு புலனாகும்".

த. வே. பாரதியார்

முக்கிய கவனிப்பு

"தமிழ் எண்கள்	:	க	உ	ச	ரு	சு	எ	அ	கூ	க0	க00	க000
பிறமொழி எண்கள்	:	1	2	4	5	6	7	8	9	10	100	1000

இதுசம்பந்தமாக எழுதுவதெல்லாம் தமிழ் மொழியிலேதான் எழுத வேண்டும். பிறமொழியில் வருவதை விலக்கப்படும்.

நம் பெரியோர்கள் நடத்தி வந்த பண்பாடுகள் முற்றிலும் மாறியபடியாலும், இதுதான் உண்மை என்று நடந்து வருவதாலும் ஏற்பட்ட நன்மை தீமைகளை விளக்கஞ் செய்யவே தொன்மயம் தோன்றியிருக்கின்றது. அந்தத் தொன்மயத்தின் ஆசிரியர்தான், தாமரையும் சைவலமும் பேசுவதாகக் கற்பனைச் சித்திரத்தில் உண்மையைப் புகுத்தித் தாமரையும் சைவலமும் என்ற நூலை வெளியிட்டுள்ளேன். தமிழகம் பயன்பெற நீங்கள் யாவரும் நலமுடன் உதவி செய்வீர்களாக.

இந்த நூல், நம் நாடு நலமுடன் வாழவே எது எது நன்மையோ? எது எது தீமையோ? இவைகளைத் தாமரையும் சைவலமும் பேசுவதாக ஒரு கற்பனைச் சித்திரமாக உண்மைகளத்தனையும் விளக்கியிருக்கின்றேன்.

இதை, பூராவாகப் படித்து, இந்நூலை வெகுபத்திரமாக வைத்துக்

கொள்ள வேண்டும். விஞ்ஞானத்தால் ஏற்படும் சிறு நன்மையும், பெருந்தீதுகளை இந்நூலில் விளக்கமாகக் கூறி இருக்கின்றேன். இதை ஒவ்வொரு இல்லத்தவர்களும் வாங்கிப் படித்து விஞ்ஞானத்தை ஓரளவு வரையிலும் பயன்படுத்திக் கொண்டு தொன்மயத்தில் நம் பெரியோர்கள் எப்படி நலமுற வாழ்ந்தார்களோ அதைப் போல வாழ்வீர்களாக".

சுவாமி த. வே. பாரதியார்

என இவ்வாறு எழுதி வைத்துள்ளார்

இக்குறிப்புகளிலிருந்து, அவருடைய தமிழ் ஆர்வம், அன்றைய மொழிநிலை, சமூகநிலை, இவருடைய சீர்திருத்த எண்ணங்கள், பொதுநல நோக்கு எனப் பலவற்றை ஆராயலாம்.

இவர்தம் பாடல்கள் தெய்வீகமானவை என்பதை அங்கங்கே குறித்துள்ளார்.

"சகல துன்பங்களும் நீங்கி, சகல நன்மைகளும் பெறுவர். தினப்படி பாராயணஞ் செய்யவும்" (சென்னை, திருவொற்றியூர் இறைவன் இரட்டைமணிமாலை - காகிதச்சுவடி) (திருமயிலம் முருகன் பஞ்சரத்ன வண்ணம் - இரட்டை மணிமாலை) என இவ்வாறு பலவிடங்களில் குறித்துள்ளார்.

இவர், 'சர்வ தோஷ நிவாரண, சகல ஐஸ்வரிய அநுகூல மந்திரம்' என்ற தலைப்பில் 13 மந்திரங்களை உச்சரிக்க வேண்டிய வழிமுறைகளை ஒரு காகிதச்சுவடியில் குறித்துள்ளார். வடசொற்களாலான இம்மந்திரங்களைச் சொல்லுமுன்,

"அருளாகி, ஆனந்தமாகி, இகநலமாகி, ஈடில்லா வளமாகி, உரிய நலமாகி, ஊக்கமுமாகி, எழிலாகி, ஏராகி, ஐயமற்றதாகி, ஒப்பற்றதாகி, ஓங்குவ நலனாகி, ஔவியமகலக் கருணையுமாகி விளங்கியருள் செய்யும் பார்வதி பரமனுமாகிய இறைவா"

என்று கூறவேண்டும். பின்பே மந்திரங்களை ஐந்துமுறை உச்சரிக்க வேண்டும் என்கிறார். இதில் அவர்தம் தமிழ்ப்பற்று - அகரவரிசையில் கூறும் பாங்கில் புலனாகின்றது.

பதிப்பு முயற்சிகளும் பொருள் தேடலும்

இவர் அவ்வப்போது இயற்றிய தனிப்பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து 1960இல் 'தனிப்பா மலர்' என நான்கு பக்கங்களில் தனி நூலாக அச்சிட்டுள்ளார். இதன் விலை இரண்டு அணா. இதில், சித்தனூர் செங்கல்வராயப் பிள்ளை, சாரனூர் இஷ்டலிங்கப் பிள்ளை ஆகியோர் அளித்த சாற்றுகளிலும் இடம்பெற்றுள்ளன. இதன் இரண்டாம் பக்கத்தில், 'தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு' என்னும் குறளை அமைத்து, அதன் கீழே காப்பாக,

"அகரத்தா னீன்றசீ ரைங்கரத் தேவைப்
பகரத்தா னாகும் பலன்'

என்றும். பிறகு அவையடக்கமாக.

"பறவைக்கு முன்றேன் பறப்பது போல
வறிஞர்முன் சொல்வதே யான்'

என்றும் குறள் வெண்பாக்களை எழுதி அமைத்துள்ளார். இதனையடுத்து 'நூல்' என்று குறிப்பிட்டு அதில். மூன்று வெண்பாக்களும் ஒரு எண்சீர் விருத்தமும் என நான்கு பாடல்கள் தனித்தனியே 1942 முதல் 1959 வரை வெவ்வேறு நபர்கள் கேட்டதன்படியே தாம் பாடியவாறு கொடுத்துள்ளார் பாடல் தலைப்பில் கற்பியல். பொதுவியல். களவியல் என்றும், பொதுப்பொருள் விளக்கம். பற்பொருள் விளக்கம். ஒருபொருள் விளக்கம். பல பொருளடக்கம்'என்றும் குறித்துள்ளார். இதன் அடிக்குறிப்பில்.

"இத்தனிப்பா நான்கிற்கும் பூராவாக பொருள் விளக்கம் வேண்டுமென்றால் ரூ. 20. நேரிலோ அல்லது எம். ஓ. மூலமோ அனுப்ப வேண்டும். அனுப்புகின்றவர்கள் விலாசம் தமிழில் எழுத வேண்டும். விபரமாக இருக்க வேண்டும். அன்பர்கள் ரூபாய் அனுப்பிய பிறகு ஒரு வாரத்திற்குள் பொருள் எழுதி அனுப்பப்படும்"

என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் நான்காம் பக்கத்தில். 'எனதெண்ணம்!' என்ற தலைப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"தமிழ்த்துறை போயப் புலவர்கட்கும். முத்தமிழ் வல்லுநர்கட்கும். தமிழ்நேயச் செல்வர்கட்கும் என் மனமார்ந்த வணக்கம்.

என்னெனில் 32 இராமாயணங்கள், 19 பாரதங்களின் விரிவை எனதரும்பெரும் புலவன் எனக்குரைத்துள்ளான். ஆதலின் இதையெல்லாம் சிற்றறிவிற் கெட்டியவரை ஒரு நூலாகப் பாடிவைக்க விழைகிறேன். இதுவரை பாடியுள்ள நூல்கள். விநாயகர் வாரப்பாட்டு ஒருமுறை அச்சிட்டிருக்கிறது. நேயர்கள்பால் வந்துள்ளது என்பதை மகிழ்வாகத் தெரிவித்துக் கொள்கிறேன். முருகர் வாரப்பாட்டு. முருகவேள் அலங்காரம். வேதவரைநாதன் இம்மைவள மாலை, கந்தர்கலி விருத்தம். திருவொற்றியூர் முருகன் வண்ணமைந்து. பாரதத்திலொரு பகுதியாகிய ஜெனமே ஜெயம் இதுவரைப் பூர்த்தியாகியுள்ளது. அச்சாக வேண்டும். அவ்வப்போது பாடிய தனிப்பாடல்கள் சுமார் 50 பாடல்களில் இப்போது 4 பாட்டுகள் மட்டும் வெளி வந்துள்ளன. மற்றவை தொடர்ந்தே வரும். இதைக் கண்ணுறும் பெருந்தகையாளர்கள் நன்கொடைகள் அளிப்பாராகில் மேற்சொன்ன நூல்களெல்லாம் அச்சாகி வெளிவரும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேற்சொன்ன

> இராமாயணம், பாரதங்கள் இன்னும் இருக்குமானால் பெரியோர்கள் தருவார்களானால் அதையும் வணங்கிப் பெற்று விளம்பரம் செய்வேன். அவர்கள் பெயரையும் வெளியிடு கின்றேன் இந்த எண்ணங்களை நேயர்கள் பூர்த்தி செய்வார்களென்று இறைவனைப் பணிகின்றேன்"

இதில், நூலாசிரியரின் புலமைச் சிறப்பு, நூல்களை அச்சிடுவதிலுள்ள சிக்கல்கள், பொருளின்மை, ஆவல், அவர்தம் பதிப்பு அறங்கள் போன்ற பலவும் புலனாகும்.

மேலும், இறுதியாக 'முக்கியக் கவனிப்பு' என்ற குறிப்புடன் பின்வரும் செய்திகளையும் அச்சிட்டுள்ளார்.

> "தெய்வத் தன்மையாகிய பாட்டுகள் வேண்டுமாயின் அந்த மூர்த்தியின் பெயரும், வரலாறும், ஊரையும் குறித்துப் பாட்டொன்றுக்கு 1 ரூபாய் அனுப்ப வேண்டும். மக்களைப் பற்றிப் பாட்டொன்று வேண்டுமானால் ரூபாய் 5 அனுப்ப வேண்டும்.
>
> தெய்வத்தன்மை பாட்டான அகவற்பா வரி ஒன்றுக்கு 4 அணா ஆகவும், மக்களைப் பற்றியானால் வரி ஒன்றுக்கு 1 ரூபாய் ஆகவும் அனுப்ப வேண்டும். இரங்கற்பா நீக்கப்பட்டது"

இச்செய்திகளின் வழி, இந்நூலாசிரியர் தம் பாடல்களுக்கு ஏற்ற பொருள் பெற்றதையும், இவர் இரங்கற்பா பாடாத நிலையையும் அறிகிறோம்.

இவர் இயற்றிய வியாசர்பாடித் தலபுராணம் 10-07-1970 அன்று சென்னையில் இதே கோயில் குடமுழுக்கு விழாவில் வெளியிடப்பெற்றது. இது உரைநடையாலானது. இதில்,

> "சைவ வைணவப் பற்றுடையவர்களாகிய கனநனவான்களும் அரசாங்கமும் ஆதரவு செய்யின், சுமார் ஐயாயிரம் செய்யுளாக, புராணத்தைப் பாடித்தர முடியும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுவதோடு ஆதரவையும் எதிர்பார்க்கும்,
> தி. வெ. தணிகைவேள் பாரதியார்"

என்று தம் முன்னுரையில் குறித்துள்ளார்.

எண்பது வயதிற்குமேல் 'தமிழ் ஞானியாக விளங்கிய தணிகைவேள் பாரதியார் தம் முதுமையில் பெரும் வறுமையில் பெருமையுடன் வாழ்ந்தார் என்றே தோன்றுகிறது. கால மாறுபாடுகளின் காரணமாக அவர்தம் காகிதச் சுவடிகள் பல இன்னும் அச்சுருவம் பெறவில்லை. அவை அனைத்தும் வெளிவரின் அவர்தம் சமயத் தொண்டுடன் மொழித் தொண்டு பலருக்கும் புலனாகும்.

நம் சிந்தனைக்கு

1. இருபதாம் நூற்றாண்டில், நம் காலத்தில் வாழ்ந்த ஒரு பெரும் தமிழ்ப் புலவரைப் பற்றிப் பலரும் அறிய இயலாத சூழ்நிலைகள் இன்றும் உள்ளன. (1985இல் காலமான இவர் பிறந்த நாளைக்கூட அறிய இயலவில்லை.)
2. அவருடைய படைப்புகள் - காகிதச் சுவடிகளாகக் கிடைப்பினும் முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதே குறிப்பிடத்தக்கதாகும்.
3. பின்னாளில் அச்சில் வந்தால் இவ்விவ்வாறு அமைய வேண்டுமென ஆசிரியரே திட்டமிட்டு எழுதி வைத்திருப்பினும் அவற்றைப் போற்றிப் பாதுகாப்பார் இன்மையினால் பல எழுத்துக்கள் மறைந்து வருகின்றன என்பதற்கு இவரும் ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறார்.
4. நூலாசிரியரே தம் நூல்களை அச்சிடுவதில் பொருளாதாரச் சிக்கல் பல அன்றும் இன்றும் என்றுமே உள்ளன. எனவே, அந்நூல்களைத் தாள் வடிவிலேயே காகிதச் சுவடிகளாகவும் பாதுகாத்து வைக்கலாம்.
5. இத்தகைய காகிதச் சுவடிகளால் பின்னாளில் பல்வேறு வரலாற்றுப் பயன்கள் கிடைக்கக்கூடும் என நம்பலாம்.
6. கால அடிப்படையில் மொழியியல் ஆய்வுக்கும், இலக்கிய ஆய்வுக்கும், பதிப்பு ஆய்வுக்கும், சமூக வரலாற்று ஆய்வுக்கும் இத்தகைய காகிதச் சுவடிகள் உறுதுணையானவை என்னும் தொலைநோக்கில் இவற்றைத் திரட்டித் தொகுத்துப் பயன்படுத்துதல் நம் அனைவரின் கடமை என்பதையும் சிந்திப்போமாக!

பின்னிணைப்பு

தணிகைவேள் பாரதியார் இயற்றிய நூல்கள்
(காகிதச் சுவடிகள்)

செய்யுள்

1. அருள்மிகு சுந்தர விநாயகர் திருமுருகர் திருவிரட்டை மணிமாலை
2. திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரர் இம்மை வளமாலை
3. சென்னை, திருவொற்றியூர் இறைவன் இரட்டை மணிமாலை
4. சேக்கிழார் நூற்றந்தாதி
5. கலைமகள் பாதி அலைமகள் பாதி
6. திரௌபதியம்மன் தோத்திரப் பதிகம்
7. ஜெனமே ஜெபம்
8. விநாயகர் வாரப் பாட்டு
9. முருகன் வாரப் பாட்டு
10. முருகவேள் அலங்காரம்
11. வியர்சர்ப்பாடித் தலபுராணம்
12. அயன்புரத் தலபுராணம்
13. சென்னை கந்தகோட்ட முருகன் ஆறாறு மாலை

14. சிவராத்திரி புராணம்
15. அகளங்க சுவாமிகள் அருளிய வாழ்வு தசகம்
16. திருகந்தர் கலிவிருத்தம்
17 சாண்டில்யரின் குமார பக்த விஜயம்
18 விநாயகர் நூற்றுப் போற்றி
19. திருமங்கையாழ்வார் வைபவம்
20. முத்தேவி மன்றல் - கௌசல்யா பரிணயம்
21. முத்தேவி மன்றல் - கைகேசி திருமணம்
22. முத்தேவி மன்றல் - சுமித்திரா பரிணயம்
23 மன்னிய சிவநேச அந்தாதி
24 இலட்சுமி சுயவரம்
25 கச்சியேகம்பக் கட்டளைக் கலித்துறை
26 மலைமகள் அந்தாதி
27. கோளறு படலம்
28. சம்பத்கிரி அச்சுதானந்த விஜயம்
29 வறுமைக்கு விடைகொடுத்த வெண்பா மாலை
30. சீரங்கநாதன் சீற்றந்தணிமாலை
31. தேவி மகாத்மியம்
32. உலக நலமுறுப்பா
33 சிவபெருமான் தமிழ்ப் போற்றி நன்மையம்
34. சிவபெருமான் தமிழ்ப் போற்றி எண்வகையம்
35. திருமயிலம் முருகன் பஞ்சரத்ன வண்ணம்
36. பரசுராமலிங்கேஸ்வரர் திருத்தாண்டகம். வண்ணம்
37. திருப்போரூர் முருகன் கமலபந்தம் (சித்திரக்கவி)
38. சக்ரவர்த்தி விஜயம்
39. தையநாயகி வைதீஸ்வரர் திவ்வியமஞ்சரி
40. சிவசார்தூலம் - விஸ்வம்பரி திருமணம்
41 ஸ்ரீகிருஷ்ணன் ஜலக்கிரீடை நாடகம் (இசை நாடகம்)
42. விநாயகர் புராணம்
43. தொன்மயம்

உரைநடை

44 திரிபுரசுந்தரி கல்யாணம்
45. புஷ்பலதா திருமணம்
46. மாபாரதக் கதை விவரங்கள்
47. மாபாரதச் சரித்திரக் குறிப்புகள்
48 கிருத்திகை விரதம். விம்ஸலேகாவும் விசித்திர கீர்த்தியும்
49. சுக்லதரனும் சுவாமி முருகனும் சரித்திரம்
50. சாண்டில்யரும் சுவாமிநாதனும்
51. சுவாமிநாத புலவர். வெள்ளி முருகவிரதம் மாவேளசுவாமி சரித்திரம்
52 சேக்கிழார் சுவாமி சரித்திர வரலாறு
53. திருக்கழுக்குன்றத் தல மகாத்மியம்

54. பொய்யாமொழிப் புலவர் சரித்திரம்
55. பொய்கையாழ்வார் வைபவம்
56. திருமழிசைப்பிரான் வைபவம்
57 குலசேகர ஆழ்வார் வைபவம்
58. திருப்பாணாழ்வார் வைபவம்
59. மஞ்சரி அம்மையார் சரித்திரம்
60. மனுவரசுவாமி சரித்திரம்
61. பவானி எல்லையம்மன் சரித்திரம்
62. திருப்பாவை வரலாறு
63. வல்லாள மாராஜா சரித்திரம்
64. வைணவ அடியார்கள் சரித்திரம்
65. தேவி சிந்தாமணி
66. பக்தஜனாபாய் சரித்திரம்
67. மருத்துவக் குறிப்புகள்
68. பாரதம் நடத்தும் வழிமுறை விவரங்கள், கதைகள்
69. ஸ்ரீமத் தசாவதாரம்
70. கஜேந்திர மோட்சம்
71. சொர்ண விநாயகர் சரித்திரம்
72. தாமரையும் சைவலமும் உரையாடல்

பிற

73. திருமுருகன் சரண நாமாவளிகள்
74. சதுர்வேதி நாமாவளி (காமாட்சி, ஏலவார்குழலி, பிரளயங்காத்தாள், அரசு காத்தாள்)
75. பார்வதி நாமாவளி
76. கிருஷ்ண நாமாவளி
77. நடராஜ நாமாவளி
78. சகலதோஷ நிவாரண அட்டோத்திரம்
79. மகாலட்சுமி நாமாவளி
80. சரஸ்வதி நாமாவளி
81. மங்கள நாமாவளி
82. அம்பிகை சரண நாமாவளி
83. பூதலட்சுமி தோத்திரம்
84. மரகதாம்பாள் போற்றி விருத்தம்
85. ஸ்ரீபானுபுர தேவ தெரியல்
86. தனிப்பாடல்கள் - பல

(இவைதவிர மேலும் கிடைக்காத நூல்கள் பல)

☐

தி. புஷ்கலா
ஆய்வாளர்
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ஆவணங்கள் மூலமும் படியும்

ஆவணங்கள் என்பன நடைமுறை நிகழ்வுகளின் பதிவுகள் ஆகும். பல்துறை ஆய்வுகட்குப் பயன்படும் இவ் ஆவணங்கள் அவ்வக்காலத்தின் சூழல், மொழி, வரலாறு, பண்பாடு, பொருளாதாரம் ஆகியவற்றைச் சமுதாயத்தின் ஒட்டுமொத்தச் சார்புடன் வெளிப்படுத்துவன. ஆவணங்கள் கல்வெட்டு, செப்பேடு, ஓலை மற்றும் தாள் சுவடி போன்ற பல வடிவங்களில் கிடைக்கின்றன. இடைக்காலம் (History of Medieval Age) வரையிலான வரலாற்றை அறிய உதவும் மூலச்சான்றுகளாகக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் திகழ்தல் போலப் பிற்கால வரலாற்றை (History of Modern Age) அறிய உதவும் மூலச்சான்றுகளாக ஓலை மற்றும் தாள் சுவடி ஆவணங்களும் விளங்குகின்றன.

பொதுவாக, கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் ஒரு செய்தியைப் பொறிப்பதற்கு முன்பாக ஓலைகளிலேயே அவை முதலில் எழுதப்பட்டு வந்திருக்கின்றன. ஓலைநாயகம், ஓலை படிப்பார் போன்ற அரசு ஊழியச் சொற்களும் இதனை நிறுவும் இவ் அடிப்படையில் நோக்கும்பொழுது ஓலை ஆவணங்களே அனைத்திலும் முதன்மையாகக் கருதத்தக்கவை கல்வெட்டு, செப்பேடுகளின் மூலமாக விளங்கியிருக்கக்கூடிய அரசு ஓலை ஆவணங்கள் பற்றி அப்பாதுரை Economic condition in Southern India 1000 - 1500 A. D. எனும் நூலில் கூறியிருப்பது ஈண்டு கருதத்தக்கது.

> "சோழப் பேரரசர்கள் நடத்திய நில அளவை பற்றிய பல சான்றுகள் நமக்குக் கல்வெட்டு செப்பேடுகள் வாயிலாகக் கிடைக்கின்றன. முதலாம் இராசேந்திரனின் திருவாலங்காடு செப்புப் பட்டயம் வருவாய் கணக்குப் பதிவேடுகளை 'வரிப்பொத்தகம்' எனவும் அவற்றின் பொறுப்பிலிருக்கும் அலுவலரை 'வரிப்பொத்தகக் கணக்கு' எனவும் குறிப்பிடுகிறது மேலும் அரசின் முக்கிய காரியதரிசி 'ஓலைநாயகம்' என அழைக்கப்படுவதிலிருந்து அரசு ஆணைகள் முதலில் ஓலைகளில் எழுதப்பட்டு பின்பு கல்வெட்டு மற்றும் செப்பேடுகளில் பொறிக்கப்பட்டிருத்தல் கூடும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றன. பனைமடல்களில் எழுதப்பட்ட

இதுபோன்ற ஆவணங்கள் மிக விரிவான துல்லியமான, தெளிவான செய்திகளைக் கொண்டிருத்தல் கூடும். ஓலை ஆவணங்களின் 'படிகளாக' விளங்கும் கல்வெட்டு, செப்பேடுகளில் காணப்படும் விரிவான செய்திகள் வாயிலாக இவற்றை அறியலாம். . . . . . . .திருவாலங்காடு செப்புப் பட்டயத்தில் வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள பழையனூர் எனும் ஊரின் நான்கு எல்லைகளைப் பற்றிய செய்தி 281 வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளமை இதற்குத் தக்க சான்றாகும்"

மேலும் அவர் இதுபோன்ற ஆவணங்கள் 17ஆம் நூற்றாண்டின் இறுதிவரையிலும் நாடெங்கிலும் பரவலாகக் காணப்பட்டிருப்பதை ஆங்கிலேயர் குறிப்புகள் வாயிலாகவும் உறுதிப்படுத்துகிறார். எனினும் இதுபோன்ற நிலஅளவை மற்றும் வருவாய் தொடர்பான அரசு ஆவணங்கள் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் புழக்கத்திலிருந்து வந்திருப்பதை அண்மைக் காலமாக அரசு அலுவலகங்களிலிருந்து கிடைத்து வரும் ஓலை ஆவணங்கள் வாயிலாக அறியமுடிகிறது. காட்டாகத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறைக்குக் கிடைத்துள்ள செங்கற்பட்டு ஆவணங்கள், தஞ்சாவூர் ஆவணங்கள், புதுக்கோட்டை ஆவணங்கள், செங்கோட்டை ஆவணங்கள், மன்னார்குடி ஆவணங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். நாடெங்கிலும் பரவலாக இதுபோன்ற ஆவணங்கள் காணப்பெறினும் கேரளா, கர்னாடகா ஆகிய இடங்களில் இவை மிகுதியாகக் காணப்படுகின்றன. தொடர்ச்சியாக நீண்ட தகவல்களை முழுமையாக அளிப்பது இவ்வகை ஆவணங்களின் தனிச்சிறப்பாகும். நிலஅளவு, வருவாய், சமூகப் பொருளாதாரம் பற்றிய ஆய்வுகட்கு இவை பெரிதும் துணைநிற்பன.

கல்வெட்டு, செப்பேடுகளுக்கு மூலங்களாக ஓலை ஆவணங்கள் விளங்கி வந்திருப்பதைப் போலத் தாள் சுவடி ஆவணங்களுக்கும் ஓலை ஆவணங்கள் மூல ஆவணங்களாகத் திகழ்ந்திருப்பதை 18ஆம் நூற்றாண்டுச் செங்கற்பட்டு ஆவணங்கள் உறுதி செய்கின்றன. அவை அவற்றின் சுருக்கப் படிகளாக ஆங்கிலத்தில் காணப்படும் பெர்னார்டு கணக்குகளைக் (Bernard Accounts) காட்டிலும் மிக விரிவான தகவல் தரவுகளைக் கொண்டு விளங்கும் சிறப்பினை உடையன. எனினும் சில சமயங்களில் மூல ஓலை ஆவணங்கள் உடைந்தும், சிதைந்தும், அழிந்தும் காணப்படும் நிலைகளில் முழுமையான தரவுகளைப் பெறப் 'படி ஆவணங்களும்' சிறப்பாகத் துணைபுரிகின்றன. இந்நிலையில் இவ்விருவகை ஆவணங்களையும் ஒப்பிட்டு ஆய்ந்து மேற்கொள்ளப்படும் ஆய்வு முடிவுகள் தரமும், தெளிவும், நம்பகத்தன்மையும் (Authenticity) பெறுதல் கூடும் என்பதை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள் - மூல ஆவணங்கள்

செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள் கி. பி. 1760 முதல் 1860 வரையிலான காலத்தைச் சேர்ந்தவை. நூற்றியறுபது பெருஞ்சுருணைகளாகக் காணப்படும் இவ் ஆவணங்கள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தினின்று அண்மையில் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறைக்குக் கிடைக்கப் பெற்றன. ஒவ்வொரு சுருணையும் இருபுறமும் எழுதப்பட்ட சுமார் 1000 ஓலைகளைக் கொண்டு

விளங்குகின்றன. இவற்றுள் சுமார் 20 சுருணைகள் கி. பி 1767இல் செங்கற்பட்டுப் பகுதியில் ஆங்கிலேயர் மேற்கொண்ட பெர்னார்டு கணக்கெடுப்பு (Bernard Survey 1767-74) எனும் நேரடி நிலஆய்விற்கு மூல ஆவணங்களாகப் பயன் படுத்தப்பட்டவை. அந்த வகையிலும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு முற்பட்ட ஆவணங்கள் (Pre-British Records) என்ற வகையிலும் இவை வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. அடிப்படையில் வருவாய்க் கணக்குக் குறிப்புகளாக விளங்கும் செங்கற்பட்டு ஆவணங்கள் சுமார் 2100 கிராமங்களுக்கான தகவல் தரவுகளைக் கொண்டவை. சமூகப் பொருளியல் ஆய்வுகட்கு மிகச் சிறப்பாகத் துணைபுரியும் இவ் ஆவணங்கள் ஒவ்வொரு கிராமத்தின் நில அமைப்பு. கிராம சமுதாயம். சாகுபடி. மகசூல். மானியம் தீர்வை. பல்வேறு இனமக்கள். அவர்தம் தொழில் போன்ற பல்வேறுவித சமூகப் பொருளியல் செய்திகளைத் தரப்படி வகை ஏடு. துகை ஏடு. வாரச்சட்டம். சுதந்திரத் திட்டம். மேரைத் திட்டம். தும்பால் மானிய வயணம். ஏரி அளவு. வீட்டு வயணம். பேரிசுவகை ஏடு போன்ற பலவிதத் தலைப்புகளில் மிக விரிவாகத் தருகின்றன.

பெர்னார்டு கணக்குகள் - படி ஆவணங்கள்

செங்கற்பட்டு தென்னிந்தியாவில் ஆங்கிலேயர் காலனி ஆதிக்கத்திற்கு அடித்தளமாக விளங்கிய பகுதியாகும். ஆற்காடு நவாப் முகமது அலியிடமிருந்து ஜாகீராகப் பெறப்பட்ட இப்பகுதியின் மதிப்பையும். வருவாயையும் அறியும் பொருட்டும் நில அளவை தொடர்பான கணக்கெடுப்பை ஆங்கிலேயர் மேற் கொண்டனர். சர் தாமஸ் பெர்னார்டு என்பவரால் மேற்கொள்ளப் பெற்ற இக் கணக்கெடுப்பு சுமார் 7 ஆண்டுக் காலம் நடைபெற்றது. இக்கணக்கெடுப்பின்போது ஒவ்வொரு கிராமத்திலும் வைக்கப்பட்டிருந்த நில ஆவணங்கள் (செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள்) பெர்னார்டுக்குக் கிடைத்தன. அவற்றின் வாயிலாகப் பெறப்பட்ட தகவல்களின் சுருக்கத்தை ஒரு குறிப்பிட்ட வடிவில் மொழிபெயர்த்துச் சென்னை வருவாய்க் கழகத்தில் (Madras Board of Revenue) பெர்னார்டு சமர்ப்பித்தார்.

பெர்னார்டு நில ஆய்வின் மூலம் பெறப்பட்ட கணக்குப் பதிவேடுகள் பெரும்பான்மையும் சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்தில் காணக் கிடைக்கின்றன. போர்டு ஆப் ரெவின்யூ மிச்லேனியஸ் பிரிவில் 40 தொகுதிகளும் (50. 50 A. 51. 51 A. 52. 52 A. 53. 53 A. 54. 54 A. 55. 56. 57. 58. 58 A. 59. 60. 60 A. 61. 61 A. 62. 63. 64. 64 A. 65. 65 A. 66. 67. 67 A. 68. 69. 69 A. 70. 70 A. 71. 72. 73. 89) செங்கற்பட்டு மாவட்ட ஆவணங்கள் வரிசையில் 10 தொகுதிகளும் (527. 542. 543. 544. 545. 546 547. 548. 549. 550) உள்ளன. இவற்றில் பல 1775 - 76 வருடசபை நடவடிக்கைகளில் எடுத்தாளப்பட்டு வந்திருக்கின்றன.

கிராம சமுதாயம். நிலவருவாய் தொடர்பான பல்வேறுவித சமூகப் பொருளியல் ஆய்வுகட்கு இவை பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. எனினும் இவற்றின் மூல ஆவணங்களான செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள் மிக விரிவான. தெளிவான துல்லியமான தகவல் தரவுகளைத் தாங்கி நிற்பதால் கூடுதல் சிறப்பு வாய்ந்தவை. எனவே இவ்விரு ஆவணங்களின் துணைகொண்டு மேற் கொள்ளப்படும் ஆய்வுகள் முழுமையும். தெளிவும். நம்பகத்தன்மையும் பெற்று

விளங்கக்கூடும் என்பதில் ஐயமில்லை. இவ் ஆவணங்களின் முதற்கட்ட ஆய்வுகள் ஆங்கிலேயருக்கு முற்பட்ட இந்தியக் கிராம சமுதாய அமைப்புகள் பற்றியும் அச்சமயம் அங்கு நிலவிய சமூகப் பொருளியல் நிலைகளைப் பற்றியும் மிகச் சிறப்பானதொரு கண்ணோட்டத்தை வெளிப்படுத்தியிருப்பது சிறப்பாகக் குறிக்கத்தக்கது.

முறையான நிலப்பயன்பாடு. பாசன வசதிப் பெருக்கம். அதன்வழி உற்பத்திப் பெருக்கம். அதன் முறையான பங்கீடு. அதன்வழி சமூக. சமய கலாச்சார நிறுவனங்களின் பராமரிப்பு என ஒவ்வொரு நிலையிலும் திட்டமிட்ட செயற்பாடுகளுடன் இயங்கிவந்த செங்கற்பட்டுக் கிராம சமுதாய அமைப்புகள் இந்தியக் கிராமங்களைத் தன்னிறைவில் தலைநின்று தனித்தியங்கும் கிராமக் குடியரசுகளாகவே படம் பிடித்துக் காட்டுகின்றன. தொடக்க கால ஆங்கிலேய அதிகாரிகளும். அறிஞர்களும் இந்தியக் கிராமக் குடியரசுகள் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கைகளும் கருத்துக்களும் மேற்கூறியவற்றை அரண் செய்தல் காணலாம் அவற்றுள் சர் சார்லஸ் மெட்காவின் கருத்து இங்கு சிறப்பாக நினைவிற் கொள்ளத்தக்கது.

> "கிராம சமூகங்கள் குட்டிக் குடியரசுகள். தேவையான அனைத்தையும் தங்களுக்குள் பெற்றிருந்தன. இங்கு அயலார் தலையீடு பெரும்பாலும் இல்லை. இவை மற்ற நிறுவனங்கள் வீழ்ச்சியுற்ற போதும் நிலைபெற்று நின்றுள்ளன. அரசகுல மரபுகள் பல வீழ்ச்சியுறுகின்றன: புரட்சிக்குப் பின்னர்ப் புரட்சி தோன்றுகிறது ஆயினும் கிராம சமூகம் மட்டும் அதுவாகவே நிலைபெற்றுள்ளது"

கி. பி. 1830இல் இரயத்துவாரி முறை ஏற்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இவர் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார் கிராம சமூகம் பற்றிய இக்கருத்து British House of Commons வெளியிட்ட ஐந்தாவது அறிக்கை (Fifth Report)யை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததே. இவ்வறிக்கை கி. பி. 1795இல் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியராக விளங்கிய Place என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டதாகும். இவ்வறிக்கைக்கு மூலமாக விளங்கியவை செங்கற்பட்டு ஆவணங்களே. தற்போது இம்மூல ஆவணங்களின் ஆய்வினால் மேற்கூறிய கருத்து தெளிவும் வலிவும் பெற்றிருப்பதை உணரமுடிகிறது.

வடக்குப்பட்டு ஓலை ஆவணங்கள் மொத்தம் 35 ஏடுகளைக் கொண்டு விளங்குகின்றன. அவற்றில் 25 ஏடுகள் அவ்வூரின் தரவாரி நிலப்பிரிவுகளையும் (புறம்போக்கு நிலங்கள். மானிய நிலங்கள். வாரப்பற்று நிலங்கள்) அவற்றில் அடங்கியுள்ள பகுதிகளையும் அவற்றின் எண்ணிக்கை. அமைவிடம். பரப்பளவு. தன்மை ஆகியவற்றுடன் மிகத் துல்லியமாகக் குறிப்பிட்டு அவ்வூரின் முழுவடிவமைப்பையும் காட்டி நிற்கின்றன. மேலும் வீடுகள் பற்றிய விவரங்கள் அவற்றின் எண்ணிக்கையுடன் வீதிகள். வீடு மற்றும் புழக்கடையின் அளவு. அமைப்பு அவற்றில் குடியிருந்தோரின் பெயர். சாதி. தொழில் போன்றவற்றுடன் விரிவாகச் சுட்டப்பெற்றுள்ளன. ஏனைய ஏடுகள் தீர்வை விவரங்கள் பற்றிக் கூறுவன. இவ்வகை

ஏடுகளில் தொடர்ச்சியாக 5 ஆண்டுகளுக்கான (1763-67) மொத்த உற்பத்தி மற்றும் மகசூல் குறிப்பிடப்பட்டு அவற்றிலிருந்து மானியக்கழிவு நீக்கப்பட்டு. சமை மானியம் மற்றும் குடிவாரப் பங்குகள் நீங்கலாக அரசுக்குச் சேரவேண்டிய வருவாய் (தானியமாகவும். ரொக்கமாகவும்) தீர்மானிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது

வடக்குப்பட்டு பெர்னார்டு ஆவணங்களில் கிராம மொத்த நிலப்பரப்பு தரவாரிப் பிரிவுகள். நிலப்பயன்பாடு. வீடு. மக்கள். சாதி. தொழில். மானியங்கள். அவற்றைப் பெற்றோர் விவரம். தானியமாகவும். ரொக்கமாகவும் கிடைத்த அரசு வருவாய். மொத்த விளைச்சலிலிருந்து பங்குகளைப் பெற்று வந்தோரின் விவரம். ஏரிகள் செப்பனிடப்படுவதற்கு ஆகக்கூடிய செலவுகள். அவற்றின் வாயிலாகக் கிடைக்கக்கூடிய வருவாய் போன்ற செய்திகள் மிகச் சுருக்கமான முறையில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. எனினும் இத்தரவுகள் சுருக்கமாகக் காணப்பெறினும் முழுமையாகக் கிடைக்கப் பெற்றிருத்தல் இதன் சிறப்பாகும்.

பொதுவாக நீடிப்புத் தன்மை குறைவின் காரணமாக ஓலை ஆவணங்கள் காலப்போக்கில் உடைந்தும். சிதைந்தும். பூச்சி அரிப்பிற்குட்பட்டும் காணாமல் போகவும் வாய்ப்புகள் அதிகம். இதுபோன்ற சமயங்களில் விடுபட்டுப் போன தகவல்களைப் பெறப் 'படி ஆவணங்கள்' பெரிதும் துணை செய்யக்கூடும். காட்டாக வடக்குப்பட்டு மூல ஆவணங்களில் ஏடுகள் - 1. 3. 10 ஆகியவற்றின் சில பகுதிகள் உடைந்து போயிருப்பதைக் காணமுடிகிறது. 1. 3 ஆகியவற்றில் குட்டைகள் பற்றிய செய்தியும் ஏடு-10இல் இடையர்கள் வீடுகளின் எண்ணிக்கையும் விடுபட்டுப் போயிருக்கின்றன இதுதவிர 4. 5 மற்றும் 6ஆவது ஏடுகள் முழுவதும் காணாமல் போய்விட்டமையால் அவற்றில் இடம்பெற்றிருக்கக்கூடிய மலை. காடு. காணியாட்சி. குடிகள் பற்றிய விவரம். அவர்களின் வீடுகள் போன்ற தரவுகள் மூல ஆவணங்களிலிருந்து கிடைக்கவில்லை. எனினும் இவை பெர்னார்டு ஆவணங்களிலிருந்து கிடைப்பதால் வடக்குப்பட்டுக் கிராமத்தைப்பற்றி முழுவிவரங்களையும் அறியமுடிகிறது.

மேலும் எரியளவு. வாரச்சட்டம். மேரைத்திட்டம் போன்ற பல முக்கியத் தரவுகள் அடங்கிய பகுதிகளும் மூல ஆவணத்தில் காணாமல் போய்விட்ட நிலையில் பெர்னார்டு ஆவணங்கள் பெரிதும் உதவுகின்றன.

இவைதவிரச் சில சமயங்களில் இச்சுருக்கப் படி ஆவணங்களில் கூடுதல் தரவுகள் கிடைக்கவும் வாய்ப்பிருக்கிறது. காட்டாக மூல ஆவணத்தில் 'கானுக்கோயி' எனும் ஊழியரின் பதவி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் படி ஆவணத்தில் இது conigo of the District எனக் குறிப்பிடப் பெற்றுள்ளதிலிருந்து கானுக்கோயி என்பவர் மாவட்ட அளவிலான அரசு ஊழியர் என்பது புலப்படுகிறது.

எனினும் பெர்னார்டு ஆவணங்கள் சுருக்கப் படிகளாகவும். மொழி பெயர்ப்பு ஆவணங்களாகவும் காணப்படுதலால் மூல ஆவணங்களில் இடம்பெற்றுள்ள கலைச்சொற்கள் (Technical terms) மேலோட்டமாகவும் தெளிவில்லாமலும் மொழிபெயர்ப்பும். ஒலிபெயர்ப்பும் செய்யப்பட்டிருத்தலைக் காணமுடிகிறது அவற்றில் சில வருமாறு :

நஞ்சை	- Paddy
தும்பால் மானியம்	- freegift lands
புஞ்சை	- combo
வாரப்பற்று நிலங்கள்	- circar lands
செய்கால்	- cultivated lands
பயிர்கோட்டை வெள்ளாளர்	- Peercotum Vellalar
கரம்பு	- uncultivated lands
குடிவாரம்	- cultivator's neat share
வயணம்	- details
மேல்வாரம்	- circar's neat share
குடுமி	- snake doctor
பொதுமேரை	- dues paid by cultivator & circar
அளவுக்காரர்	- cornmeter
மேல்வாரமேரை	- dues paid by circar
கம்புகட்டி	- yary serrant
வராகன்	- Pagoda
சாகீர்தாரன்	- renter
தோப்பு மானியம்	- Tope fund

இதுபோன்ற சமயங்களில் படி ஆவணங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமையும் ஆய்வில் அரிய தகவல்கள் விடுபட்டுப் போவதுடன் சிலவற்றைத் தவறாகப் புரிந்து கொள்ளவும் வரய்ப்பிருக்கிறது.

மேலும் மூல ஆவணங்களின் ஆய்வு கலைச்சொல் உருவாக்கத்திற்கும் பெரிதும் உதவுவன. அத்துடன் ஏற்கெனவே அகராதிகளில் இடம்பெற்றுள்ள சில கலைச்சொற்களுக்கு மேலும் தெளிவான விளக்கங்களை அளிக்கவல்லது. காட்டாகக் 'குப்பத்தம்' என்ற கலைச்சொல் இவ் ஆவணங்களில் பரவலாக இடம்பெறுகின்றது. இச்சொல் மொத்த விளைச்சலிலிருந்து மேரையாகக் கிராம மிராசுக்கு அளிக்கப்பட்டு வந்த பங்கினைக் குறிப்பதாகும். இவை 'குப்பம்' எனவும் சில சமயங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. 'குப்பம்' என்பது குவியல் எனப் பொருள்படும். களத்தில் தானியம் அளக்கப்படும் நிலையில் தானியக் குவியலிலிருந்து ஒரு குறிப்பிட்ட பகுதி மேரையாக அளிக்கப்பட்டிருப்பதால் குப்பம் என்ற பெயரில் அது அழைக்கப்பட்டிருத்தல் வேண்டும். குப்பத்தம் என்பது குப்பம் + தத்தம் என்பதாகும் i.e. குப்பமாக வழங்கப்படும் தானம் (தத்தம்) அல்லது இனாம் எனும் பொருள்படவே இது குப்பத்தம் என்று அழைக்கப்பட்டிருத்தல் கூடும் என்பதை மூல ஆவணங்களை நுணுகி ஆயும்பொழுது உணரமுடிகிறது.

பொருள் உணராது இதுபோன்ற சொற்கள் ஆங்கிலத்தில் ஒலிபெயர்ப்பு

செய்யப்படும் பொழுதும், மீண்டும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் ஒலிபெயர்ப்புச் செய்யப்படும் பொழுதும் இவற்றின் பொருள் மாறிப்போக அல்லது பொருளற்றுப் போக வாய்ப்பிருக்கிறது. காட்டாக Wilson's Glossory 'குப்பத்தம்' என்பதை Kuppadan என ஆங்கிலத்தில் குறிப்பிட்டுத் தமிழில் குப்படமாகவும் காட்டியுள்ளது ஈண்டு சுட்டத்தகுவதாம்.

கலைச்சொற்கள் மட்டுமன்றி நூற்றுக்கும் மேற்பட்ட குறியீடுகளையும் இம்மூல ஓலை ஆவணங்கள் வெளிப்படுத்தியுள்ளன. எண் மற்றும் எழுத்து வளர்ச்சி பற்றிய (Paleaography) ஆய்வுகட்கு மிகச் சிறப்பாகத் துணை செய்வன. மொழியியல் பார்வையிலும் இவை அளிக்கக்கூடிய செய்திகள் பலவாகும். சுருங்கக்கூறின் இம்மூல ஆவணங்கள் மிக விரிவான விளக்கங்களைக் கொண்டிருப்பதால் சமூகப் பொருளியல் வரலாறு மட்டுமன்றி வருவாய் - கலைச்சொற்கள், குறியீட்டுத் தொகுப்புகள் நிலப்பயன்பாடு மற்றும் வேளாண் கலைச் சொற்கள், வழக்காற்றுச் சொற்கள், இடப்பெயராய்வு, தனி மனிதப் பெயராய்வு எனப் பல நிலைகளில் மொழியை ஆய்வு செய்து வளப்படுத்தப் பெரிதும் உதவக்கூடியன.

இதுகாறும் கூறியவற்றால் மூல ஆவணங்களுக்கும், படி ஆவணங்களும் உரிய தனித்தன்மைகளும் சிறப்பியல்புகளும் எடுத்துக்காட்டப்பட்டதுடன், இவ்விருவகை ஆவணங்களை ஒப்பீட்டு நோக்கில் ஆய்ந்து வெளிப்படுத்தப்படும் ஆய்வு முடிவுகள் நிறைவானதாகவும் நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும் திகழக்கூடும் என்பதும் எடுத்துக் காட்டப்பட்டது.

செங்கற்பட்டு மேல் ஓலை ஆவணங்கள்

[illegible]

வடருப்பாடு

[illegible]

[illegible]

பெர்னார்டு ஆவணங்களின் - கையெழுத்துப்படி



பெர்னார்டு ஆவணங்களின் பதிவேடுகளில் உள்ளபடி

WUDDACAPUT

[Land Details]	Caw.Cor.
	61.25
Tanks &c.	30.00
Muddoor	100.00
A part of Cooroovamadc yary	110.00
Yary	35.00
Hill	40.00
Wood	21.00
Town	8.00
Parchery & Burying ground	
Paddy old free gift lands [of] Village Establishment	40.00
Combo old free gift lands [of] Village Establishment	25.00
Paddy old free gift lands the property of Strangers	5.50
Combo old free gift lands the property of Strangers	1.50
Paddy new free gift lands the property of Strangers	6.50
	449.50
Paddy cultivated Circar ground	150.00
Combo cultivated Circar ground	200.00
Paddy uncultivated Circar ground	36.25
Combo uncultivated Circar ground	------
	1360.00
[Total]	

Bernard Accounts

மொ. மருதமுத்து
ஆராய்ச்சி உதவியாளர்
இலக்கியம் மற்றும் சுவடியியற்புலம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

தாள் சுவடிகளில் தனிப்பாடல்கள்

முன்னுரை

அமிழ்தினுமினிய செந்தமிழ் மொழியானது இலக்கிய. இலககண வகைகளால் நிறைந்து. உயர்தனிச் செம்மொழியாய்ப் பல்லாயிரமாண்டுகட்கு முன்பிருந்தே பீடுநடையுடன் உலவிவந்து நிற்கின்றது. பண்டிருந்து தமிழை வளப்படுத்த வேண்டிச் செந்தமிழ்ப் புலவர்கள் காலந்தோறும் தோன்றி. அரிய பல தமிழ் நூல்களையும். தனித்தமிழ்ச் செய்யுட்களையும் இயற்றித் தந்து. தமிழன்னைக்குரிய அணிகலன்களாக அவற்றை அளித்துள்ளனர். அத்தக்கோரை யெல்லாம். அவ்வக்காலத்திலிருந்தே தமிழ் நாட்டு முடிமன்னர்களும். குறுநில மன்னர்களும். வேண்டுவன ஈந்து காப்பாற்றி அவர்தம் தமிழ்ப்பணி தட்டின்றி நடத்தற்குத் துணை நின்றனர்.

சங்க காலத்திற்கு முன்னரும் பின்னருமிருந்த அரும்பெரும் புலவர்கள் அருளிச் செய்த நூல்களை. கடல்கோள் முதலியவற்றால் அழிந்தவை போக எஞ்சியவற்றை. பிற்காலத்து வந்த தமிழ்ப்பெருமக்கள் தம் கண்ணினுஞ் சிறந்தனவாகக் கருதிக் காத்து வந்தனர். அவையே இராமாயணம். மகாபாரதம். எட்டுத்தொகை. பத்துப்பாட்டு. பதினெண்கீழ்க்கணக்கு. ஐம்பெருங் காப்பியங்கள். ஐஞ்சிறு காப்பியங்கள் என்பனவாகும். இவை யாவும் அண்மைக் காலத்திலிருந்த. தமிழ்ப் பெரியோர்களால் அச்சிடப்பெற்று வெளியிடப் பெற்றுள்ளன. இவையன்றித் தமிழ் மொழியின்கண்ணே. இடைக்காலத்தும் பிற்காலத்துமிருந்த தமிழ்ப் புலவர்களால் சிற்றிலக்கியங்களும். தனித்தனிச் செய்யுட்களும் இயற்றப்பட்டன. அவற்றுள்ளும் பெரும்பான்மையானவை அச்சிடப்பட்டனவாயின. அச்சிடப் பெறாமல் ஓலை மற்றும் தாள் சுவடிகளினூடே. புதைந்து கிடக்கும் பல செய்யுட்களுமுண்டு.

இவை தனித்தனியாகத் தனித்தனிப் புலவர்களால் வெவ்வேறு காலத்தில் தனித்தனி மனிதர்களைப் பற்றியும். பல்வேறு பொருண்மைகளைப் பற்றியும். பாடப்பட்டனவாதலின் 'தனிப்பாடல்கள்' என்று பெயர் பெறுகின்றன. அவ்வாறாகிய தனிப்பாடல்கள் பல அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் ஓலைச்சுவடிகளிலும் தாள் சுவடிகளிலும் பாதுகாக்கப்பெற்று வருகின்றன. அந்நூலகத் தாள் சுவடிகளில் அமைந்துள்ள தனிப்பாடல்கள் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

தனிப்பாடல் சுவடிகள்

அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் சுமார் 17,000க்கும் மேற்பட்ட தமிழ் ஓலைச்சுவடிகள் சேகரிக்கப்பெற்றுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் தனிப்பாடல்கள் பற்றிச் சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள் காணப்பெறுகின்றன. இவ் ஓலைச்சுவடிகளிலிருந்து சுமார் இருபது சுவடிகளின் பாடல்கள் தாள் சுவடிகளில் எழுதி வைக்கப்பெற்றுள்ளன. அத்தாள் சுவடிகளின் எண்கள் முறையே R 323, R 578, R 579, R 590, R 1728, R 2144, R 2146, R 2147, R 5937, R 6378, R 6384 ஆகும். இச்சுவடிகளில் சில, பாடல்கள் முழுமை பெற்றும் பெறாமலும் காணப்படுகின்றன. இவற்றில் R 323, R 578, R 590, R 5937 ஆகியவற்றையும், சில ஓலைச்சுவடிகளிலுள்ள தனிப்பாடல்கள் ஆகியவற்றையும் சேர்த்து, 1057 பாடல்கள் அடங்கிய நூலினை, இந்நூலகம் 'தனிப்பாடற்றிரட்டு' என்ற பெயரில் 1960ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளது. இப்பாடல்களில் 252 பாடல்கள் தாள் சுவடிகளிலிருந்து பதிப்பிக்கப் பெற்றவையாகும். இன்னும் பதிப்பிக்கப் பெறாமல் உள்ள தாள் சுவடிகள் மற்றும் ஓலைச்சுவடிகளிலுள்ள தனிப்பாடல்கள் ஏராளம்.

தனிப்பாடல்களால் அறிய வருவன

தனிப்பாடல்களின்கீழ் அடங்கியுள்ள செய்யுட்கள் அகம், புறம் பற்றிய பல செய்திகளையும், தன்னகத்தே கொண்டு நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம் வெகுளி, உவகை, சமநிலை முதலிய ஒன்பான் சுவைகளையும் விளக்கும் பெற்றியனவாகச் சொல்நயம், பொருள்நயம், ஓசைநயம் இவற்றுடன் பொருந்தி, உவமை முதலிய பல்வகை அணிநலன்களையும் கொண்டு அறிவிற்கின்பம் பயப்பனவாய் அமைந்து காணப்படுகின்றன.

ஓலைச்சுவடிகள் மற்றும் தாள் சுவடிகளில் காணப்பெறும் தனிப்பாடல்கள் தெய்வங்கள் பற்றியும், இடைக்காலத்தும் பிற்காலத்துமிருந்த அரசர், அமைச்சர், வள்ளல், புலவர் ஆகியோரின் சரித்திரங்களை அறிவதற்கும், அக்காலத்துத் தமிழ்ப் பெருமக்களின் பழக்க வழக்கப் பண்பாட்டுக் கூறுகளை அறிவதற்கும், அக்காலத்தில் இலக்கியங்கள் பற்றி அறிவதற்கும் பயன்படுகின்றன. இத்தனிப்பாடல்களைப் பாடியோரும், பாடப்பட்டோரும் காலம், இடம் ஆகியவற்றான் வேறுபட்டோரேயாவர்.

தனிப்பாடல்கள் உணர்த்துவன

இத்தனிப்பாடற்கண் இறைவணக்கத்திற்குரிய பக்திவகைப் பாடல்களும், தலைவன் தலைவியரைப் பற்றிய அகத்திணைப் பாடல்களும், உலகியலை உணர்த்தும் புறத்திணைப் பாடல்களும் அடங்கியுள்ளன. இவை யாவும் மக்கட்கு வேண்டிய அன்பு, அருள், அறம், நல்லொழுக்கம், கடவுள் பக்தி, பெரியோர்ப் பணிதல், ஈகை, வீரம் முதலிய பல்வகைப் பண்புகளையும் செவ்விதின் எடுத்துக் கூறும் பாங்கினவாய் அமைந்துள்ளன.

சிறப்புச் செய்திகள்

அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத் தாள் சுவடித் தனிப்பாடல்களின் வழி

அரசர்கள், வள்ளல்கள், புலவர்கள், தெய்வங்கள், ஊர்கள் பற்றிய பல்வேறு செய்திகள் அறிய வருகின்றன.

இராமன், இராவணன், கரிகாலன், குலோத்துங்கன், நளன், மாவலி, மாறன் குலசேகரன், திருமலைராயன், சேதுபதி முத்துராமலிங்கத்துரை, ரெகுநாத சேதுபதி, கெவுரி வல்லப மகாராசர், வேங்கடேசுர எட்டன், குமார எட்டேந்திரன், போதகுரு மன்னன் முதலிய பல்வேறு அரசர்கள் பற்றியும், சோலையப்பன், மாந்தைநகர் வள்ளல், சீதக்காதி, பொன்னம்பலசாமி, இலக்குமணப் பெருமாள் எனும் இலட்சுமணப் பூபதி, நாராயணேந்திரன், அரங்கநாத சேதுபதி, சாமிநாத சேதுபதி, வடுகநாத பூபதி, சிட்டநாதன், பழனியப்பச் செட்டி, கருமாணிக்கன், அருணாசலம், கூவத்து நாராயணன், ஏலேலசிங்கன், இராமபத்திரன், இராசப்பபிள்ளை, வங்காரு துரைசாமி, திருமாமலைக் காங்கேயன், உருபாய பூபதி, விசயரங்கநாதன், நரசிங்கன், சுப்பிரமண்யன் முதலிய பல்வேறு வள்ளல்கள் பற்றியும் இத் தனிப்பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

அனுமன், இந்திரன், சிவன், திருமால், பிரமன், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை, மீனாட்சி, இலட்சுமி, பத்திரகாளி முதலிய பல்வேறு தெய்வங்கள் பற்றியும் போற்றித் துதிக்கும் பாடல்கள் அமைந்துள்ளன.

திருச்செந்தூர், திருக்காஞ்சி, திருவாவடுதுறை, திருவெண்ணெய் நல்லூர், திருத்தணிகை, திருவாரூர், திருமயிலம், திருநெல்வேலி, திருக்கோளூர், செருந்திவனம், திருக்காளத்தி, திருக்கயிலை, திருக்கழுக்குன்றம், திருமதுரை, திருவண்ணாமலை, சோணகிரி, பொய்கையூர், மாந்தைநகர், திருப்பரங்குன்றம், திருத்தில்லை, திருக்குற்றாலம், திருக்குடந்தை, வேலங்குடி, தேனிமலை, வங்கம், கலிங்கம், குன்றக்குடி, செட்டிகுளம், மிதிலை, திருப்பெருந்துறை ஆலங்காடு, புள்ளிருக்குவேளூர், பழனி, திருக்குறுங்குடி, வேங்கடம், செஞ்சி, திருமறைக்காடு, திருக்குருகூர், திருப்பேரை, அருப்புக்கோட்டை, சிவகங்கை, திருவொற்றியூர் ஆகிய ஊர்கள்பற்றியும் அவ்வூர்களில் அமைந்துள்ள தெய்வங்கள்பற்றியும் வள்ளல்கள்பற்றியும் தனிப்பாடல்கள் பல இத்தாள் சுவடிகளில் காணப்படுகின்றன.

மேற்கண்ட அரசர்கள், வள்ளல்கள், தெய்வங்கள், ஊர்கள் ஆகிய பல்வேறு செய்திகளைப்பற்றி அதிமதுரகவிராயர், இரட்டையர், ஒட்டக்கூத்தர், ஔவையார், கம்பர், காளமேகப்புலவர், ஒப்பிலாமணிப் புலவர், புகழேந்திப் புலவர், சவ்வாதுப் புலவர், காளிமுத்துப் புலவர், நமச்சிவாயப் புலவர், பலபட்டடைச் சொக்கநாதப் புலவர், பொய்யாமொழிப் புலவர், சிவப்பிரகாச சுவாமிகள், வேலைய சுவாமிகள், சங்கரமூர்த்திப் புலவர், அழகிய சிற்றம்பலக் கவி, மல்லைக் குழந்தை நாவலன், குழந்தைக் கவிராயர், மங்கைபாகக் கவிராயர், குமாரசுவாமிக் கவி, வெண்பாப்புலிக் கவிராசர், அரவங்குறிச்சிச் சொக்கலிங்கக் கவிராசர், முத்துக் குமாரசாமி, சுப்பிரமணியப் புலவர், நையாண்டிப் புலவர், இராமச்சந்திரக் கவிராயர் மற்றும் பெயர் தெரியாத பல புலவர்கள் பாடிய பல்லாயிரக்கணக்கான தனிப்பாடல்கள் தாள் சுவடிகளில் மலிந்து காணப்படுகின்றன.

இனி, நயமிக்க சில பாடல்கள் இப்பகுதியில் ஆராயப்படுகின்றன.

சங்கரமூர்த்திப் புலவரின் தனிப்பாடல்கள்

மாணிக்கவாசகர் அம்மானை என்னும் நூலினை இயற்றிய சங்கரமூர்த்திப் புலவர் சிற்சில சமயங்களிற் பாடிய பாடல்களாக, பத்துப் பாடல்கள் தாள் சுவடியில் காணப்படுகின்றன. இப்பாடல்கள் திருச்செந்தூர் முருகனைப் பற்றியதாக அமைந்துள்ளன.

"சுப்ரமணிய சுவாமி துணையென்றே
செப்பரிய வெத்தூரஞ் சென்றாலும் - எப்பொழுதுங்
கூடிவரு மென்மேலுங் கூப்பிட்டா லேனேனென்
றோடிவரும் வேலுமயி லும்"

மெலிந்தானொருவனை வலியானொருவன் துன்புறுத்த வரும்போது, அம்மெலிந்தான் யாரேனுமொருவரைத் துணைக்கழைத்துத் தன்னைக் காக்கும்படி வேண்டுவது உலகியல்பு. அதைப்போன்ற காட்சி வருமாறு :

"என்னத்தா! செநூாரா! வென்றாலே மாரயெமன்
பின்னைத்தான் வந்து பிடிப்பானோ? - சுன்னத்தே
போடாதோ! வீடுபுகுந்து துரத்திக்கொண்
டோடாதோ' வேலுமயி லும்"

குறிப்பு : மெலிந்தவர் - புலவர் சங்கரமூர்த்தி. வலியவர் - எமன்.
துணைவந்தவர் - முருகப்பெருமான்.

புலவர் சங்கரமூர்த்திக்கு 'முருகன் வருவான். அருளைத் தருவான்' என்ற நம்பிக்கை மிகுதி. இதனை. திருச்செந்தில் முருகக் கடவுள் சந்நிதியில் அலங்காரம் பண்ணுகிற சமயம் திரை போட்டிருக்கச் சீக்கிரம் முடியாமற் தாமதித்தபோது தரிசனையின் அவாவுற்றுச் சொன்ன பாடலின் மூலம். தம் ஆசையை நிறைவேற்றிக் கொண்டார்.

"வேலுக்குச் சொல்லி மயிலுக்குச் சொல்லிநின் வீரதண்டை
காலுக்குச் சொல்லி யபயமிட்டேன்பின் கருங்குறப்பெண்
பாலுக்குச் சொல்லி யழுதுவிட் டேன்முகம் பார்குமரா!
மாலுக்குச் சொல்லி மால்யானை யுய்ந்த வகையென்னவே"

மேலும். புளியங்கொம்பு ஒடியச் சொன்னது. தென்னை மரத்தினின்று தேங்காய் நெற்று அறுந்துவிழச் சொன்னது. ஒருநாள் பசிப்பிணியின் நிமித்தம் சொல்லியது. மாசி மகோற்சவத்திற் சொல்லிய வாகனக் கவி முதலான பல பாடல்கள் இவர் பாடிய பாடல்களாக அமைந்து நயமிகுந்தனவாக உள்ளன.

மடலேறுதலில் புதுமை

தலைவனொருவன். தான் விரும்பிய பெண்ணை மணம் செய்யவேண்டி பல்வேறு முயற்சிகளையும் செய்து. இறுதியில் 'மடலேறுதல்' என்ற முடிவிற்கு வந்துவிட்டான். அதைச் செய்து முடிப்பதற்குரிய அவனது திட்டம். புதிய முறையிலல்லவா அமைந்துள்ளது! எப்படி?

"எழுவே னுதிக்குமுன் பொற்றா மரைதனி லேபடிந்து
தொழுவேன் கயற்கண்ணி பாதத்தையே காலன் தூலத்தையே

கொழுவாய் மடக்கி யவன்கையில் பாசத்தைக் கொண்டுகட்டி
உழுவே னெருமைக் கிடாவினில் நானிந்த வூர்முற்றுமே''

எண்ணிய எண்ணியாங் கெய்த வேண்டிச் சோம்பலை நீக்கிய தலைவன் அதிகாலையிலேயே எழுந்திருக்கிறான்; தான் விரும்பும் பொருள் பெண்ணாதலின், பெண் தெய்வமாகிய கயற்கண்ணியைப் பணிகிறான்; ஒருசமயம் மடலூர்கையில் உயிர்க்கேதம் வருமோ என நினைத்து, காலனது சூலத்தையும் பாசத்தையும் பிடுங்கி, அவற்றைத் தன் செயலுக்குரிய கருவிகளாகவும் மாற்றிக் கொண்டு விடுகிறான். இனி அவனது நோக்கம் நிறைவேறுவதில் தடையென்ன? ஒன்றுமில்லை. எளிய பாடலாயினும், உட்பொருளைச் சிறக்க வைத்துப் போயுள்ளார் இப்பாடலை இயற்றிய புலவர்.

தலைவன் வாட்டமுறுதல்

நிலவெழுதல் கண்டு வாட்டமுற வேண்டியவள் தலைவி. அப்படியிருக்க இங்குத் தலைவன் வாட்டமுறக் காரணம் என்ன? அதைப் பின்வரும் பாடல் உணர்த்தும்.

''இந்த நிலவங்கே யெழுமே; யெழுந்தாக்கால்
கந்தமலர்ப் பூங்குழலாள் கண்டாளேல் - சிந்தைமிகத்
தேடுமே நாமிருந்த சேதிதனை யேநினைந்து
வாடுமே நோமே மனம்''

இங்ஙனம் ஆறாவன்பு படைத்த தலைவனிடம் மாறாவன்பு வைப்பது தலைவிக்குரிய கடனன்றோ? இருவருக்கும் இன்ப துன்பங்கள் சமந்தானே! ஆகையினால்தான் தலைவனைப் பிரிந்த தலைவி, "கொற்கோ கிலங்காள் துலங்கோ திமங்காள்; தோகைக் குலங்கள் சுகங்காள் மிருகங்காள்" என அவற்றை விளித்து, தலைவன் சென்றது, 'தெற்கோ வடக்கோ குடக்கோ குணக்கோ' கூறுவீர் என்று கேட்கின்றாள். இயற்கைதானே!

கொடைச் சிறப்பைக் கூறும் பாடல்

மாந்தைநகர் வள்ளலை ஒரு புலவர் பாடும் பாடல் வருமாறு :

''மாந்தைநகர் வேந்தா மகுடத் தியாகியருக்
கேந்து தழும்பு யிரண்டுண்டு - வேந்தர்
குடித்தழும்பு காலிலே; முத்தமிழோர்க் கீய்ந்த
படித்தழும்பு கையிலே பார்''

இப்பாடலின் கருத்து : மாந்தைநகர் வள்ளலுக்கு இரண்டு தழும்புகளுண்டாம். ஒன்று, காலில் வேந்தர் குடித்தழும்பு; இரண்டாவது, கையில் முத்தமிழ்ப் புலவோர்களுக்கு ஈய்ந்த படித்தழும்பு. இதைக் கேட்கும்பொழுது, அன்று, 'மெல்லிய வாமால் நுங்கை' எனக்கேட்ட சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனுக்குப் புலவர் கபிலர் பெருமான் கூறிய பதிலல்லவா நினைவுக்கு வருகிறது.

மேலும், இன்னொரு பாடல் தமிழின் பெருமையினையும், அவற்றைப் பேணி வளர்ப்பவனின் சிறப்பினையும் மிகவும் அழகாக எடுத்துரைக்கும் விதம்

போற்றுதற்குரியது.

"சங்கு முழங்குந் தமிழ்நாடன்
தம்மை நினைத்த போதெல்லாம்
பொங்கு கடலு முறங்காது
பொழுதோ நாளும் விடியாது
திங்க ளுறங்கும் புள்ளுறங்குந்
தென்ற லுறங்கும் சிலகாலம்
எங்கு முறங்கு மிராககாலம்
என்கண் ணிரண்டு முறங்காதே"

அன்றியும் மற்றோர் புலவர். இரப்பவனை 'ஈனன்' என்றும். இரப்பார்க்கில் இல்லையென்போனை 'அவனினுமீனன்' என்றும். கசிந்தளிப்பார்க் கரக்கின்றவனை 'பாவியீனன்' என்றும். யாதுமுரைத்தபின் இல்லென்போனை. 'உலகத்தார்க் கெல்லாம் ஈனன்' என்றும் கூறுகிறார் அப்பாடல் வருமாறு :

"இரப்பவனீ னன்யா துமிரப்பார்க் கில்லையென்று
கரப்பவனீ னன்கசிந்த ளிப்பார்க் - கரக்கின்ற
பாவியீ னன்யாதுமு ரைத்தபின் னில்லென்போன்
லோகத்தெல் லோர்க்குமீ னன்"

நயமிக்க தனிப்பாடல்

இத்தனிப்பாடற்கண்ணே வரும். பேச்சுத் திறனாகப் பாடப்படும் அம்மானைப் பாடல் நல்விருந்தளிக்கும் நயமிக்க பாடலாக அமைகிறது.

"அத்தியுரி தரித்த ஆலங்காட் டப்பருக்கு
நெற்றிக்கண் ணொன்று நெருப்புகா னம்மானை
நெற்றிக்கண் ணொன்று நெருப்புகா ணாமாகில்
பத்தியருஞ் சடையி லிராதோ வம்மானை
படருமென்றே கங்கை பதுவிருந்தா ளம்மானை"

இஃது எதனைக் காட்டுகின்றது? உலகியலில் இன்னா செய்தற்கு ஒருவரிருப்பின் அதேவழி இனியவை செய்தற்கும் ஒருவருண்டு என்பதைக் காட்டுகின்றதன்றோ?

மங்கைபாகக் கவிராயர் பாடல்

மிதிலைப்பட்டி ஆதி சிற்றம்பலக் கவிராயரின் புதல்வரான மங்கைபாகக் கவிராயர். நத்தம் சமீன் இம்முடி லிங்கைய நாயக்கர் குமாரர் சொக்கலிங்க நாயக்கர்மீது வருக்கக்கோவை பாடி. 'பூசாரிப்பட்டி' என்னும் கிராமத்தைப் பரிசாகப் பெற்றுள்ளார். இவர் சிட்டநாதன் என்னும் வள்ளலைப் பழித்துக் கூறிய பாடல்களாக. பிள்ளைத்தமிழ்ப் பருவத்தில் 10 பாடல்கள் காணப்படுகின்றன. அப்பாடல்களில் முதல் பாடல் வருமாறு :

"பார்ப்பார்கள வீட்டில் பழங்கல முருட்டியே
பால்தயி ரெலாங் குடித்துப்
பறைசசேரி யில்சென்று மாட்டெலும்பு களெல்லாம்
பல்லால் கடித்து நக்கிக்

கோப்பான குறவர்தலை சாரையில் நுழைந்துபோய்க்
குடிசைக் குள்ளே புகுந்து
கூழெலாந் தின்றுவிளை யாடிவரு குக்கலே!
கூறுவின் ணப்ப மொன்று

சாப்பாடில் லாமலே பெண்டிதனை யூரிலே
தான்வழங் கத்தொ டுத்துச்
சல்லியும் பில்லியுங் கல்லியுஞ் சொல்லியே
சாண்வயறு தான்வ ளர்க்குந்

தீப்பாக யாஞ்சவுந் தரபாண்டி யன்மதலை
செந்தலைப் புலைய னாகும்
செத்தநாய் தின்றுவளர் சித்திநா யகமட்டி
சீண்டலை மிகக் காக்கவே''

இப்பாடலிலிருந்து சிட்டநாதன் என்னும் வள்ளல், மங்கைபாகக் கவிராயரை ஆதரித்து அன்பு பாராட்டி மகிழவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அக்காலப் புலவர்கள், தன்னை மதித்து ஆதரிக்கும் மன்னனையோ அல்லது வள்ளலையோ புகழ்ந்து கவிகள் பல படைப்பது போன்றே, தம்மை ஆதரிக்காதோரையும் பழித்துக் கவிகள் பாடியிருப்பதை இதுபோன்ற தனிப்பாடல்களின்வழி அறியமுடிகின்றது.

அறிவுரைத் தத்துவக் கவிகள்

தனிப்பாடல்கள் பெரும்பான்மையன, மக்களுக்கு அறவுரை தரும் பாங்கினதாக அமைகின்றன. நல்லது செய்தல் வேண்டும்; அல்லது (தீமை) களைதல் வேண்டும் என்பதே மாந்தர்க்கு மன்பதைப் புலவர்கள் தரும் அறிவுரையாகும். மானுடம் எங்கெல்லாம் காயப்படுகின்றதோ, அங்கெல்லாம் புலவர்கள் தோன்றி அவற்றைக் களைந்தெறிந்து குணப்படுத்தும் காவலர்களாகவும் விளங்கியிருப்பதைப் பல்வேறு தனிப்பாடல்களிலிருந்து அறியமுடிகின்றது. மக்களாகப் பிறந்தும் அறிவிழந்து, மூடநம்பிக்கைகளில் மூழ்கி வாழும் பாச்சலூர்க் கிராமத்தாரைப் பார்த்து ஒரு புலவர் பின்வருமாறு பாடுகின்றார்.

1. வித்தொரு மரத்தை யீனும்
மரமொரு வித்தை யீனும்
பெத்ததாய் பிள்ளை யீனும்
பிள்ளையு மதுவே யீனும்
உத்தபால் தயிரை யீனும்
உயர்ந்ததாய் குழந்தை யீனும்
பத்திநன் றுலைவ தேதோ?
பாச்சலூர்க் கிராமத் தாரே!

2. ஒருபனை யிரண்டு பாளை
ஒன்றுநொங் கொன்று கள்ளு
அறிவுடன் கொள்ளு வோர்க்கு
அதுவுங் கள்இது வுங்கள்ளே
ஒருகுல முயர்ந்த தேதோ?
ஒருகுலந் தாழ்ந்த தேதோ?
பறையனைப் பழிப்ப தேதோ?
பாச்சலூர்க் கிராமத் தாரே!

3. சந்தனம் அகிலும் வேம்பும்
தனித்தனிக் கந்தம் வீசும்
அந்தணர் தீயில் வெந்தால்
அதுமணம் வேற தாமோர்
செந்தலைப் புலையன் வெந்தாற்
தீமணம் வேற தாமோ
பந்தமும் தீயும் வேறோ
பாச்சலூர்க் கிராமத் தாரே!

இவ்வாறு, பத்துப் பாடல்களில் உலகத் தத்துவத்தின் உட்பொருளை, அறியாமை இருட்டில் உழன்று கொண்டிருக்கும் பாச்சலூர்க் கிராம மக்களுக்கு அள்ளி வழங்குகிறார் புலவர். இவரது மானுட நேயத்தின் மதிப்புத்தான் எவ்வளவு பெரிது? இந்நூலகத் தாள் சுவடித் தனிப்பாடல்களில் மேற்சொன்னவை மட்டுமன்றி, பல புலவர்கள் பாடிய சிலேடைப் பாக்களும், வருணனைப் பகுதிகளும், பல்வேறு தெய்வங்களின்மீது இறைநெறிப் பாடல்களும், வள்ளல்கள் பலர்மீது சீட்டுக்கவிகளும், வண்ணச் செய்யுட்களும், சந்தச் செய்யுட்களும், இவை தவிர்த்த சோதிடம், பத்திப் பாடல்களும் கற்றோர்க்குக் கழிபேருவகை அளிக்கும் இன்கவித் திரட்டுக்களாம்.

முடிவுரை

சுமார் கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளுள் தமிழுலகில் வாழ்ந்து இலக்கிய நயம் நிறைந்த பலவகைச் செந்தமிழ்ப் பாடல்களியற்றிய சிறந்த பாவலர்களது தேர்ந்தெடுத்த அரிய கவிகள் இந்நூலகத் தாள் சுவடிகளில் இடம்பெற்றுள்ளன. பல கவிகளுக்கு அவற்றினை இயற்றிய ஆசிரியரின் பெயர் கண்டறியப்பட்டுக் குறிக்கப் பெற்றுள்ளன. இப்பாடல்களின் ஆசிரியர்கள் பல சமயங்களையும், பல மரபுகளையும் சார்ந்தவர்கள். பல்வேறு வகைப்பட்ட அரும்பொருள்களைப்பற்றி அவர்கள் பாடியுள்ளனர். அவர்களின் பாடல்களால் பல வள்ளல்களின் பெயர்கள் அறியவருகின்றன.

இதன்கண், பல தெய்வங்களைப் பற்றிய துதிகள், உலகியலைப் படம் பிடித்துக் காட்டுவது போன்ற உலோபிகளின் இயல்பு, வறுமையின் அல்லல், கள், ஊன் உண்பாரது இயல்பு, துறவிகளின் வஞ்சக ஒழுக்கம், அகத்துறை நயங்கள் முதலிய அரும்பல பொருள்களின் வருணனை இயற்கையை இற்றெனக் கிளக்கும் சிறப்பு வாய்ந்திருப்பன. மேலும், வாய்மை, பணிவு, அன்பு, தீரம், தூயமனம், பக்தி முதலிய நல்லொழுக்க நெறிகளும் பல பாடல்களின்வழி அறியப்படுகின்றன.

ஒரு காப்பியத்திற்கு எவ்வளவு மதிப்புண்டோ அதற்குச் சிறிதும் குறையாத மதிப்பு, தனிப்பாடல்களுக்கும் உண்டென்பது தெளிவு. தனிப்பாடலை அதன் சிறப்பு நோக்கித் 'தனியன்' என வைணவ நூல்கள் வழங்கும். எனவே, தனிப்பாடல்களைத் தனித்து வேறுபடுத்தி நோக்காமல், அதுவும் ஓர் இலக்கியம்தான்; மக்களை நெறிப்படுத்தும் ஒரு வாழ்வியற் பெட்டகம்தான் என்றுணர்ந்து வருங்காலத் தமிழ்ச் சமுதாயத்தினர், தமிழ் ஆய்வறிஞர்கள் ஆகியோர் பல்வேறு சுவடி நூலகங்களிலுள்ள ஓலை மற்றும் தாள் சுவடிகளிலுள்ள தனிப்பாடல்களைத் திரட்டி நூலாகக் கொண்டு வருவாராயின் தமிழ்ப் பண்பாடு அழிவிலிருந்து காக்கப்படும் என்பது துணிபு.

□

தா. வின்சென்ட்
தென்னிந்தியத் திருச்சபை
தஞ்சாவூர்

கிறித்தவத் திருமறை அகழ்வாராய்ச்சி, கையெழுத்துப்பிரதி

மாக்களாய் இருந்த மக்கள் மீண்டும் மனிதத்துவம் பெறுவதற்கு உதவியாய் இருப்பவை சமயங்கள். அச்சமயங்கள் மக்களை நல்வழிப்படுத்துவதற்குப் புனித நூல்கள் உள்ளன. ஒவ்வொரு சமயத்தினரும் தங்கள் புனித நூற்களை. இறைவெளிப்பாடுகளாகவே கருதுகின்றனர். அவ்வண்ணமாகவே கிறித்தவர்களும் தங்கள் புனித நூலாம் விவிலியத்தை இறைவனுடைய புனித ஆவியின் வெளிப்பாடாகவே கருதுகின்றனர். இவ்விவிலியத்தில் இருபெரும் பிரிவுகள் உள்ளன. பழைய. புதிய ஏற்பாடு எனும் பிரிவினிலே மொத்தம் 66 புத்தகங்கள் அடங்கியுள்ளன. இவையனைத்தும் பல்வேறு நபர்களாலே. பல்வேறு காலகட்டங்களில். சூழல்களில். பண்பாடுகளிலே எழுதப்பட்டவைகளாகும். இவை எழுத்து வடிவம் பெற்ற காலம் சரியாக வரையறுக்கப்படவில்லை. ஆனால் அனேக ஆண்டுக் காலமாக வாய்மொழியாக வந்த இவ்விவிலியத்தின் பகுதிகள் பல்வேறு நபர்களால் எழுதப்பட்டுப் பிறகு தொகுக்கப்பட்டன. இவை எபிரேயம். கிரேக்கம். அரமேய மொழிகளில் எழுதப்பட்டன. 1920ஆம் ஆண்டு சவக்கடலைச் சுற்றியுள்ள பகுதிகளில் சில 'பப்பைரஸ்' என அழைக்கப்படும் ஒருவிதமான புற்களினால் செய்யப்பட்ட ஏடுகளில் எழுதப்பட்ட சில பகுதிகளும். 1947ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட 'சவக்கடல் தோற்சுருள்களில்' எழுதப்பட்ட பகுதிகள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தற்சமயம் எந்தவொரு பழைய ஏற்பாட்டு நூலும் ஆக்கியோர் கையினால் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதி கிடைக்கவில்லை. மாறாகப் பிற்காலத்தில் கையெழுத்துப் பிரதிகளை எழுதிய. அதாவது பிறர் வாய்மொழியாகக் கூறக் கேட்டு எழுதிய வேத பாரகர்கள் என்பார் எழுதிய கையெழுத்துப் பிரதிகளே உள்ளன. எபிரேயர்கள் பாபிலோனியச் சிறையிருப்பில் சென்ற காலத்திற்கு (587 - 539 கி. மு.) முன் எந்த ஒரு பழைய ஏற்பாட்டின் புத்தகமும் முழுமையாகத் தொகுக்கப் பட்டதாகவோ. எழுதப்பட்டுக் கிடைத்ததாகவோ சான்றுகள் இல்லை. இன்று கிடைத்துள்ள மிகப் பழமையான கைப்பிரதிகள் 'கும்ரான் குகைகளி'லிருந்து கிடைத்துள்ள. சவக்கடல் சுருள்கள் கி. மு. 250 - 175 ஆண்டுகளைச் சேர்ந்ததாகும்.

மிகப் பழமையான கைப்பிரதிகள் எனக் கிடைக்கப்பட்டுள்ள பல பிரதிகள் கி. மு. 250 - கி. பி. 135 வரை உள்ள காலகட்டத்தைச் சேர்ந்தவை. இவற்றில் பலவும் தோற்சுருள்களில். ஒருபக்கத்தில் மட்டும். பத்திகளாகப் பிரிக்கப்பட்டு

எழுதப்பட்டுள்ளன. தோற்பகுதிகள் நடுவிலே தைக்கப்பட்டு ஒரு சுருளாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதைப்போலப் பப்பைரஸ் நாணல் தாள் போன்ற ஒருவிதக் காகிதம் நடுவில் ஒட்டப்பட்டுச் சுருளாக்கப்பட்டுள்ளன. விவிலியத்திலுள்ள ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் இப்படி எழுதப்பட்டுள்ள மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும். இது மொத்தம் 24.5 அடி நீளமும், 10.5 அங்குல உயரமும் உள்ளதாகும். இப்படியாகப் பழைய ஏற்பாட்டின் பகுதிகள் சுமார் 190 கைப்பிரதிகளாகக் கிடைத்துள்ளன. இவை யூதேயாவின் பாலைவனத்தில் உள்ள குகைகளிலும், கும்ரான், வாதி முராதபாத், நகால் ஹுவர் குகைகளிலும், முஸாதாக் கோட்டையிலும் இருந்து கிடைத்துள்ளன.

கி. மு 1ஆம் நூற்றாண்டு வரை இரண்டுவிதமான எழுத்துக்கள் காணப்படுகின்றன. ஒன்று வளைவுகள் அதிகம் கொண்ட 'பாலியே-எபிரேயம்' (Paleo - Hebrew) என அழைக்கப்படும் எபிரேய எழுத்துக்கள். இவை கானானிய எழுத்துக்களோடு அதிகமாக ஒத்துப் போகின்றன. பிற்காலத்தில் இவையே அரமேய எழுத்துக்களாக வடிவம் பெற்றுள்ளன.

கும்ரான் பிரதிகள்

கும்ரான் குகைகளிலிருந்து (4ஆம் எண் குகை) சுமார் 100 சிதைந்த நிலையிலுள்ள கைப்பிரதிகள் கிடைக்கப் பெற்றன. இவை பல காலகட்டங்களில் எழுதப்பட்டவையாகும். இவற்றின் காலம் சுமார் கி. மு. 250 முதல் கி. பி. 68 வரை எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பழைய ஏற்பாட்டின் பிரதிகளில் 'தானியேல்' மற்றும் 'அரசர்கள்' புத்தகங்களின் பிரதிகள் மட்டும் 'பைப்பைரஸ்' எனும் நாணல் தாள்களிலும் மற்றவை தோல் சுருள்களிலும் எழுதப்பட்டுள்ளன. இவற்றின் அமைப்பில் சிலவற்றில் வரிக்கு 15 முதல் 70 எழுத்துக்கள் வரை எழுதப்பட்டுள்ளன.

இவ்விதமான ஆராய்ச்சிகளுக்கு அகழ்வாராய்ச்சிகள் மிகவும் துணைபுரிகின்றன. அக்காடியர்களின் ஏடுகளில் காணப்படும் கில்காமிஷ் புராணம், மர்துக் தெய்வத்துக்கும், தியாமத்துக்கும் உள்ள போர், 'உயர இருந்து' என்று தொடங்கும் பாபிலோனியப் படைப்புப் புராணம் - இவையெல்லாம் புத்தாண்டின் போது வசந்த விழா ஆராதனைப் பாடல்களாயிருந்தன. இவற்றை அகழ்வாராய்ச்சியாளர்கள் அஷுர்-பானிபல் நூலகத்தில் கண்டெடுத்தனர். எனினும் கருத்தாலும், மொழி நடையாலும் கி. மு. 2000ஆம் ஆண்டிலேயே இவை இருந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

கி. பி. 1893இல் சார்லஸ் எட்வின் வில்பரால், நீலநதியில் அஸ்வானுக்கு எதிரே 'யெப்'தீலில், 'எலிபத்தின் ஏடுகள்' கண்டுபிடிக்கப்பட்டன. இவை எகிப்தில் குடியேறிய யூதரால் எழுதப்பட்டவை. இவர்கள் பார்வோன் கொப்ரா (கி. மு. 588-569) அல்லது அமாசிஸ் (கி. மு. 569-525) காலத்தில் குடியேறினர். காம்பிசஸ் எகிப்தைப் பிடித்து (கி. மு. 525) இணைத்துக் கொண்ட பின்னர், யூதர் நிலைமை மோசமானது.

கிர்பெத் கும்ரான், அயின் ஃபெஸ்கா என்னும் இடங்களில் (கி. பி. 1947) முகம்மத்-எத்-தீப் என்னும் அமிரா இனத்தைச் சேர்ந்தவன், சவக்கடல் சுருள்களைக் கண்டுபிடித்தான். இவை எஸ்ஸீனர் எனும் குழுவினரால் சிறப்பாக எழுதப்பட்டவை. கிறிஸ்துவின் காலத்திய பக்திச் சூழ்நிலையை உணர இச்சுருள்கள் உதவுகின்றன.

1. ஒழுங்குச் சட்ட நூல்
2. நன்றிச் சங்கீதங்கள்
3. ஒளியின் பிள்ளைகளுக்கும். இருளின் பிள்ளைகளுக்கும் நடக்கும் போர்
4. செம்புச் சுருள்
5. ஆபகூக் விளக்க நூல்
6. ஏசாயா சவக்கடல் சுருள்கள்
7. ஆதியாகம விளக்கக் கதைகள்

முதலியன மிக முக்கியமான சவக்கடல் சுருள்களாகும்.

அகழ்வியலும் திருமறையின் பிரதிகளும்

பண்டைய இலக்கியமும். இலக்கியத்தின் பல்வகைகளும். அவற்றின் வடிவங்களும். சொல்லும் முறையும். சொல்லப்பட்ட சந்தர்ப்பச் சூழ்நிலையும் திருமறை ஆராய்ச்சிக்குப் புதுப்பொலிவு தந்துள்ளன. பாபிலோனிய புராணங்கள். கானானிய நெடுங் கதைகள். கடவுளை அரசனாகப் பாவிக்கின்றன. இவற்றை எபிரேயர்கள் சில சங்கீதங்களிலும். தீர்க்கதரிசன நூல்களிலும் எடுத்தாண்டிருக்கின்றனர். மெசப்பத்தோமியப் புலம்பல் சங்கீதங்கள். மந்திர உச்சாடனங்கள். எதிர் மந்திர உச்சாடனங்கள். திருமறையின் புலம்பல் சங்கீதங்களுக்குப் புதுப்பொருள் தருகின்றன. இஸ்ரவேலர் எந்தெந்த விதங்களில் கடன் வாங்கத் தயங்கவில்லை என்பதும். எந்தெந்தக் கருத்துக்களை நிராகரித்தனர் என்பதும் விளங்குகின்றது. கில் கமேஷ் புராணம். அக்ஹாட். கேரட் நெடுங்கதை. பாகால் புராணம் திருமறையின் இலக்கியத்தை. இலக்கிய நடையை விமர்சிக்கத் துணைபுரிகின்றன.

பாடபேதங்கள் ஏற்படும் பகுதிகளில் ராஸ்-ஷாம்ரா ஏடுகளின் துணையைக் கொண்டு மூலபாடத்தை நிர்ணயிக்க முடியும். பழைய ஏற்பாட்டில் பலவிடங்களில் ஒரேமுறைதான் ஒரு சொல் பயன்படுத்தப்பட்டிருக்கும். இதற்கு 'ஹபக்ஸ் லெகோமெனன்' எனப் பெயர். இத்தகைய சொற்களுக்குப் பொருள் கோடல் எளிதன்று. ஆனால் இதே சொற்கள் வேறு ஏடுகளில் காணப்படுவதனால் அவற்றின் பொருளை நிரூபிப்பது சிரமமன்று. விளங்கிக் கொள்ள முடியாத. கடினமான சொற்களுக்கும் இவ்வழிகளில் செம்பொருள் காணலாம். ஒரு காலத்தில் செப்பம் (Emendation) செய்தல் மூலம் சில வாசகத்தை நிர்ணயித்து வந்தனர். ராஷ்-ஷாம்ரா ஏடுகள் இவ்வாறு செப்பம் செய்வது சரியன்று என்றும். மஸ்ஸோரா ஏடு (Masoretic Text - பரம்பரை எபிரேய பாடம்) சிறந்தது என்றும் பலவிடங்களில் நிரூபித்துள்ளது.

கும்ரான் சுருள்கள். அதாவது சவக்கடல் சுருள்கள் மக்கபேயர் காலத்திலிருந்து எருசலேம் நகரின் அழிவுவரை (கி. பி. 70) எஸ்ஸீனர் என்னும் யூத சமய உட்பிரிவினர் தம் அறநெறி. யுக இறுதிக்கால நம்பிக்கைகள். திருமறையை அர்த்தப்படுத்திய பான்மை. இயேசு கிறிஸ்துவின் காலத்திய இறையியல் ஆகியவற்றை விளக்குகின்றன. திருமறைப் பகுதிகள் எஸ்ஸீனரிடமும் இருந்தன. இவற்றிற்கும். இன்றுள்ள எபிரேயப் பிரதிக்கும் உள்ள பேதங்கள் முக்கியம் வாய்ந்தன.

சீனாய்' கிரேக்கப் பிரதி. வாட்டிக்கன் கிரேக்கப் பிரதி ஆகிய இரு பழம்பெரும் பிரதிகளுக்கும் சுமார் 300 ஆண்டுகள் தொன்மை வாய்ந்தன இந்தச் சவக்கடல் சுருள்கள். மேலும், இவை பரம்பரை எபிரேயப் பிரதியைப் பெரும்பாலும் ஒத்துக் கொள்கின்றன. சிலவிடங்களில் வழக்கமான எபிரேயப் பிரதியின் வாசகத்தை மாற்றிச் செப்துவஜிந்துப் பிரதியை ஏற்கின்றன. முராப. 'அத் நீரோடை' அருகே கண்டுபிடிக்கப்பட்ட பாப்பைரி கி. பி. 312ஆம் ஆண்டுக் காலத்திய லூசியன் கிரேக்கப் பிரதியையும் தழுவுகின்றன. இங்ஙனம் காணப்படும் வேறுபாடுகளுக்குக் காரணம் அறிவது எளிது. வாசகம் இதுதான் என்று வரையறுக்கப்படவில்லை. வாசகத்தை நிர்ணயிக்கும் இலக்கை நோக்கி நகரத் தொடங்கி விட்டனர். திருமறையின் அடிப்படைக் கொள்கையைப் பாதிக்கும் அளவுக்கு எந்தச் சவக்கடல்' சுருளும் இடந்தரவில்லை.

புதிய ஏற்பாட்டு ஏடுகள்

எகிப்து நாட்டின் தட்பவெப்ப நிலை பாப்பைரஸ் ஏடுகளை மிகப் பத்திரமாகச் சேமித்து வைப்பதற்கு உதவியுள்ளது.

யோவான் நற்செய்தியின் பழைய பகுதிகள். 18 : 31-33. 37. 38 ஆகியவை கி பி. 150ஆம் ஆண்டைச் சேர்ந்தவை. மிகப் பழைய ஏற்பாட்டுப் பாப்பைரஸ் துண்டு 2 பா. 23 : 24-24 : 3; 25 : 1-3; 26 : 12. 17-19; 28 : 31-33 ஆகும். இவை கி. மு. 150ஆம் ஆண்டைச் சேர்ந்தவை. மேலும், கி. பி. இரண்டு முதல் நான்கு நூற்றாண்டளவில் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டின் ஒன்பது நூல்களும். புதிய ஏற்பாட்டின் பதினைந்து நூல்களும். தள்ளுபடியாகமத்தைச் சேர்ந்த ஏனோக்கு நூலும் சர். ஆல்பிரைட் செஸ்டர் பியட்டி என்பவரால் வாங்கப்பட்டன. அவர் பெயரையே இப்பிரதிகள் இன்றும் தாங்குகின்றன.

போட்மர் (Bodmer) பாப்பைரி சுமார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. லூக்கா. யோவான் I. பேதுரு ஆகிய நூல்கள் இதுகாறும் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றை ஆதாரமாக வைத்துச் சீனாய். வாட்டிக்கன் கிரேக்கப் பிரதிகளின் பாடத்தைப் புனர் பரிசீலனை செய்ய வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது.

திருமறை நூல்களைத் தவிர வேறு சில நூல்களும் கிடைத்துள்ளன. கிரீன்ஃபெல், ஹண்ட் ஆகிய இருவர் கி. பி. 1896இல் ஆக்சிரின்ச்சிஸ் என்னுமிடத்தில் 'கிறிஸ்துவின் உரைகள்' என்ற கி. பி. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நூலைக் கண்டுபிடித்தனர். இந்த உரைகள் வேத அடிப்படையில் எழுந்தவை. சில விளக்கங்கள் ஆகும்; சிந்தனையினின்றும் சில போந்தன. இன்னும் சில கிறிஸ்துவின் உரைதானா என்ற ஐயத்தையும் தோற்றுவிக்கும். அப். 20 : 35இல் லூக்கா, நான்கு நற்செய்திகளும் கூறாத கிறிஸ்துவின் உரையைக் கூறுகின்றார். எனவே, இத்தகைய இயேசுவின் உரைகள் அனைத்தும் போலியா, உண்மையா என்று முடிவு கட்டுவதற்குப் போதிய ஆராய்ச்சியும், நிதானமும், பக்தியும் தேவைப்படுகின்றன. கிறிஸ்துவின் போதனையைச் சற்று மெருகு கூட்டியிருக்கலாம். எகிப்தில் 2ஆம், 3ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்த்தப்பட்ட அருளுரைகளின் பாணியில் இவை எழுதப்பட்டிருக்கலாம். மத்தேயுவும், லூக்காவும் பார்த்து எழுதிய பாகமாயும்

றஇருக்கலாம். பரம்பரைக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் சரி, நற்செய்தி நூல்களின் கோணத்தில் எடை போட்டாலும் சரி, சில உரைகளைத் தவிர மற்ற உரைகளை இயேசு மொழிந்திருக்கக்கூடும்.

இன்னும் சில பாப்பைரி தனிப்பட்டவர்களது கடிதங்களாகும். கிறிஸ்தவர்களால் எழுதப்பட்டன. லௌகீக விஷயம் பற்றியவை. ஆட்சியாளர் எழுதிய லிகிதங்கள், பானையோட்டிலாவது, பாப்பைரசிலாவது எழுதிய இரசீதுகள் இவையெல்லாம் கிரேக்க - உரோமர் கலாச்சாரத்தை விளக்கி நிற்கின்றன. பவுலின் காலத்திய கிரேக்க மரபுத் தொடர்புகளை ஊகிக்க உதவுகின்றன.

பேதுருவின் நற்செய்தி நூலும், பேதுருவின் தரிசனமும் கி. பி. 1885இல் கண்டுபிடிக்கப்பட்டன. இவை பெரும்பாலும் பிற்காலத்தில் எழுதப்பட்டவை. நான்கு நற்செய்தி நூல்களின் மாதிரியைப் பின்பற்றுகின்றனவேயன்றிப் புதுமையாக எதையும் கூறுவதில்லை. இவை கி. பி. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை, கி. பி. 1934இல் காணப்பட்ட ஒரு பிரதி சுமார் கி. பி. 150ஆம் ஆண்டைச் சார்ந்தது. லூக். 1 : 1 ஐ ஊன்றிப் பார்த்தால் இயேசுவின் ஊழியத்தைப் பற்றிய நூல்கள் பல இருந்தன என்பது தெரியவரும். எனவே காய்தல், உவத்தலின்றி அகழ்வு தரும் இந்நூல்களைப் பொறுமையாக ஆராய்வது நலம் பயக்கும்.

மேல் எகிப்துவில் நாக்ஹம்மாடி அருகே உள்ள செனோபொஸ்கியான் என்னுமிடத்தில் தோலில் சுற்றப்பட்ட 44 பாப்பைரஸ் எழுத்துப் பிரதிகள் உள்ளூர்வாசிகளால் கண்டுபிடிக்கப்பட்டன. கி. பி. 1947இல் கண்டுபிடிக்கப்பட்ட எசனோபொஸ்கியான் பிரதிகள்

1. வாய்மை நற்செய்தி
2. பிலிப்புவின் நற்செய்தி
3. தோமாவின் நற்செய்தி

எனப் பெயர் பெறும். இவற்றிற்கும் மற்ற நான்கு நற்செய்தி நூல்களுக்கும் தொடர்பே இல்லை. கிறிஸ்து நிகழ்த்தியதாகக் கூறப்படும் உரைத் தொகுப்புகள் இவை கி. பி. 4ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. கிரேக்க மூலத்தின் மொழி பெயர்ப்பாகும். இந்தக் கிரேக்க மூலம் கி. பி. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனச் சில அறிஞர்கள் கூறியபோதும் அதற்குச் சரியான சான்றுகள் இல்லை.

அகழ்வாராய்ச்சிகள் இன்னும் தொடர்ந்து நடந்து வருகின்றன. அவ்வப்போது கைப்பிரதிகள் பாப்பைரஸ் ஏடுகள் மற்றும் தோல் சுருள்களின் வடிவில் கிடைத்துக் கொண்டே இருப்பதனால் இவை இன்னும் முற்றுப்பெறாததாகவேதான் உள்ளன.

துணை நூற்கள்

1. Burrows, M., **What Mean these Stones**, T. T. Clark, 1941.
2. Albright W. F., **The Archaeology of Palestine**, Penguin Books, 1949.
3. Wright, G. E., **Biblical Archaeology**, London, Duckworth & Co., Ltd., 1957.
4. Gray, J., **Archaeology and the Old Testament World**, 1962.
5. ஞான இராபின்சன் (ப. ஆ.). **திருமறைத் தோழன்**. கிறிஸ்தவ இறையியல் நூலோர் குழு. மதுரை, 1972.

□

வீ. மலர்விழி
ஆய்வாளர்
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ஆவணங்களில் தஞ்சை மராத்திய அரசியர்

முன்னுரை

தஞ்சை மராத்திய அரசியர்களைப்பற்றி அறிந்து கொள்ள ஆவணச் சான்றுகள் பெரிதும் துணைபுரிகின்றன. ஆவணங்களில் மராத்திய அரசியர்களின் வாழ்க்கை முறைகள், மற்றும் அவர்களின் அரசியல் பணிகள், சமயப் பணிகள், அறக்கொடைப் பணிகள், அவர்களின் பெயர்களில் அமைக்கப்பட்ட சத்திரங்கள் போன்றவை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இவ்வரசியர்களைப்பற்றி அறிந்து கொள்ள மோடி ஆவணங்களே பெரிதும் துணைபுரிகின்றன.

தஞ்சை மராத்திய முதல் அரசரான ஏகோஜிக்குத் தீபாம்பாள், அண்ணுபாய், சயிராபாயி என்று மூன்று மனைவியர் இருந்தனர்.

> "1776 கைலாஸவாஸி ஏகோஜிராஜா சம்சாரம் கங்காபாய்
> பரலோகம் அடைந்ததற்கு உத்திரகிரியைக்கு 50 சக்கரம்"[1]

என்ற குறிப்பினால் ஏகோஜிக்குக் கங்காபாய் என்ற மனைவி இருந்ததை அறியமுடிகிறது..

ஏகோஜிக்கு அபிமானத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மனைவிகள் ஒன்பது பேர் ஆவர்.[2] கங்காபாய் அத்தகைய மனைவியருள் ஒருவராக இருந்திருக்கலாம்

தீபாம்பாள்

தஞ்சாவூர் மராத்திய அரசின் வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பவர் அரசி தீபாம்பாள் ஆவார். தஞ்சாவூர் மராத்திய அரசர்களின் வாழ்வுக்கும், வரலாற்றுக்கும் ஓர் ஒளிவிளக்காகத் திகழ்ந்தவர் தீபாம்பாள். இவ்வரசி தீபாம்பாள் என்றும், தீபாபாய் என்றும் நூல்களில் கூறப்பெறுகின்றார்.

---

1. கே. எம் வேங்கடராமையா, **தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்**, ப 17
2. ***மோடி ஆவணத் தமிழாக்கம் தொகுதி 2***, ப 79

இவர் 'இங்கிளே' என்ற குலமரபில் பிறந்தவர். இல்லற வாழ்வில் ஒற்றுமையாகக் கணவனுடன் வாழ்ந்தவர்[3] ஆவார்.

கி. பி. 1728-1736 வரை ஆண்ட துக்கோஜிக்கு அருணாபாயி, ராஜகுமாரபாயி, மோஹனாபாயி, மஹினாபாய், லெக்ஷ்மிபாய் ஆகிய மனைவியர் இருந்தனர்.[4] இவரால் சேர்த்துக் கொள்ளப்பட்டவர் அறுவராவர். இவ்வறுவருள் கத்தி வைத்துத் திருமணம் செய்து கொண்ட மராத்தியப் பெண் அன்னபூர்ணா ஆவார். அன்னபூர்ணாவின் மகள் சாமாபாய் ஆவார். கி. பி. 1776க்குரிய குறிப்பில் சாமாபாய் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

கி. பி. 1736-1737 வரை ஆண்ட இரண்டாம் ஏகோஜிக்குச் சுசான்பாய், ஜயந்திபாய், சக்வார்பாய், கிரிஜாபாயி, பார்வதிபாயி[5] ஆகிய மனைவியர் இருந்தனர் இவரால் சேர்த்துக் கொள்ளப்பட்டவர் மூவர் ஆவர்.

சுசான்பாய்

தஞ்சாவூர் மராத்தியர் ஆட்சியிலே அரியணையில் அமர்ந்த ஒரே பெண்ணரசி சுசான்பாய் ஆவார் தமக்கு மகப்பேறு இல்லாததால் தம் கணவரின் இறப்பிற்குப் பின்பு தாமே அரியணையில் அமர்ந்து வரலாறு படைத்தார்.[6] ஏகோஜியின் ஆறு மனைவிகளில் சுசான்பாய் மூத்த அரசியாவார். ஏகோஜி 1736இல் இறந்த பின்பு சுசான்பாய் அரியணை ஏறினார். கி. பி. 1857இல் கடைசி சிவாஜியின் மூத்த மனைவியாகிய காமாட்சியம்பாபாயி ஜான் புரூஸ் நார்ட்டன் என்பவரைக் கொண்டு சென்னை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தபொழுது அவ்வழக்கறிஞர் கூற்றின் மூலம் இதையறிய முடிகிறது.[7]

கி. பி. 1739-1763 வரை ஆண்ட பிரதாபசிம்மர்க்கு ஓராவணக் குறிப்பினால் யமுனாபாயி, சக்வார்பாயி ஆகிய இருவர் பெயர் மட்டும் காணப்படுகிறது. பிரதாபசிம்மர் அகல்யாபாய், திரௌபதிபாய் ஆகியோரைத் திருமணம் செய்து கொண்டார். இவரால் சேர்த்துக் கொள்ளப்பட்டவர் எழுவர்.[8] அவர்களில் ஒருவர் கிருஷ்ணாபாய் சாகேப் ஆவார். மற்றவர்களின் பெயர்கள் தெரியவில்லை. இவருடைய சகோதரி சாமாபாயி ஆவார்.

கி. பி 1763-1873 வரை ஆண்ட இரண்டாம் துளஜா 14-11-1776இல் சுலட்சணாம்பாபாய், மோகனாபாய் என்ற இரு பெண்களைத் திருமணம் செய்து கொண்டார். பின் இராஜசபாயி, இராஜகுமாரபாயி, மோகனாசாகேப் ஆகியோரைத் திருமணம் செய்து கொண்டார்.[10] இவரால் சேர்த்துக் கொள்ளப்பட்டவர் நால்வர் ஆவர்.

---

3 என். சீனிவாசன். **குலவிளக்கு தீபாம்பாள்**, ப. 3.

4. வீ. சீனிவாசாச்சாரி, **போன்ஸ்லே வம்ச சரித்திரம்**, ப 79.

5. கே. எம். வேங்கடராமையா, **மு. கா. நூல்**, ப. 19.

6. எஸ். இராஜலெட்சுமி. 'பாவாசாகேப் அல்லது இரண்டாம் ஏகோஜி', **சரசுவதி மகால் நூலக இதழ் தொகுதி 36**, ப 10.

7 **போன்ஸ்லே வம்ச சரித்திரம்**, ப. 19.

8. கே எம வேஙகடராமையா, **மு. கா. நூல்**, ப. 22.

9 **போன்ஸ்லே வம்ச சரித்திரம்**, ப. 80

10 **மேலது**. ப 125.

இரண்டாம் துளஜாவின் மனைவியான மோகனபாயிக்கு அப்துல் பிரதாபசிம்மர் 1778இல் பிறந்தார். இவர் ஒருவரே ஆண் குழந்தையாக இருந்தமையால் இவரை மற்ற அரசமாதேவிகளும் தங்கள் குழந்தையாகவே போற்றி வளர்த்தனர். இரண்டாம் துளஜாவின் மனைவி இராஜகுமாரபாய் என்பவருக்கு அபரூபாயி என்ற மகளும் உண்டு. இந்த அபரூபாயிக்கு மாருதிசாமி என்ற ஒரு பிள்ளையும், சாந்தாபாயி என்ற மகளும் பிறந்தனர். இவர்களை விட்டு அபரூபாயி இறந்து போனார். இவ்விரு குழந்தைகளும் அப்துல் பிரதாபராஜா இறந்த ஆண்டிலேயே இறந்தனர். தமக்குப் பின் அரசாளப் பிறந்த மகன் இறந்து விட்டதால் தம் தாயாதிகளுக்குள் ஒருவராகிய சரபோஜியைத் தத்தெடுத்துக் கொண்டார் என்பதைக் கி. பி. 1784க்குரிய குறிப்பு தெரிவிக்கிறது.[11] திரௌபதாம்பாபாய் சாகேப் இரண்டாம் துளஜாவின் தாய் ஆவார்.

கி. பி. 1787-1798 வரை ஆண்ட அமர்சிங்கிற்குக் கி. பி. 1776இல் கிருஷ்ணாம்மாபாய் திருமணம் செய்விக்கப்பெற்றார். இவரது இரண்டாவது மனைவி பார்வதிபாயி ஆவார்.[12] மற்றொரு மனைவி பவானிபாய் ஆவர். யமுனாபாய் என்பவர் அமர்சிங்கரின் மகளாவார்.

கி. பி. 1832-1855 வரை ஆண்ட கடைசி சிவாஜி ஒரே நாளில் 17 பாயிமார்களைத் திருமணம் செய்து கொண்டார். சென்னைப் பட்டணம் உச்சநீதி மன்றத்தில் காமாட்சியம்பாபாயி சாயேப் கும்பினியாரையும். மற்ற பாயிமார்களையும் பிரதிவாதிகளாக்கி கி. பி. 1857இல் ஒரு வழக்குத் தொடுத்தார். நார்ட்டன் என்ற வழக்கறிஞர் ஒப்பமிட்டுள்ள 20-04-1857 தேதியிட்ட ஓராவணத்தில் பின்வரும் 10 பாயிமார்கள் பெயர்கள் உள்ளன.

1.	சையம்பாபாய்	6.	ராஜகுமாரம்பாபாய்
2.	உமாம்பாபாய்	7.	சுகுணாம்பாபாய்
3.	ஜயதம்பாபாய்	8.	அபரூபாம்பாபாய்
4.	ஜிகாயிபாயி	9.	யசவந்தம்பாபாய்
5.	தீபாம்பாபாய்	10.	அனசம்பாபாய்

ஆகியோர் ஆவர்[13]

காமாட்சிபாய் சாகேப்

> “இரண்டாம் கல்யாணம் மாப்பிள்ளை எசவந்தராவ் ராமச்சந்திரராவ் சூர்வே பெண் காமாட்சியம்பா கல்யாணம்’’[14]

என்ற குறிப்பின் மூலம் கடைசி மன்னராகிய கடைசி சிவாஜியின் பட்டத்தரசி காமாட்சிபாய் சாகேப் என்றறியமுடிகிறது. இவர் காலத்தில் சரசுவதி மகால் நூல்

11 **சரசுவதி மகால் மோடித் தமிழாக்கம் தொகுதி 2.**

12. கே. எம். வேங்கடராமையா, **மு. கா. நூல்**, ப 27

13 **மேலது**, ப 33

14. **மேலது**, ப. 316.

நிலையத்தைச் சென்னைக் கீழ்த்திசைச் சுவடியகத்தில் சேர்க்க வேண்டுமென்று அந்நாளில் கருதினர். அப்பொழுது காமாட்சிபாய் சாகேப் ஜான்புரூஸ் மார்ட்டன் வழி வழக்காடி இந்நூலகத்தைச் சென்னைக்கு மாற்றாமல் தஞ்சாவூரிலேயே இருக்குமாறு செய்தார். இதற்காகக் காமாட்சிபாய் சாகேபுக்கு ஆராய்ச்சியுலகு நன்றி செலுத்தும் கடப்பாடு உடையது.[15]

உடன்கட்டை என்ற சதி

கணவன் இறந்த பின், மனைவி உடன் உயிர் நீப்பதற்கு உடன்கட்டை ஏறுதல் என்று பெயர் இதனைச் 'சதி' என்றும், 'சககமனம்' என்றும் கூறுவர்.

தஞ்சை மராத்தியர் காலத்தில் மராத்திய அரசர்களின் மாதேவிகளில் சிலர் உடன்கட்டை ஏறினர் என்று போன்ஸ்லே வம்ச சரித்திரம் கூறுகிறது. மேலும் 1728-1829 வரை தஞ்சாவூரில் நடைபெற்ற உடன்கட்டை ஏறிய சில பெண்களைப்பற்றி மோடி ஆவணம் மூலம் அறியமுடிகிறது.

முதலாம் சரபோசி 1710 முதல் 1728 வரை ஆட்சி செய்து இறந்தபோது அவருடைய மூன்று மனைவிகளில் சுலட்சணாபாயி சாகேபும், ராஜஸபாயி சாகேபும் உடன்கட்டை ஏறினர் என்பதைச் சான்றுகள் மூலமாக அறியமுடிகிறது.[16]

கி பி. 1739 முதல் 1763 வரை ஆட்சி செய்தவர் பிரதாபசிங்கர் ஆவர். அவருக்கு மனைவியர் ஐவரில் மன்னர் சகம் 1763இல் இறந்தபொழுது அவருடைய மூன்றாவது மனைவியான யமுனாபாயி சாகேபும், ஐந்தாவது மனைவியான சக்வார்பாயி சாகேபும் உடன்கட்டை ஏறினர் என்பதைச் சான்றுகள் மூலம் அறியமுடிகின்றன.[17]

1735இல் துளஜா மன்னர் இறந்தபோது அவரது மனைவி இராசகுமாரம்பா உடன்கட்டை ஏறினார் என்றொரு குறிப்புரையும் காணப்படுகிறது. ஆனால் இச்செய்தி போன்ஸ்லே வம்ச சரித்திரத்தில் குறிப்பிடப்படவில்லை.

அமர்சிங்கர் கி. பி. 1802இல் இறந்தபொழுது அவரது இரண்டு மனைவியர் ஈமத்தீ புகுந்து உயிர் மாய்ந்தனர் என்று கூறப்படுகிறது.[18]

அரசியல் பணிகள்

தீபாம்பாள்

ஏகோஜி மன்னர் தஞ்சாவூரை ஆட்சி செய்தபோது ஏகோஜிக்கும் அவரது சகோதரர் சிவாஜிக்குமிடையே கருத்து வேறுபாடு தோன்றியது. அறிவுக் கூர்மையும், திறமையும் பெற்ற தீபாம்பாள் தம் கணவரிடம் 'சிவாஜியுடன் ஓர் உடன்படிக்கை' செய்து கொள்ள வேண்டுமென்று கூறி ஏகோஜியை இசைவு பெறச் செய்தார். ஏகோஜி தீபாம்பாளிடம் ஆலோசனையைப் பெறாமல் இருந்திருந்தால் சகோதரர்களிடையே

15. **தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக் கருத்தரங்கு**. 1983. ப 5
16 கே எம் வேங்கடராமையா, **மு. கா. நூல்**, ப. 317.
17 **போன்ஸ்லே வம்ச சரித்திரம்**, ப 116
18 கே எம் வேங்கடராமையா **மு. கா. நூல்**, ப 318

ஏற்பட்ட மனக்கசப்பான காரணத்தினால் போர் ஏற்பட்டிருக்கலாம். இரு திறத்தினருக்கும் நன்மை ஏற்படும் ஆலோசனையைக் கூறிய பெருமை தீபாம்பாளையே சாரும்.

சுஜான்பாய்

தம் கணவர் இரண்டாம் ஏகோஜி இறந்தபின் சுஜான்பாய் சுதந்திரமாகத் தஞ்சாவூரை ஆண்டார். இவர் ஆண் உடை தரித்து உடைவாள் ஏந்திக் கர்நாடக நவாப் தஞ்சாவூர் மீது படையெடுத்தபோது எதிர்த்து நின்று தானே கோட்டைக் காவலுக்கு வந்தார். கோட்டையை முற்றுகையிட்ட எதிரிகளோடு போரிட்டார். ஆனால் இறுதியில் கோட்டையைக் காவல் செய்த சில தளபதிகளும், சந்தாசாகிபின் மாமனாரான ஆற்காட்டு நவாபும் சேர்ந்து சதி செய்து இவரைச் சிறை செய்து கொன்றனர்.[19]

காமாட்சிபாயி

சிவாஜி ஒரே நாளில் 17 பெண்களை மணம் செய்து கொண்டார். ஆனால் யாருக்கும் குழந்தை பிறக்கவில்லை. அதன் பிறகு 1854இல் சிவாஜி அப்போது சென்னை மாகாணத்தின் ஆளுநராய் இருந்தவரிடம் லோகண்டேராவ் என்பவரை அனுப்பிச் சரபோசியின் மகள்வழிப் பேரனைத் தத்தெடுக்க அனுமதி தருமாறு கேட்டனுப்பி வைத்தார்.

கி. பி. 1855ஆம் ஆண்டு கடைசி சிவாஜி இறந்த பின்பு அரசியாயிருந்த காமாட்சியம்பாபாயி தனக்கு அரசுரிமை வேண்டுமென ஆங்கில அரசுக்கு எழுதினார்.[20] ஆனால் ஆங்கிலேயர் தஞ்சாவூர் அரசை முழுமையாகத் தம் ஆட்சியின்கீழ்க் கொணர்ந்தனர். எனவே காமாட்சியம்பாபாயி சாகேப் கும்பினியாரையும் மற்றப் பாயிமார்களையும் பிரதிவாதியாக்கி 20-04-1857இல் நார்ட்டன் என்ற ஆங்கிலேய வழக்கறிஞரைக் கொண்டு வழக்குத் தொடுத்தார். நீண்ட நாள்களுக்குப் பிறகு ஆங்கில அரசு தனது தீர்மானத்தில் அரசு பரம்பரைக்கு உரிய கிராமங்கள், எஸ்டேட், சொத்துகள், சரசுவதி மகால், அரண்மனை, தர்பார் மண்டபம் ஆகியவைகளை விதவை அரசியான காமாட்சிபாய் சாகேப் சந்ததிக்கு உடைமை என்று கூறினர் எனக் கே. எம். வேங்கடராமையா கூறுகின்றார்.[21]

மற்ற விதவை மனைவியருடன் கலந்தாலோசித்து அரசி காமாட்சியம்பாபாய் சாகேப் சரபோசியின் மகள் சக்வாரம்பாபாயின் மகனான சரபோசி அரசரைத் (மூன்றாம் சரபோசி) தத்தெடுத்துக் கொண்டார்.

காமாட்சிபாய் 1863இல் தத்தெடுத்தபோது ஜாதகர்மம், நாமகர்மம், அன்னப்பிரசானம் போன்ற சடங்குகளைச் செய்தார்.

---

19 **தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக் கருத்தரங்கு**. 1983. ப. 3.

20 பா. சுப்பிரமணியன் (ப. ஆ.). **தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் தொகுதி 2**. ப. 14.

21. கே எம். வேஙகடராமையா. **மு. கா. நூல்**. ப. 17.

> "காமாட்சிபாயி தனது சுவீகார புத்திரனுக்காக செளல சூரிகா பந்தனம் செய்ததற்கான தட்சணை செலவுகள் பற்றிய விபரம்"[22]

என்ற குறிப்பின் மூலம் இதை அறியமுடிகிறது.

பிற அரசியர்

பிரதாபசிம்மரின் மனைவி திரௌபதாம்பாபாயி கி. பி. 1798இல் சரபோசிக்கு அரசுரிமை கிடைக்க வழி செய்தவர் ஆவார். பிரதாபசிம்மரின் மனைவி யமுனாபாய் சாகேப், சக்குவார்பாயி சாகேப், மற்றும் இரண்டாம் சரபோசி மன்னரின் அகல்யாபாய் சாகேப் ஆகியோரின் அரசியல் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

சமயப் பணிகள்

அரசியர்கள் அனைவரும் அரசியல் பணிகளைவிடச் சமயப் பணிகளில் அதிகமாக ஈடுபட்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. அதிலும் கோயிலுக்கென்று பல தானங்களையும், அணிகலன்களையும் கொடுத்துள்ளனர் என்பதை உணரமுடிகிறது. அரசியர்களில் பலர் அறக்கொடைகளைச் செய்துள்ளமையை மோடி ஆவணச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.[23]

> "1756ல் லக்ஷ்மிபாயி சாயேப்புக்கு 'ஸர்வமான்யம்' அக்ரஹாரத்திற்கும் தர்மத்துக்கும் மாதிரி மங்கலம் வகையறாவில் 13¾ வேலி ½ மா"

என்ற குறிப்பினால் பிரதாபசிம்மர் தம் மாற்றாந்தாய்களுள் இலட்சுமிபாய்க்குத் தருமம் செய்ய நிலங்கள் அளித்த செய்தி தெரிகிறது.[24]

இராஜகுமாரம்பாபாயி சாகேப் இராஜகுமாரம்பாபுரம் சத்திரத்திற்கருகில் அக்கிரகாரம் கட்டினதற்குப் பாக்கி சக்கரம் 1798-8-3 என்ற குறிப்பின் மூலம் இராஜகுமாரம்பாயி அக்கிரகாரம் கட்டியது தெரிய வருகிறது.[25]

கார்த்திகைத் திங்களில் சோமவார விரதத்தைக் காமாட்சிபாய் சாகேப் கொண்டாடியதாக ஓராவணம் கூறுகிறது. இந்த விரதம் கார்த்திகை மாதம் 4ஆவது திங்கட்கிழமையில் இருப்பது மரபு. இன்றளவிலும் மக்கள் இந்த விரதத்தைப் பின்பற்றி வருகின்றனர்

கி பி 1883ஆம் ஆண்டு புன்னைநல்லூரில் உள்ள கோதண்டராம சுவாமி கோயிலிலுள்ள கொடிக்கம்பம் முழுவதும் பித்தளைத் தகட்டால் போர்த்தப்பெற்று அலங்கரிக்கும் பணியைக் காமாட்சிபாய் சாகேப் செய்துள்ளார்.[26] மேலும் இதே கோயிலில் ஓவியங்கள் பொருந்திய மண்டபமும் அமைத்து 9 சிறிய கட்டிடங்களையும் அமைத்துள்ளார். இக்கோயில் ராஜகோபாலசுவாமி கோயிலுக்குள்ளேயே உள்ளது.[27]

---

22 பா. சுபபிரமணியன் (ப ஆ). **மு. கா. நூல் தொகுதி 2**. ப 526.

23 **மேலது, தொகுதி 1**. ப. 324.

24 **போன்ஸ்லே வம்ச சரித்திரம்**. ப. 81

25 பா சுப்பிரமணியன் (ப. ஆ). **மு. கா. நூல் தொகுதி 1** ப 52

26 கே எம் வேங்கடராமையா **மு. கா. நூல்** ப. 315.

27 **தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக் கருத்தரங்கு** 1983. ப. 3

இரண்டாம் சரபோசியின் மனைவி அகல்யாபாய் சோமவார அமாவாசையைக் கொண்டாடினார்.[28] சுலக்ஷணாம்பாபாய் சாகேப் சுலக்ஷணாம்பாபுரம் அக்கிரகாரத்தின் பிராமணர்களுக்கும், கோயிலுக்கும் திருவிடைமருதூரில் அக்கிரகாரம் கட்டி அதற்குச் சுலக்ஷணாம்பாபூர் என்று பெயரிட்டுத் தமக்குச் சொந்தமான கோட்டூர்த் தோட்டத்தைக் கி. பி. 1842இல் தானம் செய்தார்.

அல்லாப் பண்டிகைக்குப் பகீர்களுக்குச் சைதம்பாபாயி சாகேப் ரூ 30; காமாட்சியம்பாபாயி சாகேப் ரூ 25; சுலக்ஷணாபாயி ராஜேசாகேப் ரூ 10; சக்வாரம்பாபாயி ராஜே ரூ 10 ஆக ரூ 105 கொடுக்கப்பட்டது என்பதிலிருந்து அரசியர் அனைத்துச் சமயத்தினருக்கும் நன்கொடை வழங்கினார் என்று தெரிகிறது.[29]

அரசியர்களின் பெயரில் அமைந்த சத்திரங்கள்

பாயி சாகேப்களின் பெயர்களிலேயே சத்திரங்கள் அமைக்கப்பட்டன. இவ்வாறாகப் பாயிசாகேப்களின் பெயர்களில் அமைந்த சத்திரங்கள் 13. சத்திர நிர்வாகம் பாயிசாகேப்களிடமே இருந்தது. இவற்றில் மிகப் பழமையானது எனக் கூறத்தக்கது முதலாம் துளஜாவின் மனைவி பெயரில் அமைந்த இராஜகுமாரபாயி சத்திரம் ஆகும். இதன் பின்னர்ப் பிரதாபசிங்கர் காலத்தில் சக்வாரம்பா சத்திரம் திருபுவனத்திலும், யமுனாம்பா சத்திரம் நீடாமங்கலத்திலும், திரௌபதாம்பா சத்திரம் மனல்மேற்குடியிலும், இரண்டாம் துளஜாவின் காலத்தில் இராஜகுமாரம்பா சத்திரம் மீனமேசலிலும், மோகனாம்பா சத்திரம் இராஜா மடத்திலும், இராசசாம்பா சத்திரம் தாராசுரத்திலும், உமாபாயி சத்திரம் மகாதேவபட்டணத்திலும் அமைக்கப்பட்டன.[30] இரண்டாம் சரபோசியின் காலத்தில் முக்தாம்பாள்புரம் சத்திரம் ஒரத்தநாட்டில் கட்டப்பட்டது. அரசியர்களின் பெயர்களில் கட்டப்பட்ட சத்திரங்களிலேயே மிகப்பெரிய சத்திரமாகத் திகழ்வது முத்தாம்பாள் சத்திரமாகும். இச்சத்திரம் 1800இல் கட்டப்பட்டதாகும். சரபோசி மன்னரின் ஆசைநாயகியாகிய முத்தாம்பாள் இறக்கும் தறுவாயில் தன் பெயரால் ஓர் அன்ன சத்திரம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் பெயரால் முத்தாம்பாள் சத்திரம் நிறுவப்பட்டது.[31] கடைசி சிவாசியின் காலத்தில் சைதம்பா சத்திரம் சூரக்கோட்டையிலும், அகல்யாபாயி சத்திரம் மல்லியத்திலும், பஞ்சநத மோகனாம்பாள் சத்திரம் திருவையாற்றிலும் கட்டப்பட்டன. பள்ளியக்கிரகாரத்தில் இலட்சுமிராசபுரம் சத்திரமும் கட்டப்பட்டது.[32]

முடிவுரை

இவ்வாறாகத் தஞ்சை மராத்திய அரசியர்களைப் பற்றிய குறிப்புக்கள் மோடி ஆவணங்களில் காணப்படுகின்றன. அரசியர்களின் பணிகள் குறிப்பிடத்தக்கவை. அரசர்களைப் போன்று அரசியர்களும் மராத்தியர் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளனர் என்பதை ஆவணச் சான்றுகள் மூலம் அறியமுடிகின்றன. □

---

28 பா. சுப்பிரமணியன் (ப. ஆ.). **மு. கா. நூல்.** ப. 131.
29 கே. எம். வேங்கடராமையா. **மு. கா. நூல்.** ப. 209.
30 பா. சுப்பிரமணியன் (ப. ஆ.). **மு. கா. நூல்.** ப. XXII.
31 கே. எம். வேங்கடராமையா. **மு. கா. நூல்.** ப. 181.
32. பா. சுப்பிரமணியன் (ப. ஆ.). **மு. கா. நூல்.** ப. XXII.

ஆ. வேலுசுவாமி சுதந்திரன்,
த. தனவதி
தமிழ்ப்பல்கலைக்கழகம்

காஸ்யப சில்ப சாஸ்திரம்

சரசுவதி மகால் நூல் நிலையத்திலிருந்த சுவடியை ஆதாரமாகக் கொண்டு இந்நூல் சுப்பிரமணிய சாஸ்திரியாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு எழுதப்பட்டதாகும். தொண்ணூற்று இரண்டு படலங்களைக் கொண்ட இந்நூலில் ஒன்று முதல், நாற்பத்தைந்து படலங்கள் முதலாவது பாகமாகவும், நாற்பத்தாறு முதல் தொண்ணூற்று இரண்டு படலங்கள் இரண்டாவது பாகமாகவும் இடம் பெறுகிறது

முதலாவது படலத்தில் உத்தம, மத்திம, அதம பூமி இலக்கணம் கூறப்படுகிறது ஒரு முழம் அகலம், ஒரு முழம் நீளம், ஒரு முழம் தாழத்திற்கு, மண்ணைத் தோண்டிக் குழி எடுக்க வேண்டும். பிறகு, சிறிது நேரம் கழித்து, வெளியே எடுத்த மண்ணைக் கொண்டு அக்குழியை நிரப்ப வேண்டும். குழி நிரம்பியும் மண் மீதி வந்தால், அப்பூமி உத்தமமான பூமியாகும். இப்பூமிப் பகுதியையே, வீடுகள், அரண்மனைகள், கோயில்கள் கட்டுவதற்குத் தேர்ந்தெடுப்பர். அவ்வாறு கட்டப்பட்ட கோயில்களே இன்று நில நடுக்கத்தையும், புயலின் வேகத்தையும் தாங்கி, இன்றும் சிறந்த நிலையில் காட்சி தருகிறது. தோண்டி எடுத்த மண், குழியைச் சமமாக மூடினால் அப்பூமி, மத்திமம் பிரிவைச் சாரும். இப்பூமியையும் தேர்ந்தெடுப்பதில் தவறில்லையென்று குறிப்பிடுகிறது. தோண்டி எடுத்த மண், குழியை நிரப்பாமல் இருந்தால் அப்பூமி அதமம் பிரிவைச்சாரும். இப்பூமியை எந்தக் காரியத்திற்கும் பயன்படுத்தக் கூடாது.

விவசாயம் செய்வதற்குரிய நிலத்தைத் தேர்ந்தெடுப்பதையும் இந்நூல் விவரிக்கிறது. விதைத்த நெல், மூன்று நாளில் முழைத்தால் அப்பூமி உத்தமம் பிரிவைச்சாரும். அந்நிலத்தையே விவசாயத்திற்கேற்ற நிலமாகக் கருத வேண்டும். நான்கு நாள் கழித்து முளைத்தால் அப்பகுதி மத்திமம் பிரிவைச் சாரும். ஐந்து நாள் கழித்து முளைத்தால் அப்பூமி அதமம் பிரிவைச் சாருமெனலாம்.

நாற்பத்தைந்தாவது படலத்தில் கோபுர இலக்கணம் விளக்கப்படுகிறது. துவார சோபை, துவார சாலை, துவார பிரஸாதம், துவார கர்மியம், துவார கோபுரம் என ஐந்து விதமான கோபுரங்கள் விளக்கப்படுகின்றன. துவார சோபை என்பது, ஒன்று முதல் மூன்று நிலைகளைக் கொண்டதாகும். நான்கு நிலைகளைக் கொண்டது துவார சாலையாகும். ஐந்து நிலைகளைக் கொண்டது துவார பிரசாதமாகும். ஆறு நிலைகளைக் கொண்டது துவார கர்மியம் எனப்படும். ஏழு நிலைகளைக் கொண்டது துவார கோபுரமாகும். பல்லவர் காலக் கோயில்களில் மூன்று நிலைகளைக் கொண்ட, துவார சோபையைப் பார்க்கலாம். சோழர் காலத்தில் ஏழு நிலைக் கோபுரங்கள் தோன்றின.

பாண்டியர், விசய நகர நாயக்கர் காலங்களில் பதின் மூன்று நிலைகளைக் கொண்ட கோபுரங்கள் தோன்றின. ஆனால் அக்கோபுரங்கள் எந்தவிதப் பிரிவைச் சார்ந்ததென்பதை, இந்நூல் குறிப்பிடவில்லை. மேலும், இந்நூல், கோபுர அதிஷ்டானமானது, உபபீடத்தினுடனோ அல்லது உபபீடம் இல்லாமலோ இருக்கலாமென்று குறிப்பிடுகிறது. இன்றும் கோயில்களில் உபபீடத்துடனும், உபபீடம் இல்லாமலும் கோபுரங்களைப் பார்க்கலாம். பிற்காலத்துக் கோயில்களில், உபபீடத்துடன் கூடிய கோபுரங்கள் இடம் பெறுகின்றன. உபபீடத்துடன் காட்சி தரும் கோபுரத்திற்குச் சிறந்த உதாரணமாக மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருவாரூர், சிதம்பரம், திருவண்ணாமலை, திருவானைக்காவல், ஸ்ரீரங்கம் கோயில்களின் வெளிக் கோபுரங்களைக் குறிப்பிடலாம்.

பல சிற்பங்களின் அளவு முறைகளையும், படிமக்கலைக் கூறுபாடுகளையும் இந்நூல் விவரிக்கிறது. பல கோயில்களில் இடம்பெறும் சிற்பங்கள், இந்நூல் குறிப்பிடும் அளவு முறைகளின் அடிப்படையில் தோன்றியதால், இன்றும் கலையழகு குன்றாது காட்சி தருகிறது. இந்நூல் குறிப்பிடும் பல இலக்கணங்கள் அக்காலக் கணித அறிவை வெளிப்படுத்துகிறது. சிறந்த உதாரணமாக, உத்தம நவதால இலக்கணம், மத்தியம நவதால இலக்கணம், அதம நவதால இலக்கணம், அஷ்டதால இலக்கணம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சோமாசுகந்த மூர்த்தியில் இடம்பெறும் சிவன் பார்வதி, கந்தன் உருவங்களின் அளவுகளையும் படிமக்கலைக் கூறுபாடுகளையும் இந்நூல் குறிப்பிடுகிறது. தேவியின் இரண்டு கைகளிலும் மலர்களோ, அல்லது இடது கை கடக ஹஸ்தமாகவோ சிம்ம கர்ணமாகவோ அமைந்து வலது கை மலரையோ அல்லது மாம்பழத்தையோ பிடித்திருக்கலாமென்றோ குறிப்பிடுகிறது. கோயில்களில் குறிப்பிடும் பெரும்பாலான சோமாசுகந்தச் சிற்பங்கள், இந்நூல் குறிப்பிடும் சிற்ப இலக்கணத்தைத் தன்னகத்தே கொண்டு காட்சி தருகிறது. இருப்பினும் சில வேறுபாடுகளைச் சில சிற்பங்களில் பார்க்கலாம். திருப்புகலூர் அக்னீசுவரர் கோயிலில் இடம்பெறும் சோமாசுகந்த மூர்த்தி செப்புத் திருமேனியில், தேவியின் கை பீடத்தின் மீது ஊன்றிய நிலையில், நந்தியைப் பிடித்திருக்கிறது. நந்தி இடம் பெறவேண்டுமென்று இந்நூல் எங்கும் குறிப்பிடவில்லை. இப்புதுமைக்குக் காரணம், அக்கோயில் புராணச் செய்தியாகும். இராமபிரானுக்கு, சிவனை வழிபடுவதற்கு, நந்தி தடையாக இருந்ததால், பார்வதி நந்தியைக் கையில் பிடித்து வைத்துக் கொண்டாள். இப்புராணக் கருத்தே, இப்புதுமையான சிற்பத்திற்குக் காரணமாகும். இவ்விதி விலக்குகள் குறித்து இந்நூல் எந்த விளக்கமும் கொடுக்கவில்லை சந்திர சேகரமூர்த்தி, நிருத்தமூர்த்தி, ரிஷபவாகனமூர்த்தி போன்ற தெய்வ வடிவங்களின் இலக்கணங்களும் இந்நூலில் இடம் பெறுகிறது.

இந்நூலில் கூறப்படும் அளவு முறைகளைக் கையாண்டு தெய்வத் திருமேனிகளை உருவாக்கினால், சிற்பங்கள் கலையழகும், தெய்வீக வடிவமும், சக்தியும் பெறுமெனலாம். இந்நூல் குறிப்பிடும் அளவு முறைகள், எந்த நூற்றாண்டிற்கும் பொருந்துமெனலாம். தொண்ணூற்றொன்றாவது படலத்தில் பக்த இலக்கணம் குறிப்பிடப்படுகிறது. பக்தர்கள் விபூதி உத்திராட்ச மாலை அணிய வேண்டுமென்று இந்நூல் வலியுறுத்துகிறது. உத்திராட்ச மாலையணிதல், உடம்பிற்கு

நல்லதென்று விஞ்ஞானிகள் குறிப்பிடுவதை இங்குச் சுட்டிக் காட்டுவது பொருத்தமுடையதாகும். எண்பத்தொன்பதாவது படலத்தில். பலவித வர்ணங்களையும் உருவாக்கும் முறை விவரிக்கப்படுகிறது.

பலவிதக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட இந்நூல் என்றென்றைக்கும் மனித சமுதாயம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகும். இந்நூலில் குறிப்பிடும் அளவு முறைகளையே பிற சிற்ப சாஸ்திர நூல்களும். ஆகமங்களும் குறிப்பிடுவது. இந்நூலுக்கு மற்றுமொரு பெருமை சேர்க்கிறது.

இந்நூலில் குறிப்பிடப்படும். கருத்துகளுக்கு முன்னோடியாக. தமிழ் இலக்கியங்கள் விளங்கின என்ற கருத்துமுண்டு. கட்டடங்கள் கட்டுவதற்குத் தேர்ந்தெடுக்கும். நல்ல பூமியின் இலக்கணத்தை நாலடியாரும் குறிக்கிறதென்ற கருத்துமுண்டு சங்க நூலான திருமுருகாற்றுப்படையில். ஆறுமுகங்களும். பன்னிருகைகளும் கொண்ட முருகப் பெருமானின் வடிவம் விளக்கப்படுகிறது. பன்னிரண்டு கைகளிலும் என்னென்ன ஆயுதங்கள் இடம் பெறுகிறதென்பதையும் இந்நூல் விவரிக்கிறது. இன்றும் பல கோயில்களில் இடம் பெறும் முருகப் பெருமான் சிற்பங்களில். இத்தகு ஆயுதங்கள் இடம் பெறுகின்றன. சிறந்த உதாரணங்களாகத் திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் கோயில். தஞ்சைப் பெரிய கோயில் திருச்சுற்றில் இடம் பெறும் முருகன் கோயில் சிற்பங்களைக் குறிப்பிடலாம். சிலப்பதிகாரத்தில் கொற்றவையின் வடிவம் விவரிக்கப்படுகிறது. துர்க்கையின் ஊர்தியாக மான் விளக்கப்படுகிறது. சென்னைப் பல்கலைக்கழகத் தொல் பொருள் துறையில் மானை ஊர்தியாகக் கொண்ட தூர்க்கையின் சிற்பம் (கல்) இடம் பெறுகிறது.

இந்நூல் தோன்றுவதற்குத் தமிழ்ப் பக்தி இயக்கம் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும் ஏனெனில் தேவார பக்தி இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தெய்வ வடிவங்களே இந்நூலில் அதிகமாக இடம் பெறுகின்றன. கால சம்ஹார மூர்த்தி. கஜசம்ஹார மூர்த்தி. சந்திர சேகர மூர்த்தி போன்ற வடிவங்களை உதாரணமாகக் கூறலாம்

தமிழ் இலக்கியக் கருத்துக்கள் இடம் பெற்றபோதிலும். இந்நூல் வடமொழியில் எழுதப்பட்டதற்கான காரணம். அந்தக் கால கட்டத்தில் வடமொழிக்கு. மன்னர்களின் ஆதரவு இருந்தமையேயாகும். மேலும் வடமொழிப் புராணங்களில் குறிக்கப்படும் அதிகமான கதைகளையொட்டிப் படிமக்கலைக் கூறுபாடுகள் எழுதப்பட்டிருக்கின்றன. சாதிகளுக்கேற்ப நிலங்களைப் பிரித்துக் காட்டுமொன்றே. இந்நூலின் குறையாகக் கருதலாமே தவிர வேறொரு குறைபாடும் இந்நூலில் இல்லையென்றே கருதலாம்.

☐

ப. பெருமாள்
கன்சர் வேட்டர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

சுவடிப் பாதுகாப்பில் வளர்ந்து வரும் தொழில் நுட்ப முறைகள்

நம் முன்னோர்கள் தங்களது கருத்துக்களையும் அனுபவத்தினையும் மற்றவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் பாறைகளிலும், குகைச் சுவர்களிலும் சித்திரங்களாகவும், எழுத்துக்களாகவும் எழுதி வைத்தார்கள். பின்னர் நாகரிக வளர்ச்சியினால் எளிதாகக் கையாளக் கூடிய எழுது பொருட்களான செங்கல், ஓட்டுச் சில், உலோகத் தகடுகள், தாவரப் பொருட்கள், மரப் பலகை, மரப் பட்டை, பனை ஓலை, பேப்பைரஸ் என்ற கோரைப் புல், மூங்கில் தப்பைகள், துணிகள் மற்றும் மிருகங்களின் தோலினாலான பொருட்கள், சங்கு, சிப்பிகள், எலும்பு, தந்தம் போன்றவற்றைப் பயன்படுத்தினார்கள். இப்பொருட்கள் எப்பகுதியில் அதிகமாகக் கிடைத்தனவோ அப்பகுதியில் பயன்படுத்தப்பட்டன. காகிதம் கண்டுபிடித்த பின், அதில் எழுதுவதும், கையாளுவதும் எளிதாக இருப்பதால் காகிதத்தின் பயன்பாடு அதிகமாயிற்று. இதனால் மற்ற பொருட்களில் எழுதும் வழக்கம் மறையத் தொடங்கியது. காகிதத்தைப் பயன்படுத்திச் சுவடிகள், ஆவணங்கள், புத்தகங்கள் வெளிவரத் தொடங்கின.

கி. பி. 325இல் இந்தியாவிற்கு அலெக்ஸாண்டர் படையெடுத்து வந்த பொழுது அவருடன் வந்த கிரேக்க எழுத்தாளர் ஹிகர்டஸ், அவருடைய படைப்புகளில் இந்தியாவில் காகிதத்தின் பயன்பாடு இருந்ததாகவும், அது பருத்தியை மூலப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகிறார். இது சீனக் காகிதத் தயாரிப்பு முறையிலிருந்து மாறுபட்டது. ஆனால் தொடர்ந்து காகிதம் பயன்படுத்தாததாலும், இந்தியாவின் தட்பவெப்ப நிலையின் காரணத்தாலும் எழுதப்பட்ட காகிதங்கள் காணக் கிடைக்கவில்லை. ஆகையால் முதன் முதலில் கி. பி. 105இல் காகிதம் தயாரித்த பெருமை சீனாவை அடைந்தது. சீனர்கள் காகிதம் தயாரிக்கும் முறையை மற்றவர்களுக்குத் தெரியாமல் பாதுகாப்பாக வைத்திருந்தனர். காகிதம் தயாரிக்கும் முறை சீனப் பண்பாட்டுடன் கி. பி. 345இல் கொரியாவுக்கும், கி. பி. 610இல் ஜப்பானுக்கும் பரவிற்று. கி. பி. 8ஆம் நூற்றாண்டிற்குப் பின் காகிதம் தயாரிக்கும் முறை மற்ற மேலை நாடுகளுக்கும், கி. பி. 12ஆம் நூற்றாண்டிற்குப் பின் முகமதிய மன்னர்களால் இந்தியாவிலும் பரவியது. உலகின் பல நாடுகளிலும் காகிதம் தயாரிக்கும் முறை பரவினாலும் இடத்திற்கு ஏற்றவாறு மூலப் பொருட்களும், செய்யும் முறையும் மாறுபட்டன. அறிவியல் வளர்ச்சியினால் தேவைக்குத்தக்க இயந்திரக் காகிதங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

பொதுவாகக் காகிதங்களை, அதன் மூலப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. பருத்தி வகைக் காகிதம்
2. தாவரப்பட்டையில் உள்ள நார்ப் பொருள் வகைக் காகிதம்
3. புல், மூங்கில் வகைக் காகிதம்
4 மரக்கூழ் வகைக் காகிதம்

ஆகும்.

தொடக்க காலங்களில் காகிதங்கள் கையால் செய்யப்பட்டன ஆனால் அறிவியல் வளர்ச்சியின் பயனாகக் கி பி. 1795இல் நிக்கோலாய் லூயிராபர் என்பவர் காகிதம் தயாரிக்கும் எந்திரத்தைக் கண்டுபிடித்தார் அதனால் காகிதத்தின் தேவை அதிகமாயிற்று. காகிதத்தின் தேவைக்காக வெவ்வேறு மூலப் பொருட்களும், அதிக வேதிமப் பொருட்களும் பயன்படுத்தப்பட்டன ஆகையால் இயந்திரக் காகிதங்கள் விரைவில் அழிவதற்குக் காரணமாயின

காகிதத்தில் எழுதுவதற்குத் தொடக்க காலங்களில் மூங்கில், நாணல்களில் செய்யப்பட்ட பேனா அல்லது பறவைகளின் இறகுகள் பயன்படுத்தப்பட்டன முக்கியமாகக் கழுகு மற்றும் வாத்தின் இறகுகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. ஏனெனில் அவற்றின் நுனி மிகவும் கடினமாகவும், கூர்மையாகவும் உள்ளது. காகிதத்தில் எழுதுவதற்குப் பல நிற மைகள் (மசிகள்) பயன்படுத்தப்பட்டன. மை தயாரிக்கக் கடுக்காய், மருதோன்றி இலை, அவுரி இலை போன்றவை பயன்படுத்தப் பட்டன இந்தியாவில் உள்ள காகிதச் சுவடிகள் அதிகமாகக் கருப்பு மைகளில் எழுதப்பட்டன முதன் முதலில் இந்தியாவில் கருப்பு மை தயாரித்ததால் அதற்கு இந்தியன் மை எனப் பெயர் பெற்றது. இந்தியன் மையானது இலுப்பை எண்ணெய் அல்லது விளக்கு எண்ணெய் உபயோகப்படுத்தப்பட்ட விளக்கிலிருந்து கரி தயார் செய்து அவற்றில் தேவையான அளவு வேலாம்பிசின் மற்றும் மழை நீர் சேர்த்து எழுதப் பயன்படுத்தப்பட்டன சில வகை ஆவணங்களில் தண்ணீர் பட்டாலும் கரையக் கூடாது என்பதற்காக ஆவணங்களும் சுவடிகளும் கடுக்காய் மையினால் எழுதப்பட்டன இவ்வகை மை தயாரிக்கக் கடுக்காய்ச் சாற்றுடன் பேதி உப்பு, வேலாம் பிசின், மழை நீர் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது.

இவ்வாறு எழுதப்பட்ட சுவடிகள், நூல்கள் ஒருவர் கருத்தை மற்றவர்களுக்கு எடுத்துரைக்க உதவும் கருவிகளாகும் அதைத் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாக்கப் பட வேண்டும் புத்தகப் பாதுகாப்பு என்பது மனிதன் நாகரிகம் அடைந்த காலம் முதல் செய்யப்படும் செயலாகும். பாதுகாக்கும் முறை இடத்திற்கு இடம் எழுதப்பட்ட பொருள்களுக்கேற்ப மாறுபட்டன. ஆகையால் சுவடிகளைப் பாதுகாக்கச் சுவடிகளின் தன்மை, எழுதப்பட்டமுறை, பாதிக்கும் காரணிகள், கட்டுப்படுத்தும் முறை மற்றும் செப்பனிடும் முறைகளைப் பற்றி அறிந்து கொள்வது மிக அவசியமாகும் சுவடிகளைப் பாதுகாக்கத் தொடக்க காலம் முதல் பல்வேறு முறைகளையும், அறிவியல் வளர்ச்சியினால் பல்வேறு புதிய கருவிகள் மற்றும் முறைகளைக் கொண்டு சுவடிகள் பாதுகாப்பு முறை செய்யப்படுகிறது.

சுவடிகளைப் பாதிக்கும் காரணிகள்

சுவடிகளைப் பாதுகாக்க வேண்டுமெனில் அதன் அழிவுக்கான காரணிகளைப் பற்றி அறிந்து கொள்வது மிக அவசியம். சுவடிகள் அழிவதற்குச் சுவடிகள் தயாரிக்கப் பயன்படுத்தும் தரமில்லாத மூலப் பொருட்கள், தயாரிக்கும் முறை, தயாரிக்கும் பொழுது சேர்க்கப்படும் சேர்ப்புப் பொருட்கள் மற்றும் தரமற்ற மைகளைப் பயன்படுத்துவ்தால் ஏற்படுகின்றன. மற்றும் காற்றிலுள்ள தூசு, வெப்பம், ஒளி, காற்றிலுள்ள நீர், காற்றிலுள்ள வேதிமப் பொருட்கள், பூஞ்சைக் காளான்கள், பூச்சிகள் போன்ற காரணிகளால் சேத மடைகின்றன. பாதுகாப்பு என்பது இருவகைப்படும். ஒன்று சுவடிகள் சேதமுறா வண்ணம் எடுக்கப்படும் தடுப்பு நடவடிக்கைகள் மற்றொன்று பாதிப்பிற்குள்ளான சுவடிகளைச் செப்பனிடுதல் ஆகும்.

சுவடிப் பாதுகாப்பு

சுவடிகளைப் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க முதன் முதலில் சீடர்மர எண்ணெய் பயன்படுத்தப்பட்டது. அதன் பின் சுவடிகள் தூசு, வெப்பம், ஒளி, காற்றிலுள்ள நீர் போன்றவற்றின் பாதிப்பைத் தடுக்கப் பட்டுத் துணிகள் அல்லது சிவப்பு நிறத் துணிகளில் கட்டி மர அலமாரியில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. பூச்சிகளின் பாதிப்பைத் தடுக்க வசம்பு, மஞ்சள், வேப்ப இலை, சூடம் போன்ற அன்றாட நடைமுறையில் உள்ள பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. பொதுவாகச் சுவடி வைத்த அறைகளில் தூசி வரமாலும், 24°C வெப்பமும், 50 - 55% RH ஈரப் பதமும் இருக்குமாறு அமைத்தால் சுவடிகளைப் பூஞ்சைக் காளான்கள் மற்றும் பூச்சிகளின் தாக்குதலிலிருந்து தவிர்க்கலாம். ஆகையால் மேலை நாடுகளில் சுவடி மற்றும் நூல்களைப் பாதுகாக்கப் பல்வேறு அறிவியல் முறைகளும், பாதுகாப்புக் கருவிகளும் பயன் படுத்தப்படுகின்றன. அவற்றில் சிலவற்றைப் பற்றிய கருத்துக்கள் இங்குக் குறிப்பிடப் படுகின்றன.

தட்பவெப்ப நிலையைச் சமப்படுத்தல்

சுவடிகள் தேவைக்கு அதிகமான வெப்பம், குறைந்த அல்லது அதிகமான ஈரப் பதத்தினால் காகிதத்தின் உறுதித் தன்மை, பூஞ்சைக் காளான் மற்றும் பூச்சிகளினால் பாதிப்பு ஏற்படுகின்றன. பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளில் தூசு, வெப்பம் காற்றில் உள்ள ஈரப் பதங்களைக் கட்டுப்படுத்தச் சுவடிகளை வைத்திருக்கும் அறைகளில் சம தட்பவெப்பநிலை (Air conditioner) உருவாகும் கருவிகள் பொருத்தப்படுகின்றன பொதுவாகச் சுவடிகள் வைத்திருக்கும் அறையில் 50° RH ஈரப் பதம் 24°C வெப்பமும் தொடர்ந்து வருடத்தின் 24 மணி நேரமும் இருக்குமாறு அமைக்கப்படுகிறது. சம தட்பவெப்ப நிலை அறையில் உள்ள சுவடிகள், அச்சூழ்நிலையிலிருந்து மாறும் பொழுது மிகவும் சேதமடைகிறது. ஆகையால் வெப்பம் ஈரப் பதத்தினைச் சரியான அளவில் இருக்குமாறு பராமரிக்க வேண்டும்.

சம தட்பவெப்ப நிலையைப் பராமரிக்க இயலாத நிறுவனங்கள், சுவடிகள் வைத்திருக்கும் அறையைத் தெர்மோ ஹைகுரோகிராப் என்னும் கருவியைப் பயன்படுத்தித் தட்ப வெப்ப நிலை மாறுபாட்டை அறிந்து அதை நிவர்த்திக்கும் செயல்களைச் செய்கின்றன. தெர்மோ ஹைகுரோகிராப் கருவியானது ஓர் அறையில்

உள்ள வெப்பம் மற்றும் ஈரப் பதத்தினை அறிவிக்க அக்கருவியில் பொருத்தப்பட்டுள்ள வரை தாளில் வாராந்திர அல்லது மாதாந்திர அளவில் கோடுகள் வரைந்து பதிவு செய்யும். இக்கோடுகளைக் கொண்டு தட்ப வெப்ப நிலையின் மாறுதல்களைச் சரி செய்யலாம். ஓர் அறையில் வெப்பம் அதிகமாக இருந்தால் அந்த அறையில் ஹூமிடிபயர் (Humidifier) என்ற கருவியைப் பொருத்துவதன் மூலம் அவ்வறையின் வெப்பத்தைக் குறைக்க முடியும். இக்கருவியானது அறையின் காற்றை உறிஞ்சி ஈரப்பதம் அதிகமாக உள்ள காற்றை வெளியிடுகிறது. அதனால் ஈரப்பதம் சமப்படுத்தப்படுகிறது. அதுபோல் மழைக் காலங்களில் அறையில் உள்ள அதிக ஈரமான காற்றை உறிஞ்சி ஈரப்பதத்தைக் குறைக்க டி ஹூமிடிபயர் (De Humidifier) என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது.

பூச்சிகள் பூஞ்சைக் காளான்களைக் கட்டுப்படுத்தும் முறை

ஓர் அறையில் ஏற்படும் தட்ப வெப்ப நிலை மாறுபாட்டால் காற்றில் உள்ள நுண்ணுயிர்களால் சுவடிகளில் பூஞ்சைக் காளான் வளர்கிறது. இது சுவடிகளின் மீது வளர்வதால் நிற மாற்றம் மற்றும் தாள்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொள்ளும். பூஞ்சைக் காளான் பாதிப்பைத் தொடர்ந்து பூச்சிகள் சுவடிகளைப் பாதிக்கும். பூச்சிகள் (சிறு பூச்சிகள், பெரிய பூச்சிகள்) சுவடிகளைப் பாதிக்கும் பூச்சிகள் பெரிய அளவில் இருந்தால் அவற்றைச் சில வேதிமப் பொருட்களைத் தூவித் தடுக்க முடியும். ஆனால் புத்தகங்களைப் பாதிக்கும் சிறு பூச்சிகளையும், பூஞ்சைக் காளான்களையும் வேதிமப் புகையூட்டல் முறையில் கட்டுப்படுத்த வேண்டும். 'தைமால்' என்ற வேதிமப் பொருளைப் பூஞ்சைக் காளான்களைக் கட்டுப்படுத்தவும், பாராடை - குளோரோ - பென்சின் என்ற பொருளைப் பூச்சிக் கொல்லியாகவும் பயன்படுத்தப்படுகின்றன. அறிவியல் வளர்ச்சியால் ஆவணக் காப்பகங்களில் காற்று நீக்கி, புகையூட்டல முறை மூலம் பூச்சிகள், மற்றும் பூஞ்சைக் காளான்கள் கட்டுப்படுத்தப் படுகின்றன. அண்மைக் காலங்களில் மேலை நாடுகளில் வேதிமப் பொருட்கள் அதிகமாகப் பயன்படுத்துவது தவிர்க்கப் படுகிறது ஆகையால் -10° C குளிர்பதன அறைகளில் 24 மணி நேரமும் வைத்துப் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

அமில நீக்கு முறை

சுவடிகள் அமிலத் தன்மையால் பாதிக்கப்படுகின்றன. சுவடிகளில் அமிலத் தன்மையானது, காகிதம் தயாரிக்கப் பயன்படுத்தும் வேதிமப் பொருட்களின் எச்சத்தாலும், காற்றில் உள்ள வேதிமப் பொருட்களின் மாறுபாட்டுத் தன்மையாலும் சுவடிகளின் மீது அமிலத் தன்மை ஏற்படுகிறது. இந்த அமிலத் தன்மை காகிதத்தின் நார்ப் பொருட்களைப் பாதித்துச் சிதிலமடையச் செய்கிறது. இவ்வாறு பாதிக்கப்பட்ட சுவடிகளையும் நூல்களையும் நீர்த்த அமோனியா திரவத்தின் ஆவி படியச் செய்வதாலும், Di Ethylzinc என்ற வேதிமப் பொருள் கொண்டு அதிக அளவிலான சுவடிகளை அமில நீக்க முறையில் மேலை நாடுகளில் சுவடிகளிலுள்ள அமிலத்தன்மை நீக்கப்படுகின்றது.

லேமினேசன்

சிதிலமடைந்த சுவடிகளைச் செப்பனிடப் பல முறைகள் பயன்படுத்தப்

படுகின்றன. அவற்றுள் லேமினேசன் என்ற முறையும் ஒன்று. மிகச் சிதிலமான காகிதச் சுவடிகளை, ஜப்பான் டிசியு பேப்பர் மற்றும் செல்லுலோஸ் அசிடேட் தாள்களைச் செப்பனிடும் சுவடியின் அளவை விடச் சிறிது. பெரிதாக எடுத்து இரு புறமும் செல்லுலோஸ் தாள்களைச் சுவடியின் மீது படுமாறு அமைத்து 70°C முதல் 100°C வரை வெப்பப்படுத்தினாலோ அல்லது அசிட்டோன் என்ற வேதிமக் கரைசலைப் பஞ்சினால் தேய்க்கும் பொழுது செல்லுலோஸ் தாள் கரைந்து ஜப்பான் டிசியு பேப்பர் இரு புறமும் ஒட்டிக் கொள்ளும். இதனால் சிதிலமடைந்த சுவடிகள் உறுதியடைகின்றன. இந்த முறையில் செய்யப்படும் சுவடிகளைத் தேவை ஏற்படின் பிரித்து எடுத்துக் கொள்ளலாம். இம்முறை கையாலும், சில நிறுவனங்களில் இயந்திரங்களின் மூலமாகவும் செய்யப்படுகிறது.

சுற்ற மைத்தல் (Encaptulation)

சுவடிகள் மற்றும் சிதிலமடைந்த ஆவணங்களைப் பாதுகாக்க மேலை நாடுகளில் லேமினேசன் செய்வதற்குப் பதில் என்கேப்சுலேசன் என்ற முறை பயன்படுத்தப்படுகிறது. இம்முறையில் ஆவணங்களின் அளவை விடப் பெரிய அளவில் பாலியஸ்டர் தாள்களை வெட்டி மேலும் கீழும் வைத்து இரு பக்கம் ஒட்டும் நாடா அல்லது வெப்பம் அல்லது மிக வேகமான அழுத்தத்தினால் ஓரங்கள் ஒட்டப்படுகின்றன. இம்முறையில் பாலியஸ்டர் தாள்கள் சிதிலமான சுவடிகளை வெளிப்புக் காரணிகளிலிருந்து பாதுகாக்கிறது.

காகிதக் கூழ் முறை செப்பனிடுதல் (Leaf Casting)

சேதமடைந்த, பூச்சிகள் மற்றும் அமிலத் தன்மையால் சிதிலமடைந்த காகிதச் சுவடிகள், ஆவணங்கள் போன்றவற்றைச் சாதாரணமாக டிசியு தாள்கள் கொண்டு செப்பனிடப்படுகின்றன. மேலை நாடுகளில் சேதமடைந்த இடங்களைச் செப்பனிடச் சுவடியின் தன்மை கொண்ட காகிதக் கூழைத் தயாரித்து அவற்றைக் கொண்டு செப்பனிடப்படுகிறது. மேலை நாடுகளில் லீப் காஸ்டிங் கருவி தயாரித்து கலையாத மை கொண்டு எழுதப்பட்ட சுவடிகள் மற்றும் ஆவணங்கள் இம்முறையில் பாதுகாக்கப் படுகின்றன. இம்முறையில் சிதிலமடைந்த காகிதத்திற்குப் புதுக் காகிதக் கூழ் கொண்டு செப்பனிடுவதால் சுவடிகள் அதிக நாட்களுக்குச் சேதமுறா வண்ணம் இருக்கும்.

நுண்படப் பாதுகாப்பு

சுவடிப் பாதுகாப்பிற்குச் சுவடிகளின் புறப் பொருட்களைப் பாதுகாப்பது மட்டுமன்றி அதன் அகப்பொருட்களான சுவடியில் உள்ள தகவலைப் பாதுகாக்க அறிவியல் வளர்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட நுண்படங்களின் மூலம் பதிவு செய்யப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது. பல சுவடி நூலகங்கள், மற்றும் ஆவணக் காப்பகங்களில் உள்ள சுவடிகள், ஆவணங்களை நுண்படச் சுருள்களில் பாதுகாக்காகவும், ஆய்வாளர்கள் படிப்பதற்காகவும், மற்றும் தேவையான பிரதிகளைத் தயாரிக்கவும் பயன்படுகிறது.

மின்னணுவியல் பாதுகாப்பு

அறிவியல் வளர்ச்சியின் மூலம் ஏற்பட்ட கணிப்பொறி உலகின் ஒவ்வொரு துறையிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. அதற்குச் சுவடிகள், ஆவணங்கள் பாதுகாப்பு ஒரு விதி விலக்கல்ல. மேலை நாடுகளில் சுவடிகள், ஆவணங்கள், அரிய நூல்கள், புகைப்படங்கள், ஓவியங்கள் போன்ற அனைத்து அரிய பொருட்களையும் கணிப்பொறி மூலம் மின்னணுவியல் பதிவு செய்யப்பட்டு மென் தட்டுகளாகப் பாதுகாக்கப்படுகிறது. இவ்வகையில் பாதுகாக்கப்படுவதால் ஒரு நிறுவனத்தின் சுவடிகளில் உள்ள தகவலை மற்ற நிறுவனங்கள் பார்க்கவும், ஆய்வு செய்யவும் வசதி ஏற்படுகிறது.

இது போல் நம் முன்னோர்களின் பட்டறிவைப் பாதுகாக்கும் செயல்களும், கருவிகளும், அறிவியல் வளர்ச்சியினால் வளர்ச்சியடைகின்றன. அவற்றை அறிந்து நம் நாட்டு அறிவுப் பெட்டகங்களைப் பாதுகாப்பது நம் கடமையாகும்.

□

மு. ரெ. கலைச்செல்வி
ஆய்வாளர்
அரிய கையெழுத்துச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

மோடி ஆவணங்கள் சுட்டும் மராத்திய மன்னர்களின் சமயப் பணிகள்

தஞ்சையைக் கி. பி. 1676ஆம் ஆண்டு முதல் கி. பி. 1855 வரை 180 ஆண்டுகள் 13 மராத்திய அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் ஆட்சிக் காலத்தில் இந்து, கிறித்துவ, இசுலாமிய மக்கள் ஒன்றாக வாழும் நல்லிணக்க இடமாகத் தஞ்சாவூர் திகழ்ந்தது. இம்மன்னர்கள் எவ்வித வேறுபாடுமின்றி எல்லாச் சமயத்தினரையும் ஆதரித்ததோடு மட்டுமின்றிச் சமய முன்னேற்றத்திற்காக அவர்கள் கோயில்களுக்குப் பல்வேறு பணிகளைச் செய்துள்ளனர். மேலும் பல அறக்கொடைகளையும் அளித்துள்ளனர். இவற்றை மோடி ஆவணங்களின் துணைகொண்டு இக்கட்டுரை ஆராய்கிறது.

தஞ்சை மராத்திய மன்னர்கள் அனைவரும் சைவ சமயத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்த போதிலும் வைணவ சமயத்தைப் போற்றி வைணவக் கோயில்களை எடுப்பித்துக் கொடைகளை நல்கியுள்ளனர் வெளிநாட்டவர்கள் வருகையினால் கிறித்தவ சமயம் தஞ்சைப் பகுதியில் பரவத் தொடங்கியது. மன்னர்கள் சமயப் பொறையுடன் கிறித்தவத் துறவிகளுக்குத் தேவாலயம் கட்டுவதற்கு நிலம், பொருட்களைக் கொடையாக அளித்துக் கிறித்தவ சமயம் வளர ஆதரவளித்தனர். மேலும் இம்மன்னர்களால் தஞ்சையில் பல இசுலாமியர்கள் காவல், வணிகம், யுனானி, மருத்துவம் முதலான காரணங்களால் குடியேறினர். இசுலாமியர்களில் பலர் உயர் அதிகாரிகளாகவும் தஞ்சையில் இருந்தனர். அரண்மனை ஆவணங்களில் இசுலாமிய ஆண்டு முறை பின்பற்றப்பட்டுள்ளது. அவர்கள் பள்ளிவாசல், தர்காக்கள் போன்றவற்றைக் கட்டுவதற்கு நிலம் கொடையாக அளித்துள்ளனர். மோடி ஆவணங்களில் தஞ்சை மராத்திய மன்னர்களின் சமயப் பணிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றுள் ஓரிரு ஆவணக் குறிப்புகள் மட்டும் இவண் சுட்டப்பெறுகின்றன.

தஞ்சையிலுள்ள பிரசன்ன வெங்கடேசர் கோயில் கோபுரங்கள் பழுதடைந்து விட்டதால் அதனைக் கடைசி சிவாஜி மன்னர் காலத்தில் செப்பனிட்டுப் பழுது பார்க்கப் பட்டதை

> "பிரசன்ன வெங்கடேசர் கோபுரங்கள் கி. பி. 1849இல் பழுது பார்க்கப் பட்டன"[1]

என்ற மோடி ஆவணக் குறிப்பால் அறியமுடிகிறது.

கோயில்கள் புதிதாகக் கட்டப்பட்ட பின்னரும் திருப்பணிகள் செய்யப்பட்ட பின்னரும் குடமுழுக்குச் செய்வது மரபு. தஞ்சை மராத்திய மன்னர்கள் காலத்தில் இம்மரபு கடைப்பிடிக்கப்பட்டு வந்திருப்பதைப் பல்வேறு மோடி ஆவணங்கள் மூலம் அறியமுடிகின்றன.

> "கி பி 1776 தஞ்சாவூர் கோட்டை தேவஸ்தானம் கீழவாசல் வீரபத்திர சுவாமி கோவிலுக்கு கும்பாபிஷேகத்திற்கு பத்து சக்கரம் மொயின் ரூ 302 கொடுப்பது"[2]

> "கி. பி. 1779 தஞசாவூர் கோட்டை தேவஸ்தானத்தை சேர்ந்த 4 சிவ விஷ்ணு ஸ்தலங்கள் கும்பாபிஷேகத்திற்கு 800 சக்கரம் கொடுக்கப்பட்டது"[3]

> "கி. பி. 1801 இல் இரண்டாம் சரபோசி பெரிய கோயிலில் 108 சிவலிங்கங்களை அமைத்து கும்பாபிஷேகம் நடத்தினார்"[4]

என்றும்

> "கி பி. 1803 இல் பிரகதீஸ்வர சுவாமி கோயில் அஷ்ட பந்தனம் கும்பாபிஷேகத்திற்காக ஸ்ரீ பிள்ளையாருக்குச் சக்கரம் 200"[5]

என்றும்

> "கி. பி. 1826 நாகப்பட்டிணத்திலுள்ள ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்மனுக்கு கும்பாபிஷேகத்திற்காக சக். 100"[6]

> "கி. பி. 1843 கும்பகோணம் கும்பேசுவரசுவாமி கும்பாபிஷேகத்துக் கம்பெனி ரூ 350"[7]

> "கி. பி 1849 இல் மதுரை மீனாக்ஷி அம்மனுக்குக் கும்பாபிஷேகத்துக்கு 2030 ரூபாய்"[8]

என்ற மோடி ஆவணத்தினின்று மராத்திய மன்னர்கள் கோயில்களுக்குக் குடமுழுக்கு செய்வித்துக் கொடைகள் அளித்தமையை அறியமுடிகிறது.

தஞ்சை மராத்திய மன்னர்கள் புதியதாகப் பல கோயில்களை எடுப்பித்தும், பல பழைய கோயில்களைச் செப்பனிட்டும் கோயிற் பணியாற்றியுள்ளதைப் பல கல்வெட்டுச் செய்திகள் குறிப்பிடுகின்றன. கோமேசம் கோயில் நிர்வாகம், பூசை, திருவிழா போன்றவற்றிற்கு நிலங்களைக் கொடையாக அளித்துள்ளனர் என்பதைப் பின்வரும் மோடி ஆவணச் செய்திகள் மூலம் அறிய முடிகின்றன.

> ". . . . . . ஸ்ரீ தியாகராாக ஸ்வாமிக்கு . . . . . ஸர்வமான்யம் கொடுக்கப்பட்டதற்கு விபரம் மரப்பு கோவில் மாகாணத்தைச் சேர்ந்த மௌஜே விளமல் தரப்பு உள் மாகாணத்தைச் சேர்ந்த மௌஜே கீழ்படுகை"[9]

"1786 துளஜா ராஜா சாயேப் வேளாங்குல மகாணம் ஆவுடையார் கோயில் அம்மனுக்கு வெள்ளிக் கிழமை கட்டளைக்கு 58½ குழி இனாம் கொடுத்தார்"[9]

என்ற மோடி ஆவணத்தினின்று திருவாரூர்த் தியாகராசர் கோயிலுக்கும், ஆவுடையார் கோயில் அம்மனுக்கும் பூசைக்கு மராத்திய மன்னர் இரண்டாம் துளஜா கொடை அளித்ததை அறிய முடிகிறது.

மன்னர் இரண்டாம் சரபோசி பெரிய கோயிலுக்குப் பல பகுதிகளிலிருந்து சுரோத்திரியம், சர்வமானியம், நிலங்களைக் கொடையாக அளித்துள்ளார் என்பதை,

"தஞ்சைப் பெரிய கோயிலுக்கு சுரோத்திரியம் நஞ்சை நிலம் மாயூரம் தாலுகா சோளம்பேட்டை மாகாணம், விளியநல்லூர் கிராமத்தில் சோலி 6க்கு பூண்டி பாகம் 1/3 வேலி, 2 ஆவங்குடியில் 1/3 பாகம் ஆக 2 கிராமங்கள் 3 வருஷத்துக்கு குத்தகை ஸ்ரீ 468"[10]

"சூரக்கோட்டையில் 31¼ வேலி நன்செய், புன்செய் விலைக்கு வாங்கி மானியமாகக் கொடுக்கப்பட்டது"[11]

"முத்தம்மாள்புரம் படுகை, நெய்வாசல், தென்பாதி ஸ்ரீ பிரகதீஸ்வர ஸ்வாமி கோயிலுடைய தேவஸ்தான மொயின்"[12]

என வருகின்ற மோடி ஆவணச் செய்திகளின் வாயிலாக வில்லியநல்லூர், ஆலங்குடி, சூரக்கோட்டை, முத்தம்மாள்புரம், நெய்வாசல் போன்ற ஊர்களிலிருந்து நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டன என்பதை அறியமுடிகிறது.

தஞ்சை மராத்திய மன்னர்கள் புதியதாகக் கோயில்களைச் செப்பனிட்டு, குடமுழுக்கு செய்வித்து, நிலக்கொடைகள் அளித்ததோடு பல அணிகலன்களையும் கொடையாக வழங்கியுள்ளனர் இரண்டாம் சரபோசி மன்னர் கி. பி. 1804இல் திருவையாறு பஞ்சநதீசுவர சுவாமி சோமாஸ்கந்த மூர்த்தி அம்மனுக்குக் கல்லிழைத்த கிரீடம் மற்றும் காதணிகள் கொடுத்துள்ளார்.

கி. பி. 1807ஆம் ஆண்டு இம்மன்னர் தலப்பயணம் சென்றபொழுது மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டு அவருக்கு 'நாகாபரணம்' ஒன்றைத் தம் பெயரில் கொடையாக அளித்துள்ளார். இவ்வாபரணம் செய்ய 1352 சக்கரம் செலவிடப்பட்டது என்பதை மோடி ஆவணம் சுட்டுகிறது. இரண்டாம் சரபோசி மன்னர் கி. பி. 1821ஆம் ஆண்டு திருப்பதி வெங்கடாசலப் பெருமாளுக்கு 149 வைரக்கற்களும் 50 மாணிக்கமும் வைத்துக் கல்லிழைத்த நாமம் செய்து கொடையாக அளித்தார் என்ற செய்தியை,

"1821 ராஜமகால் சாஹேபிடமிருந்து வந்த கல்விழைத்த நாமம் திருப்பதிக்கு அனுப்புவதற்கு மராமத்து மகால் ஹவால்தார் நரஸோஜி சிந்தே இடம் கொடுத்தது. அதற்கு 149 வைரம் 50 மாணிக்கம்"[13]

என்ற மோடி ஆவணம் உறுதிப்படுத்துகிறது.

தஞ்சை மராத்திய மன்னர்களால் எடுப்பிக்கப்பெற்ற எல்லாச் சமயக் கோயில்களுக்கும் ஆதரவு அளித்ததோடு திருவிழாக் காலங்களிலும் சமய வேறுபாடின்றிக் கொடைகளை அளித்துள்ளனர். இக்காலங்களில் எல்லாச் சமயத்தினரும் ஒன்றாக இணைந்து திருவிழாக்களைச் சிறப்பாக நடத்தி, சமயப் பொறையுடன் நடந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

> "1811இல் மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபாலசுவாமி தேர்த் திருநாளுக்கு 15 சக்கரம்"[15]
>
> "பட்டுக்கோட்டை நாடியம்மன் தேர்த் திருநாளுக்கு 150 சக்கரம்"[16]
>
> "திருச்சேறை கஸ்பா ஸ்ரீ சாரநாத ஸ்வாமி தேர்த் திருநாளுக்கு 5 மாதத்திற்கு 75 சக்கரம் 1 3/6 பணம்"[17]
>
> "கி பி 1779 பிரகதீசுவரசுவாமி திருநாளுக்காக மொயின் 1700 சக்கரம்."[18]
>
> "பிரசன்ன வெங்கடேசுவர சுவாமிக்கு ... .திருநாள் மான்யம் சக்கரம் 80"[19]
>
> "பிரதாப வீரஹனுமாருக்கு மாசி மாதம் தேர்த் திருவிழா வழக்கப்படி சக்கரம் 280"[20]
>
> "கொங்கணேசுவரர் தேர்த் திருவிழா, திருநாள் மொயின் வருஷ வழக்கப்படி 280 சக்கரம்"[21]

போன்ற மோடி ஆவணக் குறிப்புகள மன்னர்கள் காலத்தில் தேர்த் திருவிழா நடைபெற்றதையும், அதற்குக் கொடைகள் அளித்ததையும் உறுதிப்படுத்துகின்றன.

மராத்திய மன்னர்கள் கிறித்தவ சமயத்திற்குப் பேராதரவு அளித்ததோடு அவர்களுக்குத் தேவாலயம், கல்லறை கட்டுவதற்கு நிலங்களைக் கொடையாக நல்கியுள்ளனர் இந்தியாவில் முதல் ஆங்கிலப் பள்ளி மன்னர்கள் ஆதரவுடன் கிறித்தவப் பாதிரிமார்களால் தஞ்சையில் நிறுவப்பட்டது. மேலும் கிறித்தவர்களின் பண்டிகைகளான கிறித்துமஸ், புத்தாண்டு போன்றவை சிறப்பாக மக்களால் கொண்டாடப்பட்டன. பண்டிகையின்போது மன்னர் கொடை அளித்துள்ளார் என்பதை,

> "ஜனவரிப் பண்டிகைக்காக மிஸ்தர் பிளாக்பர்ன் சாயேபுக்கு இனாம் 500 சக்கரம்"[22]

என்ற மோடி ஆவணக் குறிப்பின் வாயிலாக அறியப்படுகிறது

இந்து சமயத்தினராகிய தஞ்சை மராத்திய மன்னர்கள் இசுலாமிய சமயத்தவர்க்கு வேண்டிய ஆதரவுகளை அளித்து. அவர்களது கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களிலும் கலந்து கொண்டு கொடை அளித்து அவ்விழாக்கள் சிறப்பாக நடந்திட உதவி செய்துளளனர். அல்லாப் பண்டிகைக்காக மராத்திய மன்னர்கள் தர்க்காக்களுக்கும் சென்றுள்ளனர். அப்பொழுது பணக்கொடை அளித்துள்ளனர். இதனை.

> "1811 ஸர்வர்ஹூஸேனி அல்லாவுக்கு அல்லாப் பண்டிகைக்காக 10 சக்கரம்"[23]

> "1829 திவான் சாஹேப் நாலு வீதிகளிலும் சுற்றிவரப் போன பொழுது அந்தந்த இடத்திலுள்ள அல்லாக்களுக்கு அல்லாப் பண்டிகைக்காக இனாம் ரூ 335"[24]

> "1841 படே ஹூஸேனி சாயேப் தர்காவுக்கு ரூ 23
> ஸர்வர் ஹூஸேனி சாயேப் தர்காவுக்கு ரூ 17
> இராஜ்யத்தின் அல்லாவிற்கு ரூ 11
> கமான் ஹூஸனி அல்லாவுக்கு ரூ 11
> பர்சிஹூஸேனி அல்லாவுக்கு ரூ 7
> டால்ஸஹேப் வகையறா அல்லாக்களுக்கு ரூ 64
> அல்லாப் பண்டிகைக்காக இனாம்"[25]

என்ற ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது.

மராத்திய மன்னர்கள் மட்டுமல்லாமல் அரசமாதேவியரும் சமயப் பொறையுடையவர்களாய் அல்லாப் பண்டிகைக்கு நன்கொடை அளித்தனர்.

> "அல்லாப் பண்டிகைக்குப் பக்கீர்களுக்குக் கொடுப்பதற்கு மாது
> ஸ்ரீ அவு சாயேப் ரூ 30 :
> சௌ. மாது ஸ்ரீ சைதம்பாபாயி சாகேப் ரூ 30 :
> காமாட்சியம்பாபாயி சாகேப் ரூ 25 :
> சுலக்ஷணபாயி அமணி ராஜே சாயேப் ரூ 10 .
> சக்வாரம்பாபாயி சாகேப் ரூ 20 ஆக 105"[26]

என்று மோடி ஆவணங்கள் குறிப்பிடுகின்றன மேலும் அல்லாப் பண்டிகையின்போது நடைபெறும் பானக பூசைக்குக் கொடை கொடுத்ததை.

> "1827 அல்லாப் பண்டிகைக்காக பானக பூஜைக்கு சக்கரம் 1"

என்ற மோடி ஆவணம் தெரிவிக்கிறது. மொஹரம் பண்டிகையின்போது தர்க்காவில் நடைபெறும் கொடியேற்றம். விளக்குக்கு எண்ணை. சர்பத். கிசடி போன்ற செலவிற்கும் கடைசி சிவாஜி மன்னர் கொடை அளித்துள்ளார். இதை.

"1841 பெரிய ஹூஸேநீ அல்லாவுக்கு மோஹரம் பண்டிகைக்கும் கொடியேற்றம் விளக்குக்கு, எண்ணை, சர்பத், கிசடி இவைகளுக்காக 10 தினங்களுக்கு 11 சக்கரம்''[21]

என்ற மோடி ஆவணத்தின் வாயிலாக அறியமுடிகிறது.

"1827 நாகூர் காதிர்சாயபு தர்காவுக்கு . . . . . உற்சவத்துக்காகச் சர்க்காரிலிருந்து மூடுகிற வஸ்திரத்தை வழக்கப்படி அனுப்புவதற்கு சக்கரம் 20''[22]

என்ற மோடி ஆவணக் குறிப்பால் நாகூர் தர்க்காவுக்குத் திருவிழாக் காலத்தில் ஆண்டுதோறும் ஆடை அனுப்பி வந்தனர் என்பது தெரிகிறது. இவ்வழககம் இன்றும் நடைபெற்று வருகிறது. அல்லாப் பண்டிகையின்போது இத்தர்க்காவிற்கு நகரா வாத்தியம் என்ற இசைக்கருவி செய்தளிக்கப் பெற்றது[23]

அல்லாத் திருவிழாவில் 9ஆம் நாள் ஊர்வலம் செல்வதற்கு கி. பி. 1834இல் தங்கத் தேர், வெள்ளித் தேர், யானை தந்தத் தேர், பெரியது, சிறியது, சங்கிதத் தேர் ஆக ஐந்து தேர்கள் கடைசி சிவாஜி மன்னரால் வழங்கப் பெற்றன. இதை,

"1834. அல்லா வைக்குமிடத்திலிருக்கிற அல்லா வகையறாக்கள் 9ம் நாள் ஊர்வலத்திற்கும் கோட்டையின் வெளியேயும் போவதற்கு தேர் தயார் செய்வதைப் பற்றி தங்கத்தேர் - 1, வெள்ளித்தேர் - 1, யானைத் தந்தத்தின் தேர் - 2 - பெரியது - 1, சின்னது - 1, ஸங்கிதத் தேர் - 1, ஆக 5 இவைகளுக்கு மஹாலோபியிலிருந்து வேண்டிய சாமான்களைக் கொடுக்கிறது''[24]

என்று மோடி ஆவணம் கூறுகிறது.

இங்ஙனம் தஞ்சை மராத்திய மன்னர்கள் அல்லாப் பண்டிகைக் காலத்தில் நன்கொடைகளும், தேர் முதலியனவும் அளித்து இசுலாமிய சமயத்தினரின் நன்மதிப்பையும், ஆதரவையும் பெற்றுச் சமயப் பொறையுடன் நடந்து கொண்டனர் என்பதை வரலாற்றுச் சான்றுகள் புலப்படுத்துகின்றன.

தஞ்சை மராத்திய மன்னர்களால் நடத்தப்பெற்ற கோயில் திருவிழாக்கள் மக்களிடையே மகிழ்ச்சியை அளித்ததோடு அவர்களின் பக்தி உணர்வைத் தூண்டின. கோயில்களிலும் அரண்மனையிலும் திருவிழாக்கள், பண்டிகைகள் கொண்டாடச் செய்தமை வாயிலாக மன்னர்களின் சமயப் பணிச் சிறப்பை அறியமுடிகிறது. தேர்த் திருவிழாவின்போது தேர்களை இழுக்கப் பல்வேறு ஊர்களிலிருந்தும் ஆட்கள் வரவழைக்கப்பட்டனர். அனைத்து இனமக்களும் ஒன்று சேர்ந்து தேரிழுக்கும் பொழுது ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடின்றிச் சமய ஒற்றுமையுடன், இறையுணர்வு ஓங்க அனைத்து மக்களும் ஒற்றுமையோடு இறைப்பணி புரிந்தனர் திருவிழாக்களின்போது நாடகங்கள், நாட்டியங்கள், கூத்துக்கள்,

இலாவணிகள் போன்றவை மக்களின் முன்பும், மன்னர்கள் முன்னிலையிலும் அரங்கேற்றம் செய்யப்பட்டன.

தமிழக வரலாற்றைப் பொறுத்த அளவில் தஞ்சை மராத்திய மன்னர்கள் ஆற்றிய சமயப் பணிகள் தஞ்சை மக்களின் மேன்மைக்கும், நல்வாழ்வுக்கும் எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றன என்பதை மோடி ஆவணங்கள் உறுதிப்படுத்து கின்றன. மொழியால், இனத்தால் மராத்திய மன்னர்கள் வேறுபட்டாலும் சமயத் தொண்டால், தஞ்சை மக்களின் நலன்மீது கொண்ட ஈடுபாட்டால் இம்மன்னர்களின் சமய அறப்பணி தமிழகச் சமூக வரலாற்றில் ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது எனக் கூறலாம். மேலும் மோடி ஆவணங்கள் மூலம் தற்கால வரலாற்றுக்குத் தேவைப்படும் அரசியல், பொருளாதாரம், சமயம், சமூகம், கல்வி, இலக்கியம், கலைகள் எனப் பல்வேறு செய்திகள் புதைந்திருப்பதை அறியமுடிகின்றன.

குறிப்புகள்

1. **சரஸ்வதி மகால் மோடித் தமிழாக்கக் குறிப்புகள்** 1-6
2 **மோடி ஆவணம்** 1776, 122 சி.
3. **மேலது** 1779, 89 சி.
4 **மேலது** 1801, 194 சி.
5. **மேலது** 1803, 101 சி.
6 **மேலது** 1826, 108 சி.
7 **ச. ம. மோ. த.** 3-9.
8 **மோடி ஆவணம்** 1849, 109 சி.
9. **மேலது** 1837, 943 சி.
10 **மேலது** 1786, 943 சி.
11 **மேலது** 1828, 102-45.
12. **மேலது** 1828, 230, 1-200.
13 **ச. ம. மோ. த.** 30-1.
14. **மோடி ஆவணம்** 1821, 99 சி.
15 **ச. ம. மோ. த.** 19-5.
16. **மேலது** 19-29.
17. **மேலது** 19-45.
18. **மேலது** 13-17.
19. **மேலது** 13-18.
20. **மேலது** 13-18.
21 **மேலது** 13-19.
22. **மோடி ஆவணம்** 1824, 123 சி.
23. **மேலது** 1811, 123 சி.
24. **மேலது** 1824, 160 சி.
25. **மோடி ஆவணம்** 1841, 75 சி.
26 **மேலது** 1843, 309 சி - 310-1.

27. **ச. ம. மோ. த.** 25-14.

28. **தமிழ்ப் பல்கலைக்கழக மோடித் தமிழாக்கம்** 2-277

29 **மேலது** 2-271.

30. **மோடி ஆவணம்** 1834, 177 சி.

மா. வேதநாதன்
ஆய்வாளர்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ஈழத்துச் சிவயோக சுவாமிகளின் திருமுகங்கள்

அறிமுகம்

ஈழத்துச் சிவயோக சுவாமிகள் (1872 – 1964) இருபதாம் நூற்றாண்டின் சிறந்த ஞானியாக மதிக்கப்பெற்றவர். ஈழத்துச் சித்தர்களுள் தனிப்பெருஞ் சிறப்புக்குரியவர். ‘ஒரு பொல்லாப்புமில்லை’, ‘எப்பவோ முடிந்த காரியம்’, ‘நாமறியோம்’, ‘முழுதும் உண்மை’ என்ற மகாவாக்கியங்களை அருளிய இவர், ஈழத்தின் வடபகுதியாகிய யாழ்ப்பாணத்திலுள்ள மாவிட்டபுரம் என்னுமிடத்தில் சைவ வேளாளர் மரபில் அம்பலவாணர் என்பவருக்கும், சின்னாச்சியம்மையாருக்கும் அருந்தவப்புதல்வராக அவதரித்தார். சதாசிவம் என்ற இயற்பெயர் கொண்ட இச் செந்தமிழ் ஞானியை, ‘யோகர்’, ‘யோகநாதன்’, ‘யோகசுவாமிகள்’ என்ற பெயர்களால் மக்கள் அழைப்பர். இவரை நேரில் கண்டு தரிசித்த பேராசிரியர் தெ. பொ மீனாட்சிசுந்தரனார், ‘இவர் ஒரு பெரிய மகாஞானி’ எனவும், ஞானத்தை அன்புடன் குழைத்துத் தனக்கு ஊட்டியதாகவும் குறிப்பிடுவர். சிவயோகசுவாமிகளது திருப்பாடல்கள், உரைநடைப் படைப்புகள், திருமுகங்கள் (கடிதங்கள்) என்பன தொகுக்கப்பட்டு ‘நற்சிந்தனை’ என்ற நூல் வடிவில் தமிழில் வெளிவந்துள்ளன. இதற்கு ஓர் ஆங்கில மொழிபெயர்ப்பும் உண்டு. இவர்தம் அன்பர்களுக்கு எழுதிய திருமுகங்கள் பலவாகும். அவற்றுள் சிலவே ‘நற்சிந்தனை’ என்ற நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ‘நற்சிந்தனை’யில் பதிவு செய்யப்பட்டுள்ள திருமுகங்கள் வாயிலாக அறிந்து கொள்ளப்படும் ஈழத்துச் சிவயோக சுவாமிகளின் சமயத் தத்துவக் கோட்பாடுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

இறைக் கோட்பாடு

சிவயோக சுவாமிகள் சிவபெருமான், முருகன் மற்றும் ஒளிக்கடவுள் ஆகிய கடவுளர்மீது பல பாடல்களைப் பாடியுள்ளபோதும், இவர் ‘ஓரிறைக் கோட்பாடுடையவ’ராக விளங்கினார். இதனை அவரது ‘ஒன்றுதான் கடவுள்’,[1] ‘ஒன்றுக்கு மஞ்சேல் ஒருவனே தெய்வம்’[2] என்ற திருமுகவரிகள் நன்கு புலப்படுத்துகின்றன. எங்கும், எதிலும் ஓர் இறைவனே உறைந்து நிற்கின்றார் என்ற ஓரிறைக் கோட்பாட்டை இவரின் திருமுகம்,

"நான், நீ, ஐயா அம்மா, அண்ணர், அக்காமார், அத்தை, அப்பாச்சி, பெரியையா, சீனியையா, சின்னையா, கந்தசாமி, கணபதி, வைரவர், வீரபத்திரர், காளி, சூனி, கிருஷ்ணன், கிறிஸ்து, புத்தன், முகம்மது, இராசரத்தினமாமா, சோமா மாமா, செல்லத்துரை மாமா, கன்று, பசு, ஆடு, குதிரை, சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனு, மகரம், கும்பம், மீனம், ஊர்வன, பறப்பன, கிடப்பன, நடப்பன, மலை, கடல், வாவி, குளம், கொடி, செடி என்று அளவிடக் கூடாமல் விரிந்து நிற்கிற ஒன்றுதான் கடவுள்"[3]

எனக் குறிப்பிடுவதாலறியலாம். இத் திருமுகச் செய்திகள் சிவயோக சுவாமிகள் ஓர் இறைக் கோட்பாட்டாளர் என்பதை மட்டுமல்லாது, சமய நல்லிணக்கத்தினை மதித்த ஞானி என்பதையும் புலப்படுத்துகின்றன. எல்லாவற்றிலும் இறைவனைக் காணும் சிவயோக சுவாமிகள் விலங்குகள், பறப்பன, ஊர்வன என்பவற்றில் மட்டுமல்லாது விண்ணிலும், உறவுமுறைகளிலும் இறைவன் இருப்பதைக் குறிப்பிடுவது இவரின் தனித்துவ இறைக்கோட்பாடாகும். இதனை மேலும் உறுதிப்படுத்தும் விதத்தில் 14-11-33இல் அவர் எழுதிய திருமுகத்தில்

"அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிறகும் நிறைந்து"

என்ற திருவருட்பயன் முதற்பாடலைக் குறிப்பிடுகின்றார்.[4]

உடம்புக்குள் இறைவன்

இறை ஞானிகள் இறைவனைத் தம் உடம்புக்குள் கண்டின்புறுவர். சிவயோகசுவாமிகளுக்கு இந்த இறையனுபவம் 1940ஆம் ஆண்டு காசியில் ஏற்பட்டது. இதனை அவர் 30-11-1940இல் எழுதிய திருமுகத்தில்

'தேடித் திரிந்து காசிக்கு வந்து கண்டேன் விசுவநாதனை என்னுள்
வாடித் திரிந்து வருந்த வேண்டாம். தேடிய பூடு காலுக்குள்ளே
என்ற தெவிட்டா வாசகமொன்றுண்டு'[5]

என்று குறிப்பிடுவதாலறியலாம்.

இறைவன் ஒன்றாய் வேறாய் உடனாய் உள்ளவர்

இறைவன் உலகுயிர்களுடன் ஒன்றாகவும், வேறாகவும், உடனாகவும் நிற்பர் என்ற சைவ சித்தாந்த இறைக்கோட்பாட்டினைப் பிரதிபலிப்பது போன்று இவரின் திருமுகவரி 'கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர்'[6] என்று காணப்படுகின்றது.

சிவநெறிக் கொள்கை

சிவயோக சுவாமிகள் சிவநெறிக் கொள்கையை வளர்த்தெடுப்பதில் முனைப்புடன் செயற்பட்டவர். அவர் தான் வாழ்ந்த காலத்தில் வண்ணார் பண்ணையில் 'சிவதொண்டன்' என்ற நிலையத்தை அன்பர்கள் மூலம் ஸ்தாபித்துச் 'சிவதொண்டன்' என்னும் மாத இதழையும் தொடக்கி வைத்துச் சிவத்தொண்டு,

சுவத்தியானம், திருமுறை ஓதல், சைவ உணவு உண்ணல் ஆகிய சைவப் பண்பாட்டை மேற்கொண்டு வாழும் சைவத்தை வாழ்ந்து காட்டினார். இவரது உருவமே சிவவேடம் போன்றது இவரை நேரில் கண்டு வணங்கிய பேராசிரியர் தெ பொ. மீனாட்சிசுந்தரனார் இவரின் திருத்தோற்றத்தை,

> "முகத்தில் குழைந்த புன்சிரிப்பு, நெற்றியில் திருநீற்று வெண்மை, இடுப்பில் சுற்றுக்கட்டாகக் கட்டிய வெள்ளை வேட்டி, மார்பு வரை வந்து புரளும் நரைத்த தாடி, தலையெல்லாம் நரைத்து வெளுத்த முடி, முழுவதுமாகிய பேரின்பக் களிப்பு"[7]

என்று குறிப்பிடுவது நோக்கற்பாலதாகும் இத்தகைய சிவநெறிச் சீலராக விளங்கிய சிவயோக சுவாமிகள் 'எல்லாம் சிவன் செயல்'[8], "எல்லாம் சிவமாய் இருக்கின்றன அப்போது நீ யார்? நான் யார்? ஐயா யார்? மற்றும் எல்லாம் என்ன சிவமல்லவா இன்னும் சந்தேகமா?"[9] என்றும் தமது திருமுகங்களில் குறிப்பிடுவது அவரது சிவநெறிக் கொள்கையினை விளக்கி நிற்கின்றது. திருமுகம் எழுதும்போது உ சிவமயம் போட்டு எழுதும் சைவ மரபினை இவர் திருமுகங்களில் காணமுடியும். அவர் தனது திருமுகமொன்றில்,

> "அரும்பிய கொன்றை அணிநத சென்னியன்
> ஆறும் பிறையும் சூடிய அழகன்
> இறையவன் மறையவன் ஏழுலுகாளி
> ஈசன் மழுப்படை தாங்கிய கையன்
> உம்பர்தலைவன் உயர்கை லாயனே"[10]

என்ற பாடலை எழுதி அதனைப் பாடம் பண்ணு என எழுதியிருப்பது அவரது சிவநெறிக் கொள்கை உறுதிப்பாட்டை நன்கு புலப்படுத்தி நிற்கின்றது.

வைணவ இறைக் கோட்பாடு

சிவநெறிக் கொள்கையுடையவராக விளங்கிய சிவயோக சுவாமிகள், இயற்கையில் திருமாலைக் கண்டு பாடிய வைணவ ஆழ்வார்கள் போன்ற இறைஞானியாகவும் விளங்கினார். அவர் மலைநாட்டில் இருந்து 17-02-1932இல் எழுதிய திருமுகமொன்றில் இயற்கை எழிலில் திருமாலைக் கண்டு மகிழ்கின்றார்

> "நம்மைச் சூழ வரவிருக்கும் மலைகள் திருமாலைப் போல் பச்சைப் பசேலெனக் காணப்படுகின்றன. இரைந்து விரைந்து செல்லு மருவிகளின் இனிய சத்தம் திருமாலின் கரத்திலிருந்து இடைவிடாது ஒலித்துக் கொண்டிருக்கும் பாஞ்ச சன்னியத்தை ஒத்தன. சந்திரனுஞ் சூரியனு மிரு பாரிகளிருபக்கத்தும் விளங்குவது போல் விளங்குகின்றன. மரக்கொம்பரிலிருந்து தீங்குரலாற்பாடும் பட்சிகள் அக்கண்ணன் புல்லாங்குழல் பாடுவதை ஒத்திருக்கின்றன. தேயிலை கொய்யும் மகளிர் திருமாலின் இனிய பத்தரான கோபிகாஸ்திரிகளை நேர்வர். இவ்விடத்துக் கறங்கும் முரசம் துரியோதனனுடன் போருக்குச் சென்ற பஞ்ச பாண்டவரின் தேரின்மீது அடிக்கப்படும் பேரிகையை இசைந்தது எப்படித் திருமால் சகல வளங்களுடனுந்

துவாரகையில் விளங்கினானோ அப்படியே இம்மலை இவ்விடத்து மிளிர்கின்றது கண்ணனுடைய விருந்தினராக நாம் இவணிருக்கிறோம்''[11]

என்ற திருமுகம் அவரது வைணவ இறைக்கோட்பாட்டின் ஆழத்தைப் பிரதிபலிக்கின்றது. அவரது படைப்புகளில் இத்திருமுகம் ஒன்றே அவரது வைணவ இறையுணர்வைப் புலப்படுத்துகின்றதெனலாம்

ஆன்மக் கோட்பாடு

ஆன்மா அழிவதில்லை என்பதும் அது உடம்போ, மனமோ, புத்தியோ, சித்தமோ அல்ல என்பதும் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்தாகும். இதனை வெளிப்படுத்துவது போன்று சிவயோக சுவாமிகள்,

> ''நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா. ஆத்மா ஒருநாளும் அழியாது. இது மகான்களுடைய அநுபவ சித்தாந்தம் இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாகப் பதியக் கடவது''[12]

எனத் தனது திருமுகத்தில் குறிப்பிடுகின்றார்

ஆன்மாவும் கடவுளும்

'ஆன்மாவும் கடவுளும் ஒன்று' என்பது வேதாந்தத் தத்துவத்தின் அடிப்படைக் கருத்தாகும் இச்சிந்தனை உபநிடதங்களில் ஊற்றெடுத்துச் சங்கர வேதாந்தத்தில் உசசநிலை பெறுகின்றது இச்சிந்தனை மரபில் சிவயோக சுவாமிகளும் விளங்குகின்றார் ஆன்மா தான் கடவுள் என்பதை அவர்,

> ''எதனால் கண் காணுகிறதோ? எதனால் காது கேட்கிறது? எதனால் மூக்கு முகருகின்றது? எதனால் வாய் பேசுகின்றது? அதுதான் ஆத்துமா அல்லது கடவுள்''[13]

எனத் தனது திருமுகத்தில் (17-06-1938) குறிப்பிடுகின்றார் இந்த உணர்வின் வெளிப்பாடாகவே அவர் தனது திருமுகங்களில் 'அவனே தானே'[14] என்றும், 'அவனே நானே'[15] என்றும் கையொப்பமிட்டுள்ளார்.

வினைக் கோட்பாடு

'நான் ஐம்பது வருடங்களுக்கு மேலாகச் செய்ய வேண்டியவறறை எல்லாம் செய்து விட்டேன். போதிக்க வேண்டியவற்றைப் போதித்து விட்டேன். ஒருகுறையும் விடவில்லை' என்று கூறிய சிவயோக சுவாமிகள் 'நவரத்தின' என்பவருக்கு 07-02-1934இல் எழுதிய திருமுகத்தில் வினைப்பயனை நாம் அனுபவித்தே தீரவேண்டும் என்ற சைவ சித்தாந்த வினைக்கோட்பாட்டின் உட்பொருள் பொதிந்து விளங்குவதனைக் காணலாம். இதனை அவரின் திருமுகம்,

> 'வினைப்பயனை வெல்வதற்கு வேதமுதலாய வனைத்தாய நூலகத்து மில்லை'

எனக் குறிப்பிடுவதாலறியலாம். நமது இன்றைய நிலைக்கு 'நாம்'தான் காரணம் என்ற சைவ சித்தாந்த வினைக்கோட்பாட்டையே இவர். 'நன்மை தீமை நாம் தரவருவன பிறராலன்று' என்று குறிப்பிடுகின்றாரெனலாம்.

பத்திக் கோட்பாடு

சிவயோக சுவாமிகள் எல்லாவற்றிலும் இறைவனைக் காணும் பத்தி ஞானியாக விளங்கினார். எல்லாவற்றிலும் ஓர் இறைவனே இருக்கின்றான் என்பதை உணர்ந்து அதைவிட வேறில்லை யென்று தியானிக்கின்றவன்தான் உண்மையான பக்தனென்று சொல்லப்படுவான் என்ற சிவயோக சுவாமிகளின் திருமுகக் குறிப்பு அவரின் பத்திக் கோட்பாட்டைப் புலப்படுத்துகின்றது. 'யாவரிடத்தும் அன்பாயிரு. அதாவது உன்னைப் போல எவரையும் பார்' என்ற சிவயோக சுவாமிகளின் திருமுகக் குறிப்பு அவரது பரந்த பக்தி நோககைச் சுட்டி நிற்கிறது. பத்திக் கோட்பாட்டின் உன்னத வெளிப்பாடு பத்தி வைராக்கியமாக விளங்கும். இதனைச் சீவன்முத்தர்களிடம் காணமுடியும். இப்பத்தி வைராக்கியம் இவரிடம் விளங்கியதை.

> " 'அஞ்சுவதி யாதொன்று மில்லை. அஞ்ச வருவதியா தொன்றுமில்லை' யென்னு மான்றோர் மெய்ம்மொழி நம்மைப் பிறப்பிறப்பாகிய கடலைக் கடப்பிக்கும் தெப்பம். 'இதைத் துணையாகக் கொண்ட வெமக்கென்ன குறை' "

என்ற திருமுகவரிகள் சுட்டி நிற்கின்றன.

அறக்கோட்பாடு

சிவயோக சுவாமிகள் தன்னைப் போன்று மற்றவர்களை நேசித்தலையே தவம் என்றும் அதுவே அறம் என்றும் குறிப்பிடுகின்றார். இதனை அவர் தனது திருமுகமொன்றில்,

> "தன்னைப் போல் மற்றவர்களையும் நேசித்தலே 'தவம்' அதுவே அறம்"[16]

என்று குறிப்பிடுவதாலறியலாம். சிவயோக-சுவாமிகள் சைவ வாழ்வியலை வாழ்ந்து காட்டியவர். எல்லோரும் அறமாகிய தரும நெறியினைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பது அவருடைய நோக்கமாக விளங்கியது. இதனை அவர்.

> "நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு அதாவது தருமநெறியிற் பிசகாதே"[17]

என்று குறிப்பிடுவதாலறியலாம்.

மனிதநேயக் கோட்பாடு

ஞானிகளிடம் காணப்படும் முக்கியப் பண்பு மனிதநேயம் ஆகும். சிவயோக சுவாமிகள் மனிதநேய யோகியாக வாழ்ந்து காட்டியவர். சாதிப் பாகுபாடு பாராட்டாதவர் எல்லோரும் தனது சுற்றத்தவர் என்ற உயர்நிலையில் வாழ்ந்தவர். இத்தகைய மனிதநேயக் கோட்பாட்டினை இவரெழுதிய திருமுக வரிகள்

தெளிவாக்குகின்றன

"நாங்களெல்லாம் ஒரே சமயத்தையும் ஒரே சாதியையும் சார்ந்தவர்கள்"[18]

"யாவும் நமது ஊர். யாவரும் நமது கேளிர்"[19]

கடமைக் கோட்பாடு

சிவயோக சுவாமிகள் கடமையை ஒரு கோட்பாடாகவே வற்புறுத்தினார். இதனை அவர் தனது திருமுகங்களில்.

"உனது கடமையை நீ நல்லாய்ச் செய்"[20]

"நான் உங்களுக்குச் சொல்லக்கூடியது ஒன்றுண்டு நீங்கள் உங்கள் கடமையை வழுவாது செய்யுங்கள்"[21]

"செய்வன திருந்தச் செய்"[22]

என்று குறிப்பிடுவதாலறியலாம்

சிவயோக சுவாமிகளும் யாழ்ப்பாண மக்களும்

காசித் திருத்தல யாத்திரை செய்த சிவயோக சுவாமிகள் 30-11-1940இல் காசியிலிருந்து எழுதிய திருமுகத்தில்

"இருந்த இருக்கின்ற இருக்கும் யாழ்ப்பாணத்தா ரெல்லார்க்குமாகக் கருமாதிகளெல்லாஞ் செய்து முடிந்துவிட்டன"[23]

என்று குறிப்பிடுகின்றார். யாழ்பபாண மக்கள் எப்பொழுதும் நற்கதி பெறும் பொருட்டே இவர் காசியில் கருமாதிகள் செய்துள்ளார் போலும்!

முடிவுரை

இவ்வாறாக ஈழத்துச் சிவயோக சுவாமிகளின் திருமுகங்களை நோக்கும்போது அவர் சிவநெறியை வாழவியலாகக் கொண்டு வாழந்து காட்டியவர் என்பதும். முருகன். திருமால் ஆகிய கடவுளர்மீதும் பற்றுடையவர் என்பதும். ஒளியைக கடவுளாக வணங்கும் கொள்கையுடையவரென்பதும். ஓர் இறைக் கோட்பாட்டாளர் என்பதும். சைவ சித்தாந்தக் கோட்பாடுகளில் மட்டுமன்றி வேதாந்த தத்துவத்திலும் நம்பிக்கையுடையவ ரென்பதும். பரந்த மனித நேயம் கொண்டவரென்பதும். கடமையே கடவுள் என்ற கோட்பாட்டினர் என்பதும். யாழ்ப்பாணத்து மக்களுக்கு உய்வுண்டு என்பதை உணர்ந்து செயறபட்ட சிவஞானி என்பதும் பெறப்படும் உலகியலில் உள்ளவர்களைப் போன்று சிவஞானிகளும் வாரத்தைகளால் மட்டுமன்றித் திருமுகங்கள மூலமாகவும் தமது சமயத் தத்துவக் கோட்பாடுகளைப் புலப்படுத்தியுள்ளமைக்கு ஈழத்துச் சிவயோக சுவாமிகள் ஓர் உரைகல்லாகும்.

குறிப்புக்கள்

1. **நற்சிந்தனை**. ப. 375
2. **மேலது**. ப. 376.
3 **மேலது**. ப. 375.
4. ச. அம்பிகைபாகன், **யோகசுவாமிகள்**. ப. 115
5. **நற்சிந்தனை**. ப. 372.
6 **மேலது**. ப. 370.
7. விமலா-கிருஷ்ணபிள்ளை (பதி.), **சிவயோக சுவாமிகள்- அன்பர்களின் அனுபவம்**. ப. 287.
8. **நற்சிந்தனை**. ப. 376.
9. **மேலது**
10 **மேலது**. ப. 372.
11. **மேலது**. ப. 373.
12 **மேலது**. ப. 370.
13. **மேலது**. ப. 370.
14. **மேலது**.
15. **மேலது**. ப. 377.
16. **மேலது**. ப. 373.
17. **மேலது**. 370.
18. **மேலது**. ப. 371.
19 **மேலது**. ப. 373.
20 **மேலது**. ப. 372
21 **மேலது**. ப. 377.
22. **மேலது**.
23. **மேலது**. ப. 372.

உசாத்துணை நூல்கள்

1. அம்பிகை பாகன், ச., **யோக சுவாமிகள்**. நூற்றாண்டுப் பிறந்ததின விழா வெளியீடு, யாழ்ப்பணம், 1972

2 சிவயோக சுவாமிகள், **நற்சிந்தனை**, சிவதொண்டன் சபை, யாழ்ப்பாணம், 1989.

3. விமலா-கிருஷ்ணபிள்ளை, **சிவயோக சுவாமிகள் அன்பர்களின் அனுபவம்**, சிவயோகர் சுவாமிகள் திருவடி நம்பிக்கை பொறுப்பு, கொழும்பு, 1998.

☐

உ

சிவமயம்

[illegible]

இராக. விவேகானந்த கோபால்
மோடி வல்லுநர்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

பிறமொழி ஆவணங்களில் மோடி

மானிட சமுதாயத்தின் வரலாறு, பண்பாடு, கலை மற்றும் அரசியல் பற்றிய தொடர் நிகழ்வினை அறிந்து பதிவு செய்வது வரலாற்றாய்வாகும். இவ்வாய்விற்கு அடிப்படைச் சான்றுகளாக அமைவன ஆவணங்களாகும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, ஆவணங்கள் கல்வெட்டுக்களாகவும், பனையோலை மற்றும் காகிதங்களிலும் எழுதி வைக்கப்பட்டுள்ளன. மேலை நாடுகளில் சுடுமண் பலகைகள், பார்ச்மெண்ட், தோல் ஆகியவற்றில் எழுதப்பட்ட ஆவணங்களும் கிடைக்கின்றன ஆவணங்கள் எழுதப்பட்ட பொருட்கள் எவையாக இருந்தாலும், அவற்றில் சொல்லப்பட்ட செய்தியே முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அச்செய்தியும் எந்த மொழியில், எவ்வகை எழுத்தில் எழுதப்பட்டுள்ளது என்பது மேலும் ஆய்வுக்குரியதாகின்றது. எழுதப்பட்ட பொருள், எழுத்து மொழி மற்றும் செய்தி ஆகிய இந்நான்கின் அடிப்படையில் செய்தியின் காலம், வரலாறு, அதன் பிரதிபலிப்பு ஆகியவற்றை அறியமுடிகின்றது. எனவே, ஆவணங்கள் ஒரு சமுதாயத்தைப்பற்றி ஆய்ந்தறிவதற்கு எத்தகைய முறையில் உதவுகின்றன என்பதனை இக்கட்டுரையின்வழி உணரமுடியும்.

தமிழக வரலாறும் ஆவணங்களும்

ஈராயிரம் ஆண்டுப் பழமை கொண்ட தமிழ் நாட்டின் அரசியல், சமுதாய, பொருளாதார, பண்பாட்டு, கலை வரலாற்றினைத் தெளிவாக அறிவதற்கு ஆவணங்கள் பெரிதும் துணைநிற்கின்றன. தமிழகத்தைத் தமிழர்களும், பல்லவர்களும், இசுலாமியர்களும், மராத்தியர்களும், பின்னாளில் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர் ஆகியோரும் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளைத் தத்தமது ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தனர். இதனால் தமிழ் நாட்டின் வரலாற்றைக் கூறும் ஆவணங்கள் தமிழ், தெலுங்கு, மராத்தி, இந்தி, சமக்கிருதம், பார்சி, உருது, ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் டச்சு மொழிகளில் உள்ளன. எனவே, தமிழ் நாட்டின் வரலாற்றைப்பற்றி முழுவதுமாக அறியத் தமிழ் மட்டுமன்றிப் பிறமொழி ஆவணங்களும் தேவையாகின்றன.

> "சென்றிடுவீர் எட்டுத் திக்கும்; கலைச்
> செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்!"

என்ற பாரதியின் வாக்கு இதனை நினைவூட்டுவதாகக் கொள்ளலாம்.

மொழியும் எழுத்தும்

ஒவ்வொரு சமுதாயத்தினரும் தாம் பேசும் மொழிக்கென உருவாக்கிக் கொண்ட எழுத்து அல்லது வரிவடிவம். அச்சமுதாயம் பேசும் மொழியினை அல்லது ஒலி வடிவத்தினைப் பதிவு செய்யப் பயன்படுகிறது. தமிழ் மொழிக்கெனத் தமிழ் எழுத்தும். தெலுங்கு மொழிக்கெனத் தெலுங்கு எழுத்தும். சமக்கிருதம். மராத்தி. இந்தி ஆகிய மொழிகளுக்குத் தேவநாகரி எழுத்தும். பார்சி. உருது மொழிகளுக்கெனப் பெர்சிய அராபி எழுத்தும். ஆங்கிலம். பிரெஞ்சு. டச்சு மொழிகளுக்கென உரோமன் வரிவடிவமும் பயன்படுகின்றன. எனினும். கி.பி. 13ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரை பார்சி மொழியினை எழுதத் தனிவகை எழுத்தான 'சிகஸ்த' பயன்பட்டது போல மராத்தி மொழியினை எழுத 'மோடி' என்னும் சுருக்கெழுத்து வடிவம் பயன்படுத்தப்பட்டது. இருப்பினும். மக்களின் நடைமுறை வாழ்விலும். இலக்கியப் படைப்பிலும் தேவநர்கரி எழுத்து பயன்படுத்தப்பட்டது. மன்னர்களின் ஆணைகள். கடிதப் போக்குவரத்து. கணக்கு வழக்குகள். அன்றாடக் குறிப்புகள் முதலிய மராத்தி மொழிப் பதிவுகள் மோடி எழுத்தில் எழுதப்பட்டன. இவ்வாறு. மோடி எழுத்தில் எழுதப்பட்ட மராத்தி மொழி ஆவணங்கள் 'மோடி ஆவணங்கள்' என அழைக்கப்படுகின்றன

மோடி எழுத்தின் தனித்தன்மை

'மோட்' (Mod) என்ற மராத்தி மொழியின் மூலச்சொல்லுக்கு உடைத்தல். சிதைத்தல் எனப் பொருளுண்டு தேவநாகரி எழுத்தினை உடைத்துச் சிதைத்து உருவாக்கப்பட்ட எழுத்தாதலின் இது 'மோடி' எழுத்தாயிற்று. கி. பி 13ஆம் நூற்றாண்டில். தேவகிரியை ஆண்ட யாதவ அரசர்களின் அவையில் ஆவண அலுவலராக இருந்த 'ஹேமாட்பந்த்' என்பவரே இவ்வெழுத்து முறையை உருவாக்கி ஆவணங்களை விரைவாக எழுத வழி வகுத்தார். இவ்வெழுத்தின் தனித்தன்மைகளாவன

1 மோடி எழுத்தில் குறில். நெடில் வேறுபாடு கிடையாது.
2 ஒரே நேர்கோட்டில் சொல் பிரிக்காமல் தொடர்ந்து எழுதப்படுகின்றது.
3. சுருக்கெழுத்து வடிவங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.
4. பலவகையான முத்திரைகள் மூலம் கடிதத்தின் தொடக்கம். முடிவு. கடிதம் எழுதப்பட்ட மன்னனின் பெயர் ஆகியன வெளிப்படுத்தப்படுகின்றன.
5. பெரும்பாலும் இசுலாமிய ஆண்டே இவ்வாவணங்களில் குறிப்பிடப்படுகின்றது

தஞ்சை மோடி ஆவணங்கள்

கி. பி 1676 முதல் 1855 வரையிலான சுமார் 180 ஆண்டுக்காலத்தில் தஞ்சை வளநாட்டை 12 மராத்திய மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். இவர்களது ஆட்சிக்காலத்தில் மோடி எழுத்தைப் பயன்படுத்தி மராத்தி மொழி ஆவணங்கள் எழுதப்பட்டன மகாராட்டிரப் பகுதியிலிருந்து தஞ்சை வந்த சிவாசியின் தம்பியாகிய மராத்திய மன்னன் ஏகோசியும் அவரது பரம்பரையினரும் ஈண்டும் தங்களது சுருக்கெழுத்து

வடிவான 'மோடி' எழுத்தைப் பயன்படுத்தியே மராத்தி மொழி ஆவணங்களை எழுதினர்.

தஞ்சை வளநாடு வடக்கே சிதம்பரம், மேற்கே கோவை, கரூர், திருச்சி தெற்கே இராமநாதபுரம், கிழக்கே நாகப்பட்டினம் ஆகிய இந்நான்கெல்லைப் பகுதியில் பரவியிருந்தது. இதனால் இப்பகுதியிலிருந்த மராத்திய அரசு அலுவலர்கள் தமது அன்றாட அலுவல் குறிப்புகள், கணக்கு வழக்குகள், ஆணைகள் முதலியவற்றை மராத்தி மொழியில் மோடி எழுத்தில் எழுதி வைத்தனர். இதனாலேயே, இராமநாதபுரம், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சிதம்பரம் ஆகிய இடங்களிலும் மோடி ஆவணக்கட்டுகள் கிடைக்கப்பெற்று இன்று அவை தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் குளிரூட்டு ஆவண அறையில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

தஞ்சை அரண்மனை ஆவண அறையில் (தஸ்தா மஹால்) வைக்கப்பட்டிருந்த மராத்திய அரச ஆவணங்கள் பின்னாளில் சரசுவதி மகால் நூலகத்திற்கு மாற்றப்பட்டு ஆங்கு கி. பி. 1962ஆம் ஆண்டு வரலாற்றுக் குழுவினரின் முயற்சியால் பகுத்துப் பிரிக்கப்பட்டன. அவை A, B, C என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மிக முக்கியமான ஆவணங்களாகப் பிரிக்கப்பட்ட A மற்றும் B பிரிவு ஆவணங்கள் சென்னை ஆவணக் காப்பகத்திலும் C பிரிவு ஆவணங்கள் சரசுவதி மகால் நூலகத்திலும் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. இனாம் மற்றும் வருவாய் தொடர்பான ஆவணங்கள் தஞ்சை மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்திலுள்ள ஆவண அறையில் பாதுகாத்து வைக்கப்பட்டன தற்போது சென்னை ஆவணக் காப்பகத்திலிருந்த A மற்றும் B பிரிவு ஆவணங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும் தஞ்சை மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்திலிருந்த இனாம் மற்றும் வருவாய் தொடர்பான ஆவணங்கள் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திற்கும் மாற்றப்பட்டுள்ளன. ஆக, இனித் தஞ்சை மராத்திய மன்னர்களின் மோடி ஆவணங்களைப் பற்றிய ஆய்வினை மேற்கொள்ள விரும்புவோர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும், சரசுவதி மகால் நூலகத்திற்கும் சென்றாலே போதுமானது

பதிப்பில் பிறமொழி ஆவணங்களும் மோடியும்

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, தமிழ் தவிரப் பிறமொழி ஆவணங்களைப் பதிப்பித்து வெளியிட்டாலன்றித் தமிழக வரலாற்றினை முழுமையாக வெளிக்கொணர இயலாது. அதன் முதல்கட்டமாக மராத்திய மோடி ஆவணங்களை மொழிபெயர்த்துப் பதிப்பித்து வெளியிடும் பணி அமைதல் நலம். அம்முயற்சியில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும், சரசுவதி மகால் நூலகமும் இறங்கியிருப்பதால், மோடி உள்ளிட்ட பிறமொழி ஆவணங்களைப் பதிப்பித்து வெளியிடுவதற்கான நெறிமுறைகளைக் கீழ்க்கண்டவாறு வகுத்துக் கொள்வது சிறந்தது.

1. எம்மொழி ஆவணமாயினும் மூல ஆவணங்களை அப்படியே நிழற்படப் பிரதியாக வெளியிடல் வேண்டும்.
2. அம்மொழியினை எழுதத் தற்போது பயன்படுத்தப்படும் வரி வடிவத்தில் அவ்வாவணங்களை எழுத்துப் பெயர்ப்புச் செய்து மூல ஆவணத்தில் உள்ளவாறே தரவேண்டும்.

3 எழுத்துப் பெயர்ப்பில் தவறான பகுதிகள் இருப்பின் அடிக்குறிப்பில் சுட்டவேண்டும்

4 ஆவ்ணத்தின் காலத்தினைக் கண்டுபிடித்து அதனை ஆங்கில நாட்காட்டி முறைக்கு மாற்றித் தருதல் வேண்டும்

5 ஆவணத்தில் சொல்லப்பட்ட செய்தியை அப்படியே தமிழில் தருதல் வேண்டும்

6 அதேபோன்று ஆவணத்தின் உட்பொருளை ஆங்கிலத்திலும் தருதல் வேண்டும் இதனால். பிற நாட்டவரும் அதனை அறிதல் எளிது.

7 ஆவணத்தின் உட்பொருள் தொடர்பான பிற வரலாற்று ஆதாரங்கள். நேரில் கண்ட - கேட்ட செய்தி. அல்லது அதுபற்றிய பதிப்பாசிரியரின் கருத்து இவற்றை அடிக்குறிப்பில் தருதல் வேண்டும். இப்பகுதி ஆய்வாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

8. மூல ஆவணத்திலுள்ள அரும் சொற்களைத் தொகுத்து 'அருஞ்சொற்பொருள் நிரல்' தருதல் வேண்டும்.

9 தேவைப்பட்டால் 'பொருள் முதற்குறிப்பு அகராதி' அல்லது 'சொல் முதற்குறிப்பு அகராதி' போன்றவற்றையும் தரலாம்.

10 ஆவணங்கள் தொடர்பான வரைபடங்கள். பிற மேற்கோள் நூல்கள் முதலியவற்றையும் கொடுக்கலாம்

11 ஆவணப்பதிப்பு முழுமையானதாக இருக்க இடஅடிப்படையிலோ. கால அடிப்படையிலோ. பொருளடிப்படையிலோ ஆவணங்களைத் தொகுத்துப் பதிப்பித்தல் அவசியம்.

12 தொகுக்கப்பட்ட ஆவணங்களின் உட்பொருள் விளங்குமாறு ஒரு விரிவான பதிப்புரையும் நூலின் முகப்பில் இடம்பெறுதல் வேண்டும்.

13 ஆவணப் பதிப்பிற்கு உதவிய சான்றாதாரங்களின் பட்டியல். தகவலாளர்கள். பதிப்பில் உதவியோர் ஆகியோரின் பெயர்கள் முதலியவற்றைக் குறிப்பிட்டு நன்றி பாராட்டுதல் ஒரு நல்ல ஆய்வு நூலுக்கான தேவையாகும்.

14 அனைத்திற்கும் மேலாக அவ்வாறு பதிப்பிக்கப்பட்ட நூலின் கையெழுத்துப்படியை அத்துறை சார்ந்த - மொழியறிந்த அறிஞரிடம் கொடுத்து மதிப்பீடு செய்து கொள்வது நூலின் தரத்தினை உயர்த்துவதாக அமையும்.

நிறைவுரை

1 ஆவணங்கள் எழுதப்பட்ட பொருள். மொழி. வரிவடிவம் ஆகியவற்றின் தன்மை பற்றிய ஆய்வு அவ்வாவணத்தின் காலத்தை அறுதியிட்டுக் கூற உதவுவனவாகும்.

2 தமிழகத்தைப் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு மொழி சார்ந்த மன்னர்கள் ஆட்சி புரிந்தமையால். அவர்தம் ஆவணங்கள் பல மொழிகளில் அமைந்துள்ளன

3. தஞ்சை மராத்திய மன்னர்களின் காலத்தில் வழக்கிலிருந்த மோடி என்ற எழுத்து மராத்தி மொழியினை எழுதப் பயன்படுத்தப்பட்டதால் அவை 'மோடி ஆவணங்கள்' என அழைக்கப்படுகின்றன.

4. மோடி ஆவணங்களைத் தொகுத்துப் பதிப்பித்து மொழி பெயர்த்து வெளியிடும் பதிப்பு முறையின்னை அடிப்படையாகக் கொண்டு பிறமொழி ஆவணங்களையும் பதிப்பித்து வெளியிடும் பணியினை மேற்கொள்ளத் தேவையான நெறிமுறைகள் ஆராயப்பட்டுள்ளன.

5. பிறமொழி ஆவணங்களான தெலுங்கு, மராத்தி, இந்தி, சமக்கிருதம், பார்சி, உருது, ஆங்கிலம், பிரெஞ்சு, டச்சு ஆகியவற்றை முறையாகப் பதிப்பித்து வெளியிட்டால் தமிழக வரலாறு முழுமை பெற மிக முக்கிய சான்றாதாரங்களாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

READINGS

Vivekanandagopal, R., Modi Documents in the TMSSM Library, Sarasvati Mahal Library, Thanjavur, 1999.

„ "Modi Documents in Tamilnadu", **Palmleaf and other Manuscripts in Indian Languages,** Edr. John Samuvel & Saranagapani, Institute of Asian Studies, Chennai, 1996.

„ "An Introduction to Modi documents", **The Journal of the Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library,** Vol. XL. Nos. 3 & 4, 1992.

„ **"மோடி ஆவணம் - ஓர் அறிமுகம்",** **The Journal of the TMSSM Library,** Vol. XLIII, Nos. 1 & 2, 1995.

Ganapathi Rao, S. "Glimpses into our Modi Raj Records - Dhanvantari Mahal", **The Journal of the TMSSM Library,** Vol. XXI, No. 2, 1968.

---------- "The Modi Training Course in the TMSSM Library, Thanjavur", **The Journal of the TMSSM Library,** Vol. XX, Nos. 2 & 3, 1967.

---------- "Historical Research Training at the Sarasvati Mahal, Thanjavur", **The Journal of the Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library,** Vol. XVIII, No. 3, 1965.

□

செ. சேம் கிறிஸ்டோபர்
கிறித்தவ இருக்கை
த்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தத்துவ போதகர் இராபர்ட் தே நொபிலி அடிகளாரின் திருமுகங்கள்

முன்னுரை

தத்துவ போதகர் இராபர்ட் தே நொபிலி கி. பி. 1577ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் உரோமை நகரில் பிறந்தார். இவர் தனது தந்தை பியர் பிரான்சிஸ்கோ என்பவருக்கு மூத்த மகனாவார். இளமையிலேயே இறைப்பணியாற்றுவதில் இணையற்ற ஈடுபாடு கொண்ட இவர் 1603ஆம் ஆண்டு இறைப்பணியில் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டார். நொபிலி அடிகளார் தம் பணித்தளமாகப் பாரதத்தைத் தெரிந்தெடுத்து 1605ஆம் ஆண்டு மே திங்கள் 20ஆம் நாள் கோவா கடற்கரையை வந்தடைந்தார். கோவாவிலும், கொச்சியிலும் பணி புரிந்த இவரது பணி தமிழகத்திற்கு மிகவும் ஏற்புடையது எனக் கருதிய சேசு சபைத் தலைவர் அருள்திரு ஆல்பர்ம் இலயர்சியோ நொபிலியை மதுரைக்கு 1606ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 15ஆம் நாள் அழைத்து வந்தார்.

தமிழ் மக்களோடு பழக இன்றியமையாது துணைபுரியும் தமிழ் மொழியை இராப்பகலாகப் பயின்றார். இம்மொழியில் பேசுவது மட்டுமன்றி 1607ஆம் ஆண்டு தொடங்கி 1658ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 16ஆம் நாள் உயிர் துறக்கும்வரை அரிய பெரிய நூல்களைத் தமிழிலும், சமக்கிருதத்திலும், தெலுங்கு மொழியிலும் இயற்றினார். இவர் கிறித்தவ சமயத்திற்கு ஆற்றிய பணிக்காலத்தில் பல கடிதங்கள் உயர் சமயத் தலைவர்களுக்கு எழுதியுள்ளார். அவற்றில் காணப்படும் பண்பாடு, சமயம், கல்வி, தத்துவம், மொழிப்பற்று முதலியவற்றையும் இதுபோன்று அவரைப்பற்றி அவருடன் வாழ்ந்தவர்கள் பல கடிதங்களையும் எழுதியுள்ளனர். இக்கடிதங்கள் நொபிலியின் பணிகள்பற்றித் தெளிவுபடுத்துகின்றன.

மதுரை நகரம்

நொபிலி அடிகளார் தாம் வாழ்ந்து வந்த மதுரை மாநகரைப் பற்றி மாநில சமயத் தலைவர்களுக்குப் பல மடல்கள் எழுதியுள்ளார். அவைகளில் அவர் குறிப்பிடுவதாவது,

> "மதுரை எவ்வளவு அழகான, மக்கள் தொகை நிறைந்ததொரு நகரம்!...... ஆலயப் பிரகாரங்களில் எல்லாம் கல்வி பயிலும்

பிரம்மச்சாரிய இளைஞர்கள், அங்காடிகளில் எல்லாம் அழகான வாணிபப் பொருள்கள், தெருக்களில் எல்லாம் சேணமிடப்பட்ட குதிரைகள், யானைகளின் அணிவரிசை ....''[1]

என விவரிக்கின்றார். இது அவரது காலத்து மதுரை மாநகரம் எவ்வளவு முக்கியமான நகரம் எனச் சொல்லாமல் சொல்லுகின்றார்.

பண்பாடு

நொபிலி அடிகளார், கர்தினால் பெல்லார்மின் என்னும் சமயத் தலைவருக்கு எழுதிய கடிதத்தின் மூலம் அன்றைய சமுதாயப் பண்பாட்டை ஓவியமாக வரைந்து காட்டியுள்ளார். அக்கடிதம் வருமாறு :

> ''நான் ஒரு கூரை வீட்டில் வசிக்கிறேன். பூசை நிறைவேறியதும் பேட்டி அளிக்கச் சித்தமாகிறேன். யார் வேண்டுமானாலும் உள்ளே வந்து பேசலாம். எவரும் வராத காலங்களில் இந்த நாட்டு மொழியில் நூல் எழுதுவேன். முட்டை, மீன், இறைச்சி என் வாசல் நடையைத் தாண்டி நுழையமுடியாது. இத்தகைய தவ வாழ்வு வாழாவிட்டால் இந்த நாட்டு மக்கள் என்னை ஒரு குரு என்று மதிக்கமாட்டார்கள், என்னிடம் வரவும் இசையார்கள். இப்பொழுதும் ஆஸ்துமா நோயால் மூச்சுவிட முடியாத நிலையில் இக்கடிதத்தை எழுதுகின்றேன். இப்படிப்பட்ட தனிமையும் தபசும் தளர்ச்சியை விளைவிக்கின்றன''[2]

கல்வி

நொபிலி காலத்தில், மதுரையைச் சுற்றியுள்ள இடத்தில் காணப்பட்ட கல்வியின் நிலையை ஒரு கடிதத்தில் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் அறியப்படும் செய்திகள் வருமாறு : நாயக்க மன்னர்களின் ஆதரவோடு பல கல்விச் சாலைகள் அங்கே நடந்தன. பத்தாயிரம் பிராமண இளைஞர்கள் 200 அல்லது 300 பேர் வீதம் பல பாடசாலைகளில் படித்து வந்தனர். ஒவ்வொரு பாடசாலையும் ஒரு குருவின் கண்காணிப்பில் இருந்தது. மாணவர்கள் தங்களுக்கான பாடத்தையும் ஆசிரியரையும் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.[3]

தத்துவம்

> ''இங்குள்ள குருக்களை நாம் அஞ்ஞானிகள் எனக் கருதியிருக்கிறோம் அப்படி நினைப்பது தவறெனக் கருதுகிறேன். அவர்கள் பின்பற்றும் ஒரு ஓலை சுவடியைப் படித்து பார்த்தேன். உரோமில் நான் பயின்ற சமய தத்துவக் களஞ்சியங்களைப் போலவே இந்த சுவடியிலும் பல உயரிய தத்துவங்களைக் கண்டேன். அவர்களுடைய தத்துவங்களுக்கும் நமக்கும் அடிப்படையான வேறுபாடுகள் இருந்தாலும் அவை முழுவதுமே அபத்தம் எனச் சொல்லி ஒதுக்க முடியாது''

என நொபிலி தன்னுடைய சமய அதிபருக்கு எழுதிய கடிதத்தில் இந்திய சமயத் தத்துவங்கள், கிறித்தவ சமய இறையியலுக்கு அதிக வேறுபாடின்றிக் காணப்படுகிறது என எழுதியுள்ளார். மேலும்,

> "இங்கு கற்பிக்கப்படும் வேதாந்த சமய நெறிகளின் பெயரால் அவை தனித்தனிப் பெயரிட்டு அழைக்கப்பட்டன. சமய தத்துவம் பற்றிய படிப்பு - சிந்தாமணி என அழைக்கப்பட்டது இது நான்கு அல்லது ஐந்து வருடங்கள் பயில வேண்டும் அதன் பின்னர் வேதாந்தம் முதலிய பிற நெறிகளைப் பயில வேண்டும். மீமாம்சை, வேதாந்தம், சாங்கியம், யோகம், வைசேசிசம், நியாயம் எனப் பல பிரிவுகள் இருந்தாலும் வேதாந்தமே இவற்றில் எல்லாம் தலைமையிடம் பெற்றிருந்தது"[4]

என ஒரு கடிதத்தில் இந்திய சமயத் தத்துவங்களை விளக்கியுள்ளார்.

சமயம்

தமிழ் நாட்டின் அப்போஸ்தலர் என்று பெருமையாகப் பேசப்படும் நொபிலி அடிகளாரின் முற்போக்கான முறைகளால் உயர்குடி மக்களான பிராமணர்களும் கிறித்தவ சமயத்தைத் தழுவினர். உணவு, உடை, உறையுள் போன்றவற்றில் தமிழ் முறையைக் கையாண்டு காதில் குண்டலம், காலில் பாதக்குரடு, நெற்றியில் சந்தனம், மார்பில் பூணூல், தலைப்பாகை என்று தன்னை ஒரு தமிழ் சந்நியாசியாக மாற்றிக் கொண்டார். கிறித்தவக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் எவரும் தமது பழக்க வழக்கத்தை, உதாரணமாகக் குடுமி வைத்துக் கொள்வது, திருநீறு அணிவது பொட்டு வைத்துக் கொள்வது இவற்றைத் தவிர்க்க வேண்டிய அவசியமில்லை என்று எடுத்துக் கூறினார். இவற்றைச் சமயச் சடங்காகக் கருதக்கூடாது என்பதுதான் இவரின் கொள்கை.

நொபிலியின் சமயக் கொள்கையை எதிர்த்து தாழ்ந்த குலமக்களுக்குச் சமயப்பணி செய்த கொன்சாபோபர்னாந்துசு என்பவர் போப்பிற்கு இவர் கிறித்தவ அடிப்படையான கொள்கையில் மாற்றம் செய்து விட்டார் என்றும், போதனையும், முறையும் பரம்பரைக் கொள்கைக்கு முரணானவை என்றும் கடிதங்கள் எழுதினார். இதனால் நொபிலியின் சமயப்பணிக்குத் தடை ஏற்பட்டது. இந்நிலையில் நொபிலி பல கடிதங்களை 15ஆம் கிரகோரி என்ற போப்பிற்குப் பல விளக்கங்களை எழுதினார். அதனை ஆய்வு செய்து 1623ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31ஆம் நாள் 'ரோமானே சேடிஸ் அன்றிஸ்டெஸ்' என்ற கடிதம் ஒன்றால் தத்துவபோதகரின் சமயப்பணி முறைக்கு ஆதரவும், ஆசியும் வழங்கினார்.

மொழிப்பற்று

தத்துவ போதகர் பன்மொழிப் புலவர் மேலைநாட்டு மொழிகளில் கிரேக்கம், இலத்தீன், இத்தாலியம், போர்த்துக்கீசியம் முதலிய மொழிகளில் இவருக்கு நல்ல பயிற்சி உண்டு. கிரேக்கத்தைத் தவிர மீதி மொழிகளில் எழுதிய மடல்களும், கட்டுரைகளும் பல இன்றும் இருக்கின்றன. இந்தியா வந்தபின் தமிழ், தெலுங்கு,

சமக்கிருதம் என்ற மூன்றிலும் நல்ல பயிற்சி பெற்று அம்மொழிகளில் பல நூலகளை எழுதியிருக்கிறார்[5]

நொபிலி பற்றிய பிற கடிதங்கள்

நொபிலி அடிகளாருடன் பணியாற்றிய அருள்திரு விக்கோ. அருள்திரு கிறிஸ்டோபர் ஜான். அருள்திரு லெயர்சியா தொன் பிரான்சிஸ் ராய். சுவாமி டி. கோஸ்டா ஆகியோர் நொபிலி அடிகள்ார் பற்றிப் பல கடிதங்கள் எழுதியுள்ளனர். அக்கடிதங்கள் வாயிலாக நொபிலி அடிகளாரின் தனிச்சிறப்புக்கள் பலவற்றை அறிந்து கொளள முடிகினறது அவற்றின சில முக்கியக் கடிதக் குறிப்புக்கள் இங்கே தரப்படுகின்றன

கிரங்கனூர் பேராயர் தொன் பிரான்சிஸ்ராஸ். அருள்திரு அக்குவா வீவா சுவாமி அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் நொபிலி அடிகளாரைப் பற்றிக் குறிப்பிடுவதாவது

> ''என்னுடைய மறை மாவட்டத்தில் உள்ள மதுரை மிஷன் மிகவும் ஆன்மீகம் வாய்ந்தது; கடுமையான உழைப்பிற்கு இடமானது. அங்குள்ள சேசு சபைக் குரமார் கடவுளுக்கு தம்மை முழுமையும் அற்பணித்தவர்கள் இந்த மிஷன் இறை ஏவுதலால் ஏவப்பட்டது என்பது திண்ணம். நொபிலி புதிய நடையுடை பாவனையை மேற்கொண்டபோது என்னைக் கவர்ந்தார். நான் அவருடைய ஆயர் என்ற நிலையில் என் ஆலோசனையைக் கேட்டார். நாங்கள் ஒரு திட்டத்தை நடைமுறையை உருப்படுத்தத் தீர்மானித்ததும் நொபிலி அதனைப் படிப்படியாக அமுல் நடத்தினார். நான் ஓரளவுக்கு அவருக்கு உதவியாகப் பணிபுரிந்தேன் அவருடைய புனித முயற்சிகளுக்குத் துணை நின்றேன் பிராமணர்கள் அணிகின்ற பூணூலும். உயர்சாது இந்துக்கள் வைத்துக் கொள்ளும் குடுமியும். சந்தனப் பூச்சும். இன்னபிற சாதிச் சடங்குகளும் சமயச் சார்புடையன அல்ல என்றும் அவை அவர்களுடைய சமூக ஆசாரத்திற்குரியனவே எனறும் கண்டோம் இவைகளை அவர்கள் அனுசரிப்பதனால் யாதொரு தீங்கும் ஏற்படாதெனவும் தீர்மானித்தோம்''[6]

இவ்வாறு நொபிலியின் சமயப் பரப்புதல் முறைக்கு ஆதரவு தெரிவித்து எழுதியுள்ளார்.

கலைவல்லுநராகத் திகழ்ந்த திருமலை நாயக்க மன்னரின் நட்பு நொபிலிக்குக் கிடைக்க. அரண்மனைக்கே வருமாறு தத்துவ போதகரை அழைத்து மன்னர் சிறப்புச் செய்தார். அவருடன் சென்ற சுவாமி டி கோஸ்டா எழுதிய கடிதத்தில்.

> ''அரண்மனைக்கு சென்ற எங்களை நாயக்க மன்னர் அன்புடன் எதிர்வந்து வரவேற்றார் நொபிலி பரிசளிக்கக் கொண்டு வந்திருந்த இசைக் கருவிகளை யெல்லாம் வியப்புடன் பார்த்தார். நொபிலி அடிகளார் மூன்று மொழிகளில் திறம்பட பேசக் கண்டு.

மன்னர் மனம் சொக்கிப் போனார். இந்த சந்நியாசியைப் பற்றி தாம் கேட்டறிந்த பொய்யான வதந்திகளுக்காக வருந்தினார். அவருக்கு இடர் விளைவித்தவர் யார் என அறிய விரும்பினார் 'தமக்குத் துன்பம் இழைத்தவர்களை யெல்லாம் மன்னிக்க வேண்டுமென' நொபிலி சொன்ன வார்த்தைகள் மன்னரை மனம் நெகிழச் செய்தன. தம் ராஜ்ஜியத்தில் சகல உரிமைகளுடன் இருக்கலாம் என உத்தரவிட்டார். ஒவ்வொரு மாதமும் அரசவைக்கு வந்து போகுமாறு கேட்டுக் கொண்டார். ஆர்மோனியக் கருவி வாசிப்பவரை அரண்மனையிலே வைத்துக் கொள்ள விழைந்தார். எங்கட்குப் பல உபசாரங்கள் செய்தார். இறுதியாக எங்களுக்குப் பொன்னாலான சரிகை மாலை அணிந்து மரியாதை செய்தனுப்பினார்''[7]

இவ்வாறு மன்னன் நொபிலியை அழைத்துச் சிறப்பித்ததை இக்கடிதம் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

1644ஆம் ஆண்டு டிக்கோஷ்டா அடிகள் சேசு சபைத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில்,

"தமிழ் மக்கள், கணவன் இறந்தபொழுது பல தேவதைப்பற்றி கூறி அழும் பழக்கத்தை விட்டு இறை ஏசுவின் பாடுகள், வியாகுலத் தாயின் துன்பங்கள், சம்மனசு மக்கள் செய்த பாவங்கள், அதனால் ஏற்பட்ட தண்டனை முதலியவற்றை பற்றி செய்யுள் நூல் ஒன்றும், 2000 அடிகள் கொண்ட நித்திய வாழ்வு பற்றிய பாடல் நூலும், திருமறையைப் பற்றி எழுநூறு அடிகளில் ஒரு பாடல் நூலும் நொபிலி அவர்கள் இயற்றினார்''[8]

எனக் குறிப்பிடுகின்றார்.

1656ஆம் ஆண்டு அந்துவாம் பிரயோன்சா என்பவர் எழுதிய தமது மடலில்,

"நொபிலியின் தூஷணத்திக்காரம் என்ற நூல் எனக்கு என்றும் மிகப் பிடித்தமான நூல். இதில் நமது மதத்திற்கு எதிராக கூறும் தூஷணங்களை மறுப்பதோடு அமையாது அதற்கு விளக்கமும் கொடுக்கின்றார். சமய குருக்கள் எவ்வாறு நடக்க வேண்டும் என்றும், முக்கியமாய் எப்படி ஞானோபதேசம் கற்பிக்க வேண்டும் என்னும் சிறிய அறிவுரையோடு இந்நூலை முடிக்கின்றார்''[9]

இது தூஷணத்திக்காரம் என்னும் நூலைத் தத்துவபோதகரே எழுதினார் என்பதற்குச் சான்றுரைப்பது போன்று இம்மடல் எழுதப்பட்டுள்ளது.

தத்துவ போதகரின் வேண்டுகோள்

தத்துவ போதகர் தாம் இறப்பதற்குப் பத்து நாட்களுக்கு முன்பு ஒரு வேண்டுகோளைத் தாம் எழுதிய நூல்களிலெல்லாம் சேர்க்கும்படி ஒழுங்கு செய்தார்

என்று பல்தசார் டா கோஷ்டா இலத்தீன் மொழிபெயர்ப்பில் கூறுகிறார். இவ் வேண்டுகோளாவது :

> "தமிழிலும், தெலுங்கிலும், கிரந்தத்திலும் (சமஸ்கிருதம்) நான் எழுதினவெல்லாம் நம் தூய அன்னை கத்தோலிக்க உரோமன் திருச்சபைக் கருத்துப்படி இருக்க வேண்டும் என்பது என் விருப்பம் தப்பாகவோ தவறாகவோ புண்படுத்தக்கூடிய முறையிலோ ஏதாவது மறந்து நான் விட்டிருந்தால் அதைத் திருத்தும்படி அவளை (மரியாளை) மன்றாடுகிறேன். இவ்வேண்டுகோளை ஒவ்வொரு சுவடியிலும் சேர்க்கும்படி, இந்நூல்களைப் படி செய்வோரையும் மொழி பெயர்ப்போரையும் மிக உருக்கமாக மன்றாடுகின்றேன்.
>
> சான்.தோமே, 6 சனவரி 1656"[10]

முடிவுரை

இவ்வாறாகத் தத்துவ போதகர் இராபர்ட் தே நொபிலி அடிகளாரின் திருமுகங்கள் வாயிலாக, மதுரை நகரச் சிறப்பு, இந்தியப் பண்பாட்டுச் சிறப்பு, கல்விநிலை, வேதாந்தத் தத்துவத்தின் சிறப்பு, சமயநிலை என்பவற்றை அறிந்து கொள்வதுடன், அவரைப் பற்றிப் பிறர் எழுதிய கடிதங்கள் வாயிலாக அவரின் தனிச்சிறப்பினையும் அறியமுடிகிறது. இவரின் கடிதங்கள் தற்பொழுது பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலகமெங்கும் அவர் கருத்துக்கள் பரவி வருகின்றன.

குறிப்புக்கள்

1. நொபிலி, மாநில சமய அதிபர்களுக்கு எழுதிய மடல்.
2. தனராசு, தத்துவ போதகரின் சமயப்பணி, திருச்சி.
3. Diccimila Student Bramani - Laerzio 8-12-1610.
4. Quoted in J.I. Miranda, Fr. Robert de Nobilis Mission.
5. A Proanca Statement.
6. தொன் பிரான்சிஸ்ராஸ், அக்குவாவீவா சுவாமிக்கு எழுதிய கடிதம்.
7. சுவாமி டி கோஸ்டா 1644இல் எழுதிய கடிதம்.
8. மேலது, சேசு சபைத் தலைவருக்கு எழுதிய மடல், 1644.
9. அந்துவாம் பிரயோன்சா (1656) மடல்
10. Fr. Balthasan da Costa S.J. Companion of Fr. De Nobili wrote these epigrams in Latin in his introduction to his translation of De Nobili Catechism. Fr. F. Gilmore has kindly rendered those epigrams in to English.

□

R. SUBBARAYALU
Senior Deputy Registrar
Tamil University
Thanjavur

A DRAGOMAN'S DIARY BECOMES HISTORY

History is the document on the past. It is written on the basis of evidences. The evidences are available in different forms. They may be inscriptions in bricks, stones and metals or descriptions in poetry and other literature. The architectural forms and artifacts from excavations also throw light on history. The letters of pilgrims and travellers also constitute historical documents. The travel documents of Fah-Hian and Sung-Yun, the Buddhist pilgrims from China to India helped the writing of History of India during 518 A.D.

India was a dream country for the people of the west and every country wanted to have their trade with India. This has resulted in several voyages and expeditions. The people of India were courteous to foreigners and welcomed their trade. The local chieftains, who ruled the smaller states fought within themselves and preferred foreigners' intervention. This has resulted in the colonialisation of India to the western powers.

The colonies in India belonged to the British, French, Danish and Portughese Governments. The records of the transactions of these governments and related documents helped the historians in writing the Indian history during the colonial rule. But it is astonishing to see a Dragoman's diary becoming history.

When a Government is run in a foreign soil, there is a need for the services of translators and interpreters to communicate with the native people. The governments of British India and French India appointed such Dragomen who were called 'Dwibashies', meaning the persons who are experts in two languages.

The French Government in Pouduchery appointed Mr. Anandarangam Pillai as a Dragoman. He had the practice of recording

the day-to-day official transactions in the form of a diary. This diary is the wealth of information on the status of the eighteenth century Tamil land. This diary was in the form of manuscripts for quite a long time. Subsequently it was printed in the form of book in eight volumes. This has become part of history since many of the confidential dealings which are not available from any other source are found only in this diary.

The diary of Anandarangam Pillai was not written in chaste Tamil, because it was not written for the purpose of publication. The language used in the diary is very much colloquial. The influence of French language in writing the diary could not be avoided. This area can very well be investigated by socio-linguistic scholars.

The diary reveals that the history would have changed in Tamil Nadu, but for the personal rivalry between the Pouduchery Governor M. Dupliex and the French Naval Captain M. de la Bourdonnais. The French Council at Pouduchery resolved to capture the Madras city and has entrusted the task to the Navy under the captainship of M. de la Bourdonnais. He sought all powers in decision-making. It was decided to install Mr. De Espremenil as soon as the fort at Madras was captured and the French flag was hoisted.

The ships had landed at Madras and the fort was captured. But the decisions of the Council was not implemented. M. de la Bourdonnais took arbitrary decisions. He did not care for the other officials. He made an agreement with the English Governor, which provided the following :- 1. The English people at Madras city will part with the money, cloth and other wealth to the French army. 2. The treasure in the Fort will be shared equally between the French and English. 3. The arms and ammunitions in the Madras Fort will also be shared equally. 4. The English army will not enter into any war with the French army in the future. 5. The English Company will pay eleven thousand Varahans to the French Government for which a Bill be drawn, payable at Paris. This agreement was enforced by M. de la Bourdonnais and he informed this to the French Government at Pouduchery. The objections raised by other officials were ignored by him. He said that he had the authorisation to take decisions.

When M. de la Bourdonnais was ready to leave Madras with all his booty, he came to know that two lakh varahans were buried under the flag post. He got angry and torn out the agreement and imprisoned the English Governor Mr. Morse. He took charge of the fort and handed over it to the French officials M. de Esperemenil. This

turn of event made the French officials and the Pouduchery Governor M. Dupliex to forget his misdeeds.

However, the ships that left Madras were caught in the storm and broken into pieces near Kovalam. This has further weakened M. de la Bourdonnais. He wrote to the English Company that they have to pay eleven and half lakhs Varahans and redeem the Madras fort, failing which they would not have any claim on the fort in future.

The French and English armies had subsequent encounters. M. de la Bourdonnais was tried at Paris for his anti-council activities. If the power struggle between M. de la Bourdonnais and M. Dupliex was avoided, M. de la Bourdonnais would have captured Devanampattinam town and thereafter driven out the British people from South India. The history would have changed its course.

The diary of Anandarangam pillai is unique in nature as it contains the social, economic and political information of Tamil Nadu during the eighteenth century. Minute details of customs and habits of the people are seen in the diary. Incidents of kidnapping of children and religious conversions without consent are recorded in the diary. Bribery is found to be prevailing everywhere. The army looted innocent people in villages. The people could not live peacefully due to frequent invations. Slavery was also found to exist during the period. Many of the historical incidents mentioned in the diary are not found in any other source. Thus, a Dragoman's diary becomes history - a rare feature in the historical writing.

□

R. MURALI
Senior Superintendent
Tamil University
Thanjavur

THE KASHMIR PROBLEM AS REVEALED FROM SARDAR PATEL'S LETTERS

One of the foremost and outstanding personilities of India who played a prominent role in the national struggle for Independence and after it, was Sardar Vallabhbhai Patel. He was a towering personailty equal in stature to Pandit Jawaharlal Nehru, though he had to take the second place because of the Mahatma's preference for Nehru. But for Sardar Patel, India would have remained fragmented with hundred of states, big and small, which were left free to make their choice whether to merge with India or Pakistan or to remain independent.

Patel dreamt of a united India strong and powerful. He won over the princes by tact and firmness. Ultimately all the 538 states excepting Kashmir, became a part and parcel of United India.

He achieved this with the help of his Secretary V. P. Menon, and it earned for him the well-merited title 'Iron man of India' and 'Bismarck of India'. But for him, as already said, India would not have been one. He was a great patriot of the country. He was a hard-headed realist who did not believe in mere theories but maintained always an objective attitude. His robust realism and his iron will worked wonders in those early turbulent days after partition. He was a simple person who could lead India with his rock-like will power. He was a total contrast to Jawaharlal Nehru who was an aristocrat and a dreamer. Sardar Patel was rooted in the soil and knew how to win over men. Altogether his personality and character were such as to make people say : "Had Sardar been alive today our country would not have seen such hard days."

In the process of integrating the Princely States, Sardar Patel had to face problems, only in regard to three of them;

Kashmir, Hyderabad and Junagadh. Of these Hyderabad was merged with India after a "Police action", after putting down the violent Razackers. Junagadh ultimately came to India, But it was in Kashmir that we had to face a problem created by Pakistan which continues to remain unsolved even today.

The Maharaja of Kashmir was Hari Singh who wanted to be independent without joining either India or Pakistan. It is a large state strategically placed at the crown of India with Pakistan to the west, Russia and China to the North, and Tibet in the east. After independence in (22-10-1947) 5000 tribals of Pakistan along with Pakistan regular soldiers overran the western part of Kashmir, while the Maharaj was still dithering about accession in it India. Quick action by Sardar Patel and by V. P. Menon who rushed to Srinagar, to make the Maharaja sign, the Instrument Accession on 26-10-1947 proved to be the beginning of the struggle against the invaders. The Indian army which entered the fray pushed back the invaders successfully by great acts of valour back to what is now called, the Line of Control (LOC). Had the Maharaja signed the agreement earlier, there would have been no Kashmir problem. Even afterwards, had not the Prime minister Jawaharlal Nehru taken the matter to the United Nations Security Council but allowed a free hand to the army under General Thimmaiah, they could have taken back Kashmir. In fact, the Pakis were on the run; the army wanted only a week to complete the operations and to throw the invaders back into Pakistan but they were overruled by Nehru.

Let us now look at some of the letters of Sardar Patel concerning the Kashmir situation. The letter of Sardar Patel written on 05-07-1946 to Mahatma Gandhi refers to Sheik Abdullah's internment. The Sardar's letter dated 08-07-1946 is about the ban on Panditji entering Kashmir. To remove the ban, the letter was written to Field Marshall Lord Wavell, New Delhi.

In 16-07-1946 Patel wrote to Gandhiji that Wavell said that the Ruler of Kashmir was getting in touch directly with Pandit Nehru, In 17-07-1946 Patel writes to Mahatma Gandhi mentioning the note of the Kashmir ruler regarding his intention to honour his association with India.

In 14-08-1948 Patel, speaking on the Commemoration of the First Anniversary of India's Freedom refers to the many trials and tribulations undergone by the national leaders and the sacrificed made by the freedom fighters. He also refered to the fact that

India acquired Kashmir by lawful means only. He expected danger from Pakistan soon. In the same speech he spoke thus :

> "A fighting is going on in Kashmir and the ulcer of Hyderabad still continues to spread poison in the rest of India..........."

Again he said :

> "Three states alone remained outside Junnagadh, Hyderabad and Kashmir and it was in these three states that Pakistan found an opportunity to intervene. We warned them not to intervene in our domestic matters like thieves and dacoits, but they did not heed us".

Pakistan had always given trouble to India right from the beginning because of the "Two Nations theory" propounded by M.A. Jinnah. The leader of the Muslim League. The nationalist leader of Kashmir Sheikh Abdullah assured that Kashmir's future lay only with India, and Kashmir can maintain its individuality onlly if it acceded to India. If it merged with Pakistan, it will lose its identity.

Thus it may be seen that it was Sardar Patel who was responsible for the making of a united India by bringing together the 538 independent states which could have created many problems if they had been allowed to remain independent or merged with Pakistan, because of contiguity or their muslim population or their muslim rulers. This earned for him, the title the 'Bismarck of India' after the great German statesman who unified the Germany in the 19th century.

Sardar Vallabhbhai Patel died in December 1950, But in the forty months, he was in office, he had worked wonders for the new nation. Had Sardar Patel lived a few more years economic and social position would have been different, the country would have been stronger and Kashmir problem would have been settled long ago. But instead, we are still facing the potential danger of war with our neighbour still, because of Kashmir.

References

1. Nandurkar, **Sardar's Letters - Mostly Unknown**, Sardar Vallabhbhai Patel Smarak Bhavan, Ahmedabat, Vol. I to V, 1978.
2. Panjabi, K.L., **The Indomitabb Sardar**, Bharatiya Vidhya Bhavan. Bombay, 1962.

□

கு. வெ. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

பாஸ்கர சேதுபதி ஆவணங்கள்

இராமநாதபுரம் சீமை எனவும், சேதுநாடெனவும், மறவர் சீமை எனவும் புகழ்த்திருமணந்து பொற்புற விளங்கிய தென்தமிழ் நாட்டுப் பகுதியில் இராமநாதபுரம், சிவகங்கை, திருவாடானை ஆகிய ஊர்கள் அடங்கும். இந்நிலப் பகுதியைக் கி. பி. 1605 முதல் மறவ மன் குடியினர் அரசரர்ய் வீற்றிருந்து செங்கோல் செலுத்தினர். இம்மன் மரபில் கூத்தன் சேதுபதி, இரண்டாம் இரகுநாத சேதுபதி, கிழவன் சேதுபதி, முத்துராமலிங்க சேதுபதி, இரண்டாம் முத்துராமலிங்க சேதுபதி, பாஸ்கர சேதுபதி எனும் புகழ்மிக்க மன்னர் பலர் இடம்பெற்றனர். எனினும் "மன்புகழ் நுங்கள் மரபினோர் புகழ்களெல்லாம் நின்புகழ் ஆக்கிக் கொண்டாய்" என்று கம்பன் கூறுமாறு சேதுமன்னர் யாவரினும் புகழ்மிக்க உரவோராக விளங்கியவர் பாஸ்கர சேதுபதி மன்னரேயாவர்.

பாஸ்கர சேதுபதி குறித்த ஆவணங்கள் பல கிடைத்துல. மன்னர் குடும்பத்தில் அக்கறை மிக்கவரும் தமிழ்நாட்டு வரலாற்றாசிரியருமான எஸ். எம். கமால் பாஸ்கரரின் அன்றாடச் செலவுக் கணக்குப் பதிவேடு ஒன்றைக் கண்டுபிடித்துத் தந்துள்ளார். இப்பதிவேடு

> "மதுரை திருப்பரங்குன்றம் ஆலயங்களில் வழிபாடு, ஆங்கில நீதிபதிக்கு விருந்து அளித்தது, சென்னை ராயப்பேட்டை 'உட்லண்ட்ஸ்' மாளிகையில் தங்கல், புரசை மயிலை திருவல்லிக்கேணி ஆலயங்களில் வழிபாடு, அர்ச்சகர் தேவதாசிகளுக்கு அன்பளிப்பு, ஆர்க்காட்டு நவாப் சென்னை கவர்னர், திருவனந்தபுரம், பொப்பிலி மன்னர்களது தொடர்பு, பொது நிறுவனங்களுக்கு அன்பளிப்பு, சட்ட வல்லுநர் பாஷ்யம் ஐயங்கார், பாடகர் தட்சிணாமூர்த்தி சிவன் ஆகியோருடன் அளவளாவியது, ஷேக்ஸ்பியர் நாடகம் கண்டு களித்தது - போன்ற அன்றாட நிகழ்ச்சிகளுக்குச் செலவு செய்யப்பட்ட விவரங்களையும் இந்தப் பதிவேடு தருகிறது."

என்று குறிப்பிடுகின்றனர்.[1] இப்பதிவேட்டிலிருந்து மன்னரின் கொடைக் குணமும், அரசியல் நிகழ்வுகளில் அவருக்கிருந்த அக்கறையும் திறனும் அறியப் பெறுகின்றன.

---

1. எஸ். எம். கமால், **மன்னர் பாஸ்கர சேதுபதி**, பக 24-25

மன்னர் சென்னை செல்வதற்கு மதுரை வரையில் குதிரைகள் பூட்டிய கோச் வண்டியில் சென்றிருக்கிறார். பின்பு புகை வண்டியில் பயணம் தொடர்ந்திருக்கிறார் குதிரைகளும் வண்டியும் புகை வண்டியில் கொண்டு செல்லப் பெற்றுச் சென்னை நகர்ப் பயணத்தில் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.

மன்னர் பாஸ்கரர் வெள்ளையாட்சிக்குட்பட்டே நிருவாகம் இயற்றும் பொறுப்பிலிருந்தார். முழு உரிமையுடைய மன்னராக இல்லாமை மன்னர் உள்ளத்தில் கவலை தோற்றியிருக்கக் கூடும். மன்னர் திருமணத்திற்கே வெள்ளை ஆட்சியின் ஒப்புதல் பெற்றே செய்ய வேண்டியிருந்திருக்கிறது. திருமணத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாய் செலவிட்டுக் கொள்ள இசைவு வழங்கப் பட்டிருக்கிறது. இன்றைய மதிப்பிற்கு இஃது ஏறத்தாழ மூன்று இலட்சமாகும். இந்தத் திருமணம்13-05-1888 இல் நிகழ்ந்துள்ளது. இத்திருமணம் குறித்து ஒரு கும்மியும் ஓர் ஊசலும் அந்நாளில் புலவோரால் பாடப் பெற்றிருக்கின்றன.

கன்னல் கமுகு எழில்காட்டும் காழிவரு தம்மகனார்க்கு
இன்னமுதம் தேவியொடும் எழுந்தருளி உண்பித்த
மன்னவனார் திருவருளால் வாழிநனி துணைவியுடன்
பன்னுபுகழ்ச் சேதுபதி பாஸ்கரசாமிக் கோவே.[2]

என்பது கும்மிப்பாட்டுள் ஒன்று. இவ்வாவணங்களில் சேதுபதி குடியினர் தம் இறையுணர்வும், சமய உணர்வும் வெளிப்படுகின்றன. இதுபோலும் ஆவணங்கள் பல இருப்பினும், இக்கட்டுரையில் குறிப்பிடத்தக்கதும், சேதுபதி மன்னரின் தமிழ் ஆர்வத்தைக் காட்டுவதுமான ஒன்று மகாவித்துவான் இரா. இராகவையங்காருக்குப் பாஸ்கரர் அளித்த ஊதிய உரிமை குறித்த ஆவணமாகும். இதனை ஐயங்கார் குடும்பத்தினர் இன்றும் பாதுகாத்து வருகின்றனர்.

மகாவித்துவான் இரா. இராகவையங்கார் சேது மன்னரவையின் அவைப் புலவராகவும், செந்தமிழ்ப் பத்திராபதிராகவும் விளங்கிய பேரறிவாளர்; சிறந்த ஆராய்ச்சித் திறன் மிக்கவர்; நயமிகு சொற்பொழிவாளர். இவருக்கு அரசு திங்கள் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய் ஊதியமாக அளித்து வந்தது. இதனை மாற்றிப் பசலி ஒன்றுக்கு அறுநூறு ரூபாயும், பல்லக்குச் செலவிற்காக முப்பத்தைந்துமாக ரூ635 ஐ அளிப்பதாக முடிவு செய்து அதனை ஓர் உரிமை ஆவணமாகப் பதிவு செய்து அளித்துள்ளனர்.

"....தங்களுக்கு மாதம் 1க்கு ரூ50க்குக் குறையாமல் கிராண்ட் ஏற்படுத்தி ஷெ தர்மமகமை ஐவேஜியில் தங்கள் ஆயுட்காலப் பரியந்தம் மாற்றப்படாத முக்கிய ஸ்திரமான ஐட்டமாக வைத்துத் தங்களுக்குச் செல்லாக்கி வரும்படி 1900 ஷு பிப்ரவரி மாதம் 21வ யில் நம்மால் ஷெ தர்ம மகமைக்குப் ப்ரொஸீடிங்ஸ் எழுதப் பெற்று தாங்களும் மாசம் 1க்கு 50 ஆக மேற்படி மகமை ஐவேஜியில் பெற்று வருகின்றீர்கள். இப்போது நாம் நமது சமஸ்தான தர்மமகமை சம்பந்தமாக ஸ்திரமான ஏற்பாடுகள் செய்து வருவதில் தாங்கள் ஷெ மகமை ஐவேஜியின் தர்மத்தில்

2. தாம்பரம் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சின்னசாமிப் பிள்ளை பாடிய பாஸ்கரசாமி சேதுபதியவர்கள் திருமணஊசல்

முக்கிய ஸ்திரமான ஐட்டத்தில் சேர்ந்தவர்கள் ஆதலாலும் தாங்கள் நமது சேது சமஸ்தான வித்வானாக இருத்தலைத் தவிர வேறு எந்த சமஸ்தானத்திலும் கல்விச் சாலையிலும் தங்கள் ஆயுள் கால பரியந்தம் சர்வீஸுக்குப் போகப்படாதென்று நம்முடைய உத்தரவுக்குத் தாங்கள் கட்டுப்பட்டு ஒப்புக் கொண்டிருப்பதனாலும் ஷெ ப்ரொஸீடிங்ஸை அனுசரித்து மேல்கண்ட மாசமொன்றுக்கு ரூ50 ஆக உள்ள கிராண்டினை பசலி ஒன்றுக்கு ரூ600 ஆக வைத்து நம் முன்னோர் முறைமையை அனுசரித்து நம்மால் தங்கள் வித்தியா கௌரவத்தைப் பாராட்டித் தங்களுக்குச் சம்மானிக்கப்பட்ட பல்லக்கின் செலவுக்காக ஷெ தர்ம மகமை ஐவேஜியினின்றும் தங்களுக்குக் கொடுத்துவர ஏற்பட்டபடி வருஷம் 1க்கு ரூ35ம் சேர்த்து ஆக பசலி ஒன்றுக்கு ரூ635 அறுநூற்று முப்பந்தைந்து வீதம் ஷ 1311ம் பசலி முதல் தங்கள் ஆயுள் காலம் வரை தங்களுக்குச் செல்லாக்கி . . . ."

வரவேண்டுமென்று ஆவணம் கூறுகின்றது. பொருள் நெருக்கடி மிகுதியாயிருந்த நிலையிலும். மனம்போல் செலவழிக்க உரிமையற்ற காலத்திலும் சேதுபதி மன்னர் தமிழ் காக்கத் தவறிற்றிலர். இந்தப் பத்திரம் மதுரை ஆவணப் பதிவு அலுவலகத்தில் 09-11- 1901 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனை ஒட்டி முத்துப் பல்லக்கில் இராகவையங்காரை அமர்த்திப் பாஸ்கர சேதுபதி அப்பல்லக்கைத் தாமே சுமந்த பெருமைக்குரிய நிகழ்வும் நடந்தது. இதனால்தான் மன்னர் தம் இளவயதில் இறந்தபோது இராகவையங்கார்.

பாட்டும் உரையும் பயிலாப் பதடிகள்தம்
ஒட்டைச் செவியுள் உகுப்பேனோ - நீட்டுகொடை
செங்கையால பாற்கரனே செந்தமிழ்ப்பாவின் சுவையை
எங்கையா சொல்வேன் இனி

என மனம் வருந்திப் பாடினர். சேதுபதியின் ஆவணங்கள் பலப்பல பாட்டாய் உரையாய் அமைந்துள்ளன. அவற்றையெல்லாம் ஆராய்வது அறிஞர்தம் கடனாகும்.

□

க. சிவகாமி
நூலகர்
பெரியார் நூற்றாண்டு மகளிர்
தொழில் நுட்பக் கல்லூரி
வல்லம் 613 403

நூலகப் பகுப்பும் ஆவணப் பகுப்பும்

முன்னுரை

மானுட சமுதாயத்தின் அறிவுப் பசியைத் தணிக்க இரு வழிகள் உள. ஒன்று நூல்; மற்றது ஆசிரியர் கற்றலும் கேட்டலுமாகிய இவ்விரண்டினுள் கற்க உதவுபவை நூலகங்கள். நூலகங்களில் சேர்த்துப் பாதுகாக்கப்பட்டு வரும் அரிய கருவூலங்கள் பலவகைப்படும். அச்சு நூல்கள், சுவடிகள், ஓவியங்கள், வரைபடங்கள், ஒலி நாடாக்கள், நுண்படச் சுருள்கள், நுண்பட அட்டைகள், ஒளி வில்லைகள், கம்ப்யூட்டர் ஃபிளாப்பி மற்றும் சி டி. ஆகியவை தற்காலத்தில் காணப்படும் நூலகப் பொருட்களாகும். அச்சு நூல்களை விடவும் பிறவகைச் சாதனங்களின் மூலம் அறிவு பெறுவது இருபத்தொன்றாம் நூற்றாண்டில் மிகவும் எளிமையாகி விடும். ஆனால், நமது முன்னோர்களின் வரலாறு, சமுதாய அமைப்பு, நாகரிகம், பண்பாடு, கலை முதலியவற்றை அறிய அடிப்படைச் சான்றுகளாக இருப்பவை ஆவணங்களே. இவ்வாவணங்கள் அவை எழுதி வைக்கப்பட்ட பொருளாலும், எழுத்து வடிவத்தாலும் மொழியாலும் பல வகைப்படுவன.

நூல்களும் ஆவணங்களும்

தற்காலத்தில் 'நூல்' என்பது ஏதேனும் ஒரு பொருள் பற்றி எழுதி அச்சிடப்பட்டுக் கட்டுச் செய்யப்பட்ட தொகுப்பாக விளங்குவது எனக் கொள்ளலாம். பல்வேறு தலைப்புக்களில் நூல்கள் சேகரித்து வைக்கப்பட்டுப் பலரும் பயன்பெறச் செய்வதே நூலகமாகும்.

> "ஒரு பெரிய நூலகத்தில் ஒரு நூல் எந்த இடத்திலுள்ளது என்பதைச் சரியாக அறிந்து எடுக்கவும், அவ்வாறு எடுத்துப் பயன்படுத்திய நூலை மீண்டும் அதே இடத்தில் வைக்கவும், புதிய நூல்களை அவற்றின் நுவல் பொருளுக் கேற்றவாறு வைக்கப்பட வேண்டிய இடத்தை முடிவு செய்வதற்கும் நூலகப் பகுப்பு (Library Classification) மிக அவசியமாகும்."[1]

ஆனால், ஆவணங்களைப் பொறுத்தவரை, கிடைத்தவற்றை அப்படியே

1 S.R Ranganathan, **Elements of Library Classification**, p. 6.

புகுத்து வைத்துப் பயன்படுத்த முடியும். அவை நுவலும் பொருள் ஒன்றாகவோ, பலவாகவோ இருக்கலாம். அவற்றை நம் விருப்பப்படி அமைக்க இயலாது. அவ்வாறு ஆவணங்கள் தொகுத்துப் பகுத்து வைக்கப்பட்ட இடம் 'ஆவணக் காப்பகம்' எனப் பெயர் பெறும். ஆவணக் காப்பகத்தில் ஆவணங்களைப் பகுத்து வைத்துள்ள முறையைப் பற்றி (Archives Classification) ஆராய்வதோடு அதனை நூலகப் பகுப்போடு ஒப்பிட்டுப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நூலகப் பகுப்பில் ஆவணங்களின் இடம்

நூலகவியல் துறையில் பண்டைக்காலம் தொட்டே நூல்களைப் பகுப்பதில் பல்வேறு முறைகளைப் பின்பற்றியுள்ளனர். ஒவ்வொரு முறையினையும் புதிதாக உருவாக்கும் போது, பழைய முறையினைப் பின்பற்றி - சிற்சில மாற்றங்கள் செய்து புதிய முறையினை நடைமுறைப் படுத்தியுள்ளனர். எனினும், தற்போது பயன்பாட்டிலுள்ள சில பகுப்பு முறைகளையும், அவற்றில் ஆவணங்களின் இடத்தினையும் காணலாம்.

1. தெவி டெசிமல் பகுப்பு (Dewey Decimal Classification)

இம்முறை கி. பி. 1876ஆம் ஆண்டு முதன்முதலில் மெல்பில் தெவி என்பவரால் வெளியிடப்பட்டது. இந்த நூலின் பெயர் "A Classification and Subject Index for cataloguing and arranging the books and pamphlets of a library" என்பதாகும். இதனுடைய திருத்தப்பட்ட பதிப்புகள் பல வெளிவந்தன. இதன் அடிப்படையாவது, உலகத்திலுள்ள பொருள்கள் அனைத்தையும் பத்துப் பிரிவுகளில் அடக்குகிறார். ஒவ்வொரு பிரிவிற்கும் நூறு உட்பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

000	பொதுவானவை
100	தத்துவமும் அது சார்ந்தவையும்
200	சமயம்
300	சமூக அறிவியல்
400	மொழி
500	தனி அறிவியல்
600	தொழில் நுட்பம்
700	கலை
800	இலக்கியம்
900	வரலாறு, புவியியல் மற்றும் தொடர்பானவை.

இவற்றுள் 'பொதுவானவை' என்ற தலைப்பின் கீழ் சுவடிகள், ஆவணங்கள் பகுக்கப்பட்டுள்ளன.

025. 171	-	சுவடிகள், ஆவணங்கள் சார்ந்தவை மற்றும் அரியன
1712	-	சுவடிகள்
1714	-	ஆவணம் சார்ந்தவை

1716 - அரியன

மேலும், 'ஆவண மேலாண்மை' குறித்த செய்திகள்

651 5 - ஆவண மேலாண்மை

என்ற எண்ணில் குறித்து வைக்கப்பட்டுள்ளன.

2. பன்னாட்டு டெசிமல் பகுப்பு (Universal Decimal Classification)

கி. பி. 1895இல் முதன் முதலில் நடைபெற்ற 'பன்னாட்டு மேற்கோள் நூல் மாநாட்டில்' "பன்னாட்டு மேற்கோள் நூல் நிறுவனம்" உருவாக்கப்பட்டது இந்த அமைப்பு உருவாகக் காரணமாக இருந்த பெல்ஜிய நாட்டு பால் ஆம்லெட் மற்றும் ஹென்றியா பாண்டெயின் ஆகியோர் முந்தைய தெவி டெசிமல் பகுப்பினைத் திருத்தமுற அமைத்து கி பி 1905ஆம் ஆண்டு முழுமையான பதிப்பாகப் பிரெஞ்சு மொழியில் வெளியிட்டனர்.

இப்பகுப்பில் 'அலுவலக மேலாண்மை' என்ற பகுப்பில் ஆவணங்கள் வகைப்படுத்தப் பட்டுள்ளன.

651 5 - பதிவுகள், ஆவணங்கள், கோப்புகள் மற்றும் ஆவணக் காப்பகங்கள்

.52 - ஆவணங்கள் வகைகள், கையினால் எழுதப்பட்டவை, தட்டச்சு செய்யப்பட்டவை முதலியன.

தவிர, மற்றொரு பகுப்பிலும்

02 - ஆவணங்கள் தொகுப்பு, பகுப்பு, வகைப்படுத்தல் எனக் கொடுக்கப்பட்டுள்ளன

.052 - கையினால் எழுதப்பட்டவை

054 - தட்டச்சு செய்யப்பட்டவை

.2 - எழுதப்பட்டமுறை, எழுத்து அல்லது குறியீடு

.21 - ஓவிய எழுத்து, குறியீடு, பிற எழுத்து

23 - எழுத்து - மொழிக்கானது

இப்பகுப்பில் ஆவணங்களின் எழுத்து முறை, மொழி ஆகியனவும் பகுத்துக் காட்டப்பட்டுள்ளன

3. நூலகக் காங்கிரஸ் பகுப்பு (Library Congress Classification)

கி பி. 1800 இல் நூலகக் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இதன் சார்பாக ஜே சி எம். ஹன்சன் என்பவர் நூல் பகுப்பு முறைகளான தெவி டெசிமல் பகுப்பு, யுனிவர்சல் டெசிமல் பகுப்பு, மற்றும் சி. ஏ. கட்டரின் விரிவான பகுப்பு ஆகியவற்றை ஆராய்ந்து இவை நூலகக் காங்கிரஸ் நூல்களைப் பகுப்பதற்கு உகந்தவை யல்ல என முடிவு செய்தார். அதனால், 'நூலகக் காங்கிரஸ் பகுப்பு முறை' உருவாக்கப்பட்டு 1901

மற்றும் 1904 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டது. இதன்படி, ஆங்கில எழுத்துக்களான A, B, C, D, . . . யின் அடிப்படையில் பொருள்கள் பகுக்கப்பட்டன. எனினும் I, O, W, X, Y ஆகிய எழுத்துக்கள் மட்டும் பயன்படுத்தப்படவில்லை.

A	-	பொதுவானவை
B - Bj	-	தத்துவம்
BL - BX	-	சமயம்
C	-	வரலாற்றின் கிளை அறிவியல்
D	-	வரலாறு - பொது மற்றும் பழங்காலம்
EF	-	வரலாறு - அமெரிக்கா
G	-	புவியியல், மானுடவில், மற்றும் நாட்டுப்புறவியல்
H	-	சமூக அறிவியல்
J	-	அரசியல்
K	-	சட்டம்
L	-	கல்வி
M	-	இசை
N	-	நுண்கலை
P	-	மொழியும் இலக்கியமும்
Q	-	அறிவியல்
R	-	மருத்துவம்
S	-	வேளாண்மை
T	-	தொழில் நுட்பம்
U	-	இராணுவ அறிவியல்
V	-	கடற்படை அறிவியல்
Z	-	மேற்கோள் நூல்கள் மற்றும் நூலக அறிவியல்

இப்பகுப்பில், பொதுவானவை அல்லது மேற்கோள் நூல்கள் மற்றும் நூலக அறிவியல் ஆகிய பகுப்பில் ஆவணங்கள் அடக்கப்பட்டிருத்தல் கூடும். ஏனெனில், அதனைச் சரிபார்க்கத் தேவையான மேற்கோள் நூல்கள் இல்லை.

4. கோலன் பகுப்பு முறை (Colon classification)

கி. பி. 1924ஆம் ஆண்டு சீர்காழி இராமாமிருத ரங்கநாதன் தமது நூலகவியல் படிப்பை இலண்டனில் பயின்றபோது இம்முறையை அவர் உருவாக்கினார். இதன்படி, டெசிமல் பகுப்பில் பயன்படுத்தப்பட்ட எண்முறைகளும், நூலகக் காங்கிரஸ் பகுப்பில் பயன்படுத்தப்பட்ட ஆங்கில எழுத்துக்களும் ஒன்றாக்கப்பட்டு முதன்மை வகுப்பிற்கு ஆங்கில எழுத்துக்களும், துணை வகுப்பிற்கு எண்களும் பயன்படுத்தப் படுகின்றன. இதனால், மிக அதிகமான பொருட்கள் இப்பகுப்பில் சேர்த்துக்

கொள்ளப்பட்டிருக்கின்றன.

'பொதுவானவை' என்ற தலைப்பில்

12 சுவடிகள்

128 ஆவணங்கள்

17 வரைபடங்கள்

ஆகியன பகுக்கப்பட்டுள்ளன. பின்னர் ஆவணங்களுக்குரிய மொழிப்பகுப்பு 1 முதல் 3 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட இந்நான்கு பகுப்புக்களுள், அதிகமாகப் பயன்படுத்தப்படும் பகுப்பு முறைகள் இரண்டு. ஒன்று பன்னாட்டு டெசிமல் பகுப்பு ; மற்றும் கோலன் பகுப்பு. ஏனைய இரண்டும் மிகச் சில நாடுகளிலே தான் பயன்படுத்தப் படுகின்றன இவை தவிர, பிப்ளியோ கிராஃபிக் பகுப்பு (1940), வரிசைப் படுத்தலின் விரிவான முறை (1978) போன்ற பிற பகுப்பு முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. என்றாலும் அவை பெருவாரியாகப் பயன்படுத்தப்படவில்லை.

ஆவணக் காப்பகங்களும் பகுப்பு முறைகளும்

> "ஆவணக் காப்பகம் என்பது இந்தியாவின் கடந்த காலத் தகவல்களின் கருவூலமாகும். அங்குள்ள மதிப்பிடமுடியாத் ஆவணச் சேகரிப்புகள், கடந்த காலச் சமுதாயத்தின் வரலாறு, நிருவாகம் போன்றவற்றின்மீது ஒளிவீச உதவுபவைகளாகும்"[2]

ஆவணக் காப்பகத்திலுள்ள பொருட்கள் நூலகத்திலுள்ள சேகரிப்புகளைவிடவும் வேறுபட்டவை. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. வரலாற்று ஆவணங்கள்
2. வரலாற்றுத் தனிநபர் ஆவணங்கள்
3. சமுதாய ஆவணங்கள்
4. நிருவாக ஆவணங்கள்
5. வருவாய் ஆவணங்கள்
6. துறைவாரி ஆவணங்கள்
7. அரிய நூல்கள்
8. வரைபடங்கள்

1. வரலாற்று ஆவணங்கள்

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வரலாற்று ஆவணங்கள் பலவகையாக உள்ளன.

---

2. **The Hindu** Speaks on Libraries, Kasturi & Sons Ltd., Chennai, 1992, p 156.

1. மராட்டியர் வரலாறு கூறும் மராட்டி - மோடி எழுத்து ஆவணங்கள்
2. மெக்கன்சியின் வரலாற்று ஆவணங்கள்
3. ஆங்கிலேயரின் வரலாற்றுக் குறிப்புகள்

முதலியன.

2. வரலாற்றுத் தனிநபர் ஆவணங்கள்

வரலாற்றில் முக்கிய இடம்பெற்ற தலைவர்கள், சீர்திருத்தவாதிகள், சமயச் சான்றோர் ஆகியோர்களின் கைப்பட எழுதிய கடிதங்கள், ஆணைகள், பேச்சுக்கள் ஆகியன இப்பிரிவில் இடம்பெறுகின்றன.

1. காந்தியடிகளின் கடிதங்கள்
2. அண்ணாவின் உரைகள்
3. நேதாஜியின் பலவிதமான கட்டுரைகள்

முதலியன.

3. சமுதாய ஆவணங்கள்

சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் சமுதாய ஆவணங்களாக மெக்கன்சியின் சேகரிப்பில் உள்ளன.

1. பாளையப்பட்டுக்களின் வமிசாவளி
2. பல்வேறு சமுதாய மக்களைப் பற்றிய ஆவணங்கள்
3. பயணக் குறிப்புக்கள்

இதிலடங்குவன.

4-5 நிருவாக - வருவாய் ஆவணங்கள்

இவ்விரண்டினையும் ஒரேபகுப்பினுள் அடக்கலாம். இவை கோப்புகளாகக் கிடைக்கின்றன. இக்கோப்புகளை ஏ, பி, சி, டி என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். இதனைத் தமிழ்நாட்டில் ‘டாட்டன்ஹாம் பகுப்புமுறை’ என்றும் மகாராட்டிரத்தில் ‘ஆண்டர்ஸன் பகுப்புமுறை’ என்றும் கூறுவர்.

‘ஏ’ பிரிவு ஆவணங்கள் அரசின் முக்கிய முடிவுகள், ஆணைகள், சட்ட முன்வடிவுகள், சட்டத் திருத்தங்கள், வரலாற்றுக் குறிப்புகள் முதலியன இதிலடங்கும். இவை நிரந்தரமாகப் பாதுகாக்கப்படும்.

‘பி’ பிரிவில் 30 ஆண்டுக் காலத்திற்குப் பாதுகாக்கப்படும் கோப்புகள் இடம்பெறும். அரசியல், சமுதாய, பொருளாதார ஆவணங்கள் இவற்றில் கொண்டு வரப்படுகின்றன.

'சி' பிரிவுக் கோப்புகள் ஐந்தாண்டுகளுக்குப் பாதுகாக்கப்படும். சில மாநிலங்களில் இப்பிரிவுக் கோப்புகள் பத்தாண்டுகளுக்குப் பாதுகாக்கப்படுகின்றன. அன்றாட நிருவாகக் கோப்புகள் இவற்றில் இடம்பெறுகின்றன.

'டி' பிரிவில் ஆண்டுதோறும் அழித்துவிடக்கூடிய தற்காலிகக் கோப்புகள் இடம்பெறுகின்றன

6. துறைவாரி ஆவணங்கள்

நிருவாகத் துறைகளின் ஆவணங்கள் துறைவாரியாகப் பகுத்து ஆண்டு வரிசையில் அடுக்கி வைக்கப்படுகின்றன. இம்முறையே எடுத்து வைப்பதற்கு எளிமையானது.

7-8 அரிய நூல்களும் வரைபடங்களும் அச்சிடப்பட்டவைகளும், அச்சிடப்படாதவைகளும் வைக்கப்படலாம்.

நிறைவுரை

1. நூலகங்களுக்கும், ஆவணக் காப்பகங்களுக்கும் உள்ள தொடர்பை விளக்கி, அவற்றின் பாகுபாட்டு முறைகள் விளக்கப்பட்டுள்ளன.
2. நூலகப் பகுப்புமுறை நூல்களுக்காகக் கொடுக்கப்பட்டாலும் அவற்றிலும் ஆவணங்களுக்கென ஒரு பகுப்பு எண் கொடுக்கப்பட்டுள்ளது
3. ஆவணங்களைக் காலவரிசைப்படி, இடவரிசைப்படி, பொருள் வரிசைப்படி, துறை வரிசைப்படி வைத்துப் பயன்படுத்துவதே ஆவணக் காப்பகப் பகுப்பாகும்
4. ஆவணக் காப்பகப் பகுப்பினை இன்னும் விரிவாகப் பகுக்க இயலும். அப்பகுப்பு அவ்வவ்வாவணக் காப்பகத்தின் சேகரிப்பைப் பொருத்து அமையும்.

BIBLIOGRAPHY

Cook, Michael	**The Management of Information from Archives,** Gower Publishing Company Ltd., Hants GV 11 3HR 1931.
Desai, Sanjiv, P.	**Abhilekh Vyavasthapanaci Marga Darshika,** Department of Archives, Government of Maharashtra, Mumbai, 1988.

Krishan Kumar — **Theory of Classification,**
Vikas Publishing House Private Ltd.,
New Delhi,
1989 Reprint 1988 (IV)

Ranganathan, S. R. — **Elements of Library Classification,**
Sarada Ranganathan Endowment for Library Science,
Bangalore,
1981.

——————— **Universal Decimal Classification**
(Abridged English Edition 1961)
British Standards Institution,
London.



தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடுகள்

பெரிய திருமொழி (முதல் 200 பாசுரங்கள்)
தெ. ஞானசுந்தரம் 1984

தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்
கே. எம். வேங்கடராமையா 1984

தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு (மெக்கன்சிச் சுவடிப் பதிப்பு)
(பதிப்பாசிரியர்) கே. எம். வேங்கடராமையா 1987

சிறுவர்களுக்கு நேரு
பா. சுப்பிரமணியன் 1988

தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் 3 தொகுதிகள்
(பதிப்பாசிரியர்) பா. சுப்பிரமணியன்
(குறிப்புரை) கே. எம். வேங்கடராமையா
(மோடி வல்லுநர்) இராக. விவேகானந்த கோபால் 1989, 1991

தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி 1
ம. சா. அறிவுடைநம்பி 1994

நிறைவு செய்துள்ள ஆய்வுகள்

தஞ்சை மராட்டிய அரசர் மோடி ஆவணக் கருத்தரங்கக் கட்டுரைகள்
(பதிப்பாசிரியர்) கே. எம். வேங்கடராமையா
ம. சா. அறிவுடைநம்பி 1983

தஞ்சை மராட்டிய மன்னர்கள் வளர்த்த நுண்கலைகள் (கி. பி. 1676-1855)
(முதுமுனைவர் பட்ட ஆய்வேடு)
ம. சா. அறிவுடைநம்பி 1986

பழவேற்காடு கைபீது (மெக்கன்சிச் சுவடிப்பதிப்பு)
ம. இராசேந்திரன் 1987

மெக்கன்சிச் சுவடிகளில் பழங்குடி மக்கள்
ம. இராசேந்திரன் 1988

அரிய காகிதக் கையெழுத்துத் தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை
(பதிப்பாசிரியர்) ம. சா. அறிவுடைநம்பி 1989

Social History of the Tamils (1707-1947)
P. Subramanian 1990

தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி 2
ம. சா. அறிவுடைநம்பி 1990

தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி 3
ம சா அறிவுடைநம்பி 1999

அமுதச்சகம், மதுரை. ☎–782029